

# சயனம்

வா.மு.கோமு

# சயனம்

வா.மு.கோமு

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author's prior written consent in the form of binding or cover other than that in which it is published and without a similar condition including this the right under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of the copyright owner.

சயனம் / Sayanam

© Vaa.Mu.Komu

Published by: Leemeer Publishers & Distributors

Email : leemeer.india@gmail.com

Website : www.leemeer.com

# வா.மு.கோமு

வா.மு.கோமு என்ற பெயரில் எழுதிவரும் வா.மு.கோமகன் ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலைக்கும் மேற்கே 12 கிலோ மீட்டரில் இருக்கும் வாய்ப்பாடி என்கிற கிராமத்தை சேர்ந்தவர். 91ல் திருப்பூரிலிருந்து நடுகல் என்கிற சிற்றிதழை கொண்டு வந்தவர். 91ல் இலக்கியகளம் இறங்கியவரின் சிறுகதைகள் பல்வேறு சிற்றிதழ்களில் வெளியாகத்துவங்கின. மனதில் நினைத்தவற்றை எழுத்தில் சொல்ல சிறிதும் தயக்கம் காட்டாத எழுத்தாளர் என்ற பெயரை கூடிய சீக்கிரமே பெற்றவர். கள்ளி, சாந்தாமணியும் இன்னபிற காதல் காதல் கதைகளும், எட்றா வண்டியெ, மங்கலத்து தேவதைகள், 57 சினேகிதிகள் சினேகித்த புதினம், மரப்பல்லி, நாயுருவி என்கிற நாவல்களை வெளியிட்டுள்ளார். சிறுகதைகளில் பொட்டில் அடித்த மாதிரியான பாணிகளை கையாண்டவர் நாவலிலும் அதைச் செய்ய முடியுமென்பதை இந்த சயனம் நாவலில் முயற்சித்திருக்கிறார். கொங்கு வாழ்வியலை அப்பட்டமாக காட்டும் எழுத்துக்குச் சொந்தக்காரார்.

## நன்றி :

அலாவுதீன், சித்திக், ஜே.பி.ராஜேந்திரன், திருமேனி கருப்புசாமி, கி.ச. திலீபன், ஜெயக்குமார், இலக்கியச்செம்மல் வெளங்காதவன், சசிமோகன் குமார், இனிது கார்த்திகேயன், பாக்கியம் சங்கர், மு.ஹரிகிருஷ்ணன், ஈங்கூர் ரகு, ஜெகதீஷ்வரி, புலியூர் முருகேஷ், கதிர் சென்னிமலை, சண்முகம் கோபால், கீதாஞ்சலி, ராக்கி, ராசு ராசு, செல்லமுத்து குப்புசாமி, சிபிச்செல்வன், தாமோதர் சந்ரு, உஷாதீபன்,

ஆமாங்க அப்படியே பண்டிக்கலாங்க

என்றே கூறும்....

# வீடு சுரேஷ்குமாருக்கு!

# எல்லோருக்குமே நமஸ்காரம்!

மறுக்காவும் திட்டமிடாம ஒரு நாவலை ஆரம்பிச்சு எழுதி முடிக்கோணுமுன்னே இருந்திருக்குமாட்ட! நாவல் எழுத திட்டமாவது ஒன்னாவது! வர்றதை எழுதிட்டே போறதுங்கறது அப்பிடியே பழவிப் போச்சுங்க! ஆனா இந்தவாட்டி இதுவரை என் எழுத்தில் வராத ஒரு கிராமத்தை எடுத்துக்கிட்டேன். ஒரு கிராமத்தை விட்டு அதிகம் நாவல் எங்கேயும் வெளியில் பயணிக்க கூடதென்ற முடிவிலும் இருந்தேன். அதனால் அந்த கிராமத்தை சார்ந்தவர்கள் வெளியிலிருந்து கிராமத்துக்குள் வந்தால் மட்டுமே அவர்களைப் பற்றி இந்த நாவல் பேசியிருக்கிறது.

காலைச் சூரியன் கிழக்கிலிருந்து நிதானமாக கிளம்பி மேலேறி வந்தான் என்றும், சென்னிமலை உச்சியிலிருந்தபடி கொளத்துப்பாளையம் கிராமத்தை பார்த்தான் என்றும் இந்த நாவல் துவங்கவில்லை. நாவல்கள் அப்படி நிதானமாகத்தான் துவங்க வேண்டுமென்ற கட்டுக்குள் பலகாலம் கிடந்தது. பார்க்கப் போகையில் ஒரு காகம் கூட நாவலில் பறக்கவில்லை என்று இப்போது தான் தெரிகிறது. கிராமம் என்றால் காக்கைகள் இல்லாமலா? இந்த அநியாயத்தை இப்படி முகப்பில தான் நாம் பேசிக்கொள்ள முடியும். காகமோ, கிளியோ, சிட்டுக்குருவியோ கத்தாமல் ஒரு கிராம நாவல். அடடே என்றொரு ஆச்சரியக்குறி!

எழுதத் துவங்கிய போதே என் வழக்கமான நாவலாக மாறிவிடுமோ என்று ஐய்யப்பட்டேன். அத்தியாயங்கள் நகர்ந்த போது ஒரு பெரிய களம் இதில் இருப்பதையும் உணர்ந்து கொண்டேன். போக கனமான நாவலாக உருவெடுத்து விடுமோ என்ற பயம் வேறு வந்து விட்டது. கனமான நாவலை எழுதுவது பிரச்சனையில்லை. அது விற்பனையில் பறக்க வேண்டும். வழக்கமாக என் நாவல்களில் முடிவுகள் என்று எதுவும் இருக்காது. முடிவிலிருந்து வாசகர்கள் தான் மனதில் தொடங்கி அவரவர் பிரியத்திற்கு முடித்துக் கொள்ள வேண்டும். இந்த நாவலில் அப்படியான தொந்தரவுகளை வாசகர்களுக்கு தரவில்லை நான்.

சயனம் நாவலை முடிக்க ஒன்னரை மாதங்கள் தேவைப்படுமென திட்டம் வைத்திருந்தேன். அப்படி திட்டப்படியே எழுதியிருந்தால் இது கனமான நாவலாக வந்திருக்கக் கூடும் இருந்தும் 20 நாளில் முடிவுக்கு வந்து விட்டதற்கு என் எழுத்தார்வமே காரணமாகி விட்டது. இதை எழுதி முடிக்கும் வரை நான் படித்த எழுத்துகள் கிராமிய எழுத்துகள் மட்டுமே! இந்த நாவலின் தோற்றுவாய் பொன்னீலன் அவர்களின் கரிசல்

நாவலில் இருந்தது. ஆசிரியர் ஒருவர் கிராமத்திற்கு வருகிறார். இவ்வளவுதான் விசயம். முந்தானை முடிச்சு படத்தில் பாக்கியராஜ் வருவது போலத்தான்.

அதிலிருந்து துவங்கிய நாவல் என் மங்கலத்து தேவதைகள் நாவல் மாதிரி போய் விடக்கூடாதென்று தண்ணி போடாத, சிகரெட் குடிக்காத ஆளாக மாற்றி விட்டேன் ஆசிரியரை. இதைப்பற்றி நண்பர் ஒருவரிடம் பேசுகையில், போய்யா நீயும் உம்மட நாவலும்! வாத்தியாரு பின்ன பாடஞ் சொல்லிக் குடுக்கவா நாவல்ல வர்றாரு? எனக்கு வேண்டம் உன் நாவலு! என்றார். அடப்பாவிகளா! புத்தகமே விக்கலின்னா பதிப்பகம் மெரண்டு போயிருமே! என்ன தான் பண்டச் சொல்றீங்க நண்பா? என்றேன். ஒரு ஏற்பாட்டை பண்டி உடுங்க வாத்தியாருக்கு சும்மா ஜம்முன்னு இருக்குமுல்ல! என்றார்.

நண்பர்கள் அதிகமாகி விட்டதால் இந்த ஓட்டை வாயை வைத்துக் கொண்டு சும்மாவும் பொழுது உழுந்த நேரத்தில் நான் இருப்பதில்லை. வாயை ஒரு பக்கம் போனில் திறந்து விடுவது. பின் குழப்பிக் கொள்வது. நல்லவேளை இன்னொரு நண்பர் நாவல் எழுத எழுதவே ஒரு சிட்டிங் போடுவோம் பாட்டில்களோட! என்றார். அவர் வந்து சேரவில்லை. அவர் வந்திருந்தால் பின் நவீனத்து மாயைகளை முதலில் கட்டுடைப்பு செய்து விட்டு கமுந்திருப்பார் என் வீட்டில் இரவுச் சாப்பாடு கூட சாப்பிடாமல்!

பொன்னீலனின் கரிசல் எனக்குள் எந்த பாதிப்புகளையும் உருவாக்கவில்லை. அது வெளிவந்த 1976-ல் பேசப்பட்ட நாவலாக் கூட இருந்திருக்கலாம். ஆனால் தீயெல்லாம் எரிகிறது வீட்டில். நாடகத்தன்மையுடன் செல்லும் அந்த நாவல் பல புத்தகங்களை எடைக்கு போடுகையில் எப்படி தப்பித்தது என்று தெரியவில்லை. கூடவே வாசிக்க நண்பர்கள் சுட்டுச் சென்றது போக மீதமிருந்த ஆர்.ரஜேந்திரசோழனின் எட்டுக்கதைகள் மற்றும் தற்செயல் சிறுகதை தொகுப்பு. போக ஆர்.சண்முகசுந்தரத்தின் நாகம்மாள், அறுவடை நாவல்கள். போதாமை என் மனதுக்குள் வந்த சமயம் மின்சார தொந்தரவு காரணமாக காவ்யாவின் கொங்குச் சிறுகதைகள் தொகுப்பை மட்டுமே மேலோட்டமான வாசிப்பு போட்டேன்.

புத்தகம் கையில் இருக்கிறதே என்பதற்காக மின்சாரத் தொந்தரவில் ஆர்வமாய் நான் கையிலிருந்த மணற்குன்று பெண், மங்கையர் கூடம், யானை காணாமலாகிறது, மனோதிடம், நிழலற்ற பெருவெளி, நிமித்தம், ஓநாய் குலச்சின்னம், ரமணிச்சந்திரனின் பத்து புத்தகங்கள் இவற்றை 20

நாட்கள் பல்லைக் கடித்துக் கொண்டு மனதை கட்டுப்படுத்தி ஒரே நேர் கோட்டில் இயங்கினேன். அப்படி செய்யாமல் இருந்திருந்தால் நாவலை இன்னும் நான் எழுதிக் கொண்டே இருந்திருப்பேன். இதுவெல்லாம் ஒரு எழுத்தாளக் கணக்கு! இப்படியெல்லாம் யாரும் முகப்பில் பேசுவதும் இல்லை.

நாவல் வாசிப்பாளர்கள் என்னுடைய புத்தகங்களை பற்றி குறிப்பிடுகையில் இவ்வளவு வேகம் எதற்கு? என்கிறார்கள். அவர்கள் சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு நாவல்களை வாசித்து இன்பம் பெற்றவர்கள். அந்த புத்தகங்களில் காசநோய்க்காரன் முன்னூறு பக்கங்களுக்கு இருமிக்கொண்டே இருக்கிறான். எதற்கெனத் தெரியாமல் ஆசிரியனும் அவன் இருமல் தொந்தரவை பக்கம் பக்கமாய் எழுதித் தள்ளுகிறான். அப்படிப் பார்த்தால் ஏழு வருடகாலம் நான் அதே காசநோய் தொந்தரவில் இருந்த காலகட்டத்தை லொக்கு, லொக்கு என்று நானூறு பக்கம் எழுதலாம். பரிசுகள் கூட எனக்கு கிடைக்கலாம் அந்த லொக்கு லொக்கு நாவலின் வழியாக!

ஆனால் பரிசுகளுக்காக நான் நாவல் எழுத வரவில்லை. என் புத்தகங்களை படிப்பவர்கள் சமகால வாசகர்கள். நான் தொன்னூறுகளில் எழுதக் கிளம்பியவன் என்பதால் அன்றைய வாசகர்களின் தரம் வேறு. இன்றைய வாசகர்களின் தரம் வேறு. கொடுத்த காசுக்கு கட்டுமா இந்த திரைப்படம்? என்று பார்த்து இடைவேளையோடு செல்லாது செல்லாது என்று எழுந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் திரைப்பட ரசிகர்கள். வாசகனை பத்துப் பக்கங்களுக்குள் ஒரு நாவலுக்குள் ஈர்க்காத எழுத்து எழுத்தே அல்ல. ஒரு நாவலை ஒருவருட காலம் வைத்து செம்மைப்படுத்திக் செம்மைப்படுத்தி கடைசியாக வெளியிட்டால் என்ன நடந்து விடும்? சயனத்தை முடித்து விட்டு டிங்கரிங் வொர்க் செய்யப் போவதாக ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். சூப்பரு! என்றார்.

டிங்கரிங் வொர்க்கில் வாந்தான் என்றிருப்பதில் வாவில் இருக்கும் காலை தூக்கி சுத்தப்படுத்தி வந்தான் என்று சரிப்படுத்துவதும் சேரும். ஆனால் நான் சொன்ன டிங்கரிங் ஒவ்வொரு இடத்திலும் ஒரு பேராகிராப்பை சேர்ப்பது. கலியன், குமரேசன், பொன்னம்மா கவுண்டர் தோட்டத்திற்கு நடக்கிறார்கள் என்றால் அந்தப்பாதையைப் பற்றியும், அவர்கள் பார்க்கும் விசயங்களையும் பதிவேற்றுவது.

இதோ இப்படி சம்பந்தமில்லாமல் இழுத்துக் கொண்டே போவது. போயிச் சேருமிடத்தை எப்போது அடைவது என்பது எழுத்தாளன்

திறமையைப் பொறுத்தது. இந்த கொஞ்சூண்டு எழுதவே எனக்கு போர் அடிக்கிறது. வாசகன் பாவம் தான். ஆனால் மொழிபெயர்ப்பு புத்தகங்கள் பல இவற்றை எளிதாகச் செய்கின்றன. 200 பக்க அளவில் சொல்ல வேண்டியனவற்றை ஐநூறு பக்கம் சொல்வதென்றால் விளையாட்டு சமாச்சாரமா? ஆனால் நானும் அப்படி எழுதும் காலம் வந்துவிடலாம். யாருக்கு எது தேவையோ அதை கொடுப்பவன் எழுத்தாளன். இதில் இட்டேறி என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவர்களும் நிச்சயம் இருக்கிறார்கள். ஆனால் வேப்பை மரத்தை தெரியாதவர்கள் நாவல் படிப்பதில்லை.

கவுண்டர் தோட்டம் செல்லும் அந்த பாதையில் முன்பு மழை பெய்தால் சள சளவென மழை பெய்து முடித்த பின்னரும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும். நேராக செல்லும் அந்த தண்ணீர் அனைத்தும் மொறைச்சல் போட்டுக் கொண்டு சத்திவேல் கவுண்டர் காட்டு வழியாக ஓடி கொளத்துக்கு சென்று சேர்ந்து கொண்டிருந்தது. குளத்தில் அப்போதெல்லாம் கொக்குகள் கூட்டம் கூட்டமாய் கருவேல மரங்களின் மீது அமர்ந்திருக்கும். குழந்தைகள் கொக்கே கொக்கே கொண்டைக்கு பூக் கொண்டுவா! என்று கொக்குகளைக் கண்டால் பாட்டு படிப்பார்கள். அவைகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொள்ளும் சப்தம் ஊர்முழுக்கவும் கேட்கும். இப்பொழுது கொக்குகளை எங்கும் காணமுடிவதில்லை.

கோழிக்குஞ்சுகளை தூக்கிப் போகும் வல்லூறுகள் அப்போதெல்லாம் மிகுந்திருந்தன. கோழி வளர்த்துபவர்கள் கூட இப்போதெல்லாம் பக்கத்து வீடுகளில் சண்டை வருகிறதென வளர்ப்பதை விட்டு விட்டார்கள். இட்டேறித்தடத்தில் தண்ணீர் போனதை ஞாபகப்படுத்த கொஞ்சம் மணல் துகள்களும், வெங்கச்சாங் கற்களும் சிதறிக் கிடந்தன. கலியனுக்கு இருபத்தி ஐந்து வயதாகிறது. அவன் ஒரு நாளில் கூட இந்த இட்டேறி வழியாக தண்ணீர் ஓடியதை பார்த்ததில்லை. ஒருவேளை அவன் அப்பன் மாரன் காலத்தில் பார்த்திருக்கலாம்.

இட்டேறியின் ஓரத்தில் கூடாரமாய் நின்றிருந்த கிலுவை மரங்கள் காய்ந்து நின்றிருந்தன. அணில்கள் இரண்டு அதன் மீது ஓடிக்கொண்டிருந்தன. ஒருவேளை காரோட்டாக இருக்குமென நினைத்துக் கொண்டான் கலியன். காரோட்டு என்றால் வலையை கட்டி வைத்து விட்டு சும்மா அமர்ந்திருந்தாலே போதுமானது தான். அவைகளே கத்திக் கத்தி வெளியிலிருக்கும் அணில்களை எல்லாம் வரவைத்து விடும். காதலிக்கும் ஆசையில் ஓடி வரும் அவைகள் வலையில் சிக்கிக் கொள்ளும். கலியனுக்கு இப்போதெல்லாம்

வலைகட்டக்கூட நேரமிருப்பதில்லை.

சற்று தள்ளித் தள்ளி வேப்பை மரங்கள் இட்டேறிப் பாதையில் பச்சை நிறத்திலிருந்தன. அவைகளில் பூக்கள் வெண்மை நிறத்தில் பூத்துச் சிரித்திருந்தன. வெய்யில் காலத்தில் இந்த வேப்பைகள் மட்டும் இப்படி செழிப்பாய் இருப்பதின் மர்ம்ம் புரியாமல் கலியன் அவர்களோடு டிவியெஸ்சை சிரமப்பட்டு தள்ளிக் கொண்டு சென்று கொண்டிருந்தான். இவத்திக்கி இருக்கும் கவுண்டர் வீடு இன்று மட்டும் ஏனோ வெகு தூரமாய் போய் விட்டது போல் தோன்றியது. பொன்னம்மா கையை சும்மா வைத்துக் கொண்டு போகாமல் இட்டேறியின் ஓரத்தில் இருந்த காய்ந்த கிழுவையின் முற்களை இழுத்து விட்டு இழுத்து விட்டுச் சென்று கொண்டிருந்தாள்.

குமரேசன் இப்படியான வறண்ட பூமிக்கு வந்து சேர்ந்து விட்டோமே என்று நெற்றியில் வழிந்த வியர்வையை துடைத்துக் கொண்டான் தன் கர்ச்சீப்பால். நல்லவேளை கலியனின் டிவியெஸ்சில் அவனது இரண்டு பேக்குகளையும் மாட்டி விட்டான். இல்லையென்றால் அதையும் சுமந்து கொண்டல்லவா வரவேண்டும். வேலியிலிருந்த ஒடக்கான் ஒன்று தலையை ஆட்டி, எங்க போறீங்க? எங்க போறீங்க? என்று கேட்பதாக யோசித்து பார்த்தான். அது அப்படித்தான் தன் தலையை ஆட்டிக் கொண்டிருந்தது.

இப்படி இந்த நாவலில் பக்கம் நிரப்பும் வேலையை செவ்வனே செய்தால் வா.மு.கோமு போரடிக்க ஆரம்பிச்சுட்டார் என்று எளிதாக கூறிவிடுவார்கள் நண்பர்களே கூட. இதில் இன்னும் சில மரங்களையும் அவற்றின் பயன்பாடுகளையும் பேசலாம். இதோ வேப்பங்குச்சியில் கிராமமே ஒருகாலத்தில் பல்விளக்க பயன்படுத்தி கொண்டிருந்தது. என்று ஆரம்பித்து ரவுண்டு காட்டலாம்.

தலித்துகளை கள்ளில எப்படி அட்டகாசமா காட்டுனீங்க. அப்படி காட்டோணும் இதுலயும். தலித் வாழ்க்கை இல்லாம கொங்கு நாவல் வராதுங்கள்ல. அவிங்க வந்து ஆதிக்க சாதிக்கு எதிரா சும்மா பட்டாஸ் கிளப்புறாங்க! உங்களால தானுங்க எழுத முடியும். யாருங்க எழுதுவாங்க? அங்கே இங்கே என்று பேசி என் தலையில் கிரீடம் ஒன்றை வரும் போதே கையில் தூக்கி வந்து தலையில் சொறுவி விட்டு மல்லாந்து விடுவார். மல்லாந்தவரை, ஏனுங்க சாப்பாடு சாப்டுட்டு படுத்துக்கங்களேன் என்றால், அவ்வளவு தானுங்க நாவல் முடிஞ்சு போச்சு! என்பார்.

ஏனுங்க பொம்பள மனசு பொம்பளைக்குத் தான் தெரியுமின்னு

ஏனுங்க சும்மாவே சொல்லி வெச்சிருக்காங்க? ஒருத்தி மனசு இன்னொருத்திக்கு தெரியுமுங்களா சொல்லுங்க! ஒரு சுக்கும் தெரியாது. நாவல் எழுதுறாங்கள்ல அவிங்க. அதுல எதாச்சிம் பொம்பள மனசு தெரியுதுங்களா? ஒரு சுக்கும் கிடையாது. ரமணிசந்திரன்னு ஒரு அம்மா எழுதுற புத்தகத்துல தெரியுதான்னு படிச்சுப்பார்த்தனுங்க. அதுல மனசுங்கறதவே காணோம். ஆம்பளைக்கித் தானுங்க பொம்பள மனசு தெரியும். உங்களுக்கு எப்படியோ நெறையா தெரிஞ்சிருக்கு போட்டு நொக்கு வாங்கறீங்க! காத்தால நேரத்துல எழுப்பி உடுங்க நான் சித்த தூங்கறேன்!

எழுத்தாளர்களுக்கு கொம்பு இருக்கிறதா எழுத்தாளனான நானே நெனச்சிக்கிட்ட காலம் இருந்துச்சுங்க! அதுல ஒரு சுக்கும் கெடையாது! எழுத்தாளனுக்கு கொம்பும் கெடையாது ஒரு சுக்கும் கெடையாது! எனக்கு முன்னால இருந்த ஒரு எழுத்தாளர் இந்தப்பயல் நல்லா எழுதுறான் என்று சொல்லி நான் வரலை! அவரவர்களுக்கு திறமை இருந்தால் அவர்கள் நிச்சயம் படைப்பாளியாக வந்து சேர்ந்தே விடுவார்கள்.

எழுத்தில் வந்து நுழைந்த காலம் தொட்டு இன்றுவரை அதை சந்தோசமாகவே செய்கிறேன். எனக்கு தெரிஞ்ச எழுத்தை நான் எழுதுறேன். என் வாசகர்களுக்கு பிடிக்கும் எழுத்தை நான் எழுதுறேன். ஏன் உங்க ஏரியாவையே எழுதுகிறீகள் என்கிறார்கள். இங்கே சொல்லப்பட வேண்டிய கதைகள் இன்னும் தீரவே போவதில்லை என்பது மாதிரி நாளும் எனக்கு தகவல்கள் சேர்ந்து கொண்டேயிருக்கின்றனவே! ரொம்ப ஆணித்தரமா இதை பதிவு பண்ணுறேன். என்னை பாராட்டி யாரும் பேசணும்கறதுக்காக நான் எழுத வரலை. பரிசுக்காகவும் நான் எழுதலை. என் காலம் கழிந்து போகலாம். எனக்கு வருத்தம் இம்மி அளவேனும் இருக்காது. ஆனால் என் நண்பர்கள் எழுத்தை நான் பராட்டிக்கொண்டு தான் இருக்கிறேன். அது என் இயல்பு.

என்னிடம் நேரில் பேசுபவர்கள் ஒன்றை கவனிக்கிறார்கள். நான் மகேஷ்வரன், மகேஷ்வரி, முத்துலட்சுமி ராகவன் எல்லாரும் நல்லா இப்ப எழுதுறாங்க! என்பேன். யார்ங்க அவங்க? என்பார்கள். எனக்கே தெரியாது ஆனால் அவங்க கதைகள் நல்லாயிருக்கு. கடையில விற்பனைக்கு தொங்கும் மாத நாவல்கள்ல எழுதுறாங்க! என்பேன். அவர்கள் என்னிடம் டொனால்ட் பால்தெமெ, மார்க்குவஸ், போர்ஹே,முரகாமி என்ற பேச்சை எதிர்பார்த்து வந்திருக்கலாம். அவர்கள் இலக்கிய வாசிப்பாளர்கள். அவர்களுக்கு ஏற்கனவே

அவர்களைப் பற்றி தெரியும். இருந்தும் நான் ஏதாவது சொல்ல விரும்புகிறார்கள். மகேசுவரனின் கதைகள் என்னை சந்தோசப்படுத்துகிறது என்பதைப் பற்றி பேசுகிறேன். அவர்கள் மகேசுவரனை படிக்கப்போவதில்லை என்பது தெரிந்தும் கூட.

இந்த புத்தகத்திற்கு மாப்ளே இலை போட்டாச்சு! என்றொரு தலைப்பு கிடைத்தது. தொடர்ந்து பங்காளி பந்தி விரிச்சாசு! கூடவே கிடைத்தது. வேடிக்கையாய் தலைப்பு வைப்பது என்பது ஒரு கொண்டாட்ட மனநிலையில் தான். கூப்பிடுவது எமனாக இருக்கலாம்! என்றொரு தலைப்பை ஒரு புத்தகத்திற்கு வைத்திருந்தேன். அதற்கு குலேபகாவலி என்று வைக்கத்தான் திட்டம் இருந்தது. திடீரென எப்போதாவது தலைப்புகள் கிளிக் ஆகும். என் அப்பாவின் காதலி இப்போது கிழவி! நண்பரிடம் சொன்னேன். அவர் இன்னொரு நண்பரிடம் இப்படியாமா! என்று சொல்லியிருக்கிறார். அவரோ, அவரோட காதலியே இப்ப கிழவி! என்று வேடிக்கை செய்ய ஒரே தமாஸ் தான் போங்கள்! க க க போ! கருத்துக்களை கச்சிதமாய் கவ்வுகிறீர்கள் போங்கள்!

கிராமம் என்ற தலைப்பு திடீரென கிட்டியது. முடிவாகி முகநூலில் கூடவே டம்மியாக வைத்த தலைப்பு தான் சயனம். எல்லோரும் சயனத்தை தேர்ந்தெடுத்ததால் இதுவே முடிவாகிவிட்டது. கிராமத்தில் வீட்டை விட்டு முக்கிய காரியங்களுக்கு கிளம்பும் சமயம் சயனம் பார்த்து செல்வார்கள். எதிர்க்கே விறகுச்சுமை வரக்கூடாது! செம்பூத்து குறுக்கே போகக் கூடாது!, மொசல் ஓடக்கூடாது! என்று சில நடந்தால் போகிற காரியம் சுத்தப்படாது என்று திரும்பி விடுவார்கள். சயனம் என்பது பின் சகுனம் என்று தமிழில் மருவியது. வடமொழியில் சயனம் என்றால் தூக்கம் என்ற அர்த்தமும் வருகிறது.

இந்த நாவலில் வரும் சம்பவங்கள் யாவும் கற்பனையே! யாரையும் எவரையும் குறிப்பிடுவன அல்ல! இதே கதையை அக்கரையாம்பாளையம் என்று மாற்றிவிட்டால் அது அந்த ஊர்க்கதை! கொங்கு மண்ணில் பாளையங்கள் ஜாஸ்தி!

அன்போடே என்றும்

வா.மு.கோமு

அலைபேச : 9865442435

vaamukomu@gmail.com

# சயனம் 1

சென்னிமலை பேருந்து நிறுத்தத்தில் குமரேசன் நின்றிருந்தான். நேரம் சரியாய் மதியம் ஒருமணி என்று அவன் அலைபேசி காட்டியது. அலைபேசி வந்தபிறகு கையில் வாட்ச் கட்டிக் கொள்ளும் பழக்கம் நின்றுபோய் விட்டது சுத்தமாகவே. அதே போல் பிறந்த நாளுக்கு வாட்ச் பரிசளிப்பதும் தான். இப்போதெல்லாம் வாட்ச் பரிசளித்தால் வாங்கியவனே, என்ன நண்பா இதைப்போய் குடுத்திருக்கே? நீ நல்ல நண்பன் தான்! ஆனால் மூளை மட்டும் தான் இல்லாமப் போச்சு! என்கிறார்கள்.

அப்படியே வாட்ச் கட்டியிருப்பவர்களும் கையை விட பெரிதாக சோப்பு டப்பா போல் கட்டியிருக்கிறார்கள். அதில் பல வேலைப்பாடுகள் வேறு இருக்கின்றன. எங்கே இனி வாட்ச்சில் ஒருவன் போகும் ஊரை டைப் செய்து அலாரம் வைப்பது போல பத்து நிமிடம் என்று வைத்தால் சொய்ங்கென அந்த ஊருக்கு பறந்து போய் அந்த ஊரில் இறங்கி விடுவானோ! என்று தான் தோன்றுகிறது.

குமரேசன் வாட்ச் கட்டியது ஐந்து வருடங்களுக்கும் முன்பாக. ஓடவே மாட்டிங்குதே என்று பொள்ளாச்சி பேருந்து நிறுத்தத்திற்கு அருகிலிருந்த வாட்ச் கடை ஒன்றில் கொடுத்திருந்தான். பத்து நாட்களுக்கு ஒருமுறை கோட்டூரிலிருந்து புறப்பட்டுப்போய், உடம்பு சரியில்லீன்னு சிட்டிசன் வாட்ச் குடுத்திருந்தனே சரிப்படுத்திட்டீங்களா? என்று கேட்டுக் கொண்டிருந்தான். ஆப்ரேசன் நடந்துட்டு இருக்குங்க, அடுத்த வாரம் சந்தை சந்தைக்கடுவு நாள் பார்த்து வாங்க! என்றே அன்பொழுக கடையின் எஜமான் என்றறியப்பட்டவர் இவனுக்கு பதில் சொன்னார். ஒரு மாதம் கழித்து சென்றபோது அந்த இடத்தில் செல்போன் கடை ஒன்று புதிதாய் முளைத்திருந்தது. அவர்களிடம் விசாரித்தான் குமரேசன். அவர்கள் மிக அழகாக சொன்னார்கள். தெரியிலீங்களே!

குமரேசன் அலைபேசி ஒன்றை பின்நாளில் அங்கு தான் வாங்கி பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். அது எடுத்துப் பார்த்த போதெல்லாம் திரையில் பெரிதாக நிமிடங்களோடு காட்டியது. பின்பு சாலையோரத்தில் குவிந்து கிடந்த வர்ண வர்ண எலக்ட்ரானிக் வாட்சுகளை துச்சமென மதித்து கடந்து கொண்டிருந்தான்.

“ஏனுங்! சி-12 பஸ் எத்தன மணிக்குங்க வரும்?” அருகில் மூக்குப்பொடி திணித்துக் கொண்டிருந்த பெரியவரிடம் இவன் கேட்டான்.

“பார்த்தா படிச்ச பையனாட்ட இருக்கே! நான் தான் எத்தனாம் நெம்பரு பஸ்சுன்னு உம்மட கிட்ட கேக்கலாம்னு தொளாவிப் புடிச்சு வந்து உம்மட கிட்ட நிக்கேன். நீ என்னடான்னா என்னை கேக்கே! ஊத்துக்குளி போற பஸ்சு தான? வரும் இப்ப! அதுல தான் நானும் ஏறோணும். அது ஒரு லொடக்குலசு பஸ்சுப்பா! நம்பியெல்லாம் நிக்க முடியாது. வந்தா நெசம்.” என்றவர் காலை மோந்து பார்த்து பிஸ் அடிக்கலாமா என்று நின்றிருந்த நாயை, சுடே! இதுக வந்துருதுக! என்று விரட்டினார். அது சற்று இவர் மிரட்டலுக்கு பயந்து பின்வாங்கி நின்று வாலை ஆட்டியது. பெரியவர் வேட்டியை சரிப்படுத்தி கட்டுகையில் தான் கவனித்தான் குமரேசன் அவரின் ஒரு கால் கட்டைக்கால்!

“வந்தாலும் உடனே கெளம்ப மாட்டானுக தம்பி. இதா ஓட்டல்ல பூந்து சாப்புட்டு போட்டு தான் இந்த நேரத்துல பஸ்ஸை எடுப்பானுக” என்றார் இவனிடம். இவனுக்கும் பசி இருந்தது அவர் ஓட்டல் என்று சொன்னபோது தான் தெரிந்தது. அப்போது பார்த்து சுடிதார் அணிந்த பெண் ஒருத்தி கையில் லாங் சைஸ் நோட்டுகள் இரண்டை பிடித்தபடி “அப்புச்சி!” என்று கிட்டே வந்தது. அந்தப்பெண்ணின் கண்கள் முருகேசனுக்கு பிடித்தமாய் இருந்தது. பசி திடீரென காணாமலும் போனது. ஒரு பெண்ணின் கண்களுக்கு பசியை போக்கும் சக்தி இருப்பதை அன்றுதான் உணர்ந்தான் முருகேசன்.

மீன் போன்ற கண்கள் என்றெல்லாம் உதாரணம் முன்பே சொல்லி விட்டார்கள். அந்தப் பெண்ணின் முகம் சற்று நீண்ட வாக்கில் இருந்தது. அந்த முகத்தில் எடுப்பாய் கண்களே பெரிதாய் இவனுக்கு தெரிந்தது. அவள் இவனை ஒரு பார்வை பார்த்த போது இவன் இடது பக்க மார்பில் வேல் அல்லது குத்தீட்டி ஒன்று பாய்ந்தது போலத்தான் இருந்தது. அவள் மாநிறமாகத்தான் இருந்தாள். மதியமே படிப்பை முடித்துக் கொண்டு வந்திருக்கிறாள் என்றால் டுட்டோரியல் காலேஜ் படிப்பவளாக இருக்க வேண்டும்.

“காலேஜுு போவுலியா அம்மிணி இன்னிக்கி? மத்தியானத்துலயே முட்டீட்டு வந்துட்டே?”

“முட்டீட்டு நான் எதுக்கு வரோணும்? சந்தைக்கி  வந்தியா அப்பிச்சி.?”

“இல்லையம்மிணி! சந்தைக்கி அடுத்த வாரம் தான் வரோணும். தோட்டத்துல ரெண்டு மூனு மூட்டை தக்கோளியும் வெண்டக்காயும் அடுத்த வாரம் தான் பொறிக்கறாப்பல ஆவும். நேத்து மத்தியானமா பொட்டி ஐஸ்க்காரன் பொவ்வாத் அடிச்சுட்டு ஊருக்குள்ள சுத்துறான்னு பேரப்புள்ளீகளுக்கு வாங்கி குடுத்துட்டு நானு ரெண்டு சப்பிப்

போட்டன். அது எழவு மூக்கச் சிந்த வெச்சிட்டுது. காத்தால லொக்கு லொக்குன்னு இருமலு வேற! இது ஆவரதில்லீன்னு போட்டு சுப்பிரமணி டாக்டருகிட்ட பஸ் ஏறி ஓடியாந்துட்டேன்.”

“மூக்கு இருக்குற வரைக்கும் சளி தான் அப்புச்சி. ரசத்தலை நாலு கிள்ளிப்போட்டு அம்மாயி ரசம் வெச்சு குடுத்தா குடிச்சுப் போட்டு போறதை உட்டுப்போட்டு டாக்டரை பாக்க வந்துட்டீங்க”

“அதெல்லாம் இப்ப கேக்க மாட்டீங்குது அம்மிணி! எச்சா சளிய கெளப்பி உட்டுடுது. காலு கையெல்லாம் ஒரே கொடச்சலா இருக்கங்காட்டி தான் இந்த சீரெழவே வேண்டாமுன்னு வந்துட்டேன். ஆசைக்கி ஐஸ் சப்பி வந்த கோளாறு பாத்தியா நூறு ரூவா நோட்டை முடிச்சுப் போட்டுது. மூனு வேளைக்கி ரெவ்வண்டு மாத்திரை, ஒரு ஊசி, ஜோலி முடிஞ்சுது.” இவர்கள் பேசிக் கொண்டிருக்க குமரேசன் அந்தப்பெண்ணின் குரலை ரசித்துக் கொண்டிருந்தான்.

அவ்வப்போது அவள் விடும் அம்புகள் வேறு இவனின் இடது மார்பையே தாக்கிக் கொண்டிருந்தன. எல்லாம் முனை மழுங்கிய அம்புகள் அல்லவே! தன் கலைந்த தலைமுடியை நினைத்துக் கவலைப்பட்டான். “தெய்வீக பந்தத்திலே நான் கண்ட சொர்க்கம் இது! காதல் உறவேஏ! என்னதான் சுகமோ நெஞ்சிலே! இன்று தான் வளரும் அன்பிலே!” பக்கத்து ஹோட்டலில் மதிய நேரத்தில் சம்பந்தமே இல்லாமல் பாடிக்கொண்டிருந்தது. இவனுக்கு ரஜினிகாந்தும் அமலாவும் பூந் தோட்டத்தில் ஜோடி போட்டு நடப்பது போல இவனும் இந்த சுடிதார் பெண்ணுடன் நடப்பது போல நினைத்து பெருமூச்சு விட்டான்.

சி-12 பேருந்தும் அப்போது தான் நிறுத்தத்தினுள் வந்து வடக்கு மூலை ஓரமாக ஓய்ந்தது. ’பஸ்சு வந்துடுச்சு வாங்க அப்பிச்சி!’ என்று அவள் நகர பெரியவர் இவனிடம் திரும்பி, ’ஒரு வழியா வந்து சேர்ந்துடுச்சு தம்பி, வாங்க போவோம்!’ என்றார். பேருந்திலிருந்து ஓட்டுனரும் நடத்துனரும் இறங்கி ஹோட்டல் நோக்கித் தான் வந்தார்கள். இவன் படிப்பதற்கு புத்தகங்கள் வாங்கிக் கொள்ளலாம் என புத்தகங்கள் தொங்கும் கடை நோக்கிச் சென்றான். டெக்ஸ் வில்லர் குண்டு சைஸில் தொங்கினார். அதன்மீது தான் கண் சென்றது. விலை நூறு என்றிருக்க அதை மட்டும் வாங்கிக் கொண்டான். பாலைவனத்தில் டுமீல் டுமீல் என இவனே குதிரையில் ஏறி சுட்டுக்கொண்டே காமிக்ஸ் முடியும் வரை பயணிப்பான்.

பத்து வருடங்களுக்கு முன்பு ராணிகாமிக்ஸ் ரசிகனாய் இருந்தான்

குமரேசன். அதற்கும் முன்பாக முத்து காமிக்ஸ் ரசிகனாய் இருந்தான். இரும்புக்கை மாயாவி, ஆர்ச்சி, வேதாளம், மாண்ட்ரெக், பிரின்ஸ் எல்லோருக்கும் ரசிகனாய் இருந்தான். இப்போதெல்லாம் காமிக்ஸ் படிப்பதை மறைத்து வைத்து சரோஜா தேவி புத்தகம் படிப்பது போல அட்டை போட்டு படிக்க ஆரம்பித்து விட்டான். இந்த காமிக்ஸ் படிக்கும் பைத்தியம் தன்னை கடைசி வரை விடாது என்றே நினைத்துக் கொண்டு பேருந்தில் ஏறினான். பேருந்து சுவரோரமாக நின்றிருந்ததால் மறைப்பு கிடைத்த சந்தோசத்தில் சிலர் நிறுத்த சுவற்றில் பிஸ் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

நல்லவேளை அம்மிணி வடபுற சன்னலோரத்தில் அமர்ந்திருக்கவில்லை. அப்படி அமர்ந்திருந்தால் இலவசமாக அவளுக்கு பலவித குறிகளின் தரிசனம் கிடைத்திருக்கும். பேருந்தினுள் யூரின் வாசம் வீசிற்று! அம்மிணி மூக்கை கைக்குட்டையால் பொத்திக் கொண்டே இவன் இடது மார்புக்கு மற்றுமொரு அம்பை அனுப்பினாள். அவளின் அம்புகள் படுமாறு வாகாய் இந்தப்புறம் அமர்ந்து கொண்டவன் தன் பேக்கில் டெக்ஸ்வில்லரை மறைத்தான். ஆனால் அவள் முன்பே இவன் கையிலிருந்த புத்தகத்தை கவனித்திருந்தாள்.

பெரியவர் அவளுக்கும் பின்சீட்டில் அமர்ந்து வெளியே வெள்ளரிக்காய் வியாபாரியிடம் பேரம் பேசி காய்கள் வாங்கிக் கொண்டிருந்தார். பேருந்தில் கணிசமாக கூட்டம் சேர்ந்திருந்தது. இவனுக்கு எந்த ஊருக்கு டிக்கெட் எடுப்பது என்று மறந்து போயிருந்தது. யூனியன் ஆபீஸில் அந்த அம்மாள் கடைசியாக சொன்ன ஊரை ஞாபகத்திற்கு கொண்டுவர முயன்று தோற்றான். பாளையம் என்ற பாதிப்பேர் மட்டுமே ஞாபகத்தில் இருந்தது. இனி பேக்கை விரித்து ஆர்டர் சீட்டை எடுத்து எவன் நோண்டிக் கொண்டிருப்பது? சலிப்பாய் இருந்தது.

அப்பிச்சி கொடுத்த வெள்ளரித் துண்டுகளை கூச்சம் ஏதுமின்றி நறுக் நறுக்கென அவள் விளாசிக் கொண்டிருந்தாள். இவனுக்கு மீண்டும் பசி ஆரம்பித்து விட்டது. அப்பிச்சியை பார்த்தான். அவர் அவளை விட வாகாய் வாயிற்குள் ரசித்து ருசித்து மென்று கொண்டிருந்தார். ”அம்மிணி நல்ல பிஞ்சுக்காயி அம்மிணி! நம்ம கொளத்துப்பாளையத்து கொளத்துக்காயி ருசி இருக்குது பாரு!” என்றார் அவர். இவனுக்கு ஊர்பேர் கிடைத்து விட்டது. நன்றி பெரியவரே!! என்று மனதில் வாழ்த்தினான். ஆக பெரியவரும் இவளும் கொளத்துப்பாளையத்துக்காரர்கள் தான் என்றும் தெரிந்தது. ஆக குளம் என்ற ஒன்று இருப்பதாலேயே அந்த ஊருக்கு கொளத்துப்பாளையம்

என்ற பேரும் வந்திருக்கிறது!

பொள்ளாச்சிக்கருகே ராசக்காபாளையம் என்ற ஊர் இருக்கிறது. இவனாக ராசக்கா அந்த ஊரை அந்தக் காலத்தில் நோய் நொடியிலிருந்து காப்பாற்றியிருப்பாள் அதற்காக அவள் பெயரை ஊருக்கு வைத்துக் கொண்டார்கள் என்று இன்னும் நம்பினான். கொளத்துப்பாளையம் ஒரு பாம்பட்டிக்காடு என்று தான் இவனுக்கு சென்னிமலை யூனியன் ஆபீஸில் சொன்னார்கள். சுடிதார் போட்ட காலேஜ் போகும் பெண் வேறு அந்த ஊரில் இருப்பதால் பாம்பட்டிக்காடு என்ற பயமுறுத்தலுக்கு இவன் இனி பயப்பட வேண்டி இருக்கவில்லை.

அப்பிச்சியிடம் இன்னொரு வெள்ளரிக்காயை வாங்கியவள் இவனைப்பார்த்து வேணுமா? என்று சாடை காட்டினாள். ஒரு நிமிடம் அதிர்ந்து விட்டான் குமரேசன். அவளையே பேருந்தில் அமர்ந்ததிலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததால் வந்த வினை என்று நினைத்தவன் நோ தாங்ஸ்! என்று முனகிக் கொண்டே வலது கையை கீழே அழுத்திக்காட்டி மேலே சாப்பிடுங்க! என்பது போல துளி தூக்கிக் காட்டினான். பேருந்தில் நடத்துனரும் ஓட்டுனரும் ஏறிக் கொண்டார்கள். ஓட்டுனர் வண்டியை ஸ்டார்ட் செய்ததும் நடத்துனர் விசில் கொடுத்தார்.

நிறுத்தத்திலிருந்து வெளியே வரும் வரை எறும்பு ஊர்வது போல பேருந்தை நகர்த்திக் கொண்டு வந்தவர் பிரதான சாலையைத் தொட்டதும் அடுத்த கியருக்கு தாவினார். குமரேசன் தனக்கும் முன்னிருக்கை காலியாய் இருந்ததால் அங்கே அவளை வரவைக்கலாமா! என்று யோசித்து அவளைப் பார்த்தான். இவன் முகக் குறிப்பை உணர்ந்தவள் போல அவளின் பெரிய கண்களால் என்ன? என்றே வினவினாள் அவளும். கொஞ்சம் தைரியம் பெற்றவன் போல குமரேசன் அவளை தன் முன்புற சீட்டுக்கு வந்தமர சைகை காட்டினான். அவள் அடுத்த நிமிடம் தன் இரண்டு நோட்டுகளோடு வந்தமர்ந்தாள்.

“எதுக்கு வரச் சொன்னீங்க?” என்றாள் அவளும் முன்புறம் பார்வையை ஓட்டிக்கொண்டே!

“நீங்க கொளத்துப்பாளையமா?” என்றான்.

“ஆமாம்! நீங்க?”

“நானும் அந்த ஊருக்குத் தான் வர்றேன். ஆனா அது எங்க இருக்குன்னு தெரியாது. இதுதான் முதல் தடவை”

“அதான் பார்த்த உடனே தெரிஞ்சிடுச்சே எனக்கு! அங்க யாரு

வீட்டுக்கு வர்றீங்க?”

“வந்து தான் வீடு புடிக்கணும். அங்க எனக்கு ஆசிரியரா வேலை போட்டிருக்காங்க!”

“நான் ஒறம்பரைக்கு வர்றீங்கன்னு நெனச்சுட்டேன். நீங்க பேசாம சென்னை போனீங்கன்னா நடிக்கப்போகலாம். அதை விட்டுட்டு வறப்பட்டிக்காட்டுக்கு வர்றீங்க ஆசிரியருன்னுட்டு”

“நீங்க சென்னை போனா கதாநாயகியா மாறிடலாம் அதை விட்டுட்டு நோட்டும் கையுமா வறப்பட்டிகாட்டுல என்ன பண்றீங்க?” என்றான்.

“நான் ஒன்னு சொன்னதுக்காக திருப்பி அதே மாதிரி சொல்லக்கூடாது!”

“இல்ல நிஜமா அவ்ளோ அழகா இருக்கீங்க! அதனால சொன்னேன்.”

“உங்களை எங்க ஊரு ஆசிரியர்னு சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க! இப்படி ஜீன்ஸ் பேண்ட் ஜீன்ஸ் சர்ட்டு போடற ஊரே இல்லை அது! வெறும் மேலோட தான் ஆம்பளைங்க சுத்துவாங்க. எங்க ஊரு புள்ளைங்கெல்லாம் ஊருக்கு ஒரு சூப்பர் பிகர் வந்திடுச்சுன்னு பேசிக்கப் போறாங்க! என்னை எப்பவாச்சும் கண்டுக்கங்க ஆசிரியரே!”

“ஏனுங்க ஊர்ல பசங்களே இல்லியா?”

“இருக்காங்க , எல்லாரும் குடிகாரங்க! அவங்களுக்கு பொண்ணுங்களை விட குடி தான் பெருசு. குடிகாரங்களை ஊரு பொண்ணுக யாராச்சிம் விரும்புவாங்களா?”

“உங்க ஊர் பசங்களையே நீங்க குத்தம் சொல்றீங்களே! உங்க பேரு என்ன? என் பேரு குமரேசன். ஊரு பொள்ளாச்சி கோட்டூர்”

“என்ன சனம் நீங்க?” என்று கேட்டவள் தன் நாக்கை கடித்துக் கொண்டாள்.

“சாரி! நான் டிக்கெட் எடுக்கறேன்” என்றவள் கொளத்துப்பாளையத்திற்கு அப்பிச்சிக்கும் சேர்த்து மூன்று டிக்கெட் எடுத்தாள். இவன் அதற்கு மறுப்பு ஏதும் சொல்லவில்லை.

“இந்த பஸ் எப்பவும் இப்படி கூட்டமில்லாமத்தான் இருக்குமா?”

“அப்படி இல்லங்க! மதிய நேரத்துல இப்படித்தான். காத்தாலயும் சாயந்திரமும் கூட்டமிருக்கும்.”

“உங்க பேரைச் சொல்லவே இல்லையே!”

“வடிவுக்கரசி. ஈரோடு திண்டல் காலேஜ்ல பி.எஸ். ஸி கெமிஸ்ட்ரி மொதல் வருசம் போறேன். எங்க ஊர்லயே நான் ஒருத்தி தான் ட்வல்த் தாண்டி காலேஜ் படி ஏறி இருக்கேன். என் கூட சென்னிமலையில படிச்சவங்க மேல படிக்க வரலை.”

“வடிவுக்கரசி. அருமையான பேருங்க! இந்தப்பேர்ல இருக்கிற ரெண்டாவது பெண்ணை இப்போத்தான் பார்க்கேன்.”

“அப்ப முதல்பெண் உங்க ஊர்ல இருக்காங்களா?”

“இல்ல வயசான அம்மா கேரக்டர்ல சினிமால பார்த்திருக்கேன்” என்றதும் சிரித்தாள். அவளுக்கு ஒருபக்கம் சிங்கப்பல் இருந்ததை அப்போது தான் கவனித்தான். உங்களுக்கு சிங்கப்பல்லும் அழகு என்று சொல்ல நினைத்து வேண்டாமென விட்டு விட்டான். பார்த்ததையெல்லாம் அழகா இருக்குன்னு சொல்லிக்கொண்டே இருந்தால் அவளுக்கே எரிச்சலாகி விடும் அல்லவா!

“கோட்டூர்ல உங்களுக்கு நிலபுலன் எல்லாம் இருக்கா?”

“இருக்குங்க! எனக்கு தோட்டத்துல இருக்கத்தான் ஆசை. ஆனா அப்பாக்கு நான் ஆசிரியர் ஆகணுமுன்னு ஆசை. என் அக்காவும் டீச்சர் தான். தங்கச்சி ட்ரெய்னிங் போயிட்டிருக்கா.”

“குடும்பமெ ஆசிரியர் குடும்பமா? அதென்ன உங்கய்யனுக்கு அப்படி ஒரு ஆசை?”

“அவரு கைநாட்டு! அப்படி பிள்ளைங்களும் இருக்கப்படாதுன்னு புடிவாதமா இருந்தாரு. உங்கய்யனும் கைநாட்டா?”

“இல்லீங்க அவரு அந்தக்காலத்துலயே பத்தாவது படிச்சிருக்காரு!”

“இப்ப தோட்ட வேலை பாக்கிறாரா?”

“ஊருக்குள்ள பிரசிடெண்ட்டா இருக்காரு. போன எலக்சனல அறுபது ஓட்டுல ஜெயிச்சிட்டாரு!”

“அவரைத்தான் முதல்ல நான் ஊர்ல பாக்கணும்னு இங்க யூனியன்ல சொல்லி தாட்டி விட்டாங்க. பாருங்க எனக்கு அதிர்ஸ்டத்தை. நீங்க அவரு பொண்ணு. உங்க கூடவே உங்க வீட்டுக்கே வந்துடலாம்”

“எங்கய்யன் ஒரு மாதிரி! எகத்தாளம் பேசுவாரு. நீங்க அவரு பேசுறப்ப குறுக்க விளா ஓட்டினீங்கன்னா மரியாதை தெரியாத ஆளுன்னு முடிவு பண்டிருவாரு. அவரு சொல்றதுக்கெல்லாம் தலை ஆட்டீட்டீங்கன்னா உங்களைத் தான் அருமையான ஆளுன்னு ஊருக்குள்ள சொல்லுவாரு!”

“நமக்கு கொஞ்சம் வாய் ஜாஸ்திங்களே வடிவுக்கரசி. இப்ப சொல்லீட்டீங்கள்ள, பாருங்க உங்கய்யங்கிட்ட பொட்டிப் பாம்பு மாதிரி நிக்கேன். அதனால ஒன்னும் என் கிரீடம் இறங்கிடப் போறதில்ல!”

“நாம இங்க இறங்கிக்கலாம். இந்த பஸ்சு இனி ஊத்துக்குளி போயி திரும்பி வரும். அப்ப ஏறிக்கலாம்” என்றவள் எழவும் இவனும் தன் இரண்டு பேக்குகளை எடுத்துக் கொண்டு இறங்கினான் அவளுடனேயே. நான்கு சந்திப்பு சாலையில் அவர்கள் இறங்கியிருந்தார்கள். பெரியவர் இறங்கியதுமே “ இதா வந்துடறேன் அம்மிணி” என்று கிழக்கு பார்த்து நடை போட்டார்.

“உங்களுக்கும் பழக்கம் இருந்தா அவரு கூட போனீங்கன்னா பாட்டில் வாங்கீட்டு வந்துடலாம்” என்றாள் சாலையை கடந்தபடி.

“அவரு பாட்டிலுக்கா போறாரு? எனக்கு அந்த பழக்கம் இல்லீங்க” என்றான்.

“பொய்யெல்லாம் எனக்காக சொல்ல வேண்டாம். எங்க ஊர்ல எல்லாருமே குடிப்பாங்க” என்றாள். இவன் முகம் போன போக்கைப் பார்த்து அவளாகவே அந்த நாயத்தை நிறுத்திக் கொண்டாள். அப்போது வெள்ளையும் சொள்ளையுமாய் ஒருவர் சுஜூக்கியில் வந்தவர் கடை ஓரத்தில் நின்றிருந்த இவளருகில் வண்டியை நிப்பாட்டி, “ஊட்டுக்குத்தான் போறேன் வா அம்மணி” என்றார்.

“இல்ல நீங்க போங்கண்ணா! இவரு எங்க வீட்டுக்கு வர்றாரு கூட்டிட்டு வரணும்” என்று இவள் சொன்னதும், ’அப்ப சரி நான் முன்னால போறேன்’ என்று கிளம்பினார்.

“கண்ணு எப்படி செவந்திருக்குது பாத்தீங்ளா அவருக்கு? மப்புல தான் நான் அந்தண்ணன் கண்ணுக்கே தெரிவேன். எங்காச்சிம் கொண்டி சாத்தீட்டா அவங்களுக்கென்ன? நான் தான் சீரழியோணும்”

அவர்கள் ஊத்துக்குளி போய் திரும்பி வந்த பேருந்தில் ஏறிக் கொண்டார்கள். ஏகப்பட்ட வளைவுகள் தாண்டி ஊருக்கு இரண்டு பேர் இறங்க இவர்களும் கொளத்துப்பாளையத்தில் இறங்கிக் கொண்டார்கள். ஊரின் முகப்பிலேயே பள்ளிக்கூடமும், கோவிலும் இருந்தது. பள்ளியை ஒட்டி ரேசன்கடை இருந்தது. அங்கு வரிசையில் ஒரு கும்பல் நின்றிருந்தது. பள்ளியில் இருந்து குழந்தைகள் சப்தம் ஒரே கோரசாக கேட்டது. வெய்யல் தான் பயங்கரமாய் இருந்தது.

“எங்கய்யனை பாக்க வர்றீங்களா இல்லை ஸ்கூலுக்கு போயிட்டு வர்றீங்களா? நீங்க பாக்குறதை பார்த்தா திரும்பி வர்ற பஸ்சுல ஏறி

நேரா பொள்ளாச்சியே போயிடுவீங்க போல இருக்குதே! எங்கய்யன் ஒரு நாலு மணி வரைக்கும் தான் வீட்டுல இருக்கும். அப்புறம் சென்னிமலை பக்கம் புல்லட்டை எடுத்துட்டு கிளம்பிடுச்சுன்னா சாமத்துல தான் வரும். வாங்க" என்று வடக்கே மண் பாதையில் நடந்தவள் பின் சென்றான். தூரத்தே கீரிகள் இரண்டு ஒன்றன் பின் ஒன்றாக வால் பிடித்துக் கொண்டு சாலையைக் கடந்து குழிக்குள் இறங்கி ஓடின.

"இதைய எடால் வச்சு புடிங்கன்னு ரெண்டு பேருகிட்ட சொன்னேன் இன்னம் புடிக்கிறாங்க!" என்றவள் கிளைப்பாதையில் ஒண்டித்தடத்தில் திரும்பினாள். பள்ளியிலிருந்து குழந்தைகள் சப்தம் இன்னமும் மெலிதாக இவன் காதில் கேட்டவண்ணமிருந்தது. ஒண்டித்தடத்தில் ஓரமெங்கும் வேப்பை மரங்கள் இருந்தமையால் கொஞ்சம் குளுக்குளுவென இருந்தது நடக்க.

தூரத்தே அந்தக்கால பேய் பங்களா போல ஒரு வீடு தெரிந்தது. அது தான் வீடாக இருக்கலாமென நினைத்தான் இவன். சுற்றிலும் தென்னை மரங்கள் வேறு. கோட்டூரில் இவன் தோட்டத்திற்குள் செல்லும் மனநிலையிலேயே சென்றான். தோட்டத்தில் மிளகாய்ச் செடி போட்டிருந்தார்கள். கிணற்று மோட்டார் ஓடிக் கொண்டிருந்தது. ஒன்றிரண்டு பெண்கள் கையில் பேக்கோடு வரும் இவனை வெறித்துப் பார்த்து நின்றார்கள். இரண்டு நாட்டு நாய்கள் வடிவுக்கரசியை நோக்கி வாலை ஆட்டிக் கொண்டு படு வேகமாய் வந்தன.

வந்தவை இவனையும் முகர்ந்து பார்த்து விட்டு பின்னால் வந்தன. வீட்டின் முகப்பு கேட்டை நீக்கி உள் சென்றவள் பின் சென்றான். சாலையில் அம்பாசிடர் கார் ஒன்று நின்றிருந்தது. வீட்டின் முகப்பில் புல்லட் ஒன்றும் டிவியெஸ் ஒன்றும் நின்றிருந்தது. பப்பாளி மரத்தில் பச்சைக்காய்கள் கொத்தாய் தொங்கின பறிக்க ஆளின்றி! அதே போல்தான் கொய்யா மரத்திலும் காய்கள் மரம் பூராவும் தொங்கின. கயிற்றுக்கட்டிலில் அட்டணங்கால் போட்டு வெறும்மேலோடு படுத்திருந்தவர் முன்பாக சென்றவள், அப்பா! என்றாள்.

புஸ் புஸ்சென மூச்சு விட்டு தூங்கிக் கொண்டிருந்த வேலுச்சாமிக்கவுண்டர் கண்திறந்து மகளைப் பார்த்தார். அவருக்கு கனவில் பறக்கும் சக்தி கிடைத்து ஊரெங்கும் சொய்ங் சொய்ங்கென் பறந்து கொண்டிருந்த சமயத்தில் இவள் எழுப்பி இருந்தாள். மனசெங்கும் யாருக்கும் கிட்டாத சக்தி தனக்கு இருப்பதை ஐம்பத்தி ஐந்து வயதில் கண்டறிந்து சந்தோசமாய் பறக்கையில் மகள் வந்து

கெடுத்ததால் துக்கமாய் எழுந்தமர்ந்தார் கட்டிலில்.

மகளுக்கு அருகே நிற்கும் வாலிபனை யாரெனப் பார்த்து அடையாளம் தெரியாமல் மண்டையை சொறிந்தார். அவரின் தலை முகப்பு வழுக்கை போட்டிருந்தது. நெஞ்சிலும் தோளிலும் சுருட்டை சுருட்டையாய் தென்பட்ட முடிகள் சில நரைத்திருந்தன. நனைந்த பனைமரம் போன்றிருந்தவரை நோக்கி குமரேசன் கும்பிட்டு, வணக்கம் ஐயா! என்றான். யாராவது அதிகாரியாய் இருப்பானோ என்ற குழப்பத்தில் இவரும் வணக்கம் ஒன்றை வைத்து விட்டு “டேய் கலியா! எங்கட போய்த் தொலஞ்சே? எரும மேய்க்கி கூப்புட்டா ஒரு சத்தத்துக்கு பதிலு சொல்றானா பாரு. அம்மிணி போயி ஒரு சேரை எடுத்தாந்து போடு” என்றார்.

கலியன் என்று இவர் சப்தமிட்டவன் வருவதற்கான அறிகுறி இல்லாமலிருந்தது. தனக்காக இவளே சேரை எடுத்து வருவது இவனுக்கு ஒரு மாதிரி இருக்க, ’நானே போய் எடுத்துட்டு வர்றனுங்க! ’ என்று கிளம்ப யத்தனித்தவனை நிறுத்தினார்.

“உடு சாமி நீ! அவ ஊட்டுல சிந்தாமணி கிட்ட குடுத்துடுவா” என்றார். அதே மாதிரி நடுத்தர வயது பெண்ணொருத்தி சேர் கொண்டு வந்து இவனுக்காக போட்டாள்.

“கலியன் எங்காயா தொலஞ்சான்?”

“ஊட்டுக்கு பொறவுக்கால தொண்டுப்பட்டியில மாடுகளுக்கு தீனி வெச்சுட்டு நின்னானுங்களே இப்பத்தான். கெணத்து மோட்டாரை நிறுத்த போயிருப்பானுங்க! உங்களுக்கும் தம்பிக்கும் குடிக்க மோரு எடுத்தாறதுங்ளா?”

“இவ ஒருத்தி எதையும் கேட்டுட்டு சொன்னாத்தான் கொண்டாருவா! போ போயி தேக்சாவுல எடுத்தா. நீங்க உக்காருங்க தம்பி. என்ன விசயமா என்னை பாக்க வந்திருக்கீங்க?”

“ஐயா நானு இந்த ஊருக்கு பள்ளிக்கூட ஆசிரியரா வந்திருக்கேன். யூனியன் ஆபிஸ்ல தான் உங்களைப்போயி நேரா பாக்கும்படி சொன்னாங்க.”

“ஓ நீங்க ஆசிரியரா! சந்தோசம் தம்பி. ஆமா எந்த ஊர்ல இருந்து மாத்தல் வாங்கிட்டு வந்திருக்கீங்க?”

“நான் மாத்தல் வாங்கீட்டு வரலீங்க. போஸ்டிங் வாங்கீட்டு முதல் முதலா ஐயா ஊருக்குத்தான் வந்திருக்கேன்”

“அட! சொந்த ஊரு எது தம்பி உங்களுக்கு?”

“நான் பொள்ளாச்சிங்க. காட கூட்டத்துக்காரங்க”

“அட! தோட்டங்காடெல்லாம் உட்டுப்போட்டு இவ்ளோதூரம் வந்து அரசாங்க சம்பளம் வாங்கணுமுன்னு ரொம்ப ஆசையோ?”

“அது எங்கய்யன் ஆசைங்க! எங்கக்காவும் கோட்டூர்ல டீச்சரு தானுங்க!”

“எத்தன ஏக்கரா ஊர்ல இருக்குது தம்பி?”

‘நாப்பது இருக்குதுங்க! ஆழியாருல தண்ணி வந்துடுச்சுன்னா விவசாயம் நல்லா இருக்கும்.”

“இங்க மழை பேஞ்சாத்தானப்பா விவசாயம். நானே பாரு கெணத்துல உறிஞ்சி எடுத்து பேருக்கு காட்டுல தட்டு போட்டிருக்கேன். அது இங்க இருக்குற பண்டம் பாடிகளுக்கு செரியா இருக்குது. இந்த தோட்டத்துக்கு அந்தாண்ட காட்டுல வாழை போட்டிருக்கேன். அந்தக் காட்டுல இருக்குற கெணத்துல தண்ணி சும்மா பன்னீரு மாதிரி இருக்கும். இந்தக் கருமத்துல உப்புத்தண்ணிதான். முந்தாநாளு இப்ப பேஞ்சு போடறேன்னு மானம் எடறீட்டு கெடந்துது. சரி பெஸ்சு போடும்னு அன்னாந்து பாத்துட்டு இவத்திக்கே தான் கட்டல்ல கெடந்தேன். காத்து வந்துச்சு பாரு! அமட்டையும் ஓட்டீட்டு போயி காங்கேயத்துல கொட்டிருச்சாம்! ஆனா இந்த மாசத்துல மழை பெய்யோணும். இப்படி வடக்க பார்த்தின்னா கரடு.

அதுல இப்ப மானுக வேற புதுசா கௌம்பிட்டுதுக! வாழைத் தோட்டத்துக்கு நேரா சாமத்துல வந்துடுதுக! அதுக்கு காவலுக்கு கூலி கொடுத்து ஆள் போட்டிருக்கேன். பத்து நிமிசத்துக்கு ஒருக்கா பட்டாஸ் போடணும். ஏமாந்தா உள்ள முட்டீருதுக. கம்பிவேலிக்கி சொல்லியிருக்கேன் வந்துடும். நல்ல ஒசரமா போட்டுட்டா வராதுக. அதுகளும் பாவம் தீனிக்கி என்ன பண்ணும் தண்ணிக்கி எங்க போகும்? அப்படித்தான் தண்ணிக்கி வந்ததுல ஒன்னு தொட்டில உழுந்து செத்துடுச்சு! குட்டி மேல ஏறத் தெரியில. நாம கையில தொடப்படாதுன்னு பெருந்துறைக்கு போனப்பண்டி பாரெஸ்ட் ஆபீசருக வந்து தூக்கிட்டு போனாங்க! பக்கத்து ஊர்ல நேத்து வறக்கெணத்துல ஒரு புள்ளிமானு உள்ள உழுந்துடுச்சு. யாரு போயி எறங்கி மேல தூக்கறது? மேல ஏறத் தெரியில பாவம். அதுக்கும் ஆபீசருங்க வந்து கீழ இறங்க முடியாம நின்னாங்க. கீழ டில்லிமுள்ளு வேற! அதுல காலு வச்சு எப்படி எறங்கறது?

கலியனத்தான் முடியுமான்னு பாருடான்னேன். அவன் சரசரன்னு இறங்கிட்டான். சிலபேருக்கு வாகு அப்படி. முள்ளுலயே நடக்கான். எனக்கு கூசுது! எப்பிடியோ குட்டிய புடிச்சு கவுத்தை கட்டி உட்டு மேல தூக்கியாச்சு! அப்புறம் தண்ணியுங் கிண்ணியுங் குடுத்து கரட்டுக்கு தாட்டி உடலாம்னு பாத்தா செத்துப் போச்சு! என்ன அதிசயம் பாரேன். புள்ளிமானு குட்டிகளை தான் மனுசன் கையாலே தொடப்புடாதாம்ல! இன்னொரு எழவு சுத்துதுக. கடமானாம். அதுக என்னடான்னா எருமக்கன்னுகளாட்ட இத்தா இத்தாச்சோடு சுத்துதுகப்பா!" என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போது வடிவுக்கரசியே மோர் தேக்சாவோடு வந்தாள்.

"தேம்மிணி நீயே கொண்டாந்துட்டியா? வாத்தியாரு நம்ம சாதிதானாம்! இவரெ எங்க பாத்து நீ கூட்டிட்டு வந்தே?"

"சென்னிமலையில இருந்தே பார்த்தேன். இங்க நம்மூர்ல வந்து இறங்கி உங்க பேரைச் சொல்லி கேட்டதால இங்க கூட்டிட்டு வந்தேன்" என்றவள் குமரேசனுக்கு டம்ளரில் மோர் கொடுத்தாள். டம்ளர் பெரிய டம்ளராய் இருந்தது. இன்னொரு டம்ளர் குடித்தால் வயிறு நிரம்பிவிடும். வேலுச்சாமிக்கவுண்டர் மூன்று டம்ளர் குடித்து விட்டு பெருத்த ஏப்பம் ஒன்று போட்டார். இவன் இரண்டாவது டம்ளரோடு போதும் என்று சொல்லி விட்டான். ஆனால் மோர் வெய்யலுக்கு அப்படி இதமாய் இருந்தது அவனுக்கு.

'ஏனுங் கூப்பிட்டீங்ளா?' என்று தலையில் கட்டியிருந்த துண்டை கழற்றி உதறி கையில் பிடித்துக் கொண்டு வந்து நின்றான் கலியன். குமரேசன் கலியனைப் பார்த்தான். அவனுக்கு இவன் வயது தான் இருக்கும் போலிருந்தது. தாவாங்கட்டையில் சிரைக்காத இருபது நாள் தாடி வைத்திருந்தான். முகமெங்கும் புழுதி படிந்திருந்தது. வேலுச்சாமிக் கவுண்டர் போன்றே நனைந்த பனைமர நிறத்தில் தான் இருந்தான்.

"ஏண்டா எப்ப சத்தம் போட்டேன் எப்படா வந்து நிக்குறே?"

"எனக்கென்ன நாலஞ்சு கையிம் காலுமா இருக்குதுங்கோ! பறந்து கட்டிட்டு ஓடியார? நீங்க சத்தம் போடறப்ப நான் கெணத்து வெளியில நின்னனுங்க! இவரு ஆருங்க புதுசா இருக்குது. நம்ப சொந்தமுங்ளா?"

"சொந்தந்தான்! பள்ளிக்கோடத்துக்கு வாத்தியாரா வந்திருக்காரு. வேலயாளுக எல்லாரும் கெளம்பிட்டாங்களா?"

"ஒரு பாத்தில மொளகா பறிச்சா செரிங்க. பொடுசாள மட்டும் இருக்கச் சொல்லிட்டனுங்க! வாழை தோட்டத்துக்கு போயி மோட்டாரு

எடுத்துட்டு அவளை தண்ணிகட்டச் சொல்லியிருக்கன்"

"அது சரி. அப்ப தம்பி நீங்க தங்கறக்கு என்ன ஏற்பாடு? சாப்பாட்டுக்கு என்ன வழி பண்ணுவீங்க? சமைக்கத் தெரியுமா? இங்க கடை கண்ணி ஒன்னுங் கெடையாது. எல்லக்காடு போனாத்தான் கிடைக்கும்."

"அதுக்குத்தானுங்க ஊர்ல எறங்கன உடனே நேரா இங்க வந்திருக்கேன்! ஊருக்குள்ள ஒரு காலி வீட்டை எனக்கு புடிச்சுக் குடுங்க! நான் தங்கிக்கறேன்."

"ஏற்கனவே ஊருக்குள்ள எங்காத்தாவோட பழைய வீடொன்னு இருக்குது தம்பி. ஆனா அதுல இந்த யேசு சாமி கும்பிட புள்ளை ஒன்னு இருக்குது. அதும் டீச்சராத்தான் சேலத்துல இருந்து இங்க வந்து தங்கியிருக்குது பாவம். வேலை போட்டுக் குடுக்குறாங்க பாரு எப்படின்னு. இனி இவங்க மாத்தல வேணுமுன்னு எழுதிக்குடுத்து பக்கமா மாத்திக்கணும். அதும் வந்து ஒரு வருசமாச்சு தம்பி. என் பங்காளிக வேற அந்த டீச்சருக்கு வீட்டை குடுத்ததுல பொச்செறிச்சல் புடிச்சு திரியறாங்க! அது ஏதோ பொழைக்க நம்ம ஊரு தேடி வந்திருக்குது. பின்ன நம்ம பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்குடுக்க வந்திருக்குது. அது பின்ன எங்க தங்கும்னு ஒரு ரோசனை வேண்டாம்? அந்த வீடு பெருசாத்தான் இருக்குது தம்பி. ஆனா பாருங்க அதுக்கு இன்னும் கல்யாணமாகுல! அது அந்தப்பொண்ணுக்கு கெடுதியாப்போவும். இங்க நம்ம வீட்டுல மாடியில பழைய சாமான் போட்ட ரூமு ஒன்னு இருக்குது! இங்கியும் நான் வயசுப்பிள்ளை ஒன்னை வச்சிருக்கேனே! பஞ்சையும் நெருப்பையும் பக்கத்து பக்கத்துல வச்சா பத்திக்குமுன்னு பெரியவங்க சொல்றாங்கள்ல! அதான் யோசிக்கறேன்"

"நானு இந்த ஊருக்கு கல்யாணம் பண்டீட்டு போக வரலீங்க ஐயா! ஆசிரியத் தொழில் பாக்க வந்திருக்கேன். நீங்க சொல்றதுலயும் நாயமிருக்குங்க! நீங்க பாத்து யோசிச்சு எனக்கு ஒரு வழி பண்டுங்க" என்று சரண்டர் ஆனான் குமரேசன். அது அவரை மகிழ்ச்சிப்படுத்தும் என்பது அவனுக்கு தெரியும். அது வேலை செய்தது.

"சரி தம்பி, நானும் பக்கத்துல காட்டுப்பாளையத்துலயும் விசாரிக்கேன் வீடு காலியா இருக்கான்னு. அது வரைக்கும் நம்ம வீட்டுலயே தங்கிக்க! அம்மிணி தம்பியக் கூட்டிட்டு போயி நம்ம வீட்டை சுத்திக் காட்டு. அப்படியே உங்காயா கிட்ட அந்த மாடி ரூமு சாவிய வாங்கி நாலஞ்சு சாமான் தான் கிடக்கும். அதை வேற பக்கம் மாத்தி போடுங்க!" என்றார். 'வாங்க', என்று காலி தேக்சாவோடு அவள் செல்ல இவன் அவள்

பின்னால் நடந்தான்.

“ஏண்டா கலியா, செவுட்டுக்காசி இங்க பார்றா என்னைய மொதல்ல! போறவம் பொச்சப்பாத்தா என்ன மசுரா தெரியுது?”

“சொல்லுங்கோ! சின்னக்கவுணுச்சி பிரியஞ் சந்தோசமா போவுதுங்களேன்னு பாத்தேன்”

“அட வாத்தியாரு எப்படி? இன்னேரம் ஆள் நல்லவனா? கெட்டவனா? எல்லாம் கண்டுபுடிச்சிருப்பியே!”

“இதென்னுங்க வம்பா இருக்குது! நாளைக்கி என்னை குத்தம் சொல்லவா? நீங்களாச்சு அந்த தம்பியாச்சு. வாத்தியாரா இருந்தா எனக்கா சோத்துக்கு சம்பாதிச்சு குடுக்கப்போறாரு?”

”எனக்கென்னமோ சீக்கிரம் வேற எடத்துல ஒரு வீட்டைப்பார்த்து தம்பியத் தாட்டி உட்டுடோணுமுன்னு படுது!”

“படுதுங்ளா இல்ல பச்சி சொல்லுதா? புள்ளப்பெத்தவங்களுக்கு வர்ற கவலதானுங்க இது. நீங்க சொன்ன மாதிரி பொடுசாளை வாழைத் தோட்டத்துக்கு தண்ணி பாச்ச போவச் சொல்லிட்டனுங்க! இனி நீங்களாச்சு பொடுசாளாச்சு. வயசாயும் இந்த ஒரு வேலையை மட்டும் நிப்பாட்ட மாட்டீங்கறீங்ளே. அதுல என்னதான் இருக்குது? ஒன்னக்கண்ட மாதிரி தான இருக்கும் எல்லாமும்.”

“கலியாணம் பண்ணி உன் சம்சாரத்துகிட்ட படுத்துப்பாரு! அன்னிக்கி தெரியும் அதுல இருக்குற சந்தோசம். இப்ப உனக்கு மசுராடா தெரியும்.”

“அதென்னமோ நெசந்தானுங்க.”

“சரி நீ சொன்னதீம் பொடுசா என்ன சொன்னாடா?”

“அப்பிடியே அந்த சந்துப்பல்லை காட்டி ஈன்னு ஒரு இளி இளிச்சாளுங்க கவுண்டரே!”

“நீ கேக்குலியா ஒன்னும் அவகிட்ட?”

“நானு எனத்தைங்க அவகிட்ட கேக்கப்போறேன்?” என்றான். நிஜமாகவே அவன் பொடுசாவிடம் வாழைத்தோட்டத்துக்கு தண்ணி பாச்ச கவுண்டர் உன்னை நிக்கச் சொன்னாரு என்றபோது அவள் முகம் சுருண்டு தான் போனது. அவள் முகம் ஏன் அப்படி இஞ்சி தின்ன குரங்கு போல் மாறவேண்டும் என்றெல்லாம் அவனுக்குத் தெரியவில்லை. அதில் ஏதாவது வில்லங்கம் இருக்க வேண்டும் எனத்தான் நினைத்தான்.

“ஏன் உன் மூஞ்சி இப்படி கோணிக்கிட்டு போவுது?” என்று

அவளையே கேட்டான்.

“கௌப்பியுடு கௌப்பியுடுன்னு கவுண்டரு தும்பம் பண்ணுவாருடா! எனக்கு சீரழுவுதான் இன்னிக்கி!” என்றவளைப் பார்க்க பரிதாபமாகத்தான் இருந்தது. ஆனால் நூறோ இரநூறோ கையோடு கொடுத்து தாட்டிவிடுவார் என்று குஞ்சாக்காள் தான் சொல்லியது இவனிடம் ஒருமுறை. கவுண்டர் சந்தோசம் வந்தால் சிலசமயம் அப்படித்தான். கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும் என்பார்கள். சில சமயம் டிவியெஸ்சை எடுத்துக் கொண்டு போய் எல்லக்காட்டில் பாட்டில் வாங்கி வரச் சொல்வார் இவனிடம். அன்று இவனுக்கும் கிடைக்கும். போதையில் பாசமழை பொழிவார். என்ன அவர் சொல்வதெற்கெல்லாம் ஆமாம் சாமி போட வேணும்.

“ஆக்கித் திங்கத் தெரிஞ்சவனுக்கு பொண்ணு கட்டிக் குடுக்க கூடாதுன்னு சொல்றாங்கடா கலியா! பொண்டாட்டி வெறச்சிட்டு போனாலும் போடி மயிருன்னு அவம் பாட்டுக்கு சமைக்க ஆரம்பிச்சுருவானாம்”

“இப்ப எதுக்குங்க இந்த பழமொழி? சின்னக்கவுணுச்சிய கட்டியா குடுக்கப் போறீங்க?”

“கட்டிகுடுக்கறது இல்லடா! இப்பத்த பிள்ளைங்களுக்கு ஒவ்வொன்னையும் சொல்லியா குடுக்கணும். அத்துகளுக்கே எல்லாம் தெரியுதுடா! இப்ப கற்பகத்தை மயிலா கட்டிக் குடுத்தாள்ல என்னாச்சு? அது மாதிரி இவ வாழ்க்கையும் ஆயிடக் கூடாதில்லையா! பாரு அவளை வீட்டுல பாக்க பாக்க எனக்கு அப்படி சங்கட்டம்!”

“இத்தன சங்கட்டத்தையும் வெச்சுட்டு பொடுசாளை வாழைதோட்டத்துக்கு தண்ணி பாச்ச சொல்றீங்க! நீங்க அதுல தெளிவாத்தான இருக்கீங்க!”

“அட சங்கட்டம் வேற இது வேறடா! பசிக்குதுன்னு சோறு திங்கற மாதிரிதான். காதலு அது இதுன்னு கற்பகம் ஊட்டுல வந்து உக்காந்திருக்கிற மாதிரி இவளும் நின்னாள்னா என்னால என்ன பண்ணமுடியும்? கொந்தளிச்சா ஓடி மானத்தை வாங்குவாங்க! அதுக்கு சம்மதமே சொல்லிடலாம். ஏனோ எனக்கு மனசு ஒரு மாதிரியா இருக்குடா! நம்ம வடிவு எனக்கு கொலதெய்வம் மாதிரிடா கலியா! எதாச்சும்னா நான் என்னத்துக்கு ஆவேன்.”

“அப்படியெல்லாம் கவலப்படாதீங்க கவுண்டரே! அப்படியெல்லாம் நம்ம சின்னக்கவுணிச்சி வேண்டாத வேல எல்லாம் பண்டாது!” என்று

கலியன் சொல்ல மனதுக்கு திருப்தியானது. அவருக்கு இன்னொரு கணக்கும் மனதில் ஓடியது. அப்படி நடந்தால் அது சந்தோசம் தான். வேலுச்சாமிக்கவுண்டர் துண்டை எடுத்து தோளில் போட்டபடி எழுந்து இட்டேறி வழியே வாழைத்தோட்டம் நோக்கி சென்றார். கலியன் கவுண்டர் ஏனோ இன்று செரியில்லை என்று உணர்ந்தான். அப்படியான நாளில் கண்டிப்பாக சென்னிமலை ஜோலி என்று கிளம்ப மாட்டார் என்று தெரியும். இவன் தான் எல்லக்காடு போய் வர வேண்டுமென நினைத்தான்.

கவுண்டரின் இரண்டாவது சம்சாரம் வாசலுக்கு வந்தது. கட்டிலை எடுத்துப்போய் ஓரமாய் சாத்தும் கலியனிடம் பேச்சுக் கொடுத்தது.

“உங்க கவுண்டனெங்கடா இட்டேறில மடிச்சுக்கட்டீட்டு வேட்டைக்கி போற மாதிரி போறான்?”

“சலவாதிக்கி கீது போவாப்லைங்க கவுணுச்சி! ரொம்பத்தான் அக்கறை போங்க எங்க கவுண்டரு மேல” என்று சொல்லி விட்டு நகர்ந்தான். கவுண்டரின் ரெண்டாவது சம்சாரத்துக்கு பாம்புக்காது என்று இன்று இன்று தான் நம்பினான். உன்னிப்பாய் என்ன பேசுகிறார்கள் என்று ஜன்னல்புறமாக நின்று கேட்டு விட்டு இப்போது தன்னிடம் கேள்வி வேறு கேட்கிறதே!

கவுண்டர் வாழைத்தோட்டத்துக்கு செல்லும் சந்துப்படலை உள்ளே தள்ளி நுழைந்து பின் சாத்தி விட்டு வரப்போரத்தில் நடந்தார். கிணற்று மோட்டார் சீராக மொறச்சல் போட்டபடி ஓடிக்கொண்டிருந்தது. கிணற்று மேட்டுக்கு வந்தவர் தொட்டித் தண்ணீரில் முகத்தை கழுவி விட்டு பொடுசாளைத தேடினார். அவள் அங்கு இல்லை என்றதும் வாழைத்தோட்டத்துக்குள் இறங்கினார். தண்ணீர் பாத்தியில் சளசளவென ஓடிக்கொண்டிருந்தது. அதை வால் பிடித்துக் கொண்டே கிழக்கே நடந்தார். அதற்குள் பாதி தோட்டத்திற்கு பொடுசா தண்ணீர் விட்டிருந்தாள். மம்பட்டியும் கையுமாக நின்றிருந்தவள் இவரைப் பார்த்ததும் மம்பட்டியை போட்டு விட்டு புன்னகைத்தாள். தண்ணீர் பாயாத வடக்கு பாத்தியில் சேலையை அவிழ்த்து பொடுசா தரையில் விரித்தாள் இரண்டாக மடித்து. வேலுச்சாமிக்கவுண்டர் அவளை நின்றவாக்கிலேயே கட்டிக் கொண்டு இறுக்கினார்.

“மூச்சு முட்டுதுங்க கவுண்டரே! இன்னிக்கி ஏனுங் இப்பிடி?”

“எல்லாம் உம்மேல ஆசையில தான். முத்தம் குடுடி” என்றார். அவள் எக்கி நின்று இவர் கன்னத்தில் பொச்சென முத்தமிட்டாள் வெத்தில

பாக்கு பொயிலை வாசமுடன்.

“இந்தக்கருமத்தை போடாதடின்னா கேக்குறியா ஒன்னா? புத்துநோயி வந்து சாவப்போறேடி நீ”

“போனாப் போயிச் சாட்டாறேனுங்க கவுண்டரே! இன்னிக்கி ஏனோ சடவா இருக்குது கலியங்கிட்ட ஒரு பாட்டலு குடுத்து உடுங்கெ கவுண்டரே!”

“சேரிடி புடி”

“இப்புடி இறுக்கி நசுக்குனா எங்கீங்க புடிக்கிறது? வவுறு பாருங்க வந்து முட்டுது”

“நீ இன்னிக்கி எம்மேல உக்காந்துக்கோ”

“நானெல்லாம் மாண்டனுங்கோ. கலியங்கிட்ட சொல்லி உடாட்டி என்னுங்கோ கவுண்டரே! அவன் எங்க பொம்பளைக இருக்குறத காங்காதவனாட்ட அவளுக முன்னாடியே சொல்றான்”

“தண்ணி பாச்சிட்டு போவச் சொன்னன்னு சொல்லியிருப்பான் அது தப்பா”

“அவளுக என்னை மாதிரியா பாக்குறாளுக. இதென்னங்க கவுண்டரே வந்த நீங்க வெசைக்கி நான் இன்னிக்கி தீந்தேன்னு நெனச்சேன் இப்பிடி இருக்குது?”

“அது எப்பயும் அப்படித்தான்னு தெரியாதா? ஆனா நீ சும்மா உடுவியா? மத்தவளுகளுக்கெல்லாம் உம்பட சூதானம் வருமா? பக்குவம் தெரியுமா?” என்றவர் அவள் விரித்து போட்டிருந்த சேலையில் அமர்ந்து சாய்ந்தார். பொடுசா தாண்டுக்கால் போட்டு அவரின் தொடை மேல் உட்கார்ந்து கொண்டாள். கவுண்டர் கண்களை மூடி படுத்துக் கொண்டார்.

“இப்ப கவுணுச்சி வந்தா பாத்தாங்கன்னா ரெண்டு பேர்த்தையும் முண்டுக் கட்டையிலயே சாத்துவாங்க! என்னை தோட்டத்துப் பக்கம் காலை வைக்கவே படாதுன்னு சொல்லிருவாங்க”

“இப்ப எதுக்கு அந்த கெடாத்திய பேசுறே நீ? ஆகுற காரியத்தை பாரு” என்றவர் அவளை இழுத்து தன் மேல் போட்டு இறுக்கினார். பொடுசா அவரின் கன்னத்தில் முத்தமிட்டாள். அவரோ தன்மேல் கிடந்தவளின் முதுகை தடவிக்கொடுத்தபடி கையை கீழே கொண்டு சென்றார். கவுண்டர் வாழைத்தோட்டத்துக்கு வரச் சொல்கிறார் என்ற குறிப்பை

கேட்டதுமே அதற்கு தயாரகி இருந்தாள். ஒரே சங்கடம் கவுண்டரை கிளப்புவதில் தான் சிக்கல் நீடிக்கும்.

இப்போது அவர் மேலே கிடக்கையில் தன் பின்புற மேடுகளை தடவ ஆரம்பித்ததும் கசிய ஆரம்பித்தவள் மெதுவாக அதை ஒவைக்க ஆரம்பித்தாள். தன் நசுங்கிக்கிடந்த மார்பகங்களை உந்தி மேலேறி கவுண்டரின் முகத்தில் கிடத்தி அழுத்தினாள். கவுண்டருக்கு மூச்சு விடவே சிரம்மானது. வடக்கு வேலியிலிருந்து சரசரவென வந்த சாரை ஒன்று இவர்களைப் பார்த்து விட்டு மேற்கே கிளம்பி ஊர்ந்தது. கொசு வேறு இவர்களை நிம்மதியாக காரியம் பார்க்க விடுவேனா என்று சொய்க் சொய்க்கென கடி போட்டது. என்ன கடிச்சாலும் செரியென இருவரும் காரியத்திலிருந்தார்கள்.

# சயனம் 2

குமரேசனுக்கு வேலுச்சாமிக் கவுண்டரின் வீட்டில் தங்குவது ஒரே நாளில் முடியாத விசயமாக போய் விட்டது. வீட்டினுள் சென்றபின் தான் அவருக்கு இரண்டு சம்சாரம் இருக்கும் விசயமே தெரிந்தது. அவர்கள் இருவருமே வீட்டினுள் எலியும் பூனையுமாக சுற்றிக் கொண்டிருந்தார்கள். வடிவுக்கரசி கவுண்டரின் இரண்டாம் தாரத்தினுடைய பெண் என்பதை அவள் வீட்டினுள் அம்மா! என்றழைத்தவரைப் பார்த்து அறிந்து கொண்டான். இரண்டு தாரங்களுமே இவன் வைத்த வணக்கத்தை சட்டை செய்யாமல் வேண்டாத ஆள் வீட்டினுள் நுழைந்து விட்டதாகவே பார்த்தார்கள். கவுண்டரின் வீடு அவனுக்கு திருப்தியளிக்காமல் போனதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. இவள் அக்கா என்று அறிமுகப்படுத்திய பெண் இவளை விட அழகாய் இருந்தாள்.

அந்தப்பெண் தன் வாழ்க்கையை தொலைத்து விட்டு இருபத்தொரு வயதில் வீட்டில் தனியறையில் அமர்ந்திருந்தது பெருத்த சோகமாய் இருந்தது. மொத்தத்தில் அந்த வீடு நிஜமாகவே ஒரு இருண்ட வீடு போலத்தான் காட்சியளித்தது. அவரவர்களுக்கு எந்த நேரமும் வேலை இருப்பதாகவே அவரவர்பாட்டுக்கு இருந்தார்கள். திருடன் ஒருவன் நுழைந்து விட்டால் கூட, யாரடா நீ? என்று கேட்க மட்டார்கள் போலிருந்தது. வடிவுக்கரசி ஒருவள் மட்டுமே அந்த வீட்டில் வெளிச்சத்தைக் கொடுக்கும் பெண்ணாக தெரிந்தாள்.

அவள் பெரியம்மாவிடம் சாவி வாங்கி வந்து மேல்மாடியில் திறந்த அறை இப்போதைக்கு சுத்தப்படுத்திவிடலாம் என்ற எண்ணத்தையே போக்கடித்து விட்டது. எல்லா வேண்டாத சாமான்களும் அங்கு ஒழுக்கமாகக்கூட வைக்கப்படாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக வீசியெறியப்பட்டிருந்ததன. குமரேசன் வடிவுக்கரசியின் முகம் பார்த்தான். அவளுக்கும் அது புரிந்திருந்தது.

“இதை நாம சுத்தப்படுத்த முடியாதுங்க வடிவு. டஸ்ட் அலர்ஜி ரெண்டுபேருக்குமே வந்துடும்” என்றான்.

“எங்கய்யன் ஏதோ கொஞ்சம் ஜாமான் தான் கிடக்கும்னாருன்னு பார்த்தா நிஜமாவே முடியாதுங்க. இப்ப என்ன பண்ணுறது?”

“ஒன்னும் எனக்காக வருத்தப்படாதீங்க. வந்து பார்த்தோம் முடியாதுன்னு தெரிஞ்சிடுச்சு. நான் ஸ்கூலுக்கு கிளம்பிப் போய்

பார்க்கிறேன்ங்க வடிவு. எப்படியாவது ஏற்பாடு பண்ணிக்கிறேன்.” வடிவுக்கரசியும் மறுப்பு சொல்ல முடியாத நிலையில் தான் இருந்தாள். பெரியம்மா அப்போதே புன்னகையை முகத்தில் காட்ட ஆரம்பித்து விட்டாள். அது வேறு அவளுக்குள் சிரமத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

“உங்க போன் நெம்பரை கொடுத்துட்டு போங்க! நான் உங்களை கூப்பிட்டு கேட்டுக்கறேன்” என்றவளுக்கு தன் அலைபேசி எண்ணை கொடுத்து விட்டு மாடியில் இருந்து இறங்கினான். வீட்டை விட்டு வெளியில் வந்ததும் தான் ஒரு புத்துணர்ச்சியே அவனுக்கு வந்தது. பெரிய வீட்டினுள் ஜன்னல்கள் இருந்தும் உள்ளே காற்று என்பது துளி அளவு கூட இல்லை. போக என்னமோ ஒரு சூன்யத் தன்மை அந்த வீட்டினுள் இருப்பதாகவே இருந்தது இவனுக்கு. அது அவர்கள் பாடு என்று வடிவுக்கரசியிடம் மட்டும் சொல்லிக் கொண்டு கேட்டைத் தாண்டினான் குமரேசன். ஒண்டிப்பாதையில் வேப்பைமர நிழலில் நடந்தவனை மிளகாய் தோட்டத்திலிருந்து கலியனின் குரல் கூப்பிட்டு நிறுத்தியது.

“ஏன் சார் கிளம்பிட்டீங்க? ஒன்னும் சரிப்படலியா?” என்றான்.

“கவுண்டரு சொன்ன ரூமை இப்போதைக்கு சுத்தப்படுத்த முடியாது போல இருந்துச்சு அதான்”

“என்னையெல்லாம் ஊட்டுக்குள்ள கவுண்டரு உடமாட்டாருங்க சார். இல்லீன்னா பத்து நிமிசத்துல பளிச்சுனு சரிபண்ணிப் போடுவேன்.”

“இல்ல அது முடியாது போல அப்படி குப்பையா கிடக்கு.. ஆமா உன் பேரு என்ன?”

“கலியன் சார்! மூனாப்பு வரைக்கும் படிச்சேன் சார் பள்ளிக்கூடத்துல! ஆனா தினத்தந்தி பேப்பரெல்லாம் படிப்பேன். இங்லீஸ்ல கையெழுத்து போடுவேன். குப்பை என்ன சார் குப்பை மூஞ்சில துண்டைக்கட்டீட்டு படப்படன்னு தூக்கி வீசிடலாம். சரி தங்கறதுக்கு உங்களுக்கு மேக்க காட்டுப்பாளையத்துல ஒரு வீடு இருக்குதுங்க சார். அங்க நான் கூட்டிட்டு போறேன் உங்களை.”

“உனக்கு வேலை எப்ப முடியும்?”

“வேலை என்ன சார் வேலை. ஆறு மணிக்கு எருமை மாடுகளுக்கு தீவனம் தூக்கி போட்டுட்டு கிளம்ப வேண்டியது தான். அதுக்கும் மேல பாலு கறக்க கவுணுச்சி வந்துருவாங்க. நானு தொட்டு கறந்தா தீட்டாப் போயிடுமாம். போக மாடும் மறா நாளுல இருந்து பாலு தராதாம். பால்

கேனைக்கூட சொசைட்டில கொண்டி சின்னக்கவுணிச்சிதான் ஊத்தீட்டு வருவாங்க. நானு ஆறுமணிக்கு வேலைய முடிச்சுட்டு நேரா பள்ளிக்கூடத்துக்கு வர்றேன் போங்க” என்றான் கலியன். இவன் கிளம்பினான்.

பள்ளிக்கூடத்திற்குள் நுழையும் போது மணி நான்கை நெருங்கிக் கொண்டிருந்தது. இன்னும் பத்து நிமிடத்தில் பள்ளியே முடிந்து விடும். எந்த வகுப்பிலிருந்தும் பிள்ளைகளின் சப்தம் வரவில்லை. இவன் வேப்பைமர நிழலில் நின்றான். பள்ளியில் மூன்று டீச்சர்கள் இருப்பதாக சொன்னார்கள் யூனியனில். மரத்தடியில் நின்றிருந்த இவனைப்பார்த்து ஐந்தாம் வகுப்பு மாணவர்கள் ஜன்னலில் குசுகுசுவென பேசினார்கள். அதைத் தொடர்ந்து கையில் பிரம்பு வைத்தபடி முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு அம்மாள் அந்த வகுப்பின் கதவருகே தோன்றினார்.

“வாங்க சார் அங்கயே நின்னுட்டீங்க” என்று அவர் குரல் கொடுக்கவும் இவன் அவரை நோக்கிச் சென்றான்.

“போன் பண்ணி சொல்லியிருந்தாங்க சென்னிமலையில இருந்து. வாங்க சார்” என்று இவன் கிட்டே செல்லச் செல்லவே மீண்டும் ஒருமுறை மகிழ்வோடு அழைத்தார் அவர். இவன் படியேறிச் சென்று வணக்கம் வைத்தான்.

“வாங்க ஆபீஸ் ரூம்ல போய் பேசுவோம்” என்று அவர் இவனை கூட்டிக்கொண்டு சென்றார். ஆபீஸ் அறையில் பெரிதாக காந்தி படம் மாட்டப்பட்டிருந்தது. திருவள்ளுவர், பாரதியார் படங்களும் இருந்தது. அறையில் அமர்வதற்காக இருந்த நான்கும் மரநாற்காலிகள் தான். இவனை அமரச் சொன்னவர் தம் நாற்காலியில் அமர்ந்து புன்னகைத்தார். தன் பேக்கிலிருந்து பைல் ஒன்றை எடுத்து அவரிடம் கொடுத்தான் இவன். அவர் அதை வாங்கியதும் டேபிளில் வைத்து விட்டு, ”என்ன சாப்பிடறீங்கன்னு கூட கேக்க முடியாதுங்க சார். அப்படி ஒரு ஊரு இது” என்றார்.

“பரவாயில்லைங்க மேடம்” என்றான்.

“மூனு டீச்சர்ஸ் தான் இரநூறு கொழந்தைகளுக்கு ஒரு வருசமா ஜமாளிச்சுட்டு இருந்தோம். ஒருத்தர் லீவு போட்டுட்டாலும் ஜமாளிக்கிறது ரொம்ப சிரமமா இருந்துச்சுங்க சார். போக மூனுபேரும் லேடீஸாப் போயிட்டோம். அவசரத்துக்கு பள்ளி விசயமா கிளம்பிப் போகக்கூட அவ்ளோ சிரமமா இருந்துச்சு. எனக்கு இப்போத்தான் திருப்தியா இருக்கு.”

“விடுங்க மேடம் நான் பார்த்துக்கறேன் எல்லாத்தையும். நீங்க எதுக்கும் கவலைப்படாதீங்க” என்றான் அவர் மனநிலை அறிந்து. நிஜமாகவே சிரமப்பட்டிருக்கிறார் என்பது அவர் பேச்சிலேயே இவனுக்குத் தெரிந்தது. அப்போது பெல்லடிக்க குழந்தைகளின் கூச்சல் சப்தம் பெரிதாய் கிளம்பிற்று.

“நேட்டிவ் பொள்ளாச்சின்னு சொன்னாங்க இங்க பிரசிடெண்ட்டை பார்த்தீங்கன்னா தங்குறதுக்கு ஏற்பாடு செஞ்சு குடுத்துடுவாரு உங்களுக்கு. அவரு நல்ல மனுசன். பெல்லா டீச்சருக்கு கூட வாடகை வாங்கிக்காம அவர் வீட்டை இவங்களுக்கு கொடுத்திருக்காரு. உங்களுக்கும் ஒரு ஏற்பாடு செய்யாமலா போயிடுவாரு.” அதேசமயம் பெல்லா டீச்சரும் இவனை வணங்கியபடி உள்ளே வந்தார்.

“மேடம் நீங்க எப்படி ஸ்கூலுக்கு வர்றீங்க? எங்க இருந்து?”

“என் நிலைமை இப்பத்தான் பரவாயில்லை ரெண்டு வருசமா! என் சொந்த ஊர் ஊத்துக்குளிக்கு பல வருசமா கேட்டு இப்பத்தான் கொஞ்சம் பக்கமா வந்திருக்கேன். இங்க இருந்து ஐஞ்சு கிலோ மீட்டர் தான். எங்க வீட்டுக்காரரு திருப்பூர்ல பனியன் கம்பெனி வச்சிருக்காரு.”

“ஓ! அப்ப மரத்தடியில நிக்கிற ஸ்கூட்டி உங்களுது.”

“அதான் எனக்கு பிரச்சனையே இல்லை இப்பத்திக்கி. இவங்க இந்திரா டீச்சர். இவங்களுக்கு போஸ்ட் கிடைச்சதே பாக்கியம் தான். இதே ஊர்” என்றார். இவனை இந்திரா டீச்சர் வணங்கினாள்.

“மேடம் உங்க பேரை தெரிஞ்சிக்கவே இல்லை. என்பேரு குமரேசன்” என்றான்.

“என் பேரு மீனாட்சி சார்.”

“நான் பிரசிடெண்ட் வீட்டுல இருந்து தான் நேரா வர்றேன். அவரு வீட்டுல மாடியில தங்கிக்கச் சொன்னாரு. ஆனா அதை சுத்தப்படுத்த ஒரு நாள் வேணும். ஆனா பக்கத்துல ஒரு ஊர்ல வீடு இருக்கிறதாவும் அங்க கூட்டிட்டு போறதாவும் கலியன்னு ஒருத்தர் சொன்னாப்ல! அவரு வர்றவரைக்கும் நான் பள்ளிக்கூடத்துல இருக்கிறதா சொல்லிட்டேன்”

“கலியன்கிறது எங்க பக்கத்து வீட்டு அண்ணன் தான். அவரு நல்ல அண்ணன். அவரு சொன்னாருன்னா மொதல்லயே அவருக்கு வீடு இருக்கிறது தெரிஞ்சிருக்கும். ஏங்க சார் அவர் சொன்னது காட்டுப்பாளையமா?” என்றாள் இந்திரா. இவன் ஆமாமென தலையாட்டினான்.

“இதென்ன பக்கம் தானுங்க சார். ஒருகிலோ மீட்டர் தான்.”

“சரிங்க சார் அப்ப நான் கிளம்புறேன். உங்களுக்கு என் வாழ்த்துக்கள்! வகுப்பறைகளை பூட்டி சாவியை பெல்லா டீச்சர்தான் எடுத்துக்குவாங்க! காலையில் பார்ப்போம்” என்ற தலைமையாசிரியை இந்திரா வணக்கம் வைத்து விட்டு விடைபெற்று கிளம்பினார்.

“நீங்க போய் கிளாஸ் ரூம்களை பூட்டிட்டு வந்துடுங்க டீச்சர்” என்று சாவிக்கொத்தை ட்ராவிலிருந்து பெல்லா எடுத்து இந்திரா கையில் கொடுத்தார். அவர் வாங்கிக் கொண்டு கிளம்பினார். இருவருக்கும் வயது இருந்தால் இருபத்தி நான்கு இருக்கலாமென கணக்கிட்டான் குமரேசன்.

“அவங்க பூட்டீட்டு சாவி கொண்டு வரட்டும் வாங்கிட்டு என் வீட்டுக்கு வாங்க கலியன் வர்ற வரைக்கும் பேசிட்டு இருப்போம்.” என்றதற்கு இவன் மறுப்பேதும் சொல்ல முடியவில்லை. அதேபோல் இந்திரா வந்த்தும் அந்த அறையையும் பூட்டிக்கொண்டு பள்ளியின் வெளிகேட்டையும் பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பியவர்கள் பின் நடந்தான். கவுண்டர் வீடு செல்லும் பாதையில் இந்திரா டீச்சர் விடைபெற்று கிளம்பினார். இவர்கள் மேற்கே சிறிது தூரம் வந்ததும் ரோட்டு மேலேயே இருந்த திண்ணை வைத்த வீட்டின் பூட்டை நீக்கி பெல்லா செல்ல இவனும் வீட்டினுள் நுழைந்தான். உள்ளே பெரிய ஆசாரம் இருந்தது. நான்கு ரூம்களும் சாத்தப்பட்டு பூட்டப்பட்டிருந்தன.

“இப்படி பெரிய வீட்டுல ஒத்தை ஆளா இருக்கிறது உங்களுக்கு பயமா இல்லீங்களா டீச்சர்?’ என்றான். பெல்லா டீச்சர் ஒரு அறையின் பூட்டை திறந்து கொண்டிருந்தார்.

“பயமென்ன பயம்? இன்னும் கொஞ்சம் நேரத்துல ஐஞ்சு மணிக்கு பத்து கொழந்தைகள் டியூசன் வருவாங்க! ஏழரை மணி வரைக்கும் டியூசன் படிச்சுட்டு போயிடுவாங்க. அப்புறம் கேபிள் கனெக்சன் இருக்கு. ஒன்பது மணி வரை டிவி பார்த்துட்டு சாப்டுட்டு படுத்துட வேண்டியது தான். வீட்டுக்குள்ளயே பைப்ல தண்ணி வரும் காலையில ஒரு மணி நேரம். பாத்ரூம் கட்டி வச்சிருக்கார். எல்லா வசதியும் இருக்கு. பேய்கள் கூட இல்லை!” என்று சிரித்தபடி சொன்னவள் இவனுக்கு சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

“அப்படியே பேய் வந்தாலும் கழுத்துல சிலுவைசெயின் போட்டிருக்கீங்க! அதை பேயை பார்த்து நீட்டி ஸ்தோத்திரம் சொன்னீங்கன்னா ஓடிடும் இல்லீங்களா?” என்றவன் தண்ணீரை

குடித்து விட்டு செம்பை அவளிடமே கொடுத்தான்.

"சினிமாவுல காட்டுறதை வெச்சு சொல்றீங்களா சார்! அப்படி எல்லாம் காட்டினா நிசத்துல பேய்கள் போகாது. சரி சேர்ல உக்காருங்க நான் டீ வெச்சிட்டு வந்துடறேன்" என்று அறைக்குள் நுழைந்தாள்.

"நீங்க ஏன் சார்னு இப்பவும் என்னை கூப்பிடறீங்க! அதை விடுங்க!" என்றான்.

"சரிங்க சார்" என்று அறைக்குள்ளிருந்து குரல் கொடுத்தாள் பெல்லா. இவன் பழைய நாற்காலியை தாங்குமா என சோதித்து அமர்ந்தான். தன் பேக்குகளை தோளில் இருந்து இறக்கி சுவற்றோரமாய் வைத்தான். பெல்லா உள்ளிருந்து இன்னொரு சேரை கொண்டு வந்து வெளியில் போட்டாள். அவள் திரும்பி வருகையில் இரண்டு டீ டம்ளர்களோடு வந்தாள்.

"ப்ளாக் டீ தான். அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க சார்" என்றாள்.

"இங்க பால் சொசைட்டி இருக்குன்னானே கலியன்"

"இருக்குங்க பக்கத்துல தான். ஏழரை மணிபோல போனா அரை லிட்டர் வாங்கிட்டு வந்துடுவேன். நான் பால் குடிக்கிறதில்லே. ஆனா மதிய நேர வெய்யிலுக்கு மோர் வேணும் சாப்பாட்டுக்கு! அதே போல நைட்டும்! உங்களுக்கு சமைக்க வருமா?"

"ஒரு தைரியத்துல கிளம்பி வந்திருக்கேன். நீங்கெல்லாம் இருக்கீங்கள்ல!"

"கண்டிப்பா. சமைக்க முடியலைன்னா வருத்தப்பட வேண்டாம் நீங்க. கொஞ்சம் சேர்த்து செஞ்சா ரெண்டுபேருக்கும் ஆகிடும்"

"இந்த ஊர் ஆட்களெல்லாம் எப்படிங்க பழகுறாங்க?"

"ரொம்ப நல்லா பழகுறாங்க! ஊர்னு இருந்தா சில பேரு அப்படி இப்படி இருக்கத்தான் செய்வாங்க! ஆனா என் வழியில யாரும் வர்றதில்லே! அவங்களுக்கு அவங்க கொழந்தைங்க நல்லா படிச்சாப் போதும். இங்கிருந்து கான்வெண்ட் ஸ்கூலுக்கு கூட அனுப்புறாங்க! சென்னிமலையில இருந்து குழந்தைகள் வேன் வருது. வசதி இருக்கிறவங்க அனுப்பறாங்க. ஆனா கொஞ்சம் நடுத்தர குடும்பத்தை சேர்ந்த குழந்தைகள் நம்ம ஸ்கூல்ல தான் படிக்குது. ஓவியப் போட்டி விளையாட்டுப் போட்டின்னு இங்க அதிகம் குழந்தைகளுக்கு கற்பிக்க முடியல. அப்படி திறமையான குழந்தைகளை வேற பள்ளிகளுக்கு கூட்டிப்போய் போட்டியில கலந்துக்க வைக்க முடியறதில்லே! இப்ப

நீங்க வந்ததால இனிமேல் அது ஈஸியா நடக்கும்.”

“டேலண்ட்டான குழந்தைகள் இருக்காங்களா டீச்சர்?”

“இப்ப நீங்க டீச்சர் போட்டு கூப்பிடறீங்க? இருக்காங்க! டீ எப்படி மோசமில்லாம இருந்துதுங்ளா?”

“மோசம்னு சொன்னா டெய்லியும் எனக்குத்தான் பாதிப்புங்க பெல்லா! உங்க ஊர் எதுங்க? அப்பா அம்மாவெல்லாம் என்ன பண்ணீட்டு இருக்காங்க?”

“எனக்கு சேலம் அம்மாபேட்டை தானுங்க ஊரு. காலாண்டு, அரையாண்டு பரிட்சை லீவுல தான் போய் இருந்துட்டு வர்றது. மத்தபடி மூனு நாள் தொடர்ந்து லீவு கிடைச்சாக்கூட போறதில்லை நான். இங்க அப்படியே பழகிடுச்சு. ஆனா வந்த புதுசுல ஒருவாரம் ரொம்ப சிரம்மா இருந்துச்சுங்க. எந்த நேரமும் வீட்டு நினைப்பாவே இருந்துச்சு. மீனாட்சி மேடம் தான் தைரியம் சொன்னாங்க. அண்ணன் ஒருத்தரு பாரஸ்ட் ஆபீசரா இருக்காரு. அவருக்கு ரெண்டு குழந்தைகள். அப்பா அம்மா தனியாத்தான் வீட்டுல இருக்காங்க. இங்க கூப்பிட்டுக்கலாம்னு பார்த்தேன். ஆனா எனக்கு மட்டும் தான் இந்த வீட்டை குடுத்திருக்காரு. அப்பப்ப வருவாரு பிரசிடெண்ட். வந்தால் பொலம்புவாரு. அவங்க பங்காளிக எல்லாம் அவரை பேசுறாங்களாம். எனக்கு வீடு கொடுத்ததால! அது என்னமோ சங்கடம் தானுங்க! இது கிராமம். மக்களுக்கும் அதிகம் படிப்பறிவு இல்லை. என்னை பார்த்தாவே ஒதுங்கிக்குவாங்க! டவுனா இருந்தா இதெல்லாம் தெரியாது. இங்க சிலருக்கு என்னால சங்கடம் தான். இதுல அப்பா அம்மாவையும் கூட்டி வந்து உக்காந்துட்டா கண்டிப்பா பிரச்சனை வரும். அதான் விட்டுட்டேன்.”

“மாற்றல் கேட்டிருக்கீங்களா?”

“கேட்டுட்டே இருக்கேன். கிடைச்சுதுன்னா கும்புடு போட்டுட்டு போயிடுவேன்”

“உங்க அண்ணன் பாரஸ்ட் ஆபீசரா எந்த ஊர்ல இருக்காரு?”

“அவரு சென்னிமலையில தானுங்க! ஆனா அண்ணிக்கு என்னை பிடிக்காது. அண்ணன் சம்பாதிக்கறதை நான் பிடுங்கிக்கிறதா ஏதாவது சொல்லி அண்ணன் கூடவே சண்டை போட்டுட்டு இருப்பாங்க! அவரு எப்பவாச்சும் இங்க வந்துட்டு ஞாயிறன்னிக்கி இருந்துட்டு போவாரு. அது கூட இங்க ஒரு நாள் பிரச்சனை ஆயிடுச்சுங்க! அண்ணன்னு நம்பவே மாட்டீங்கறாங்க!”

“ஐய்யோ அப்புறம்?”

“அதுக்கும் பிரசிடெண்ட் தான் வந்து தீர்த்து வச்சாரு. அண்ணன் இங்க ரெண்டு மாசமா வர்றதையே விட்டுட்டாரு. போன்ல பேசிக்கறதோட சரி. நான் அவரு வீட்டுக்கு போறதில்லே. என் கதையையே கேட்டுட்டு இருக்கீங்க. உங்க கதையையும் கொஞ்சம் சொல்லுங்க சார்”

“இல்ல நான் உங்க கிட்ட உட்கார்ந்து பேசிட்டு இருக்கிறது கூட உங்களுக்கு சங்கடத்தை கொண்டாந்துடுமோன்னு எனக்கு யோசனை வந்திடுச்சுங்க பெல்லா! நான் ஸ்கூல்லயே போய் நின்னுக்கறனே! ஏன்னா இங்க ஏதாவது பிரச்சனைன்னா அதுக்கும் பிரசிடெண்ட் வந்து சொல்லணும் நான் யாருன்னு!”

“ரொம்ப பயமா இருக்கா உங்களுக்கு? அதை அப்ப பார்த்துக்குவோம்”

“இல்லங்க பெல்லா! இது கிராமம். அவங்க கண்ணுக்கு பாக்குறது எல்லாம் தப்பாத்தான் தெரியும். நான் யாருன்னு இந்த கிராமத்தாருக்கு இன்னும் தெரியாது. ஒரு வாரத்துல தெரிஞ்சுக்குவாங்க! அப்ப பிரச்சனை வராது. அப்ப வந்தாலும் அதை நான் பார்த்துக்குவேன். சாரி! கிளம்புறேனுங்க பெல்லா!” என்றவன் தன் இரண்டு பேக்குகளையும் தோளில் எடுத்து போட்டுக் கொண்டான்.

“அப்படின்னா ஸ்கூல் சாவி தர்றேன் உங்க கிட்ட! வீடு பாருங்க. சரிவரலை அப்படின்னாலும் நீங்க ஸ்கூல்ல தங்கிடுங்க!” என்றவள் மீண்டும் அறைக்குள் சென்று சாவிக் கொத்தை கொண்டு வந்து குமரேசனிடம் கொடுத்தாள். அவன் வாங்கிக் கொண்டு வெளியேறி ஸ்கூலை நோக்கி நடந்தான். சாலையில் இருந்த வீடுகளின் திண்ணையில் அமர்ந்திருந்த பெண்கள் சிலர் ஊருக்குள் திருடன் நுழைந்திருக்கிறான்! என்பது மாதிரித் தான் பார்த்தார்கள் இவனை. இவன் கண்டுகொள்ளாமல் நடந்தான்.

பள்ளியின் முகப்பு கேட்டின் பூட்டை நீக்கிய போதே இரண்டு பேர்கள், ”யாருப்பா அது?” என்று களவு போகும் பள்ளியை காப்பாற்ற வந்தார்கள். இவன் அவர்களுக்கு விசயத்தை சொல்லி பள்ளியினுள் நுழைந்தான். அவர்கள் ஊருக்குள் அந்த தகவலைச் சொல்ல கிளம்பிப் போனார்கள். இவன் பள்ளித் திண்ணையில் துண்டை விரித்து தலைக்கு ஒரு பேக்கை கொடுத்து கால் நீட்டி சாய்ந்தான். நிஜமாகவே நிம்மதியாய் இருந்தது.

சாப்பாட்டுக்கு மட்டும் ஏற்பாடு செய்து கொண்டால் ஏதாவது ஒரு அறையை நீக்கி இரண்டு பெஞ்ச்சுகளை இழுத்துப்போட்டு வீழ்ந்து

விடலாம் என்று இருந்தது. அதற்கும் இனி பிரசிடெண்டிடம் தான் அனுமதி வாங்க வேண்டும். செல்போனில் மணியைப் பார்த்தான். ஐந்தரை என்று காட்டியது. பள்ளியின் வெளிகேட்டை இழுத்துச்சாத்தி உட்புறமாய் தாழிட்டிருந்தான். கேட்டுக்கும் அந்தப்புறம் சில பெண்கள் கையில் குழந்தைகளுடன் நின்று கசமுசவென பேசிக்கொண்டிருந்தார்கள்.

"சார் சார்!" என்று ஒரு பெண்ணின் குரல் இவனை முகப்பை நோக்கி திரும்பி பார்க்க வைத்தது. இத்தனை பேர் அதற்குள் முகப்பில் நின்றிருப்பார்கள் என்று இவன் எதிர்பார்க்கவில்லை. சிரமமாய் எழுந்து அவர்களை நோக்கிச் சென்றான். இவனை சார் என்று அழைத்த பெண் இவனைப்பார்த்து வணக்கம் வைத்தாள். இவனும் வணக்கம் வைத்து கேட்டை நீக்கினான்.

"சார் நான் பள்ளிக்கூடத்துல சமையல் வேலை செய்யுற பொன்னம்மாளுங்க! இதே ஊரு தானுங்க சார்" என்றாள். பொன்னம்மாவுக்கு பேர்தான் பொன்னம்மா என்றிருந்ததே ஒழிய அவள் கிராமத்து பொன்னம்மா போல் இல்லை. நீண்ட மூக்கும் குஞ்சு வாயும் பெற்றிருந்த அவள் நைட்டி அணிந்திருந்தாள்.

"வாங்க சார் என் வீடு பக்கத்துல தான்." என்றாள் அவள். இவன் என்ன பதில் சொல்வதென நினைத்த சமயத்தில் கலியன் டிவியெஸ்சில் பர்ர்ரென வந்து நின்றான்.

"வாத்தியாரென்ன உங்களுக்கெல்லாம் வேடிக்கையா காட்டுறாரு? போங்க எல்லாம்" என்றவன் வண்டியை நிறுத்திவிட்டு வந்தான். இடுப்பில் குழந்தைகள் வைத்திருந்த பெண்கள் சிலர் கிளம்பினார்கள். "புதுசா வந்திருக்காறேன்னு பாத்துப்போட்டு போலாம்னு வந்தா இவனென்னமோ இவனூட்டுக்கு ஒறம்பரை வந்தாப்ல பன்னாட்டு பண்றானா!" என முனகிச் சென்றார்கள்.

"சார் பேக்கெல்லாம் எங்க வச்சீங்க? வாங்க சார் எடுத்துட்டு போவோம்." என்ற கலியன் பள்ளியினுள் நுழைந்தான். குமரேசனும் அவன் பின் செல்ல பொன்னம்மாவும் வந்தாள்.

"என்ன சாப்பாட்டுக்காரம்மா ஊட்டுக்கார்ருக்கு நாலு மொட்டு எடுத்துட்டு போலாமுன்னு வந்திங்களா?" என்றான்.

"வாய் மேலயே ஒன்னு போட்டுருவன் பாத்துக்கோ! அவரென்ன மொட்டு திங்க ஏங்கிப் போயித்தான் கெடக்குறாருன்னு நெனச்சியா? சார் என்னடா நெனப்பாரு! நீ பாட்டுக்கு எடுத்து உட்டுட்டே?"

“தமாசு பேசுனா கோவிச்சுக்கிறீங்களே!”

“தமாசு எதெதுல பேசணுமுன்னு விவஸ்தையே கெடையாதா? எம்பட வேலைக்கி ஒலை வைக்குற மாதிரியே பேசுறது ஏண்டா? ஊர்க்காரிகளும் அப்படியே பேசுறாளுக! அவளுகளுக்குத்தான் வேலைய வாங்கி கவர்மெண்ட் சம்பளம் வாங்குறாள்னு பொறாமெ! மத்தியானம் ஊடு போறப்பெல்லாம் மடியில கட்டீட்டு போறாளான்னு பாக்குறாளுக! நானே அவுத்து காட்டீட்டு தான் வீடு போறேன்.”

“விடுங்க பொன்னம்மா.” என்றான் குமரேசன்.

“நீங்கன்னா பரவால்ல, நாளைக்கி ஆபீசர் யாராச்சும் வந்திருக்கப்ப இவன் விளையாட்டு பேசிட்டு சிரிச்சான்னா என் வேலைக்கு வேட்டு வந்துடுமுல்லங்க சார்”

“நான் தெரியாம பேசிட்டன் தாயி, என்னை மன்னிச்சு உட்டுடுங்க மகராசி” என்றவன் அதையும் வேடிக்கையாகவே சொன்னான்.

“சார் இவங்கூட புறப்படறீங்க! எங்க கூட்டிட்டு போறான் சார் இவன்? ஒரு கோட்டர் பாட்டலு கெடைக்குதுன்னா யாரை வேணாலும் கூட்டி குடுத்துடுவான் சார் இவன். பிரசிடெண்டு கூடயே இருக்குறதால அவரு கிட்ட நல்லா பன்னாட்டு பண்ண கத்துக்கிட்டு என்னமோ ஊருக்கே இவன் தான் பிரசிடெண்டு மாதிரி சுத்துவான் சார். போடா போயி உம்மட பிரசிடெண்டுக்கு கழுவி உடு போ!” என்று பொன்னம்மா சொன்னதற்கும் சிரித்தான்.

பார்க்க சிவந்த நிறத்தில் அளவான உடம்புடன் இருக்கும் பொன்னம்மா பேச ஆரம்பித்தால் அவள் அழகுக்கு துளியும் சம்பந்தமில்லாமல் இருப்பதாய் நினைத்தான் இவன். கையில் எந்த நேரமும் செல்போன் பிடித்திருக்கும் பெண்ணாக இருந்தாள்.

கலியன் பள்ளித்திண்ணையில் உந்தி ஏறி அமர்ந்து பொன்னம்மாவை தொடர்ந்து பேசவே கிளப்பி விடுபவன் போல பீடி ஒன்றை பற்ற வைத்தான்.

“பள்ளிக்கூடத்து திண்ணையில உக்காந்துட்டு பீடிக்குடி என்னடா உனக்கு பீடிக்குடி? இறங்குடா மொதல்ல கீழ! வந்த அன்னிக்கே இந்த திருவாத்தான் எங்கீங்க சார் உங்ககூட பழகினான்?”

“சாப்பாட்டுக்காரம்மா உங்க ஊட்டுக்காரரு இன்னிக்கி எதாச்சும் சாமத்துல பண்டுவாரா?” என்றான் சாதாரணமாய். குமரேசனும் அப்போது தான் பொன்னம்மாவின் கழுத்தைப் பார்த்தான். கழுத்தில்

தாலிக்கயிறு வர்ணமிலந்து கிடந்தது. காலில் மெட்டி இருந்தது. இதுநேரம் வரை பொன்னம்மாவை திருமணமாகத பெண் என்று நினைத்திருந்தான். பார்க்க இருபது வயதுக்காரி மாதிரித் தான் தெரிந்ததால் கழுத்தை கவனிக்காமல் விட்டு விட்டான்.

“லொள்ளப் பாருங்க சார் இவனுக்கு?”

“கலியா எப்பயும் நீ இப்படித்தான் பொன்னம்மா கிட்ட தமாசு பேசிட்டே இருப்பியா?” என்றான்.

“இன்னும் தண்ணி போடலியாட்ட இருக்குதுங்க சார் இவன். போட்டிருந்தான்னா இன்னம் பச்சை பச்சையா பேசுவான்” என்று இவள் சொன்னபோதும் சிரிப்பையே காட்டினான்.

“சாப்பாட்டுக்காரம்மா சொல்லுங்க சித்தெ, நேத்து என்ன பண்டுனீங்க சாமத்துல? சித்த நேரம் கேக்குறேனே! சார் இருக்காருன்னு பாக்காதீங்க அவருக்கும் எம்பட வயசு தான்! நாங்க ரெண்டு பேரும் மத்தியானமே ப்ரண்டு ஆயிட்டம்”

“போடா உம்பட புழுத்த நாயத்தை கொண்டுட்டு. சார் எங்க வீட்டுக்கு வாங்க சார். சாப்டுட்டு அப்புறம் இவங்கூடப் போங்க!”

“சாப்பாட்டுக்காரம்மா ஊட்டுக்கு மட்டும் போயிடாதீங்க சார். இவிங்க வீட்டுக்காரருக்கு தெரிஞ்சா ஊரே ரெண்டுபட்டுப் போகும். தெனமும் தண்ணியப் போட்டுட்டு தான் எல்லக்காட்டுல இருந்து பாட்டு பாடீட்டே வருவாப்ல! போதை தெளியற வரைக்கிம் இளையராசா பாட்டா படிப்பாப்ல!”

“எங்க வேலைக்கி போறாரு அவரு?”

“இதென்னங்க எல்லக்காட்டுல அரிசி மில்லுல தான் வேலை. மாமியா கூட மொதல்ல தொடுப்பா இருந்தாப்ல! பொன்னம்மா வயசுக்கு வந்ததும் மாமியாகிட்ட அதையும் இதையும் சொல்லி புள்ளைக்கி தாலி கட்டீட்டாப்ல!”

“இன்னிக்கி வாயி உனக்கு ஓவரா நீளுதுடா! இன்னிக்கி கிழிச்சு உட்டுர்றேன் பாரு”

“சார் இதை நான் சொன்னா மட்டும் தப்பாம். சாப்பாட்டுக்காரம்மா எம்பட வாயை கிழிக்குறேங்குது. ஊரு பூராவும் பேசுனாங்க அப்ப சும்மா இருந்தாங்க. இவங்க வீட்டுக்காரரே அப்படித்தான்னு சொல்லுவாரு.” என்று கலியன் சொன்னபோது பொன்னம்மா சும்மாதான் இருந்தது. பதில் ஒன்றும் சொல்லவில்லை.

“சரி அதுக்கும் நான் பொன்னம்மா வீட்டுல போயி சாப்டுட்டு வர்றதுக்கும் என்ன கிடக்கு?”

“சார் சாப்பாட்டுக்காரம்மாவுக்கு வயசு இருபது. இவங்க வீட்டுக்காரருக்கு வயசு நாப்பது. அதனால அவரு இவங்களுக்கு பூட்டு ஒன்னு போடாததுதாங் கொறை! அப்படி நெனைக்கறவரு ஏன் சின்னப்பிள்ளையப்போயி கல்யாணம் பண்டோணும்? ஆனா இவங்க தங்கம்! நாப்பது வயசுக்காரனுக்கு பொண்ணை தர்றேனுட்டு எவன் சார் இந்தக்காலத்துல நிக்கான்? இவிங்களுக்கு அப்ப வெவரம் தெரியல. அம்மா சொல்லுதுன்னு கட்டிக்கிட்டாங்க! இப்ப இந்த வருசம் தான் இந்த வேலை இவங்களுக்கு கிடைச்சுது. இதுக்கும் முன்ன சாப்பாடு ஆக்கீட்டு இருந்த உள்ளூரு ஆயா செத்துப்போச்சுங்க சார். எங்க பிரசிடெண்டு தான் முன்னால நின்னு வேலையை வாங்கிக் கொடுத்தது. இப்ப அவரையே குத்தம் சொல்றாங்க! பாக்கப் போகையில என்னை விட இந்தம்மாதான் அவருக்கு சப்போட் பண்டி பேசோணும்”

“நான் பத்தாவது பாஸ் பண்டியிருந்தேன். உள்ளூருல ஜெயிச்சவரு அந்த காரியம் கூட பண்ட மாட்டாரா? வெடிய வெடிய அவரு ஜெயிக்கிறதுக்கு எங்க ஊட்டுக்காரரு மாசக்கணக்கா ஓட்டு கேக்க சுத்துனாருல்ல! அது எந்தக்கணக்குல சேத்துக்கறது?” என பொன்னம்மா பேச இவனுக்கு சுவாரஸ்யமாக இருந்ததால் ரசித்துக் கொண்டு நின்றான். பேச்சு போகும் பாதை இருவருக்குள்ளும் சண்டை மூழுமோ என்றே தான் சென்று கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் சண்டை போட தயாரில்லாமல் இவனுக்கு ஊர்பற்றி விளாவாரியாக புட்டு வைத்துக் கொண்டிருந்தார்கள்.

“உங்க வீட்டுக்காரரு தெனமும் ரெண்டு கோட்டரு, சாப்பாடுன்னு கொளுத்துனாரு தெரியுமில்ல! ஆசுவத்துக்கா வந்து சுத்துனாரு?”

“என்ன அறுவது ஓட்டுல! தெக்கால பொன்னுசாமிக்கவுண்டரு இவரை எதுத்து நின்னாருல்ல. எவ்வளவு நல்ல மனுசன் தெரியுமா அவரு. ரோடு போடறக்கு வந்த பணத்தை ஜோப்புக்குள்ள போட்டுகிட்டவரு தான உங்க கவுண்டரு. இல்லீன்னு சொல்லு பாக்கலாம்”

“ஆமா! எலக்சன்ல ஜெயிக்க அவரு எத்தன லட்சம் செலவு பண்டுனாரு தெரியுமா சாப்பாட்டுக்காரம்மா? அதை எங்க போயி சம்பதிப்பாரு எங்க கவுண்டரு? புதுசா ஒன்னு சொல்றன் கேட்டுக்குங்க. ஐஞ்சு போர் போடறக்கு பஞ்சாயத்துக்கு பணம் வந்திருக்குது! ஒன்னை அவரு தோட்டத்துல போடறதுன்னு முடிவாயிடிச்சு. போயி ஊருக்குள்ள

பறப்பி உடுங்க!”

“இத்தன விசுவாசமா அவருக்கு நீ இருக்கப்புடாதுடா! ஒரு நாளைக்கிப் பாரு உன்னை தோட்டத்த உட்டு முடுக்கி உடப்போறாரு. அன்னிக்கி வந்து சாப்பாட்டுக்காரம்மா நீங்க அன்னிக்கே சொன்னீங்கன்னு அழுவே பாரு!”

“நடக்குறப்ப பாத்துக்கலாம். எனக்கென்ன காலும் கையும் மொண்டியாவா போச்சு? இன்னிக்கி ஊத்துக்குளி போனன்னா எனக்கு டயர் கம்பெனில வேலை கெடக்குது தெரியுமுங்ளா?”

“இப்பவே போவேண்டிது தான நீ! இங்க ஒட்டுப் பொறுக்கீட்டு சுத்துனா உங்க சனத்துல யாரு உனக்கு பொண்ணு குடுப்பா?”

“அதெல்லாம் எங்க கவுண்டரு பார்த்து எனக்கு கட்டி வெப்பாரு”

“வெப்பாரு! அவருக்கு வேற சோலி இல்லப்பாரு. பொண்டாட்டின்னு ஒருத்தி வந்து கடவா கடவாயா இடிச்சாள்னாத்தான் உனக்கு புத்தி வரும். அதுவரைக்கும் நீ இப்படித்தான் கவுண்டரு புகழ் பாடீட்டு சுத்துவே. சார் இவன் கூட சாவுகாசம் வெச்சுக்காதீங்க சார். பொம்பள புடிச்சு குடுக்கட்டுங்ளான்னு கேப்பான்.”

“ஏங் கலியா அப்படியா? அதெல்லாம் செய்யறியா நீயி?” என்றான் குமரேசன்.

“ஏனுங்க சார் நீங்க வேற சாப்பாட்டுக்காரம்மா சும்மா ரீல் சுத்துறாங்க”

“ரீல்னு சொன்னீன்னா கோவம் வரும் ஆமா!”

“இவங்க கிட்ட ஒரு வாட்டி கவுண்டரு ஆசைப்படறாருன்னு சொன்னேன். வேற ஆளைப்பாருன்னு சொல்லிட்டாங்க. அதோட உட்டுட்டேன். அதுக்கு என்னமோ இன்னமும் என்னை சொல்லீட்டு இருக்காங்க சார்.”

“ஏனுங்க சார் நீங்களே சொல்லுங்க. ஒரு சத்துணவு ஆயா வேலை வாங்கித்தர ஒத்தாசை பண்டினாருங்கறதுக்காக அவரு கூப்பிட்டதும் நானு போயி அவரு தோட்டத்துல விரிச்சிப் படுத்துக்கணுமா? இவனே அவரு சொல்றாருன்னா அதெல்லாம் தப்புன்னு அங்கியே சொல்ல மாட்டானுங்ளா சார்? நாளைக்கி இவம்பொண்டாட்டி அழகா இருந்தா கவுண்டரு கூப்புடுறாருன்னு பொண்டாட்டிகிட்ட சொல்ல மாட்டான்னு என்னுங்க சார் நிச்சயம்? இவனை நம்பி வந்தவ பொழப்பு சிரிச்சிப்போகாது?. அப்பன் வயசு இருக்கும் ஆளுக்கு ஆசையப்பாரு”

என்று பொன்னம்மா சொன்னதும் தான் இவனுக்கு விசயம் விளங்கியது.

இந்தப்பிரச்சனையின் காரணமாய்த்தான் கவுண்டரை பொன்னம்மா வெறுக்கிறாள் என்று. ஒரு சுத்தில் கவுண்டரின் மரியாதையை இவர்கள் கூறு போட்டு வைத்து விட்டார்கள். நாளைக்கு கவுண்டருக்கு இவனும் சலாம் போட்டு குலைய வேண்டியதில்லை.

“பெரிய மனுசன்னா அப்படி இப்படி இருக்கத்தானுங்க சார் செய்வாங்க! அவங்களுக்கு அதுல ஒரு குஷி. எல்லாருமா இந்தம்மாவாட்டம் பேசுறாங்க? சிலபேரு ஆசைப்பட்டும் போறாங்க! அவங்களுக்கு வேண்டியதை கவுண்டரு பண்டியும் உட்டுடறாரு. ஒருத்தரு ஆகமாட்டாங்கன்னா அவங்களுக்கு தும்பம் எதாச்சிம் பண்றது கூட இல்லீங்க சார் அவரு. ஆச்சுன்னா சந்தோசம். இல்லீன்னாலும் கண்டுக்க மாட்டாரு. மண்ணு திங்கறதை மனுசன் தின்னுட்டு போறான். இதுல என்ன சார் வந்துடுது. எதையுமே பிரியஞ் சந்தோசமா பண்டிக்கணும். சங்கடம்னா விட்டுடணும். ஏனுங்க சார் நான் சொல்றது சரிதானுங்ளே!”

“சத்தீமா சொல்றனுங்க சார். இப்ப இவன் தேனாட்ட பேசுறது ஏன்னு தெரியுது. எழுதி வச்சுக்கங்க இன்னிக்கி. இவன் கண்டிப்பா உங்ககிட்ட வேணுங்களா சார்னு கேப்பான்” என்றாள்.

“கொழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்துல இப்ப தினமும் சாப்பாட்டோட மொட்டுங்ளா?”

“ஆமாங்க சார். வாரம் ஒருக்கா வேன்ல வந்துடும். காய்கறிகள் சமைக்க ஊத்துக்குளியில இருந்து மேடம் வர்றபோது வாங்கீட்டு வந்துடுவாங்க. மேடம் தினமும் மதியம் பள்ளிக்கூடத்துல தான் சாப்பிடுவாங்க சார். சாப்பாடு கொண்டு வர மாட்டாங்க. ஒரு நாளைக்கு பருப்பு ரசம்னா இன்னொரு நாளைக்கு கூட்டாஞ்சோறுன்னு மாத்தி மாத்தி செய்வோம் சார்”

“கொழந்தைங்க எல்லோருமே இங்க தான் மதியச் சாப்பாடு சாப்பிடுவாங்களா?”

“ஆமாங்க சார். மீனாட்சி மேடம் ரொம்ப ஸ்ரிட்டு! பள்ளிக்கூடத்துல சாப்பிடற கொழந்தைகளுக்குத்தான் அரசாங்கம் கொடுக்குற புத்தகம், துணிமணி, செருப்பு எல்லாம் கிடைக்கும்னு சொல்லிட்டாங்க! அதனால சில கொழந்தைகள் வீட்டுல இருந்து கொண்டு வந்து சாப்டுட்டு இருந்ததை நிப்பாட்டிடுச்சுக. வவுத்துக்கு சாப்பிடறதுல என்னங்க சார் இருக்கு? நானே மிஞ்சிப்போனா சாப்டுட்டுத் தான் போவேன். நீங்களும்

மதியம் பள்ளிக்கூடத்துலயே சாப்பிடுங்க சார்.”

“ஆமாங்க சார் சாப்பாட்டுக்காரம்மா டேஸ்ட்டா சமையல் பண்ணுவாங்க. நான் ரெண்டு வாட்டி மத்தியானம் சாப்பிட்டு இருக்கேன். இன்னும் கொஞ்சம் சேர்த்தி சாப்பிடலாம்னு இருக்கும்” என்றான். பொன்னம்மா முகத்தில் இப்போது தான் புன்னகை வந்தது. சற்றுமுன் கலியனுடன் வாக்குவாதம் செய்ததை சட்டென மறந்து விட்டாள். அவனைப்பார்த்து புன்னகை சிந்தினாள். அது அவள் சாப்பாட்டை அவன் புகழ்ந்ததற்கான புன்னகையாய் இருந்தது. கலியன் மிக சாமார்த்தியசாலி என்பதை அப்போது உணர்ந்தான் குமரேசன். இதெல்லாம் கவுண்டரிடம் கற்றுக்கொண்ட பாடமாக இருக்குமென நினைத்தான்.

“பொன்னம்மாங்கறது தான் உங்க பேரா?” என்றான் குமரேசன்.

“பொன்னம்மான்னு எங்கம்மா கூப்பிட ஊர்க்காரங்களுக்கும் பொன்னம்மா ஆயிட்டேன் சார் நானு. என் பேரு மஞ்சுளா. பொன்னம்மான்னு கூப்பிட்டு கூப்பிட்டு வயசானவ மாதிரி பண்டி உட்டுட்டாங்க”

“சரி நான் வேணா உங்களை மஞ்சுளான்னு கூப்பிடறேன்”

“சார் அப்படி கூப்பிட்டா நான் திரும்பிக்கூட பாக்கமாட்டேன். அது ஞாவகத்துலயே இருக்காது எனக்கு. யாரையோ சார் கூப்பிடறாருன்னு நெனச்சிட்டு போயிடுவேன். பொன்னம்மான்னே கூப்பிடுங்க”

“அது வேற அப்படியா! ரெண்டு பேரும் சண்டை கட்டுறமாதிரி பேசிட்டு இருந்தீங்க. திடீருன்னு உட்டுட்டீங்க?” என்றதும் கலியன் தான் ஆரம்பித்தான்.

“சார் நாங்க எப்பவும் அப்படித்தான் பேசிக்குவோம். நீங்க சண்டை கட்டுறதா நெனச்சுக்காதீங்க! ஊர்ல எல்லா பொம்பளைங்களும் ஒன்னைக்கண்ட மாதிரியே தான் பேசுவாங்க! மாதிரியா பேசுறதுன்னா பெல்லா டீச்சர் தான் புதுசா பேசுவாங்க. அவங்க பேசுனா கிளி கத்துற ஞாபகம் தான் எனக்கு வரும். ஒன்னும் புரியாது. கேட்டுப்பாருங்க சாப்பாட்டுக்காரம்மாட்ட”

“ஆமாங்க சார். அவங்க வந்து ஒருவருசமாச்சு. இது ரெண்டாவது வருசம். ஒரு நாள்கூட பள்ளிக்கூடத்துல சாப்பிட்டதேயில்ல. அவங்க பாட்டுக்கு அவங்க ஜோலியப் பார்த்துட்டு இருப்பாங்க. ஊர்க்காரங்க கூடவும் அதிகம் பேசிக்க மாட்டாங்க! என்னத்த டவுனுப்பழக்கமோ! நாலு சனத்துகிட்ட பேசிப்பொழங்காம ஊமையாட்ட எப்படிங்க இருக்க

முடியும்?”

“எதுக்கு வம்பு கச்சேரின்னு இருப்பாங்க. வெளியூர்ல இருந்து வந்து தங்கி ஒரு பொண்ணு அமைதியா இருந்தா அதுல என்னங்க தப்பு”

“என்ன இருந்தாலும் நீங்க உட்டுக்குடுக்காமத்தான பேசுவீங்க சார்.”

“அப்படியில்ல கலியன். அவங்களும் கொழந்தைகளுக்கு டியூசன் எல்லாம் சொல்லிக் குடுக்கறாங்களாமே எட்டு மணி வரைக்கும்”

“ஆமாங்க சார். அவங்க தானுண்டு தன் வேலையுண்டுன்னு இருக்காங்க. இவங்களுக்கு ஊர் நாயம் பேச தொணைக்கி வேணுமுன்னா படிச்சவங்க வருவாங்களா? அவங்க அண்ணன் ஒருத்தரு பாரஸ்ட் ஆபீசரா இருக்காருங்க சென்னிமலையில. அவரு வரப்போக இருக்கங்காட்டி ஊரே கூடிப்போயி நின்னு அந்த டீச்சர் மானத்தை வாங்கிட்டாங்க! என்னமோ இவங்க தப்பே பண்ணாதவங்களாட்டம் ஊர் பேரு கெட்டுப்போயிரும்ங்ற மாதிரி ஒரே ரவுசு. அந்தன்னிக்கி அந்த டீச்சர் அழுத அழுகாச்சிய நீங்க பாத்திருக்கணுமே! கவுண்டரு வந்து சத்தம் போட்டங்காட்டித் தான் சனமே கௌம்புச்சு. என்னமோ கைப்புடியா புடிச்சவங்களாட்டம் என்னா கூச்சலுங்கறீங்க? அப்படி வாறவன் பைக்கை வாசல்ல நிறுத்தீட்டு நேர்வாசல்லயா போவான்? சனத்துக்கு அறிவே கெடையாதுங்க சார். எனக்கு தெரியும் இங்க இருக்கறவங்க ஒவ்வொருத்தர் லட்சணமும். அண்ணன் கூட வச்சி பேசிட்டாங்க சார். அதுல இருந்து அநத டீச்சர் சுத்தமா ஊர்க்காரங்களை கண்டுக்கறதே இல்லை. இத்தனைக்கும் காசு வாங்காம டியூசன் சொல்லிக் குடுத்துட்டு இருக்காங்க அவங்க” என்றான் கலியன்.

“இவிங்க சனத்துல இருந்து படிச்சு டீச்சர் வேலை வாங்கி இந்திரான்னு ஒரு பொண்ணு வருதுங்க சார் நம்ம பள்ளிக்கூடத்துக்கு. இங்கிலீஸ் எல்லாம் அருமையா கொழந்தைகளுக்கு சொல்லிக் குடுக்கும். எல்லாருகிட்டயும் நல்லா பேசும். கலியனோட பெரியப்பன் புள்ளை தான் அது. ஆனா பெரியப்பங்கூட இவங்க குடும்பம் சண்டை. ரெண்டுபேரும் ரோட்டுல பார்த்தாக்கூட திருப்பிக்கிட்டு போவாங்க.” என்றாள் பொன்னம்மா. அதற்கு கலியன் எதுவும் சொல்லவில்லை.

“சார் இன்னம் ரெண்டு ஆசிரியர்கள் இந்த ஸ்கூலுக்கு போடறதா பேசிக்கிட்டாங்க சார். ஒருத்தர் வந்திருக்கீங்க. அப்படின்னா இன்னொருத்தர் வரணுமே!” என்றாள் பொன்னம்மா. அப்படித்தான் ஆபிஸில் பேசிக்கொண்டுமிருந்தார்கள். அந்த இன்னொருவர் கோபி என்று கூட சொன்னார்கள்.

“ஒருவேளை நாளைக்கு வரலாமோ என்னவோ எனக்கு தகவல் தெரியலைங்க சரியா” என்றான் குமரேசன்.

“அவரும் கல்யாணமாகதவரா இருந்துட்டா காட்டுப்பாளையத்து வீட்டுல ரெண்டுபேரும் தங்கிக்கலாம் சார். குடும்பத்தோட வந்தாருன்னா சிக்கல்” என்றான் கலியன்.

“சரி போய் வீட்டைப்பார்ப்பமா? இங்க உக்காந்துட்டு பேசிட்டு இருந்தா பொழுது தான் போகுது” என்றான்.

“நம்ம ஊர்ல வீடில்லையா காட்டுப்பாளையத்துக்கு கூட்டிட்டு போறே நீ?”

“சாப்பாட்டுக்காரம்மாவுக்கு வீடு எதாச்சும் தெரியுமா? இருந்தா வசதி தான் பக்கத்துலயே பள்ளிக்கூடமாச்சு.”

“வீடு இந்த ஊர்லயே காலியா இருக்குதுங்க சார்.”

“பார்றா எனக்குத் தெரியாம ஊருக்குள்ள வீடு இருக்குதுன்னு சொல்றாங்க. ஆமா யாரு வீடுங்க சாப்பாட்டுக்காரம்மா?”

“அதெல்லாம் உன் கண்ணுக்கு எங்க தெரியும்? எலக்சன்ல எதுத்து நின்னுட்டா எப்பவும் சண்டைக்காரனாவே பார்த்துட்டு இருக்க உங்க கவுண்டரால தான் முடியும். உனக்கென்ன வந்துச்சு?”

“அட நீங்க பொன்னுச்சாமிக்கவுண்டரு வீட்டை சொல்றீங்களா? சார் ஆமாங்க சார். அவரு அம்மா இருந்த வீடு சாப்பாட்டுக்காரம்மா வீட்டுக்கு பக்கத்துல சும்மா பூட்டித்தான் கிடக்குது. அதை நான் யோசிக்கவே இல்லப்பாருங்க! அவரு கூட எனக்கென்ன சண்டை. நல்ல மனுசன். எனக்கு எப்பவும் பாட்டலு கடையில பார்த்தா வாங்கிக் குடுப்பாரு. நீ மட்டும் எம்பக்கம் இருந்திருந்தீன்னா உங்க கவுண்டன் தோத்தகாலி ஆயிருப்பாண்டா கலியான்னு சொல்லுவாரு.”

“அவரு வீடு எங்க இருக்குங்க பொன்னம்மா?”

“தெக்க தோட்டத்துல இருக்காருங்க அவரு. அங்கயே வீடு கட்டி தோட்டம் பார்த்துட்டு பத்து வருசமா இருக்காரு. போனா இப்ப பார்க்கலாம். பேசி சாவியை வாங்கி குடுக்க நானாச்சுங்க”

“ஏன் நான் கூட வரமாட்டனா?”

“உங்க கவுண்டருக்கு தகவல் போச்சுன்னா அவன் வாசலுக்கு டிவியெஸ் போச்சான்னு அதை எரிச்சுடுவாரு உங்க கவுண்டரு.”

“பங்காளிக சண்டையெல்லாம் ஒரு சண்டையின்னு பேசிட்டு

இருக்கீங்களே சாப்பாட்டுக்காரம்மா! ஒரு பிரச்சனைன்னா மளாருன்னு ஒன்னு சேர்ந்துக்குவாங்க தெரியுமா! பங்காளி பலியெடுப்பான்ங்றது எல்லாம் அந்தக்காலம். இவரை நிக்க வெச்சிட்டே அவங்க நாயம் சொல்றன் பாருங்க நானு. இவரும் அவங்க கூட்டம் தான். ஏனுங்க சார் அப்படித்தான?” என்றான் கலியன்.

“ஆமாம். அந்தப் பழமொழியெல்லாம் தப்பு இப்ப. எங்க சனத்துல ஒருத்தரு கீழ போறாருன்னா கை கொடுத்து தூக்கி விடுவோம். அவ்வளவு சீக்கிரம் உட்டுக்குடுக்க மாட்டோம்”

“கேட்டுத்தெரிஞ்சிக்கங்க சாப்பாட்டுக்காரம்மா. அதெல்லாம் முன்ன அப்படி இருந்திருக்கலாம். இப்ப ஒரு சீட்டு போட்டாவது தூக்கி உட்டுடுவாங்க. பொம்பளப்பிள்ளைக்கி சீர்னு ஒன்னு வெச்சா மொய்யி எத்தனை விழுகுதுன்னு தெரியுமில்ல உங்களுக்கு? குமிச்சுருவாங்க! கலியாணம் பண்டறப்பக்கூட மொய்யிப்பணம் அவ்வளவு உழுகாது. கூட இருந்தா அந்த வாசமாச்சும் அடிக்கட்டுமேன்னு தான் நான் கூடயே கிடக்கேன்.” என்று கலியன் சொன்ன போது குமரேசன் சிரித்தான். இதே மாதிரித்தான் இவர்கள் தோட்டத்தில் பண்ணையத்தில் இருந்த முத்தானும் பேசுவான். எங்க கவுண்டருக்கு ஐநூறு தென்னைமரம் தெரியுமா? என்று அவனுடையதைப் போலவே பீத்துவான்.

“ஏனுங் சார் சிரிக்கிறீங்களே!”

“ஒன்னுமில்ல பயங்கரமா பேசுறியேன்னு பார்த்தேன்.”

“நான் எதாச்சிம் ஔறீட்டு இருப்பேங்க சார். தப்பா நெனச்சிக்காதீங்க. பேசலீன்னா பெழைக்க முடியுங்ளா சார். ஊமச்சாடை பண்ணீட்டு ஊமையங்கூட எத்தன நாளைக்கி சீரழியறதுன்னு போயிடுவாங்க! பொன்னுச்சாமி கவுண்டரு அந்த வீட்டுல எதாச்சிம் போட்டுகீட்டு வச்சிருக்கப் போறாரு நல்லா தெரியுமுங்ளா சாப்பாட்டுக்காரம்மா?”

“அங்க பச்சுன்னு இருக்குது. கரண்ட்டு சர்வீசு இருக்குது. வெட்டியா அதுக்கு ரெண்டு மாசத்துக்கு ஒருக்கா பில்லு கட்டீட்டு இருக்காரு. பேனு, லைட்டு எல்லாம் அப்படியே இருக்குது. மாரியம்மங் கோயில் சாட்டப்ப இங்க வந்து தான தங்கிக்கறாங்க அவங்க சம்சாரமும் பிள்ளைங்களும்”

”ஏனுங்க பொன்னம்மா உங்க கொழந்தைக நம்ம ஸ்கூல்லயா படிக்கிறாங்க?” என்றான் குமரேசன். கேட்டபின் தான் ஏண்டா கேட்டோமென்றாகி விட்டது அவனுக்கு. பொன்னம்மா கண்ணைக் கசக்கிக் கொண்டாள். கலியன் தான் பதில் சொன்னான்.

“சாப்பாட்டுக்காரம்மாக்கு இன்னம் கொழந்தை இல்லீங்க சார். எங்கெங்கயோ கோயல் கோயலா போயிட்டு வந்துட்டு தான் இருக்காங்க அவங்களும்.”

“ஏனுங்க பொன்னம்மா விசயம் தெரியாம கேட்டுட்டேனுங்க. அதுக்காக அழுதா என்ன ஆகப் போகுது? சின்னப்பிள்ளையா நீங்க. கோயிலுக்கு போறது எல்லாம் நம்பிக்கைக்காகத்தானுங்க. மரத்துல போயி தொட்டல் கட்டீட்டா மட்டும் ஊட்டுல தொட்டல் கட்டிட முடியுங்ளா? எந்தக்காலத்துல இருக்கீங்க நீங்க. போய் நல்ல டாக்டரை பார்த்து என்ன சத்து குறைபாடுன்னு பார்த்து சரி பண்ணுற விசயமுங்க இது.” என்றான். அவள் தெளிவாகி இருந்தாள் சற்று நொடியிலேயே.

“நான் சென்னிமலை ஆஸ்பத்திரியில பார்த்துட்டேனுங்க. ரத்தம் கமின்னாங்க, டானிக் எழுதிக் குடுத்தாங்க. சாப்பிட்டேன். அவரு ஆஸ்பத்திரிக்கி வரமாட்டீங்கறாரு. நான் டானிக் குடிக்கறதை பார்த்துட்டு சண்டை வீட்டுல. எங்கிட்ட தான் கொறை இருக்குதுன்னு ஊரு பூராவும் தண்ணியப் போட்டுட்டு சொல்லிட்டு திரியறாரு. எங்கம்மா எதையும் கண்டுக்கறதில்லே!”

“எல்லாம் சின்னச் சின்ன ஆசையில யாரையோ சம்பந்தமில்லாதவங்களை பலி கொடுத்துடறாங்க சார். இதெல்லாம் எனக்கு தெரியாம கவுண்டருக்காக ஒருவாட்டி கேனத்தனமா பேசி சிரிச்சிட்டு இருக்கப்ப கேட்டுட்டேன். இதெல்லாம் பொறவு தெரிஞ்சிட்டு பாடாப் போச்சுங்க சார். தேடி வந்து மன்னிச்சிக்கங்க சாப்பாட்டுக்கரம்மான்னு கேட்டுட்டு போனேன் சார் நானு. என்னோட வளர்ப்பு அப்படி. காசு ஒரு வீட்டுல சிரம்மா இருக்குதுன்னா கலியனைத் தேடுவாங்க சார் இந்த ஊருல. காதும் காதும் வெச்ச மாதிரி ரொம்ப காலமா நடந்துட்டு தான் இருக்குது. அது தப்புன்னெல்லாம் நான் யோசனை பண்ணவே மாட்டேன். தப்பு பண்ணுறவங்களே யோசிக்காதப்ப எனக்கு என்னங்க சார். சரி வாங்க நாம் பொன்னுச்சாமிக் கவுண்டர் வீட்டுக்கு போவோம். சாப்பாட்டுக்காரம்மா நீங்களும் வாங்க. நான் சும்மா ஓரமா அவரு முன்னால கைகட்டி நின்னுக்குவேன்.” என்றான் கலியன்.

“நீ கோட்டர் பாட்டிலுக்கு ஏற்பாடு பண்ணலாம்னு வர்றே” என்ற பொன்னம்மாள் பள்ளி கேட் நோக்கி நடக்க குமரேசனின் இரண்டு பேக்குகளை எடுத்துக்கொண்டு கலியன் பின்னால் வந்தான். டிவியெஸ்சில் பேக்குகளை மாட்டி வீட்டு குமரேசன் முகப்பு கேட்டை பூட்டிவிட்டு வரும் வரை நின்றான். குமரேசன் வந்ததும் வண்டியை

ஸ்டார்ட் செய்யாமல் உருட்டிக் கொண்டே பொன்னம்மாள் பின் நடந்தான்.

“டிவியெஸ்சை உன்னோட பொறுப்புல விட்டுட்டாரா கவுண்டரு?”

“ஆமாங்க சார். மளிகை சாமான் வாங்குறதுல இருந்து தவுடு புண்ணாக்கு வாங்கறது வரை ஜோலி எனக்கு இருக்குதுங்க சார். ஒவ்வொன்னுக்கும் சைக்கிள்ல போயிட்டு வந்துட்டு இருக்க முடியுங்ளா? இப்பக்கூட பாட்டல் வாங்கீட்டு வரத்தான் என்னை அனுப்பிச்சாருங்க. எட்டு மணிக்கு மேல தான் தென்னந்தோப்புல உக்காந்து குடிப்பாரு. மெதுவா வாங்கிட்டு போயி குடுத்தாப்போதும். கடைசில கொஞ்சம் கிடைக்கும். ஆனா அதுக்குள்ள ஊரு நாயம் உலக நாயம் பூராவும் சொல்லுவாரு. ஆமாஞ்சாமி போடோணும். ஆனா எங்க கவுண்டரு குடிச்சுட்டாருன்னா கொழந்தை கணக்கா ஆயிடுவாருங்க சார். அவருக்கு வீட்டுல ரெண்டு சம்சாரம்னு பேரு தானே ஒழிய யாருகிட்டயும் படுத்துக்க மாட்டாரு பாவம். இப்படித்தான் வெளிய பாத்துக்குவாரு.” என்று சொன்னவன் இன்னொரு நாளைக்கி விளாவாரியா நாஞ்சொல்றேன் சார் அவரு கதையை, என்றான்.

பொன்னம்மா தன் வீட்டில் அம்மாவிடம் தோட்டம் வரை போய் வந்து விடுவதாக சொல்லி விட்டு வந்தவள் அவள் வீட்டை ஒட்டியே இருந்த பூட்டியிருந்த வீட்டைக்காட்டி, இதானுங்க சார் வீடு! என்றாள். ஊரின் கடைசி தென்பக்கத்து வீட்டைத் தாண்டியதும் இட்டேறிப்பாதை சென்றது. அதில் தான் பொன்னம்மா குமரேசனைக் கூட்டிப்போனாள். மழை இல்லாமல் போயிருந்ததால் காடுகள் காய்ந்து கிடந்தன. இருட்டு விழும் சமயத்திலும் காந்தல் அடித்துக் கொண்டிருந்தது. உடும்பு ஒன்று ஒட்டிப்போன வயிற்றுடன் திடுமென இவர்கள் பாதையின் குறுக்கே ஓடியது.

“இதுகெல்லாம் தீனிக்கி என்ன பண்ணுதுக கலியா?’

“எத வேணாலும் தின்னுட்டு திரியற ஒரே சீவன் இதுதானுங்க சார். முன்ன வேட்டையாடிட்டு இருந்தப்ப ஒன்னு ரெண்டு தான் மலையடிவாரத்து கிட்ட தட்டுப்படும். தொறத்தி புடிக்கலாம்னா பாறைச் சந்துல ஓடி பூந்துக்கிச்சுன்னா பொகை போட்டாலும் வராதுங்க சார். இப்ப யாரும் வேட்டைக்கி போறதில்லீங்கறதால காலுக்குள்ளயும் கைக்குள்ளயும் ஓடீட்டு திரியுதுக. ஒருக்கா புடிச்சப்ப கொடலக்கிழிச்சு பார்த்தா வெறும் வண்டுகளா இருந்துதுக. அதும் கருவண்டுக ஒரு ஐம்பது இருக்கும். அதை பார்த்துட்டு மூஞ்சிய சுளிச்சுட்டு திங்காம உட்டுட்டனுங்க சார். சங்கடப்பட்டா திங்கப்படாதுங்க.”

“நான் எந்தக்கறி வேணாலும் சாப்பிடுவேன் கலியா. ஆனா கிடைக்கோணுமே”

“இன்னிக்கி எப்படியும் மழை வருமுங்க சார் நைட்டுல. பாருங்க எப்படி காத்தே இல்லாம குப்புனு கிடக்குது.” கவுண்டரின் தோட்டத்துக்கு உள்ளே நுழையவே பெரிய கேட் இருந்தது. அது திறந்தே தான் கிடந்தது.

“டிவியெஸ்சை கையில வச்சிட்டு உருட்டீட்டு வர்றியே.. எவ்ளோ தூரம் பாரு”

‘இதென்னுங்க சார் சைக்கிளை உருட்டுற மாதிரிதான். சாப்பாட்டுக்காரம்மா இல்லீன்னா ரெண்டு பேரும் புர்ர்ன்னு போயி தோட்டத்துல இறங்கியிருக்கலாம்.”

பொன்னுசாமிக்கவுண்டர் தோட்டத்தினுள் பங்களா மாதிரியெல்லாம் கட்டியிருக்கவில்லை. ஓட்டு வீடு தான். தென்னை மரங்கள் ஐம்பதுக்கும் மேல் நின்றிருந்தன. இவரும் மிளகாய், தக்கோளி தான் போட்டிருந்தார் மேபக்கத்து காட்டில். வீட்டின் அருகே இரும்புக்கூண்டினுள் முயல்கள் நானகைந்து விளையாடிக் கொண்டிருந்தன. குதிரை ஒன்று வெள்ளை நிறத்தில் தென்னை மரங்களுக்கிடையே சென்று கொண்டிருந்தது.

“குதிரை பேரு முருகேசனுங்க சார். கவுண்டரு முருகேசான்னு கூப்பிட்டாருன்னு வெய்யுங்க! எங்க இருந்தாலும் வெல்லம் குடுப்பாருன்னு பறந்துட்டு ஓடி வரும். நான் ரெண்டு மூனு தடவை அவராட்டவே கூப்பிட்டு பார்த்தனுங்க. திரும்பிப் பார்த்துட்டு போடா மயிராண்டின்னு போயிடும்” என்றவன் வாசல் வரை வண்டியை உருட்டாமல் தூரத்திலேயே நிப்பாட்டிக் கொண்டான். தலையில் இருந்த உருமாலையை கழற்றி வண்டி சீட்மீது போட்டு வந்தான். அருகிலேயே செருப்பை கழற்றி விட்டு விட்டு வந்தான்.

வீட்டு முகப்பில் நிழலுக்கு உயரத்தூக்கி தென்னை ஓலையில் பந்தல் போட்டிருந்தார். அதன் கீழ் காரைப்பூச்சு போட்டிருந்தது. அத்தனை தென்னைகளும் அசையாமல் நின்றிருந்தன. ஒரு சரசரப்பு கூட இல்லை. கலியன் வாசலின் ஓரத்திலேயே நின்று கொண்டான். பொன்னம்மா திறந்திருந்த வீட்டின் கதவருகே சென்று எட்டிப்பார்த்து, அக்கா! என்று சப்தம் கொடுத்தாள். உள்ளே இருந்து பதில் குரல் வெளியே கேட்டது. கவுண்டரின் குரல் தான் அது. ”யாரு சாமி? இரு வாறேன்” என்று.

“அக்கா இல்லீங்களாண்ணா?”

“அவ பால் கறக்க ஊட்டுக்கு பொறவுக்கு போயிருக்கா கண்ணு! யாரு?” என்று வெளியில் வந்தவர் அடையாளம் தெரிந்து கொண்டு புன்னகைத்தார் பொன்னம்மாவைப் பார்த்து. வாசலில் நின்றிருந்த கலியனைப் பார்த்தவர், “எங்கடா இந்தப்பக்கம் காத்தடிக்குதா?” என்றார்.

“உக்காருங்க தம்பி” என்றவர் குமரேசனுக்கு சேர் ஒன்றை இழுத்துப்போட்டு தானும் ஒரு சேரில் அமர்ந்து கொண்டார்.

“இவரு நம்ம ஊரு பள்ளிக்கூடத்துக்கு புதுசா வந்திருக்கற ஆசிரியருங்கண்ணா!” என்று பொன்னம்மாள் குமரேசனை அறிமுகப்படுத்தினாள். இவன் வணக்கம் ஒன்றை வைத்தான் அவருக்கு.

“ஆசிரியர் பொழப்புத்தான் ஒரு துன்பமும் இல்லாத பொழப்பு பாத்துக்குங்களே! வாரத்துல எப்படியும் ரெண்டு நாளு லீவு. மாசமானா சம்பளம். எங்க காலத்துல நாங்க படிக்காம திமுறெடுத்துப் போயி எம்ஜியாரு படம் எந்தக் கொட்டாயில ஓடுதுன்னு போயிப்போயி பார்த்துட்டு இன்னிக்கி சாணி வழிச்சுட்டும், பாலு கறந்து கொண்டி சொசீட்டில ஊத்தீட்டும் நாளை தள்ளீட்டு திரியறோம். ரெண்டு பணத்தை ஊட்டுல கம்முன்னு வெச்சிட்டு இருக்காம அதையும் நாலுபேரு சொல்றாங்கன்னு எலக்சன்ல நின்னு செலவு பண்ணீட்டு வெறுங்கைய வீசிட்டு சுத்துறோம். இந்தக்கட்டாப்பு நீங்கதான்னு சோசீகாரன் சொன்னான்னு நின்னு போண்டியே ஆயிட்டன்னா பார்த்துக்குங்களே. சரி அந்த நாயம் தீரவா போகுது. என்ன விசயமா ஆசிரியரை கூட்டிட்டு வந்திருக்க அம்மிணி?” என்றார் பொன்னம்மாளைப் பார்த்து.

“ஊருக்குள்ள இருக்குற அம்மா வீட்டுல சாரை தங்கிக்க ஏற்பாடு செஞ்சு குடுத்தீங்கன்னா நல்லதுன்னு நம்மை பார்த்துட்டு போலாம்னு வந்தனுங்கண்ணா!” என்றாள்.

“அதுக்கென்ன சும்மா தான இருக்குது இருந்துக்கட்டும். சாவிய அவ எங்க வெச்சிருக்காள்னு எனக்கு தெரியில. அவ வரட்டும் பால் கறந்துட்டு எடுத்துத் தரச் சொல்றேன்” என்றவர் குமரேசனிடம் சில விசாரிப்புகள் போட்டார்.

“கடைசில பார்த்தா பங்காளி முறையில வந்து நிக்கறீங்க தம்பி. எங்க குல தெய்வம் காங்கயம் போற வழியில இருக்குது. வருசம் ஒருக்கா விழா பெருசா எடுப்போம்.” என்றவர் கடைசியாக, ’பாட்டில் போடற வழக்கம் உண்டுங்ளா தம்பி?’ என்றார். இவன், ’இல்லைங்க’ என்று

தலையாட்டினான்.

“நாங்கெல்லாம் சின்ன வயசுல இருந்தே கொளத்துல காச்சுற பட்டை சாராயத்தை குடிச்சுப் பழகிட்டோம் தம்பி. பழக்கம் விடுவனாங்குது. ஒரு நாளு ரெண்டு நாளு போச்சாது போன்னு விட்டுட்டு கெடக்குறதே பெருசாப் போச்சு. ஊட்டுல சொல்லிச் சொல்லிப் பார்த்துட்டு தண்ணிய தெளிச்சு உட்டுட்டா! ரெண்டு பசக எனக்கு. இப்பத்தான் ஈரோடு காலேஜு படிப்பு படிச்சுட்டு இருக்கானுக.” என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போது கவுண்டிச்சியம்மா ரெண்டு நீலவர்ண பால் கேனை கொண்டு வந்து திண்ணையின் மீது வைத்தது.

“மாதாரிப்பையன் வந்து நிக்கானா என்ன சோலியாம்?”

“அவஞ்சும்மா வாத்தியாரு கூட வந்திருக்கான். பின்ன எனக்கு பாட்டலு வாங்கிக் குடுக்கவா வந்திருக்கான்னு நெனச்சே?”

“எப்படா பொழுதாவுமுன்னு பாட்டல் நெனப்புலயே கெடங்க நீங்க! தம்பி யாரு புதுசா இருக்குதா? பாத்தா நம்ப சனமாட்டவே சாடை தெரியுது!”

“நம்ப சனம் தான். நீ எப்பிடியோ மோப்பம் புடிச்சே சொல்லிப் போடறே. நானு விசாரிச்சு தெரிஞ்சிக்க வேண்டிதா இருக்குது. சரி நம்ம வீட்டு சாவிய எங்க வச்சிருக்கே? பொள்ளாச்சில இருந்து நம்ப ஊருக்கு வாத்தியாரா தம்பி வந்திருக்குது”

“வடபக்கத்து தோட்டத்து கவுண்டனை போயி பாக்கலியாமா! கோவிச்சுக்கப் போறான் தம்பி மேல அப்புறம்.” என்றபடி கவுண்டிச்சி பதிலை எதிர்பாராமல் வீட்டினுள் சென்றாள். பீரோவை இழுத்து குடையும் சப்தம் வெளியில் கேட்டது.

“ஏண்டா கலியா உங்கொப்பன் இப்ப எங்கடா போயிட்டிருக்கான்?”

“எங்கப்பனுங்களா! காரெ வேலைக்கி சட்டி தூக்க போயிட்டு இருக்குதுங்க திருப்பூருக்கு”

“சம்பளமெல்லாம் எப்படியாமா?”

“தெனம் நாநூறு ரூவாய்ங்க கவுண்டரே”

“நீயும் போனீன்னா அப்படியே பூச்சு வேலை கத்துக்கிட்டு சம்பாதிக்கலாம்ல. உட்டுப்போட்டு எம் பங்காளிக்கு அல்லக்கையா சுத்திட்டு இருக்கியேடா. அவன் எனத்த உனக்கு குடுத்துடுவான் சம்பளமுன்னு?”

“நானும் ரோசனை பண்டீட்டு தானுங்க இருக்கேன் எங்கப்பங்கூடயே திருப்பூரு பஸ் ஏறலாமுன்னு”

“நீ போயிட்டீன்னா எம்பங்காளிக்கி ஒரு கையே ஒடஞ்ச மாதிரி தாண்டா.” என்றபோது கவுண்டிச்சி சாவிக் கொத்தை கொண்டு வந்து குமரேசன் கையில் கொடுத்தாள்.

“பொன்னம்மா அப்படியே குப்பை கூலமிருந்தா வாத்தியாருக்கு சுத்தம் பண்டிக் குடுத்துரு.” என்றவளுக்கு பொன்னம்மா, சேரீங்க்கா! என்றாள்.

“அப்ப நாங்க போயிட்டு வர்றமுங்கண்ணா” என்று பொன்னம்மா சொல்லிக்கொண்டு கிளம்ப யத்தனிக்கவும் குமரேசனும் எழுந்து அவரை வணங்கிவிட்டு எழுந்தான்.

‘போயிட்டு வர்றனுங்கம்மா” என்று கவுண்டிச்சிக்கும் ஒரு வணக்கம் வைத்தான். கவுண்டிச்சி சந்தோசமாய், “சேரி சாமி!” என்றது.

“கலியா தெக்கையா போறே?” என்று கவுண்டரும் வேட்டியை இறக்கிக் கொண்டு எழுந்தார். வாசலுக்கு வந்தவர் வேட்டியை தூக்கி அண்டர்வேர் பாக்கெட்டில் மூன்று நூறு ரூபாய் தாள்களை நசுக்கி எடுத்து அவனிடம் கொடுத்தார். சொசீட்டிக்கி வருவன்ல பாலு ஊத்த அப்ப எனக்கு ஒரு அரைப்பாட்டலு எம்சி இருந்தா வாங்கீட்டு வந்து குடுத்துரு” என்றார்.

“செரீங்க கவுண்டரே. அப்ப நான் கிளம்புறனுங்க” என்றவன் திரும்பி வண்டி நிற்குமிடத்திற்கு வருகையில் முகப்பு கேட் அருகே பொன்னம்மாவும் சாரும் சென்று கொண்டிருப்பதைப் பார்த்து வண்டியைத் திருப்பி உருட்டிக் கொண்டே நடந்தான். வண்டிச் சத்தம் தோட்டத்துக்குள் கவுண்டிச்சிக்கி கேட்டது என்றால் எங்கு கண்டாலும், அவ்வளவு தூரம் உனக்கு ஏத்தம் வந்துடுச்சா? என்றுவேறு பேசி விடும். கலியன் பொன்னம்மா வீடு வருகையில் ஊருக்குள் வீதி விளக்குகள் பளிச்சென எரிந்து கொண்டிருந்தன. கவுண்டர் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி விட்டு வாசல் படியில் உட்கார்ந்தான். உள்ளே பொன்னம்மா சீவக்கட்டையில் கூட்டிக் கொண்டிருந்தாள். ”சார்” என்று குரல் கொடுத்தான் கலியன். அவர் வெளிவந்து திண்ணையில் அமர்ந்தார். இப்போது லுங்கி அணிந்திருந்தான் குமரேசன்.

“எதாச்சிம் வாங்கீட்டு வர்றதுங்களா ரவைக்கி சாப்பாட்டுக்கு? புரோட்டா, ரோஸ்ட், இட்லி, ஆம்லட்டுன்னு கிடைக்கும்.” என்றான்.

“சார் இன்னிக்கி நம்ம வீட்டுல சாப்பிடுங்களே” உள்ளிருந்து பொன்னம்மா குரல் கொடுத்தாள்.

“இன்னிக்கி சாப்பாடெல்லாம் எறங்காதுங்க மஞ்சுளா எனக்கு. லைட்டா மூனு புரோட்டா சாப்டுட்டு படுத்துக்க வேண்டியது தான்”

“அப்படின்னா எனக்கும் சேர்த்தி வாங்கிட்டு வரச் சொல்லுங்க சார்” உள்ளிருந்தே குரல் கொடுத்தாள். குமரேசன் கலியன் கையில் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் கொடுத்தான்.

“சார் நூறு ரூவா எனக்குங்களா?” என்றான்.

“ஆமா நீ ஏதோ பாட்டலு பாட்டலுன்னு சொன்னியே”

“அதுக்கு கவுண்டரே இப்ப குடுத்துட்டாருங்க. எங்கிட்ட இல்லாத நாளு பார்த்து வாங்கிக்கறனுங்க சார். இன்னிக்கு வாங்கிட்டன்னா ஒரே முட்டா குடிச்சுப்போடுவன்.” என்றவன் குமரேசனிடம் நூறு ரூபாயை திருப்பிக் கொடுத்தான். இவனும் வாங்கி பாக்கெட்டில் வைத்துக் கொண்டான்.

“அப்ப நான் போயிட்டு சீக்கிரம் வந்துடறேனுங்க சார். நீங்க வேற பசியில இருப்பீங்க.” என்றவன் வண்டியை ஸ்டார்ட் செய்து நெஞ்சை நிமிர்த்தி உட்கார்ந்து கொண்டு சென்றான். குப்பைகளை கூடையில் தூக்கி வெளிவந்த பொன்னம்மா அதை கொட்டிவர தெக்கே சென்றாள். வீடு இவனுக்கு பெரிதாகவே இருந்தது. போக குளிக்க வசதியாய் பாத்ரூமும், லெட்ரின் ரூமும் இருந்தது. உள்ளே கட்டிலில் இருந்து புலங்கும் சாமான் செட் வரை எல்லாமே இருந்தது. இப்படி வசதியோடு வீடு அமையுமென மதியம் இவனுக்குத் தெரியாது. வீட்டினுள்ளேயே பைப் இருந்தது. வெளியில் கூட குடம் தூக்கிப்போய் தண்ணீர் பிடிக்க வேண்டியதில்லை. காலையில் ஏழு மணியைப்போல தண்ணீர் வரும் என்றாள் பொன்னம்மா.

குப்பைகளை கொட்டி விட்டு வந்தவள் பக்கத்து திண்ணையில் கூடையை வைத்து விட்டு அமர்ந்தாள்.

”எங்க ஊர்க்காரங்க நடமாட்டமே காணமுங்களே மஞ்சுளா?” என்றான்.

“எல்லாரும் நடவையச் சாத்தீட்டு சன் டிவில நாடகம் பார்த்துட்டு இருப்பாங்க சார். பாருங்க ஊரு பூராவும் நாடக சவுண்டு எதிரொலிக்குது பாருங்க!”

“உங்க வீட்டுல டிவி இருக்குங்ளா?”

“கலைஞர் குடுத்த இலவச டிவி இருக்குதுங்க சார். அது ஒரு புத்தி வந்தா ஓடும். ஒரு புத்தி வந்தா ஓடாது. மாசமானா கேபிள் காசு

வெட்டின்னு ரெண்டு மாசத்திக்கி வேண்டாமுன்னு சொல்லிட்டேன் கனெக்சனை! தண்ணியப் போட்டுட்டு வந்துட்டாப்லைன்னா எங்க ஊட்டுல தொணத் தொணன்னு அவரு சத்தமாவே கேக்கும்.”

“அடிச்சுப்போடுவாப்லைங்ளா உங்களை?’

”சேச்சே! அதெல்லாம் பண்ட மாட்டாப்ல. தொணத் தொணன்னு எதையோ ஒன்னை பேசிட்டே இருப்பாப்ல! எட்டரை மணிக்கி பஸ் ஒன்னு வருமுங் சார். அதுல வருவாப்ல! இந்த கலியனுக்கு காசெல்லாம் குடுத்து பழக்காதீங்க சார். திடீர் திடீருன்னு வந்து நின்னுக்குவான்” என்றாள்.

“ரெண்டு கொடம் தண்ணி கொண்டாந்து வச்சுடறனுங்க சார். அப்புறம் நாம உக்காந்து நாயம் பேசலாம்” என்றவள் கூடையைத் தூக்கிக் கொண்டு அவள் வீடு சென்றாள். தெக்கே இருந்து மோப்பம் பிடித்துக் கொண்டே ஓடிவந்த நாய் ஒன்று இவனருகில் வந்து நின்று ஆள் புதிதாய் இருக்கிறானே என்று பார்த்து விட்டு வடக்கே ஓடியது. நாய் வளர்த்தாத வீடே கிராமத்தில் இல்லை போலிருந்தது. வீட்டுக்கு வீடு நாய் இருப்பதை மதியமே பார்த்தான். பொன்னம்மா இரண்டு ப்ளாஸ்டிக் குடங்களை வீட்டினுள் கொண்டு போய் வைத்து விட்டு வந்து திண்ணையில் அமர்ந்தாள்.

“எங்கம்மா சாப்பாடு செய்ய அரிசியை நான் போவலின்னா நொடியில தண்ணியில போட்டிருக்கும் சார். அப்புறம் தான் போடாதேன்னு சொல்லி நிறுத்தினேன். உங்க வீட்டுக்கு போன் பண்டி சொல்லீட்டீங்களா? பத்திரமா வந்து சேர்ந்துட்டேன்னு?”

“இன்னும் இல்லைங்க மஞ்சுளா. படுக்கறப்ப சொல்லிக்கலாம்னு விட்டுட்டேன். தங்கச்சி எப்படியும் பத்து மணி வரைக்கும் முழிச்சுட்டு படிச்சுட்டு இருப்பா. அதனால அவளுக்கு பண்டி சொல்லிக்கலாமுனு இருக்கேன்” என்று இவன் சொல்லிக் கொண்டிருந்த போது பாக்கெட்டிலிருந்த அலைபேசி சப்தம் கொடுத்தது. எடுத்து யாரெனப் பார்த்தான். புதிய ஏர் செல் எண்ணாக இருந்தது.

“உங்க தங்கச்சியே பண்டீட்டுதாட்ட”

“ஹலோ சொல்லுங்க நான் குமரேசன் பேசுறேன்” என்றான்.

“நான் வடிவுக்கரசி பேசுறேனுங்க. என்னாச்சு? எங்க தங்கி இருக்கீங்க?”

“அட நீங்க போன் பண்ணுறதா சொன்னீங்கள்ள! மறந்துட்டேன்

பாருங்க"

"ஆமா எங்களை எல்லாம் ஞாபகத்துல வச்சிருப்பீங்களா? ஆனா எனக்கு இன்னம் வருத்தம் தீரலீங்க."

"வருத்தமா எதுக்குங்க வடிவு?"

"பின்ன எங்க வீட்டுல உங்களை அவசரத்துக்கு கூட தங்க வைக்க முடியாமப் போச்சே! எங்கய்யன் பிரசிடெண்டா இருந்து என்ன பிரயோசனம்? இதே லேடீஸ் டீச்சரா வந்திருந்தாங்க அப்படின்னா உழுந்தடிச்சுட்டு ஏற்பாடு பண்டுவாப்ல எங்கய்யன். நீங்க நம்ம சனம்னு தெரிஞ்சும் அவரால முடியல பாருங்க"

"என்னை கேட்டாரா உங்க கிட்ட எங்கீன்னு?"

"அவரெங்கீங்க கேட்டாரு.. நானாத்தான் ஸ்கூலுக்கு போயிட்டாருன்னு சொன்னேன். ஆமா எங்க தங்கியிருக்கீங்க இப்ப?"

"பொன்னுச்சாமிக்கவுண்டர் வீடொன்னு காலியா இருந்துதுங்க. அவரு தங்கிக்கச் சொல்லிட்டாரு சாவியை கையில கொடுத்து. இப்பத்தான் அந்த வீட்டு திண்ணையில உக்காந்து பேசிட்டு இருக்கேன்."

"எப்படி பார்த்தாலும் உங்க பங்காளியே உங்களுக்கு வீடு குடுத்துட்டாரு. சரிங்க நான் வச்சுடறேன். பை!" என்று சொல்லி கட் செய்து கொண்டாள். எதற்கும் இருக்கட்டுமென அவள் பெயரை பதிவு செய்து கொண்டான்.

"கவுண்டரு பிள்ளைகிட்டயா பேசிட்டு இருந்தீங்க சார். அது கூடத்தான் ஒட்டுக்கா சென்னிமலையில பத்தாவது படிச்சேன். அது பின்ன பன்னண்டு முடிச்சுட்டு காலேஜ் போயிட்டு இருக்குது. நான் சத்துணவு ஆயா ஆயிட்டேன். ஆனா நல்லா வள வளன்னு பேசும் அது. எங்கப்பன் பிரசிடெண்ட்டுன்னு பந்தாவெல்லாம் காட்டீட்டு சுத்தாது."

"இந்த ஊர்ல கவுண்டருக தான் அதிகம் இருக்காங்க போல?"

"ஆமாங்க சார். ஊரைச்சுத்தியும் உங்க ஆளுங்க தான். எல்லாருக்கும் காடு கரையெல்லாம் ஊரைச் சுத்தியும் இருக்குது. ஆனா காசு இல்லாத மாதிரியே பஞ்சப்பாட்டு பாடீட்டு இருப்பாங்க. வீட்டுக்கு பாஞ்சு உருப்படி செம்பிளி ஆடுக வச்சுக்குவாங்க. காட்டுல சின்னதா பட்டி போட்டு நாயை கட்டி வெச்சு சோறு ஊத்தி காவலுக்கு பொழுதோட போட்டுட்டு வந்துடுவாங்க. தோட்டம் வச்சிருக்கிறவங்க அங்கியே மாடு, எருமை வச்சுட்டு வீடு கட்டி தங்கிட்டாங்க."

“எங்காளுகன்னு சொல்றீங்க அப்ப நீங்க? தெரிஞ்சிக்கத்தான் கேக்குறேன் தப்பா நெனச்சிக்காதீங்க மஞ்சுளா!” என்றான் குமரேசன்.

“நாங்க நாடாருங்க! எங்க சனம் இந்த ஊர்ல நாலஞ்சு குடும்பம் தான் இருக்குது. அப்புறம் வேற சாதிக்கார்ருக யாரும் இந்த ஊர்ல இல்லை”

“நாடார்ல திருநெல்வேலி நாடார்னும், கொங்கு நாடார்னும் இருக்குதே! எங்குளுதுல இருக்கிற மாதிரி”

“எங்களுது நாட்டுவ நாடார்னு சொல்லுவாங்க. அதுலயும் கூட்டம் வேற தனித்தனியா இருக்கும். எங்களுதை கெணறுதாவி கூட்டமுன்னு சொல்றாங்க! அதுக்கு ஒரு கதை சொல்றாங்க எப்படி பேரு வந்துச்சுன்னு! எங்க ஊட்டுக்கார்ரு உப்புக்காச்சி கூட்டம். நானு இப்ப அவரு கூட்டத்துக்கு மாறிட்டேன்.”

“நாசுவன், வன்னானெல்லாம் ஊர்ல இருக்காங்களா?”

“இருக்காங்க சார். பக்கத்துல காட்டுப்பாளையத்துல இருக்காங்க! அவங்க வந்து உங்களை பார்த்து மண்டையச் சொறியுவாங்க பாருங்க! துணிமணியெல்லாம் வன்னாங்கிட்ட குடுக்க மாட்டீங்கன்னு சொன்னாக்கூட உட மாட்டான் அவன். புதுசா ஆசிரியரு போட்டிருக்குதுன்னு காதுல கேட்டான்னா நேரா வந்துடுவான் பாருங்க!”

“நல்லவேளையா உங்களை பார்த்தனுங்க மஞ்சுளா. இல்லீன்னா பக்கத்து ஊருக்கு கூட்டீட்டு போயிருப்பான் கலியன். எனக்கு கொஞ்சம் ராசி இருக்குதுன்னு இப்ப நம்புறேன்.”

“எதுன்னாலும் கூச்சப்படாம கேளுங்க சார் என்கிட்ட. நீங்க நல்லாவேற பேசுனீங்களா பாத்த ஒடனே. அதனால எனக்கு சந்தோசமாப் போச்சு. என்னமோ இன்னிக்கித்தான் நான் உங்ககூட பேசுற நெனப்பே எனக்கு இல்லீங்க சார்”

“இந்த சார் போடறதை நிறுத்தீட்டீங்கன்னா நல்லாவே இருக்கும்”

“உங்களை விட நான் சின்னவளுங்க. வாங்க போங்கன்னு நீங்க மட்டும் சொல்றீங்க!”

“கலியன் வீடெல்லாம் ஊருக்கு எந்தப்பக்கம் இருக்குதுங்க மஞ்சுளா?”

“வடக்க கொஞ்ச தூரம் போவோணுமுங்க. அங்கீம் பத்து இருபது வீட்டுக்கும் மேல இருக்குது. அவங்க வலுவுல எல்லாருக்கும் பொட்டி பொட்டியா இலவச வீடு, வீதியில வாசப்படி வரைக்கும் காங்கிரீட்

ரோடுன்னு பக்காவா இருக்குங்க.”

“அது எல்லாப்பக்கமும் அப்படித்தானுங்க மஞ்சுளா. ஆனா இன்னம் காட்டு வேலை செய்ய ஆளுக வர்றாங்கங்றது ஆச்சரியம் தான்”

“கூலி ஒரு நாளைக்கு அவங்களுக்கு இரநூறு ரூவாய்ங்க. எங்கம்மா கூட ஆட்டுக்குட்டு நாலு வெச்சிட்டு இருந்துச்சு. வித்துப்போட்டு ரோட்டு வேலைக்கு போவுது. தெனம் நூறு ரூவா! இப்ப இந்த வீட்டுக்கார்ரு அவரு தோட்டத்துக்கு வாங்கன்னு கூப்புட்டு இருக்காரு. இன்னம் பத்து நாளோ என்னமோ பாக்கி இருக்குதாம். போயி முடிச்சுட்டு வர்றன்னு சொல்லிடுச்சு. ஒரு நாளைக்கு இரநூத்தம்பது ரூவா தர்றேனுட்டாரு. காத்தால போனா பொழுதோட திரும்பலாம். ஆனா அவரு கலியன் ஊர்ல இருந்து யாரையும் தோட்ட வேலைக்கு கூப்பிட்டுக்கறதில்ல! முன்ன எல்லாம் போயிட்டு தான் இருந்திருக்காங்க.” என்றாள். ஓரளவிற்கு வந்த நாளிலேயே ஊரின் நிலவரம் குமரேசனுக்கு தெரிந்து போனது.

# சயனம் 3

பொன்னுச்சாமிக்கவுண்டர் தோட்டத்தில் ஐந்து ஏக்கராவுக்கு போட்டிருந்த பருத்திச் செடிகளும் பறிப்பதற்கான பக்குவத்தில் நின்று கொண்டிருந்தன. இந்தக்கட்டாப்பு நல்லமழை பெய்திருந்ததால் காடு வைத்திருந்தவர்கள் தீவனத்துக்கு ஆகுமென சோளம் போட்டிருந்தார்கள். கிட்டத்தட்ட எல்லாக் காட்டுக்காரர்களின் சோளக்கதிர்களும் முற்றி காற்றுக்கு ஒன்றோடொன்று சாய்ந்து கொஞ்சிக் கொண்டிருந்தன. பொன்னுச்சாமி கவுண்டரும் சோளம் போட்டிருந்தார் காட்டில். வாழைகளுக்கு மூன்று நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே தண்ணீர் விடுவதால் கிணற்றில் மோட்டாருக்கு அருகில் தண்ணீர் ஏறியிருந்தது. சலத்தண்ணீர் அப்படித்தான். நாளைக்காலையில் மோட்டார் போடாமல் விட்டால் மோட்டாரை பொழுதுக்குள் மூடிவிடும். மாடு கன்னுகளுக்கு குடிக்க தொட்டிநீரும் குறைந்து போயிருந்தது.

பொன்னுச்சாமிக்கவுண்டர் மூன்று நாட்களாக ஊரிலேயே இல்லை. நான்கு நாட்களுக்கு முன்பு மொளக்குச்சி தடுக்கி விழுந்து வலது கால் மூட்டு திரும்பிக் கொண்டது. அதே இடத்தில் காலைப்பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார். விடிகாலை நேரம் வேறு. ஆளுக்காரன் எட்டுமணியைப்போலத்தான் வருவான். அதே நேரத்தில் தான் ஊருக்குள்ளிருந்து இவர் அத்தையும் வந்து சேரும். காலில் வலி நேரம் ஆக ஆக ஏறிக்கொண்டேயிருந்தது. அப்படியே அதே இடத்தில் படுத்துக் கொண்டார்.

முதலில் வந்த அத்தை தான் என்னாச்சுடா? என்று கேட்டு அழத்துவங்கி விட்டது. ஊருக்குள் ஓடி ஆட்களை கூட்டி வந்தது. புதுக்கலியாணக்காரன் மாரன் ஒன்பது மணியைப்போல ஆட்டிக்கொண்டு வந்தான். தொண்டுப்பட்டியில் சனம் நிற்பதைக்கண்டு ஆட்டுக்கோ மாட்டுக்கோதான் எதாச்சிம் ஆச்சோவென வந்தவன் கிலுவை மரத்தடியிலேயே நின்று கொண்டான். நான்குபேர் கவுண்டரை தூக்கி வந்து சாலையிலிருந்த கட்டிலை வெளியில் போட்டு அதில் படுக்க வைத்தார்கள்.

கவுண்டரின் லூனாவை ஒருவர் எடுத்துக் கொண்டு போய் எண்ணெய் போட்டு கால் சுளுக்கு எடுக்கும் கிட்டாசாரியை கூட்டி வந்தார். அதற்குள் கால்முட்டி பெரிதாய் வீங்கியிருந்தது. பார்த்தவுடன் சொல்லி விட்டார். ”இது அரச்சலூர்க்காரன் ஈஸியா தூக்கி போட்டுடுவான்.

அவன்கிட்ட இருக்குற எண்ணெய் ரொம்ப பலமுள்ளது. நான் சும்மா விளக்கெண்ணெயில சுளுக்கு எடுத்து பாடம் போடறவன். சென்னிமலையில இருந்து காரு வரச்சொல்லி கூட்டிட்டு போயிடுங்க” அப்படித்தான் செய்ய வேண்டியும் ஆயிற்று.

மூன்று நாட்கள் கவுண்டரில்லாமல் தோட்டம் தன் சோபையை இழந்திருந்தது. இன்று மதியம் போல காரில் தோட்டம் வந்து சேர்ந்தார் கவுண்டர். காரிலிருந்து அவராகவே மெதுவாக இறங்கி அவராகவே மெதுவாக தோட்டச் சாலைக்கு சென்றார். அத்தை ஓடி வந்து கைப்பிடிக்க கையை நீட்டியும் வேண்டாமென சொல்லி சாலை வாசலில் கிடந்த கட்டிலில் உட்கார்ந்தார்.

பின்னாலேயே எண்ணெய் பாட்டிலை எடுத்துக் கொண்டு வந்த கார் டிரைவர் அத்தையிடம் பாட்டிலை கொடுத்து விட்டு அவரிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான்.

மேற்கே இட்டேறிக் கடவுக்கு அருகே செம்பளியாடுகளை மேய்த்துக் கொண்டு நின்றிருந்தான் கவுண்டரின் ஆளுக்காரன் மாரன். மாரனுக்கு கல்யாணமாகி பத்து நாள் தான் ஆகியிருந்தது. புதுப்பொண்டாட்டி தந்த புது சொகத்தின் கனவிலேயே எப்படா இருட்டு கட்டுமென வேண்டா வெறுப்பாய் மேற்கே சாய்ந்து கொண்டிருந்த சூரியனை சீக்கிரம் போய்த் தொலையேன்! என்று வாய் விட்டே சொல்லிக் கொண்டிருந்தான். மயிலாவிடம் இவனுக்கு பிடித்த விசயமே அவளின் மேனி வாசனை தான். அந்த வாசனை இவனுக்கு வேறு எவளிடத்திலும் இல்லை என்பது தெரிந்து தானிருந்தது. அது அவனை வா வந்து கட்டிக் கொள் என்று கூப்பிட்டுக் கொண்டேயிருந்தது. அப்போது தான் கார் ஒன்று தோட்டத்துக்குள் நுழைவதை பார்த்தான்.

“வாழைத்தோட்டத்துக்கெல்லாம் தண்ணி பாச்சியாச்சா அத்தை? எங்க மாரனைக் காணம்?” என்றார்.

“ஒரு வாரம் தங்கச்சிக வீட்டுல இருந்துட்டு வர்றேன்னியேப்பா! மூனு நாள்ல வந்துட்டே?” என்றது.

அப்படித்தான் பால்சொசைட்டிக்கி போன் செய்து அத்தையிடம் சொல்லிவிடும்படி தகவல் சொல்லியிருந்தார் இரண்டு நாள் முன்பு. பால் கொண்டு போய் அத்தை ஊற்றும் போது, ”சித்த முந்தி வந்திருந்தீங்கன்னா உங்க மருமவங்கிட்ட பேசியிருக்கலாம். கவுண்டரு அவரு தங்கசிக வீட்டுல இருந்து காலை பார்த்துட்டு வர்றன்னு உங்ககிட்ட சொல்லச் சொன்னாப்பல!” என்றார் பால் அரைக்கும்

பொன்னான்.

தங்கச்சிகள் இருவரையும் ஒரே நாளில் ஒரே மணமேடையில் சென்னிமலைக்கு கட்டிக் கொடுத்திருந்தார் மூன்று வருடம் முன்பாக கவுண்டர். ஊரே வாயில் விரல் வைத்து அதிசயப்பட்ட திருமணம் அது. அப்பா அம்மா இல்லாத பிள்ளைகளுக்கு அண்ணன் ஒருவனே தந்தையாய் தாயாய் நின்று நடத்திய திருமணம் அது. இருவருக்கும் நாற்பது நாற்பது பவுன் போட்டிருந்தார். முதல் தங்கச்சிக்கு வக்கில் கணவர். இரண்டாம் தங்கச்சிக்கும் குறையாக கூடாது என்று வக்கீல் கணவர். இருவருக்குமே பெருந்துறை கோர்ட்டில் தான் பணி. இரண்டு பேரையும் பார்க்க இவர் சென்னிமலை சென்றால் போதும். இரண்டு தங்கச்சிகளையும் பார்த்து விட்டு வந்து விடலாம். இருவருமே ஒரே படிப்புதான். எஸெஸெல்சி முடித்து மூன்று வருடம் சும்மா தான் வீட்டில் இருந்தார்கள்.

தவிர அவர்கள் படிப்பு முடிந்ததுமே வரிசையாக அப்பா ஒரு வருடம் இருதய நோயில் இறந்தார். அவர் இறந்து இரண்டு வருடம் இருந்த அம்மாவும் போய்ச் சேர வீடு துக்கத்தில் ஆழ்ந்து போனது. தவிரவும் இரண்டு வருடம் கழித்துத் தான் இவர்களின் திருமணைத்தை முடித்து வைத்து தோட்டத்தில் சாலை போட்டு தங்கிக் கொண்டார் பொன்னுச்சாமிக் கவுண்டர். வயதும் நாற்பது ஆகி விட்டது. தங்கைகளின் திருமணம் முடிந்த கையோடு வரன் பார்த்து விடலாமா என்று வந்த பெண் தரகர்களை, அந்த எண்ணமே இல்லை என்று தாட்டி விட்டார்.

“காபி வெச்சுட்டு வந்து குடுக்கட்டா?’ என்ற அத்தைக்கு சரியென தலையாட்டினவர் மனதுக்குள் இரண்டு தங்கச்சிகாரிகள் வீட்டிலும் நடந்த சங்கடங்களை மறக்க இயலாதவராய் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தார். பாசம் என்றால் என்ன? என்ற கேள்வி அவர் மனதுக்குள் விழுந்து விட்டது. இரண்டு பிள்ளைகளையும் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு இந்த இடத்தில் எத்தனை முறை ஓடியிருப்பார்? யாருக்கேனும் ரத்தக்காயம் பட்டுவிட்டால் என்ன பற பறந்திருப்பார். அது எப்படி பெண்கள் அப்படி மாறி விடுவார்கள் இருவருமே ஒன்றைக் கண்டது போலவே? ஒருத்திக்கு கூட அண்ணன் என்ற பாசம் வரவே இல்லையா? எதனால் இப்படியெல்லாம் நடந்தது? எதற்காக எனக்கு கால்மூட்டு பிசக வேண்டும்? இதையெல்லாம் காதில் கேட்பதற்கா?

“என்ன சாமி வந்ததுல இருந்து ஒரு மாதிரியாவே இருக்கே? கால்ல

இன்னம் வலி இருக்கா? இப்படி நீ எப்பயும் இருக்க மாட்டியேப்பா" இன்னொரு டம்ளரில் காபியை ஆற்றிக் கொண்டே வந்த அத்தை காபி டம்ளரை கவுண்டருக்கு நீட்டியது. கவுண்டர் காபி டம்ளரை வாங்கி உறுப் போட்டுக் குடித்தார். மாரன் அப்போது தான் வந்தான்.

"தெப்படிங்க கவுண்டரே அப்பிடிப் போயி ஏமாந்தீங்க? சாதகத்தெ ஒருக்கா எடுத்துட்டுப் போயி சோசீகாரன் கிட்ட குடுத்து கேட்டுப் பாருங்க! ஆமா இப்ப எப்படிங்க இருக்குது?"

"அதெல்லாம் இருக்குறது தாண்டா மாரா. ஆடுக எல்லாம் எங்க மேயுதுக?"

"நானு மேக்க இட்டேறிக்கிட்ட நின்னனுங்க. காரு நம்ம தோட்டத்துக்குள்ள வர்றப்பவே சரி கவுண்டரு வந்துட்டாருன்னு எட்டிப்பாத்துட்டு போயிடலாமுன்னு வந்தனுங்க!"

"எல்லாப்பக்கமும் தட்டறுப்பு ஆரம்பிச்சுட்டாங்க போல இருக்குதா. நாளைக்கி நாமளும் ஆரம்பிச்சுடலாமா?"

"நீங்க சொன்னாச் செரி நாங் கூட்டீட்டு வந்துடறனுங்க காத்தால சூரியங் கௌம்பும் முன்னயே"

"அதான் சரி. புதுப்பொண்டாட்டி என்ன சொல்றா?"

"நீங்க பாத்துப் பேசி பண்டி வச்சீங்க. என்ன கொறை வந்துடும் எனக்கு! நாளைக்கி தட்டறுப்புக்கு கூட்டிட்டு வந்துடறனுங்க"

"அதேண்டா அப்படி?"

"பத்து நாளு ஆச்சுங்க கவுண்டரே. ஊட்டு முன்னால வாழை மரம் கட்டுனதை அவுத்துக்கூட அஞ்சு நாளு ஆச்சுங்க. பழைய பொண்டாட்டி ஆயிட்டா. ரெண்டு நாளா ஊட்டுல சும்மா இருக்க சங்கடமா இருக்குதுன்னு சொல்லீட்டு இருக்கிறா"

"ஆமாண்டா காங்கயத்துல எங்க மாமங்காரன் கிட்ட ஆடு மேச்சுட்டு தோட்ட வேலை பார்த்துட்டு இருந்தவள்ல! சொறிப்புடிச்சவங்கையி சும்மா இருக்காதுங்கற மாதிரி வேலை செஞ்சு பழகின ஒடம்பு ஒரு கெடயில கெடக்க முடியுமா?"

"அட உம்மட டம்ளரை எடுத்தாடா மாரா. துளி காபி இருக்குது குடிச்சுட்டு போவியாமா மேய்க்க" சாலைக்குள்ளிருந்து அத்தை குரல் கொடுக்கவும் கொய்யா மரத்தில் கனுவொன்றில் கமுத்தி சிக்க வைத்திருந்த இவன் டம்ளரை எடுத்து வந்தான். அத்தை வாசலுக்கு

வந்து அவன் டம்ளரில் காபி ஊற்றியது.

"எங்கடா மணியனைக் காணோம்?" எந்த நேரமும் கால்களுக்குள்ளேயே சுற்றும் நாயை ஞாபகம் வந்தவர் போலக் கேட்டார் கவுண்டர்.

"நீங்க போனதுக்கும் அடுத்த நாளு வெசம் தொட்டுப் போடுச்சுங்க அதை."

"அடப்பாவத்தே!"

"காத்தால வந்து பாத்தேன் வாசல்ல வெறச்சிக்கெடந்துச்சு. பக்கத்துல விரியன் செத்துக் கெடந்துச்சு ஒடம்பே துண்டாப்போயி. அப்புறம் தூக்கிட்டு போயி பொதச்சிட்டேனுங் கவுண்டரே."

"நாயொன்னு இனி சொல்லி வெச்சு புடிக்கோணுமா! ஆனா குட்டில வெடுகு புடுச்சு தின்னுட்டு திரிஞ்சுது அது. பன்னண்டு நகம் இருந்துச்சாக்கோ. எடுத்துட்டு வர்றப்பவே சொன்னாங்க. ஊட்டுக்கிட்ட எதையும் அண்ட உடாதுன்னு."

"புதுசா யாரு வந்தாலும் சள்ளு சள்ளுன்னு நிக்குமே! நாம சத்தம் போட்டத்தான் அடங்கும்" என்றவன் தொட்டி நீரில் கை விட்டு அள்ளி டம்ளரை கழுவி கொண்டி பழைய இடத்தில் கமுத்தி விட்டு சென்றான் ஆடுகளைபார்த்து.

நாளையிலிருந்து கவுண்டர் காட்டில் தட்டறுப்பு ஆரம்பித்து விடும். அதற்கு கூலியாளாய் வலுவிலிருந்து இவன் புது சம்சாரம் மயிலாவையும் கூட்டி வந்து விட அனுமதி வாங்கி விட்டான். எப்படியும் தட்டறுப்பு ஒருவாரகாலத்துக்கும் இருக்கும். அவள் போக வலுவிலிருந்து இன்னும் ஐந்து பொம்பளையாள்கள் எப்படியும் வந்து விடுவார்கள். பொன்னுச்சாமிக்கவுண்டர் காடென்றால் எல்லோருமே வேலைக்கு பறந்து கட்டி வருவார்கள். யாரையும் அதட்டிக்கூட பேச மாட்டார் அவர். கிட்டேயே நின்று கொண்டு வேலை வாங்கும் வழக்கமெல்லாம் அவருக்கு கிடையாது. கூலியும் அப்படித்தான் தருவார். வெளிய போயி சொல்லிடாதீங்கப்பா சேத்திக்குடுத்தான்னு! என்று சொல்லியே சேர்த்துத் தருவார்.

கவுண்டர் காலி டம்ளரை கட்டிலின் கீழே வைத்து விட்டு கட்டிலில் சாய்ந்தார். இவர் சாய்ந்து விடுவாரென்றே அத்தை தலைக்கு தலையணை ஒன்றை அப்போதே போட்டிருந்தது. அவர் தங்கச்சிகாரிகளின் ஞாபகமாகவே இருந்தார். மனதை வேறு யோசனையில் செலுத்தினாலும் அது மாட்டேனென்று அடம் பிடித்து

அங்கேயே நின்றது.

அரச்சலூர்க்காரன் இவரின் வீங்கியிருந்த முட்டியை பார்த்ததுமே சாராயம் குடிக்கறதுன்னா குடிச்சுக்குங்க! கொஞ்சம் வலி உயிரு போறமாதிரி இருக்கும். ஆனா நிமிசத்துல இழுத்துப் போட்டுடறேன். அப்புறம் நாலஞ்சு நாளைக்கு எண்ணெய் தடவிட்டு இருந்தீங்கன்னா சரியாப் போயிடுங்க கவுண்டரே! என்றான். ஆனால் சாராயமும் வேண்டாமென கூட்டிபோனவர்களிடம் சொல்லி மறுத்து விட்டார். அவருக்கு தங்கச்சிகாரியின் வீடு போகும் எண்ணம் வந்து விட்டது. அங்கு சாராய வாசனையுடனா போய் கிடப்பது? அவன் எண்ணெய் போட்டு நீவும் சமயம் பல்லைக் கடித்துக்கொண்டே சமாளித்தார். கடைசிக்கட்டத்தில் கண்ணீரே முட்டி விட்டது கவுண்டருக்கு. அப்புறம் போகப்போக அவன் நீவுவது சுகமாய் இருந்தது. இருந்தும் உடனே நடக்கத்தான் முடியாமலிருந்தது.

குமாரபுரியில் தான் பெரியவள் சிவகாமியை கட்டிக் கொடுத்திருந்தார். அங்குதான் காரை விடச் சொன்னார். மதியம் போல சென்ற போது அய்யோ என்னாச்சு எங்கண்ணனுக்கு என்றெல்லாம் சிவகாமி தவிக்கவில்லை. தன் குழந்தையை தோளில் போட்டபடி வாசலுக்கு கார் வந்த்தும் வந்தவள் இரண்டு கதவுகளையும் நீக்கி வைத்தாள். பங்காளி இருவரின் தோளில் கையைப் போட்டுக்கொண்டு ஒரு காலை மட்டும் ஊன்றி இன்னொன்றை நொண்டியடிப்பது போல படியேறி வீட்டினுள் வந்தார்.

“எங்க தண்ணியப் போட்டுட்டு போயி உழுந்து நொறுங்குச்சாமா எங்கண்ணன்? இருங்க அந்த ரூம்ல ஒரு கயித்துக் கட்டலு இருக்கும் பாருங்க அதை எடுத்தாந்து இந்த ரூம்ல போட்டு பழைய துணி தாறேன்.. எண்ணெயெல்லாம் ஆகும்ல! அதை விரிச்சி படுக்க வெய்யிங்க!” என்றவள் தன் மாமியாரின் பழைய சேலையை எடுத்துக் பங்காளி ஒருவரிடம் கொடுத்தாள்.

கவுண்டரை ஒரு கிடையில் படுக்க வைத்து விட்டு பங்காளிகள் காரேறி கிளம்பி விட்டார்கள். கவுண்டருக்கு பெரியவள் புத்தி தெரியுமென்பதால் காலை நீட்டி படுத்துவிட்டார். அசதியில் தூங்கியும் போய் விட்டார். அவர் கண்விழித்த போது இவர் படுத்திருந்த அறை இருண்டு கிடந்தது. பயங்கரமாய் புழுங்கிக் கொண்டிருந்தது. வெளியறையில் டிவி ஓடும் சப்தமும் குழந்தை அழும் சப்தமும் கேட்டது. சிவகாமி! என்று குரல் கொடுத்தார். அறைக்குள் வந்து விளக்கு போட்டவர் சிவகாமியின் கணவர். விளக்கு போடுகையில், பேனை கூட போடாம விட்டிருக்கா

பாருங்க! என்று பேன் சுட்சை தட்டினார். அருகிலிருந்த சேரை எடுத்து வந்து போட்டு அமர்ந்தவர், எப்படி ஏமாந்தீங்க? இப்ப எப்படி இருக்கு? என்று விசாரித்தவருக்கு அரைத் தூக்க கலக்கத்திலேயே பதில் சொன்னார்.

“ஒன்னுக்கு போகோணுமுங்ளா?”

“ஆமா, நானே எந்திரிச்சு மெதுவா நடந்து பாக்கேன்” என்று கட்டிலில் இருந்து காலை இறக்கி மெதுவாய் ஊனிப் பார்த்தார். வலி இருக்கத்தான் செய்தது. அதைப்பார்த்தால் படுக்கையிலேயேவா மூத்திரம் போக முடியும்? இடது காலை நன்றாக ஊனி எழுந்தவர் மெதுவாய் பாத்ரூம் போய் வந்தார். சிவகாமி சமையல் அறையில் வேலையாய் இருந்தாள் போலிருந்தது.

“ரொம்ப பயந்து போனேன்ங்க கொஞ்சம் நடக்கவாச்சும் முடியுது” என்றபடி மீண்டும் கட்டிலில் சாய்ந்தார்.

“எண்ணெயெல்லாம் வத்திப்போச்சாட்ட இருக்குங்ளே கொஞ்சம் போட்டு நான் தேச்சி விடட்டா?”

“சாப்புட்டு படுக்கறப்ப நானே போட்டு நீவீட்டு படுத்துக்கறேன். நீங்க பயந்துட்டு கை வைப்பீங்க, இல்லீன்னா அழுத்தி தேச்சுடுவீங்க” என்றார் கவுண்டர்.

“ஆமாங்க இதெல்லாம் நமக்கு பழக்கமில்ல.” என்றபோது சிவகாமி தட்டில் சாப்பாட்டோடு அறைக்குள் வந்தாள்.

“இந்த எண்ணெய் நாத்தம் என்ன இப்படி இருக்குதுங்க? வாந்தி வந்துடுமாட்ட! இதெனத்துல தயாரிக்கிறாங்க? அய்யோ சாமி! என்னால இங்க நிக்க முடியாது” என்றவள் சின்ன ஸ்டூலை இழுத்து கொண்டு வந்து இவர்முன் வைத்து அதில் சாப்பாட்டு வட்டிலை வைத்து விட்டு சென்றாள். வேறொரு போசியும் தண்ணிச்செம்பும் கொண்டு வந்து கொடுத்து போசியில் கையை கழுவிக்கொள்ளச் செய்து விட்டு போசியை தூக்கிப் போனாள்.

“எங்கண்ணன் எங்கண்ணன் அப்படின்னே சொல்லீட்டு திரிவாளுங்க. ஏனோ அண்ணன் கால் அடிபட்டு வீட்டுல வந்து கிடக்குறப்ப இப்படி மூஞ்சிய திருப்பிக்கிறாளா!” என்றார் வக்கீல். இவர் புன்னகைத்து விட்டு நல்ல பசி என்பதால் சாப்பிட ஆரம்பித்தார்.

“சரி சாப்டுட்டு நீங்க படுங்க! நான் என் ரூமுக்கு போறேன். எதானாலும் ஒரு சத்தம் குடுங்க நான் வந்துடறேன். நீங்களா

தடுமாறிட்டு இருக்காதீங்க” என்றவருக்கு சரியெனச் சொன்னார். சாப்பிட்டு முடித்ததுமே கவுண்டர் அப்படியே ஸ்டூலை தள்ளி வைத்து விட்டு சாய்ந்தார். பின் அவர் விடிந்த போது தான் எழுந்தார். மணி என்ன என்றும் தெரியவில்லை. இவர் கை கழுவிய வட்டல் இன்னமும் ஸ்டூலில் அப்படியே இருந்தது. வெளியே பேச்சுக்குரல்கள் கேட்டது.

“உங்கண்ணன் ஊர்ல சரியா தூங்கறதே இல்லியாட்ட இருக்குதே சிவகாமி. நல்லா புஸ் புஸ்சுனு செரி தூக்கம் தூங்குறார். மணி பாரு எட்டாவப் போவுது”

“அது தூங்கீட்டு போச்சாது உடுங்க. அந்த எண்ணெய் வாசத்தால நான் நைட்டு சாப்பிட்டதை வாந்தி எடுத்துட்டேன். எம்பட தங்கச்சிகாரிக்கு போனைபோட்டு சொன்னேன். மத்தியானம் வந்து அண்ணனை பாக்கோணும்றா.”

“சரி உங்கண்ணன் வந்திருக்குது நான் போயி கறிக்கடையில ஆட்டுக்கறி ஒரு ரெண்டு கிலோ எடுத்துட்டு வர்றேன்”

“அது ஒருகிலோ மட்டும் எடுத்துட்டு வாங்க போதும் எங்கண்ணன் சாப்பிடாது ஆட்டுக்கறி. அது இந்த பண்ணைக்கோழி தான் திங்கும். அதுல ஒரு கிலோ மட்டும் எடுத்துட்டு வாங்க” என்று சிவகாமி சொன்னபோது இவருக்கு அதைக் கேட்க அதிர்ச்சியாய் இருந்தது. இவர் ஆட்டுக்கறி என்றால் பிரியமாய் சாப்பிடுபவர் என்று சிவகாமிக்கு தெரியும். தவிர பண்ணைக்கோழியை வாயில் கூட வைக்க மாட்டார். அதை பன்னு என்பார். ஒரு சத்தும் இல்லை என்பார். இப்படியெல்லாம் இவள் பேச என்ன காரணமிருக்கும் என்று யோசித்தார்.

கல்யாணமானதிலிருந்து அக்காளும் தங்கச்சியும் அடிக்கடி ஒரு வருடத்தில் தோட்டத்திற்கு வந்து கொண்டுதான் இருந்தார்கள். சமீபமாக இந்த வருடத்தில் தான் அவர்கள் கணவர்களை கூட்டிக் கொண்டு வருவது மட்டுப்பட்டு விட்டது. வந்தால் சேர காரில் வருவார்கள். வந்ததுமே பணம் பணம் என்று நச்சரிக்கத் துவங்கி விடுவார்கள். தங்கள் கணவர்கள் இருவரும் புது பிஸ்னஸ் துவங்குவதாகவும் அதற்கு முதல் போட பணம் தேவைப்படுவதாகவும் ஆரம்பித்து அழகாய் பேசுவார்கள்.

அதெல்லாம் இன்னம் கொஞ்ச நாள் போகட்டும் இப்ப என்ன சோத்துக்கு இல்லாமயா கஷ்டப்படறீங்க? அதான் ரெண்டு பேருக்கும் சம்பாதிக்கிற மாப்பிள்ளைகளா கட்டி வச்சிருக்கன்ல! அப்படி பிஸ்னஸ் பண்ணனும்னு ஆசைப்பட்டா உங்க கழுத்துல கெடக்குற நகையை

கழற்றி மொதலா போட்டு ஜெயிச்சு முன்னுக்கு வாங்க! என்று கடைசியில் இவர் வழக்கம் போல கைவிரித்ததும் மூக்கைச் சிந்திக்கொண்டு போய் விடுவார்கள்.

அன்று அப்படித்தான் பண்ணைக்கோழி கறியை தங்கச்சிகாரி செஞ்சு போட்டாளே என்பதற்காக சாப்பிட்டார் கவுண்டர். மதியமாய் பார்க்க வந்த மலர்விழியோடு ஆட்டோ பிடித்து அவள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் கவுண்டர். அங்கு அடுத்த நாள் அவர் காதில் கேட்டது சிவகாமி வீட்டில் கேட்டதை விட பயங்கரமாய் இருந்தது. ”எங்கண்ணன் கறி சாப்பிடறதை விட்டு ஒரு வருசமாச்சாம் காத்தால தான் சொல்லுச்சு!” என்றுஅவள் கணவரிடம் மலர்விழி சொல்லிக் கொண்டிருந்தாள். ஆக இருவருமே இவருக்கு காதில் விழும்படியே வேண்டுமென்றே பேசுகிறார்கள் என்று தெளிவாய் புரிந்து போனது.

இவர்கள் கேட்டபடி பிஸ்னசுக்கு பணம் கொடுத்திருந்தாலும் மீண்டும் மீண்டும் தன்னிடம் தோட்டத்தில் மரத்தில் காய்த்து பணம் விழுவதாய் நினைத்து கேட்டுக்கொண்டே தான் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டார். இந்த விசயத்தில் அவர்களின் கணவர்கள் எந்தக் கருத்தும் பேசாமல் மனைவிக்கு அடங்கிய மகராசன்களாய் போனதை நினைத்து சிரிப்புத்தான் வந்தது. எப்படியோ தங்கச்சிகாரிகள் சுகமாய் கணவர்களை கைக்குள் வைத்துக் கொண்டு வாழ்க்கை ஓட்டுகிறார்கள் என்பது மட்டும் மகிழ்ச்சியாக இருந்தது கவுண்டருக்கு. கடைசியாக கார் பிடித்துக் கொண்டு எண்ணெய் பாட்டிலோடு தோட்டம் வந்து சேர்ந்து விட்டார் கவுண்டர். இனி இவர்கள் வீட்டுப்படியில் கால் வைக்கும் எண்ணம் மட்டும் அவருக்கு இல்லை.

அத்தை வந்து கவுண்டரை எழுப்புகையில் சூரியன் மேற்கே மறைந்து கொண்டிருந்தான்.

“இதென்ன என்னிக்கிம் இல்லாத அதிசியமா இப்புடி தூக்கம்? நானும் பாத்துட்டே இருந்தேன். இந்த நேரத்துல தூங்கக்கூடாதுன்னு எழுப்பினேன். சாப்பாடு எல்லாம் செஞ்சி வச்சிட்டேன். நான் தொணைக்கி இருக்கறதுன்னா பூவாயா வீட்டுல தனியா இருப்பா! போயி பக்கத்துல சின்னாயா ஊட்டுல தூங்கச் சொல்லிட்டு வரோணும். நான் போய் சொல்லிட்டு வெறசா வந்துடறேனே” என்றது அத்தை.

அத்தைக்கு சொத்துபத்தெல்லாம் ஒருகாலத்தில் இருந்தது தான். அத்தையின் குடிகார கணவன் சொத்தையெல்லாம் சீட்டாட்டத்திலும் குடியிலுமே அழித்தான். கடைசியா குடல் வெந்து செத்து இப்போது பத்து வருடமாகி விட்டது. அத்தைக்கு ஒரே பெண் பூவாத்தாளுக்கு வயது

இப்போது இருபத்தியாறு ஆகிவிட்டது. ஊருக்குள் இருக்கும் வீடொன்று தான் மிச்சம். யார் கட்டுவார்கள் ஒன்னுமில்லாமல்? அவள் ஆடுகள் பத்து இருபதை வைத்துக்கொண்டு மேய்த்துக் கொண்டிருந்தாள். அத்தை கவுண்டருக்கு ஒத்தாசையாய் தோட்டத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்தது இந்த நான்கு வருடமாய்த்தான்.

"போலாம் இருங்க அத்தை! அதெல்லாம் மெதுவா நடக்க முடியுது. என்ன மணியன் சாவாம இருந்திருந்தான்னா கட்டலுக்கு கீழ தொணைக்கி கெடப்பான். அவனும் போயிட்டான். எனக்கு ஏனோ கொழப்பமாவே இருக்குது அத்தே!"

"அதான் வந்ததுல இருந்தே நான் பாத்தேன். பிள்ளைங்க எதாச்சிம் சொல்லீட்டுதுகளா? மாப்பிள்ளைக ஒன்னும் அவ்வளவு மோசமானவங்க இல்லியே. இதுகளுக்குத் தான் பறப்பு."

"ஆமா அத்தே. இந்தப்பிள்ளைக என்னை என்ன நெனச்சுட்டு இருக்குதுகன்னு தெரியில! நான் செத்துக்கித்து போயிட்டன்னா மளார்னு கெளம்பி வந்து ரெண்டு நாளு உக்காந்து அழுதுட்டு மூனா நாளு காடு தோட்டத்தை வித்துட்டு போயிருவாளுகன்னு நினைக்கேன்."

"அதுல உனக்கென்ன சந்தேவம்? அப்படித்தான் நடக்கும். நீ இன்னம் நோவு நொடியில கெடந்துபாரு தெரியும். எவளும் கிட்ட வந்து கவனிக்க மாட்டாளுக. உனக்குனு யாரு இருக்கா? கல்யாணமுன்னு பண்ணியிருந்தா பொண்டாட்டியாச்சும் கவனிச்சுக்குவா! அதும் ஆவாதுங்கறே! உனக்கெல்லாம் நான் புத்தி சொல்ல ஆளில்ல சாமி. உனக்கே எல்லாம் தெரியும். தெரிஞ்சிருந்தும் இன்னிக்கி துளி கால்ல பெசகனதுல நீயா கொஞ்சம் தெரிஞ்சிட்ட போல! உனக்கு என்ன ஒரு நாப்பது நாப்பத்தொன்னு இருக்குமா? உனக்கு என்ன கொறச்சலுனு சொல்லு. நான் நீயின்னு போட்டி போட்டுட்டு பொண்ணு தர வருவாங்க.

நாளைக்கு உனக்குன்னு ஒரு பையன் பொறந்தா இத்தன சொத்துகளுக்கும் வாரிசுன்னு ஆச்சு. பொண்ணு கட்டாமப் போனீன்னா சொன்ன மாதிரி வித்து தின்னுட்டு போக காத்துட்டுத் தான் கணக்கு போட்டுட்டு உக்காந்துட்டு இருக்காளுக உம்மட தங்கச்சிகாரிக! ஆனா கலியாணத்து மேல உனக்கு என்ன வெறுப்புன்னு எனக்கு தெரியாது. இல்ல வர்றவ வேற கணக்குல வந்துடுவாளோன்னு பயமா இருந்தா சொல்லு நம்ம பூவாயாளை நாளைக்கே கட்டிக்க! அவளுக்கும் உன்னை உட்டா வேற கதியும் இல்ல. எவன் கட்டிக்க வருவான் சொல்லு?

இப்பவே கெல்டு தட்டிப் போயிட்டா! தெனம் நானு அழுது என்ன பிரயோசனம்? உன் மாமங்காரன் எல்லாத்தையும் வித்துட்டு போயிட்டான்.”

“அய்யோ அத்தை என் வயசென்ன பூவாயா வயசென்ன? அவளுக்கு இருவத்தஞ்சி தான் இருக்கும். அதை கட்டிக்கச் சொல்றியே நீயி”

“இதென்ன நீ இப்படி பேசுறே? எத்தன பேரு ரெண்டாந்தாரம் மூனாந்தாரம் கட்டீட்டு கூசாம ரோட்டுல போறாங்க தெரியாதா? நீ உன் மாமம் புள்ளையத்தான கட்டிக்கிறே? இதுக்கென்னமோ இத்தன ரோசனை பண்றியா? சரி நீ ரோசனை பண்டீட்டு இரு. நான் வீடு போயி பூவாயாகிட்ட சொல்லிட்டு வர்றேன்” என்று அத்தை செருப்பை தொட்டுக் கொண்டு கிளம்பிற்று. மாரன் தொட்டித் தண்ணீரில் முகம் கழுவிக் கொண்டு வந்து கவுண்டர் முன் நின்றான்.

“அப்ப நான் கெளம்புறனுங்க கவுண்டரே. மாடு கன்னுக்கெல்லாம் தீவனம் போட்டுட்டேன். மறுக்காவும் தொண்டுப்பட்டிக்குள்ள போயிடாதீங்க. தேனோ பாலு கறக்காம போறாங்களா அவிங்க?”

“ஊடு போயிட்டு வர்றதா சொல்லிட்டுத்தான் போவுது. ஆமா கொளத்துல பச்சக்காரன் சாராயம் வெச்சிருப்பானா?”

‘வெச்சிருக்காம எங்க போறானுங்க”

“சேரி அப்படின்னா அந்த ஒருலிட்டர் கேனை எடுத்துட்டு போயி வாங்கிட்டு வந்துடு. உனக்கு வேணுமுன்னா ரெண்டு டம்ளரு அங்கியே குடிச்சுக்க” என்றவர் வேட்டியை விலக்கி டவுசர் பாக்கெட்டில் கைவிட்டு பணம் எடுத்துக் கொடுத்தார். வாங்கியவன் கிளம்பினான். கவுண்டர் தன் கல்யாண நினைவில் ஆழ்ந்தார். ஊரே கைதட்டி நீட்டி சிரிப்பதாக நினைத்தார். முக்கா கிழவனுக்கு கலியாணம்! நினைக்கவே சங்கடமாய் இருந்தது. யாருக்கு வீடு போய் அழைப்பு கொடுப்பது கலியாணமென்று? சிரிக்க மாட்டார்கள்? செத்தபிறகு தங்கச்சிகாரிகள் இந்த சொத்தை வித்தால் தான் என்ன? தனக்கு தெரியவா போகிறது? ஒன்றும் தெரியப்போவதில்லை செத்துவிட்டால்!

செத்தபிறகு அவன் அப்படி வாழ்ந்து செத்தானப்பா.. ஒரு தப்பு தண்டா இல்லை! என்று பேசுவார்கள். மலையில மாடு மேஞ்சாலும் மாட்டுக்காரன் பேரைத்தான் சொல்வார்கள். கவுண்டர் மனசு குழப்பத்தில் ஆழ்ந்து விட்டது. சாராயம் குடித்து யோசித்தால் ஒருவேளை முடிவுக்கு வந்து விடலாம். எதற்கும் பேச்சுத்துணைக்கு ஆள் வேண்டும். அத்தை ஆவாது. தன் பெண்ணை கட்டிக் கொடுப்பதிலேயே

கவனமாய் பேசும். போதையில் ஏதாவது வாக்கு கொடுத்து விட்டால் அது சிரமம். இந்த மனசு இத்தனை வழிகளில் யோசிக்குமா என்பது அன்றுதான் கவுண்டருக்கே தெரிந்தது.

இருட்டு விழுந்து விட்டது. அத்தை சாலைக்கு மேலே நின்ற டியூப் லைட்டை போட்டு விட்டுத்தான் சென்றிருந்தது. கவுண்டரின் மனக்கண்முன் சிவகாமியும், மலர்விழியும் முகத்தை கோணலாக்கி கொக்காணி காட்டினார்கள். வானத்தில் நட்சத்திரங்கள் குவிந்து கிடந்தன. எல்லாமுமே சொல்லி வைத்தமாதிரி இவர் தோட்டத்திற்கும் நேர் மேலே இருப்பதாய் இவருக்கு தெரிந்தது. கண்களை மூடி முகத்தின் மீது துண்டைப் போட்டுக் கொண்டார். நாய் கட்டிலுக்கு அருகில் காலால் உடலை சொறிந்து கொள்வது போன்றே சப்தம் கேட்டது.

“மாமா தூங்கிட்டீங்களா?” பெண்ணின் குரல் கேட்டு கவுண்டர் முகத்தின் மீதிருந்த துண்டை அகற்றி யாரெனப் பார்த்தார். பூவாயா தான் கட்டிலுக்கருகில் நின்றிருந்தாள்.

“இல்ல சாமி சும்மா துண்டை மூஞ்சிமேல போட்டு படுத்திருந்தேன். அத்தை தான போயிட்டு வர்றனுச்சு. நீ வந்து நிக்கே?”

“ஏ நா வந்தா ஆவாதா உங்களுக்கு தொணைக்கி?”

“அப்படியெல்லாம் ஒன்னுமில்ல சாமி. போயி ஒரு சேரு எடுத்தாந்து போட்டு உக்காரு. சாலைக்குள்ள இருக்கும் போயிப்பாரு” என்றார்.

“சேரென்ன சேரு எனக்கு’ என்றவள் வாசலிலேயே கட்டிலுக்கு அருகில் அமர்ந்தாள்.

“காலு எப்படிங்க மாமா இருக்குது இப்ப? எங்கம்மா இப்பத்தான் வந்து சொல்லுச்சு மாமன் வந்துடுச்சுன்னு. அதான் நானே போறேன் தொணைக்கின்னு சொல்லிப்போட்டு வந்துட்டேன்”

“காலு பரவால்ல சாமி. உன்னியப்போயி சாமத்துல தோட்டத்துக்கு தாட்டி உட்டிருக்குது பாரு அத்தை! மூளையே கெடையாது அதுக்கு! அட ஒரு டார்ச் லைட்ட புடிச்சுட்டாவது வந்திருக்கலாமல்லொ!”

“எம்பட கண்ணென்ன நொள்ளக்கண்ணாவா போயிடுச்சுங்க மாமா இந்த நெலா வெளிச்சத்துல? அத்தைய குத்தஞ் சொல்றீங்க. ஏம்மாமா நா வந்தது புடிக்கிலியா? எங்கம்மா அப்பியும் சொல்லுச்சு. உம்மாமங்காரனுக்கு பொம்பள வாசமே ஆவாது. நீ போனீன்னா எதாச்சிம் சொல்லுவான். நீ மளார்னு எந்திரிச்சு வந்துருவேன்னு.”

“இருந்தாலும் என்னைப்பத்தி பெருமையாத்தான் சொல்லியிருக்குது

உங்கிட்ட.”

“உங்களுக்கு கலியாண ஆசையே கெடயாதுன்னு எனக்கு தெரியும் மாமா. பொம்பள ஆசையுங் கெடயாது. அப்படி இருந்திருந்தாலும் ஊருக்குள்ள உங்களப்பத்தி சளை ஓடியிருக்கும். மாமன் சாமியாராப் போவப்போவுதுன்னு நானே எத்தன பேருகிட்ட சொல்லியிருக்கன் தெரியுமா உங்களுக்கு.”

“நானெதுக்கு சாமி சாமியாராப் போவணும் காடு தோட்டத்த உட்டுட்டு? நல்லாச் சொன்னே போ”

“தேனோ மாமங்காரன் மொகமே வந்ததுல இருந்து செரியில்லீன்னு எங்கம்மா எங்கிட்ட சொல்லிட்டு இருந்துச்சுங்க மாமா! சரி என்னடான்னு பாக்க ஒடியாந்தா சொகமா கட்டல்ல படுத்து தூங்கிட்டு இருக்கீங்க. அய்யோ! போனதீம் பாலு கறந்துடுன்னு சொல்லிச்சு. மறந்து உங்க்கிட்ட நாயம் பேசிட்டு இருக்கன் பாருங்க” என்றவள் எழுந்து சாலைக்குள் போய் குண்டான்களை எடுத்துக் கொண்டு தொண்டுப்பட்டிக்கு போனாள்.

“வடபக்க செவுத்தோரம் பல்ப்பு சுச்சு இருக்கும் பாத்து போட்டுக்க சாமி. என்னியாட்டவே போயி மொளக்குச்சில காலு தடுக்கி உழுந்துடாதே” கவுண்டர் சொல்லி முடிக்கும் போது தென்னை மரங்களுக்கிடையில் முட்டி மாரன் வந்தான்.

“யார்கிட்டயோ பேச்சுச் சத்தங் கேக்கங்காட்டி அவத்திக்கால பம்மீட்டு குக்கீட்டனுங்க கவுண்டரே! உங்கத்தெ புள்ளையே தோட்டத்துக்கு வந்தாச்சு. இன்னிக்கி கவுண்டருக்கு வேட்டைதான்” என்றான்.

“வாயிலயே போடுவன் ராஸ்கோல். எத்தன டம்ளருடா ஏத்தீட்டு வந்தே? உம்பொண்டாட்டி இன்னிக்கி வாசல்ல உன்னை படுக்கப் போட்டுடுவா பாத்துக்க! உங்க கவண்டன் எந்தக் காலத்துலடா பொம்பள சொகம் வேணுமுன்னு ஓடியிருக்கான் நீ பாத்துட்டே?’

“கவுண்டரே நானு தமாசு பேசுனா நீங்க என்னமோ கோவிச்சுக்கறீங்களே? மொசப் புடிக்கிற நாய் மூஞ்சியப் பார்த்தாவே தெரியுமுங்க”

“மலந்திங்க வந்த நாயி மானியக் கடிச்சாப்ல உனக்கு துளி சாராயம் உள்ள போனதிம் என்னை தொக்கு பேசுறே ஏண்டா? மொசப்புடிக்க மாட்டாத நாயிங்றே?’

“நீங்க துளி குடிங்க கவுண்டரே. அப்பத்தான் செரிக்குச் செரி

பேசுவீங்க” என்றவன் சாலைக்கு வெளியே மரப்பலகையில் தண்ணிக் கொடங்களுக்கு பக்கத்தில் கமுத்தி வைத்திருந்த நான்கு டம்ளர்களில் ஒன்றை எடுத்து வந்தான். இடுப்புலிருந்து கேனை முக்கி வெளியே இழுத்து மூடி திறந்து டம்ளரில் ஊற்றி கவுண்டருக்கு நீட்டினான். கவுண்டர் அவன் கையிலிருந்து வாங்கியதும் கடக்கென ஒரே விழுங்கில் விழுங்கினார்.

“இதென்னடா இந்தப்புளிப்பு புளிக்குது”

“புளிச்சாத்தானுங்க கிக்கா இருக்கும். கடிச்சுக்கறதுக்கு கொய்யாக்கா நாலு பொறிச்சுட்டு வந்தனுங்க” என்றவன் டவுசர் பாக்கெட்டில் கையை விட்டு இரண்டு காயை அவரிடம் கொடுத்தான்.

“இதென்னடா காயை பொறிச்சுட்டு வந்திருக்கே?”

“உங்களுக்கென்ன பல்லா போயிடுச்சு காயிங்கறீங்க? பாக்க அப்படித்தானுங்க இருக்கும். கடிச்சுப்பாருங்க தேனாட்ட இருக்கும். ஏனுங்க இவிங்க வேற வந்திருக்காங்க எதாச்சும் சொல்லப் போறாங்க உங்களை” என்றவன் அடுத்த டம்ளரை நிரப்பி கொடுத்தான். கவுண்டர் கொய்யாக்காயை மோந்து பார்த்து விட்டு அதையும் கடக்கென விழுங்கி விட்டு கொய்யாவை கடித்தார்.

“மணியன் செத்துப் போனானேடா”

“ஆயுசு அவ்வளவு தானுங்க கவுண்டரே! போயிச்சாட்டாது உடுங்க. இதென்ன பாலு கறந்துட்டு வந்துட்டாங்களா. ஏனுங்க புது ஆளா இருக்குதுன்னு எருமெ மெரளுலீங்களா? மடியை குடுக்காதே அது”

“ஆடற மாட்டை ஆடிக்கறக்கோணும்னு தெரியாமத்தான் இருக்காங்களாடா? என்னடா அது கேன்ல மருந்துத் தண்ணியா?” என்றாள் பூவாயா மாரனிடம்.

“இது உங்களுக்கு ஆவாதுங்கோ”

“அது ஆவாட்டிப் போச்சாது எனக்கு. உம்பொண்டாட்டி இன்னிக்கி மொத்துவா போ. இன்னிக்கி உம்பட சத்தம் வடக்க வழுவுல இருந்து நாயி ஊளையுடற மாதிரி இங்க கேக்கப் போவுது பாரு”

“என்னுங்கோ கவுண்டரும் அப்பிடியே சொல்றாரு நீங்களும் அப்பிடியே சொல்றீங்க? எனக்கே ஊட்டுக்கு போவ பயமா இருக்குது. துளி சோத்தை ஊத்துங்க குடிச்சுட்டு வாசல்லயே படுத்துக்கறேன் இன்னிக்கி” என்றான் மாரன்.

“எதுக்கு சாமமெல்லாம் கவுண்டரு தோட்ட வேலைக்கி புடிச்சுக்கறாருன்னு உம் புதுப் பொண்டாட்டி சாபம் உடறதுக்கா? மாமா இவனை சட்டுனு முடுக்கி உடுங்க. வண்டிய வாசல்ல அவுத்து உட்டுட்டான்னா வம்பு வந்துடும். நான் சொசீட்டில கொண்டி பாலு ஊத்தீட்டு வந்துடறேனுங்க மாமா”

“இரு சாமி சாலையில டார்ச் லைட்டு இருக்கும் பாரு எடுத்துட்டு போ” என்றார். அவளும் சாலைக்குள் போய் டார்ச்சை தொளாவி எடுத்துக்கொண்டு பால் போசியை தூக்கிக் கொண்டு கிளம்பினாள் ஊர் நோக்கி.

“நானு ஒரே டம்ளரு குடிச்சுட்டு ஓடியே போறனுங்க கவுண்டரே. இவிங்க பாலு ஊத்தீட்டு வர்றப்ப இருந்தன்னா என்னைய நாளையில இருந்து தோட்டத்துக்குள்ள கால வச்சீன்னா வெட்டியே போடுவன்னு சொன்னாலும் சொல்லிடுவாங்க!” என்றவன் தன் டம்ளரை எடுத்து வந்து அதில் வழிய தளும்புமளவுக்கு ஊற்றி எடுத்துக் குடித்துவிட்டு கவுண்டருக்கும் அடுத்த டம்ளர் நிரப்பிக் கொடுத்தான்.

“இவிங்கள பேசாம கட்டிக்குங்க கவுண்டரே! உங்களுக்கும் தொணையாச்சு. மளமளன்னு அதுமோட சோலிய பாத்துட்டே இருக்காங்க பாருங்க! நீங்க ஒரு வேலையும் செய்ய வேண்டியதில்ல. அட்டணங்கால் போட்டுட்டு படுத்துக்கலாம் கட்டல்ல!”

“மாரா எனக்கு வயசு என்ன தெரியுமா?”

“வயசென்னுங்க கவுண்டரே வயசு? முப்பத்தஞ்சு இருக்குமுங்களா? இப்ப பண்ணாம இனி எப்ப பண்ணுறதுங்க? மண்டையில பத்துமுடி நரைச்சிருந்தாக்கூட வயசாச்சின்னு சொல்லலாம். உங்கய்யனுக்கு கடைசி வரைக்கிம் மீசை முடி நரைக்கவே இல்லீங்களே! தலையில வேணா பொடணியோரம், காதோரமெல்லாம் நரைச்சிருந்துச்சு. அதெல்லாம் குடும்ப வாகுங்க கவுண்டரே! உங்கொய்யனுக்கு சொட்டெ கூடக் கெடயாதுங்க. அதனால உங்களுக்கும் சொட்ட கிடையாது. இன்னிக்கிம் கொராப்பு வெட்டி மீசை வச்சா மைனரு கணக்கா இருப்பீங்க. தெரியாதவராட்டம் தான் கலியாணம் வேண்டாமுன்னு வீராப்பு பேசுறீங்க! பண்டிப்பாருங்க. அதுல இருக்குற சொகத்தை. என்னையச் சொல்லுங்க நீங்க பாத்து குடுத்ததை வச்சு தான் செலவு பண்டோணும். உங்களுக்கு அப்படியா?”

“சேரிச்சேரி தண்ணியப் போட்டுட்டு நீ எனக்கு நாயஞ் சொல்ல வேண்டாம். கெளம்பு. காத்தால தட்டறுப்பு வெச்சிக்கலாம்

மறந்துறாதெ” என்றார்.

“எதுக்கும் ரோசனை பண்டுங்க கவுண்டரே நான் கௌம்புறேன். காத்தால கோழிகூப்புடற நேரத்துலயே கூட்டிட்டு வந்துடறனுங்க. அமட்டையும் குடிச்சுப்போட்டு நெதானமில்லாம படுத்துக்காதீங்க. அவிங்க பயந்துக்குவாங்க” என்று தள்ளாடிக் கொண்டே சென்றான் மாரன். போதை ஏறியதென்றால் வீடு போகும்வரை பாட்டாய் பாடிக்கொண்டு தான் போவான். யாராவது என்றா பாட்டு? என்று கேட்டால்கூட பதில் சொல்லமாட்டான். பாதை பிடித்ததும் தொண்டையை கனைத்துக் கொண்டான் மாரன். மண்டைத்திருகல் தெம்பக்கமாகவே இவனை இழுத்துக் கொண்டு போனது. ஒரு கெடையில் நின்று இரண்டு கைகளையும் உதறிக் கொண்டான்.

”மலை போல பலமான மனம் வேண்டும் உனக்கு

செய் நன்றி மறக்காத குணம் வேண்டும் உனக்கு

தெய்வங்கள் ஒன்றென்று நம்பிக்கை கொண்டு

சேவைகள் செய்தால் உன் தேசம் பிழைக்கும் –நீ

பிறர்க்காக வாழ்வது இன்பம் அல்லவா!

அம்மம்மா தம்பி என்று நம்பி அவன் உன்னை வளர்த்தான்!”

“என்றா பாட்டு பலமா இருக்குது? குண்டி வெடிச்சு செத்துப் போயிறாதடா குடிச்சு.” எதிர்க்கே பால் ஊற்றி விட்டு வெறும் போசியோடு வந்த பூவாயா அவன் கண்ணில் டார்ச் வெளிச்சத்தை அடித்தாள். பாட்டு நின்று போனது.

“கண்ணு கூசுதுங்க கவுணுச்சி! நீங்க பாட்டுக்கு எட்டி வெச்சு போங்க சீக்கிரம். கவுண்டரு அமட்டையும் குடிச்சுட்டு மல்லாந்துடப் போறாரு சோறு உங்காமயே! ஒருவா பேஞ்சு ஊட்டியாவது உடுங்க போங்க!” என்றவனை கண்டு கொள்ளாமல் அதுவேற அப்படி சங்கதியா! என்று வெக்குடு வெக்குடென நடந்தாள்.

இனச் சண்டை மொழிச்சண்டை கூடாது என்று

எல்லாரும் ஒரு தாயின் மக்களல்லவோ!

நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னரல்லவோ!

மாரனின் பாட்டுச் சத்தம் இட்டேறிக்குள் இவளுக்கு மெலிதாக கேட்ட சமயம் பூவாயா தோட்ட சாலைக்கு வந்து விட்டாள். கவுண்டர் முன்பு

மாதிரியே முகத்தின் மீது துண்டு போட்டு கட்டிலில் படுத்திருந்தார். இவள் போசியை கிணற்று மேட்டிலிருந்த தொட்டிக்கு கொண்டுபோய் கழுவிக்கொண்டு வந்து பெஞ்சில் கமுத்தினாள்.

“ஊத்தீட்டு வந்துட்டியா சாமி?’ கவுண்டர் துண்டை விலக்கிக் கொண்டு கேட்டபடி எழுந்தமர்ந்தார்.

“பருப்பு கடஞ்சு வெச்சுட்டு வந்திருக்கன்னு சொல்லுச்சுங்க மாமா எங்கம்மா சாப்பாடு சாப்பிடறீங்களா?”

“இன்னஞ் சித்த நேரம் கழிச்சி நான் சாப்புட்டுக்கறேன்”

“இல்ல அதை குடிச்சுட்டு சோறு திங்காம தூகிடுவீங்களோன்னு தான்”

“இது என்னைய என்ன பண்ணிப்போடும் சாமி. இன்னம் மீறுனா ரெண்டு டம்ளரு இருக்கும். அதையிங் குடிச்சுட்டு சாப்பிட வேண்டியது தான்” என்றவர் கட்டிலை விட்டு இறங்க முயற்சிக்கவும் ஓடி வந்தாள்.

“என்ன வேணுமுன்னு சொல்லுங்க மாமா! நீங்க ஏன் தவுளிக்கறீங்க. அதை டம்ளருல ஊத்தித் தரணுமா?”

“ச்சே! அந்த வேலையெல்லாம் உனக்கெதுக்கு சாமி? அவனே இன்னஞ் சித்த நேரம் இருந்திருப்பான். நீ வந்து சத்தம் போடுவீன்னு பயந்துட்டு ஓடிட்டான். கைக்கு எடுத்துக்குடு நான் பாத்துக்கறேன்” என்றவருக்கு கேனையும் டம்ளரையும் எடுத்துக் கொடுத்தாள். பின் கிட்டயே உட்கார்ந்து கொண்டாள்.

“மாமா எங்கப்பன் இதைக்குடிச்சுத்தான் கொடலு குந்தாமணி வெந்து செத்துதுன்னு உங்களுக்கும் தெரியும். நீங்களும் அதே தப்பை பண்ணுறீங்களே?”

‘எங்க மாமன் அளவு தெரியாம குடிச்சு சோறு உங்காம வயித்தை வத்த வச்சிட்டெ இருந்து தான் அப்படியாயிப் போச்சு. நானு ரெண்டு டம்ளரு குடிக்கிறவன். எனக்கு ஏனோ இன்னிக்கி மனசு செரியில்லாமப் போனதால ஒரு லிட்டரே வாங்கிட்டு வரச் சொல்லிட்டேன்.”

”உங்களுக்கு இப்ப என்ன மனச்சங்கட்டம் வந்துடுச்சுன்னு குடிக்கறீங்க. குடிச்சா சங்கட்டம் செரியாப் போயிருமின்னா எனக்கும் துளி தாருங்களே நானும் போவுதான்னு பாக்கேன்”

“உனக்கென்ன சாமி சங்கட்டம்?”

“உங்களுக்கிருக்கிறப்ப எனக்கிருக்காதா? ரெண்டு டம்ளர் குடிக்கிறதால அது போயிடுதுன்னா அடேங்கப்பா! குடுங்க மாமா”

என்றாள்.

“அட ஏஞ்சாமி நீ விளையாட்டு பண்டிக்கிட்டு. நீ சொல்லு உம்பட சங்கட்டத்தை! நாஞ் விடிஞ்சதும் செரிபண்ணித் தாறேன்”

“எங்கம்மா என்னைய நெனச்சு அழுதுட்டே இருக்குது. அழுதா எல்லாம் செரியாப் போயிருமா? வயசாச்சாம் எனக்கு! இப்பவே கெழவியாயிட்டனாம்! இப்ப நீங்கெல்லாம் கலியாணம் பண்டாம ஓட்டறீங்கள்ள அது மாதிரி பொம்பள காலந்தள்ள முடியாதா?”

“நானும் அதைத்தான் ரோசனை பண்டீட்டு கெடக்கேன் சாமி! இப்படியே இருந்தா கண்ணு மூடி முழிக்கறக்குள்ள காலம் ஓடிப் போயிடும். பாரு அவளுகளுக்கு முந்தா நேத்துத்தான் கலியாணம் பண்டி வெச்ச மாதிரி இருக்குது. மூனுவருசம் போனதே தெரியில. பிள்ளை பெத்து இடுப்புல வச்சுட்டு நிக்காளுக. என்னா தெனாவெட்டு!”

“சரி அதுக்கு என்ன யோசனை பண்ணியிருக்கீங்க மாமா?”

“கலியாணம் பண்டிக்கறது தான் வழி. இப்படி ஒட்டாண்டியா உக்காந்திருந்தா வெல்ல உட்டு ஆட்டீடுவாங்களாட்ட இருக்குதே! தங்கச்சிகாரிக உக்காந்து திட்டம் போட்டாளுகன்னா நான் இருக்கறதே சந்தேகமாப் போயிருமாட்ட தெரியுது. அட சாமத்துல வந்து உக்காந்து எதாச்சும் வெச்சு குடுத்துட்டாளுகன்னா கட்டலல்லயே வெறச்சு கெடப்பனே!”

“த்தோ வாயைக் கழுவுங்க மாமா! குடிச்சுட்டு பேசுற பேச்சு பாரு! அதுகெல்லாம் அப்படி பண்டாதுக. எதாச்சிம் சொல்லியிருக்கும் அதுக்குப் போயி நீங்களா எச்சா ரோசனை பண்டீட்டு கெடக்காதீங்க மாமா!”

”காலம் போற போக்கு தெரியாமத்தான் காட்டுக்குள்ளயே கெடந்துட்டன் சாமி. கால் மூட்டு பெசகி ரெண்டுமணி நேரம் கெடந்தேன். யாரு இருந்தா இங்க என்னை பாக்க? அத்தெ வந்து பாத்துட்டு ஊருக்குள்ள ஓடியாந்துச்சு!. அங்க சென்னிமல போனா எனக்கு இதை விட பயங்கர மரியாதை. மனுசனாப் பொறந்து நல்லா சாதிச்சேன் நானு வெக்கக் கேடு! நம்முளுது நம்முளுதுன்னு பாங்கு பண்ணுனா நம்முளுது தலைக்கு மேல உக்காந்துட்டு பேழப் பாக்குதுக! பதங்கெட்ட கழுதைகளை பல்லாக்குல ஏத்துனம்னா எடங்கண்ட பக்கமெல்லாம் எறக்கு எறக்குங்களாம்!”

“மாமா நம்ம பிள்ளைங்களையே நாம குத்தஞ் சொல்லிட்டு இருக்குறது நல்லா இல்ல”

“நல்லா இல்லத்தான். எம்மனசுக்குள்ளயே வெச்சிக்கறன். பாரு கடைசி டம்ளரையும் குடிக்கேன். குடிச்சுட்டு பேசாம சும்மா கெடக்கறதுக்கு ஏங் குடிக்காட்டி? மாரனாவது இருந்திருந்தா நாலு நாயம் பேசிட்டு இருப்பான். இப்ப அவனும் நீ வந்த்தால ஓடிப் போயிட்டான். ஆமா அத்தை எதுக்கு உன்னை அனுப்பி உட்டுச்சு தோட்டத்துக்கு?”

“மாமன் ஏனோ மன்சொடிஞ்சி வந்திருக்கானாட்ட எதாச்சிம் குடிச்சிட்டு பண்ணிக்கப் போறான். நாம் போனா படுத்தன்னா தூங்கிடுவேன். அது சரிப்படாது நீயே போடின்னு தாட்டி உட்டுச்சு. இப்ப என்னடான்னா மாரங்கிட்ட நாயம் பேசியிருப்பனுங்கறீங்க. மாரங்கிட்ட பேசுற நாயமா இது? அவம்போயி ஊருக்குள்ள சொல்லி நாலு பேரு சிரிக்கவா?”

‘ஓ! அத்தெ அப்படியா சொல்லிச்சு? இடிகொம்புக்காரன் கோழி குசுச் சத்தத்துக்கெல்லாம் பயப்படுமா?”

‘பயப்படாதுங்க மாமா, ஆனா உள்ள நீங்க குடிச்சிருக்குற சாராயம் எது வேணாலும் பண்ணத் தூண்டியுட்டுடும். அதான் பயம்”

”அப்படியெல்லாம் பண்டிக்க மாட்டன் சாமி நானு”

“சேரீங் அந்த நாயத்தை உடுங்க மாமா. சாப்பிடறீங்களா? நான் போயி போட்டு எடுத்தாறேன்”

“இன்னம் சித்த நேரம் போவட்டும்”

“மாரன் சொன்னாப்பலையே நடந்துடுமாட்ட இருக்குதா?”

“அவன் என்ன சொன்னான்?’

“உங்க மாமன் அமட்டையும் குடிச்சுதுன்னா சோறு உங்காது. போயி சீக்கிரம் ஊட்டி உடுங்கன்னு”

“கலியாணம் பண்டுனாலும் பண்டுனான் ஏத்தம் ஜாஸ்தியாப் போச்சு அவனுக்கு”

“இன்னொருக்கா கேப்பேன் மாமா. அப்புறமேத்திக்கின்னு சொன்னீங்கன்னா வட்டல்ல போட்டு பேஞ்சு உருண்டை புடிச்சு கொண்டாந்து கண்டிப்பா திணிப்பேன்.”

“கட்டுன பொண்டாட்டி மாதிரி மெரட்டுறியே சாமி”

“கட்டுனாத்தான் பொண்டாட்டிங்ளா மாமா? சொல்லுங்க! என்ன குறியாடு தலை குத்தினாப்புல உக்காந்துட்டீங்க?”

“என்னைய கட்டிக்கிறியா சாமி நீயி?” நா தழுதழுக்க கவுண்டர் அவளிடம் கேட்டார்.

“என்னங்க மாமா இப்படி கேக்கறீங்க நீங்க எங்கிட்ட? நீட்டுன்னு சொன்னா கழுத்தை நீட்டமாட்டனா நானு”

“இல்ல எனக்கு வயசாயிபோச்சுல்ல! உனக்கும் என்னை கட்டிக்க சங்கட்டமிருந்தா அது சரியா வருமா?”

“உங்களை கட்டிக்க நான் தான் கொடுத்து வச்சிருக்கணும். எப்ப மாமா என்னை கட்டிக்குவீங்க? இப்பன்னாக்கூட நான் சரி” என்றாள் பூவாயாள்.

“சரி நல்ல நாளு பார்த்து நாலு பங்காளிகளோட மட்டும் போயி சென்னிமலையில பண்ணிக்குவோம்.” என்றார். அவருக்கு அப்போது அது தான் சரியாகவும் பட்டது. பூவாயாள் சம்மதம் சொன்னதுமே அவருக்கு போதை கூட காணாமல் போயிருந்தது.

“இனிச் சாப்பாடு போட்டு எடுத்தா சாமி” என்றார். அவளும் எழுந்து சாலைக்குள் போனாள். சொன்னது மாதிரியே உருண்டை பிசைந்து அவருக்கு ஊட்டி விட நீட்டியவள் கட்டிலில் அவரோடு ஒட்டி அமர்ந்திருந்தாள். அவருக்கு கொஞ்சம் வெட்கமாகவும் இருந்தது. ஆனால் பூவாயா விட்டால் தானே! அவரால் ரொம்ப நேரம் பிலுக்கவும் முடியவில்லை பூவாயாவிடம். வட்டிலைக் கழுவி வர எழுந்து அவள் எழுந்து போனதும் கால் நீட்டி கட்டிலில் சாய்ந்தார்.

அவருக்கு இருதயம் வேகமாய் துடிக்க ஆரம்பித்து விட்ட்து. எங்கே இனி பூவாயா தன்னை தள்ளிப்படுக்கச் சொல்லி கிட்டே படுத்துக் கொள்வாளோ என்று மிரண்டார். தாலி கட்டினால் தான் பொண்டாட்டியா மாமா? என்று அவள் குரல் கேட்டது காதுக்கு அருகில். ஆனால் அவள் இவர் பயப்படும் படியாக எதுவும் செய்யவில்லை. எண்ணெய் பாட்டிலை எடுத்து வந்து காலுக்கு அருகில் அமர்ந்து பக்குவமாய் தேய்த்து இழுத்து விட்டாள். வாழ்க்கையில் சம்சாரம் என்றொருத்தி வேண்டுமென அந்த நேரத்தில் ஆசைப்பட்டார்.

“நீ போய் சாப்பிடு சாமி” என்றார்.

“நான் சாப்புட்டுக்கறேன் மாமா. உங்களுக்கு தூக்கம் வருதா? எனக்கென்னமோ வெடிய வெடிய உங்ககூட பேசிட்டே இருக்கலாமின்னு இருக்குது.”

“நான் தான் கட்டிக்கறேன்னு சொல்லிட்டன்ல. கட்டிக்கிட்டு

பேசுவோம்”

“கட்டிக்கறன்னு சொன்னதால தான் பேசிட்டு இருக்கலாம்னு ஆசையா இருகுதுங்க மாமா! போயி சாலையில படுத்தாலும் தூக்கம் வருமா எனக்கு? அது வராது” என்று அவள் சொன்னதும் மீண்டும் இதயம் இவருக்கு படபடப்பாய் துடிக்க ஆரம்பித்து விட்டது.

“சாலையில படுத்தாலும் கீழ பாயி விரிச்சு படுத்துடாத சாமி. இன்னொரு கட்டலு சாச்சு வெச்சிருக்கும். அதை போட்டு படுத்துக்க”

“நல்லதாப்போச்சு” என்று எண்ணெய் பாட்டிலை மூடி போட்டு எடுத்துக் கொண்டு சென்றவள் அதை வைத்து விட்டு கட்டிலைத் தூக்கிக் கொண்டு வாசலுக்கு வந்து இவர் கட்டிலோடு ஒட்டிப் போட்டாள். போட்டவள் அதில் அவரைப் போலவே தெக்கே தலை வைத்து படுத்து இவரைப் பார்த்து ஒருக்களித்துப் படுத்தாள்.

“அரிசி மூட்டை மேல தலையணை இருக்கும்”

“எனக்கு தலகாணி வச்சு பழக்கமில்லீங்க மாமா. அது கழுத்து வலி வந்துரும்.”

“சாப்பிட்டு வந்து படுத்துக்க”

“எனக்கு பசி போயிடுச்சுங்க மாமா. கட்டிக்கறேன்னு சொல்லிட்டீங்க பசிக்குமா?” என்றாள் பூவாயா. தென்னை மரத்திலிருந்து காய்ந்த தேங்காய் ஒன்று கழண்டு பொத்தென அந்த இரவில் விழுந்தது பெரும் சப்தத்தைக் கொடுத்தது.

**அ**டுத்த நாள் மாரன் வழுவுப் பெண்களோடு சூரியன் கிளம்பும் முன்னரே வந்து விட்டான். விடிகாலை நேரத்தில் காற்று விசுவிசுவென கூதலாய் வீசியதால் பூவாயா சாலைக்குள் கட்டிலைத் தூக்கிபோய் போட்டு படுத்துக் கொண்டாள். தட்டறுப்பு ஆரம்பமான சமயம் பூவாயாவும் அவர்களில் ஒருவளாக நின்று தட்டறுத்தாள். அவளின் ஆடுகள் பத்திருபதையும் அவள் அம்மா கவுண்டர் தோட்டத்திற்கே ஓட்டி வந்து மேய விட்டிருந்தாள். அவைகள் இனி தோட்டத்தை விட்டு வீடு போகப்போவதில்லை என்பது மாரனுக்கே தெரிந்திருந்தது. கவுண்டர் மெதுவாக வாசலில் காலை நன்கு ஊனி நடக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் கொஞ்சம் தேவலாம் போலத்தானிருந்தது.

அத்தை பொன்னுச்சாமிக் கவுண்டரின் வீட்டிலிருந்து அவரது ஜாதகத்தையும் மகளின் ஜாதகத்தையும் தூக்கிக் கொண்டு உள்ளூர் ஜோசியகாரனுடன் தோட்டம் வந்த போது கவுண்டர் புதிதாக மாரன் வாங்கி வந்திருந்த கேனில் இருந்து இரண்டு டம்ளர் சாராயம் குடித்திருந்தார். கட்டில் இப்போது வீட்டின் தென்புறமிருந்த வேப்பை மரத்தினடியில் கிடந்தது. ஜோசியன் கவுண்டரை வணங்கி விட்டு கிழக்கே சென்னிமலை முருகன் இருக்கும் திசை பார்த்து கும்பிடு ஒன்றைப் போட்டு விட்டு இரண்டு ஜாதகங்களையும் பிரித்தான். பத்து நிமிடத்தில் அவன் முகம் பிரகாசமானது. மேற்கொண்டு அதை யார் பார்த்துக் கொண்டிருப்பது என்று அவைகளை இவரின் அத்தை கையிலேயே ஒப்படைத்து விட்டான்.

“என்னடா சொல்லுது ஜாதகம்? நாப்பது வயசுக்காரன் ஜாதகத்தை பொருத்தம் பார்க்க இன்னிக்கித் தாண்டா நீ கையில தொட்டிருப்பே! என்றார். அவர் கிண்டல் செய்கிறார் என்றாலும் வினயம் வைத்தும் பேசுகிறார் என்று தெரிந்து கொண்டவன் புன்னகைத்தான்.

“அப்படியெல்லாம் பாக்காம சொல்லப்படாதுங்க கவுண்டரே! நாப்பதுக்கும் மேல ஜாதகம் பாக்கவேண்டிய அவசியம் எதும் உங்களுக்கு இல்லை தான். போக நீங்க யாரை கட்டிக்கிறீங்க? உங்க மொறைப் பொண்ணைத்தான கட்டிக்கிறீங்க. நீங்க பாட்டுக்கு சந்தோசமா பண்ணிக்கலாம். ஆனாலும் உங்க அத்தை தான் இங்க என்னை இழுத்துட்டு வந்து திருப்தியா பார்த்து சொல்லுன்னு சொல்லிடுச்சுங்க! பாத்ததுல உங்க ரெண்டு பேருக்கும் ஏழு பொருத்தம் இருக்குது. யோனிப் பொருத்தமும் அதுல ஒன்னு. இந்தக் கல்யாணத்தை எண்ணி பத்துபேரு முன்னிலையில மட்டும் பண்ணுங்க. விருந்து தடபுடல் எல்லாம் வேண்டாம். பத்துப்பேருக்கு ஒரு ஆள் எச்சா தாலி கட்டுறப்ப இருக்கக் கூடாது. அப்படி இருந்தா தூரம் போகச் சொல்லிடுங்க! எல்லாம் முடிஞ்ச பிறகு பாத்துக்கலாம்.”

“ஏண்டா இதெல்லாம் என்னடா கணக்கு?”

“அதானுங்க சின்ன சின்ன தோசத்துக்கு சின்ன சின்ன பரிகாரம். உங்களுக்காச்சும் பரவாயில்ல. சிலபேருக்கு காலம் கடந்து பண்ணுற கல்யாணம் வாழ்ற இடத்தை விட்டு நானூறு கிலோ மீட்டர் தள்ளிப்போய் யார் துணையுமில்லாம ரெண்டு பேரு மட்டும் கட்டீட்டு வரணும் தெரியுங்களா? அப்புறம் மலையிலயே வெச்சிக்கங்க”

“சரி இதுவரைக்கும் உன் ஜோசியத்தை நம்பிட்டேன். நீ சொல்லி கட்டிக் குடுத்து ரெண்டு பிள்ளைகளும் நல்லாத்தான் இருக்காங்க. இதும்

அப்படியே நடக்கட்டும்” என்றவர் டவுசர் பாக்கெட்டில் கையை விட அத்தை கிளம்பிப்போனது திருப்தியுடன். எப்படியும் இவன் மூலம் இனி விசயம் ஊருக்குள் பரவிவிடும். பொழுதுக்குள் சென்னிமலை பிள்ளைகளுக்கும் தகவல் போய்ச் சேர்ந்து விடுமென அத்தை நம்பிற்று.

பெண்கள் பலநேரங்களில் பல விசயங்களை கணக்கான நேரத்தில் கச்சிதமாய் செய்வார்கள். அது அவர்கள் நினைக்கும்படியே பல நேரங்களில் நடந்தும் விடும். அப்படித்தான் ஆயிற்று அடுத்த நாள் மதியம் போல! இரண்டு தங்கச்சிகளும் வாடகைக்காரில் வந்து தோட்டத்தில் இறங்கினார்கள். பூவாயா தட்டறுப்பில் இருந்தாள். அவளுக்கு காரைக் கண்டதுமே புன்னகை தான். அம்மா சாலையில் இருக்கிறது அது பார்த்துக் கொள்ளும்.

குஞ்சாள் தான், ”கார் போவுது நீங்க போயி யாருன்னு பாக்கலீங்களா கவுணுச்சி” என்றாள். அங்க எனக்கென்ன வேலை! என்று சொன்னதோடு முடித்துக் கொண்டாள்.

சிவகாமியும், மலர்விழியும் தங்கள் குழந்தையோடு வந்திருந்தார்கள். கார் திரும்பி கிலுவை மர நிழலில் நின்றது. அவர்கள் தங்கிப்போக வரவில்லை என்பதை கட்டிலில் படுத்திருந்த கவுண்டர் கண்டு கொண்டார். தவிர அவர்களின் கணவர்கள் யாரும் வரவில்லை. அத்தை தான் அவர்களை வரவேற்றது. அவர்கள் குழந்தைகளை வாங்கிக் கொண்டது. வாங்க சாமிகளா! என்று கவுண்டரும் கட்டிலில் எழுந்து அமர்ந்தார். சிவகாமி சாலைக்குள் போய் இரண்டு சேர்களை தூக்கி வந்து அண்ணனின் முன் போட்டாள்.

அதில் அமர்ந்ததும் மலர்விழி அண்ணனிடம் கால் எப்படி இருக்குது? என்று விசாரிக்காமலே, ’கேள்விப்பட்டது நிஜமா அண்ணா?’ என்றாள். அவர் ஒன்றும் சொல்லாமல் அவர்களை பார்த்தார். அத்தை குழந்தைகளை கொண்டு போய் அவர்கள் மடியிலேயே விட்டது. காபி போடட்டுமா டீ போடட்டுமா? என்றது சாலைக்கு சென்று கொண்டே. அவர்கள் இருவருமே வேண்டாம் எதுவும் என்று ஒரே குரலில் சொன்னார்கள். அத்தை சாலையை ஒட்டியிருந்த பலகையில் அவர்கள் பேசும் நாயத்தை கேட்க ஆவலாய் உடகார்ந்து கொண்டது.

“எனத்துக்கு ரெண்டு பேரும் இப்படி பறந்து கட்டீட்டு வந்திருக்கீங்க? என்ன கேள்விப்பட்டீங்க?” என்றார் கவுண்டர்.

“இப்பிடி ஒன்னும் தெரியாத மாதிரி பேசாதீங்கண்ணா”

“பார்றா மறுக்காவும் சொன்னதையே சொல்லீட்டு! என்னன்னு நேரா

விசயத்தை கேளுங்க"

"கலியாணமாம் உங்களுக்கு. அதெப்படி எங்களை கேக்காம நீங்களா முடிவு பண்டலாம்? எங்க வீட்டுக்காரங்க விசயம் தெரிஞ்சு உங்கண்ணன் ஏன் இப்படி செய்யுறாருன்னு கேட்கறாங்க"

"அவ்வளவு தான சொல்லிட்டாப் போச்சு விடுங்க"

"இதென்ன கத்திரிக்கா வியாபாரமாண்ணா. நீங்களா முடிவு செஞ்சீங்களா இல்ல மருந்து வெச்சு மயக்கீட்டாங்களா?" என்றதும் கவுண்டர் சிரித்தார்.

"மருந்து வெக்கிறதெல்லாம் கூட உங்களுக்கு தெரியுமா? சின்னப்பிள்ளைகன்னு நெனச்சம் பாரு நானு உங்களை."

"வெப்பாங்கண்ணா! உங்களுக்கு அதெல்லாம் தெரியாது. உங்க பார்வையே செரியில்ல இப்ப. எனக்கே சந்தேகமாத்தான் இருக்குது. பாருடி அண்ணன் கண்ணை. நேரா பாத்து பேசுனா எங்கியோ பார்த்து பேசுற மாதிரி இருக்கு பாருடி."

"அடச்சித்த படிச்ச பிள்ளைகளாட்ட பேசுங்க சாமிகளா! எனத்துக்கு வந்திருக்கீங்க ரெண்டு பேரும்? பொண்ணு கட்ட வேண்டாமுன்னு சொல்ல வந்தீங்களா? இப்படியே தோட்டத்துல ஒத்தையா கெடந்து சாவட்டுமுன்னு நினைக்கீங்களா?" என்றார். அவருக்கு கறி ஞாபகம் வந்து விட்டது.

"இருங்க சாமிகளா தண்ணி குடிச்சுட்டு வர்றேன்" என்று மெதுவாய் எழுந்து சாலைக்கு எட்டு வைத்து நடந்தார். அத்தைக்கு தெரியும் அவர் எந்த தண்ணியை சொல்கிறார் என்று. போனவர் ரெண்டு டம்ளர் வீசிக் கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தார். அண்ணன் சாராயம் குடித்து விட்டு வருகிறது என்று அவர்களுக்கும் வாசம் காட்டிக் கொடுத்தது.

"திங்கறக்கு முறுக்கு மிச்சர்னு எதாச்சிம் வாங்கிட்டு வந்தீங்களா சாமிகளா? ஏனோ வாயி மெல்லச் சொல்லி கேட்டுட்டே இருக்குது. கார்ல மறந்தாப்ல வெச்சுட்டு வந்திருந்தீங்கன்னா போயி எடுத்தாந்து குடுங்க பாக்கலாம்" என்றார்.

"நாங்க அவசரமா காரு வாடகைக்கு பேசி எடுத்துட்டு வந்ததுல மறந்துட்டோம்."

"அப்படி எனத்த தூக்கி நிறுத்த வந்தீங்க ரெண்டுபேரும் அவசரமா? நானென்ன உங்களுக்கு சொல்லாமயா கட்டிக்கப் போறேன்? வந்து சொல்லுவன்ல"

“இத்தன நாளு இல்லாம அதென்ன உங்களுக்கு கல்யாண நெனப்பு வந்துச்சு?”

“அட உங்களையெல்லாம் பாங்கான எடத்துல கட்டிக் குடுக்க கொஞ்சம் தாமசமாயிடுச்சு. இனி என்னட வழிய நானு பாக்கோணுமல்லோ!”

“நீங்களா முடிவு பண்டுனீங்களா? இல்ல அவங்களா?”

“ரெண்டு பேரும் சேர்ந்து தான். அன்னிக்கி மொளக்குச்சி தட்டி உட்டு ரெண்டு மணி நேரம் கிடந்தேன் நானு. யாரு இருக்கா சாலையில? எனக்குன்னு ஒருத்தி இருந்தா எல்லாத்துக்கும் சவுரியப்படுமல்லோ! நோவு நொடியின்னா சென்னிமலையில இருந்து ஒவ்வொன்னுக்கும் நீங்களா வந்து எனக்கு பண்டிதம் பார்த்துட்டு இருக்க முடியும்? அதுக்கு உங்க ஊட்டுக்கார்ரு ஒத்துக்கணுமில்ல. அதான் அன்னிக்கி உங்க வீட்டுல பாத்தனே நீ நாத்தமடிக்குதுங்றே! நீ எங்கண்ணன் கறி திங்கறதை உட்டு வருசமாச்சுங்கறே! என்ன நடக்குதுன்னே எனக்கு ஒன்னும் புரியல.”

“ஓ, அதை மனசுல வச்சிட்டு தான் கலியாண ஆசை வந்திருக்கா? அப்பச் சரி பண்ணிக்குங்க”

“சந்தோசம் சாமிகளா! எங்க கோவிச்சுக்குவீங்களோன்னு நெனச்சிட்டேன்”

“உங்க கல்யாணத்துக்கு வரோணுமின்னா எங்க ஊட்டுக்காரங்க கிட்ட தட்டத்துல வெத்தல பாக்கு வச்சு பணம் ஆளுக்கு ரெண்டு லட்சம் குடுத்துடுங்கண்ணா! எப்ப வந்து அழைக்கறீங்க? வர்ற ஞாயித்துக்கிழமை வந்துடுங்க. அவங்களுக்கும் கோர்ட் இல்லை”

“பர்ஸ்ட்டாப் போச்சு! வந்துடறேன் ஞாயித்துகிழமையே”

“சேரி இதச் சொல்லீட்டு போகத்தான் வந்தமுங்கண்ணா. கௌம்புறோம் நாங்க. காருக்கு காசு ஆயிட்டே இருக்கும்” என்று மலர்விழி எழுந்தாள். கூடவே சிவகாமியும் எழுந்தாள். அத்தையிடம் அவர்கள் சொல்லிக் கொள்ளவில்லை. அவர்கள் காரில் போய் ஏறிக் கொண்டதும் கார் கிளம்பிற்று.

“அத்தே இவளுக எப்படி இப்படி மாறிப்போயிட்டாளுக?” என்றார். அத்தை ஒன்றும் சொல்லவில்லை அதற்கு. “ஆளுக்கு ரெண்டு லட்சமுன்னா நாலு லட்சமாச்சே! இருக்கிற மாடு, எருமை எல்லாத்தையும் வித்துல்ல பணம் சேக்கச் சொல்றாளுக. அப்படி எங்

கல்யாணத்துல இவளுக வந்து என்ன பண்டப் போறாளுக?” என்று அவராகப் பேசினார்.

கல்யாணம் திட்டமிட்டபடி சென்னிமலையில் தான் நடந்தது. பொன்னுச்சாமிக்கவுண்டர் பணத்தோடு போய் தட்டத்தில் வைத்து அவர்களை அழைக்கவில்லை. ஏன் போகவேயில்லை. அன்றிலிருந்து இன்று வரை அவர்களும் தோட்டத்திற்கு வரவுமில்லை. இவரும் போகவில்லை.

# சயனம் 4

சென்னிமலை சௌடேசுவரி திருமண மண்டபத்திலிருந்து மேளச் சப்தம் வெளியே எதிரொலித்துக் கொண்டிருந்தது. சென்னிமலை மாரப்பகவுண்டர் பெண்ணுக்கு விடிந்தெழுந்தால் திருமணம். மணப்பெண் அறையில் ஏனோ அழுகைச் சப்தம் வந்து கொண்டேயிருந்தது. அவள் அம்மா தான் அவளை பொத் பொத்தென முதுகில் சாத்திக் கொண்டே அழுதே தொலையாதடி கழுதை! என்று சொல்லிக் கொண்டேயிருந்தாள். கூடவே உன் தலையில் நீயே மண்ணை வாரிக் கொட்டிக்காதடி கழுதை! என்பதையும் சேர்த்துக் கொண்டாள். கூடவே நின்றிருந்த தோழிகள் அவளுக்கு படித்துப் படித்து புத்திமதிகளை சொல்லிக் கொண்டிருந்தார்கள். என்னதான் சொல்லி இதமாய் உரைத்தாலும் கழுதைக்கு காதில் ஏறாது என்பது போல அவள் அழுகையை நிப்பாட்டுவதும், சித்த நேரம் கழித்து ஆரம்பித்து விசும்புவதும் அந்த அறைக்குள் நடந்து கொண்டேயிருந்தது.

மயிலாத்தா அப்படி அழுது வடிந்து கொண்டிருப்பதற்கு காரணம் என்று பார்த்தால் பக்கத்து வீட்டு சிவலிங்கன் தான். அவனை கண்ணில் இவள் பார்த்து மாதமே ஒன்றாகி விட்டது. இன்று இவளுக்கு கல்யாணம் என்றறிந்து விடிகாலைக்குள் கயிறு வீசியாவது மண்டபத்தின் சுவற்றில் ஏறிவந்து தன்னை தூக்கிப் போய்விடுவான் என்று அவள் பாவம் நம்பிக் கொண்டிருந்தாள். அல்லது தாலிகட்டும் சமயமேனும் மண்டபத்தினுள் பைக்கில் வந்து நின்று தடுத்துவிடுவான். அவன் திட்டம் தான் என்ன? என்பது அவளுக்கு தகவல் எதுவும் தெரியாது. ஆனால் அவன் சும்மா இருப்பவனல்ல என்பது மட்டும் தெரியும் மயிலாத்தாவுக்கு.

மயிலாத்தாவின் காதல் அவள் தோழிகளுக்கு நன்கு தெரிந்த விசயம் தான். ஆனால் அவர்களே இப்போது அப்பாவின் சொல்பேச்சை கேட்டு நடக்கத் துவங்கி விட்டார்கள். காதல் கருமம் எல்லாம் வாழ்க்கைக்கு ஒத்து வராது என்கிறார்கள். சென்னிமலைக் கரட்டில் திருகு கள்ளியில் பல இடங்களில் இவர்கள் மயிலாத்தா சிவலிங்கன் டும் டும் டும் என்று கிலுவை முள்ளில் எழுதிப்பார்த்து பால் வடிய வடிய அதை ரசித்திருந்தார்கள். சிவலிங்கன் கிட்டே இருக்கிறான் என்றால் வாழ்க்கையே அப்படி இனித்தது அவளுக்கு. அதுவும் மார்களைப் பிடித்து பிசைவானே திடீரென! ஒரு நாள் கூட அவன் கை சும்மா இருக்காது. அவன் கசக்கியதாலோ என்னவோ இவைகள் சற்று பெருத்துப்போய் உருண்டை வடிவில் அப்படி அழகாய் மாறிவிட்டன.

ஆனால் எதற்காகத்தான் அவன் அப்படி சிவப்பாய் இருக்கிறானோ! தான் மட்டும் இப்படி மாநிறம் கூட இல்லாமலிருக்க அவன் அப்படி சிவப்பு. அவனுக்கு எப்படி தன்னைப் பிடித்துப் போனது? அதான் கொடுப்பினை! என்றே எண்ணிக் கொள்வாள். அவன் கைகளை சற்று இறுக்கிப் பிடித்தாலும் அந்த இடம் ரத்தச் சிவப்புக்கு மாறிவிடுமே! அவன் உதடுகள் வேறு எந்த நேரமும் சிவந்தே கிடக்கும். அவனுக்கு கரட்டில் சின்னதாய் காலில் முள் குத்தினால் கூட துக்கம் இவளுக்கு உடலில் கண்ட இடத்தையெல்லாம் அடைக்கும்.

முதலியார் பையன் என்பதெல்லாம் காதலில் விழுந்த பிறகுதான் தெரிந்து கொண்டாள். காதலுக்குத்தான் சாதி தெரியாதே! சாதிகளையெல்லாம் வயதான பெருசுகள் தானே கட்டிக் கொண்டு அழுகிறார்கள். முதலியார் பையன் தூறல் மெலிதாய் விழுந்து கொண்டிருந்த நாள் ஒன்றில் கரட்டில் கிலுவை மரத்தினடியில் இவளின் உள்ளாடையை தடை என்றெண்ணி அதை கால்வழியே கீழிறக்கி விட்டான். சூர நாயி என்று முனகியவள் அவன் செய்வதையெல்லாம் ரசித்து ஈர மண்ணில் வில்லாய் வளைந்து நெளிந்தாள். அன்று அவன் இவளுக்கு கொடுத்த முத்தங்களுக்கு கணக்கே இல்லை. அவை எல்லாமே அப்படி எச்சிலால் நிரம்பியிருந்தது.

அன்று நடந்தவைகள் தான் காதலின் உச்சம் என்று நம்பினாள் மயிலாத்தாள். நடந்து சரியாக நான்கு மாதங்களுக்கும் மேலாகி விட்டது. இவள் தூரமாகமல் துள்ளிக் கொண்டே திரிவதை அவள் அம்மா கண்டு பிடித்தபோது இவளுக்கு அதுபற்றியெல்லாம் எதுவும் தெரிந்திருக்கவில்லை.

டாக்டரிடம் கூட்டிப்போனார்கள். உசுரு போயிட்டா என்ன பண்ணுவீங்க? என்று மட்டும் கேட்டார். தவிர நானும் கம்பி எண்ணப் போகணும் என்றார் அவர். மாரப்ப கவுண்டர் பிள்ளையை வீட்டுக்கே கூட்டி வந்து வீட்டார். கொளத்துப்பாளையம் மாரிக்கிழவிகிட்ட போகலாம் சத்தமில்லாம முடிச்சுக் குடித்துடுவா! என்று சொன்ன மனைவியின் காது ஜவ்வு கிழியும் விதமாய் கையால் ஒன்று வீசினார். விசயம் கசியும் சமயம் பக்கத்து வீட்டார் சிவலிங்கனை தூரத்து சொந்த வீட்டுக்கு பத்திரமாய் அனுப்பி வைத்து விட்டார்கள்.

அவனுக்கு கல்யாணமென்றால் பிள்ளை பிறக்கும், சோத்துக்கு சம்பாதிக்க வேலைக்கு போக வேண்டுமென்பதெல்லாம் அதன் பிறகு தான் தெரிந்தது. சினிமா நடிகனாகி உச்ச நட்சத்திரமாகி தமிழ்நாட்டுக்கு முதல்வராக மாறவேண்டியவன் கவுண்டர் பெண்ணைக்

கட்டிக்கொண்டு வரிசையாய் குட்டிகள் போட்டு சீக்கிரம் கிழவாடியாவதை வெறுத்து ஓடினான். மயிலாத்தா காதலில் சென்னிமலைக் கரட்டில் எட்டு மாதம் முன்பு பூப்பறிக்கும் விழா அன்று ஓலையக்கா கொண்டையிலே! பாட்டுப் பாடி கும்மியடிக்கும் போது விழுந்தவள் அல்லவா! அவளுக்கு ஒரே நம்பிக்கை சிவலிங்கன் வந்து விடுவான். அவனின் கையே இரண்டு மாதங்களாகப் படாத மார்பகங்களில் இவளாக ஒன்றில் வைத்து அழுத்திக் கொண்டே கவலைபடாதீங்க கன்னுக் குட்டிகளா! என்றே நினைத்துக் கொண்டாள்.

எத்தனை நேரம் தான் அழுவது. அழுவது அவளுக்கு இனி சங்கட்டமாய் இருந்தது. தோழியிடம் அவள், என்ன பண்றது இனி நடக்கிறது நடந்து சாட்டாது! தலையில என்ன எழுதியிருக்கோ அதானே நடக்கும்! என்றாள். தோழி இவளை நல்லபிள்ளை! என்றாள். இப்ப ராத்திரி பதினொரு மணிக்கு உனக்கு புத்தியை குடுத்தது நம்ம குலசாமியாத்தான் இருக்கும், என்றாள். என்ன பிள்ளை இங்க இருக்கு? என்றறியாத மயிலாத்தா தன் நான்குமாத வயிற்றை தடவிக் கொண்டாள்.

இவளை காலையில் தாலி கட்டி மனைவியாக்கிக் கொள்ளப் போகும் மாப்பிள்ளை அரச்சலூர்க்காரன் என்றார்கள். அவன் எப்படியிருப்பான்? என்று தோழியைக் கேட்டாள். வெள்ளையுஞ் சொள்ளையுமா நெட்டையா இருக்காரு மாப்பிள்ளை! நீ பக்கத்துல நின்னீன்னா அவரு நெஞ்சுக் கிட்ட இருப்ப! என்றாள் தோழி. கலரு? என்ற இவள் கேள்விக்கு அவள் உன்னியாட்டவே! என்றாள். சேரி அப்புறம் என்ன பண்றது! என்றவள் கண்ணாடியில் தன் முகம் பார்த்தாள். அது உப்பென்றிருந்தது. தன் அடையாளம் மாறிக்கொண்டு அம்மாளைப் போலவே மாறுவதாய் நினைத்தாள்.

வேலுச்சாமி அப்போது வேலுச்சாமிக்கவுண்டர் கிடையாது. இருபத்தி ஐந்து வயது வாலிபன். அப்போது பணங்காசு இருந்தால் சீட்டாடுவதும், ஒயின்சு கடைக்கு போவதும் தான் சுகம் என்ற நிலை. வேலுச்சாமி மண்டபங்களுக்கு திருமண விசேசத்திற்கு செல்வதே சாராயமே குடித்துக் கொண்டிருந்த வாயில் விஸ்கி, பிராந்தி என்று வர்ணமாய் ஊற்றிக் கொள்ளவும், விடிய விடிய சீட்டாடவும் தான். இவனை நன்கு அறிந்த நண்பர்கள் வேறு விசயத்திற்கும் கூட்டிப்போவதும் விடிவதற்குள் நடந்து விடும். அந்த வேறு விசயம் பெண்ணிடம் கூட்டிப்போவது தான்.

வேலுச்சாமிக்கு சீட்டாட்டத்தில் கை நன்றாக பேசிக் கொண்டிருந்தது. எல்லாரும் மாப்பிள்ளை என்ன எங்களை இன்னிக்கு போண்டி பண்ணி

தாட்டியுட்டுடுவியாட்ட இருக்குதா! என்றே பேசி பணத்தை இழந்து கொண்டிருந்தார்கள். காத்தால ஊருக்கு போறதுக்கு மட்டும் பஸ்சு காசு குடித்தீன்னா போதும் மாப்பிள்ளே! என்று சொன்னவர் காங்கயத்து மாமன். எல்லோரும் மாரப்ப கவுண்டர் பிள்ளை கல்யாணத்திற்காக வந்திருந்தார்கள். மண்டபத்தில் தனி அறையில் இந்த ஆட்டம் நடந்து கொண்டிருந்தது.

எல்லோருக்கும் போதை சரியாக இருந்தது. போண்டியான மாமன்கள் இடுப்பிலிருந்த மிச்ச சரக்கை குடித்து விட்டு அப்படியே சாய்ந்தார்கள். கூடவே மேக்கால தோட்டத்து பங்காளி சின்னச்சாமியை வைத்திருந்தான் வேலுச்சாமி. ஆட்ட்த்தில் யாரும் ஏமாத்து வேலை பண்ணக்கூடாது என்பதை சரியாய் கவனித்துக் கொள்ளவும், வந்த பணத்தை அப்படியே வாறி டவுசர் பாக்கெட்டில் திணித்துக் கொள்ளவுமே அவன். போக அடுத்த ஆட்டத்திற்கான தொகையை சபையில் போட்டு வேலுச்சாமியை ஊக்குவிக்கும் வேலையையும் அவன் செய்து கொண்டிருந்தான்.

மணி இரவு ஒன்னைத் தொட்ட போது வேலுச்சாமியும், பங்காளி சின்னச்சாமியும் மட்டுமே முழித்திருந்தார்கள். மேல்சட்டை பாக்கெட்டிலும், டவுசர் பாக்கெட்டிலும் திணித்து வைத்திருந்த பணத்தை வெளியில் பாயில் எடுத்துப் போட்டு பத்து ரூவாய் நோட்டுகளை தனியாகவும், ஐம்பது ரூவாய் நோட்டுகளை தனியாகவும் சேர்த்து எண்ணிய சின்னச்சாமி மொத்தம் இரண்டாயிரமும் சில்லறையும் இருப்பதாக சொன்னான்.

அரச்சலூர் மாமன் போதையில் உருண்டு, ஏமாத்து ஆட்டம் ஆடாதீங்கடா! என்று தூக்கத்திலேயே ஒழறினார். “மிதி பங்காளி அவனை! யாரிவன்?” சின்னச்சாமி ஆட்டம் முடிந்தபிறகு தான் குடிப்பது என்ற சபதத்தை இப்போது தான் சரி பண்ணிக் கொண்டிருந்தான். ஒரு டம்ளர் உள்ளே போனதும் அரச்சலூர் மாமனை வேலுச்சாமி சார்பாக ஒரு உதை விட்டான். அவர் உருண்டு சுவத்தோரம் பார்த்து படுத்து, சாவுங்கடா எல்லாரும்! என்றார். சின்னச்சாமி அடுத்த ரவுண்டை முடித்து விட்டான்.

“இனி இங்க வேலை இல்லை பங்காளி மண்டபத்துக்குள்ள காரோட்டு போட்டுப் பார்ப்போம்!” என்றான்.

“சிக்குமா? என்றான் வேலுச்சாமி.

“நமக்கு சிக்காம எங்க போயிடும் பங்காளி. மண்டபத்துல சமையல்

வேலை செஞ்சுட்டு ரெண்டு பேரு இருந்தாளுக! சைசா கணக்கு பண்ணிப் பாத்தேன் பங்காளி. அதுல ஒன்னுக்கு இம்மாம் பெருசுக!” என்று அளவு காட்டினான் சின்னச்சாமி.

“பேசி முடிச்சிட்டியாடா?’ வேலுச்சாமிக்கு நாவில் எச்சில் ஊறியது. ஆனால் அவன் இல்லை என்றதும் சப்பென்றானது.

“போயி எங்க தூங்கறாளுகன்னு பாப்பம் வா பங்காளி. ஒருவேள தூங்காம உருண்டுட்டு முழிச்சிருந்தாளுகன்னா பாக்கலாமுல்லொ!”

“அவளுக தூங்க வழியே இல்லை பங்காளி. காத்தால இட்லிக்கும், பொங்கலுக்கும் இப்ப இருந்தே வேலை செஞ்சுட்டு இருப்பாளுக! நட ஆனா அந்த மடம் இல்லின்னா சந்தெ மடம்” அவர்கள் கதவு நீக்கி வெளி வந்தார்கள். இவர்கள் இருந்தது மாடியறையில். கீழே மணவறை சோடித்துக் கொண்டிருந்தார்கள். சேர்களில் சிலர் கால் நீட்டி தூங்கிக் கொண்டிருந்தார்கள். இருவரும் படிகளில் இறங்கி முதலில் பாத்ரூம் பக்கம் சென்றார்கள். பிறகு சமையல் அறைப்பக்கம் சென்றார்கள். அவர்கள் இருவரும் சொன்னது மாதிரி வெங்காயம் மொளகா கிள்ளிக் கொண்டிருந்தார்கள். தொழித்த வெங்காயம் மலை போல அவர்கள் முன் குவிந்திருந்தது.

“பங்காளி நீ ஜோப்புல இருந்து பணத்தை மட்டும் வெளிய எடுத்து அவளுக பாக்குற மாதிரி எண்ணீட்டே நில்லு” என்று சொல்லிக் கொண்டே சின்னச்சாமி அவர்களை நோக்கிச் சென்றான்.

“வேலை ஆயிட்டே இருக்குமாட்ட! காத்தால சட்னிக்கு என்ன?’ என்று கேட்டபடியே அவர்களருகில் சென்றான்.

“தேங்காச்சட்னி தானுங்க! கூடவே வெங்காயச் சட்னியும்!”

“இலையில கூட வெக்கிறதுக்கு உப்புமாவும் பொங்கலுமா?”

“ஆமாங்க! நீங்க என்ன பொண்ணு ஊட்டுக்கு சொந்தமா? தூங்காம சுத்தீட்டு இருக்கீங்க? கூட வந்தவரு ஏன் அங்கியே நின்னுட்டாப்ல?” என்றாள் ஒருத்தி.

“நாங்க இன்னாவரைக்கும் சென்னிமலை ஏறிட்டு மெதுவா சரக்கடிச்சுட்டு வந்தோம். செரி காரமா எதாச்சும் இருந்தா கடிச்சுக்கலாமுன்னு வந்து பார்த்தா இப்பத்தான் வெங்காயம் தொழிச்சுட்டு இருக்கீங்க!”

“சரக்கு இருந்தா எங்களுக்கு துளி ஊத்துங்களே!”

“ஒரு பாட்டலுதான் இருக்குது ஆளுக்கு பாதி குடிச்சுக்கறீங்களா?”

“சீக்கிரம் வெளிய எடுங்க யாராச்சிம் வர்ரதுக்குள்ள அன்னாந்து குடிச்சுக்கறோம்” என்றவளிடம் இவன் அடிப்பாக்கெட்டிலிருந்து சிவாஸ் விஸ்கி பாட்டில் ஒன்றை எடுத்து சற்று தடிமனாய் இருந்த பெண்ணிடம் நீட்டினான். வாங்கியதுமே அவள் திருகி தண்ணீர் கலக்காமல் பாதி அளவு குடித்து மிச்சத்தை இன்னொருத்திக்கு கொடுத்தாள். அவளும் அன்னாந்து குடித்து விட்டு பாட்டிலை இவன் பார்க்க தன் சேலையை விலக்கி வயிற்றுப் புறத்தில் செருகிக் கொண்டாள். அவர்கள் இருவருமே வெங்காயம் ஒன்றை வாயில் போட்டு மென்று கொண்டார்கள். வேலுச்சாமி இப்போது அருகில் நின்றிருந்தான்.

“சரி எங்க போறது நாம?” என்றான் சின்னச்சாமி.

“எங்க போலாங்கறீங்க? வேலை இருக்குதுல்லோ! சமையல்காரன் தூக்கிட்டு இருக்கான் பாருங்க! செருப்பை கழட்டி அடிப்பான் வேலை செய்யலீன்னா!”

“அப்ப முடியாதா? சரி சம்பளம் எவ்வளவு உங்களுக்கு வேலைக்கு?’

“காத்தால கழுவி கமுத்தீட்டு போறப்ப ஆளுக்கு நூத்தம்பது ரூவா தருவான்.”

“நாங்களும் தர்றோம் ஆளுக்கு நூத்தம்பது. ஆனா ஆளுக்கு பத்து நிமிசம் தான? ஏம் பங்காளி அதுக்கும் மேலயா ஆயிடப் போவுது?’

“நீ என்னடி சொல்றே?” என்று பருத்திருந்த பெண்ணிடம் அவளை விட அளவாய் பருத்திருந்த பெண் கேட்டாள்.

“சேரீக்கா எங்க போறது இன்னாரத்துல? இவங்கீது எந்திரிச்சிட்டான்னா ஒருத்திய காணமுன்னாலும் சத்தம் போடுவான்”

“மண்டபத்துக்கு பின்னாடி ஜெனரேட்டர் ரூமு தொறந்து தாங் கெடந்துச்சு சாயந்திரமே பார்த்துட்டேன். படக்குன்னு எந்திரிச்சு நீ போ. என் பங்காளி பொறவுக்கே வருவான். அவனை போட்டு சீக்கிரம் சீக்கிரம்னு அவசரப்படுத்தினீன்னு வெச்சுக்கோ. மசக்கோவம் வந்துரும் எனக்கு பாத்துக்கோ! நெதானமா செஞ்சு முடிச்சுட்டு வாங்க” என்று சின்னச்சாமி சொல்லவும் பருத்த உடல்காரி எழுந்து சேலையை உதறிக் கொண்டு வேலுச்சாமி அருகில் போய் திடீரெனக் கட்டிப்பிடித்து முத்தம் ஒன்றைக் கொடுத்து விட்டு, சீக்கிரம் வாங்க! என்று சொல்லி தன் பருத்த பின்புறத்தை ஆட்டிக்கொண்டே போனாள். வேலுச்சாமி சற்று கழித்து சென்றான்.

“ஏன் உங்களுக்கு அவசரமில்லியா? நாம எங்க போறது?” என்றாள் அளவாய் பருத்திருந்தவள். இப்போது அவள் தன் சேலையை விலக்கி இவன் பார்க்க குனிந்து வெங்காயம் தொழித்தாள். அவைகள் வடிவமாய் தொங்கிப் போயிருந்தன. ஒரு வெங்காயத்தை எடுத்து இவன் குறி நோக்கி குறி பார்த்து வீசினாள் அவள்.

“ஏன் உனக்கு அவசரமா? அவங்க வந்து தான ஆவணும்”

“வந்து மூடைக் கௌப்பி உட்டுட்டு நாயத்தைப் பாரு உங்களுக்கு. என்னைய மொதல்ல நீங்க மோட்டாரு ரூமுக்கு கூட்டிட்டு போயிருக்கலாம்ல. அதென்ன அவரை அவ கூட அனுப்பி உட்டுட்டீங்க? எனக்கு போதை தெளிஞ்சிட்டுதுன்னா ஆசை போயிடும்” என்றவளுக்கு இடது பக்க டவுசர் பாக்கெட்டிலிருந்து இன்னொரு பாட்டிலை வெளியில் எடுத்தான் சின்னச்சாமி.

“எஞ்சாமி குடு அதை! நாங்கெல்லாம் ஐம்பது ரூவான்னாலே குதி போட்டுட்டு வந்துடுவோம். மவராசனுக நூத்தம்பது தர்றன்னு சொல்லி பாட்டலும் குடுக்குறீங்க” என்று வாங்கிக் கொண்டவளிடம், ’பாதி மட்டும் குடி மீதி அந்த குண்டிக்கு!’ என்றான். அவளும் சரியாக பாதி அளவு குடித்து இவனிடமே நீட்டினாள் பாட்டிலை. இவன் மூடி போட்டு மேல்பாக்கெட்டிலேயே திணிக்க முடியாமல் திணித்தான்.

“நீங்க குடிக்கிலியா சரக்கு? அந்த கொஞ்சத்திம் ஊத்திக்கிட்டீங்கன்னா அப்ப ஜம்முன்னு இருக்கும்”

“எனக்கு சொல்லிக் குடுக்குறியா நீயி”

“எனக்குத் தெரிஞ்சத சொன்னேன். இந்த எடுபட்ட காசி எந்திரிக்கறதுக்குள்ள போலாம் சாமி நாம!” அவள் கை இவனை எட்டிப்பிடிக்கவே வந்தது.

“எம் பேரை நீங்க கேக்கவே இல்ல?”

“பேரை வச்சுட்டு நானென்ன பண்ணப்போறேன். நானே பண்டம் பாக்க வந்திருக்கேன்.” என்றதும் வெற்றிலை காவிப்பல் தெரிய சிரித்தாள் அவள்.

“போன உங்காளு என்ன அவ பண்டத்துல பூந்துட்டாரா? இன்னுங் காணமே!”

“மெதுவா நிம்மதியா வரட்டும்” என்றபோது, அந்த குண்டுப்பெண் வெட்கச் சிரிப்புடன் வந்தது. அது அவ்வளவு அழகாய் இருந்தது சின்னச்சாமிக்கு. வேலுச்சாமி வரமாட்டான் என்பதை உணர்ந்தே

இருந்தான் அவன்.

“என்னடி இளிப்பு உனக்கு?’ என்றாள் பருத்த பெண்ணிடம் இவள்.

“நானு மேல உக்காந்துட்டனா! கெஸ்சு கெஸுன்னு மூச்சு அடச்சிப்போற மாதிரி ஆயிப்போச்சுன்னு சொன்னாப்ல! அதான் சிரிச்சனக்கா! சரி நீ போக்கா! உன்னியும் அவரு தாட்டி உடச் சொன்னாரு” என்றாள்.

“என்ன மறுக்காவுமா? என்னடி எழவு இது!”

“போக்கா நீயி! அதெல்லாம் கம்பு ரெடி” சொல்லி மீண்டும் அதே வெட்கச் சிரிப்பு சிரித்தாள். சற்று பருமன் குறைந்த பெண் சின்னச்சாமியை ஒரு பார்வை பார்த்து விட்டு போனது.

“காசு குடுத்துட்டானா எம்பங்காளி உனக்கு?’ என்றான் அவளிடம். அவள் உதடு பிதுக்கி காட்டினாள்.

“சேரி வந்து தருவான்” என்றவன் மேல்பாக்கெட்டிலிருந்து சிரமமாய் உறுவி பாட்டிலை அவளிடம் நீட்டினான்.

“இப்பத்த சரக்கெல்லாம் ஒன்னுமில்லியாட்ட இருக்குது. ஒருக்கா போயி உந்தீட்டு வந்ததும் தெளிஞ்சி போச்சு” என்று வாங்கிக் கொண்டவள் அதை குடித்து வெறும் பாட்டிலை அவளைப் போன்றே வயிற்றுப் புறத்தில் செருகிக் கொண்டாள்.

“எம்பங்காளி காரியம் நல்லா பண்டுனானா? பறவாப் பறப்பானே?” என்றான் அவளிடம். அவளோ வெட்கப்பட்டு சிரித்தாள் சத்தம் வராமல்.

“போங்க நீங்க சித்தெ! அதெல்லாமா கேப்பாங்க எங்கிட்ட”

“இதென்ன இத்தன வெக்கப்படறே நீயி!”

“அதெல்லாம் நல்லாத்தான் பண்டுனாரு போங்க! ஐய்யோ இதென்ன இப்பிடி நீங்க”

“சரி நாம போலாம்ல”

“போதுமுங்க எனக்கு. இனி நீங்களும் போட்டு குஞ்சுவீங்க. அந்த மோட்டரு ரூமு அடச்சிக் கெடக்குது. காத்தே துளி இல்ல. மூச்சு முட்டி தண்ணி வாத்த மாதிரி வெளிய வந்தேனாக்கும்”

“அதுக்கு அவுத்துப் போட்டுட்டா செரியா இருந்திருக்கும்”

“எல்லாம் அவுத்துப் போட்டும் தான் வேகுது உள்ள. அவரு குளிச்சே போட்டாருன்னு நெனைக்கேன் நானு எம்பட சேலையில தொடச்சி

உட்டுட்டு வந்தேன். பாத்தா மானம் பாத்துட்டு மறுக்காவும் நிக்குது. அதான் சிரிச்சுட்டே வந்தேன்”

“வந்து கை காலு மூஞ்சிய கழுவீட்டான்னா செரியா ஜம்முன்னு இருக்கும்”

“ஆமா எங்களை அப்படித்தான்னு எப்படி நீங்க மட்டும் கண்டு புடிச்சீங்க?’

“அதான் சாயந்திரமே உன்னை நோட்டம் பார்த்தனே நானு. சிரிப்பு காட்டுனீல்ல.”

“நானெங்க சிரிச்சேன் உங்களைப் பார்த்து?”

“செரி உடு! எப்படியோ கண்டுக்கிட்டேன் நானு. இப்பிடி கும்முன்னு இருக்கியேன்னு ஆசையாப் பாத்தேன்”

“நீங்க கும்முன்னு இருக்குதுன்னு ஆசையாப் பாத்தேங்கறீங்க. சின்ன வயசுல எப்பிடி அழகா இருந்தன் தெரியுமா நானு. இப்ப இந்த ஒடம்பை வெச்சுட்டு ஒரே சிரமம். கொஞ்சம் தூரம் நடந்தாவே மூச்சு வாங்குது. துளி காத்தில்லீன்னா வேத்துப் போவுது உள்ளெல்லாம். உங்களுக்கு நோட்டம் இதுக மேலயே இருக்குது. அவரு ரெண்டு கையிலயும் நாம்பி புடிச்சுட்டு படாத பாடு பட்டாரு. எனக்கா ஒரே சிரிப்பு.” என்று இவள் சொல்லிக் கொண்டிருந்த போது வேலுச்சாமி அவட்டை செத்தவன் போல வந்து இவனை வரச்சொல்லி சைகை காட்டினான். இவன் எழுந்து போனான்.

“என்ன பங்காளி திருப்தியா?” என்றான் சின்னச்சாமி.

“இன்னம் ஒரு மாசத்துக்கு இந்த நெனப்பே எனக்கு வராது பாத்துக்க பங்காளி”

“சேரி அப்பிடியே பாத்ரூம் போயி முடிஞ்சா குளிச்சிக்க. எங்க அவ?”

“அவ எந்திரிப்பனாங்கறாடா! உன்னைய போயி சீக்கிரம் தாட்டி உடுங்கன்னு மொனகுறா! போயிட்டு வா போ” என்று வேலுச்சாமி பாத்ரூம் பக்கம் நகர இவன் மண்டபத்தின் மோட்டார் ரூம் பக்கம் சென்றான். மோட்டார் ரூம் கதவை திறந்து இவன் உள்ளே சென்ற போது குப்பென அனல்காற்று அடித்தது. குண்டி சொன்னது உண்மைதான். அது சின்ன ரூம் தான். இருட்டில் அவள் இவன் வேட்டியை பிடித்து கையோடு இழுத்துக் கொண்டாள்.

இருட்டில் நெகா சிக்கி இவன் அவளருகில் படுத்து கட்டிக்கொண்ட

போது அவள் வெற்றுடம்புடன் கிடக்கிறாள் என்று தெரிந்தது. வெற்றிலை வாசம் வீசும் அவள் உதட்டை இவன் உதட்டோடு வைத்து அழுத்தினாள் அவள். இவன் அவளின் பின்புறங்களை அழுத்தமாய்ப் பற்றினான். அது கொழகொழத்து நழுவியது. இதையப் புடிங்க! என்று இவன் வலது கையை இழுத்து வந்து மார்பகத்தில் வைத்து அழுத்திக் கொண்டாள் அவள்.

இவர்கள் மீண்டும் சமையலறைக்கு வந்த போது வேலுச்சாமி குண்டியிடம் பேசிக் கொண்டிருந்தான். சின்னச்சாமிக்கு குண்டியை பார்த்ததும் ஆசை கிளம்பி விட்டது.

“பங்காளி பணங்குடுத்துடு பங்காளி ரெண்டு பேருக்கும். என்ன இருந்தாலும் மோட்டார் ரூம் சிரமம் தான்” என்றான். வேலுச்சாமி ஆளுக்கு நூத்தம்பது எண்ணிக் குடுத்தான்.

“ஏம் பங்காளி கணக்குக்கு நீ இன்னம் குண்டிகிட்ட காரியத்தை முடிக்கலியே! அது நாயமில்லியே! போ நீ போயிட்டு வந்துடு”

“நான் ரெடி. குண்டுப்பாப்பா எந்திரிச்சா செரி” என்றபோது தன் கையில் இருந்த பணத்தை இன்னொருத்தியிடம் கொடுத்து விட்டு அவள் மோட்டார் ரூமுக்கு நகர்ந்தாள். பின்னால் சென்ற சின்னச்சாமி திரும்பி வர அரை மணி நேரமாயிற்று.

சின்னச்சாமிக்கு மோட்டார் ரூமில் குண்டி, யாருகிட்டயும் சொல்லக்கூடாது என்றொரு விசயத்தை சொன்னாள். நானு யாருகிட்ட சொல்லப் போறேன் என்றிவன் சொல்லி அவளுக்கு காதைக் கொடுத்தான். கலியாணப்பொண்ணு வயித்துல நாலு மாச கொழந்தை இருக்குதாம். அது காத்தால கட்டிக்கப்போற மாப்பிள்ளை வீட்டாருக்கே தெரியாதாம்! என்றாள். உனக்கு எப்படிளே தெரியும்? என்றான் அவளைப் போலவே காதுக்கு அருகாமையில் குசு குசுத்தபடி சின்னச்சாமி. ’பாத்ரூமுக்கு வந்த ரெண்டு பொம்பளைக பேசிக்கிட்டாங்க! நான் கேட்டேன்!’ என்றாள். அந்த விசயம் இவனுக்கு எந்த பாதிப்பையும் தரவில்லை என்றாலும் சொன்னாளே என்பதற்காக அவள் உதட்டில் வெங்காய வாசனை வந்தாலும் பரவாயில்லையென ஒரு முத்தத்தை அழுத்தமாய் கொடுத்தான்.

வேலுச்சாமியும், சின்னச்சாமியும் குளியல் முடித்து மண்டபத்தில் இருந்து வெளியேறும் போது மணி நான்கை தொட்டிருந்தது. மணவறை வேலை முடிந்திருந்தது. மேளச்சப்தத்தில் மணமகனுக்கு மாமன் சீர் நடந்து கொண்டிருக்க தூங்கிக் கொண்டிருந்தவர்கள் எல்லோரும்

விழித்து எழுந்து பாத்ரூம் சென்று கொண்டிருந்தார்கள். சூரிய உதயத்திற்கு முன்பே முகூர்த்தம் என்றுதான் பத்திரிக்கையில் இருந்தது. இவர்களுக்கு குடிப்பதற்கு பாட்டில் இல்லை. அதனால் பேருந்து நிறுத்தம் நோக்கி நடை போட்டார்கள். சென்னிமலை ஊரே தூக்கத்தில் இருந்தது.

பேருந்து நிறுத்தத்திற்கு எதிரே இருந்த பமீலா ஒயின்ஸ் சாத்திக்கிடந்தது. அண்ணே! அண்ணே! என்று பத்துநிமிடம் தட்டி தூங்குபவனை எழுப்ப ஆயிற்று. நான்கு பாட்டில்களை வாங்கிக் கொண்டவர்கள் அவனுக்கு பத்து ரூபாய் அதிகம் கொடுத்தார்கள். இருந்தும் அவன் முகூர்த்த நாட்களில் கடையை பூட்டிக் கொண்டு ஓடி விடுவதே சிறந்தவழி! என்று சொல்லிக் கொண்டிருந்தான். கடையை ஒட்டியே பார் இருந்தது. அதன் பச்சை வர்ணமிட்ட கதவு திறந்தே இருந்தது.

உள்ளே குப்பை கூலமின்றி எல்லா டேபிள்களும் சுத்தமாய் இருந்தது. கல்லாவினருகில் இரண்டு பேர் லுங்கியை அவிழ்த்து இழுத்து முகத்தையும் மூடி சுருண்டு கிடந்தார்கள். இரவு விளக்கு மட்டும் மஞ்சள் நிறத்தில் எரிந்து கொண்டிருந்தது. இவர்கள் தூங்குபவர்களை எழுப்ப மனமில்லாமல் இவர்களாகவே பிரிட்ஜை நீக்கி செவனப் பாட்டிலை எடுத்துக் கொண்டார்கள். அதை திறக்க சின்னச்சாமி தன் பற்களையே ஓப்பனராக பயன்படுத்தினான். இரண்டு கண்ணாடி டம்ளர்களில் சரக்கை ஊற்றி செவனப் கலந்தார்கள். தின்பதற்கு சின்னச்சாமி கடலை பாக்கெட்டுகள் பிய்த்து வந்தான்.

வெறும் வயிற்றில் இருவருக்கும் போதை ஜிவ்வென ஏறிற்று. ஒரு கோட்டர் காலியானதும் அடுத்ததையும் நாயம் நொக்கு வாங்கிக் கொண்டு ஊற்றிக் கொண்டார்கள். கடைக்குள் அவர்கள் மிதந்து கொண்டேயிருப்பது போலிருந்தது. பறக்காமலிருக்க டேபிளை கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டியிருந்தது இருவருக்கும். ஐந்தரை மணியைப்போல தூங்கி எழுந்த சாக்னா கடைப்பையன் ஒருவன் இவர்களின் நிலையை பார்த்து வெடிச் சிரிப்பு சிரித்தான். இருவரின் தலையும் கொஞ்சம்போல டேபிள் பார்த்து குனிந்திருந்தது.

சின்னச்சாமி சற்று தெளிவடைந்து, ’கணக்கு எவ்வளவுப்பா ஆச்சு?’ என்றான். கடைப்பையன் நூறு ஆச்சுங்க சார்! என்று சொல்லி சிரித்தான். ஆனால் சின்னச்சாமியோ, இந்த ’கடலைப் பூக்குக்கெல்லாம் எப்படிடா நூறு ஆவும் கேனக்கூதி? போயி ஓனரை வரச்சொல்றா!’ என்றான். பையன் பம்மிக் கொண்டான். பேச்சு சத்தம் வராததால்

சின்னச்சாமியும் சத்தத்தை நிறுத்திக் கொண்டான். வேலுச்சாமியோ, ’ஓனரு வந்துட்டானா சுன்னி!’ என்றான்.

“பங்காளி நாம போலாம் மண்டபத்துக்கு” என்றான் சின்னச்சாமி.

“போலாம் பங்காளி. இது என்ன கணக்குன்னு பாரு”

“ரெண்டு செவனப் பாட்டலு, நாலு கடலை முப்பது ரூவா பில்லு பங்காளி. எங்கிட்ட சில்லரை இருக்குது நீ மொதல்ல வெளிய நட நான் தூங்குறவனை எழுப்பி குடுத்துட்டு வர்றேன்” என்றவன் தள்ளாடிப்போய் பாக்கெட்டில் கையை நுழைக்கவே சிரமப்பட்டு பத்து ரூபாய் நோட்டுகள் மூன்றை கல்லாமேல் வைத்து விட்டு வெளியே சாலைக்கு வந்தான். குளிர் விசு விசுவென வீசிக்கொண்டிருந்தது. டீக்கடையில் விநாயகனே வினை தீர்ப்பவனே! சப்தம் கேட்டது. வேலுச்சாமியும் வெளியேதான் நின்று கொண்டிருந்தான்.

“போலாம் பங்காளி ஆனா காத்தாலகுடி பயங்கரம் பங்காளி. அப்படியே மெதக்குறேன் ரோட்டுல நானு” என்று சொல்லிக் கொண்டே அவர்கள் மண்டபத்திற்கு நடந்தார்கள். மணி ஐந்தரை இருக்கும் போல் இருந்தது. மண்டபத்திலிருந்து இரண்டு கார்கள் வேகமாய் வெளியே சென்றன.

“காத்தால என்ன எழவா உழுந்திடுச்சு இப்படி மைய்யம் பறந்துட்டு போறானுக. பங்காளி இந்த பெட்டிக்கடையில நானு சார்மினார் ஒன்னு ஊதிட்டு வர்றேன்” என்று சின்னச்சாமி பெட்டிக்கடை நோக்கி செல்ல, மண்டபத்தினுள் வேலுச்சாமி நுழைந்தான். உள்ளே மண்டபமே ஆடிப்போயிருந்தது. பொண்ணுப்பிள்ளை நாலு மாத கர்ப்பம் என்று தெரிந்து கொண்ட மாப்பிள்ளை வீட்டார் காறித்துப்பி விட்டு பயணப்பட்டுக் கொண்டிருந்தார்கள். மணமேடையில் மணப்பெண் மயிலாத்தா மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தாள்.

“இங்க என்ன பிரச்சனை?” என்று கேட்டுக்கொண்டு வேலுச்சாமி மண்டபத்தினுள் நுழைந்தான். மாரப்ப கவுண்டர் இவனைப் பார்த்ததும் ஓடி வந்து இவன் காலில் விழுந்தார். இவனுக்கு போதை சற்று நிதானத்துக்கு வந்தது என்பதை விட அப்படி காட்டிக் கொள்ள சிரமப்பட்டான். சனம் அதது பாட்டுக்கு அப்படியாமா! அப்படியாமா! என்றே பேசிக்கொண்டு அங்கங்கே ஒதுங்கி நின்றிருந்தது.

மாரப்ப கவுண்டரின் மனைவி அவள் பெண்ணை மணமேடையிலிருந்து இழுத்து வந்து இவன் காலில் விழச் செய்து அவளும் விழுந்தாள். வேலுச்சாமிக்கு என்ன இங்கு நடக்கிறது என்று

எதுவும் தெரியவில்லை. இருந்தும் என்னவோ நடக்கிறது தான் என்பதை மட்டும் கண்டு கொண்டான். மாரப்ப கவுண்டர் எழுந்து, இவன் கையை பிடித்துக் கொண்டார்.

“எம்பொண்ணு கல்யாணம் நின்னு போச்சுங்க மாப்பிள்ளை! நீங்க தான் என் பொண்ணுக்கு வாழ்க்கை தரணும்” என்றார்.

“வாழ்க்கை தான தரணும் தந்துட்டாப் போச்சு” என்றான் வேலுச்சாமி. அந்த வார்த்தையை கேட்டதும், அவர் தெம்பானார். மண்டபமே அதிரும்படி குரல் கொடுத்தார். “எனக்கு என் மாப்பிள்ளை இருக்காண்டா! அவன் போனா போயிச் சாட்டாறான்”

சின்னச்சாமி மண்டபத்தினுள் வந்து பங்காளி பங்காளி! என்று தேடிக் கொண்டிருந்தான். மணமேடையில் பொண்ணுப் பிள்ளையின் விரல் கோர்த்து மேடையை சுற்றிக் கொண்டிருந்தவனை இவனை நிறுத்தி யாரோ காட்டினார்கள். தலையில் கைவைத்துக் கொண்டு அருகிலிருந்த சேரில் உட்கார்ந்தான் சின்னச்சாமி. ஒரு நிமிடம் தான் உடனே எழுந்தவன் மேடை நோக்கிச் சென்றான்.

“யோவ் மாமா நீயெல்லாம் மனுசனாய்யா! எம்பங்காளி தான் போதையில இருந்தான், என்ன சொல்லிய்யா அவனை மாப்பிள்ளையாக்கிட்டே? இதை இந்த கேனக்கூதிகளும் வேடிக்கை மயிறு பார்த்துட்டு இருந்திருக்கானுக! ஏண்டா உங்க பசங்களை அவளுக்கு கட்டிக் குடுத்துட்டு இப்படி பொம்மைகளாட்ட வேடிக்கை பாக்க வேண்டியது தான. கேட்டா கலியாணங்கிறது ஆயிரங்காலத்து சூத்தும்பீங்க! பங்காளி எறங்குடா கீழ” என்றான். பங்காளி எதுக்கு வந்து சத்தம் போடுறான் என்று புரியாத வேலுச்சாமி மணமகள் மயிலாத்தாவுடன் மணமேடை சுத்துவதை நிறுத்தி விட்டு இவனைப்பார்த்து, ”ஏம் பங்காளி எறங்கச் சொல்றே?” என்றான்.

“உங்கொய்யங்கிட்ட போயி நானு என்னன்னுடா சொல்லுவேன்? அடப்பாப்புரு நாலு மாசம் லோடான புள்ளைக்கி தாலி கட்டித் தொலஞ்சிட்டியேடா! ஏண்டா மாப்பிள்ளை ஊட்டுக்காரனே பிச்சுட்டு போயிட்டான் காறித்துப்பீட்டு. இந்த கருமம் புடிச்சவன் உங்கிட்ட என்னத்தடா சொல்லி தாலி கட்ட வெச்சான். ஏண்டா ஒரு சார்மினார் சிகரெட் குடிச்சுட்டு வர்றதுக்குள்ள கூத்து கட்டிட்டியேடா! உங்கொய்யன் இனி என்னைத்தானடா குத்தம் சொல்லும். பங்காளி பழியெடுப்பான்னு சொல்றது நிசம்டாங்குமே! நானுல்லடா உங்க ஊடு வந்து இந்த கருமம் புடிச்சவன் கலியாணத்துக்கு போலாமுன்னு உங்கொய்யங்கிட்ட சொல்லி இழுத்துட்டு வந்தேன். காதுல இப்படின்னு

கேட்டா உசுரோட இருக்குமாடா உங்கொய்யன்?” ஐய்யோ ஐயொ! என தலையில் அடித்துக் கொண்டான் சின்னச்சாமி.

வேலுச்சாமிக்கு நிலவரம் அப்போது தான் தெரிந்தது. வம்பில் போய் தலையைக் கொடுத்து மாட்டிக்கொண்ட விசயம். பக்கத்தில் நின்றிருந்தவளின் வயிற்றைப் பார்த்தான். அது பட்டுச் சேலையால் மறைந்திருந்தது. மண்டபத்தில் கடப்பாறை விழுந்தால் கூட கேட்குமளவுக்கு நிசப்தம் இருந்தது. முடிந்து போன விசயத்தை இனிப் பேசிக் கொண்டிருப்பதில் எதுவும் ஆகப்போவதில்லை. இது ஆவாது என்று இப்போது ஒதுக்கித்தள்ள அழிச்சாம் புழிச்சாம் விளையாட்டுமல்ல! யாரையும் என்ன ஏதுன்னு கேக்காம மாமஞ் சொல்லுதுன்னு தாலி கட்டிருவியா? என்றே பந்தை திருப்பி அடிப்பார்கள். மேற்கொண்டு பேச எதுவும் இங்கு இல்லை. மாமன் தன் தலையில் மொளகாய் அரைத்து முடித்து விட்டது. இவளும் நடப்பது நடக்கட்டும் என்றே இருந்திருக்கிறாள். இங்கு மாமன் அத்தையை விட திருட்டுக் கொறத்தி இவள் தான்.

“பங்காளி காரு இருக்கான்னு கேளு! இவளை வீட்டுக்கு கூட்டிட்டு போவோம். இந்த மாமங்காரன் என்னோட வீட்டுப்படி எப்பயும் ஏறக்கூடாது. அதே மாதிரி இவன் வீட்டுப்படியில நான் காலை வெக்க மாட்டேன். இவளுக்கு தாலி கட்டுன பாவத்துக்கு வீட்டுல கூட்டிப் போய் வெச்சுக்கலாம். இவ பிள்ளைய இவ பெத்து வளர்த்திக்கட்டும். அப்பன்பேரு என்னுதாவே இருக்கட்டும். ஆனா அதே மாதிரி பேருக்குத்தான் இவளுக்கு நான் புருசன். நான் இவளை தொட மாட்டேன். சங்கட்டமிருந்தா என் வீட்டுல இருந்து இவ சொல்லிக்காம எங்க வேணாலும் போயிக்கலாம்.” வேலுச்சாமி மேடையில் இருந்து இறங்கி மண்டப வாசலுக்கு நடந்தான். பங்காளி பின்னால் செல்ல அவன் பின்னால் மயிலாத்தா சென்றாள்.

# சயனம் 5

காதல் யார்மீது எப்போது வந்து சேரும் என்பது என்பது காதலிப்பவர்களுக்குமே தெரியாது. பாக்கெட்டில் பத்துப்பைசா இருந்தால் கோழிகூப்பிடவே பாட்டுப்பாடத் தோன்றும் என்பார்கள். ஆனால் பாக்கெட்டில் எதுவுமே இல்லாதவன் கூட காதலில் விழத்தான் செய்கிறான். ஊர்ச்சனம் கேள்விப்பட்டால் கூட, அட! என்னடா இந்த கொளத்துப்பாளையத்துக்கு வந்த சோதனை! என்றே ஆச்சரியப்படுவார்கள். டார்ச் விளக்கை பிடித்துக் கொண்டே போய் சிலபேர் வறண்ட கிணற்றில் விழுவார்கள். யாரும் பார்க்கவில்லை என்றால் சூத்து மண்ணைத் தட்டிக்கொண்டு மேலேறி வந்து, நானொன்னும் விழலியாக்கும்! என்று கூட போய் விடுவார்கள்.

வேலுச்சாமிக்கவுண்டரும் காதலில் விழுந்தார் வாலிப வயதில்! நல்லவேளை அவர் ஐய்யன் இதை காதில் கேட்டும் சும்மா இருந்தார். அவர் இப்போது வீட்டுப்புறத்திலேயே நடமாடிக் கொள்வதோடு சரி. அவர் மகன் காதலிக்கும் வீட்டோடு பத்து வருடமாய் அவருக்கு உறவு இல்லை. சுப்பிரமணிக்கவுண்டன் தான் அந்த ஆள். அவன் காட்டில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகள் இவர் காட்டில் நுழைந்து கடலைச் செடிகளை துவம்சம் பண்ணிவிட்டன! வந்ததே கோபம் இவருக்கு. இன்னது தான் பேசவேண்டும் என்றில்லாமல் பேசினார் கவுண்டர். கிராமங்களில் வளர்ப்பு நாய்கள் கோழி பிடித்தது, ஆடு கடித்தது என்றும், ஆட்டுக்குட்டிகள் பயிரை மேய்ந்தன என்றும் வரும் சண்டைகள் தீராப்பகையோடு மாறிவிடுவது கண்கூடாக கண்டவைகள் தான். அது மகன், பேரன் காலம் வரை கூட தொடர்ந்து விடும்.

சுப்பிரமணிக்கவுண்டனோடு நடந்த தகராறின் போது அருகில் மூக்கை ஒழுக்கிக் கொண்டு நின்றவளைத் தான் மகன் ஓரம் பாஞ்சிருக்கான் என்று கண்டு கொண்டும், காதில் கேட்டும் விட்டு விட்டார். ஏற்கனவே வந்த மருமகள் யோக்கிதை ஊரே கேளு நாடே கேளு கதையாகி விட்டது. அவளிடம் இவர் சோறு கூட வாங்கித் தின்பதில்லை. ரோசத்துக்குப் பிறந்தவர் என்று தான் பலகாலம் முன்பே அவரைச் சொல்வார்கள்.

எது எப்படியோ மகன் புத்திசாலித்தனமாய் இன்னொருத்தியை கூட்டிவருவது இவருக்கு சந்தோசம் தான். அதும் சாதியிலேயே கட்டுவது இரட்டிப்பு மகிழ்ச்சி வேறு. அவருக்கு பயமெல்லாம் இத்தனை காலம் மாதாரிச்சி யாரையாவது ஊட்டுக்குள் ஓட்டி வந்து விடுவானோ

என்று தான். அண்ணனோ தம்பியோ வேலுச்சாமிக் கவுண்டருக்கு இருந்திருந்தால் யாரேனும் தட்டிக் கேட்பார்கள். அவர் ஒருவரே!

முப்பது வயதில் அவருக்கு காதல் துளிர்த்த கதை அப்படியொன்றும் பிரமாதமில்லை. அவரது காட்டின் மேற்கு மூலையில் அவர் கோழிப்பண்ணை ஒன்று போட்டிருந்தார். வேலிக்கு அந்தப்புறமாகத்தான் சுப்பிரமணிக்கவுண்டனின் காடு. அந்தப்புறம் யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஒரு நாளும் கவனிக்க மாட்டார். கோழிப்பண்ணை போட்டதிலிருந்து இந்த இரண்டு மாதமாக மாலை நேரங்களில் எட்டிப்பார்த்து விட்டு போவது தினசரி பழக்கமாகி விட்டது. அப்படித்தான் அன்று கோழிகளுக்கு தீவனமும், தண்ணீரும் இருக்கிறதா என்று பார்த்து விட்டு வேலியோரம் போய் ஒன்னுக்கு அடிக்கலாமென வேட்டியைத் தூக்கி விட்டார்.

“ஐய்யோ மாமா கண்ணை முன்னாடி வெக்கவே மாட்டிங்களா?” என்று பெண்குரல் கேட்டு வேட்டியை கீழிறக்கிக் கொண்டார். கிலுவை வேலிக்கு அந்தப்புரமாக சுப்பிரமணிக்கவுண்டனின் பெண் பூரணி நின்று கொண்டிருந்தாள் கையில் ஆடு முடுக்கும் விளாருடன். இவருக்கு பதில் சொல்வதா வேண்டாமா அவளுக்கு என்று குழப்பமாகவும் இருந்தது. போக மாமா என்று வேறு கூப்பிட்டு விட்டாளே!

“என்ன மாமா பேயடிச்ச மாதிரி நிக்கறீங்க? என்னையெல்லாம் யாருன்னு கூட உங்க கண்ணுக்கு தெரியாதே! மாமா நான் பூரணி. சண்டக்காரன் புள்ள கூட எப்படி பேசறதுன்னு யோசிச்சுட்டு நிக்கீங்ளா மாமா? சண்டை என்ன நானா உங்ககூடப் போட்டேன். எங்கப்பன் உங்கய்யனோட போட்டதுக்கு நானென்ன பண்ண முடியும்?” என்றாள். அவருக்கும் அய்யன் போட்ட சண்டை ஞாபகத்துக்கு அப்போது தான் வந்தது. அவளை நன்றாக கிட்டத்தில் வேலிக்கு அந்தப்புறம் பார்த்தார் வேலுச்சாமிக்கவுண்டர். இத்தனை காலம் இவர் கண்ணுக்கு பூரணி சிக்கியதும் இல்லை. அப்படியே அவள் அழகை பார்த்து ரசித்தபடி பேச்சில்லாமல் நின்றார்.

“என்ன என்னையே அப்படி பாக்கீங்க மாமா? மாமன் இப்படி ஊமையா நிக்குதே கெரகம்!”

“ஊமையெல்லாம் இல்ல புள்ள, மாமன் இப்படி அழகா ஒரு புள்ளைய ஊட்டுல வச்சிருக்காருன்னு இத்தனை நாளு எனக்கு தெரியாமப் போச்சு”

“இனி என்னைப் பார்த்து என்ன போறீங்க? அதான் சென்னிமலையில

இருந்து ஒருத்திய கட்டீட்டு வந்துட்டீங்களே. அவன் ஒரு ஆளுன்னு சின்னச்சாமிகூட போனீங்களே மாமா!"

"கட்டுன பாவத்துக்கு கூட்டிட்டு வந்து வீட்டுல சும்மா போட்டிருக்கன் புள்ள! அதுகிட்ட நான் அதிகம் பேசிக்கறது கூட இல்ல இந்த அஞ்சு வருசத்துல. பங்காளி சின்னச்சாமி தான் அப்பப்ப வந்து அவளை கொஞ்சீட்டு போவான். அந்த முதலியாரு பையனுக்கு பெத்திருக்காளே ஒன்னு. அதுக்கும் கிலுகிலுப்பை வாங்கியாந்து ஆட்டிக் காட்டீட்டு போவான்"

"அப்ப ஊரு பேசுறது நெசமா? முடுக்கி உடு மாமா அவளை ஊட்டை உட்டு"

"பாவம் புடிச்சுக்கும் புள்ள அவளை முடுக்குனம்னா! அவளே போயிருவாள்னு பார்த்தேன். அவ போவ மாட்டா. இத்தன வருசமா போவாதவ தான் இனிப்போறாளா? சொல்லு"

"நகை எமுட்டு மாமா அவ போட்டுட்டு வந்தா சென்னிமலையில இருந்து?"

"அதையெல்லாம் யாரு கேட்டா அவகிட்ட! நல்லவேளை இங்க வந்து செத்துக்கித்து வைக்கல அவ. இல்லீன்னா கொன்னு போட்டாங்கன்னு அவங்க வீட்டுல கேசு போட்டு இன்னேரம் களி தின்னுட்டு உள்ளார கெடப்பேன். அதத்தான் வந்ததீம் சொன்னேன். செத்து வெச்சிடாத ஆயா. அப்படி எண்ணமிருந்தா உங்க அப்பனூடே போயி செத்துருன்னுட்டேன்."

"அப்புறம் இங்க பங்காளிய எதுக்கு வீட்டுக்குள்ள உட்டீங்க மாமா?"

"அவ சின்ன வயசு. பங்காளிக்கு என்னைப்பத்தி தெரியும். ஒன்னு சொன்னா அதன்படியே இருப்பேன்னு. இவ வெளிய போயி என் மானத்தை கெடுக்கறதை விட இது இங்க ஊட்டுக்குள்ளயே முடிஞ்சு போயிடுதுல்லோ"

"ஆனா அதையுந்தான் ஊருக்குள்ள பேசிக்கறாங்க! உங்களை யாரும் ஒன்னும் பேசுறதில்ல. சின்னச்சாமியத்தான் மானங்கெட பேசுறாங்க! அவனேதொ காட்டுப்பாளையம் கோயப்பூசாரி புள்ளையோட முத்தம் குடுத்துட்டு திரியறானாமா? கோயலுக்கு மணியடிக்க போயிடுவானாட்ட இருக்குது"

"அவன் அப்படியெல்லாம் மூளை கெட்டவனில்ல புள்ள. சும்மா வேற ஊசி போடறதுக்கு பழகுவான்"

“ஊசி போடறதுக்கா? என்ன மாமா சொல்றீங்க அவனென்ன டாக்டரா ஊசி போட?”

“உனக்கு புரியாது புள்ள உடு”

“சேரி அதான் இல்லீன்னு ஆச்சுங்ளே மாமா வேற புள்ளை பாத்து கட்டிக்க வேண்டிது தான”

“அதான் இப்ப யோசனை பண்ணீட்டு இருக்கேன்”

“இப்பத்தான் யோசனை பண்றீங்களா?’

“உன்னை பார்த்த பொறவுதான் அந்த நெனப்பு வந்துச்சு”

“போ மாமா! குச்சீலயே வேலிக்கு அந்தப்புறம் இடிச்சுடுவேன்” என்று சொல்லிக் கொண்டு குச்சியை வட்டமாய் சுத்திப் போகும் பூரணியை பார்த்தபடி நின்றார் வேலுச்சாமிக் கவுண்டர்.

000000000000

"தேனம்மிணி, இல்ல தெரியாமத்தாங் கேக்கேன், ஆனை வாலைபுடிச்சுட்டு போனா கரையேறலாம்.. ஆட்டு வாலைப் புடிச்சுட்டு போனா கரை சேருவமா?”

“இப்ப என்ன ஆயிப்போச்சுன்னு அப்பாரு நீ பழமொழி சொல்லீட்டு இருக்கே?” என்றாள் பூரணி அப்பாருவிடம். நேரம் மதியத்தை தொட்டிருந்தது. உச்சி வெய்யில் மண்டையை பிளக்க பனைமர நிழலில் பனைக்கு தலை கொடுத்து கால் நீட்டி சாய்ந்து உட்கார்ந்திருந்த ஆரப்ப அப்பாரு தான் இவளும் அவரை நெருங்கி வருகையிலேயே கேட்டிருந்தார்.

“தண்ணிக்கேனு வச்சிருக்கியாம்மிணி, துளி குடு இந்த நாக்கை சித்த நனைச்சுக்கறேன். எழவு வெய்யிலு என்னமா அனலா அடிக்குது! இப்பவே இப்படின்னா இன்னம் மே மாசமெல்லாம் மனுசன் மேல போயிச் சேந்துருவானே” என்றவர் இவள் கையிலிருந்த கேனை வாங்கி சொன்னது மாதிரி குடிக்காமல் மடக் மடக்கென நாலைஞ்சு மொடக்கு குடித்து விட்டுத் தான் இவள் கையில் கேனை கொடுத்தார்.

“ஆடுகல்லாம் மேங்காட்டுல புளியமர நெழல்ல கெடக்குது நீ இங்கயே வண்டியவுத்து வுட்டு கெடக்கே?”

“அது எங்கம்மிணி போயிடப் போவுதுக? பொழுது சாய்ஞ்சாத்தான் ஊடு போற நெனப்பே வரும் அதுகளுக்கு. உம்படதுகெல்லாம் எங்கம்மிணி?”

“அதுகளும் மேஞ்சு வவுத்த நப்புனது போதுமுன்னு புளிய மரத்தடியிலதான் கெடக்குதுக! என்னமோ பழமொழி பாடுனியே அதென்ன?”

“எல்லாரும் நெல்லை உலர்த்துறாங்கன்னு எலி வாலை உலர்த்துச்சாம்ங்ற மாதிரி பண்ணீட்டு இருக்கியே அம்மிணி”

“அடக்கூறு கெட்டதே! நீ பாட்டுக்கு பாட்டா படிச்சா எனக்கென்ன தெரியும்? நீ என்ன சொல்ல வர்றே சித்த சாமி சாமியா இருப்பே நேராச் சொல்லு. ஒருமணிக்கு மேல ஆடுகளை ஓட்டிட்டு போனாத்தான் எங்காயா சத்தம் போடாம இருப்பான்னு உங்கூட சித்த வம்பளந்துட்டு போலாமுன்னு வந்தா நீ என்னை என்னமோ சொல்றியா”

“அதான் ஊரு பூராம் உம்பட நாயம் தான சனம் பேசிக்குது”

“எம்பட நாயம் என்ன பேசுறாங்க? ஊருக்காரங்களுக்கு வேலப்பொழப்பு ஒன்னுமில்லியா? எவ பேசுறா எம்பட நாயத்தை? சொல்லு இன்னிக்கி வந்து நொரை வர தேச்சுட்டுப்போட்டு வந்துடறேன்”

“ஐய்யோ அம்மிணி செங்கப்பள்ளிக்காரி புள்ளை நீ சும்மா உடுவியா பொழந்து கட்டிப்போட மாட்டே!”

“எங்காயா சத்தமெல்லாம் என்ன சத்தம். நாம் போட்டன்னா எட்டு ஊருக்கும் கேக்கும்”

“அந்த வேலுச்சமிக்கவுண்டன் கூட உனக்கென்ன சாவுகாசம்? அவனே ஒரு ராசியில்லாத பய! எதோ ஒரு கூறுகெட்டதை கட்டீட்டு வந்து பங்காளிக்கு உட்டுக்குடுத்துட்டு உக்காந்திருக்கான். அவ பெத்திருக்குற புள்ளை அவ்ளோ செவப்பாம். ஊருக்குள்ள எவளும் அப்படி செவப்பு கெடையாதுங்கறாங்க! அவன் குடும்பத்துக்கும் உங்கொப்பனுக்கும் அப்ப இருந்தே ஆவாது. இந்த விசயத்தை காதுல உங்கொப்பங் கேட்டான்னா உன்னை ஊட்டுக்குள்ளயே கொன்னு பொதச்சிப் போடுவான்”

“எருமை மண்டுச்சுன்னா எறும்புக்கு வெள்ளம் வந்துட்ட மாதிரிதான் தெரியுமப்பாரு”

“நாஞ்சொல்றேன்னு எதும் நெனச்சிக்காத அம்மிணி. காடு தோட்டமெல்லாம் அந்த வேலுச்சாமி பயலுக்கு கிடக்குது. அதை யாரும் இல்லையின்னு சொல்லலை. இப்ப கோழிப்பண்ணை போட்டுருக்கான். மயிற பீ வழிப்பன்னு அங்க ஒருத்தி ஏற்கனவே உக்காந்திருக்கா. காட்டு

வேலைக்கெல்லாம் முன்ன மாதிரி வழுவுல இருந்து யாரு வர்றாங்க சொல்லு பாப்பம்? அந்த காலத்துல எங்க ஆடுகள மேய்க்க பொடுசா புள்ளைக ரெண்டு வந்துச்சுக! வருசக் கூலிக்குத்தான். நோம்பி நொடின்னா புதுத்துணி எடுத்துக் குடுப்பம். இப்ப கோழிப்பீ வழிக்க முத்தாக் கவுண்டன் தோட்டத்துக்கு நீ போறேங்கறே! என்னத்த சொல்ல? யோசனை பண்டிச் செய்யாயா நீ. போனா ரெண்டாந்தாரம்னு ஊரு சொல்லும். அதுக்கா உங்கொப்பன் இத்தனை வருசம் வெச்சு வளத்துனான்?"

"இந்த மேட்டாங்காட்டுல ஆடு மேய்க்கிறன்னு பத்து உருப்படிய வெச்சிட்டு வெய்யில்ல கருகிச் சாவுறதை விட நானு பீவழிச்சுட்டு அங்க கெடந்தா என்ன தப்புங்கறேன்? அப்பியும் யாருக்கு வழிக்கிறேன்? எம்பட ஊட்டுக்காரன் பண்ணையில தான! படிக்கப் போமாட்டன்னு அஞ்சாப்போட நிப்பாட்டிட்டு ஆடு மேய்க்க வந்துட்டேன். வயசு எனக்கு இரவத்தி நாலு ஆச்சு. வர்றவனெல்லாம் பொண்ணு பத்தாப்பாவது படிச்சிருந்தா தேவலன்னு போயிடறான். எங்கப்பன் எனக்கு சோறு போட்டது ஒன்னுதான் செஞ்சது. அவுரு நகையும் வேண்டாம் ஒன்னும் வேண்டாம் நாஞ் செஞ்சு போடறேன் நீ வாடின்னு கூப்புடுறாரு. இந்தக் காலத்துல யாரு சொல்லுவா அப்பிடி?"

"எல்லாம் சரித்தானம்மிணி! அவன் குடிகாரனாப் போயிட்டானே! அவனுக்கு வாக்கப்பட்டு சீரழியறது நானா நீயா?"

"எந்தம்பிகாரன் மட்டும் மணக்குறானா? அவனெல்லாம் எனக்கு நாயம் சொல்றான் ஊட்டுல பொழுதோட தண்ணியப் போட்டுட்டு வந்து! எங்கப்பன் உம்பட காதுல சொல்லி எங்கிட்ட சொல்லிப்பாருன்னு சொல்லியிருக்குது. நீ எனக்கு புத்திமதி சொல்லப் பாக்கே"

"எம்பட காலம் உங்கொப்பங்காலம் எல்லாம் போச்சம்மிணி! நாங்கெல்லாம் வயசு காலத்துல பண்டாத கூத்தா இதெல்லாம்? ஆனா சண்டக்காரனை எப்படி சம்பந்தின்னு கூப்பிடுவான்?"

"எங்கப்பன் கூப்பிட்டா என்ன கூப்பிடாட்டி என்ன எனக்கு. போயி எங்கப்பங்கிட்ட சொல்லு புள்ள ஒரே புடியில தான் பேசுறாள்னு. உம்புள்ள சாதி உட்டு சாதி கட்டீட்டு போனப்ப சும்மாதான பாத்துட்டு இருந்தே! வெட்டி பொதச்சிட்டியா? இப்ப பேரனைக் கொஞ்சீட்டு தான சுத்தறீங்க> காலக் கெரகத்துக்கு பெருச்சாளி காவடி எடுத்துட்டு ஆடுச்சாம்! நானென்ன சாதி தாண்டியா கட்டிக்கறேன்னு நிக்கேன்"

"உங்கோட பேச முடியாதாயா இந்தக் கெழவனால, நீ புடிச்ச

மொசலுக்கு மூனு காலுன்னு புடிவாதமா பேசுறே”

“ஊட்டுல போயி நிம்மதியா ஒரு வாய் சோறு திங்க முடியுதா ஒன்னா? இதே நாயம்! எனக்கு காதே அவிஞ்சு போச்சு! இனி நான் சும்மா இருந்தா சுத்தப்படாது அப்பாரு! உன்னியாட்ட ஊருக்குள்ள இருந்து கூட நாலுபேரு நாயம் சொல்ல வந்துடுவாங்க! பண்டம் ஏங் கெட்டதாம்னா பொழங்காம கெட்டதாம்.. பண்ணை ரக்கிரி ஏங்கெட்டதாம்னா வேவாம கெட்டதாம்ங்ற மாதிரி எம்பட கதை ஆவிப் போயிருமாட்ட! சீக்கிரம் வழி பண்டுறேன்” என்றவள் ஆரப்ப அப்பாரு கூப்பிட கூப்பிட வார்ச் செருப்பை தறக் தறக்கென இழுத்துக் கொண்டு சென்றாள்.

போற வெசையப் பார்த்தால் செங்கப்பள்ளிக்காரி புள்ளை போன சுடிக்கு கழுத்தில் தாலி வாங்கிக்குவாளோ! என்றே நினைத்தபடி தலைக்கு கைத்துண்டை முட்டுக் கொடுத்தார். பக்கத்து பனைமரத்தில் காய்ந்த பனையோலை ஒன்று புண்டு கீழே வந்து விழுந்தது.

000000000000

விடிகாலையில் தான் சுப்பிரமணிக்கவுண்டர் ஆட்டுக் கொட்டாய் கூட்டப்படாமல் புலுக்கைகளோடே கிடப்பதை பார்த்தார். இந்த எழவெடுத்தவளுக்கு ஒடம்புக்கு முடியாமப் போச்சோ என்று நினைத்தவர், பூரணீ! ஏய் பூரணி! என்று சப்தமிட்டார். ஒரு பதிலும் வீட்டினுள்ளிருந்து வராது போனதால், ”இதென்ன என்னிக்கிம் இல்லாத பழக்கமா இருக்கா உனக்கு. உம்பட வெறப்பை வாயில்லா சீவனுக கிட்ட காட்டினா பாவம் புடிச்சுக்கும் புள்ளே! ”என்றார் கையில் கூட்டும் சீமாற்றுக் கட்டையை எடுத்துக் கொண்டே.

இரவு தறிக்குடோனுக்கு போய் வேலை செய்து விட்டு காலையில் நான்கு மணிக்குத்தான் வந்து படுத்த மாரியப்பன் தான் சடவில் எழுந்து வாசலுக்கு வந்தான். அம்மா அடுப்படியில் வேலையாய் இருந்தது.

“தேங் கத்தீட்டு இருக்கே இப்ப தூங்கறவனை தொந்தரவு பண்ணீட்டு” என்று அம்மா அடுப்படியில் இருந்து கவுண்டனுக்கு குரல் கொடுத்தது. ஆனால் அவனே அடுப்படிக்கு வந்து காபிக்காக அமர்ந்தான்.

“டே மாரியப்பா! பூரணி ராத்திரிலயே துணிமணிய எடுத்துட்டு போயிட்டாள்னு நினைக்குறேன். பாயெல்லாம் சுருட்டி வெச்சிருக்கு. எப்ப போனாளோ! உங்கொய்யன் தொண்டுப்பட்டி கூட்டாம கெடக்கறத பாத்துட்டு தன்னப்போல அவளை கூப்டுட்டு இருக்குது”

“போனா அந்த ஆகாவழி ஊட்டுக்குத் தான் போயிருப்பா! போயி

பொடணி மசுத்தை புடிச்சு முதுகுல நாலு கும்மு கும்மி இழுத்துட்டு வர்றேன் பாரு இப்ப. சொல்லியும் கேக்காம காரியத்தை பண்றாள்னா நம்மள சாமார்த்தியம் பாக்குறாள்னு தான அர்த்தம்.” என்று லுங்கியை மடித்துக் கொண்டு கிளம்பியவனை கண்டு அம்மா வாசலுக்கு ஓடி வந்தது. அவன் தன் டிவியெஸ் நிற்குமிடத்துக்கு சென்றான்.

“அட திருவாத்தா அங்க அவன் ஊட்டு வாசல்ல போயி நீயி கத்தி என்ன பிரயோசனம்? நம்ம புள்ள தாண்டா அங்க ஏறீட்டு போயிருக்குது அவனே தான் வேணுமுன்னு! போடா சூத்தை இறுக்கீட்டுன்னு அவளே சொல்லுவா. அவ என்ன சாதாரண கொமுறீன்னு நெனச்சியா! அங்க போவாதடா”

“அதுக்குன்னு சும்மா இருந்துக்கச் சொல்றியா என்னை? இரு போயி என்னுன்னு கேட்டுப் போட்டு வர்றேன். ஆம்பளையா இருந்தா ஊடேறி வந்து பொண்ணு வேணுமுன்னு கேக்கறது அவன்! வருவான்னு தான் இத்தனநாளு பாத்துட்டு இருந்தேன். வந்திருந்தான்னா தெரியும். இப்ப பொட்டப்புள்ளயெ அவன் ஊட்டுக்கே வர வெச்சிட்டான்ல. இந்தக் கருமமும் நாயி சூத்துல தேனிருக்குதுன்னு போயிருக்குது பாரு” என்ற மாரியப்பன் வண்டியை முறுக்கிக் கொண்டு முத்தாக்கவுண்டன் தோட்டத்திற்குச் சென்றான்.

தோட்ட வீட்டில் அக்கா பூரணி இருப்பாள் என்று எதிர்பார்த்து வந்த மாரியப்பன் அங்கு அவள் இருப்பதற்கான அறிகுறி எதும் இல்லாமல் இருப்பதைக் கண்டான். வேலுச்சாமியின் ஐய்யன் தான் மாட்டுச்சாணியை கூடையில் போட்டு குப்பை மேட்டுக்கு தூக்கிப் போய்க் கொண்டிருந்தது..

“என்ன மாப்பிள்ளே எங்க தோட்டத்துப் பக்கம் வாசம் அடிக்குதா? காத்தால பறந்து கட்டீட்டு வந்திருக்கீங்க?” என்றார் சாணியை குப்பை மேட்டில் போட்டபடி.

“எங்கூட்டுல ஒரு ஓடுகாலி கழுதை ஒன்னு இருக்குதுல்லோ! அதுகீது இந்தப்பக்கம் முட்டீட்டு வந்துட்டுதான்னு பாக்க வந்தேன்”

“அப்படியொன்னையுங் காணமா இந்தப்பக்கம்! எங்கூட்டுல ஒரு கழுதையும் அதே வேலை செஸ்சு போடத்தான் ரொம்ப நாளா நோட்டம் போட்டுட்டே திரியுது. அதயுங் காலையில இருந்து காணமுன்னு நானே தேடிட்டு ஊருக்குள்ள வரலாமுன்னு இருந்தேன். நீயே வந்துட்டே பாத்துக்குவே!”

“கழுத கெட்டா குட்டிச் சுவத்துல தான் நிக்கிம். எங்க போயிறப்

போவுது” என்றவன் வண்டியைத் திருப்பிக் கொண்டு முறுக்கி வீடு வந்தான். வீட்டிலோ இவன் அப்பன், ”பட்டி ஆடுகள எல்லாம் வேவாரியக் கூப்புட்டு வித்தெறிஞ்சுட்டு போவ வேண்டியது தான். காலம் போன கடசியில இத்தனை உருப்படிகளை யாரு காட்டுக்குள்ள ஓட்டீட்டு போயி மேச்சுட்டு கெடக்குறது!” என்று இவன் அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார். இவன் நுழைந்ததும் தன் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

“கொமுறி என்ன அங்கயா இருக்கா?” என்றது அம்மா.

“அங்க அந்த தண்டுவனும் இல்லீன்னு அவிங்கப்பன் சொல்றான். ஊரை உட்டே ஓடிப் போயிடுச்சுகளாட்ட இருக்குது” மாரியப்பன் வண்டியை சாலைக்குள் நிறுத்தி விட்டு, காபி ஊத்து நீ மொதல்ல! என்றான்.

ஒரு பத்துமணி இருக்கும் என்றபோது அவர்கள் வீட்டு முன் அம்பாசிடர் கார் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து மாலையும் கழுத்துமாய் பூரணியும், வேலுச்சாமியும் இறங்கினார்கள். கார் வந்த சப்தம் கேட்டே வீட்டுனுள்ளிருந்து இவர்களும் என்னவென பார்க்க வாசலுக்கு வந்தார்கள். மாலையும் கழுத்துமாய் இவர்களை பார்த்ததும் வாசலுக்கும் முன்னால் திறந்து கிடந்த படலை வேகமாய் வந்து சாத்தினான் மாரியப்பன்.

“நான் சொல்றதை கேள்றா மாரியப்பா! இந்த படலை சாத்துற வேலை எல்லாம் வெச்சிக்கிட்டே சுத்தப்படாது பாத்துக்க” என்றாள் பூரணி.

“நீ ஒன்னும் சொல்ல வேண்டாமாயா! அறுத்துட்டு போன மாடு தெக்க போனா என்ன இனி? மேக்க போனா என்ன இனி? அவனெல்லாம் ஒரு ஆளுன்னு போனீல்ல நீயி. இங்கென்ன வேலை?” என்றான். அப்போது வேலுச்சாமி வாயைத் திறந்தார்.

“இங்க பாரு மாரியப்பா! அவன் இவன்னு பேசுற வேலை வெச்சிக்காத! பேசுறதுன்னா உங்கக்காளை மட்டும் பேசிக்கோ! இன்னிக்கி ஒரு வேகத்துல பேசிடலாம் நீயி. நாளைக்கி அது ரொம்ப தும்பமா போயிடும். எல்லாம் இவ பண்ணினது. நாஞ் சொல்லியும் கேக்காம இழுத்துட்டு வந்துட்டா. ஏண்டி இப்படி உன் தம்பி அவன் இவன்னு சொல்றதை கேக்கத்தான் உன்னோட வாசலுக்கு கூட்டிட்டு வந்தியா? எங்கப்பன் எங்காயா எல்லாம் ஒன்னுஞ் சொல்லாதுன்னு கூட்டிட்டு வந்தே! உன் தம்பி என்னடான்னா படலை சாத்தீட்டு லோலாயம் பண்றான்?”

“டேய் எம்பட ஊட்டுக்காரரை ஏண்டா பேசுறே நீயி? நீ யார்றா படலை சாத்துறதுக்கு? எங்கப்பன் சொல்லட்டும். நான் நிமிசம் இங்க நிக்கலை. படலை நீக்கி உடப்பா” என்றாள் பூரணி.

“எங்கே பாக்கலாம் நீக்கி உட்டுடுமான்னு!” என்று மாரியப்பன் சொல்லும் போது, அவரோ ஒன்றும் சொல்லாமல் வாசலிலிருந்து திரும்பி வீட்டுக்குள் சென்றார். ”இனி ஒரு நிமிசம் இங்க நின்னீன்னா உன்ன மிதிப்பேன்!” என்று வேலுச்சாமி காருக்குச் செல்ல பூரணியும் அவர் பின் சென்றாள்.

000000000000

உள்ளூர் குப்புச்சாமி தன் பையனுக்கு கருப்பராயன் கோவிலில் நடு இரவில் காது குத்தி கிடா வெட்டி ஊருக்கே அழைப்பு போட்டிருந்தார். ஒரு சொந்தம் கூட விட்டுப் போய் விடக்கூடாது என்று ஒரு வாரம் முன்பிருந்தே அழைப்பு போட்டிருந்தார். உள்ளூர் சனத்திற்கு முன்தினம் தான் இரவில் வீடு வீடாய் போய் அழைப்பு கொடுத்திருந்தார்.

“ஏப்பா சாமத்துல போய் காது குத்திட்டு கெடாய தூக்கிட்டு வர்றே? சரி காட்டுச் சாமிக்கு சாமத்துல தான் வெட்டணும்பே! ஆமா விருந்து அடுத்த நாளு மத்தியானம் போடறியா?” என்றே ஊரார் சந்தேகமாய் கேட்டிருந்தார்கள். விருந்தையும் கோபிக்கு அருகில் இருக்கும் கோவிலில் போடுவார் என்றால் பஸ் ஏறியல்லவா போய் வர வேண்டும் என்ற கவலை அவர்களுக்கு. இங்கே பண்டம் பாடிகளை பட்டியில் அடைத்து விட்டல்லவா ஏற வேண்டும்! அப்படியெல்லாம் இல்லாமல் குப்புச்சாமி ஊரில் தன் வீட்டிலேயே பத்து மணியிலிருந்து விருந்து தான் என்று சொல்லி விட்டார்.

வேலுச்சாமிக்கவுண்டர் பூரணியோடு வந்து குப்புச்சாமி வீட்டின் ஓரமாய் மரநிழலில் வண்டியை நிறுத்திய போது மணி பனிரெண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. இப்பத்தான் வர்றீங்ளா? என்று சில பெண்கள் பட்டு சேலையில் வெத்தலை போட்டபடி கிளம்பிக் கொண்டிருந்தர்கள். இருவர் பூரணியை தள்ளிக் கொண்டு ஓரம் போய் அவள் வயிறு மேடிட்டிருப்பதைப் பார்த்து, எத்தனை மாசம்? என்றார்கள். ஆறு ஆச்சு! என்று வெட்கமாய் பதில் சொன்னாள் பூரணி அவர்களுக்கு. அப்புறம் உங்கூட்டுக்கு வர்றதே இல்லியாமா? என்று நாயம் பேச ஆரம்பித்தார்கள்.

வேலுச்சாமி கவுண்டரை குப்புச்சாமி தேடிவந்து, ”வா வேலு பக்கத்துல இருக்குற ஆளுகளே இப்படி தாமசமா வந்தா எப்படி?” என்றார்.

“அட நம்மளுக்கு என்னப்ப உள்ளூர்க்காரனுக்கு அவசரம். தூரத்துல இருந்து வந்த ஒறம்பரைகளை கவனிப்பா! ஆமா வெறும் கறிய எப்படி திங்கறதாமா? மேற்படி விசேசம் இல்லியா?” என்றார்.

“கெடா வெட்டுக்கே செலவு கொரவளை வரை இழுத்துப்போடுச்சு வேலுச்சாமி. ஒரு கெடாயி மாமனாரு ஊட்டுல இருந்து குடுத்தாங்க! இன்னொன்னு எங்க பட்டில இருந்து புடிச்சு அறுத்தேன். இப்ப எனக்கு சரக்கு வேணுமுன்னா கொழந்தை கையில சனம் வச்சுக் குடுத்துட்டு போன காசை பொண்டாட்டிகிட்ட நேக்கா கேட்டு வாங்கீட்டு போகணும். அதும் சனம் வந்துட்டு இருக்கப்ப முடியாது பாத்துக்கவே! நீ போனீன்னா ஒரு பாட்டில் வியெஸோப்பி வாங்கீட்டு வந்து முருகேசா!”

“அது சேரி! அப்பனுக்கே ஒட்டுக் கோவணமாம் மகனுக்கு பட்டுக் கோவணம் வேணுமாம். ஆமா எம்பட மச்சினன் உள்ள இருக்கானா? தண்ணியப் போட்டுட்டு அலப்பறை பண்ணுவானே”

“அவன் நெனைக்கானோ இல்லியோ நீ அவனை சொல்லிட்டே இரு எப்பவும். அவனென்ன உன்னை குத்த சூரிக்கத்தியோடயா எந்த நேரமும் சுத்துறான்? இப்படி பயந்து சாவுறியா”

“அட அதுக்கில்லப்பா! இவ வேற மாசமா இருக்கால்ல. கொழந்தையப் பாக்காம பொசுக்குனு போயிட்டன்னா! அவனுக்கென்ன தண்டுவன். கொழந்தை குட்டியா ஒன்னா?”

“சரி சரி ஒறம்பரை வருது. போறதுன்னா சீக்கிரம் போயிட்டு ஒடியாந்துடு. மறந்துறாதே” என்று குப்புச்சாமி வாங்க! என்று வந்தவர்களை வணங்க ஓடினார். வேலுச்சாமிக்கவுண்டர் பைக்கை திருப்பினார் எல்லக்காடு செல்ல! அந்த சமயம் பெண்களோடு பேசிக் கொண்டிருந்த பூரணி இவரிடம் ஓடி வந்தாள்.

“மாமா சொன்னா கேக்க மாட்டீங்ளா? வந்த எடத்துல எதுக்கு உங்களுக்கு அந்த வேலை? ஊட்டுல வாங்கி பொழுதோட குடிச்சிக்கங்களே”

‘அடியேய், கறிய எவனாச்சிம் மத்தியானம் துளி நனைக்காம திம்பானா?. நீ போய் சாப்பிடு. நான் போனதீம் வந்துடறேன்.”

“ வேண்டாம் மாமா!”

“சோலியா கிளம்புறவரை தடுத்து நிறுத்தீட்டு ரோட்டு மேல கொஞ்சட்டமென்ன கொஞ்சட்டம்? இந்த பொண்டாட்டிகளே

இப்படித்தான் மாப்ளே!” என்று வெட்டுக்காட்டு வலசு மாமன் சாடை பேசியது.

“ஆமாங்க மாமா.” என்றார் இவர்.

“இரும்பு புடிச்சவங் கையும் செரங்கு புடிச்சவங் கையும் சும்மா இருக்காது மாப்ளே! போயிட்டு வெறசா வாங்க. கறி மூஞ்சு போச்சுன்னா வம்பாப் போயிடும்” என்றார் அவர் மீண்டும். இவர் வண்டியை எல்லக்காடு நோக்கி கிளப்பினார். எல்லக்காடு பிராந்திக் கடை முன்பாக வண்டியை நிறுத்தி விட்டு சைடு லாக் போட்டு சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

கோட்டர் பாட்டில் ஒன்றை வாங்கிக் கொண்டு சாக்னா கடையில் நுழைந்த போது ஒரு டேபிளில் உள்ளூர் இளவட்டங்களோடு மாரிமுத்து சரக்கடித்தபடி அமர்ந்திருந்தான். அவனை பார்த்தும் பார்க்காதது போல் வேறு டேபிளுக்கு போய் அமர்ந்தார் வேலுச்சாமி. ஒருவன் மட்டும் அந்த டேபிளில் இருந்து பிரிந்து எழுந்து இவரருகில் வந்தமர்ந்தான். டேபிளுக்கு சோடாவும் கடலை பாக்கெட்டும் டம்ளரும் வந்தது. வேலுச்சாமி டம்ளரில் சரக்கை ஊற்றியதும் சோடா கலந்து முதல் ரவுண்டை ஆரம்பித்தார்.

“மாமா குப்புச்சாமி மாமன் காதுகுத்துக்கு வந்தீங்களா?” என்றான் எதிரே அமர்ந்திருந்தவன். இவருக்கு அவனை அப்போது தான் ஞாபகம் வந்தது. முத்துக்குட்டிகவுண்டர் பையன். எங்கோ சேலத்தில் படித்துக் கொண்டிருப்பதாய் சொன்னார்கள். வந்தாலும் ஊரில் கோவில் விசேசம் என்ற நாளில் மட்டும் கண்ணில் படுவான்.

“ ஆமா மாப்பிள்ள! என்ன இந்த வயசுலயே தண்ணி போட ஆரம்பிச்சுட்டியா? படிப்பு என்னாவறது? நாங்கெல்லாம் ஏதோ கையெழுத்து போடற அளவு மட்டும் தான் படிச்சோம். நல்லா படிக்கிற பையனுக்கு இது எதுக்கு?” என்றார்.

“ஆமா மாமா! இந்தக் குடி ஆவாது மாமா! இன்னிக்கோட உட்டுடறேன்” என்றவனை பக்கத்து டேபிளில் மாரியப்பனோடு சேர்ந்து குடித்துக் கொண்டிருந்த பொன்னுச்சாமி, எந்திரிச்சு வாடா இங்க! என்று கூப்பிட்டான்.

“மாமங்கூட ஒரு கட்டிங் போட்டுட்டு வந்துடறேண்டா! இன்னிக்கி உட்டா மாமன் எப்ப சிக்குமோ. மாமன் என்னை குடிய உடச் சொல்லிடுச்சு. இன்னியோட உட்டுடுவேன்” என்றவன் இவர் ஊற்றி வைத்திருந்த அடுத்த ரவுண்டு சரக்கை எடுத்ததும் கடக்கென

அன்னாந்து ஊற்றிக் கொண்டான். இவரும் ஒன்னும் சொல்லவில்லை. சப்ளையரை அழைத்து பணம் கொடுத்து இன்னொரு கோட்டர் வாங்கி வரச் சொன்னார்.

“மாமா ஒரு சிகரெட் குடுங்க மாமா!” என்றான்.

“உம் பேரு என்ன மாப்ளே மறந்து போச்சு”

“எம் பேரை கேட்டு என்ன மாமா பண்டப் போறீங்க? எங்கூட்டுல எங்கக்காவை கட்டிக் குடுத்துட்டோம் மாமா சேலத்துக்கு. நீங்க அவளை கூட்டிட்டு போக முடியாது தெரியுமா! இந்த இளிச்சவாயன் அந்தா உக்காந்துட்டு ஏத்திட்டு இருக்கான்ல மாரியப்பன்.. அவன் அக்காளை தான் உங்களால இழுத்துட்டு ஓட முடியும்” என்றான் அவன்.

அந்த நேரத்தில் தான் மாரியப்பன் மளாரென எழுந்து வந்து இவனைத் தூக்கி, “குடிச்சுட்டா என்ன வேணாலும் பேசுவியாடா நீயி” என்று அவன் காதில் ஒரு அப்பட்டம் போட்டான். “கொன்னே போடுவன். இவங்கக்காளை சேலத்துக்கு என்னமோ இவந்தான் நொட்ட அனுப்பனவனாட்ட பேசுறான்! சரக்கடிச்சுட்டா பிய்யத் திங்கப் போயிடுவியாடா!” என்றபோது மற்ற நண்பர்கள் “உட்றா உட்றா!” என்று பிரித்து இழுத்து விட்டார்கள்.

“ஓ! இன்னிக்கி உம்மட மாமனை ஒன்னு சொல்லீட்டா அடிக்க வந்துட்டியாடா? ”

“எங்களுக்குள்ள ஆயிரத்தெட்டு இருக்கும். நீ எதுக்குடா அதை பேசுறே? வந்தின்னா இறுக்கீட்டு குடிச்சுட்டு போவ வேண்டியது தான! இவனெ எதுக்குடா கூட கூட்டிட்டு வந்தீங்க?” என்று நண்பர்களிடம் பாய்ந்தான். வேலுச்சாமிக்கு ஏண்டா இந்த சிறுவார்கள் குடிக்கையில் அருகில் அமர்ந்தோம் என்றாகி விட்டது. இருந்தும் அடுத்த ரவுண்டை ஊற்றி ஆரம்பித்தார்.

அவர்களோ உடனே முடித்து விட்டு அவசரமாய் இடத்தை காலி செய்தார்கள். இவருக்கு நிம்மதியாய் இருந்தது. மேலும் போதையில் அவன் வாயைக் கொடுத்தால் பெரும் சண்டை தான் ஆகும் இந்த இடத்தில். கடைசியில் நாய் மேல் ஏறி இசிமேல் விழுந்த கதை தான் நடக்கும். இவரும் முடித்து விட்டு வண்டியை எடுக்கையில் கொஞ்சம் கிர்ரென்றிருந்தது மதிய வெய்யலுக்கு.

ஒரு கோட்டர் போதும் என்று தான் வந்திருந்தார். அந்தப்பயல் அரைகட்டிங்கை அடித்ததால் ஒரு கோட்டர் அதிகமாகி விட்டது. டேங்க் கவரில் மணிகண்டனுக்கு வியெஸோப்பி ஒரு கோட்டர் வாங்கி

ஞாபகமாய் வைத்துக் கொண்டார். இப்போது தான் கடைக்குள் நுழைந்து வந்தது மாதிரி இருந்தும் மணி ஒன்றாகியிருந்தது.

விருந்து வீட்டுக்கு வந்து மரநிழலில் வண்டியை நிப்பாட்டினார். இவர் வருவதை பார்த்த குப்புச்சாமி மரத்தடிக்கே வந்து டேங்க் கவரில் கைவிட்டு யாரும் கவனிக்காத சமயம் டக்கென பாட்டிலை எடுத்து பாண்ட் பாக்கெட்டில் சொருகிக் கொண்டார்.

“ஏன் லேட் பண்ணிட்டே முருகேசா! போன உடனே வந்துடுவீன்னு பார்த்துட்டு இருந்தேன். பாதி சனம் வந்து சாப்டுட்டு போயிடுச்சு”

“அதான் நல்லதுடா! சனம் இருந்தா எப்படியிருக்கே! எப்படி போகுதுன்னு கேட்டுட்டே இருக்கும். வாசம் அடிக்குதுன்னு திரும்பி திரும்பி நின்னு பதில் சொல்லிட்டு இருக்கோணும். நெதானமா இப்ப உக்காந்து சவுரியமா சாப்பிடலாம் பாரு! ஊட்டுக்குள்ள போயி துளி ஊத்தீட்டு வாடா சீக்கிரம். உக்காந்து சாப்பிடுவோம். பசிக்குது! நீ சாப்டுட்டியா?”

“இன்னம் இல்லடா ஒரே நிமிசத்துல வந்துடறேன்” என்றவர் பரபரப்பாய் சென்றார். இவர் அவர் வீட்டு வாசலுக்குச் சென்றார். குப்பச்சாமியின் அப்பா வணக்கம் வைத்தார். போயி சாப்பிடு வேலுச்சாமி! என்றார். குப்புச்சாமி சேரில் அமர்ந்திருந்த இவரை வா! என சாப்பாடு பரிமாறும் இடத்திற்கு கூட்டிச் சென்றார். எங்கே கீழே தரையில் பாய் விரித்து கீழே அமர்ந்தபடி சாப்பிட நேருமோ என்று பயந்து தான் நுழைந்தார். நல்லவேளை டேபிள் சேர் வாடகைக்கு எடுத்து போட்டிருந்தார். அப்போது தான் போடப்பட்ட இலையின் முன்பாக மாரியப்பன் தன் கூட்டாளிகளோடு அமர்ந்திருந்தான்.

இவரிடம் லொள்ளு நாயம் பேசிய பையனைக் காணவில்லை. அவனுக்கு எச்சாகி இருக்குமென இவராக நினைத்துக் கொண்டார். அவர்களுக்கு எதிர் வரிசையில் போய் குப்புச்சாமியுடன் அமர்ந்தார் இவர். பந்தி பரிமாறப்பட்டது. சாப்பாடு போடப்போடவே பின்னால் குண்டானில் கறிக்குழம்பு ஊற்றிக் கொண்டு ஒருத்தி சென்றாள்.

மொத்தமாகவே ஏழு பேர் தான் பந்தியில் அமர்ந்திருந்தார்கள். ”சிக்கன் இப்பத்தான் தீர்ந்து போச்சுங்க” என்று குப்புச்சாமிக்கு அந்தப்பெண்மணி சொல்லிக் கொண்டே குழம்பு ஊற்றினாள். இவருக்கும் குழம்பு ஊற்றினாள்.

“ரத்தங்கொடலு பொறியல் இல்லியாக்கா?” என்றார் குப்புச்சாமி.

“எல்லாம் மூஞ்சுது சாமி பச்சுன்னு” என்று கைவிரித்தாள். அப்போது

தான் அது நடந்தது. ”காது குத்துக்கு கெடா வெட்டி விருந்து போடறானுகளாமா! இவன் போட்டா இந்த லட்சண மசுருல தான் போடுவான்! இதையிந் திங்கறக்கு சரக்கை வேற அடிச்சுட்டு வந்துட்டேன்.” என்ற மாரியப்பன் தன் இலையை சளாரென இழுத்து வீசினான்.

“எந்திரிங்கடா வக்கில்லாமயா இங்க வந்தோம்? நம்மூட்டுல போயி வெடக்கோழி ஒன்னை அடிச்சு சாப்பிடுவோம்” எழுந்து போனவன் பின்னால் நான்கு பேர் கிளம்பினார்கள். வேலுச்சாமி தன் இலையை பார்த்தார். குழம்பில் இரண்டு எலும்புத்துண்டுகள் மட்டும் கிடந்தன. அப்போது வெளியில் மாரியப்பன் சப்தம் கேட்டது. அவன் பூரணியிடம் பேசுவது தெளிவாகக் கேட்டது இவருக்கு.

“அக்கோவ்! போயி உம்மட ஊட்டுக்கார்ரை சோத்தை திங்க வேண்டாமுன்னு சொல்லி இழுத்துட்டு ஊடு போ! கறி விருந்து போடறானுகளாமா கறி விருந்து! நாளையிம் பின்னியும் விசேசமுன்னு வந்து கூப்பிடட்டும் பேசிக்கறேன்” இவர் இலையில் கையை வைக்காமல் அமர்ந்திருந்தார். பூரணி ஓடி வந்தாள். வந்து இவர் இலையைப் பார்த்ததுமே அவள் கண்ணில் ஏனோ கண்ணீர் முட்டியது. “எந்திரிங்க மாமா!” என்றாள். ஏனோ குப்புச்சாமியும் இவரிடம் “நீ கிளம்பு முருகேசா” என்றார்.

0000000000000

வேலுச்சாமி தன் குழந்தை வடிவுக்கரசியின் காது குத்து விழாவை உள்ளூர் மாரியம்மன் கோவில் திருவிழா அன்றே வைத்து விட்டார். அழைப்பு வைத்த இடத்திலெல்லாம் ஒரே கேள்வியைத் தான் கேட்டார்கள். புள்ளை என்ன அவள் தாய்மாமன் மடியில உக்காந்து காது குத்திக்கிறாளா? என்று. யாரு மடியில உக்காந்து குத்தினா என்னங்க? காதுக்குள்ள ஊசி ஏறாதா? இல்ல கம்மலு காதுல நிக்காம போயிடுமா! நீங்க வாங்க! விருந்தெல்லாம் தோட்டத்துல தடபுடல் பண்ணிடறேன். சரக்கெல்லாம் யாரும் வாங்கிட்டு வர வேண்டாம். எல்லாம் நானே வாங்கி வச்சிருக்கேன் வீட்டுல! என்றே அழைப்பு போட்டார்.

இவர் அய்யன் கூட, ஒரு வார்த்தை மாரியப்பங்கிட்ட கேட்டுட்டு அப்புறம் பண்ணிக்கடா! என்றார். ஆனால் பூரணி தான் அதை மறுத்து விட்டாள். ரோட்டுல எங்களை மாலயும் கழுத்துமா நிக்க வெச்சுட்டு படலை சாத்தினவன்ல அவன்! அந்த வாசலுக்கு போயி அவனுக்கு மரியாதை குடுத்து கூப்பிடணுமா? அப்படியென்ன நான் என் தம்பிக்கு

துரோகம் பண்ணிட்டேன்? நாலுபேரு ஊர்ல அவனை கேப்பாங்கள்ல! அப்ப தெரியுமில்ல அவனுக்கு!

கோவிலில் மாவிளக்கு பூஜை முடிந்து கிடா வெட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் தான் வேலுச்சாமி தன் சொந்தங்களுடன் இரண்டு கிடாய்களோடு கோவிலுக்கு வந்தார். காது குத்தும் ஊத்துக்குளி பொன்னான் ஆசாரி அரைமணி நேரம் முன்பே வந்து காத்திருந்தான். நாவிதன் தன் சவரக் கத்தியில் புது பிளைடு செருகிக் கொண்டு புங்கை மரத்தடியில் காத்திருந்தான். பூரணி கிக்கத்தில் வைத்திருந்த மகளின் மேல் துணியை அவிழ்த்தாள். வேலுச்சாமியின் சித்தப்பன் மகன் செந்திலின் மடியில் அமர்த்தி மொட்டையடிப்பது என்று முடிவெடுத்திருந்தார். அதற்காக செந்தில் புன்னகையோடு நின்றிருந்தான் பூரணி அருகில். அவன் ஈரோட்டில் கல்லூரியில் முதல்வருடம் போய்க் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் தான் அரை போதையில் மாரியப்பன் தன் டிவியெஸ்சில் வந்தவன் கோவிலை ஒட்டி நின்ற புங்கை மரத்தடியில் வண்டியை நிப்பாட்டினான். நிப்பாட்டியதுமே சப்தமிட ஆரம்பித்து விட்டான்.

“ஒரு வரைமொறை தெரியாம நடந்துக்கறதை இந்த ஊர்ல தான் பாக்கேண்டா ங்கப்பா! ஒரு தாய்மாமன் நான் என்ன செத்தா போயிட்டேன் ஆளுக்காரனை வெச்சு காது குத்த? இதா உசுரோட இருக்கனா! பாத்துடறேன் நானு யார வெச்சு காது குத்துறாங்கன்னு! ஏக்கா நானென்ன செத்தா போயிட்டேன்?” என்று கத்தியவனை நோக்கி ஓடி அவன் வாயில் ஒன்று போட்டாள் பூரணி.

“நோம்பி நாளும் அதுவுமா வாயில என்னத்த பேசுறதுன்னு தெரியாம கோய முன்னாடி பேசுறாம் பாரு பேச்சு! யார்றா உன்னை வேண்டாமுன்னாங்க? யாரு மொதல்ல படலை சாத்தினது?” என்று கேட்டுக் கொண்டிருந்த போதே வேலுச்சாமியும் அந்த இடத்திற்கு வந்தார்.

“ஏங்க மச்சான் நீங்களாச்சிம் என்னை எப்படி உடறதுன்னு எங்கக்காட்ட சொல்லி என்னை கூப்பிட்டு இருக்கலாம்ல! ஏதோ அப்ப எங்கக்கா கலியாணம் பண்டிட்ட கோவத்துல நான் நடந்துட்டன்னா இன்னுமா அதை மனசுல வெச்சுட்டு நீங்க என்னை உட்டுடோணும்?” என்றவன் கண்களில் கண்ணீர்த் துளிகளை பார்த்த வேலுச்சாமிக்கவுண்டருக்கே சங்கட்டமாகி விட்டது.

“அதான் வந்துட்டீல்ல மாரியப்பா உடு. சேரி புள்ளைய வாங்கிக்க” என்றார்.

“வா சாமி! கரைட்டா காது குத்தன்னிக்கி மாமங்கூட சோடி சேர்ந்துட்டியா சாமி” என்று கைகளில் தூக்கிக் கொண்டான் மாரியப்பன்.

000000000000000000000000

இப்படியாக்கொத்த பூரணியும் ஒரு நாள் இவரின் பங்காளி சின்னச்சாமியின் வலையில் வீழ்ந்தாள். அதை மயிலாத்தா தான் இவரிடம் சொன்னது. கண்ணால் காங்காமல் சின்னச்சாமி மீதான எரிச்சலில் கூட மயிலாத்தா சொல்லியிருக்கலாமென இவர் நினைத்து அந்த விசயத்தையே காதில் வாங்கிக் கொள்ளாமல் விட்டிருந்தார். இருந்தும் அவருக்குள் உறுத்திக் கொண்டே தான் இருந்தது.

மயிலாத்தா சொல்லி வாயை மூடிய ஒரே வாரத்தில் வீட்டுக்குள் குதியாளம் கேட்டு சென்றார். பூரணி, ”மாமன் வர்ற நேரம் உட்றா காசி!” என்று குரல் கொடுத்து பின்கட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தாள். சின்னச்சாமி அவளை முடுக்கிக் கொண்டே ஓடினான். இவர் நின்று பார்த்தபோது மயிலாத்தா சமையலறயில் சட்டுவத்தோடு நின்றிருந்தாள்.

அன்று தான் சின்னச்சாமியிடம் அவர், ”பங்காளி நம்ம பழக்கத்தை வெளிய வெச்சுக்கலாம் இனி! தோட்டத்து பக்கம் வராதே!” என்று சொல்லி விட்டார். அதற்கு சின்னச்சாமி, “சரி பங்காளி! ஒன்னும் பிரச்சனை இல்ல!” என்று சொல்லிப் போய் விட்டான். அன்றிலிருந்து பூரணியிடம் படுக்கையில் படுப்பதை நிறுத்திக் கொண்டார் வேலுச்சாமிக்கவுண்டர். பத்துப்பணம் கொடுத்தவன் பாத்துட்டு இருந்தானாம், கொட்டை பாக்கு குடுத்தவன் குத்தீட்டு போனானாம்! பழமொழியின் அர்த்தம் அன்று வேலுச்சாமிக் கவுண்டருக்கு புரிந்தது.

# சயனம் 6

காலம்பற நேரத்திலேயே பூவாத்தா தன் பையன்கள் ராமன், லட்சுமணனை சப்தம் போட்டு கொண்டிருந்தாள். பொன்னுச்சாமிக் கவுண்டருக்கு பையன்கள் கிணத்துவெளிக்கருகில் போனால் பிடிக்காது.அவர் பையன்களை எப்போதும் திட்ட மாட்டார். திட்டு எல்லாமும் பூவாத்தாவுக்குத்தான்.

“இந்தப் பள்ளிக்கோடத்துக்காரனுக எதுக்கு சனி,ஞாயிறு ரீவு உட்டுத் தொலைக்கறாங்கன்னு தெரியறது இல்ல. ரீவுன்னு ஆனா இவனுகள எங்கீன்னு தேடறது?” என்றவள் சாலைக்கு வெளியே வந்து கெணத்துவெளியைத்தான் பார்த்தாள். அங்கு அவர்கள் இல்லை என்று தெரிந்ததும் நிம்மதியாய் அடுப்படிக்கே போனாள். கவுண்டர் தொண்டுப்பட்டியில் சாணி வழித்துக் கொண்டிருந்தார். மாரன் இப்போது தோட்டத்து பக்கம் வந்து நான்கு மாதங்களுக்கும் மேலிருக்கும். அவனும் அவன் பொண்டாட்டியும் வேலைக்கு திருப்பூர் போகிறார்கள். அவன் போனபின் ஆளுக்காரன் யாரையும் கவுண்டர் தோட்டத்திற்கு சேர்த்துக் கொள்ளவில்லை. அப்படிச் சொல்வதை விட ஆளே இல்லை.

பூவாத்தா சத்தமிடும் குரல் அவருக்கு கேட்டது தான் என்றாலும் பையன்கள் அவர் கண் பார்வையில் தான் இருந்தார்கள். அவர்கள் மேற்கே எலந்தைபழ மரத்தையே உலுக்கி பழங்கள் பொறுக்கி தங்கள் டவுசர் பாக்கெட்டை நிறைத்துக் கொண்டிருந்தார்கள். பெரியவனும் சின்னவனும் சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் பள்ளியில் ஏழாவது, ஆறாவது படிக்கிறார்கள்.

பெரியவன் ஒருமுறை கிணற்றில் தவறி விழுந்து விட்டான். அருகிலேயே இவர் இருந்ததால் ஆயிற்று. சின்னவன் கூப்பாடு போட்டு பயந்து இவனும் கிணற்றில் குதித்து விட்டான். இருவருக்கும் நீச்சல் கற்றுக் கொடுக்க அதன்பின் இவர் பட்ட பாடெல்லாம் வீணாயிற்று. சொரப்புரடையை வயிற்றில் கட்டி தூக்கி வீசிய முதல்நாளே இருவருக்கும் காய்ச்சல் கண்டு விட்டது. அவர்களை கிணறு கனவில் மிரட்டிக் கொண்டேயிருந்தது. அவர்களுக்கு இன்றுவரை நீச்சல் தெரியாது. கிணற்றுவெளிப்பக்கம் அதனால் இருவரையும் அண்ட விடமாட்டார் கவுண்டர். மத்தபடி அவர்கள் எங்கு சுற்றினாலும் சரி.

தோட்டத்தினுள் புல்லட் சத்தம் ஒன்று கேட்கவே சாணியை கொண்டி குப்பைமேட்டில் கொட்டிய கவுண்டர் நின்று, யாரது? என்று பார்த்தார்.

அது வேலுச்சாமிக்கவுண்டன் புல்லட் அல்லவா! இவனெதுக்கு இங்க காத்தால வர்றான்? என்று நினைத்தவர் கூடையை அவத்திக்கே போட்டு விட்டு வந்தார். நேராக இவர் வீட்டு வாசலில் கொண்டுவந்து புல்லட்டை நிறுத்திய வேலுச்சாமிக்கவுண்டர், “என்ன பங்காளி அப்படி பாக்கீங்க? நம்மள சும்மா இருக்கத்தான் எவன் உடறான்! ஏதோ ஒரு துக்கத்தை பண்ணி தொலச்சர்றானுக!” என்றார்.

“வாங்க பங்காளி! அதிசயமா இருக்குதுன்னு பார்த்தேன். கெடா விருந்தப்ப தோட்டத்து பக்கம் வந்தீங்க. அப்பறம் இப்பத்தான். வாங்க உக்காருங்க. பூவாயா சேர் எடுத்தாந்து நெழல்ல போடு” என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர்.

“வாங்க” என்று கையில் இரண்டு சேரோடு பூவாயா வந்தவள் வேப்பை மர நிழலில் இரண்டையும் போட்டு விட்டு செம்பில் தண்ணீர் கொண்டுவந்து அவருக்கு கொடுத்தாள். அவரும் சம்பிரதாயத்துக்கு ஒரு மொடக்கு குடித்து விட்டு சொம்பை அவரிடமே நீட்டினார்.

“காபித்தண்ணி கீது வெச்சுறாதெ! காத்தாலயே எழவத்தூக்கீட்டு வீட்டுக்கு வந்துட்டாங்க. நானும் காபிக்கு வதுலா நமஸ்தே பண்ணிட்டேன்”

“ஏதோ பயங்கரமான சோலியோட வந்திருப்பீங்களாட்ட இருக்குதே!” என்றவள் சரி அவர்கள் பேசட்டுமென அங்கிருந்து நகர்ந்தாள்.

“இப்பச் சொல்லுங்க பங்காளி என்ன விசயமா தேடி காத்தாலயே வந்திருக்கீங்க? சோலி இல்லாம சோல்யங் குடுமெ கூட ஆடாதும்பாங்களே!” என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர்.

“நாம நம்ம வேலையப்பாத்துட்டு இருந்தாலும் ஏதோ ஒரு துக்கத்தை கொண்டாந்துடறாங்க பாத்துக்கங்க”

“சும்மா இக்கு வெச்சேதான் பேசிட்டே இருப்பீங்க நீங்க”

“இந்த எழவு நாயத்தை நான் என்னன்னு சொல்லுவேம் பங்காளி. நம்ம சின்னச்சாமி இருக்கான்ல”

“உங்க தோஸ்துன்னு சொல்லுங்க. அதென்ன சின்னச்சாமிங்கறீங்க?’

“அதெல்லாம் அப்போ பங்காளி. இப்ப அவன் தோஸ்த்தும் இல்ல ஒரு மண்ணாங்கட்டியுமில்ல”

“உங்க கிட்ட சண்டைக்கி கிண்டைக்கி வந்துட்டானா? அவம்புத்தி அப்படின்னு போட்டு போங்க”

“உங்களுக்கு ஊருக்குள்ள என்ன நடக்குதுன்னு தெரியறதே இல்லியாட்ட இருக்குது”

“ஊரு நாயம் பேசுனா நமக்கு என்ன வருதுன்னு சொல்லுங்க. ஒரு வா சோத்துக்கு பிரயோசனம் உண்டா? ஊருன்னு இருந்தா நாலு விசயம் நடக்கத்தான் செய்யும். நாம தான் கண்டும் காங்காத மாதிரி போயிக்கோணும்”

“அப்ப உங்களுக்கு விசயம் தெரியுமுன்னு சொல்லுங்க”

“இவ தான் பாலு ஊத்த சொசீட்டி போயிட்டு வந்துட்டு இப்படி பேசிக்கிறாங்கன்னு ஒலறீட்டு இருந்தா. சரி அதை ஒரு நாயமுன்னு உடுளேன்னுட்டேன்.”

“கோயல்பூசாரி புள்ளைய இழுத்துட்டு ஓடுவான்னு நான் கெனா கூட காங்கலீங்க பங்காளி. இப்ப மானம் மருவாதி எல்லாம் போச்சு. அவங்க ஆளுங்க பத்திருபது பேரு வெடியும் மிந்தியே எம்பட வாசலுக்கு வந்துட்டாங்க. கைய வேற நீட்டி நீட்டி பேசுறானுக! இவம் பண்டுன காரியத்தால நாம இனி நாண்டுகிட்டு சாவணுமாட்ட”

“ஓ! அவங்க ஒரு கணக்குல தான் உங்ககிட்ட வந்திருக்காங்க. எந்த நேரமும் பயல் உங்க ஊட்டுலயே கெடந்தானா.. சரி ஊட்டுக்குள்ள தான் ஒளிச்சு வச்சிருப்பீங்கன்னு நெனச்சிருப்பாங்க”

“அவனை தோட்டத்துக்கு வரவேண்டாமுன்னு சொல்லி அஞ்சாறு மாசம் ஆச்சுங்க பங்காளி. அவன் நடத்தை கொஞ்சம் செரியில்ல”

“சரிங்க பங்காளி நான் நம்புறேன். ஆனா ஊரும் அவங்களும் நம்போணுமல்லோ!”

“சரி என்னமோ பண்ணுங்கன்னு உட்டுடலாமுங்கறீங்களா?”

“அதெப்படி அப்படி உட முடியும்? நாளையும் பின்னியும் ஊருல நிமுந்து நாம நடக்க வேண்டாமா? வேண்டாமுன்னா பண்ணிக்கச் சொல்லுங்க அவிங்களை”

“அதைக் கண்டு தான் அவங்களும் இப்படி செஞ்சிடலாமுங்களான்னு கேக்க தோட்டம் வந்துட்டாங்க”

“சரி என்னதான் அப்படி சொன்னாங்க?”

“போலீஸ் ஸ்டேசன்ல போயி புகாரு குடுத்துடறதா சொன்னாங்க”

“என்னன்னு? இந்த மாதிரி எங்க பொண்ணை இழுத்துட்டு ஓடிட்டான்னா! அப்புறம் சந்தேகம் யாரு பேருல இருக்குதும்பான்.

இவங்க உங்கமேலன்னு சொல்லுவாங்க. நேரா காரெடுத்துட்டு உங்களை விசாரிக்க வருவாங்க. அப்புறம் எங்கிட்ட வருவாங்க. வந்து என்ன பண்டப்போறாங்க? நாம கைய விரிப்போம். நமக்கும் தெரிஞ்சாத்தான சொல்லுவோம். ஆமா எங்க இருக்கானாமா அவன் அவளோட? விசாரிச்சீங்களா?"

"அவன் காங்கயத்துல மீசைக்கார மாமனூட்டுல இருக்கானாம். நேத்து காத்தாலயே அவளுக்கு சிவன்மலையில தாலிய கட்டீட்டு அங்க போயி குக்கீட்டான். அவரும் வில்லங்கம் வருமுன்னு அவனை நகர விடாம ஊட்டுலயே போட்டு வச்சிருக்காராம்."

"சரி ஒரு உங்க காரை எடுத்துட்டு போயி ரெண்டு பேரையும் கூட்டிட்டு வந்து நாயம் சொல்லி முடிச்சுட வேண்டிது தான பங்காளி. இதுக்கு ஏன் பம்முறீங்க? கல்லுத்தடத்த காணாதவனும் இல்ல, முள்ளுத்தடத்துல மொணையாதவனும் இல்ல"

"சரிதான் பங்காளி ஆனா அவன் கூட எனக்குத்தான் பேச்சில்லயே! விசயம் தெரிஞ்ச ஒடனே வந்துட்டாம் பாருன்னு நெனைப்பான். அது அப்புறம் எங்க போயி முடியுமோ தெரியாது."

"ஓ! அப்ப அவங்களுக்கு எடத்தை சொல்லிடுங்க. அவங்க காரு போட்டு போயி அவங்க புள்ளைய கூட்டிட்டு வந்துடட்டும்"

"அதுக்கெல்லாம் மீசைக்கார மாமன் ஒத்துக்காது. கால வெச்சீங்கன்னா துண்டாப்போயிடுமுன்னு சொல்லிப்போடுவாப்ல. அப்புறம் போலீசோட போவப் பாப்பாங்க. அவருக்கு மூக்கை சொறிஞ்சு உட்டாப்புல ஆயிப்போயிடும்"

"ஏம்பங்காளி இழுத்துட்டு ஓடி தாலி கட்டுறாப்புல அவ என்ன அப்படி அழகா?"

"வெளக்குமாத்துக்கு பாவாடை கட்டுனாப்புல இருப்பாளுங்க! போக அதுல போயி கையை வச்சிருக்கானே இவன் உருப்படுவானா? அவளுக்கு இன்னம் வயசு வேற சின்ன வயசாம். இன்னம் ஒரு வருசம் போனாத்தான் கலியாணமே பண்டமுடியுமினு ரூல்ஸ் வேற பேசுறானுக வாசல்ல நின்னுட்டு. பொறந்த சர்டிபிகேட்டை வேற ஒருத்தன் கையிலயே வெச்சுட்டு ஆட்டிக் காட்டறான்."

"ஆடறுக்கறவன் கத்தியில்லாம போவ மாட்டான், அடுப்பூதுறவ ஊதுகொளா இல்லாம போவ மாட்டாங்கற மாதிரி அவன் செரியான லோலாயம் புடிச்ச எடத்துல தான் போயி உக்காந்திருக்கான் பங்காளி. இங்க நம்ம மானம் கப்பலேறட்டுமுன்னு வேணுமுன்னேதான்

பண்டியிருப்பான். அவனை நீங்க யாருன்னு நெனச்சீங்க. சிலதுக சும்மாவே பாறைமேல கூட படுத்துக்கும், சிலதுக கவுத்தை கட்டீட்டு படுக்கப்போட்டுக்கன்னு சொல்லும். இந்தப்புள்ள கவுத்துப் பார்ட்டியாட்ட இருக்குது. கட்டி காரியம் பாத்துட்டான். இனி நம்ம வழிக்கு வந்துடுவான் உடுங்க"

"அதான் இன்னிக்கி நீங்க இந்த சோலிய பாத்தா நல்லா இருக்குமுன்னு பாக்கேன்."

"சரி காரெ எடுத்தாங்க பங்காளி. நீங்க கம்முன்னு இருந்துக்கங்க. நானே மீசைக்கார மாமங்கிட்ட பேசி கூட்டியாந்துடறேன். அப்புறம் நாயத்தை ஊர்ல வெச்சுக்குவோம். அவிங்க பிரிய மாட்டோம் சேர்ந்து தான் வாழுவோம்னு பேசுனாங்கன்னா வம்பு தான் பாத்துக்கங்க."

"ஊர் நாயம் வழக்கமா நான் சொல்வேன். இவனுக்கு நான் எது சொன்னாலும் துக்கமாயிடும் பங்காளி. அதனால நீங்க பாத்து நாயம் சொல்லிடுங்க"

"அட என்ன பங்காளி நீங்க அவன் எனக்கும் பங்காளி தான! சரி நான் பாத்துக்கறேன் நீங்க கூட பொம்மையாட்ட இருங்க போதும். சரி குளிச்சுட்டு நான் வந்துடறேன். நீங்க முன்னால உடுங்க." என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர். அவரும் எழுந்து கிளம்பினார்.

வேலுச்சாமிக்கவுண்டர் போன சித்தங்கூரியத்திற்கெல்லாம் அப்புக்குட்டி நாசுவன் சைக்கிளில் தோட்டதிற்கு வந்து சேர்ந்தான். அவனுக்கு கிழமைக்கணக்கு இருக்கிறது. வாரத்தில் சனிக்கிழமை என்றால் பொன்னுச்சாமிக் கவுண்டர் தோட்டத்திற்கு காலையில் வந்து விடுவான். சைக்கிளை கொய்யாமரத்தினடியில் நிறுத்திவிட்டு அடபப்பையை பாரிலிருந்து எடுத்து கிக்கத்தில் வைத்துக் கொண்டான். முகக்கண்ணாடியை கழற்றி வேட்டியில் துடைத்துக் கொண்டு மீண்டும் போட்டுக் கொண்டவன் கன்னம் ஒருபக்கம் பொட்லி மாதிரி புடைத்திருந்தது. அங்கே வெத்திலை பாக்கு பொகையில இருக்கும். மடியில் பொரிக்காகிதத்தில் வெத்திலை பொகையிலையை பொட்டணமாக மடித்து வைத்திருப்பான்.

"எங்கிங்க கவண்டரக் காணமுங்களா?" என்று கேட்டபடி வாசலுக்கு வந்தான் அப்புக்குட்டி.

"தெங்கியோ இப்பத்தான் நின்னுட்டு இருந்தாப்பலடா அப்புக்குட்டி இங்க! கூப்புட்டுபாரு சத்தமா! தோட்டத்துக்குள்ள கீது நின்னுட்டு இருந்தா வந்துடுவாரு. இன்னிக்கி வேற சோலி வந்து

ஏறிக்கெடக்குதுடா அவருக்கு”

‘கவுண்டருக்கு சோலி வந்துட்டே தானுங்க இருக்குமுங்க கவுணுச்சி. பின்ன உங்களையாட்டவே தோட்டத்துலயே சோலிய வெச்சிட்டு இருப்பாரா! தெங்கீங்க இங்க வாலுக ரெண்டு இருக்குமே!”

‘வெடிஞ்சாப்ல காபித்தண்ணி குடிச்சுப்போட்டு ரெண்டு வாலுகளும் போச்சுக! இன்னம் கண்ணுல காங்கலை. நீ வருவீன்னு கண்டுக்கிட்டு தான் ரெண்டும் தூரமா போயிட்டுதுகளோ என்னமோ. முடி வெட்டிக்கறதுக்கு அதுக ரெண்டுக்கும் என்ன மொடையின்னு தெரியில.”

‘அவிங்கெல்லாம் எம்பட கெராப்பு வெட்டு புடிக்காதுன்னு சொல்லுவாங்க கவுணுச்சி! காதுமேல நாலு முடிய உட்டுட்டு, பொடணியிலயும் முடிய உடச் சொல்றாங்க இப்பத்த பசக! எனக்கெல்லாம் வெரல்ல பிடிச்சிப்பாத்தா முடி சிக்கக் கூடாதுங்க! அப்பத்தான் ரெண்டு மாசத்துக்கு கட்டிங்கே போட வேண்டியதில்லாம இருக்கும். இதென்னங்க கவுண்டரே வந்துட்டாரு”

“ஏண்டா அப்புக்குட்டி ஊருக்குள்ள என்னமோ ஓட்டம் புடிச்சுட்டாங்களாமா ரெண்டு பேரு” என்றார்.

‘அதை ஏங் கேக்கறீங் போங்க கவுண்டரே! கவுணுச்சி இருக்காங்கன்னு பாக்கேன், இல்லன்னா நல்லா சொல்லிப் போடுவனுங்க” என்றவன் தொண்டுப்பட்டிப் பக்கம் செங்கல் ஒன்றை தூக்கிக் கொண்டு போனான். அவனுக்கு பொறவுக்கே கவுண்டரும் முக்காலி தூக்கிப் போனார். அவன் கிலுவை வேலியோரமாக செங்கல்லைப் போட்டு உட்கார்ந்தான். அவனுக்கும் முன்னே முக்காலியை போட்டு அமர்ந்தவர் அடப்பப் பையிலிருந்து அவன் எடுத்து கீழே வைத்த முகம் பார்க்கும் கண்ணாடியை எடுத்து முகம் பார்த்தார்.

“சோலி இருக்குற நாளாப் பார்த்து வந்திருக்கே. இல்லீன்னா மூஞ்சில முடியோட போயிருக்கோணும் பாத்துக்க’

“எனக்கென்னங்க கெழமக் கணக்கு தானுங்க. என்ன உங்க பங்காளி நாயமுங்களா?”

“வேற நாயம் எது வந்து சேரும் இப்ப! அதேதான்” என்றவருக்கு தாவாங்கட்டயில் தண்ணிர் போட்டு விரல்களால் கோதினான்.

“உங்க பங்காளி திரியறாப்பலைங்க கூருகெட்டுப்போயி மானத்த

கெடுத்துட்டு! போயும் போயும் அந்த நாத்தக்குழியில போயி உழுந்துட்டாருங்களே! நாலு சனம் காதுல கேட்டா பொச்சுல சிரிக்குமுங்க”

“சரி சரி புது பிளேடு போட்டு இழுத்துடு நீயி. மறந்தாப்புல எவனுக்கோ இழுத்ததை வச்சு ஒப்பேத்தீறாதே”

‘என்னிக்கிங்க கவுண்டரே நானு அப்படி பண்டியிருக்கனுங்க. அதெல்லா காச பொச்சுலயே வெச்சிட்டு நாசுவனுக்கு இல்லீன்னு சொல்றாங்க பாருங்க, அவங்களுக்கு வேணா அப்படித்தான் பண்டுவேன். ஏனுங் கவுண்டரே சாமத்துல அப்படி ஓரமா காட்டுக்குள்ள கூட்டிட்டு போயி செஸ்சு போட்டு போறதை உட்டுட்டு உங்க பங்காளி தென்னுங்க இப்படி பண்டிப்போட்டாப்ல! அதுகெல்லாம் அவரு கூட பொழைக்குமுனு நெனைக்கறீங்களா? அவங்காயா புத்திதானுங்க அப்புடியே இருக்கும் அதுக்கும். அவங்காயா ஆட்டம் இன்னம் அடங்கி இருகுதுன்னு நெனைக்கீங்களா? இன்னம் சாமத்துல காடு காடா சுத்தீட்டு தானுங்க இருக்கா! நாயை கூட்டிவந்து நடு ஊட்டுல உட்டாலும் வாலை ஆட்டறதை உட்டுருமுங்ளா கவுண்டரே!”

“ஏண்டா நீயே கண்ணு தெரியமாட்டீங்குதுன்னு கண்ணாடி போட்டுட்டு இருக்கே! உனக்கு அவ ஆயா காடு காடா சுத்துறது தெரிஞ்சிடுச்சாடா?’

“அதப்போயி என்னை இனி வெளக்கு புடிச்சு பாக்கச் சொல்றீங்களா? கைப்புண்ணுக்கு கண்ணாடி வேணுங்களா?”

“சரி அடுத்ததா யாரு ஓட்டம் புடிக்கப் போறங்கன்னு முந்தியே சொல்லிடுடா அப்புக்குட்டி. மொதல்லயே மெட்டு போட்டு வச்சிடுவோம். போனதுக்கு பொறவு எனக்கு அன்னிக்கே தெரியுமின்னு சொல்லாதே”

“தெரிஞ்சா சொல்லிப் போடுவனுங்க நானு. எம்பட வாயில ஊரு நாயம் ஒன்னும் தங்காது. எங்க செரைக்க போனாலும் வாயை குடுத்து விசயத்தை கறந்துக்கறாங்க! எம்பொண்டாட்டி கூட ஓட்டவா நாயின்னு கூப்புடுறா”

“புள்ளைய கட்டிக்குடித்துட்டியே நல்லா இருக்காளா?”

“ரெண்டு பேரனை பெத்துக் குடுத்துட்டாளுங்க அவ. பையனுக்கு இந்த வருசம் படிப்பு மூஞ்சுதுங்க! அவன் செறைக்க வரமாட்டீங்கறான். நான் இருக்குற வரைக்கும் செரைப்பனுங்க! எம்படகாலம் போச்சுன்னா ஊர்ல நாசுவங் கெடயாது. அவிங்கவிங்களே செரச்சுக்க வேண்டிது

தான்.”

“எப்பிடியோ பையனை படிக்க வெச்சுட்டே!”

“நானெங்கீங்க படிக்க வெச்சேன். எல்லாம் எம் பொண்டாட்டி பண்ண வேலை தான். எங்கீங்க நேராப் பாருங்க. இந்த மீசையை கொஞ்சம் ஒதுக்கிக்கறேன். ஆங்!”

“ஏண்டா டவுன்ல மாதிரி சோப்பு போட்டு நொரை வர ப்ரஸு போட்டு ஜம்முன்னு இழுக்கத் தெரியாதா! அதுல என்ன காசு மூஞ்சு போயிரும் உனக்கு?”

“இதுக்கே கூப்பிட்டா வரமாட்டியாடா நாசுவான்னு ரோட்டுல வச்சு கெட்ட வார்த்தை பேசுறாங்க! எல்லாரும் உங்களை மாதிரியே இருப்பாங்கன்னு நெனச்சிட்டீங்களா கவுண்டரே! உங்களுக்கு போட்டா அவனும் கேப்பான். அப்புறம் எல்லா பண்டிதமும் பண்டி நான் ஒருத்தருக்கு முடிச்சுட்டு போறதுக்குள்ள பொழுது ஓடிப்போயிருமுங்க. சரி உடுங்க. அவிங்க எங்க இருக்காங்களாம் இப்ப?”

“ஏன் நீ போயி கூட்டிட்டு வர்றியா?”

“நானெல்லாம் நாயத்துக்கு வந்தா ஈரை பேனாக்கி பேனை பெருமாளாக்கிருவனுங்க! அதனால தான ஆட்டுக்கு வாலை அளந்து குடுத்திருக்கான் அவன்.”

”பொழுதோட கோயல்ல வெச்சு நாயம் சொல்லி முடிக்க வேண்டியது தான்.”

“நாயம் வேலுச்சாமிக்கவுண்டருங்கள்ல சொல்லுவாரு. எங்கூர்ல விசயத்தை உடப்புடாதுன்னு அவிங்க வேற காச்சு மூச்சுன்னு கத்தீட்டு இருக்காங்க”

“கத்தினா எல்லாம் சுத்தமாயிடுமா? அட அவங்களுக்கும் கேவலம் தான”

“அவங்களுக்கு என்னங்க கேவலம் சம்பந்திம்பாங்க ரோட்டுல போனா உங்களை. சயனஞ் சொல்ற பல்லியே போயி தாழியில உழுந்து செத்த மாதிரி காரியம் தானுங்க இவரு பண்டியிருக்குறது”

‘முடிஞ்சுதாடா! நாம்போயி தண்ணி வாத்துட்டு கௌம்போணும். யாரு சம்மந்தின்னு அப்புறம் ராத்திரி நாயத்துல பாத்துக்கலாம். பசங்களுக்கு கொஞ்சம் வெட்டி உட்டுட்டு போயிடு” என்று எழுந்தார் கவுண்டர்.

“நானென்ன மாட்டேன்னா சொல்றனுங்க. அவங்களை கூப்புட்டு

உக்காத்தி வெச்சுட்டு போங்க! ரெண்டுபேரும் ஒன்னக்கண்டாப்புலயே அப்புக்குட்டிகிட்ட வெட்ட மாட்டன்னு சொல்லுவாங்க!" என்றான். ஆனால் அவர் போட்ட குரலுக்கு புழுதி பறக்க காட்டில் ஓடி வந்தார்கள் இருவரும்.

0000000

இருள் விழும் நேரத்தில் கொளத்துப்பாளையம் மாரியம்மன் கோவில் முன் கணிசமாக கூட்டம் சேர்ந்திருந்தது. பலகாலமாக கோவில் பூஜை செய்து வரும் பண்டாரம் வேலனும் அவன் மனைவியும் அழுது வடிந்து நின்றிருந்தார்கள். அவர்களுக்கு ஒத்தாசையாக அவர்களின் உறவுச்சனம் பத்து உருப்படிகளுக்கும் மேல் நின்றிருந்தது. கோவிலில் கூட்டம் என்றதும் உள்ளூர் சனம் வந்து கோவில் திண்ணையில் அமர்ந்திருந்தது. கோவிலின் இரும்பு கேட் பூட்டியே தானிருந்தது. வீதி விளக்கின் வெளிச்சம் மட்டுமே அங்கிருந்தது. அவர்கள் வேலுச்சாமிக்கவுண்டரின் அம்பாசிடர் காரை எதிர்பார்த்து நின்றிருந்தார்கள்.

ஆளாளுக்கு அங்க போயி கோழி அமுக்கு அமுக்கிப் புடிச்சாங்களாமா! என்று கற்பனையாய் பேசி குசுகுசுத்துக் கொண்டிருந்தார்கள். சின்னச்சாமி அந்தப்பெண்ணை உசுரே போனாலும் உடமாட்டான்! என்றார்கள். அந்தப்பெண்ணை யாரெனப் பார்க்கவும் ஒரு கூட்டம் நின்றிருந்தது. சின்னப்பிள்ளை என்பதால் பிஞ்சிலேயே பழுத்த அந்தப் பழத்தை பார்த்து ரசிக்க ஒரு கூட்டம் பள்ளிக்கூடத்துக்கு அருகில் கார் வந்தால் கிட்டே வரலாமென நின்றிருந்தது.

எல்லோரும் எதிர்பார்த்து நின்றிருந்த அம்பாசிடர் கிழக்கிலிருந்து வந்தது. அது நேரே பள்ளிக்கூடத்தின் வாசலுக்கு சென்று நின்றது. அதை ஓட்டி வந்தவர் வேலுச்சாமிக்கவுண்டர் தான். அவருக்குப் பக்கத்தில் பொன்னுச்சாமிக் கவுண்டர் அமர்ந்திருந்தார். கோவிலில் நின்றிருந்த கூட்டம் பள்ளிக்கூட வாசலுக்கு பொளேரெனச் சென்றது. காரின் முகப்பு விளக்கு அணைந்ததும் காரும் அணைந்தது. கூட்டம் ஓடி வரவும் காரினுள் உள் விளக்கையும் அணைத்தார் கவுண்டர்.

காரின் கண்ணாடி ஜன்னலை இறக்கி கவுண்டர் "போயி பள்ளிக்கூடத்து சாவியை வாங்கிட்டு வாங்கடா யாராச்சிம் சின்னாத்தாகிட்ட!" என்றார். சரீங்க, என்றொருவன் சாவி வாங்கிவர ஓடினான். கவுண்டர்கள் இருவரும் களைத்துப் போன முகத்துடன் காரிலிருந்து இறங்கினார்கள். வறண்ட கிணற்றின் அருகிலிருந்த தெருவிளக்கு பொளிச் பொளிச்சென அணைந்து அணைந்து எரிந்து

கொண்டிருந்தது. அந்த வெளிச்சம் தான் பள்ளியின் முகப்பு கேட் வரை வீசியது. ஊர் நாயம் எதுவென்றாலும் கோவிலில் தான் நடைபெறுவது வழக்கம். ஏதாவது எக்குத் தப்பு ஆகிவிட்டால் கோவில் பூசாரிக்கு சாமி வந்து விடுமென்பதால் பொன்னுச்சாமிக்கவுண்டர் தான் வருகையிலேயே பள்ளியை தேர்ந்தெடுத்திருந்தார்.

பொன்னுச்சாமிக்கவுண்டர் தன் வேட்டியை இறுக்கிக் கட்டிக் கொண்டார். அவர் காலில் ஓடி வந்து பண்டாரம் விழுந்தான். 'என்னடா பழக்கமிது?' என்று கவுண்டர் ஒதுங்கிக் கொண்டார். பண்டாரத்தின் மனைவி அதே சமயம் வேலுச்சாமிக்கவுண்டர் காலில் விழுந்திருந்தாள். 'எம்புள்ளை எங்கீங்க கவுண்டரே?' என்று கதறினாள். எல்லோரும் காரின் பின்சீட்டையே உற்று உற்றுப்பார்த்து ஒன்றும் தெரியாமல் பின்வாங்கிக் கொண்டிருந்தார்கள். சாவி வாங்க ஓடியவன் புயலாய் வந்து கேட்டை நீக்கினான். பள்ளியின் டியூப் விளக்கை வெளியிலேயே சுவிட்ச் இருந்ததால் ஓடிப்போய் போட்டான். ஒரு வகுப்பின் பூட்டைத்திறந்து பிள்ளைகள் அமரும் பெஞ்ச் ஒன்றைத் தூக்கி வந்து படிகளுக்கு கீழே போட்டான்.

பொன்னுச்சாமிக்கவுண்டர் பள்ளியில் நுழைந்தார். அவரின் பின் சனம் உள்நுழைந்தது. வேலுச்சாமிக்கவுண்டர் பள்ளியினுள் நுழையவில்லை. குட்டிகரடு முத்து, சடையறுத்தான், என்று முக்கியமானவர்களும் வந்திருந்தார்கள். போக எல்லக்காட்டிலிருந்து பண்டாரம் எங்கே ஒருதலைப்பட்சமாக பேசுவார்களோ என்று பெரியகவுண்டரையும், ஊர்மணியகார்ரையும் கூட்டி வந்திருந்தான்.

மூன்று நீளமான பெஞ்சுகளை கொண்டுவந்து நொடியில் போட்டான் வரதன். போக, 'மாமா இன்னும் எடுத்து போடவா?' என்று பொன்னுச்சாமிக்கவுண்டரிடம் கேட்டான். வரதன் எப்போது ஊரில் இருப்பான்? எப்போது கிளம்புவான்? என்ன வேலைக்கு போகிறான்? என்று யாருக்கும் தெரியாது. அவன் ஐய்யன் செத்துப்போன ஒருவருடமாகவே ஆள் ஊரில் இருப்பதே இல்லை. சொத்து என்று எதுவும் அவன் ஐய்யன் அவனுக்கு போகையில் விட்டுப் போகவில்லை. வீடு ஒன்று மட்டுமிருந்தது அவனுக்கு. அதுவும் ஐய்யன் செத்தபிறகு பூட்டியே கிடந்தது.

அவன் இருபத்தியாறு வயசிலேயே மூன்று வருடமாய் இருப்பதாக சொல்லிக் கொண்டிருந்தான். எப்படி? என்பவர்களுக்கு மலையாள மந்திரம் அது! என்றான். பில்லிசூனியக்காரனாக மாறிவிட்டானோ என்று ஊரார் அவனைக் கண்டாலும் ஒதுங்கிப் போனார்கள். அவனும்

யாரிடமும் அதிகம் பேச்சும் வைத்துக் கொள்வதில்லை.

ஒருவாரமாக ஆள் ஊரில் இல்லை. மாலையில் வந்தவன் விசயம் கேள்விப்பட்டு வீட்டைக்கூட நீக்காமல் கோவிலிலேயே நின்று கொண்டான். ’போதும் பத்தலீன்னா பாத்துக்கலாம் மாப்பிள்ளை’ என்றவர் பெஞ்சில் அமர்ந்து கொள்ளவும் நாயகாரர்கள் சிலர் இவருக்கு வணக்கம் வைத்து விட்டு வந்து பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார்கள். அவர்கள் வேலுச்சாமிக்கவுண்டர் வந்தால் பிறகு வரலாம் என்று காத்திருந்தார்கள். அவர் காரை விட்டு உள்ளே வராமல் நிற்கவும் அவர் வரமாட்டாரென முடிவு செய்து உள்ளே வந்தமர்ந்து விட்டார்கள்.

சனம் கொடிக்கம்பத்தின் முன் மணலில் உட்கார்ந்து கொண்டது. பண்டாரம் இவர்களின் பெஞ்சின் ஓரத்தில் கைகட்டி நின்றிருக்க அவன் பின்னால் அவன் மனைவி நின்றிருந்தாள். சின்னச்சாமி ஒத்தை ஆளாகப் போய்விட்டதால் அவன் சார்பில் யாரும் வந்திருக்கவில்லை.

“சேரி சட்டு புட்டுனு நாயத்தை என்னன்னு பூசாரிகிட்ட கேக்க வேண்டியது தானுங்க கவுண்டரே?” மணியகாரர் வயிற்றுப்போக்கில் அவதிப்படுபவர் போல நெளிந்து கொண்டு ஆரம்பமாயிருக்கட்டுமென சொல்லி வைத்தார்.

“அதும் செரித்தான். மாப்பிள்ளே வரதா!” என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர். பள்ளியின் மேற்கு மதில்சுவரோரம் பீடி குடித்துக் கொண்டிருந்த வரதன் பீடியை காலில் போட்டு நசுக்கி விட்டு வந்து அவர்ருகில் நின்றான்.

”சொல்லுங் மாமா”

“போயி கார்கிட்ட வேலுச்சாமி இருப்பான். அவங்களை இறக்கி உடச் சொல்லி கூட்டிட்டு வா” என்றார். வரதன் அதற்கும் காலில் சக்கரம் மாட்டியவன் மாதிரி சென்றான். சென்றவன் அவர்கள் இருவரையுமே கூட்டி வந்து பொன்னுச்சாமிக் கவுண்டர் ஓரமாக நிறுத்தினான்.

அந்தப்பெண் குனிந்த தலை நிமிராமல் நின்றிருந்தது. சின்னச்சாமிக்கு அவள் கழுத்து வரைக்கும் தான் இருந்தாள். அவ்வளவு குள்ளம். சின்னச்சாமி முப்பதுக்கும் மேல் வயதானவன். ஆள் குச்சி மாதிரி இருப்பதால் பார்க்க இருபத்தி ஐந்து வயதுக்காரனை போல இருப்பான். அந்தப்பெண் பார்க்க குள்ளச்சிக்கு சேலை கட்டியது போல் இருந்தாள். வயது நிஜமாகவே பதினைந்து தான் இருக்குமென யாரும் சத்தியமே செய்வார்கள்.

பண்டாரத்தின் மனவி திடீரென சாமி வந்தவள் போல தன் பிள்ளையை

நோக்கி ஓடி அவல் கட்டியிருந்த பட்டுச் சேலையை மளமளவென உருவினாள். அது உடும்மா உடும்மா! என்று சேலையை காப்பாற்ற போராடியது. ஆனால் அந்த அம்மாள் கையில் பட்டுச்சேலை மளாரென இருந்தது. தூக்கி உருண்டை பிடித்து தூர வீசினாள் சேலையை. திறந்திருந்த வகுப்பறைக்குள் மகளை அப்படியே தாவித்தூக்கி போயிற்று அந்தம்மாள். சற்று நிமிடத்தில் மகளை வேறு சேலையில் வெளியில் இழுத்து வந்ததும் தன் அருகிலேயே நிப்பாட்டிக் கொண்டது. அந்தம்மாள் மகளுக்கான சேலையை எங்கே இதுநேரம் வரை வைத்திருந்தது? என்பது யாருக்கும் தெரியவில்லை. நாயம் பேச வந்த பெரியமனிதர்கள் உம்மென்றிருந்தார்கள்.

சேலை அவிழ்க்கப்படும் போதே காப்பாற்ற வேண்டியவன் சின்னச்சாமி. ஆனால் அவனும் அதை கண்டு கொள்ளவில்லை. அவன் தலை நிமிர்ந்தே கூட்டத்தினரைப் பார்த்தபடி நின்றிருந்தான். மடியில கனமிருந்தாத் தான வழியில பயமிருக்கும்! என்பது போல நின்றிருந்தான்.

என்ன நடக்கிறது என்பதை வேலுச்சாமிக் கவுண்டர் பள்ளியின் கேட்டில் இரண்டு கைகளையும் வைத்து முகத்தை அதில் முட்டக்குடுத்து பார்த்துக் கொண்டிருந்தார். பண்டாரத்தின் மனைவி அவள் மகளை தன் பக்கம் நிறுத்திக் கொண்டதுமே நாயத்தின் போக்கு தெரிந்து விட்டது அவருக்கு. இவராக இருந்திருந்தால் சொன்னால் சொன்ன இடத்தை விட்டு பிரச்சனைக்குரியவர்கள் நகர முடியாது.

அவரும் பொன்னுச்சாமிக்கவுண்டரும் ஒரு பாட்டில் சென்னிமலையிலேயே வீசிக் கொண்டு தான் வந்திருந்தார்கள். போக பாட்டில்கள் சிலவற்றை தேவைப்படுமென வாங்கி காரில் போட்டு வந்திருந்தார்கள். காரில் போய் அமர்ந்து இன்னொன்றை வீசி விட்டு வந்து நின்று கொள்ளலாமெனத்தான் நினைத்திருந்தார். இருந்தும் உடும்மா! உடும்மா! சப்தம் கேட்டதும் கேட்டுக்கு வந்து நின்று கொண்டார்.

“மாப்ளெ வாங்க ஏனுங் அங்கியே நின்னுட்டீங்க?” என்று இவரைப்பார்த்து எல்லக்காடு பெரிய கவுண்டர் குரல் கொடுத்தார்.

“நீங்க பேசி உடுங்க மாமா!” என்றார் பதிலுக்கு இவரும்.

“நாங்க பிள்ளைய கூட்டிட்டு போறோமுங்க கவுண்டரே!” என்றான் பண்டாரம்.

“அப்பறம் எதுக்கு நாயம் வெக்கோணுமுன்னு சொல்லிட்டு காத்தால

கவுண்டரு கிட்ட வந்தே? என்னமோ போலீசுக்கு போறதா சொன்னியாமா காத்தால! எந்த நாள்டா போலீசு இங்க கொளத்துப்பாளையத்துக்கு வந்திருக்குது? எல்லாம் புதுசா கத்துக்கிட்டீங்களோ? சரி சாமார்த்தியம் இருக்கிறவன் போயி பிள்ளைய தேடி கொண்டாந்திருக்கிறது! பிள்ளையக் கண்டதீம் உன் சம்சாரம் என்னடான்னா நாங்க எல்லாம் இருக்கோம்ங்ற மட்டு மரியாதெ இல்லாம ஓடிப்போயி துணிய அவுக்கறா! என்ன படங்காட்டறாளா எல்லாருக்கும் உம் பொண்டாட்டி?" என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர்.

"தப்புத்தானுங் கவுண்டரே அவளை மன்னிச்சுடுங்க. புள்ளைய பாத்த கோவத்துல பண்ணீட்டா"

"கோவத்துல பண்ணீட்டாளா? அப்ப ஊட்டுல கூட்டிப்போயி பண்ணு. அவளுக்கு தாலி கட்டிட்டு ஒருத்தன் வந்து நிக்கான் இவத்திக்கி. அவனும் என் பங்காளி தான்னு ஊருக்கே தெரியும். அவன் இறுக்கீட்டு கம்முன்னு நிக்கானா! எதாச்சிம் சொன்னானா? சரி தாலி எங்கீன்னு உன் பொண்டாட்டி கிட்ட கேளு" என்றார் அந்தப்பெண்ணின் கழுத்தில் கயிறு இல்லாததைக் கண்டு!

"அதை அத்து எறிஞ்சிட்டனுங்க சாமி அவத்திக்கே!"

"அப்ப இது பொம்மைக் கல்யாணமுன்னு நீயா முடுவு பண்ணீட்டே? அவன் ரெண்டு நாளா கொண்டி வெச்சு சாமத்துல ஒன்னா படுத்துக் கெடந்திருப்பாங்கள்ள, அதை எப்படி அழிச்சுடுவே?" என்று கவுண்டர் கேட்க அந்தம்மாள் சும்மா நின்றிருந்தது.

"சரி சின்னச்சாமி நீ என்ன சொல்றே?"

"நீங்க எது சொன்னாலும் சரிங்க"

"நான் எனத்த சொல்றது? கூட்டிட்டு போறப்ப என்னைக் கேட்டவனாட்ட பேசுறே? உன்னால எத்தன தலைகுனிவுன்னு ஊருல இருக்கறவங்க அத்தன பேருக்கும் தெரியும். ஊருக்கே கேவலமடா! கட்டுக்கூலி புள்ளைய இழுத்துட்டு போயிருக்கியேடா.. அவங்க நம்மை நம்பி பொழைக்கறவங்க. உனக்கு தெரியாது இது? கோயில் சாட்டியாச்சுன்னா உம்மட ஊட்டுக்கு ஒரு வாரமும் இலை கொண்டாந்து போடறாங்கள்ள! உன்னட ஊடு சாத்தியிருந்தாக்கூட திண்ணையில வச்சுட்டு போறாங்க! அரிசி முப்பது படி, பருப்பு ஒரு படி நோம்பி முடிஞ்சதும் வன்னான், நாசுவன், பண்டாரத்துக்கு குடுக்குறீல்ல! இனி வன்னானுக்கு பத்து வயசுல ஒரு புள்ளை இருக்குது.

வயசுக்கு வந்ததும் கூட்டிட்டு ஓடிடு! நாங்க கார் போட்டு கூட்டி வந்து நாயம் வெச்சுக்கறோம்.” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“மாப்பிள்ளே அவனுக்கு விசயமே முழுசா தெரியில போல. போலீஸ் ஸ்டேசன் போனா இப்படி இவன் நிக்க முடியாது. ஜட்டியோட நிக்க வெப்பான். தடியில குண்டியில சத்த் சத்த்துனு இழுப்பான். அந்தப் பிள்ளையையும் உட மாட்டான். அவளுக்கும் உழுகும். மேஜரே ஆகாத பிள்ளைய இழுத்துட்டு போயிருக்கான்.உள்ளார தூக்கிப் போட்டான்னு வெச்சிக்க கெடந்துட்டு தான் வரணும்.” என்றார் மணியகாரர்.

“சரி அந்தப் பிள்ளையை எதுக்கும் ஒரு வார்த்தை கேட்டுக்கங்க. அதுக்கு இவங்கூடத்தான் வாழணுமுன்னு ஆசை இருந்து அதை நாம கெடுத்து, அது ஊடு போயி அரளிக்கொட்டை அறச்சு குடிச்சுப்போடுச்சுன்னா உசுரு போச்சுல்ல!”

‘எங்க புள்ளைக்கி ஒன்னும் தெரியாதுங்க சாமி. அது கொழந்தை. எல்லாம் சின்னச்சாமி ஆசை காட்டி கூட்டிப் போயிருப்பான்.” என்று அந்தம்மாள் கூசாமல் பேசியதும் நாயகாரர்களே சற்று நெளிந்தார்கள். ஏண்டா இந்த நாயத்துக்கு வந்தோமென!

“நானு அந்தப்பிள்ளைய ஏமாத்தணுமுன்னு நெனச்செல்லாம் கூட்டிப் போகலை. அந்தக் கொழந்தை தான் ஓடிப்போற ஐடியாவே குடுத்துச்சு. கொழந்தையாமா!” என்றான் சின்னச்சாமி.

“சரி என்ன நடந்துச்சு, எப்படி நடந்துச்சுன்னு எல்லாம் கதை கேக்க நாங்க வரலை. நீ சொல்லு” என்று பெரியகவுண்டர் அந்தப் பிள்ளையிடம் கேட்டார். அது காதில் ஏறாத்து மாதிரி குனிந்தே நின்றிருந்த்தும் கோபம் வந்து விட்டது அவருக்கு.

“பொட்டக்கழுதெ! மொளச்சி மூனு எலை உடுலெ புருசன் வேணுமுன்னு காங்கயம் வரைக்கும் அவனை இழுத்துட்டு ஓடியிருக்கே! கேக்கறதுக்கு பதிலு சொல்லாம எங்களை எல்லாம் என்ன கேனக்கூதிகள்னு நெனச்சுட்டயா? உம்மட நாயத்தை ஒரு நாயமுன்னு பொழப்பக் கெடுத்துட்டு வந்து உக்காந்துட்டு இருக்கோம். சொல்லுளே வாயத் தொறந்து”

“நானு எங்கம்மா கூடப் போறனுங்க” என்று முனகியது அந்தப்பெண்.

“என்ன எழவச் சொல்றியோ அதெ சத்தமாச் சொல்லுளே எல்லாருக்கும் கேக்குற மாதிரி”

“நானு எங்கம்மா கூடப் போறனுங்க” என்றாள் சப்தமாய்.

“சேரி நீ உம்புள்ளையக் கூட்டிட்டு போடா. உனக்கு இதுல ஒன்னும் சங்கட்டமில்லையே! இருந்தா சொல்லிட்டு போ” என்றார் பெரியகவுண்டர்.

“எனக்கொன்னும் சங்கட்டமில்லிங்க கவுண்டரே! எனக்கு எம்புள்ள வேணுமுன்னு தான் காத்தால புடிச்சு உங்ககிட்டயும் சொல்லிட்டு இருந்தனுங்க. அவிங்க மறுக்காவும் எம்பட புள்ளைகிட்ட பேச்சுக் குடுத்துட்டு நிக்காம இருந்தாப்பலீங்கன்னா போதும்.” என்றான்.

“அதையெல்லாம் நாங்க ஆளு வச்சு பாத்துட்டு இருக்க முடியாது. உம்புள்ளைய நீதான் பொத்தி ஊட்டுல வெச்சுக்கோணும். மறுக்காவும் ஓடனாங்க புடிச்சாங்கன்னா எங்களை தேடிட்டு வந்துடாதே. நீ போலீசுக்கு போவியோ எங்கியோ போய்க்கோ. இதையெல்லாம் ஒரு சோலின்னு நாங்க தேடி அலைஞ்சுட்டு இருக்க முடியாது. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு தான்” என்றார்.

“சரிங்க சாமி அப்ப நாங்க கெளம்பறோம்” என்றவன் நாயகாரர்களுக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு கிளம்பினான். அவன் உறவுச்சனமும் கிளம்பியது பள்ளியை விட்டு. அவர்கள் போனதும் உள்ளூர் சனமும் கிளம்பியது. நாயகார்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் வைத்துக் கொண்டார்கள். சின்னச்சாமி பள்ளியின் படியில் போய் அமர்ந்து பீடி ஒன்றை பற்ற வைத்தான். வரதன் பெஞ்சுகளை தூக்கிப்போய் பள்ளி அறைக்குள் போட்டான். அறையின் கதவை சாத்தி பூட்டு போடுகையில், ”மாமா எங்கிட்ட விசயத்தை சொல்லியிருந்தீங்கன்னா கேரளா மை குடுத்திருப்பேன். அந்தப்பிள்ளை அவ ஆயா கூட போறன்னு சொல்லியிருக்காது.” என்றான். ‘நீ உம்பட பொட்டியச் சாத்து” என்றவன் பீடியை சுண்டியெறிந்தான். பின் எழுந்து பள்ளியின் கேட் தாண்டி காருக்கருகில் வந்து நின்றான். அவனுக்கு சரக்கு வேண்டும் என்றிருந்தது. பள்ளியின் சாவியை பாக்கெட்டில் போட்டுக்கொண்டு வரதனும் காருக்கருகில் வந்தான்.

“மாப்பிள்ளே காருல ரெண்டு பேரும் ஏறுங்க நம்ம தோட்டம் போலாம். சாவியை போறப்ப கெழவிகிட்ட கொடுத்துக்கலாம்” என்று சொன்ன பொன்னுச்சாமிக்கவுண்டர் முன்புறம் ஏறிக் கொள்ள இவர்கள் இருவரும் பின் கதவை நீக்கி அமர்ந்து கொண்டார்கள். கார் கிளம்பிற்று. ஊருக்குள் முட்டி சின்னாத்தா வீட்டின் முன் காரை நிப்பாட்டினார் கவுண்டர். வரதன் இறங்கி ஓடிப்போய் கிழவியிடம் சாவியை கொடுத்து விட்டு வந்து அமர்ந்து கொண்டான்.

“ஏம்மாப்பிள்ள அதென்ன கால்ல சக்கரம் கட்டுன மாதிரி எதுக்கு

ஓட்டம் வச்சிருக்கே?" காரை பொன்னுச்சாமிக்கவுண்டர் தோட்டம் நோக்கி இட்டேறித்தடத்தில் நிதானமாக செலுத்திய வேலுச்சாமிக்கவுண்டர் வரதனிடம் கேட்டார்.

"அதெல்லாம் கேரளா மந்திரமுங்க மாமா! எந்த நேரமும் சுறுசுறுப்பு தான் அதோட மகிமை. நோவு நொடியின்னு நான் படுக்கவே மாட்டேன். எல்லாம் ரத்த சமாச்சாரம். ரத்தம் கெட்டுப்போச்சுன்னா ஒடம்புல நோவு வரும்."

"எல்லாருகிட்டயும் புளுகீட்டு இருக்குறதே உனக்கு வேலையாப் போச்சு மாப்ளே"

"நாஞ்சொன்னா அப்பிடித்தான் சொல்லுவீங்க! அதனால தான் வாயை நான் கம்முன்னு வெச்சிக்கறது"

"சரி என்ன வேலை தான் நீ பண்ணீட்டு இருக்கே? ஒன்னும் தெரியலியே! எப்படி மாப்பிள்ள உனக்கு நாங்க ஒரு பொண்ணு தேடி கலியாணம் பண்டி வெக்கிறது? மொதக் கேள்வியே மாப்பிள்ளை என்ன பண்டீட்டு இருக்காருன்னு கேப்பாங்களே!"

"பொண்ணுக்கு என்னுங்க மாமா பஞ்சம். கேரளாவுல கெடக்குற சேச்சிகள்ள ஒன்னுக்கு செரியின்னு தலையாட்டினேன்னா கையில பணமா திணிச்சு கட்டி வெச்சி அனுப்புவாங்க!"

"அட மாப்பிள்ள நம்ம சாதி சனத்துல கட்டாம எதுக்குப் போயி சேச்சியக் கட்டோணும்?"

"அதனால தான் சேச்சிகளுக்கு புடி குடுக்காம இருக்கேன்." என்று வரதன் சொல்லிக் கொண்டிருக்கவே கவுண்டர் காரை வாசலில் விட்டு திருப்பி வடக்கு பார்த்து நிறுத்தி சாவியை எடுத்துக் கொண்டார்.

"பங்காளி எங்க போயி உக்காந்துக்கலாம். இப்படி ஊட்டுக்கு பொறவுக்கு காட்டுக்குள்ள உக்கோந்துக்கலாமா?" என்றார்.

"சரி பூவாயாகிட்ட டார்ச் லைட் வாங்கீட்டு வர்றேன்" என்றவர் இறங்கிப் போனார் சாலைக்கு.

"உங்க பங்காளி என்ன அப்படியே இறங்காமக் கூட போயிடுவாப்லையாட்ட இருக்கா" என்றாள் பூவாயா. இவர் காரிலிருந்தே பதில் குரல் கொடுத்தார். "பங்காளிக்கும் எனக்கும் காட்டுக்குள்ள சோலி இருக்குதம்மிணி" என்று.

"அது முக்கியம் ரெண்டு பேருக்கும்" என்றவள் சாலைக்குள் செல்ல,

”இப்பத்தான் தூங்கினாங்களா பசங்க” என்றார் அவர்களை பார்த்துக் கொண்டே! டார்ச்சை எடுத்தவர் அதை அடித்துக் கொண்டே காருக்கு வந்தார். அதற்குள் தீம்பண்டங்களையும், பாட்டில்களையும் தூக்கிக் கொண்டு சின்னச்சாமியும், வரதனும் மேற்கே காட்டுக்குள் சென்றார்கள். வேலுச்சாமிக் கவுண்டர் காரின் கதவை சாத்திவிட்டு டார்ச்சை வாங்கி அடித்துக் கொண்டே சென்றார்.

அவர்கள் வட்டமாய் அமர்ந்து முதல் ரவுண்டை ஆரம்பித்தார்கள். அடுத்த ரவுண்டு இறங்கியதும் தான் பேச்சை ஆரம்பித்தார் வேலுச்சாமிக் கவுண்டர்.

“என்ன ஒன்னுமே பேச மாட்டீஙகறீங்க பங்காளி? எதாச்சிம் சொல்லுங்க” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டரிடம்.

“எதாச்சிம் என்ன சொல்றதுங்க பங்காளி. சின்னச்சாமி இப்படி பண்ணதால பண்டாரம் பொண்டாட்டி யோக்கிய நாயம் பேசிட்டு போனாளேன்னு தான் சங்கட்டம். காத்தால தான் நாசுவன் அவ யோக்கிதையை சொன்னான். அவ எல்லாம் நம்மை மதிக்காம அவபாட்டுக்கு தாலியை கழட்டி வீசியிருக்கா! அவளை காட்டுக்குள்ள எவனாச்சியோட சேர்த்து புடிச்சுக்குடு சின்னச்சாமி. அப்புறம் நாயம் வெச்சிக்கறேன்” என்றார் பொன்னுச்சாமிக்கவுண்டர். அவருக்கு உள்ளே போன சரக்கும் மீன்சில்லியும் வேலை செய்யத் துவங்கியிருந்தது.

“அது முடியாதுங்கண்ணா! அவ போறதே நம்மாளுங்க கிட்டத்தான். எம்பங்காளி கூட ஒருக்கா பாத்திருக்காரு அவளை.” என்றான் வேலுச்சாமிக் கவுண்டரை பார்த்தபடி. பொன்னுச்சாமிக் கவுண்டர் தலையில் அடித்துக் கொண்டார்.

“நீ மாமியாளையும் ஓட்டத்தான் புள்ளையப்புடிச்சியாடா?”

“புள்ளைய நானெங்கீங்கண்ணா புடிச்சேன். அதா எங்கிட்ட பேச்சு குடுத்து புடிச்சுது. என்ன பழவினாப்புல புடிச்சு கலியாணம் கலியாணமுன்னெ பேசுச்சு. அதான் ஆனது ஆகட்டுமுன்னு போனேன்”

“அப்புறம் ஏன் அவங்கம்மாவோட போறேன்னு சொல்லிட்டு போயிடுச்சு”

“அதான் எனக்கே தெரியிலண்ணா! கார்ல படிச்சு படிச்சு சொன்னேன் அவகிட்ட. செரி செரின்னு மண்டைய ஆட்டினா. ஆனா அவங்காயாகோட போயிட்டா”

“நீ காரியம் பண்டுனது புடிச்சிருக்காது அவளுக்கு! இது ஆவறதில்லீன்னு போட்டு போயிட்டாளாட்ட இருக்குது”

“ஏன்ணா நீங்க பேசிட்டாலும் பாத்துக்கங்க.”

“சரி எம்பங்காளி ஏன் உன்னை தோட்டத்து பக்கம் வரவேண்டாமுன்னு சொன்னான்?”

“அது உங்களுக்கு எதுக்குங்கண்ணா! எம் பங்காளி வரவேண்டாமுன்னு சொன்னதும் மறுபேச்சு பேசாம நான் போயிட்டேன். நாளைக்கே வாடான்னா போயிட்டுப் போறேன். நாங்க என்ன இன்னிக்கி நேத்தா பழகினோம். அண்ணந் தம்பி மாதிரி பழகியிருக்கோம். அதை உடுங்கண்ணா வேற நாயம் பேசுங்க”

“சரி இப்படியே இருக்கறதுக்கு ஒருத்திய கட்டிக்க வேண்டியது தான நீ?”

“அதெல்லாம் எனக்கு ஆவாதுங்கண்ணா! எல்லாம் சிக்கலு. எனக்கு கலியாண ராசியே கெடயாது. அப்படியே கட்டினாலும் அவ எங்க போறீன்னு கேள்வி கேப்பா! பதிலு சொல்லீட்டு ஒரு பக்கம் போகணும். ஆவாதுங்கண்ணா எனக்கு” என்றான் சின்னச்சாமி.

# சயனம் 7

குமரேசன் ஆசிரியராக பொறுப்பேற்று ஆயிற்று ஒருமாத காலம். இந்த ஒருமாத காலத்தில் ஊரோடும், சக ஆசிரியர்களோடும், குழந்தைகளோடும் அவனுக்கு சுமுகமான ஒட்டுதல் வந்திருந்தது. பள்ளிக்கு மேலும் இரண்டு ஆசிரியர்கள் இந்த ஒரு மாத காலத்தில் புதிதாய் மாற்றல் பெற்று வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் பீட்டர். அவருக்கு வயது இருபத்தியெட்டு தான் ஆகியிருந்தது. அவரின் சொந்த ஊர் கோபி.

அவருக்கு கலியன் தான் காட்டுப்பாளையத்தில் குமரேசனுக்குச் சொன்ன வீட்டை பிடித்துக் கொண்டிருந்தான். கலியனுக்கு அவரை ரொம்பவும் பிடித்திருந்தது. அவரின் க்ரக்ஸை அதிகம் ஊருக்குள் கலியன் தான் ஓட்டிக்கொண்டிருந்தான். தவிர அவர் இரவு நேரத்தில் கலியனோடு யாருக்கும் இது தெரியக்கூடாது என்று கம்பெனி கொடுத்து ஒரு பாட்டில் ஊற்றிக் கொண்டிருந்தார்.

அவர் பள்ளியில் குழந்தைகளுக்கு பாடம் நடத்தும் அழகு தலைமை ஆசிரியருக்கும் மிகவும் பிடித்திருந்தது. அவர் குழந்தைகளோடு குழந்தையாய் மாறி அவர்கள் மொழியே பேசி வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார். குமரேசனுக்கும் அது அப்படி பிடித்திருந்தது. முதல் வகுப்பில் குழந்தைகளிடம் திடீரென நான் யானையாயிட்டேன், நான் பூனையாயிட்டேன், என்று அப்படியே நடித்துக் கொண்டிருந்தார். குழந்தைகள் சந்தோசம் மிகுதியில் முழு நாளும் அவர் தங்கள் வகுப்பிலேயே இருக்க ஆசைப்பட்டார்கள்.

ஆனால் ஐந்தாம் வகுப்பிற்கு பாடம் எடுக்கையில் அவர்களுக்கேற்ப அவர்கள் மண்டையில் ஏறும்படி ஒவ்வொரு பாடத்தையும் நடிக்காமல் ஏற்றிக் கொண்டிருந்தார். வேலை கிடைப்பதற்கு முன் அவர் ஒரு மிமிக்ரி கலைஞராக மேடைகளில் ஏறிக் கொண்டிருந்தவர் என்பதை சக ஆசிரியர்களுக்கு அவர் சொல்லியிருந்தார். அவர் வந்த பிறகுதான் குமரேசனும் தான் எப்போதோ கற்று வைத்திருந்த ஓவியக்கலையை குழந்தைகளுக்கு ஆர்வமாய் கற்றுத்தர ஆரம்பித்திருந்தான். ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்த பட்சம் மூன்று ஓவியர்களை அவன் அடையாளம் கண்டிருந்தான்.

மற்றொருவர் சிந்து. அவர் ஒரு கேள்விக்குறியாக இருந்தார் பள்ளியில். அவருக்கு ஒரு குழந்தை இருந்தது. சொந்த ஊர் திங்களூர் என்றார். கழுத்தில் தாலி இல்லாமல் இருந்தது. ஆனால் மற்ற

ஆசிரியர்களுடன் தேவை என்றால் மட்டுமே பேச்சை வைத்துக்கொண்டு தனிமை விரும்பியாக இருந்தார். அவர் தன் குழந்தை மீனாவை பள்ளியிலேயே முதலாம் வகுப்பில் சேர்த்திருந்தார்.

குழந்தைக்கு வலது காலின் குதி சூம்பிப்போயிருந்தது. அது ஒரு வருத்தமாகக் கூட இருக்கலாமென தலைமை ஆசிரியை மீனாட்சி நினைத்துக் கொண்டார். சிந்து தன் கணவரை விபத்தில் பறி கொடுத்து விட்டதாக சக ஆசிரியர்களிடம் கூறியிருந்தார். அவர் பூட்டியே கிடந்த வரதனின் வீட்டில் பொன்னுச்சாமிக்கவுண்டரின் உதவியால் தங்கியிருந்தார்.

இரண்டுமாத காலமாக வீடே வராத வரதனிடம் அலைபேசியில் பேசி டீச்சருக்கு அவர் அந்த உதவியை செய்திருந்தார். சிந்து அந்த வீட்டில் டிவி. ப்ரிட்ஜ், வாஷிங் மெசின், தன் ஸ்கூட்டி என்று நிரப்பி விட்டார். கொளத்துப்பாளையத்திலிருந்து மீறிப்போனால் இருபது கிலோமீட்டர் இருக்கும் திங்களூருக்கு அவர் தன் அம்மா அப்பாவைப் பார்க்கக்கூட பள்ளி விடுமுறை நாட்களில் செல்லாததை யாரும் கவனிக்கவும் இல்லை.

மூன்று ஆசிரியர்களுடன் பாடங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க முடியாமல் இரநூறுக்கும் மேற்பட்ட மாணவமணிகளை வைத்து சிரமப்பட்டுக்கொண்டிருந்த தலைமையாசிரியை இப்போது மகிழ்ந்து கிடந்தார். அடுத்த வருடம் பள்ளியில் குழந்தைகளின் சேர்ப்பு எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதை உணர்ந்தார். அதை அதிகப்படுத்த வரும் ஆகஸ்டு பதினைந்தில் குழந்தைகளுக்கு போட்டிகள் வைத்து, மாலை வரை உள்ளூரில் பெற்றோர்களை வரவழைத்து சிறப்பிக்க முடிவு செய்தார் சக ஆசிரியர்களுடன் கலந்து.

குழந்தைகளுக்கான பரிசுப்பொருள்களை வழங்க ஸ்பான்சராக ஊருக்குள் பெரிய மனிதர் யாரையேனும் பிடித்து வசூலிக்கலாமா? என்றும் அவர் அந்த அமர்வில் கேட்டார். அப்படி இல்லையென்றாலும் நாமே அந்தத் தொகையை பகிர்ந்து கொள்ளலாமென அவர் சொன்னார். அந்த சமயத்தில் அது சிறப்பான முடிவு என்று பீட்டர் சொன்னார். இருந்தும் ஸ்பான்சராக பிடிக்க முயற்சி எடுக்கிறேன் என்று குமரேசன் சொன்னான். வெற்றிபெற்ற குழந்தைகளுக்கு பரிசுப் பொருள்களை ஊராட்சித் தலைவரை வைத்து மேடையில் வழங்கலாமென ஏக மனதாக முடிவெடுத்தார்கள் அவர்கள் அந்த அமர்வில்.

அதன்படியே ஆயிற்று. குமரேசன் பொன்னுச்சாமிக்கவுண்டரிடம் இப்படி பள்ளி விழா பற்றி தோட்டம் சென்று கூறினான். அவர்

விசயத்தைக் கேட்டதுமே ஐந்தாயிரம் பூவாத்தாவை கொண்டுவரச் சொல்லி குமரேசனிடம் கொடுத்தார். அடுத்ததாக அவன் வேலுச்சாமிக் கவுண்டரிடம் சென்றான். நீங்கெல்லாம் வந்த பெறகு இங்கிலீஸ் பள்ளிக்கூடம மாதிரி பண்ணுறீங்க! என்று சந்தோசப்பட்டு அவரும் ஐந்தாயிரம் கொடுத்தார். அந்தத் தொகையே பள்ளிக்கு போதுமானதாக இருந்தது.

வழக்கமாக பரிசுப்பொருள்கள் என்றால் பென்சில், ரப்பர், சிலேட்டு, ஸ்கெச் கலர், என்பனவற்றிற்கு தொகையில் அதிகம் செலவழிந்து விடாது என்பதால் கூடவே குழந்தைகளுக்கு கழுத்தில் பதக்கம் வழங்கலாம், என்றான் குமரேசன். பள்ளியின் சர்டிபிகேட் வழங்கும் யோசனையை பீட்டர் சொன்னார். அதற்கான ஏற்பாடுகளை செய்ய பீட்டர் சென்னிமலைக்கு மூன்று நாட்கள் அலைந்தான்.

இப்படியான காரியங்களுக்கு ஆளில்லாமல் தான் தலைமை ஆசிரியை மீனாட்சி இத்தனை வருடம் தவித்துக் கொண்டிருந்தார். வருடக்கடைசியில் சுற்றுலாப்பயணம் என்று கூட இனி அவரால் யோசனை சொல்ல முடியும். குழந்தைகளை பத்திரமாய் கவனித்துக் கொள்ள பீட்டரும், குமரேசனும் இருக்கிறார்களே!

எதிர்பார்த்த ஆகஸ்ட் தேதியும் வந்து சேர்ந்தது. வீட்டிலிருந்து பரிசுகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்ள ஒவ்வொரு குழந்தைகளின் பெற்றோர்களும் பள்ளியில் குவிந்திருந்தார்கள். குழந்தைகளிடமும், பெற்றோர்களிடமும், விழிப்புணர்வு ஊட்டும் சொற்களைப்பேச சிறப்பு அழைப்பாளராக ஊத்துக்குளி உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியரும், சென்னிமலை கொமரப்பா செங்குந்தர் உயர்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியரும் வந்திருந்தார்கள். பள்ளியின் முகப்பில் பெரிய மேடை அமைத்திருந்தார்கள். தவிர பெற்றோர்கள் அமர ஊத்துக்குளி ரைஸ்மில்காரர் தன் திருமண மண்டபத்திலிருந்து சேர்களை இலவசமாக அனுப்பியிருந்தார் ஆட்டோவில். அது பீட்டரின் ஏற்பாடு. அதற்கு துணையிருந்தது கலியன்.

குழந்தைகளுக்கான போட்டிகள் என்று காலையிலிருந்து பள்ளி வளாகத்திலேயே நடந்தன. நூறு மீட்டர் ஓட்டப்பந்தயம், இரநூறு மீட்டர் ஓட்டப்பந்தயம் வகுப்பு வாரியாக நடந்தன. தவிர பள்ளியில் இத்தனை நாள் சும்மா கிடந்த செஸ் போர்டு, கேரம் போர்டு இவைகளை எல்லாம் ஒரு மாதம் முன்பாகவே வெளியில் எடுத்து குழந்தைகளுக்கு அந்த விளையாட்டை பெல்லாவும், குமரேசனும் கற்றுத்

தந்திருந்தார்கள். அவற்றுக்கான போட்டிகளும் வகுப்பறைகளில் தனியே நடந்து கொண்டிருந்தன.

நீளம் தாண்டுதல், தட்டெறிதல், குண்டு எறிதல், ஓவியம் வரைதல் என்று போட்டிகள் பல வகையில் நடைபெற்றன. மதியம் மூன்றுமணி என்கிறபோது போட்டிகள் அனைத்தும் நிறைவு பெற்றிருந்தன. வேடிக்கை விளையாட்டு என்று சாக்குப்பையில் கால்களை நுழைத்து குறிப்பிட்ட தூரம் குதித்தபடி ஓடுவது ஆசிரியர்களுக்கே வேடிக்கையாக இருந்தது. குழந்தைகளின் சிரிப்பொலி ஊர்முழுக்க கேட்டது.

கோவில் கொடை ரேடியோவையே பள்ளி விழாவுக்கு பயன்படுத்திக் கொண்டார்கள். ஈரோடு கல்லூரி முதல்வர் ஒருவர் கம்ப்யூட்டர் ஒன்றை பள்ளிக்கு நன்கொடையாக கொடுத்திருந்தார். கம்ப்யூட்டரை இயக்குவதில் ஆசிரியர் சிந்துவுக்கு முன் அனுபவம் இருந்தது. அவர் சர சரவென உள்ளே செல்வதை தலைமை ஆசிரியை ஆச்சரியமாக பார்த்துக் கொண்டிருந்தார். தவிர குமரேசனுக்கும், பீட்டருக்கும் ஓரளவு தெரிந்திருந்தது.

மாலை நான்கு மணியானதுமே குழந்தைகளின் பெற்றோர்கள் பள்ளிக்கு வர ஆரம்பித்திருந்தார்கள். காடு கரையில் நின்றிருந்தவர்கள் அதை ஒதுக்கி விட்டு வர குழந்தைகள் சொன்ன ஒரு பொய்யே காரணமாயிருந்தது. அதை பீட்டர் தான் குழந்தைகளுக்கு காதில் ஓதியிருந்தார். “பள்ளிக்கூடத்துக்கு சாயந்திரம் வரலீன்னா நல்லா படிச்சி பரிட்சை எழுதியிருந்தாக்கூட பெயில் பண்ணி உட்டுருவாங்க!”

பீட்டர் மேடையில் ஏறி பெற்றோர்களுக்கு கயிறு இழுக்கும் போட்டி ஒன்றை அறிவித்தார். போக அவர்களுக்கும் குறிப்பிட்ட தூரம் சாக்கில் கால் நுழைத்து குதித்து ஓடும் போட்டியையும் அறிவித்தார். அது தாமதமாக வரும் ஆட்கள் அனைவரின் நேரத்தையும் சரிப்படுத்த என்று தலைமை ஆசிரியைக்கு பின்னால் தான் தெரிந்தது. அந்த திட்டத்தை பீட்டர் கலியனிடம் முன்தினமே சொல்லியிருந்ததால் வடைக்கயிறும், சாக்குகளையும் அவனே ஏற்பாடு செய்திருந்தான்.

எல்லோரும் வெட்கப்பட்டுக் கொண்டே,நீ போ மாப்ளே! நீ போ பங்காளி! என்று பேசி சாக்கில் கால் நுழைத்து குதித்து ஓட பத்துப்பேர் சேர்ந்தார்கள். அதில் வெற்றி பெற்ற காட்டுப்பாளையம் கிட்டுச்சாமி வெற்றிப்புன்னகையில், “ நானெல்லாம் அந்தக்காலத்துலயே மொசலை தொறத்திட்டு மூனு மைல் ஓடி அதை சங்கடிச்சு ஊட்டுக்கு உசுரோட தூக்கிட்டு வந்தவனாக்கோ!” என்று வீர வசனம் பேசிக் கொண்டிருந்தார். அவர் பெண் ஐந்தாம் வகுப்பில் நூறு, இரநூறு மீட்டர்

ஓட்டப் பந்தயத்தில் முதலாக வெற்றி பெற்றிருந்தது.

கயிறு இழுக்கும் போட்டியில் பங்காளிகள் ஒரு குரூப் என்றும், மாப்பிள்ளைகள் ஒரு குரூப் என்றும் பிரிந்து இழுத்தார்கள். மூன்று முறை அவர்கள் இழுத்து தங்கள் திறமையை நிருபிக்க வேண்டும். மூன்று முறையும் பங்காளிகள் குரூப்பே வெற்றி பெற்றது. மாப்பிள்ளைகள் எல்லாம் சோத்துக்காசிக! என்று அங்கு கேலி ஓடிக் கொண்டிருந்தது.

மேடையில் வரவேண்டியவர்கள் அனைவரும் வந்து அமர்ந்திருந்தார்கள். தொகுப்பாளராக பீட்டர் அனைவரையும் அறிமுகப்படுத்தி அமர்க்களம் செய்தார். நமது தலைவர் ஐயா அவர்கள்! என்று வேலுச்சாமிக்கவுண்டரை அவர் மைக்கில் அழைக்கையில் கவுண்டருக்கே வெட்கம் வந்து விட்டது. கீழே கலியன் விசிலடிக்க ஒரு குரூப் வைத்திருந்தான்.

வெற்றி பெற்ற குழந்தைகளின் பெயரை வரிசையாக வாசித்து மேடையேறி தலைவர் கையால் பரிசு பெறச் செய்தார் பீட்டர். ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு பரிசுகளை இப்போது பொன்னுச்சாமிக் கவுண்டர் ஐயா வழங்குவார்கள்! என்று பீட்டர் அறிவிக்கையில் கலியன் வேலுச்சாமிக் கவுண்டருக்கு போட்ட விசிலை அவருக்கும் போட அவன் வைத்திருந்த வழுவு கையாள்களும் அதை தொடர்ந்தார்கள். இதுவும் முந்தினம் பீட்டர் கலியனிடம் சொல்லியிருந்த திட்டம் தான்.

பரிசுகள் வழங்கப்பட்டபின் குழந்தைகள் கழுத்தில் தொங்கும் பதக்கங்களை தங்கள் பெற்றோர்களுக்கு காட்டி அவர்கள் மடியிலேயே அமர்ந்திருந்தார்கள். பீட்டர் தன் மிமிக்கிரி திறமையை மேடையில் ஒன்றிரண்டு காட்டினார். அதில் மிகச் சிறப்பு என்று பின்னால் பேசிய ஊத்துக்குளி தலைமை ஆசிரியர் விமானம் கிளம்பி வானத்தில் பறக்கும் சப்தம் என்றார்.

கொமரப்பா செங்குந்தர் மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் தன் பேச்சில் குறிப்பிடுகையில் பீட்டரை ஆசிரியராக பெற இந்தப்பள்ளி கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றார். அவருக்கு கரி இஞ்சின் ட்ரெயின் பளாட்பாரத்திலிருந்து கிளம்பி வேகமெடுக்கும் மிமிக்ரி பிடித்திருந்ததாக சொன்னார்.

விழா முடியும் தருவாயை நெருங்கிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட எல்லோருமே ஓரிரு வார்த்தைகள் பேசி முடித்திருந்தார்கள். நேரமும் மாலை ஆறாகியிருந்தது. கடைசியாக பெரியவர்களுக்கான போட்டியில் சாக்கு ஓட்டத்தில் பரிசு பெற்ற கிட்டுச்சாமியை மேடைக்கு

அழைத்தார் பீட்டர். அவருக்கான பரிசு இரநூற்றி ஐம்பது ரூபாயை கவரில் வைத்து கொடுத்தார் பள்ளியின் தலைமை ஆசிரியை. கிட்டுச்சாமி, ஒரு நிமிசம் சார்! என்று மைக்கை வாங்கிக் கொண்டார்.

"அட பிள்ளைங்களுக்கெல்லாம் கழுத்துல வட்ட வட்டமா மாட்டி உட்டுருக்காங்களே நமக்கும் மாட்டி உடுவாங்கன்னு பார்த்தேன். கூப்பிடவே இல்லியா தமாசுக்கு போட்டி வெச்சிருக்காங்கன்னு நானா நெனச்சிட்டேன். ஆனாப்பாருங்க கடேசில எனக்கும் பரிசு குடுத்துட்டாங்க! எம்புள்ள வேற ரெண்டு பரிசு வாங்கியிருக்கா இந்தப் பள்ளிக்கூடத்துல மொதவாட்டியா! அடுத்த வருசம் ஊத்துக்குளியில சேர்த்தலாமுன்னு இருக்கேன்.

இத்தன நாளு ஊருக்குள்ள பொழச்சிருக்கோம் இந்தூரு பள்ளிக்கூடத்துல இப்படி சுதந்திர தினம் கொண்டாடி இன்னிக்கித் தான் பாக்கேன். தலைவருங்க எல்லாம் ஏற்பாடு பண்டுனா சீக்கிரம் ஒரு எட்டாவது வரைக்குமாவது நம்ம ஊர்லயே கொழந்தைங்க படிக்க ஏற்பாடு செய்யுங்க! எந்த பேப்பர்ல எவத்திக்கி கையெழுத்து போடச் சொல்றீங்களோ நான் போடறேன். படிப்பு அரமாலுமே இல்லாமப் போனதாலதான் காடு கரைய வெச்சுட்டு மழை பெய்யுமான்னு மானத்தை பாத்துட்டு இருக்கோம்.

இப்ப என்னடான்னா ரோட்டோரத்துல வறக்காடு வெச்சிருக்குறவிங்கெல்லாம் நாலு பணத்துக்கு வித்துப்போடறாங்க. வாங்குனவிங்க கலரு கலரு கொடிய நெட்டி ஒரு சாலையப் போட்டு உக்காந்துக்கறாங்க. சங்கு நகர்ன்னு எதோ ஒரு பேரை போர்டுல எழுதி குறைந்த விலையில் வீட்டுமனை விற்பனைக்குன்னு போட்டுக்கறாங்க! இப்ப எல்லக்காடு போற வழியில பூராம் டில்லிமுள்ளா கெடந்த எடத்த புல்டோசரை உட்டு நெரவி சவுனாப்பண்டி கொடிய நெட்டீட்டாங்க! நல்லவேளை எனக்கு ரோட்டோரத்துல காடு இல்ல! இந்த மழையப் பாத்துட்டு இருக்குற நேரம் இத்தினிக்கா வித்துக் கொண்டி பேங்குல போட்டிருப்பேன். எல்லாரும் நல்லா இருங்க!" என்று கும்பிடு ஒன்றை கிட்டுச்சாமி வைத்தார். கீழே கைதட்டல் அதிகமாக இருந்தது.

"மாப்பிள்ளே நல்லாத்தான பேசுறே, இன்னம் ரெண்டு வார்த்தை பேசு" என்று கீழிருந்து குரல் வந்தது. "எதுக்கு டீச்சரம்மா வெளாருல என்னை அடிக்கவா?" என்று சொல்லிக் கொண்டு கிட்டுச்சாமி மேடையிலிருந்து இறங்கினார்.

# சயனம் 8

வேலுச்சாமிக்கவுண்டர் தோட்டத்தில் கடலைச்செடி பறிப்பு நடந்து கொண்டிருந்தது. உள்ளூர் வலுவுப் பெண்கள் மூன்று பேர் மட்டுமிருக்க ஒரு வாரத்துக்கு அந்த வேலை இழுக்கும் என்று கவுண்டருக்குப்பட்டதால் கலியனிடம் பெரிய காட்டுப்பாளையத்தில் முடிந்தால் இருவரை கூட்டி வரச் சொல்லியிருந்தார். கலியனும் டிவிஎஸ்ஸை எடுத்துக் கொண்டு பெரியகாட்டுப்பாளைய வழுவில் நுழைந்து கடலைச்செடி பறிக்க ஆள் கிடைக்குமா என்று பார்த்தான். நேரம் வேறு ஒன்பதாகியிருந்ததால் ஊருக்குள் கிழவிகளைத்தவிர யாரையும் கண்ணில் காங்க முடியவில்லை.

தண்ணி பைப் அருகே குடத்தை தூக்கிக் கொண்டு ஒருவள் வடக்குப்பார்த்து சென்று கொண்டிருக்க பைப்படியில் வண்டியை நிறுத்திவிட்டு அவளைத்தொடர்ந்து நடை போட்டான் கலியன். அவள் வடக்கு கடைகோட்டு வீட்டுக்குச் சென்று திண்ணையில் குடங்கள் இரண்டையும் இறக்கி விட்டு குடத்து நீரிலிருந்தே கையில் அள்ளி துளி வாயில் ஊற்றி கொப்பளித்துத் துப்பினாள் வாசலில்.

அவள் வாசலுக்கு இவன் போய் நின்று அவளை உற்றுப்பார்த்தான். பெரியகாட்டுப்பாளையத்தில் இப்படி சிவத்த நிறத்தில் காதில் தொங்கட்டான் மாட்டி குதிரைக்குட்டி போல் ஒருத்தி இருப்பது இத்தனை காலம் இவனுக்கே தெரியவில்லையே!

“ஒகுரு நுவ்வு?” என்றாள்.

“இல்ல ஊர்ல யாரையும் காணுமே. காட்டுவேலைக்கி கொளத்துப்பாளையத்துக்கு ரெண்டு பொம்பளையாளுகளை கூட்டிட்டு போலாம்னு வந்தேன். தலைவரு காட்டுல நாலு நாளைக்கி கடலை புடுங்கற வேலை இருக்குது”

“ரெண்டுபேரு இருந்தாப் போதுமா? நானும் எங்கம்மாளும் தான் இருக்கோம். மத்தவங்க எல்லாம் ரோட்டு வேலைக்கி போயிட்டாங்க”

“டிவியெஸ்சை அங்க பைப்படிக்கிட்ட நிறுத்தியிருக்கேன். அதுலயே கூட்டிட்டு போயி கொண்டாந்தும் உட்டுடறேன்”

“நான் இன்னும் சோறு குடிக்கலியே! குடிச்சுட்டு வாறேன். சம்பளம் எப்படி குடுப்பாரு உங்க கவுண்டரு?”

“நூத்தம்பது குடுப்பாரு”

“என்ன இமுட்டுத்தான் பறிச்சீங்களான்னெல்லாம் உங்க கவுண்டரு கேப்பாரா?”

“கிட்டக்கூட வந்து எட்டிக்கூடப் பாக்க மாட்டாரு. அதுக்காவ பொச்ச நெளிச்சுட்டு உக்காந்துட்டு சம்பளம் வாங்கிட்டு போகணுமா? குடுக்குற காசுக்கு வஞ்சகமில்லாம வேலை செஞ்சாப் போதும்”

“அதெல்லாம் எங்களுக்குத் தெரியும். ஆமா நீங்க கொளத்துப்பாளையமா? பாத்ததே இல்ல!” என்றவள் கதவு நீக்கி உள்சென்று வட்டிலில் சோறு போட்டுக்கொண்டு வந்து திண்ணையில் உட்கார்ந்தாள்.

“நானும் உன்னிய பாத்ததே இல்லயேன்னு தான் இன்னாவரைக்கும் யோசனை. மாரன் பையன்னா தெரியும்”

“எனக்கு அங்க ஒருத்தரையும் தெரியாது. எங்கம்மாளுக்கு வேணா தெரிஞ்சிருக்கும். சரி என்னையே பாத்துட்டு நிக்காதே. வவுத்து வலி வந்துரும் எனக்கு. ஆமா நீ இப்ப கண்ணடிச்சியா?”

“இல்லியா”

“பாரு மறுக்காவும் ஒத்தை கண்ணை சிமுட்டுறே அப்புறம் இல்லீங்கறே?”

“எம்பட கண்ணே அப்படித்தான் சிமிட்டீட்டே இருக்கும். நான் வண்டிக்கிட்ட போயி நிக்கேன். உங்கொம்மாளை காணமா இங்க”

“எங்கம்மா போற வழியில கெழக்கால வீட்டுல இருக்கும். அப்பிடியே ஏத்தீட்டு போயிக்கலாம்” என்று அவள் சொன்னதும் வண்டிக்கு திரும்பியவன் “உம் பேரு என்ன?” என்றான்.

“உம்பேரை மொதச் சொல்லு. அப்புறம் எம்படதை சொல்றேன்”

“எம் பேரு கலியன்”

”உம்பேரு நல்லாத்தான் இருக்குது எம் பேரு ராசாமணி” என்றாள். இவன் பைப்படிக்கு வந்து நின்றான். அவள் தூக்குப்போசி ஒன்றை கையில் தூக்கிக்கொண்டு குடு குடுவென சித்தங்கூரியத்தில் வந்தாள். வந்தவள் அவனை பின்னால் வரும்படி சைகை காட்டி விட்டு கிழக்கே சென்றாள். கிழக்கே ரோட்டுக்கும் அருகிலிருந்த முதல் வீட்டினுள் நுழைந்தவள் அவள் அம்மாளை கூட்டிக் கொண்டு வெளியே வந்தாள். வீட்டை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டவள், ’ஸ்டார்ட் பண்டுங்க போலாம்’ என்றாள். இவன் வண்டியை கிளப்பி காலை நன்றாக

ஊனிக்கொண்டான். நடுப்புறமாக ராசாமணி வந்து உட்கார்ந்து கொள்ள அவள் அம்மா அடுத்ததாக உட்கார்ந்ததும், போலாம் ரைச்! என்றாள்.

"இவன் வண்டியை ரோட்டில் விட்டதும் அவள் தன் மார்பில் ஒன்றை இவன் முதுகில் அழுந்துமாறு அழுத்தி உட்கார்ந்து கொண்டாள். இவனுக்கு அதை நகர்த்திக் கொள்ளச் சொல்லலாமென்றிருந்தது. சின்ன குலுக்கல் வண்டி குலுங்கினாலும் இவனுகு கவனம் முழுதும் தன் முதுகில் ஒட்டியிருக்கும் மார்பிலேயே கவனமிருந்தது.

"நீ பொறவுக்கு உக்காந்து உங்கொம்மாளை நடுவுக்காண்ட உக்காத்தியிருக்கலாம்" என்றான்.

"நான் பயந்துக்குவேன். அதனால தான் நடுவுல உக்காந்துட்டேன்."

"இத்தாச்சோட்டுப்பிள்ள பயந்துக்குவன்னு சொன்னா உங்கொம்மாவுக்கு மட்டும் பயமிருக்காதா?"

"அது ஒன்னும் சொல்லாமத்தான உக்காந்துட்டு வருது." என்றாள். இவனுக்கு கவுண்டரின் பார்வை இவள் மீது இரண்டு நாளில் விழுந்து விட்டால் வாழைத்தோட்டத்துக்கு தண்ணியெடுத்து உட முடியுமான்னு கேளடா! என்பார். இவனுக்கு அப்போது என்ன சொல்வது என்ற கேள்விக்கு பதிலை தேடிக் கொண்டிருந்தான். இவனுக்கு அவள் மீது கொஞ்சம் ஆசையாய் இருந்தது. கட்டிக் கொள்ளலாம் என்றுகூட இருந்தது. இவ்வளவு சிவப்பாக இவன் வலுவில் ஒருத்தியும் இல்லை. கலியன் பார் பக்கத்தூரிலேயே கிளியை பிடிச்சு கொண்டாந்துட்டான்! என்று வலுவில் பேசுவார்கள்.

இவன் கவுண்டர் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தும் போது கவுண்டர் வீட்டில் இல்லை. வண்டியைக் கொண்டுபோய் சாலைக்குள் நிறுத்தி விட்டு இவர்களை கடலைக்காட்டுக்கு கூட்டிப் போனான். அங்கு ஏற்கனவே மூன்று பேர் செடிகளை பறித்து ஒரு இடத்தில் குட்டானாய் போட்டுக் கொண்டிருந்தார்கள். வெயில் மண்டையை பிளந்துவிடும் என்பது மாதிரி அடித்துக் கொண்டிருந்தது. அவர்கள் தலைக்கு சும்மாடு மாதிரி சேலையை சுருட்டி போட்டிருந்தார்கள். இவர்களும் போய் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள். இவனுக்கு மாடுகளுக்கு தீவனம் போடும் வேலை இருந்தது. இருந்தும் அவளை விட்டு தூரம் போவது ஏனோ அவன் மனசுக்கு ஒப்பாமல் இருந்தது. இருந்தும் அப்புறம் வந்து கூடவே சேர்ந்து கொள்ளலாம் என அங்கிருந்து அவளைப் பார்த்துக் கொண்டே நகர்ந்தான்.

இவன் கவுண்டரின் வீட்டுப்புறம் வந்து தொண்டுப்பட்டிக்குள் நுழையும் சமயம் கவுண்டரின் புல்லட் தடதடத்து வந்து வாசலில் நின்றது.

“வேலைக்கு ஆளு சிக்கினாங்களாடா கலியா?” என்றார்.

“நாம் போயி கூட்டிட்டு வராமத் திரும்பீருவனுங்களா கவுண்டரே?” என்றவன் தட்டுபோருக்குச் சென்றான். சித்தங்கூரியத்தில் தீவனங்களை மாடுகளுக்கு போட்டு விட்டு காந்தம் இழுத்தது மாதிரி வந்து பெண்களோடு சேர்ந்து உட்கார்ந்து கொண்டான். கொட்டமுத்துச் செடிகள் உசரம் உசரமாக அங்கங்கே நின்றிருந்ததால் கொஞ்சம் கிடைத்த நிழலில் அவர்கள் உட்கார்ந்து செடியிலிருந்து காய்களை பறித்துக் கொண்டிருந்தார்கள்.

“இன்னிக்கி வாழைத்தோட்டத்துக்கு தண்ணிகட்ட யாருன்னு தெரியிலியே!” என்றாள் பொடுசாள் இவனிடம். கலியன் அவளருகில் தான் அமர்ந்து கடலைக்காய் பறிக்க உட்கார்ந்தான். நேர் எதிர்க்கே சற்று தள்ளியிருந்த கொட்டைமுத்து செடி நிழலில் ராசாமணி காய்பறித்துக் கொண்டிருந்தாள். அவள் கால் நீட்டி அமர்ந்து பறிப்பது புது விதமாய் இருந்தது இவனுக்கு. வெளீரிட்ட அவள் காலழகு முட்டிங்கால் வரை தகதகத்தது வெய்யலுக்கு.

“கேட்டதுக்கு பதிலைக் காணமா!” என்றாள் பொடுசாள்.

“ஏன் உனக்கு நெனப்பு வந்துடுச்சாக்கோ? இல்ல கையில காசில்லியா?”

“ஏன் உங்கிட்ட நெறையா இருக்குதா? இருந்தா ஒரு கோட்டரு பொழுதோடத்துக்கு வாங்கிக் குடேன்”

“இங்க நானே வெறுங்குண்டி அம்மணம் போட்டுக்கடி சம்மணமுன்னு காய் பொறிக்க வந்து உக்காந்துட்டேன். எனக்கே பொழுதோட வகைச்சலை காணம். கவுண்டரு ரெண்டு நாளா குடிய மறந்துட்டவராட்ட இருக்காரு. இல்ல ஊட்டுல வாங்கி வெச்சுட்டு குடிச்சு பழகிட்டாரோ என்னுமோ தெரியில. நான் வேணா பொடுசா தண்ணியெடுத்துட வாழைத்தோட்டத்துக்கு போறன்னு நிக்கறான்னு சொல்லட்டா”

“நீ சித்த கம்முனிரு நாமளா சொன்னா மதிப்பிருக்காது. அவருக்கே நோட்டம் வந்து கூப்புடோணும். சேரி அதிசியமா காயி பொறிக்க வந்து உக்காந்திருக்கே? என்ன விசயம்? அவ செவப்பா இருக்காள்னு கவண்டருக்கு தாட்டி உடலாமுன்னு பாக்கியா?”

“ஆமா எல்லாத்தியும் கவண்டருக்கே தாட்டி உட்டுப்போட்டு நானென்ன பண்றது? வெந்தண்ணியில் கொண்டி உட்டுக்கறதா?”

“பார்றா அதிசயத்தெ! இன்னிக்கி மழை வருமடா. உனக்கு இந்த நெனப்பே இல்லீன்னு நெனச்சுட்டு இருந்தேன். உனக்கும் நோட்டம் வந்துடுச்சா? அப்ப நாம போலாம்டா வாழைத்தோட்டத்துக்கு. உனக்கு பழக்கமில்லீன்னா நான் பழக்கி உடறேன்”

“நீ ஒன்னும் எனக்கு நொட்டியுட வேண்டாம். நானு கலியாணம் பண்டறதுக்கு முன்னாடி இந்த ஊச வேலையெல்லாம் பண்ட மாட்டேன். நான் சுத்தமா இருந்தாத்தான் எனக்கு வர்றவளும் சுத்தமா இருப்பா தெரியுமா?”

“கனாக்கண்டுட்டே இருக்க வேண்டிது தான். வர்றவ சுத்தமா இருக்கான்னு உனக்கு எப்படிடா தெரியும்?”

“அதுல ரத்தம் வருமாம்ல! ஏன் சிரிக்கிறே?”

“ரத்தம் வரலின்னா நீ கண்டுக்குவே? ஆளையும் பாரு அவனையும் பாரு! எவண்டா சொல்லிக்குடுத்தான் உனக்கு?”

“ஆரோ சொல்லிக் குடுத்தாங்க உனக்கெதுக்கு அது?”

“அப்ப உன்னைய அவ எப்படி கண்டுக்குவா நீ எங்கிம் பாஞ்சவன் இல்லின்னு?”

“எம்படதுலயும் ரத்தம் வருமாம்ல!”

“கூறுகெட்டவன்ங்றது செரிதான். அப்ப உம் பொண்டாட்டிக்கி லைட்டு போட்டு காயத்தை பாருன்னு காட்டுவே நீ. அவளும் புடிச்சு ஊதி உடுவா? நெனப்பெல்லாம் பயங்கரமுடோவ் உனக்கு. நாங்கூட என்னமோன்னு நெனச்சேன்.”

“ஏன் அதெல்லாம் தப்பா?”

“நீ அப்பிடியே நெனச்சிக்கொ. எனக்கென்ன வந்துச்சு. ஆனா இந்த நெனப்பு இருக்கிறவங்கிட்ட எவளும் பொழைக்க மாட்டா. உனக்கு பொண்ணு குடுத்தவனும் சேர்ந்து மூக்கைச் சிந்தீட்டு நிப்பான். எனக்கென்ன வந்துச்சு.நாயம் பேசுறாம்பாரு நத்தம் வருமாமா! ஆமா அவளையே நோட்டம் போட்டுட்டு இருக்கியே உக்காந்தாப்ல புடிச்சு. கொஞ்சம் கலருத்தோலா தெரியப்புடாது உனக்கு.”

“அவ அழகா இருக்காளா இல்லியா நீயே சொல்லு”

“அவளுக்கு கலியாணமாயிடுச்சு தெரியுமா உனக்கு?”

“இல்லியா! கழுத்துலயும் ஒன்னுமில்ல கால்லயும் ஒன்னுமில்லயே. நான் பாத்தனே”

“அது இல்லீன்னா கலியாணமாகலின்னு கண்டு புடிச்சுட்டே! நல்ல வெவரமடா உனக்கு. காங்கயத்துக்கு போனவருசம் கட்டிக் குடுத்தாங்க அவளை. நாலே நாள்ல கவுத்தை அத்து வீசிட்டு வந்துட்டாள்னு சொன்னாங்க. ஏன் என்னன்னு எனக்கு தெரியாது. வந்ததுல இருந்து ஊர்லதான் இருக்காளாம்”

“பாவம்ல”

“அவளைப் பார்த்தா பாவம்னு சொல்ற மாதிரியா இருக்கா உனக்கு. காமாலக்காரனுக்கு பாத்ததெல்லாம் மஞ்சளாத்தான் தெரியும். எங்கிட்ட உக்காந்து அவளை பாத்துட்டு பல்லை காட்டீட்டு இருக்கறதுக்கு அவகிட்டயே போயி காயி புடுங்கீட்டு பேச்சுக்குடு போ!”

“அவ ஆயாகாரிய தொணைக்கி கூட்டிட்டு வந்திருக்காளே!”

“அவளுக்கென்ன அவளும் நல்லாத்தான இருக்கா!”

“இந்தத் திமுரு நாயம் பேசுறது மட்டும் போவே போவாது உனக்கு”

“பின்ன அதையும் இதையும் பேசி எனக்கு நெனப்பு கூட்டி உட்டுட்டு அவளை நோட்டம் போட்டுட்டு இருந்தா என்னடா அர்த்தம்?” என்றாள் பொடுசா.

“அதுக்கு வேற ஆளைப்பாரு” என்றான் ராசாமணியை தின்னுவிடுவது போல பார்த்துக் கொண்டு. அவளுக்கு பாம்புக் காதாக இருக்க வேண்டும். அவள் ஒருமுறை இவனைப்பார்த்து சிரித்தாள். அந்தச் சிரிப்பே இவனுக்கு போதுமானதாய் இருந்தது. இருந்தும் எழுந்து கிட்டே சென்று உட்கார்ந்து ராசாமணியிடம் பேச தயக்கமாய் இருந்தது. பெண்கள் யாரிடமும் கூசாமல் போய் எந்த விசயத்தையும் பேசுகிறவனுக்கு ஏனோ ராசாமணியிடம் போக இதயம் படபடத்து திடுக் திடுக்கென்றது.

“ஒரு கதெ சொல்றங்கேளு நீயி. காட்டு வேலைக்கிப் போன புருசங்காரன் காட்டுல சொரக்காயி ஒன்னை பொறிச்சுட்டு ஊட்டுக்கு தூக்கிட்டு போற வழியில வேலியில கெடந்த காடைக்குஞ்சு நாலை லுங்கியக் கழட்டி அமுத்திட்டான். அப்புடியே அதுகளை உசுரோட கொண்டி ஊட்டுல பொண்டாட்டிகிட்ட குடுத்து சோறாக்கி கொழம்பு வச்சுட்டு மத்தியானமா தூக்கிட்டு காட்டுக்கு வான்னு சொல்லிட்டு போயிட்டான். அவொ பக்கத்தூட்டுல கள்ளப் புருசனோட

ஆட்டங்கட்டீட்டு சோத்தயும் ஆக்காம, கொழம்பும் வெக்காம உட்டடிச்சிட்டா.

பொழுது வேற மேக்க உழுந்திடுச்சு. கெரகத்தப்பாருன்னு அரிசிய போசியில போட்டுட்டு குருவிகளை அதுக்குள்ளார போட்டு சொரக்காயயும் போட்டுட்டு காட்டுக்கு போசியத்தூக்கிட்டு போனா. அவனோ வேலையெல்லாம் முடிச்சுட்டு வயிறு காஞ்சி போயி எதுக்க அவட்ட கழண்டு வந்துட்டு இருந்தானாம். இவ இப்பத்தான் ஆக்கிட்டு, திங்க கொண்டாறான்னு வயித்தெரிச்சல்ல, ஏண்டி இமுட்டு நேரமுன்னு அடிக்க பல்லை வெறுவீட்டு வந்திருக்கான்.

இவொ ஒடனே போசிய கீழ வெச்சுட்டு தலை முடிய அவுத்து விட்டுட்டு சாமியாட ஆரம்பிச்சுட்டா! இதென்னடா கெரகமுன்னு அடிக்க ஓடியாந்தவன் அப்புடியே ஆணியடிச்சாப்புல நின்னுட்டான். என்னெய அடிக்காதீங்க மாமா! நானு பொய்யி பித்தலாட்டக்காரியில்ல! ரொம்ப நீதியுள்ள பொண்ணு! என்னைய அடிக்க வந்தா சோறு அரிசியாப்போயிரும், சொரக்கா பச்சையாப் போயிரும், காடைக்குருவிகளுக்கு உசுரு வந்துருமுன்னு பாட்டு படிச்சிட்டா!

புருசன் அவொ கொண்டாந்த போசிய தெறந்து பாத்து அப்படியே மலச்சிட்டான். பர்ர்ருன்னு குருவிக ரெண்டு பறந்துடுச்சு. சொரக்கா அப்படியே பச்சக்காயா கெடக்குது. அரிசி அப்படியே இருக்குது போசிக்குள்ள! பாத்தவன், எம் பொண்டாட்டி பத்தினி! எம் பொண்டாட்டி பத்தினின்னு குதியாளம் போடறான் காட்டுக்குள்ள! இதக் கண்ணு வெச்சு பார்த்துட்டு இருந்த மாரியாத்தா இப்புடி புளுவறாளே புருசங்கிட்டன்னு கன்னத்துல கைய வெச்சு வடக்க பாத்துட்டு குக்கீட்டு இருந்தவ தெக்கு முகனா திரும்பி குக்கீட்டா!

வெள்ளிக்கிழம காத்தால பூசை போட வந்த பூசாரி ஆத்தா கன்னத்துல கைய வெச்சுட்டு தெக்க பாத்து உக்காந்துட்டாளேன்னு மணியகாரங்கிட்ட ஓட்டமா ஓடியாந்து சொன்னானாம். மணியகாரன் ஆத்தாவுக்கு வெசனம் வந்துடுச்சு போல எப்படி தீக்கறதுன்னு ஊரு முழுக்க தண்டோரா போடச் சொல்லிட்டான். இதக்கேட்டு காட்டுல வேல செஞ்சிட்டு இருந்த புருசங்காரம் மறுக்காவும் எம் பொண்டாட்டி பத்தினி. அவளுக்கு சாமி வந்து ஆடங்காட்டி சோறு அரிசியாப்போச்சுன்னு சொல்லீட்டு மணியகாரன் ஊடு வந்துட்டான். அந்த பத்தினி சொன்னாத்தான் ஆத்தா கன்னத்துல கைய எடுக்குமுன்னும் சொல்லிட்டான்.

அவளப்போயி கூட்டியாங்கடான்னு மணியகாரன் குதிர வண்டி

அனுப்பினான். விசயங்கேட்ட அவெொ நாம பண்டுன அக்குரமத்தால தானோ என்னவோ ஆத்தா அப்படி குக்கீட்டாளோன்னு சீவக்கட்டைய தூக்கிட்டு குதிர வண்டியில வந்துட்டா. சாமி முன்னால சேலையக்கட்டி மறைக்கச் சொல்லி யாரும் பாக்கப்புடாதுன்னு உள்ளார பூந்து ஆத்தா முன்னால போயி நின்னா. அட நாந்தான் ஒரு தப்பு பண்டி புருசங்காரனை ஏமாத்த பொய்யி சொன்னேன். அதையே நீ புடிச்சுக்கிட்டியேன்னு சீமாத்தை ஓங்குனா.ஆத்தா கன்னத்துல இருந்து கைய எடுத்துடுச்சு. தப்பிச்சோம்டா சாமின்னு ஓட்டமா வெளிய ஓடியாந்தவ மணியகார்ருகிட்ட, சாமி சரியாப் போச்சுன்னு சொல்லிட்டா! மணியகார்ரும் அவ பேருல ரெண்டேக்கரா எழுதி வச்சிட்டாப்ல! கதை எப்படி? எங்காயா எப்பவோ சொன்னது எனக்கு" என்றாள் பொடுசாள்.

"உங்கோயாவுக்கு ரெண்டேக்கரா இருக்குதா?" என்றான் இவன்.

"ம்! திமுறப்பாரு, உம்பொண்டாட்டிக்கி எவனாச்சிம் ரெண்டேக்கரா தருவான் நாளைக்கி" என்றாள் இவளும். ஆனால் அவன் அதை கவனித்ததாகவே இல்லை. ராசாமணியையே பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். அவள் விரல்கள் கையிலிருந்த செடியில் மந்திரம் போட்டது போல காயை பொறித்து செடியை தூர வீசிக்கொண்டிருந்தன.

"மேயற மாட்டை நக்குற மாடு கெடுத்த கதையை இன்னிக்கித்தான் பாக்கேன்" என்றாள் பொடுசாள்.

அன்று பொழுது விழும் நேரத்தில் ராசாமணியையும் அவள் அம்மாளையும் சொன்னது மாதிரி வண்டியில் கூட்டிப் போய் விட்டுவர கிளம்பினான் கலியன். கவுண்டர் அன்று இவனிடம் சரக்கு வாங்கிவர பணம் கொடுத்து விட்டார். அவள் இப்போதும் நடுப்புறத்திலேயே உட்கார்ந்ததும் தன் மார்பை இவன் முதுகில் ஒட்டவைத்துக் கொண்டாள். அவள் அம்மா பொறவுக்கு இருக்கையிலேயே இவனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

"என்ன சும்மா சும்மா என்னையே வெறிச்சு பார்த்துட்டே உக்காந்துட்டு இருந்தீங்க ஒரு பொழுதுக்கும்? அதாரு உங்க வெப்பாட்டியா?" என்றாள்.

"அது எங்க கவுண்டரு வெப்பாட்டி. சும்மா தமாசு பேசிட்டு இருந்துச்சு"

"உங்கள கூப்டுட்டே இருந்துச்சா"

"நாங்க தள்ளி அங்க கெடந்தோம். காது கேட்டுச்சா?"

“கதையெல்லாம் நல்லா சொல்லுச்சு அந்தக்கா”

“நாளைக்கி எட்டு மணிக்கே வண்டிய எடுத்துட்டு வந்துடறேன்”

“ஒம்பது மணிக்கி வந்தா உங்க கவுண்டரு சத்தம் போடுவாரா?”

“சத்தம் போட மாட்டாரு. பேச்சுக்கு நாம எடங்குடுக்க கூடாதில்லியா”

“எனக்கு கலியாணமாயிடுச்சுன்னு அந்தக்கா உங்ககிட்ட சொன்னமாதிரி இருந்துச்சு”

“ஆமா அப்படித்தான் சொல்லுச்சு” என்றபோது அவர்கள் வழுவு வந்துவிட்டதால் வண்டியை ரோட்டும் பேருலேயே நிப்பாட்டினான். இருவரும் இறங்கிக் கொண்டார்கள். அந்தம்மாள் இறங்கியதும் ஓரம் போய் காறித் துப்பி விட்டு அதன் வீட்டுக்கு சென்றது.

“சரி காத்தாலைக்கி வந்து கூட்டிட்டு போங்க” என்றவள் போசியை ஆட்டிக் கொண்டு சென்றாள். அவள் வீதி கடைசி சென்று திரும்புகையில் பார்ப்பாள் என்று நின்றிருந்தான். ஆனால் அவள் பார்க்கவேயில்லை. கலியன் வண்டியை எல்லக்காடு நோக்கி முறுக்கினான்.

அடுத்த நாள் பொடுசாவிடம் கலியன் அமர்ந்து காய் பிடுங்கவில்லை. அவளே எப்படியிருந்தாலும் ஒருத்தன் அவன் வயசுக்காலத்துல எவகிட்டவாச்சும் பொத்துனு விழுந்துடறான், என்று எண்ணி புன்னகைத்துக் கொண்டாள். கலியன் ராசமணியிடம் அமர்ந்திருந்தான். அவன் பேருக்கு கடலைச் செடியை எடுத்து ஒவ்வொரு காயாய் பிய்த்துக் கொண்டிருந்தான். ராசாமணி அன்று காது தொங்கட்டானை கழற்றி விட்டு கம்மல் போட்டிருந்தாள். முதுகு தெரியும் ஜாக்கெட் அணிந்திருந்தாள்.

“அந்தக்காட்ட போவலியா நீங்க? கதை சொல்லுமே! தனியா உக்காந்து பிடுங்கீட்டு இருக்குது” என்றாள்.

“அது கேனை கேனையுன்னு கதை சொல்லும். நான் உன்னிட்ட ஒன்னு கேப்பேன். எதும் நெனச்சிக்கப்புடாது” என்றான்.

“நான் ஒன்னும் நெனச்சிக்க மாட்டேன். கேளுங்க சும்மா”

“நெசமா கலியாணம் ஆயிடுச்சா உனக்கு. இல்ல பொடுசா சும்மாநாச்சிக்கிம் சொன்னாளா?”

“கலியாணம் ஆயிடுச்சு எனக்கு”

“அப்புறம் ஏன் ஊட்டுக்காரன் கூட இருக்காம தாலிய கழட்டிட்டு

ஊர்ல இருக்கே?"

"எனக்கு புடிக்கல அந்தாளை. அதனால தாலிய கழட்டி குடுத்துட்டு பஸேறி வந்துட்டேன்"

"அதெப்படி சும்மா உடுவாங்களா நாயகாரருங்க"

"நாயகார்ருகிட்ட நாயத்தை கொண்டு போனாத்தான அவங்க பேசுவாங்க. அந்தாளும் கொண்டு போகலை"

"அப்படி என்ன நடந்துடுச்சு உனக்கு கோவம் வர்றாப்பிடி?"

"நானு அவரு ஊட்டுல ஒரு வாரம் தான் இருந்தேன். அந்தாளு வேலைக்கெங்கீம் போறதில்ல. அவிங்கம்மா தான் அரிசி மில்லுக்கு வேலைக்கு போயிட்டு வந்துச்சு. அந்தாளு புல்லா குடிக்கிற ஆளு. விசயம் தெரியாம கட்டிக் குடுத்துட்டாங்க என்னை."

"அதனால போடா மயுருன்னு வந்துட்டியா?"

"அப்படியும் வெச்சுக்கலாம். ஆமா ஏன் இப்படி துருவித்துருவி கேக்கறீங்க? என்னைக் கட்டிக்கப் போறீங்களா?"

"வீட்டுக்காரரு அந்த மாதிரியெல்லாம் ராவுல கிட்டப்படுத்துக்கிட்டு செய்வாரா?"

"என்னை கட்டிக்கப் போறீங்களா? அதை மொதச் சொல்லுங்க"

"அதுக்குத்தான் கேக்கேன் நானு"

"செஞ்சீங்களான்னா? அந்தாளு பெரிய இவனா எனக்கு. ஊட்டுக்காரன்னா சாமத்துல இதுகளை புடிச்சு கசக்குறான் எருமையாட்ட! தாலி கட்டீட்டான்னா எங்க வேணாலும் புடிப்பானாமா? அப்புறமும் அங்கீம் இங்கீம் புடிச்சான். ஆவறதில்லீன்னு போட்டு எந்திருச்சு மாமியாகாரி கிட்ட போயி படுத்துக்கிட்டேன்"

"உம்மாமியா ஒன்னும் கேக்கலியா? ஏன் இங்க வந்து படுக்கீன்னு?"

"அவ கேட்டா, உம்பையன் அங்கீம் இங்கீம் புடிச்சு கசக்குறான். தூங்க உடமாட்டீங்கறான்னு சொல்லிட்டேன்"

"அப்படின்னா செய்யறக்கு உனக்கு புடிக்காதா?"

"நல்லா இருக்குமுன்னு சொல்றாங்க. இவந்தான் தண்ணிமப்புல வந்து மசை புடிச்சவனாட்ட திருகுறானே. பார்த்துட்டு போடானுட்டு வந்துட்டேன்"

“இனி போவே மாட்டியா அங்க?”

“நாம்போவ மாட்டன் சாமி அவங்கிட்ட. மனுசனா இருந்தாத்தான போலாம்”

“சரி என்னை கட்டிக்க உனக்கு சம்மதமா?”

“நீங்களும் பொண்டாட்டி தான்னு மசையனாட்ட வந்து கசக்குவேன் அங்கீம் இங்கீம் கை வெப்பீங்கன்னா இப்பவே சொல்லுங்க. எனக்கு கலியாணம் வேண்டாம்”

“எனக்கு அப்படியெல்லாம் பண்டத் தெரியாது. ஆனா உன்னியப் பாத்ததும் ஏனோ எனக்கு தூங்கவே முடியல. நேத்து கனாவுல வேற வந்தே”

“வந்து என்ன பண்டுனேன்?”

“ஓடிட்டே இருந்தே. நானும் உன்னை தொறத்தி புடிச்சிடலாமுன்னு பொறவுக்கே ஓடியாந்துட்டே இருந்தேன். ஆனா கைக்கே சிக்க மாட்டீன்னு ஓடிட்டே இருந்தே” என்றதும் சிரித்தாள். அப்போது தான் அவளுக்கு ஒரு சிங்கப்பல் இருந்தது தெரிந்தது.

“உனக்கு சிகப்பல் இருக்குது. நீ ரொம்ப ராசியான புள்ளே”

“க்கும் அது ராசியில்லியாமா, எங்கம்மா சொல்லுது. ரெண்டு வேணுமாம். அப்பத்தான் ராசியாம்”

“ஆனா அதும் நீ சிரிக்கிறப்ப அழகா இருக்குது. நீ என்ன சொல்றே என்னை கட்டிக்கிறியா? நான் உன்னை பூ மாதிரி வச்சுக்குவேன் என் வீட்டுல. இப்படி வெய்யில்ல வேலை செய்ய உன்னை அனுப்ப மாட்டேன்”

“நீங்க யாருகிட்ட சம்மதம் வாங்கோணும்?”

“எங்கம்மாட்ட வாங்கிக்குவேன். நீ சம்மதம் சொன்னீன்னா இன்னிக்கே சொல்லிடுவேன். நாளைக்கி வர்றப்ப உனக்கு சந்தோசமான சேதி சொல்லுவேன்”

“அப்படின்னா சரிங்க. ஆனா வெய்யில்ல என்னை வேலைக்கு அனுப்பக் கூடாது. நாளைக்கி ஒருத்தன் சம்பளத்துல சாப்புட முடியாதுன்னு சொல்லி வேலைக்கு அனுப்பக்கூடாது.”

“சத்தியம் பண்டித்தரட்டா”

“ஐய்யே! அதெல்லாம் வேண்டாமுங்க. உங்க வீட்டுல சன் டிவி

கொடை இருக்குதா?”

“இல்லியே! டிவிதான் இருக்குது. அதை யாரு பாக்கறாங்கன்னு எங்கம்மா பழைய சேலையப் போட்டு மூடி அட்டாரில போட்டு வெச்சிருக்குது. வேணுமுன்னா வாங்கி மாட்டிக்கலாம்.”

“நீங்க வாங்கி மாட்டின பொறவுதான் கலியாணம் பண்ணுவேன்”

“சரி அடுத்த வாரம் மாட்டிடறேன். சரி நமக்குத் தான் புடிச்சுப் போச்சே, யாரும் பாக்கறக்குள்ள எனக்கொரு முத்தம் குடு”

“ஐய்யே! கலியாணம் பண்டாமெ புருசனுக்கு முத்தம் குடுக்கக் கூடாது. அதெல்லாம் சினிமாவுல தான் குடுப்பாளுக வாயில எல்லாம். நானென்ன சினிமா நடிகையா?”

“அப்ப குடுக்க மாட்டியா?”

“சரி நேரங்காலம் சரியா இருந்தா வாயில ஒன்னு குடுக்குறேன். இப்ப வேத்துப் பூத்து உக்காந்துட்டு இருக்கேன் வெய்யில்ல கடலைகாய் பொறிச்சுட்டு”

“சேரி நான் போறேன்”

“போறன்னு சொல்லக்கூடாது. போயிட்டு வர்றன்னு சொல்லிப் பழகுங்க”

“சரி போயிட்டு வர்றேன்” கலியன் எழுந்து நிம்மதியாய் கிளம்பினான். அவள் சம்மதம் சொல்லி விட்டது அவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தது. பொடுசாவிடம் போய் அமர்ந்தான்.

“என்ன மூஞ்சில சந்தோசம் கொட்டிக் கெடக்குது? ராத்திரிக்கி வீட்டுக்கு உன்னால முடிஞ்ச பணத்தை எடுத்துட்டு வான்னு சொல்லிட்டாளா அந்த செவப்பி?” என்றாள் அவனிடம்.

“உம்புத்தி உன்னை உட்டு எங்கீம் போகாது பாத்துக்க! நானும் ராசாமணியும் என்ன டொக்கு போடறதுக்கு தான் பறக்குறோமுன்னு நெனச்சியா? எங்க கலியாண விசயத்தை பத்தி பேசிட்டு இருந்தோம்”

“எண்ணெய் தேச்சு உருண்டாலும் ஒட்டுற மண்ணு தான் ஒட்டுமுன்னு சும்மாவா சொன்னாங்க! வேலியில போறதை தூக்கி உம்மட வேட்டில உட்டுக்கறங்ற இப்ப நான் சொன்னா உன் மண்டையில எதுவும் ஏறாது”

“உனக்கு ஏனோ ராசமணியப் பாத்தா பொறாமையா இருக்குதாட்ட! அதான் எதையோ ஒன்னை சொல்லிட்டே இருக்கே. நானொரு அழகான பொண்டாட்டி கட்டிக்கறேன். நீ ஏன் இப்படி மண்ணு எண்ணெயினுட்டு

இருக்கே?”

“நான் இப்ப எது சொன்னாலும் உன் மண்டையில ஏறாது. நீ கிளம்பு. நேத்தே கிட்ட உக்காந்து கௌப்பி உட்டுட்டு போயிட்டே அதை இதைம் பேசி. வெத்தி நாயம் பொழப்புக்கு கேடு” என்றவளை முறைத்தபடி எழுந்து போனான் கலியன்.

000000000000000

கலியன் அன்று ராசாமணியையும் அவள் அம்மாவையும் இறக்கி விட்டு விட்டு நேராக பீட்டர் ஆசிரியரிடம் சென்றான். கொஞ்சம் அப்படி இப்படி என்று இருப்பவர்களுக்கு அமையும் வீடும் ஊரில் யாரையும் துன்பம் செய்யா வண்ணம் ஓரம்பாரமாக அமைந்து விடுவது எப்போதாவது நடந்து விடும். பீட்டருக்கு கலியன் காட்டுப்பாளையத்தில் பிடித்திருந்த வீடு வடக்கு கடைசியில் இருந்தது. பீட்டர் தேர்ந்த சமையல்காரராகவும் இருந்தார். இவன் டிவியெஸ்சை அவர் வீட்டுமுன் அவரது க்ரக்ஸின் அருகில் கொண்டு சென்று நிறுத்திய போது அவர் சமையல் செய்து கொண்டிருந்தார். எந்த குழம்பு வைத்தாலும் சிக்கன் பொடி, மட்டன் பொடி என்று கொட்டி விடுவதால் வாசனை தூக்கும்.

கலியனுக்கு இருட்டு கட்டும் முன்பே பசியைத் தூண்டும் விதமாக வாசனை வீசிக் கொண்டிருந்தது.

“சார் மணம் ஊரையே தூக்கும் போல இருக்குதுங்களே! இப்படியே செஞ்சுட்டு இருங்க ஊர்க்காரங்கெல்லாம் தெனமும் வாத்தியாரு சிக்கனா செஞ்சு சாப்புடுறாருன்னு கண்ணு வெக்க போறாங்க” என்றான். இவன் குரல் கேட்டு வீட்டி வெளியே வந்தவர் “வாடா வாடா வாடா!” என்று ராகமிழுத்தார். கலியன் எப்போது வந்தாலும் வாசலிலேயே நின்று கொள்வான். அது ஊரார்களுக்காக. பீட்டரும், உள்ள வாடா! என்று பலமுறை கூப்பிட்டுப் பார்த்து விட்டு விட்டார். அவன் மண்டையை ஆட்டிக் கொண்டு வாசலிலேயே உட்கார்ந்தும் கூட விடுவான். இருவரும் பாட்டில் வாங்கி வந்தால் கூட வடக்கே இரவில் காட்டுக்குள்ளே போய் உட்கார்ந்து விடுவார்கள்.

“குமரேசன் வாத்தியாரு புரோட்டா வாங்கி வரச் சொல்லிட்டாராடா?”

“இல்லீங்க சார்! அவருகிட்ட போயி பேசி ஒருவாரத்துக்கும் மேல ஆயிடுச்சுங்க. அவருக்கு என்னங்க பொன்னம்மா இருக்குது ஆக்கிப்போட. கெடச்சா லக்கி அப்படி அடிக்கோணும் அவருக்கு. அவரு புரோட்டாவுக்கு பணம் குடுத்தா எப்பவும் பொன்னம்மாக்கும் சேர்த்துத்

தான் வாங்கிட்டு வரச் சொல்வாருங்க”

“நீ என்ன பொறாமையில பேசுவியாட்ட தெரியுதா. இப்படித் தான் அவருகிட்ட போயி பீட்டர் சாருக்கு சரக்கு வாங்கிட்டு வந்து குடுப்பனுங்கன்னு சொல்லுவே!”

“ஏனுங் சார் நீங்க வேற! தூரத்து ஊர்ல இருந்து வந்து பிள்ளைங்களுக்கு பாடம் சொல்லிக் குடுக்குறவிங்க நீங்க. குத்தம் சொல்ல முடியுமுங்களா நானு. அவருக்கு சாப்பாட்டுக்கு பிரச்சனை இல்ல. நீங்க தான் தெனமும் செஞ்சு சாப்புட்டுக்கறீங்க.”

“இதென்னடா ஊரு? நானு கிறிஸ்டியன்னு தெரிஞ்சுட்டு பிள்ளைங்க கூட எங்கிட்ட பேச்சு வச்சுக்க மாட்டீங்கறாங்க. பேசாம பள்ளிக்கூடத்துலயே படுத்துக்கலாமான்னு பாக்கிறேன்”

“நாளானா செரியாப் போவுமுங்க சார். உங்களுக்கு வீடு குடுத்தவரை இந்த ஊருக்கே புடிக்காது. அவரு இந்த சாதி அது இதெல்லாம் பாக்க மாட்டாருங்க. வேணுமுன்னே லோலாயம் பண்டோணுமுடான்னு சொல்லிட்டே இருப்பாருங்க.”

“அப்ப அவரு சண்டைக்கி கரைக்டா நான் கெடச்சிட்டேன். வீட்டை குடுத்துட்டாரு”

“அதெல்லாம் நமக்கெதுக்குங்க சார். நமக்கு தூங்க ஒரு வீடு. அது கெடச்சாச்சு. சார் இன்னிக்கி விசயம் பண்டுறீங்களா? கடைக்கி போயிட்டு வந்துடறேன். அப்புறம் உக்காந்துக்கலாம். ஒரு விசயமொன்னு பேசோணுமுங்க உங்ககிட்ட. நீங்க சொன்னா சரியா இருக்கும்”

“சரி உன்னியப் பார்த்ததீம் எனக்கும் நெனப்பாயி போச்சு. இந்தா புடி!” என்றவர் அவன் கையில் பாட்டிலுக்கு காசு கொடுத்து அனுப்பினார். அவன் க்ரக்ஸ் சாவியை வாங்கி அதை எடுத்துக் கொண்டு கிளம்பினான். அவன் போய் வந்ததும் வீட்டைப் பூட்டிக் கொண்டு அவர்கள் வடக்கே நான்கு காடு தள்ளி மொட்டப்பாறையில் அமர்ந்தார்கள். மொட்டப்பாறை இரவிலும் அமரமுடியாத வண்ணம் சூடு அடித்துக் கொண்டிருந்தது. சற்று தள்ளி உடைந்த பியர் பாட்டில் கிடந்ததை கலியன் அப்போதுதான் பார்த்தான்.

“சார் நாளையும் பின்னியும் நாம எடத்தை மாத்திக்கோணும். இங்க உக்கார்ந்தமுன்னா வம்பு வந்து சேந்துடும்”

”ஏண்டா?” அவர் டம்ளரில் சரக்கு ஊற்றி தண்ணீர் கலந்து

கொண்டிருந்தார்.

"இல்ல வங்கு வாலுக இங்க உக்காந்து குடிச்சிருக்கும் போல! பாட்டலை ஒடச்சுட்டு போயிருக்குதுக பாருங்க! நாளைக்கி நாம இந்தப்பக்கம் குடிக்கிறது தெரிஞ்சா சண்டையாயிடும். நாம குடிச்சுட்டு பாட்டிலை பத்திரமா எடுத்துட்டு போயிடறோம். நொங்கு தின்னவன் ஒருத்தனிருக்க நோண்டித்தின்னவன் மாட்டுன கதை ஆயிடும் நமக்கு"

"இந்த ஊர்ல தொட்டதுக்கெல்லாம் பழமொழி சொல்றாங்கடா!"

"ஆமாங்க சார் சொல்லுவாங்க. சார் இப்படி பக்கத்தூருல இருந்து எங்க கவுண்டரு காட்டுக்கு ஒரு பிள்ளைய காட்டு வேலைக்கி கூட்டிட்டு போறேன் ரெண்டு நாளா!" என்று விசயத்திற்கு வந்தான் கலியன்.

"கையில சரக்கை வச்சிட்டு பேசாதே! ஊத்தீட்டு சொல்லு! சரக்கடிக்கறதை கொறச்சிக்க பாக்கேன் முடியமாட்டீங்குது! இனிமே வாரத்துல சனி ஞாயிறு மட்டும் குடியை வெச்சுக்கோணும்டா"

"ஆமாங்க சார். குடியை கொறச்சிக்கலின்னா எனக்கும் ஆப்பு வந்துடுமாட்ட இருக்குது"

"உனக்கு எங்கிருந்துடா ஆப்பு வருது?"

"அவ பேரு ராசாமணி சார். கலியாணம் கட்டி போனவ புருசன் மப்புல வந்து அங்கீம் இங்கீம் கையை வைக்கிறான்னு சொல்லி தாலியை கழட்டி வீசிட்டு வந்து இங்க அம்மாகிட்டயே உக்காந்துடுச்சுங்க"

"அட! புதுசா இருக்குது. கையை அங்கீம் இங்கீம் வெக்கிறான்னு ஊடு வந்துடுச்சா? கையை அங்கீம் இங்கீம் வெக்கிலீன்னு ஊடு வந்த பொண்ணுகளைத்தான் கேள்விப்பட்டிருக்கேன். சரி அதுக்கென்ன?"

"ராசாமணி ரெம்ப அழகு சார்! நல்ல செவப்பு"

"அழகிருக்குற எடத்துல ஆபத்தும் இருக்குமுடா கலியா! சரி மேல சொல்லு"

"இன்னிக்கி கடலக்காயி பொறிக்கிறப்ப கிட்ட உக்காந்து பேசிட்டனுங்க நானு. அதும் சம்மதம் சொல்லிடுச்சு"

"ஓ! கையில காசில்லாம அதை கொண்டாட எங்கிட்ட வந்துட்டே நீ! நான் இங்க வட்டு காஞ்சுட்டு யாரும் இல்லியேன்னு கிடக்கேன். நீ அழகா செவப்பா புடிச்சுட்டே!"

"சார் நீங்க மட்டும் ம்னு ஒரு வார்த்தை சொல்லுங்க சார். கொளத்துப்பாளையத்துல இருந்து லட்டு மாதிரி கொண்டாந்து

நிறுத்துறேன்”

“எம் பொழப்புக்கு ஆப்பு வெக்கிறேங்கிறே!”

“சார் வெளிய தெரிஞ்சாத்தான் தப்பு சார். நாம சத்தமில்லாம முடிச்சுக்கலாம். சரக்கடிக்கிறீங்க, தம்மடிக்கிறீங்க இதெல்லாம் தப்பில்லீங்களா சார்?”

“வெளிய தெரியாம சாமத்துல திருட்டுத்தனமா இதெல்லாம் பண்டிக்கலாம் கலியா! ஆனா அது மானத்தை கெடுத்துடும். பேப்பர்ல போட்டு கிழிச்சுடுவாங்க. நாளைக்கு எனக்கு பொண்ணு குடுக்க மாட்டாங்க யாரும்.”

“சார் அப்ப பெல்லா டீச்சர் உங்க ஆளு தான! பேச்சு குடித்து பாருங்க சார். ரெண்டு கவர்மெண்ட் சம்பளம்! கசக்குமுங்களா சார்?”

“டேய் கலியா! நீ படிச்சு ஆசிரியர் வேலைக்கி வந்திருக்கணுமுடா! மூளை பாரு உனக்கு எப்படி கிளை கிளையா பிரியுது”

“நான் தப்பா சொல்லிட்டனுங்களா சார்?”

“சரி அதை விடு நீ. உன் விசயத்துகு வாடா. அப்புறம் கல்யாணம் பண்டப்போறே?”

“சார் சன் டிவி பாக்க கொடை ஒன்னு மாட்டீட்டன்னா அவ ரெடி சார்”

“ஏண்டா பொழைக்க வர்றவளுக்கு எதுக்குடா சன் டிவி?”

“சார் அவளை நான் வெய்யில்ல விட்டு காஞ்சு கருவாடா போக உடக்கூடாதுன்னு வீட்டுல இருந்தாப் போதுமுன்னேன். அவ கொடை மாட்டச் சொல்லிட்டா. அதுல தப்பொன்னும் இல்லீங்களே!”

“சரி நீ கையை வெச்சாத்தான் தாலியை கழட்டி வீசிட்டு போயிடுவாளே அவ எதுக்கு உனக்கு? வெச்சுட்டு அழகு பாக்கவா?”

“சரக்கடிச்சுட்டு போயி புடிச்சா அவளுக்கு புடிக்காதாம் சார். நானொரு முத்தம் கேட்டேன். நேரம் அமைஞ்சா வாயில குடுக்கறன்னு சொல்லியிருக்கா சார். கலியாணத்துக்கு முன்னால சினிமாக்காரிக தான் முத்தம் குடுப்பாளுகளாமா!”

“அது சேரி! அந்தப் பிள்ளைய நான் பாக்கணுமே, காட்டுறியா எனக்கு”

“நாளைக்கி காத்தால டான்னு எட்டு மணிக்கி ரோட்டும்பேர்ல வந்தீங்கன்னா காட்டுறேன்”

“சமயம் வந்தா உனக்கு முத்தம் குடுக்கறன்னு சொல்லிட்டாளா? அப்ப

சமயத்தை நாம தான் ஏற்பாடு பண்ணிக்கோணும் கலியா”

“எப்படிங்க சார்?”

“இப்ப முத்தம் அவ உனக்கு குடுத்தா வேண்டாம்னு சொல்லிடுவியா?”

“கெடச்சா வாங்கிக்கலாம் சார்.”

“அப்ப சரக்கை முடிச்சுட்டு கிளம்பு. ஊரு இவத்திக்கி தான்னு சொன்னியே! போயி நில்லு அவ முன்னாடி. எதுக்கு வந்தீன்னு கேட்டா முத்தம் குடு போறேன்னு சொல்லி வாங்கிட்டு வா”

“சார் நீங்க என்னை தூண்டி உடறீங்க”

“ஏண்டா அவனவன் காதலிக்கறப்ப என்னென்ன பண்டறான். ஊட்டுமேல ஏறி ஓட்டை பிரிச்சு உள்ளார எறங்கி சோலி பாத்துட்டு வர்றான் தெரியுமா! ஏண்டா யாரு கிட்ட நீ போயி நிக்கே? உனக்கு சம்சாரம் ஆகப்போறவ கிட்டத்தான! நாளைக்கி கலியாணமாயிடுச்சுன்னா அவ சொல்லுவாள்ல. என்ன தைரியமா ஊட்டுக்கே வந்தீங்கன்னு! பொம்பளைங்களுக்கு என்னிக்குமே தைரியமா நடந்துக்குற ஆம்பிள்ளைகளைத்தான் பிடிக்கும் தெரியுமா! அவளும் இப்ப உன் நெனப்பாவேதான் பாயில கிடப்பாடா. சினிமாவுல பாத்ததில்லியா நீ! நீ கிட்ட கிடந்தீன்னா அம்சமா இருக்குமுன்னு நெனச்சுட்டு தலகாணிய கட்டிப்புடிச்சுட்டு கிடப்பா! வெட்டியா உனக்கு கிடைக்கிற முத்தமெல்லாம் தலகாணி வாங்கிட்டு இருக்கும். கலியா கலியான்னு முத்தம் குடுத்துட்டு கிடப்பா தலகாணிக்கி. போடா போயி முத்தம் வாங்கிட்டு வா”

“சார் அவளுக்கு சரக்கு வாசம் புடிக்காதுங்களே!”

“சரி இப்ப அவளை பக்கணுமுன்னே உனக்கு தோணலியா கலியா?”

“தோணுதுங்க சார்”

“தோணலின்னா நீ அவளை விரும்பலன்னு அர்த்தம். சும்மா சொல்றதுடா சரக்கடிச்சா புடிக்காதுன்னு. தைரியமா போயி கேட்டு வாங்கிட்டு வாடா முத்தம். கேட்டாத்தான் கிடைக்கும் எதுவுமே! எனக்கொரு காதலி இருந்தா உங்கோட நான் உக்காந்துட்டு இருப்பனா? அவ மடியில தலை வெச்சு படுத்துக் கிடப்பேன் நெலா பார்த்துட்டு”

“சரிங்க சார் நான் கிளம்பறேன். ஆனது ஆகுது போயே பார்த்துட்டு வந்துடறென். சார் வண்டி வாசல்லயே நிக்கட்டும். நான் நடந்தே இப்படி

காட்டு வழியா போயிட்டு காட்டு வழியாவே வந்துடறேன். நீங்க முடிச்சுட்டு வீட்டுல வந்து இருங்க" கலியன் கழற்றிப் போட்டிருந்த செருப்பை தொட்டுக் கொண்டு இருட்டில் நகர்ந்தான். பீட்டர் கடைசி ரவுண்டை முடித்துக் கொண்டு காலி பாட்டிலையும், தண்ணீர் கேனையும் தூக்கிக் கொண்டு வீடு நோக்கி நகர்ந்தார்.

கலியன் ராசாமணியை பார்க்காமல், முத்தம் வாங்காமல் திரும்பக் கூடாது என்ற முடிவிலேயே காட்டு வழியே சென்றான். நான்கைந்து காடுகள் தாண்டி வந்ததும் வழுவில் தெரு விளக்குகள் பளீரிட்டு எரிந்து கொண்டிருந்தது கண்ணுக்கு தெரிந்தது. காய்ந்து போன சின்ன ஓடை ஒன்றை தாண்டினான் கலியன். அதனை ஒட்டி சில பிணங்கள் புதைக்கப்பட்ட பழைய பிணமேடுகளை பார்த்தான். பிணமேட்டில் சப்பாத்திக் கள்ளிகள் இந்த வெய்யலிலும் செழித்து நின்றிருந்தது.

கண்கள் இருளுக்கு பழக்கமாகி விட்டதால் காட்டினுள் நிதானமில்லாமல் சென்றது போக ஒத்தையடிப்பாதையும் சென்றது. அது வழுவு நோக்கித்தான் அவனை கூட்டிப் போனது. இவன் மறுபடியும் மேற்கேயே சென்றான். அதுதான் சரி. வடக்கு கடைசி வீடு ராசாமணியினுடையது. இனி சுலபமாக அவள் வீட்டுக்குச் செல்வது இயலாது என்பது அங்கே கூட்டமாய் வளர்ந்து ஆள் உசரம் நின்றிருந்த டில்லிமுள் செடிகள் இவனை பயமுறுத்தின. அதனுள் சில பன்றிகளின் உறுமல் வேறு கேட்டது.

முட்களின் கூடாரத்தினுள் கீழே உற்றுப்பார்த்து உற்றுப்பார்த்து கால் வைத்து நகர்ந்தான். காய்ந்த முள்ளை மிதித்து விட்டால் செருப்பைத் துளைத்துக் கொண்டு குதியில் ஏறிவிடும். பக்கம் தான் என்று தெரியும் அவளின் வீட்டை அவ்வளவு எளிதாக சென்றடைய முடியாது என்பது மண்டையில் பச்சை முள் குத்திய போது தெரிந்ததும் குனிந்தும், நிமிர்ந்தும் போக வேண்டியிருந்தது. இத்தனை சிரமங்களைத் தாண்டிப்போய் முத்தம் வாங்காமல் விடுவதா? பீட்டர் சாரிடம் போய் பெருமை பீத்த வேண்டும்.

இதோ வீடு என்றிருக்கையில் அதெ டில்லிமுள்ளை வெட்டி படுகிடையாக வேலி மாதிரி போட்டிருந்தார்கள். அது காய்ந்து போய் கிடந்தது. இதை தாண்டுவது முடியாத காரியமாய் இருந்தது. கால்வைத்து ஏறினாலும் சடச் சடவென சப்தம் வேறு வரும். பக்கத்து வீட்டுக்காரன் கூட விழித்து வந்து விடுவான். கலியன் மறுபடியும் மேற்கே முள்கூட்டத்தில் நுழைந்து சென்றான். நல்லவேளை சீக்கிரமே முட்கள் கூட்டத்தை தாண்டி காட்டுப் புறத்திற்கு வந்தவன் யாரேனும்

ஜலவாதிக்கு காட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறார்களா? என்று நோட்டம் விட்டு வேலிக்கு தென்புறமாக அவள் வீட்டை நோக்கி கிழக்கே வால் பிடித்தாற்போல் சென்றான்.

காங்கரீட் போடப்பட்ட வீதியில் கால் வைப்பதற்கு முன் ஐந்து வீடுகளே இருந்த அந்த கடைசி வீதியை சுத்தமாக இருக்கிறதா என்று பார்த்து கால் வைத்து அவள் வீட்டு திண்ணையில் வந்தமர்ந்தான். இவன் விடும் மூச்சுக்காத்தே புஸ் புஸ்சென பயங்கரமாய் இவனுக்கே கேட்டது. அந்த வீதியில் இவனைப்பார்த்து குலைக்க ஒரு நாய் கூட இருக்கவில்லை. தலைக்கும் மேல் பூமாதிரி டிசைன் போட்ட சின்ன ஜன்னல் வழியே வெளிச்சம் எதுவும் இவனுக்கு தெரியவில்லை. இரும்புக்கதவு சாத்தியிருந்தது.

ராசாமணி என்று கூப்பிட தைரியத்தை வரவழைக்க சிரமப்பட்டான். கதவருகே எழுந்து நின்றபோது உள்ளே ராசமணியின் சிரிப்புச் சத்தம் கேட்டது.

“அங்க கொண்டி யாராச்சிம் வாயை வைப்பாங்களா? கூசுதுறா எருமை! ஐய்யோ! உட்றா பன்னி! கடிக்காதடா!” மீண்டும் சிரிப்புச் சத்தம் கேட்டது.

“தண்ணியப் போட்டுட்டு வராதேன்னு எத்தனவாட்டி சொல்லுறது! நாத்தமுடா! இனிமே வராதே எம்பட ஊட்டுக்கு!”

“ஏண்டி என்னை புடிக்கலையா? நீதான் கொளத்துப்பாளையத்தானை கட்டீட்டு போறீங்கறியே!”

“கட்டீட்டு போனா இங்க வரவே மாட்டனா நானு. வந்தா பாத்துக்கலாம்”

“அப்பெல்லாம் இந்த லப்பரை போடச்சொல்லி தொந்தரவு பண்ண மாட்டியே!”

“கலியாணம் பண்டீட்டா எதுக்கு லப்பரை போடச் சொல்லுவேன். லப்பரில்லாம இருந்தாத் தான் நல்லா இருக்கும். ஐய்யோ அசிங்கமா இல்லியாடா உனக்கு?”

“இதுல என்னபோயி அசிங்கம்?”

“அப்பிடியே வாயைக் கொண்டாந்து எம்பட வாயில வெப்பே நீ. உட்றா பன்னி! மேல வாடா அதெல்லாம் அப்பலையாவே ரெடியாயிடுது.. மேல வா”

“நாளைக்கி கொளத்துப்பாளையத்தானுக்கு முத்தம் குடுக்கப்போறே!”

“ஆமா என்னை கட்டிக்கப்போறவனுக்கு நான் முத்தம் குடுப்பேன் உனக்கு என்ன மொடை? பேசாம நீ குஞ்சாளை கட்டாம என்னை கட்டியிருக்கலாமுல்லொ. இப்ப அவளை தூங்க வெச்சிட்டு வந்திருக்கே! ஒரு நாளைக்கு அவகிட்ட மாட்டப்போறே பாரு.”

“வாயில கேட்டானா முத்தம்?”

“நீ இனி அந்த நாயம் பேசாதே ஆமா! சீக்கிரம் வேலையச் செஞ்சுட்டு எந்திரிச்சுப் போடா”

வெளியே கதவருகில் நின்றிருந்த கலியனுக்கு ஏனோ தலை சுழழுவது மாதிரி இருந்தது. திண்ணையில் உட்கார்ந்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சளாரென வந்த வழியே கிளம்பினான். சார் சொன்னது காதில் ஒலித்தது. அழகிருக்கிற இடத்தில் தான் ஆபத்தும் இருக்குமுடா! இனி யாரைத்தான் நம்புவது? என்ற கேள்வி வேறு வந்து தொலைத்து விட்டது. கூசாமல் ஒருவள் தன்னிடம் மதியம் அப்படி பேசுவாளா? ஒன்றுமே தெரியாதது போல பேசினாளே! இரண்டு நாளில் வட்டையனாக்கி விட்டாளே! சார் சொன்னது போல முத்தம் வாங்க வந்ததால் ஆயிற்று! இல்லையென்றால்? நினைத்துப் பார்க்கவே பயங்கரமாய் இருந்தது. எல்லா நாளும் வட்டையனாக்கிக் கொண்டே இருப்பாள் இந்த சிவந்த அழகுக்காரி.

ராசாமணியைத் தேடிப்போகையில் தான் ஒரு யுகமே ஆனது போல தெரிந்த்து. கோபத்திலும் வயிற்றெரிச்சலிலும் திரும்பி வருகையில் மளமளவென பீட்டர் சாரின் வீட்டு வாசலுக்கு வந்து விட்டான். கதவு நீக்கித்தான் இருந்தது. உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சார்! என்று கூப்பிடுகையிலேயே இவனுக்கு அழுகாச்சி வந்து விட்டது! வெளி விளக்கு உடனே எரிந்த்து. பீட்டர் வெளிவந்ததும் திண்ணையில் அமர்ந்து, ”முத்தம் வாங்கிட்டு வந்துட்டியா? சீக்கிரமா வந்துட்டே?” என்றார்.

“சார் அவ தேவடியாப்புள்ள சார்! இன்னொருத்தங்கூட ஊட்டுக்குள்ள பொறண்டுட்டு கெடக்கா சார்!” விசும்பிக் கொண்டே சொன்னான்.

“சரி தேவடியாப்பிள்ள விடு! அதுக்கேன் அழறே?”

“என்ன சார் இப்படியுமா ஒருத்தனை ஏமாத்துவா ஒருத்தி?”

“யாரு ஏமாந்தது? நீதாண்டா போயி அவளை கட்டிக்கிறேன்னு சொன்னே? அவளா வந்து என்னை கட்டிக்கிறியான்னு உன்னை

கேட்டா? நீயாப்போவே, நீயாக்கேப்பே, நீயா ஏமாந்துட்டு, நீயா அழுவே? அவளை குத்தமும் சொல்வே! நீ நெனைக்கிற மாதிரியே எல்லாமும் எப்படா நடந்திருக்குது? எனக்கு கோபியிலயே வேலை கிடச்சிருந்தா சூப்பரு தான். இங்க வந்து சோத்தை ஆக்கி தின்னுட்டு ஒத்தயா கெடக்க வேண்டியதில்ல!"

"நானு ஒருநாளுகூட ஒருத்தி மேலயும் ஆசை வச்சதில்லீங்க சார். இவளை பார்த்ததும் கட்டிக்க நெனச்சேன்"

"நெனைப்பீடா! ஏன் நெனைக்க மாட்டே? செவப்புன்னே, அழகுன்னே சரி. நீ உம்மட மூஞ்சிய கண்ணாடில பாத்திருக்கியா? உம்மட கையை இப்ப இருட்டுல பாரு. நீ கேட்ட ஒடனே சம்மதம் சொல்றாளேன்னு கொஞ்சமாச்சிம் யோசிச்சு பாத்தியா? கெடையாது! முத்தம் வாங்க நான் தான் அனுப்பினேன். அதை வாங்கிட்டு வந்திருந்தீன்னா ச்சே! சூப்பரு.. நம்மாளு காட்டுல முட்டி அவ ஊடு போயி வாங்கீட்டே வந்துட்டான்யான்னு சந்தோசம் தான் எனக்கும். நல்லதாப்போச்சு உடு! வயசாயிட்டு இருக்குதுல்லொ. சொந்தத்துல பொண்ணு இருந்தா பாக்கச் சொல்லி சீக்கிரம் கட்டிக்க! இப்படியே சுத்தினீன்னா இன்னொருத்தி கூட இவளை விட அழகா கண்ணுல சிக்குவா! அவகிட்டயும் போயி நிப்பே நீ! அதெல்லாம் ஒத்துவராது பாத்துக்க! ஊட்டுல பார்த்து கட்டிவெக்கிற பொண்ணை கட்டிக்க" என்றார். கலியன் டிவிஎஸ்சில் சாவியை நுழைத்தான்.

கிளம்பி வருகையில் நல்லவேளை இன்றே இரவில் அம்மாவிடம் ராசாமணியைப் பற்றி சொல்லி சம்மதம் வாங்கிவிட நினைத்திருந்தான். அதை நினைத்து திருப்திப்பட்டான். போக பொடுசாள் சொன்ன ஒட்டுற மண்ணுதான் ஒட்டுமென்ற சொல்லுக்கு அர்த்தமும் இப்போது தான் அவனுக்கு தெரிந்தது. சிலர் சில நேரங்களில் சில இடங்களில் பட்டதை சொல்கிறார்கள் தான். ஆனால் அந்த சமயங்களில் கேட்பவர்களுக்கு மண்டையில் உறைப்பதில்லை.

அடுத்த நாள் ராசாமணியையும் அவள் அம்மாவையும் கூட்டி வர எட்டு மணிக்கே சென்றிருந்தான். அவள் வழக்கம்போல நடுப்புறத்தில் அமர்ந்து கொண்டதும் அவள் அம்மா உட்கார்ந்து கொண்டாள். அவள் அம்மா ஊமையோ என்ற சந்தேகம் இவனுக்கு இப்போது தான் வந்தது. 'போலாம் உடுங்க!' என்றவல் வழக்கம் போல தன் மார்பகத்தை இவன் முதுகில் அழுத்திக் கொண்டாள்.

"ராசாமணி" என்றான் கலியன்.

“சொல்லுங்க”

“என் முதுவுல முட்டீட்டு இருக்குறதை அக்கட்டால நவுத்திக்கோ!” என்றான். அவள் நகர்த்திக் கொண்டாள். இவனை கிளர்ச்சியூட்ட அங்கு எதுவும் இருக்கவில்லை.

# சயனம் 9

மஞ்சுளா ஊராருக்குத்தான் பொன்னம்மாவாகவும், சாப்பாட்டுக்காரம்மாவாகவும் இருந்தாள். குமரேசனுக்கு எப்போதும் மஞ்சுளா தான். குமரேசன் தனக்கு சுழி கொஞ்சம் இருப்பதைத் தான் ஊருக்குள் வந்த நாளிலேயே கண்டு கொண்டானே! வீடும் வசதியாக அன்றே கிடைத்தது. சாப்பாட்டிற்காக இவனே சட்டி பானை கழுவ வேண்டியதில்லாமல் போனது. ஆயிற்று இப்போது மூன்று மாதம் போல!

மஞ்சுளா எங்கே விட்டால் இவன் சாப்பிட்ட வட்டிலைக்கூட கழுவி வைத்து விடுவாளோ என்பது போல இருந்தாள். இவனுக்காகவே பணி செய்ய வந்தவள் போல எந்த நேரமும் மஞ்சுளா இருப்பது இவனுக்குத்தான் சங்கடமாய் இருந்தது. அப்படி அவள் முகம் சுளித்தும் எந்த வேலையையும் செய்வதில்லை. ஈடுபாட்டோடு இருப்பது அவளது இயல்பு என்றெண்ணிக் கொண்டான்.

அப்படித்தான் முன்பு இவன் துணிமணிகளை துவைக்க ஒரு ஞாயிறு பாத்ரூமில் பக்கெட்டில் நனைத்து வைத்திருந்த போது வந்தவள் அவள் பாட்டுக்கு கல்லில் துணியைத் தூக்கிப் போட்டு சோப்பு போட ஆரம்பித்து விட்டாள்.

இவன் தான் ஓடிப்போய், 'வேண்டாமுங்க மஞ்சுளா! அதையெல்லாம் அப்படியே விடுங்க நான் பாத்துக்கறேன். சித்த நேரம் ஊறப் போட்டிருந்தேன். நீங்க விடுங்க!' என்று போய் பக்கெட்டை தள்ளி வைக்க எடுத்தான். நைட்டியை கொஞ்சம் தூக்கினாற் போல் இடுப்பு அரணாகயிற்றில் செருகி இருந்தவள் இவனை நிமிர்ந்து பார்த்தாள். அவள் பார்வையை வைத்து இவனால் ஒன்றும் நினைக்கவும் முடியவில்லை. நேர் பார்த்தவளும் எதுவும் பேசாமல் கையில் சோப்புடன் நின்றிருக்க இவன் பக்கெட்டை வைத்து விட்டு வந்து விட்டான் ஆசாரத்திற்கு. பின்பு பாத்ரூமில் துணி துவைக்கும் சப்தம் அரைமணி நேரம் கேட்டுக் கொண்டிருந்தது.

இவனுக்கு சங்கடமெல்லாம் மஞ்சுளா துணி துவைப்பதால் அல்ல! இவனின் ஜட்டி பக்கெட்டுக்குள் மூன்று கிடந்தது தான். அது என்ன இருந்தாலும் சிரமம் தான். இனி கிட்டே சென்று ஜட்டிகளை மட்டும் விட்டுடுங்க மஞ்சுளா! என்ற சொல்லவும் வாய் வராது. அவைகளை பாத்ரூமிற்கு வெளியே தண்ணீர் தொட்டிக்கும் பாத்ரூமுக்கும் தொங்கிய நைலான் கயிற்றில் காயப் போட்டு விட்டுத்தான் நனைந்த நைட்டியை

கீழிறக்கி உதறிக் கொண்டு வந்து ஆசாரத்தில் கிடந்த சேரில் அமர்ந்தாள்.

“இப்ப நான் என்ன ஆயிட்டனுங்க சார்? கொஞ்சம் எங்காச்சிம் தேஞ்சு போயிட்டனா?” என்றாள்.

“என் துணிகளையாச்சிம் தொவைக்க உட்டுருக்கலாங்க மஞ்சுளா என்னை நீங்க. உங்களுக்கு நான் என்ன செய்ய முடியும்?”

“நீங்க எதாச்சிம் செய்யுவீங்கன்னு தான் நான் வந்து செஞ்சனா? அப்படின்னா எனக்கு ஒரு சம்பளம் போட்டுக் குடுங்க சார். காசுக்காகத்தான் எல்லாரும் வேலை செஞ்சுட்டு இருக்காங்க” என்றாள் கொஞ்சம் வேகமாய்.

“இல்ல வந்த நாள்ல இருந்து எனக்கு எல்லா வேலையும் பண்ணிட்டே இருக்கீங்க மஞ்சுளா. இந்த வீட்டைக்கூட பிடிச்சுக் குடுத்தீங்க”

“சார் எல்லாரும் பொன்னம்மான்னு சொல்லி கூப்பிடுறாங்க என்னை. ஆனா வந்த நாள்லயே எம்பேரு அதா இருக்காதுன்னு தெரிஞ்சு பேரை கேட்டிங்க. தெரிஞ்சுட்டு இன்னிக்கி வரைக்கும் மஞ்சுளான்னு கூப்பிடறீங்க. அது என் பேருதான். ஆனா நீங்க கூப்பிடறப்ப எனக்கு ஆமா நான் மஞ்சுளா, ஆமா நான் மஞ்சுளா, நான் பொன்னம்மா இல்லன்னு இப்ப வரைக்கும் நெனச்சுட்டே இருக்கேன். எங்கம்மாக்கு கூட நான் பொன்னம்மா சார்.”

“அதனால தான் தொவைக்க கூட என்னை விடலீங்களா?’

“அப்பத்தான் சார் இன்னொரு எடத்துக்கு போனா ஊர் பேர் தெரியாத எடத்துல நமக்கும் யாரோ ஒருத்தர் உதவி செய்வாரு. நாமளே செய்யலின்னா நமக்கு யாரு வருவாங்க? நீங்க இதுக்கெல்லாம் பயப்படலையாட்ட இருக்குங்க சார். உங்க மனசுல வேற எதுக்கோ பயம் வந்திருக்குன்னு நெனைக்கேன்”

“வேறன்னா? புரியலீங்களே!”

“என்னாரமும் பொன்னம்மா வாத்தியாரு ஊட்டுல கெடக்குறாள்னு ஊர்க்காரங்க பேசிடுவாங்கன்னு உங்களுக்கு பயம்” என்றாள். இவனுக்கு அதுவும் மனதில் இருந்தது தான். இருந்தும் யாரும் ஒரு எதிர்பார்ப்பு இல்லாமல் உதவி செய்வதற்கு அளவு என்று ஒன்று இருக்குமல்லவா! இப்படியெல்லாம் மக்கள் இன்னமுமா கிராமத்தில் இருக்கிறார்கள்? என்றே இருந்தது.

“இருங்க மஞ்சுளா ஒரு நிமிசம்” என்றவன் பாத்ரூமிற்கு எழுந்து

வந்தான். கயிற்றில் இவன் ஜட்டிகள் தொங்கிக் கொண்டிருந்தன ஈரமாய்! இவன் திரும்ப வந்து அமர்ந்து கொண்டான்.

“என்ன போயி பார்த்துட்டு வந்தீங்க சார்? ஒழுக்கமா தொவச்சிருக்காளான்னா?” என்றாள். இவன் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை.

“ஒரு வாரமா நல்லா பேசிட்டு இருந்தீங்க சார் நீங்க. இன்னிக்கி ஏனோ என்னமோ மாதிரி இருக்கீங்க! எங்க வீட்டுக்காரர் கூட நேத்து காலையில பேசிட்டு இருந்தீங்களே அவரு எதாச்சிம் சொல்லிட்டாரா? வரட்டும் அந்தாளை பேசிக்கிறேன் இன்னிக்கி! அஞ்சு பைசாக்கு கையாலாகாத மனுசன் சார். குடி ஒன்னுதான் அவருக்கு தெரியும். வேற ஒன்னும் தெரியாது. நாலு பேருகிட்ட நல்லா பேசுவாப்லீங்கறீங்களா? எல்லாரையும் மோசமாவே பேசுவாப்ல!”

“இல்லைங்க மஞ்சுளா, அவரு என்கிட்ட நல்லாத்தான் பேசினாரு”

“அப்புறம் வேற யாராச்சிம் எதாச்சிம் சொன்னாங்களா? சரி நீங்க வந்த எடத்துல வம்பை தேடிக்க கூடாதுன்னு நினைக்கறீங்க சார்” என்று அவளாகவே எதையாவது நினைத்து பேசிக்கொண்டிருக்க இவன் இக்கட்டில் மாட்டினவன் போல இருந்தான்.

மஞ்சுளாவின் அவசியம் இவனுக்கு இருந்தது. காலை, இரவு என்று சாப்பாடு அவள் தான் கொண்டு வருகிறாள். மதியம் பள்ளியில் சாப்பிடும் போதும் தலைமையாசிரியருக்கு சாப்பாடு தட்டில் கொண்டு வருகையில் இவனுக்காகவும் தட்டில் போட்டு அறைக்கு கொண்டு வருவாள். பள்ளியில் இவனும் தலைமை ஆசிரியையும் மட்டுமே சாப்பிடுவார்கள். இப்படி தொட்ட இடத்திலெல்லாம் மஞ்சுளாவின் உதவி இருந்து கொண்டேயிருந்தது.

ஊரில் வம்பு பேச நான்கு பேர் இருக்கத்தான் செய்வார்கள். இவள் கணவர் கொஞ்சம் சந்தேக புத்திக்காரர் என்பது கலியன் சொன்னது. அதனால் அவள் குடும்பத்தில் ஏதாவது தகராறு நடந்தால் நாலு பேர் நாயம் கேட்கவும் வந்து விடுவார்கள். மஞ்சுளா எல்லோரிடமும் ஒரே மாதிரி தான் பழகுகிறாள். இவனுக்கு சரியான நேரத்தில் வரவேண்டிய குழப்பம் வந்தே விட்டது.

மஞ்சுளாவோ இவனின் குழப்ப முகத்தை காலையிலிருந்தே கண்டவள் போலவும் யாரோ காரணமென்றும் முடிவே செய்து தன்னப்போல பேசிக் கொண்டிருந்தாள். அவள் வாயை அடைக்க வழி தேடினவன் அவள் பேசப் பேச அவளைப் பார்த்து புன்னகைத்தான். இவன்

புன்னகையை பார்த்து அவள் பேச்சை நிறுத்திக் கொண்டு இவனைப் போலவே சிரித்தாள்.

“எதுக்குங்க மஞ்சுளா நீங்களாவே நெனச்சிட்டு பேசிட்டே இருக்கீங்க? விடுங்க அதை. நீங்களே எனக்கு வாரம் ஒருக்கா துணிகளை தொவைச்சுக்குடுங்க! சாப்பாடு கொண்டுவந்தா ஊட்டிக் கூட விடுங்க! நானெல்லாம் இனி சாப்பிட்ட வட்டல்ல கையை கழுவிட்டு நானே எடுத்துட்டு போயி கழுவலை. நீங்களே கழுவிடுங்க! எல்லாம் உங்க விருப்பம் போல செய்யுங்க. ஊர்ல யாரு பேசினாலும் எனக்கு கவலையே கெடையாது. நீங்க எது பண்ணாலும் எனக்கு சந்தோசம் தான். உங்களுக்கு இந்த வீட்டுல முழு சுதந்திரம். ஆமா நீங்க ஏன் குழம்பி ரை ரையின்னு பேச ஆரம்பிச்சீங்க?” என்றான். மூஞ்சியை உடனே சுளித்துக் காட்டினாள் இவனுக்கு.

மஞ்சுளா குமரேசன் அப்படி திடீரென பேசுவான் என்று நினைக்கவே இல்லை. அவளுக்கு திடீரென நல்ல வெய்யலில் மழை இவள் தலையில் மட்டும் கொட்டி நனைத்தது மாதிரி இருந்தது.

“ஆனா ஒன்னுங்க மஞ்சுளா என் பேரை வச்சு உங்க வீட்டுல என்னிக்குமே சண்டை வச்சுக்காதீங்க. அப்படி நடந்துட்டா மட்டும் எனக்கு ரொம்ப சங்கட்டமாயிடும். உங்களுக்கும் அப்படி தோணும். பக்கத்து பக்கத்து வீட்டுல இருந்துட்டு பாத்தா முகத்தை திருப்பீட்டு போறாப்ல ஆயிடக்கூடாது. அதனால தான் அளவோட இருக்க நெனச்சேன். அப்படி நெனைக்க இன்னிக்கி துணியை துவச்சீங்கள்ள அதுகூட காரணமாயிடுச்சு. சரி விடுங்க. நான் பீட்டர் சாருக்கு போன் பண்ணுறேன். ஞாயித்துக்கிழமையும் அதுவுமா சீச்சி சாப்பிடாம இருந்தா சுத்தப்படாது பாத்துக்கங்க. அவரு கூட போயி எல்லைக்காட்டுல எடுத்துட்டு வர்றேன். நீங்கதான் சூப்பரா செஞ்சு தரணும்” என்றான். அவள் மழையில் நனைந்திருந்தாள்.

“இப்பத்தான் நான் நெனச்ச மாதிரி பேசறீங்க சார். ஆனா கொஞ்சம் நேரத்திக்கி முந்தி உங்க முகமே செரியில்லை. பாக்க என்னமோ மாதிரி இருந்துச்சு. அதனால தான் யாராச்சிம் பேசினாங்களோன்னு நெனச்சிட்டேன். எவன் இந்த ஊர்ல பேசினாலும் என்கிட்ட சொல்லுங்க சார், நான் பாத்துக்கறேன் அவனை! ஆமாடா வாத்தியாருக்கும் எனக்கும் ஆயிரத்தெட்டு இருக்கும் உனக்கு எவத்திக்கிடா அதனால வலிக்குதுன்னு புடிச்சு உடறேன். நானென்ன அவனுக ஊட்டுக்கு சோத்துக்கா போயி நிக்கேன்? நீங்க ஆளை மட்டும் சொல்லுங்க!” என்றாள்.

“மறுக்காவும் ஆரம்பிச்சுட்டீங்களா”

“வாங்க போங்கன்னு என்னை பேசாதீங்க சார். உங்களை விட சின்னவ நானு”

“சரிங்க, ஆனா சார் போடறதை நீங்க நிறுத்திக்கங்க”

“இன்னிக்கி காத்தால எங்கம்மாட்ட கோழி புடிக்கலாமுன்னு சொன்னேங்க! ஆனா அதேனோ வயிறு செரியில்லீன்னு சொன்னங்காட்டி உட்டுட்டேன். எங்க வீட்டுல மாசத்திக்கி ஒருக்காத்தான் செய்வோம்”

“நான் வாரமானா ஞாயித்துக்கிழமை சாப்பிட்டு பழக்கமாயிடுச்சு மஞ்சுளா.”

“எனக்கென்ன சமையல்காரிதான நானு அதெல்லாம் ஜம்முன்னு செஞ்சு தந்துடுவேன். ஆமா கறி சாப்பிடறப்பவும் நீங்க பண்ணிக்க மாட்டீங்களா?” என்று கட்டை விரலை வாயருகே கொண்டு சென்று காட்டினாள். இவனும் வாயருகே ஒரு விரலை வைத்து தலையை ஆட்டினான்.

“பீட்டர் சார் பட்டையா குடிக்கிறார்னு கலியன் சொன்னான். உங்களுக்கு ஏன் பழக்கமில்லாம போச்சு?”

“யாரும் பழக்கி உடுல. குடிக்கிறவங்களைக் கண்டா தூரப்போயிடுவேன்”

“அதான் நல்லது. எங்குளுது இருக்கே சாமீ” என்றாள். போன் செய்த பத்து நிமிடத்தில் பீட்டர் குமரேசன் வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தி விட்டு வந்தார் உள்ளே. அவருக்கு சொம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள் மஞ்சுளா.

“சார் நீங்க கூப்பிடறப்ப எல்லக்காட்டுல தான் நின்னேன். அங்க மட்டன் கடை திறந்திருக்கலையே!” என்றவர் குடித்திருந்தார் என்பதை குமரேசன் கண்டு கொண்டான்.

“கடை திறந்ததும் ஆரம்பிச்சுட்டீங்க போல”

“ஆமாங்க சார். பேசாம சனி ஞாயிறும் பள்ளிக்கூடம் வெச்சுட்டாங்கன்னா பரவாயில்ல. வாரத்துல ரெண்டு நாளைக்கி இது பழக்கமாயிடுச்சுங்க சார்.”

“சாப்பிட்டீங்களா சார். இங்க இட்லி இருக்கு”

“உங்களுக்கு பொன்னம்மா இருக்காங்க! எனக்கு அங்க நானே

செஞ்சுக்க வேண்டிதா இருக்குங்க சார். ஆனா பழக்கம் ஆயிடுச்சு. என்ன கொடத்தை எடுத்துட்டு பைப்படிக்கு போறப்ப பைப்படியில பொம்பளப்பிள்ளைங்க இல்லாத நேரம் போறேன்."

"அவங்க என்ன உங்களை கடிச்சாங்க சார் தின்னு போடுவாங்க?" என்றாள் மஞ்சுளா.

"அப்படி இல்லீங்க பொன்னம்மா. என்னமோ ஒரு சங்கடம் தான். பேசுவாங்க பாருங்க முன்னால உட்டு பின்னால. இவுரே சமைச்சு சாப்பிடுறாருடின்னு. இன்னிக்கி மட்டன் எடுத்து தான் கொழம்பு வச்சேன் சார். காத்தால எல்லக்காட்டுல போயி பார்த்தேன் கடை இல்ல. நேரா ஊத்துக்குளி உட்டு ஒருகிலோ சிக்கன் எடுத்துட்டு வந்தேன்"

"சிக்கன்ல என்னங்க சார் இருக்குது, ஒரு சத்தும் இல்ல"

"ஆனா டேஸ்ட்டு அதுல தானுங்க சார் இருக்குது. இப்படி துளி நனைச்சுட்டா மளார்னு இறங்கிடும். காலியாயிடும். நீங்க சாப்பிடறதில்லையா?"

"அதை நான் சாப்பிடறதில்லீங்க சார். மட்டன் சாப்பிடுவேன். இல்லையின்னா மீன்"

"மீன் ஊத்துக்குளியிலும் கிடைக்குதுங்க சார். சரி போயிட்டு வந்துடலாங்க கிளம்புங்க" என்றதும் குமரேசன் சட்டை ஒன்றை எடுத்து மாட்டிக் கொண்டு கிளம்பினான். இப்படி கறி எடுக்க போய் வருவது அதன்பின் வழக்கமாகி விட்டது. குமரேசன் மஞ்சுளாவின் வீட்டுக்கும் சேர்த்துத்தான் மீனாக இருந்தாலும், மட்டனாக இருந்தாலும் எடுத்து வருவான். சமையலை குமரேசன் வீட்டில் தான் ஞாயிறு செய்வாள் மஞ்சுளா.

பொழுது போக பள்ளியிலிருந்து செஸ் போர்டை எடுத்து வந்து வைத்திருந்தான் குமரேசன். அதை வீட்டில் வைத்து கண்ணுக்கு விளையாடிக் கொண்டிருந்த மாணவன் யார் சிக்கினாலும் இழுத்து வைத்து கற்றுக் கொடுத்து விளையாடினான். அதற்காகவே மறு வாரத்தில் மாணவர்கள் யாரும் அவன் கண்ணுக்கே சிக்காமல் விளையாடப் போகும் பாதையை மாற்றிக் கொண்டார்கள். பகல் நேரத்தில் தூங்கியே பழக்கமில்லாத குமரேசன் கடைசியாக மஞ்சுளாவை அமரவைத்து கற்றுக் கொடுத்தான்.

முன்னால் வரிசையாக குட்டி சைசில் நிற்பவர்கள் சிப்பாய்கள் என்றும் அவர்கள் ஒவ்வொரு ஸ்டெப் தான் முன்புறம் நகருவார்கள் என்றும், யானை நேராக மட்டுமே செல்லும் என்றும் ராணி எங்கு

வேண்டுமானாலும் போய் எதிரிகளை போட்டுத் தள்ளுவாள் என்றும் ராஜாவை வெட்டி விட்டால் ஆட்டம் முடிந்தது என்றும் கற்றுக் கொடுத்தான். கொஞ்சம் பழக்கமாக அவளுக்கு இரண்டு வாரங்கள் ஆகிவிட்டது. மூன்றாவது வாரத்தில், பத்து ரூவா பந்தயம் வெச்சு ஆடலாங்க! என்றாள். குமரேசன் மிரண்டான்.

“அதெல்லாம் தப்பு மஞ்சுளா” என்றான்.

“அப்பத்தான் ஆட்டம் நல்ல இருக்குமுங்க. இது வந்து தோத்தா தோச்சுட்டு போச்சாறேன்னு ஆடறன்ல” என்றாள். இவன் காய்களை அள்ளி டப்பியில் போட முயற்சிக்கவும், ’சேரிங்க சேரிங்க பெட்டு வேண்டாம் சும்மாவே ஆடுவோம்!’ என்று இவன் கைப்பிடித்து தடுத்தாள். சிலவாரங்களில் கேரம் போர்டு எடுத்து வந்து தட்டினார்கள். குழிக்குள் ஸ்டைகரால் தட்டி வெற்றி பெற்ற வெள்ளைக் காய்கள் இரண்டு ருபாய் என்றும் கருப்பு நிறக் காய்களுக்கு ஒரு ரூபாய் என்றும் மதிப்பு வைத்து விளையாடினார்கள். இப்படித்தான் அவர்கள் சனி, ஞாயிறுகளை கழித்துக் கொண்டிருந்தார்கள்.

நாளாக நாளாக குமரேசனுக்கு மஞ்சுளாவின் உடம்பு மீது ஒருகண் விழுந்தது. அவளுக்கும் அப்படி ஏதாவது எண்ணம் தன் மீது இருக்குமா என்பது தான் தெரியவில்லை. அருகிலேயே ஒரு பெண் எந்த நேரமும் இருந்தால் எவனுக்கும் கொஞ்சூண்டு ஆசையேனும் வந்தால் தான் அவன் ஆண்பிள்ளை. அப்படியும் சொல்லி மனதை சமாதானப் படுத்திக் கொண்டான்.

குமரேசன் பயந்தது இதற்குத்தான். முடிந்த மட்டிலும் அவளின் உடல் அழகுகள் இவன் கண்களுக்கு தெரிந்தாலும் தவிர்த்து பார்வையை திருப்பிக் கொண்டிருந்தான். ஆனால் மனம் மட்டும் அந்த கவர்ச்சியான இடங்களிலேயே இருந்தது. ஆனால் மஞ்சுளாவோ அதைப் பற்றியான எண்ணமின்றி இருந்தாள். அவளிடம் இருந்து ஒதுங்கிக் கொள்ள பீட்டரிடம் சென்றால் அவரோ போதையில் இப்படியான பேச்சுகளையே பேசினார். இவன் செல்போனுக்கு அவர் ப்ளூடூத் வழியாக பழைய இளையராஜா பாடல்களை இறக்கிக் கொடுத்தார். ஏற்கனவே இவனிடம் இருந்த புதிய பாடல்களை இதுகெல்லாம் பாட்டுன்னு வெச்சிட்டு இருக்கீங்களா? என்று கேட்டு மொத்தமாக டிலைட் செய்தார்.

ஒரு ஊர்ல சார் என்று பீட்டர் ஆரம்பித்தாலே பச்சைவர்ண கதையாக சொல்லி முடிப்பார். அவருக்கு எங்கிருந்து இம்மாதிரி கதைகள் கிடைக்கின்றன என்று தெரியவில்லை. ஒரு ஊர்ல என்று ஆரம்பித்தார்

என்றால் வேண்டாங்க சார்! என்று சொல்ல ஆரம்பித்து அவரைத் தேடி செல்வதை இரண்டு வாரத்தில் விட்டு விட்டான். இரவு நேரங்களில் காதில் ஹெட்போனை மாட்டிக் கொண்டு தூக்கம் வரும் வரை இளையராஜா பாடல்கள் கேட்டான்.

ஊரில் அம்மா, தங்கை ஞாபகம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து கொளத்துப்பாளைய பள்ளி ஆசிரியராக மாறிக் கொண்டிருந்தான் குமரேசன். அவன் ஒரு டூவீலரின் தேவை இருப்பதை மூன்று மாதம் கழித்து யோசித்தான். ஒரு திரைப்படம் பார்க்க வேண்டுமென்றால் சென்னிமலை பதினைந்து கிலோ மீட்டர் செல்லவேண்டி இருக்கிறதே. ஊரில் இருக்கும் டூவீலரை செல்லும் போது எடுத்துக் கொண்டே வந்து விடலாம் என்று யோசித்துக் கிடந்தான். மீறிப்போனால் ஒரு நூத்தைம்பது கிலோ மீட்டர் வரும் என்று கணக்கிட்டான். ஊரில் அது ஆசாரத்தில் போர்வை போர்த்தி சும்மாதான் நின்றிருக்கும். அதை ஓட்டுவதற்கு ஆளில்லை அங்கு. அய்யன் தனகென டிவியெஸ் வைத்திருக்கிறது. அதற்காகவே அடுத்த வாரம் கிளம்பி விடுவது என்று முடிவும் செய்து கொண்டான்.

மஞ்சுளா கூட வீட்டில் சும்மா கிடக்கும் டிவியை இங்கு கொண்டு வந்து வைக்கிறேன் என்றாள். கேபிள்காரன் வருகையில் கனெக்சன் எடுத்துக் கொண்டால் நியூசாவது பார்த்துக் கொண்டிருக்கலாம் நீங்க! என்றாள். எதையும் அடுத்தவர்களிடம் அப்படி வாங்கி பழக்கமில்லாத காரணத்தால் அதையும் மறுத்து விட்டான்.

பெண்ணின் அருகாமை அவனுக்கு ஊரில் இருந்ததில்லை. ஊரில் காதலிக்கும் நண்பர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் கலியாணத்துக்காக காதலிக்கும் உண்மைக் காதலர்களும் அல்ல. அவர்கள் காதலெல்லாம் இரவில் தான். அதுவும் இரவுப்பூச்சிகள் கத்தும் நொச்சி மரங்கள் வளர்ந்த மறைவிடங்களில். அதைப்பற்றியான பேச்சுகளை நண்பர்கள் அப்படி சுவாரஸ்யமாக பேசுகையில் இவனுக்கு ஆச்சரியம் மட்டுமே இருக்கும். நண்பர்கள் சாமார்த்தியசாலிகள் என்று நினைத்துக் கொள்வான். சாலையில் போகும் பெண் நேரம் கேட்டால் கூட காது கேளாதவன் போல வந்து விடுபவன் குமரேசன்.

அவன் பேசிய பெண்கள் இவன் அம்மா, அக்கா, தங்கை, மற்றும் பள்ளி டீச்சர்கள். அவ்வளவு தான். அதற்கான வாய்ப்புகளையும் அவன் உருவாக்கிக் கொள்ளவும் இல்லை. படிப்பு படிப்பு எந்த நேரமும் படிப்பு. போஸ்டிங் போடும் வரையான இடைப்பட்ட காலத்தில் தான் தனியாக திரைப்படம் பார்க்க தியேட்டருக்குள் நுழைந்தவன். அவன் கொஞ்சம்

சுதந்திரமாக பேசிய ஒரே திருமணமான பெண் மஞ்சுளா. அதுவும் அவளாக வலிய வந்து பேசி பழகியதால் இவனுக்கு பெண்கள் மீதான அந்த பயம் சற்று விலகியது. விலகியதும் வேறு எண்ணங்கள் மனதில் வந்து நுழைந்து அவனை ஆட்டிக் கொண்டிருந்தன.

இந்த எண்ணங்கள் எல்லாம் தவறு என்றும் தன்னை குழந்தைகளுக்கு பாடம் கற்றுத்தரும் ஆசிரியர் என்றும் மனதை திடப்படுத்திக் கொண்டாலும் மஞ்சுளாவை பார்த்ததும் இப்போது மனது சஞ்சலப்பட ஆரம்பித்து விட்டது இவனுக்கு. மூன்றுவேளை சாப்பாடு நொப்பமாய் தின்று விட்டு இப்படி காலாட்டிக் கொண்டு படுத்திருந்தால் இன்னும் இதை விட மேலான தவறுக்கு கூட மனது யோசிக்கும் என்றே அவனாக எண்ணி குழம்பிக் கொண்டான்.

இதே போல தான் முதலாக பீட்டர் அறைக்கு சென்றிருந்த போது அவர் டம்ளரில் சரக்கை ஊற்றிக் கொண்டு, ’கொஞ்சூண்டு குடிங்க சார் ஒன்னும் பண்டாது. ஜாலியா இருக்கும். போறப்ப என்னத்த சார் கொண்டு போறோம்?’ என்றெல்லாம் அவர் பேசுகையில் என்னதான் ஆகிறது குடித்துப் பார்ப்போமே என்று தான் சிந்தனை இவனுக்கு ஓடியது. இன்னும் இரண்டு முறை அவர் சொல்லியிருந்தால் ஒருவேளை இவன் டம்ளரை தூக்கி கடக்கென ஊற்றியிருந்தாலும் ஊற்றியிருப்பான்.

குடிகாரர்கள் உருவாவதில்லை உருவாக்கப்படுகிறார்கள் என்றே நினைத்தான் குமரேசன். அதிலும் அவர் சொன்ன, போறபோது கொண்டுட்டா போறோம்! என்ற வசனம் கொஞ்சம் சக்தி வாய்ந்தது தான். கொஞ்சம் யோசித்தால் ஆமாம் போ! என்று குடிக்க ஆரம்பித்து விடுவான் ஒருவன் என்றே நினைத்தான். இனி மஞ்சுளாவை ஒரு நாள் கூட முன்புபோல் சகஜமாக பார்க்க முடியாது என்பது அவனுக்கு தெரிந்து போனது அவனது செல்போனில் பீட்டர் ஏற்றிக் கொடுத்திருந்த சில வீடியோக்களை திடீரென பார்த்த போது தான்.

பெண்களை ஒரு நாளும் ஆடையின்றி இவன் பார்த்ததே இல்லை. முதலாக பாடல்கள் தான் வீடியோவாக ஏற்றியிருக்கிறார் என்று பார்த்தவன் காதுகள் மறுநொடியே அடைத்துக் கொண்டது போலாயிற்று. ஐய்யோ!

உடனே குமரேசனுக்கு மஞ்சுளாவின் ஞாபகம் தான் வந்தது. அவள் இவன் செல்போனை அடிக்கடி தூக்கிக் கொண்டு போய் எம்பட செட்டுக்கு பாட்டுகளை ஏத்திட்டு வந்து தர்றேனுங்க! என்று சொல்லிப் போவாள். இரண்டு தினம் முன்புகூட கையில் வைத்திருந்தாளே! மானம்

போச்சு இந்த பீட்டரால்! இந்த வயதில் பார்க்காமல் எப்போது பார்ப்பார் என்று ஏற்றிவிட்டாரோ?

அடுத்தவர்களிடம் செல்போன் கொடுப்பதால் எத்தனை சிக்கல்கள் வருகின்றன! வேணுமா? என்று சொல்லி விட்டாவது இவைகளை அவர் ஏற்றியிருக்கலாமே! கண்டிப்பாக மஞ்சுளா பார்த்திருப்பாள் என்ற எண்ணமே நினைக்க இவனுக்கு கசந்தது. அட நாங்கூட என்னமோன்னு நெனச்சேன் நீயும் இப்படித்தானா? என்றல்லவா நினைப்பாள்!

பீட்டரிடம் இதுபற்றி அடுத்த நாள் கேட்க வேண்டுமென நினைத்தான். மெமரிகார்டோட அப்புறம் எதுக்கு உங்களுக்கு அந்த செட்டு? என்று கேட்பார் நிச்சயமாய். அவனவன் செல்போனில் விதவிதமாய் பெண்களை நிர்வாணப்படுத்தி இயக்குனராகிக் கொண்டிருக்கிறான் தெரியுமா உங்களுக்கு என்பார். பெண்கள் தங்களைத் தாங்களே நிர்வாணப்படுத்தி ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் எடுத்து ரசித்து தான் ரசித்ததோடில்லாமல் உலகமே பார்த்து ஜொள் விடட்டுமென நெட்டில் ஏற்றிக் கொண்டிருக்கும் காலத்தில் இதை ஒரு நாயம் என்று கேட்க வந்து விட்டீர்கள்! போங்கள் சார் பிடிக்கலைன்னா அழிச்சுடுங்க! என்பார். அப்படித்தான் அவர் குரல் காதுக்கு அருகாமையில் இவனுக்கு கேட்டது.

இவனுக்கு எல்லா விசயமும் தெரியும் தான் என்றாலும் முதன் முதலாக தன் செல்போனில் இருந்த உடலுறவுக் காட்சிகள் திடீரென முதலில் அதிர்ச்சி தந்தாலும் பார்க்கத் துவங்கியதும் கண்களை அகற்ற முடியவில்லை. அந்தக் காட்சிகள் அவன் உடம்பையே உலுக்க ஆரம்பித்து விட்டது. சின்னச் சின்ன காட்சிகள் தான் அவைகள். நெக்ஸ்ட் அழுத்த அழுத்த வந்து கொண்டேயிருந்தன. நாலஞ்சண்ணம் பார்த்து விட்டு தாக்குப்பிடிக்க முடியாமல் செல்போனை அணைத்து வைத்து விட்டு குப்புறப்படுத்துக் கொண்டான்.

“இதையெல்லாமா உங்க செல்போனில் வெச்சுட்டு பார்த்துட்டு இருக்கீங்க? நீங்கெல்லாம் ஒரு வாத்தியாரு! உங்களுக்கு வேற நான் ஊட்டுல இருந்து ஆக்கி வேற கொண்டு வந்து வட்டல்ல போடறேன்! ஊசை! ஊசை!” மஞ்சுளா கையை நீட்டிக் கொண்டு பேசுவதாய் நினைத்து மண்டை முடியை குப்புறப்படுத்த வாக்கிலேயே பிடித்துக் கொண்டான். டேய் பீட்டரு! வெச்சீடா எனக்கு ஆப்பு பெருசா! சோத்துக்கு பிரச்சனைய கொண்டாந்துட்டியேடா!

ஆனாலும் அவன் மனது மிச்சமிருக்கும் அனைத்து படங்களையும் பார் என்றே சொன்னது. இன்னிக்கி பாக்காம என்னிக்கி பாப்பே

இதையெல்லாம். எல்லாரும் சொன்னபோது அப்படி இருக்கும் இப்படி இருக்குமென கற்பனை செய்து பார்த்ததை விட கையில் வைத்துக் கொண்டு கிட்டத்தில் ரசிப்பது ஆவலைக் கூட்டியது.

மஞ்சுளா நிச்சயம் பாட்டுத்தான் என்று தன்னை மாதிரியே போய் ஒவ்வொன்றாய் ரசித்திருப்பாள். அப்படிக்கூட இருக்கலாமல்லவா! இரண்டு நாளில் அதை எதுக்கு போனுல வச்சிருக்கீங்க என்று கேட்டிருந்திருப்பாளே! ஒன்றும் கேட்கவில்லையே! இருந்தும் முன்னைப் போலில்லாமல் தள்ளி நின்று பழகுகிறாளா என்பதை கவனித்துப் பார்க்க வேண்டும். ஆனால் இவன் நினைப்பையெல்லாம் போக்கடித்தபடி அப்போது வந்து நின்றாள் ஆசாரத்தில்.

“தூங்கீட்டீங்களா? குப்புறக் கெடக்குறீங்களே எதாச்சிம் வயித்து வலியா?” என்று கேட்டபடி வந்தாள்.

“இல்ல மஞ்சுளா தூக்கமெல்லாம் இல்லை. சும்மா குப்புற படுத்திருந்தேன். தூங்கத்தான போறேன்னு போனே நீ”

“சித்தே தூங்கலாமுனு தான் போனேன். எம்பட செல்போனை நோண்டிட்டே இருந்தனுங்களா.. என்னாச்சுன்னு தெரியில பாட்டுக எல்லாம் ஒட்டுக்கா டிலைட் ஆயிடுச்சுங்க. எனத்த அமுத்துனேன்னே தெரியல. சரி மறுக்காவும் ஏத்திக்கிட்டாப் போச்சுன்னு உங்க செட்டை எடுத்துட்டு போலாம்னு வந்தேன். பக்கத்துலயே வெச்சுட்டு படுத்திருக்கீங்களே.. ஊர்ல இருந்து போனு பண்டுவாங்களா?” என்றாள்.

இவனுக்கு மீண்டும் பகீரென்றது. இதுவரைக்கும் அதை பார்க்காமல் இருந்து இந்தமுறை பார்த்து விட்டாள் என்றால்? ஆனால் எப்போதும் போலில்லாமல் கொடுக்க சங்கடப்பட்டால் இதென்ன புதுசா இருக்கே? என்று நினைத்தாள் என்றால் வம்பு. ஆனது ஆகட்டும் என்று கையில் எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டு போகப் போகவே பட்டனை அழுத்திக் கொண்டு சென்றாள்.

அவள் திரும்ப வந்து, ஒரு பாட்டு விடாம எல்லாத்தையும் எம்பட செட்டுல ஏத்திக்கிட்டனுங்க! என்று சொல்லி தரும் வரை இவன் பயந்து பயந்தே கிடந்தான். பயத்தில் ஒருமுறை இவனுக்கு வயிற்றுப் போக்கு கூட ஆகி விட்டது. அவள் சாதாரணமாக வேறு பேசினாலும் அவள் உதடுகள், ‘அந்தக் கருமம் புடிச்ச அம்மணக்குண்டிப் படங்களை எதுக்குங்க வச்சிருக்கீங்க செட்டுல?’ என்று கேட்பது மாதிரியே இருந்தது.

“ஏனோ திரு திருன்னே பாக்கறீங்கேளே இன்னிக்கி! மட்டன் இன்னிக்கி சேரலியோ உங்களுக்கு? பூண்டு தொழிச்சு குடுக்கட்டுங்களா? கண்ணை மூடிட்டு நறுக் நறுக்குன்னு கடிச்சு முழுங்கீட்டு தண்ணிய மேல குடிச்சுக்கங்க.” என்றாள் மஞ்சுளா. இவன் மறுத்து விட்டான். ’சேரி படுத்திருங்க நான் சாயந்திரமா வர்றேன்’ என்று சொல்லிப் போனாள். இவன் மீண்டும் செல்போனில் வீடியோ பார்க்க சென்றான் படுத்தபடி.

அள்ள அள்ள குறையாத அமுதசுரபி போல வீடியோக்கள் வரிசையாக வந்து கொண்டே இருந்தது. அதில் சுயமைதுனம் செய்து கொள்ளும் ஒருவனின் வீடியோவும் இருந்தது. குமரேசனுக்கும் பதுங்கியிருந்த காமம் தலைதூக்கியிருந்தது. எங்கே தன் மண்டையை வெடிக்கச் செய்து விடுமோ என்று நினைத்தவன் அவனாக எழுந்து பாத்ரூம் சென்றான்.

ஒரு வீடியோவில் மஞ்சுளாவைப் போன்றே உடல்வாகுடனும், நீண்டமூக்குடனும் ஒருவள் மரத்தினடியில் படுத்திருக்க அவளின் உடை கலைந்த கை ஒன்று அவளின் சின்ன மார்பகங்களை கசக்குவதையும் அந்த நீண்ட மூக்குப் பெண்ணின் உணர்ச்சி மிக்க முக பாவனைகளையும் அந்த வீடியோ இவனுக்குள் அதீத காமத்தை உற்பத்தி செய்திருந்தது.

அந்தப்பெண் குமரேசனுக்கு செல்போனில் முழு ஸ்கிரீனில் மஞ்சுளாவாகவே தெரிந்தாள். வீடியோவில் வந்த ஒருவன் சுயமைதுனம் செய்ததைப்போன்றே இவன் கையும் சுயமைதுனத்திற்கு சென்று விட்டது. இடது கையில் செல்போனை பிடித்து வீடியோவைப் பார்த்தபடி வலது கையால் சுயமைதுனம் செய்யத் துவங்கியிருந்தான் குமரேசன். அவனுக்கு அந்த சமயத்தில் காலநேரமும், கதவு திறந்திருந்ததும் ஞாபகத்திலிருந்து அழிந்திருந்தது. அவன் மனது மஞ்சுளாவை காட்டில் வீழ்த்தி அவளின் மார்பகங்களை கசக்கிக் கொண்டிருந்தது. கடைசி கட்டத்தில் அவன் வீடியோவை பார்க்கவேயில்லை. அது எப்போதோ முடிந்து போய் இருந்தது.

மஞ்சுளா குமரேசனுக்கு நிஜமாகவே உடம்புக்கு கோளாறோ என்று நினைத்தபடி சென்றவள் அவனுக்கு இஞ்சி தட்டிப்போட்டு டீ தயாரித்து சூடாக டம்ளரில் கொண்டு வந்து பார்க்கையில் ஆசாரத்தில் அவன் இல்லை என்றதும் நேராக வாந்தியெடுக்கிறாப்லையோ என்று பாத்ரூம் வந்தாள். அவள் வந்த சமயம் குமரேசன் தன் மைதுனத்தின் உச்சகட்டத்தில் கண்கள் மூடிய நிலையில் இருந்தான். விந்து தெரித்து சுவற்றில் அடித்தது.

திடீரென இந்தக் காட்சியை பார்த்த மஞ்சுளா டீ டம்ளரை தவற விட்டு

விட்டு என்ன செய்வதென தெரியாமல் நின்றாள். குமரேசனுக்கும் அவளைக் கண்டதும் காமம் காலியாகி யாரோ செருப்பால் அடித்த உணர்வில் தவித்து அப்படியே சிலையாய் நின்றான். இருவருக்கும் பேச்சும் வரவில்லை.

திருட்டுத்தனமாய் ரசனையோடு செய்த தவறு அடுத்தவருக்கு தெரிந்து தெரிந்து போனதால் கூனிக்குறுகி நின்ற குமரேசன் சுய உணர்வுக்கு வந்ததும் தன் லுங்கியை சரிப்படுத்திக் கொண்டு அவளை நோக்கிச் சென்றான். அவள் ஒதுங்கிக் கொள்ளவும் அவளைக் கடந்து ஆசாரத்திற்கு வந்தவன் பழையபடி பாயில் போய் படுத்துக்கொண்டான். சுயமைதுனம் அவனுக்கு மண்டைக்குள் பலலட்சம் மின்னல் வெட்டுக்களோடு அவ்வளவு அற்புதமாய் முடிந்திருந்தது. அடுத்த கணமே அதை நிதானமாய் அனுபவித்து முடிவுக்கு கொண்டுவர இயலாமல் மஞ்சுளாவின் பீதி நிறைந்த கண்களே அவனுக்குள் நுழைந்து விட்டது. இனி அவளோடு என்ன பேசுவது இவன்?

பாயில் கிடந்தபடியே அவள் இன்னமும் அதே இடத்தில் தான் இருக்கிறாளா? என்று பார்த்தான் கண்களைத் திறந்து. அவள் கீழே தவறி விழுந்த டம்ளரை குனிந்து எடுத்துக் கொண்டிருந்தாள். இவனுக்கே இவன்மீது இப்போது கோபமாய் இருந்தது. ஒரு திருட்டுத்தனத்தை செய்யக் கூட யோக்கிதையற்றவன் உலகில் நான் ஒருவனே என்று நினைத்து வெட்கப்பட்டான். சுயமைதுன எண்ணம் வந்ததும் இந்த உலகமே இருண்டு போனது போலத்தான் அப்போது இவனுக்கு இருந்தது. கதவு ஞாபகம் எல்லாம் சுத்தமாய் இல்லை.

தன் அருகில் மஞ்சுளா அப்போது இருப்பதாய்த் தான் உணர்ந்தான். அவளைத்தான் படுக்க வைத்து உடை களைந்தான். அவளின் மார்பகங்களைத்தான் வலது கையால் பற்றினான். இடது கையில் செல்போன் தான் எதற்கென இப்போது இவனுக்கு தெரியவில்லை. காமம் வெடித்துச் சிந்திய பிறகு உடல் களைப்பில் வீழ்ந்து விட்டது.

பாத்ரூமில் தண்ணீர் கொட்டும் சப்தம் கேட்டது. மஞ்சுளா என்ன செய்து கொண்டிருக்கிறாள் என்பதை குமரேசன் உணர்ந்ததும் இவனையறியாமலே அழுகை முட்டிக் கொண்டு வந்து விட்டது. சீமாரின் உரசல் சப்தமும் மீண்டும் போசி உருட்டும் சப்தமும் கேட்கவே இவன் கொஞ்சம் வாய்விட்டே அழுதான். எதற்கு இந்த அழுகை என்று இவனுக்கே தெரியவில்லை. இருந்தும் அழுவது ஆனந்தமாய் இருந்தது. படுக்கையில் படுத்தபடி கேவுவது சிரமமாய் இருக்க எழுந்தமர்ந்து விசும்பினான்.

மஞ்சுளா டம்ளரோடு இவன் கேவிக் கொண்டிருப்பதை பார்த்தபடியே வெளியேறினாள். இவன் அவளை கவனிக்கவும் இல்லை. இருந்தும் உள்ளுணர்வு அவள் வெளியே சென்று விட்டதை சொல்லிற்று. இப்படியான ஈனப்பிறவிக்கு பணிவிடை செய்த துன்பம் தாளாமல் செல்கிறாள் என்று இவனாக நினைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தான். அவளது கடைசிப் பணியாக சீமாரு வைத்து சுவற்றையும் சுத்தப்படுத்தி விட்டு போய் விட்டாள்.

இனிப் பார்க்கையில் எல்லாம் ஒரு குற்ற உணர்வுடம் அவளின் முகத்தை பார்க்க வேண்டியிருக்கும். புதிதாக முளைத்த உறவு மூன்று மாதத்தில் எப்போது பார்த்தாலும் சங்கடம் தரும் விதத்தில் முடிந்து விட்டது. தன்னை அழுகைக்கிடையே ஒரு ஆசிரியர் என்று நினைத்ததும் அழுகை அதிகமாயிற்று. இனி வேலையும் வேண்டாம் ஒன்றும் வேண்டாமென கோட்டூருக்கே ஓடிப்போய்விடவும் யோசனை வந்தது. ஓங்கி தலையில் அடித்துக் கொண்டு அழுதான் குமரேசன். கவனமின்மையால் செய்த சிறு தவறு ஒரு மனிதனை நோகடித்துக் கொண்டிருந்தது அங்கு.

ஆனால் மஞ்சுளா அவனுக்கு வேறு இஞ்சி டீயை டம்ளரில் கொண்டு வந்தாள் வீட்டுக்குள். குமரேசன் இன்னமும் விசும்பிக் கொண்டிருப்பது அவளுக்குத் தான் சிரமமாய் இருந்தது. அவன் அருகில் வந்து அமர்ந்தவள் டம்ளரை அருகில் வைத்து விட்டு, “எதுக்கு அழுதுட்டே இருக்கீங்க இப்ப சும்மா!” என்றாள். இவன் குனிந்த வாக்கில் அமர்ந்து கண்ணீரை துடைத்தான்.

“இஞ்சி டீ கொண்டாந்திருக்கேன் குடிங்க ஆறிடுச்சுன்னா நல்லா இருக்காது. நானே குடிக்கிற மாதிரி சூடோட ஆத்தித் தான் கொண்டாந்தேன்” என்றாள் அங்கு எதுவும் தவறாக நடக்கவே இல்லை என்பது போலத்தான் பேசினாள். அவள் பேச்சில் தெரிந்த வழக்கமான தொனியால் இவன் நிதானத்திற்கு வந்தான். இருந்தும் அவள் முகம் பார்க்க தயங்கினான். மஞ்சுளா அருகில் கிடந்த அவன் துண்டை எடுத்து கிட்டே நெருங்கி அமர்ந்து அவன் முகத்தை உயர்த்தி கன்னத்தில் வடிந்திருந்த கண்ணீரைத் துடைத்தாள்.

“பெரிய பையனாட்ட பண்ணீட்டு சின்னப்பையனாட்டம் அழுதுட்டு இருக்கீங்க?’ என்றவள் டம்ளரை எடுத்து அவன் கையில் கொடுத்தாள். அவன் வாங்கி குடிக்க ஆரம்பித்தான். அவள் அந்த விசயத்திற்காக தன்னிடம் கோபித்துக் கொள்ளவில்லை என்றதும் கொஞ்சம் படபடப்பு குறைந்திருந்தது. தப்பைக்கூட தப்பாகவே பார்க்காத பெண்ணை அன்று

தான் கண்டான் இவன்.

"தெரியுமெனக்கு! என்னடா செல்போனுல புதுப்பாட்டுக தானே வெச்சிருந்தாரு. எப்படி எல்லாம் பழைய பாட்டுகளா மாறுச்சுன்னு. வீடியோவுல ஒன்னுமே இல்லியே எப்படிடா அதுல இத்தனை படங்கள் வந்துச்சுன்னு."

"நான் இன்னிக்கித்தான் வீடியோ இருக்கறதையே பார்த்தேன் மஞ்சுளா! பீட்டர் சார் தான் அதையெல்லாம் ஏத்திவிட்டிருக்காரு. இன்னிக்கி பாட்டுகதான் ஏத்தி விட்டிருக்காருன்னு செல்லை பார்த்துட்டு இருந்தேன். பார்த்தா எல்லாம் இதா இருந்துச்சு. மொதவாட்டியா பார்த்ததால எனக்கு ஒரு மாதிரி ஆயிடுச்சு."

"அதுக்காக அப்படி பண்ணிட்டீங்களா? அப்படியெல்லாம் பண்ணா ஒடம்பு கெட்டுப் போயிடுமுன்னு சொல்லுவாங்க. சாப்பிடுற சத்து பூராவும் அதுல போயிடும். அப்புறம் ஒடம்பு எளச்சிப்போயி நோஞ்சானாட்ட ஆயிடுவீங்க. இதெல்லாம் தெரியாதா உங்களுக்கு?" என்றாள்.

"அது தெரியும் மஞ்சுளா. ஆனா காதெல்லாம் அடச்சிப்போன மாதிரி ஆயிடுச்சு. அதான் அப்படி பண்ணிட்டேன். ஆனா நீ பார்த்துட்டதால ரொம்ப பயந்துட்டேன். இனி எங்கூட பேசவே மாட்டியோன்னு நெனச்சிட்டேன்."

"ஐய்யே! அதுக்காவ எல்லாம் பேசாம இருப்பாங்களா யாராச்சிம்? வயசுல எல்லாரும் அப்படித்தான் பண்ணிக்குவாங்கன்னு எனக்குத் தெரியும். பீட்டர் சார் ஏன் இதெல்லாம் உங்க போன்ல ஏத்தியுட்டாரு?"

"பாட்டு பூராவும் புதுசா இருக்கே இதை எப்படி கேக்கறீங்கன்னு பூராத்தியும் டிலைட் பண்ணீட்டு பழைய பாட்டுக ஏத்திவிடறேன்னு சொன்னாரு. அப்ப இதையும் மொத்தமா ஏத்தியிருப்பாப்ல. என்ன எனக்கு சொல்லி இருந்திருக்கலாம். நீயும் பார்த்தியா?"

"நான் போன வாரத்துலயே உங்க செட்டை தூக்கிட்டு போனப்ப அதுகளை பார்த்தேன்."

"அப்பவே அதுகளை டிலைட் பண்ணியிருந்தீன்னா எனக்கும் தெரியாமப் போயிருக்கும்"

"ஐய்யே! உங்க போனுல நீங்க வச்சிருக்கறதை நானெதுக்கு டிலைட் பண்ணுறேன். ஒத்தையில கெடக்குறீங்க சாமத்துல பாப்பீங்களாட்டன்னு நெனச்சுட்டேன்."

“அப்ப நீயும் அதுகளை பார்த்தியா?”

“நானும் பார்த்தேன்”

“இதெதுக்கு அதுகெல்லாம் போன்ல இருக்குதுன்னு ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே”

“நானே இப்பக்கூட அதுகளை பாக்கத்தான் வந்து அப்பலையா கேட்டு வாங்கிட்டு போனேன். நானெதுக்கு உங்க கிட்ட கேக்குறேன். பாக்கறக்கு நல்லா இருந்துச்சு. என்னோடது ஒரு ஜிபி கார்டுங்க. உங்களுது நாலு ஜிபி கார்டு. எனக்கு பாட்டுக வேணுமுன்னு தான் அதை டிலைட் பண்ணல. எனக்கும் எடம் இருந்திருந்தா இதுகளை எம்பட செட்டுக்கு ஏத்தியிருப்பேன்”

“எப்படி இப்படி எல்லாம் வெளிப்படையா பேசுறே மஞ்சுளா? நான் ஒரு பொண்ணுகிட்ட பேசுறது அதிகம்னு பார்த்தா உங்கிட்டத்தான். சரி உனக்குத்தான் வீட்டுக்காரரு இருக்காரே. இதுகளை ஏன் வெட்டியா பாக்கணும்? எனக்குத்தான் யாருமில்ல பாக்குறேன்”

“வீட்டுக்காரரு இருந்தா இதுகளை எல்லாம் பாக்க்க்கூடாதுன்னு எதாச்சும் இருக்கா? அப்படி எல்லாம் ஒன்னும் கெடையாதுங்களே! சரி அந்த நாயத்தை உடுங்க நீங்க. இனிமே அப்படி பண்டாதீங்க அது ஒடம்புக்கு கெடுதலு. சரி நாம செஸ் போர்டு ஆடுவமா?” என்றாள் மஞ்சுளா.

”ஆடுவோம் அதோ டேபிள் மேல இருக்குது எடுத்தா. இங்கயே உட்கார்ந்து ஆடுவோம். மணி என்ன ஆச்சு?”

“மணி நாலு ஆச்சுங்க” என்றவள் போய் போர்டையும் காய்கள் டப்பாவையும் எடுத்து வந்து வடக்கு பார்த்து பாயில் அவன் எதிர்க்கே அமர்ந்தாள். அவளே போர்டில் சிப்பாய்களை முதலில் வரிசையாக போருக்கு நிறுத்தினாள். மந்திரிக்கு முத்தம் கொடுத்து வைத்தாள். சிலருக்கு குதிரைகளை வைத்து விளையாடுவதில் அதிக ஆர்வம் இருக்கும். சிலர் ராணியையே முழுக்க நம்பி விளையாடுவார்கள். ராணியை எதிராளி போட்டுத் தள்ளிவிட்டால் மனமுடைந்து மற்றவற்றை கவனமின்றி வைத்து ஆடுவார்கள். அவர்களுக்கு ராணி போன வருத்தமே ஆட்டம் முடியும் வரை இருக்கும். மஞ்சுளாவுக்கு மந்திரிகளை வைத்து விளையாடுவது பிடிக்கும்.

இரண்டு படை வீர்ர்களும் தயார் நிலையில் இருந்தார்கள். நீ மொதல்ல ஆரம்பி என்றான் குமரேசன். அவள் விசயத்திற்கு வந்தாள்.

“போட்டி வெச்சுக்கலாமா?”

“பத்து ரூபா பந்தையமா? அதான் ஆகாதுன்னு அன்னிக்கே சொல்லிட்டேனே”

“ஐய்யே! பணமெல்லாம் வேண்டாம். நீங்க ஒரு ஆட்டத்துல தோத்துட்டா சட்டையக் கழட்டிடணும். நான் தோத்துட்டா சேலையை கழட்டிடுவேன். ஆட்டம் அப்புறமும் அப்படியே ஆடணும். மறுபடியும் நான் தோத்துட்டா ஜாக்கெட்டை கழட்டிடணும். நீங்க தோத்துட்டா லுங்கி போயிடும். சம்மதமா?’ என்றாள். இவன் இதென்னடா வம்பென மிரண்டான்.

“அதெல்லாம் வேண்டாம் மஞ்சுளா. எதுக்கு அப்படி?”

“அப்ப பயந்துட்டீங்க! நான் தைரியமா பெட்டு வச்சிக்கிறேன் உங்களுக்கென்ன?”

“இதுக்கு பணமே பத்து ரூபா வெச்சுக்கலாம்”

“பயந்துட்டீங்க நீங்க துணி காணாமப் போயிடுமுன்னு. பாத்ரூமுக்கு போறதுக்கு மட்டும் தைரியம் எங்கிருந்து வந்துச்சு? அதும் கதவை மட்ட மல்லாக்க தெறந்து போட்டுட்டு?”

“இப்பத்தான் அதை விடுங்கன்னு நீ சொல்லி விளையாடலாம்னே. மறுபடியும் அதை ஆரம்பிச்சு பேசி நக்கல் பண்ணக்கூடாது. செரி நான் தோத்துட்டா சட்டையை கழட்டிடறேன். நீயா தோத்துப் போயிட்டு நான் மாட்டேன்னு பேக் அடிக்கக்கூடாது”

“நானெல்லாம் பேக் அடிக்க மாட்டேன். இதோ நகர்த்தியாச்சு!” என்றவள் முதல் ஆட்டத்திலேயே குதிரையை வைத்து சிப்பாயை தாண்டினாள். அப்படி அவள் ஒருநாள் கூட துவங்கியதே இல்லை ஆட்டத்தை. இவன் வழக்கம் போலவே சிப்பாயை நகர்த்தினான். வேண்டுமென்றே ஆட்டத்தை ஆரம்பித்தவள் போல இன்னொரு குதிரையையும் களத்தில் இறக்கி வந்து இவன் சிப்பாயிடமே வெட்டுக்கு வைத்தாள். அவள் வேண்டுமென்றே ஆடுகிறாளோ என்று நினைத்து சிப்பாயால் வெட்டினான் குதிரையை. புன்னகையுடன் அவள் தன் மந்திரியை தூக்கி இவன் ராணியை வெட்டினாள். இவனுக்கு பகீரென்றது. இவன் ராணி வெட்டுபோகும் என்று பார்க்கவே இல்லை. அவள் வேண்டுமென்றே தோற்க முடிவு செய்து ஆடுகிறாள் என்று நினைத்து விட்டான்.

கொஞ்சம் நாள் ஆடினதிலேயே அவள் செஸ் புலியாகி விட்டாள்

என்று தான் பலமுறை அவள் காய் நகர்த்தல்களை வைத்து கண்டிருந்தான். அந்த நம்பிக்கையில் தான் விபரீதமான பெட்டையும் கட்டியிருக்கிறாள் என்று ராணி போனபின் உணர்ந்து கவனமாய் நகர்த்தத் துவங்கினான். இருந்தும் அந்த ஆட்டம் அவள் கையிலேயே இருந்தது முடியும் வரை. அவன் சட்டையைக் கழற்றினான் ஆட்ட முடிவில். அந்த ஆட்டத்தை அவர்கள் கால் மணி நேரம் ஆடி முடித்திருந்தார்கள்.

அடுத்த ஆட்டத்தையாவது ஒழுக்கமாக ஆடவில்லை என்றால் லுங்கியையும் இழந்து ஜட்டியோடு அவள் முன் அமர்ந்து வெட்கப்பட்டுக் கொண்டே ஆட வேண்டும் என்ற பயம் வந்து விட்டது. அவள் பார்வையும் இவன் சட்டையை கழற்றியதும் ஏனோ மாறிவிட்டது போலவே இவனுக்கு தெரிந்த்து. அது பிரமையாகக்கூட இருக்கலாமென நினைத்துக் கொண்டு அடுத்த ஆட்டத்தில் இறங்கினான். இம்முறை இவன் முதலில் துவங்க வேண்டி இருந்தது. பைத்தியகார யோசனையில் அவளைப் போன்றே குதிரையை முதல் ஆட்டத்தில் வெளியே எடுத்தான்.

அவள் நிதானமாய் சிப்பாய்களையே முன்னுக்கு நகர்த்தி ஆடினாள். இவள் சேலையை கழற்றாமல் விடப்போவதில்லையென முடிவோடு ஒவ்வொரு காய்களை நகர்த்த பலத்த யோசனை செய்து முன்புறம் நகர்த்தினான். முன்பு இவள் ஆடிப்பழகுகையில் யோசித்து வைத்தால் நேரமாகிறது என்பான். ஆனாலும் லுங்கியை காப்பாற்றவே ஆடுகிறான் என்பதால் அதைச் சொல்லாமல் அவள் அவன் காய் நகர்த்தியதும் உடனே இவள் நகர்த்தினாள். அவன் யோசித்து வைக்கும் நேரத்தில் இவள் அடுத்து எங்கே வைப்பது என்றும் யாரை நகர்த்துவது என்று முடிவு செய்திருந்தபடியால் சுலபமாக வைத்தாள்.

அந்த இரண்டாம் ஆட்டம் முடிய முப்பத்தி ஐந்து நிமிடங்கள் ஆயிற்று. குமரேசன் லுங்கியை அவிழ்க்க வெண்டியிருந்தது. அவள் அதற்காகவே எழுந்து போய் கதவை சாத்தி உள்புறம் தாழ்பாள் போட்டு விட்டு வந்தாள். மின்விசிறியின் சுவிட்சையும் அவள் தட்டி விட்டு வந்து அடுத்த ஆட்டத்திற்கு அமர்ந்தாள். அவன் வேர்த்திருந்தான் உடைகளை இழந்தும். இருந்தும் அவளை வெற்றி கொண்டு அவள் ஆடைகளை இழக்கச் செய்யா விட்டால் இனி செஸ் போர்டையே தொடக்கூடாது என்றெல்லாம் எண்ணிக் கொண்டான். ஆனால் மஞ்சுளா சாதாரணமாகவே முன்பு போல் அடுத்த ஆட்டத்தில் ராணியை களத்தில் விட்டிருந்தாள்.

குமரேசன் அதிரடி ஆட்டத்தில் இறங்கினான் இந்தமுறை. நேருக்கு நேராய் நின்ற யானையை போட்டுத் தள்ளினான். அப்படி முன்பு அவள் செய்தால் தப்பு என்று சொல்லிக் கொடுத்தவன் அவன் தான். ஆனால் அதே தப்பை அவன் இப்போது செய்தான். யானைக்கு யானை உடனே போவதால் இருவருக்குமே ஒன்றுமில்லை. ஆனால் அதைப்பற்றியெல்லாம் மஞ்சுளா அவனிடம் எதுவும் சொல்லவில்லை. அதிரடி ஆட்டம் அவனுக்கு இந்தமுறை கைகொடுத்தது. ராஜாவை காப்பாற்ற வழியில்லாமல் மஞ்சுளா சிக்கிக் கொண்டாள். மூன்றாம் ஆட்டம் பத்து நிமிடத்திலேயே முடிவுக்கு வந்து விட்டது. இவளை வெற்றி கொள்ளும் சூட்சுமத்தை கண்டு கொண்டான்.

அப்பாடா என்று மனதில் நினைத்துக் கொண்டான் குமரேசன். ஜட்டியை இழந்திருந்தாலும் மாட்டேன் என்று அடம்பிடித்தாலும் விடமாட்டாள் என்பது அவளாகவே போய் கதவை சாத்திவிட்டு வந்தபோதே கண்டு கொண்டான். ஜட்டியை ஒரு ஆட்டம் காப்பாற்றிக் கொண்டான். மஞ்சுளா தன் சேலையை அவிழ்த்து மடியிலேயே வைத்துக் கொண்டாள். அவள் அமர்ந்திருந்த விதம் இவனை சங்கடப்பட வைத்தது. அவளை ரசிக்கலாம் என்று நினைத்தவன் அவள் அடுத்த ஆட்டத்திற்கு சிப்பாய்களை வரிசைப்படுத்த துவங்கியதும், ‘மஞ்சுளா’ என்றான். அவள் என்ன? என்பது போல தலையை உயர்த்திப் பார்த்தாள்.

“உனக்கு ஏதாச்சிம் சங்கட்டம்னா ஆட்டத்தை இத்தோட நிறுத்திக்கலாம்” என்றான்.

“மறுபடியும் உங்களுக்கு பயம் வந்துடுச்சா? இதுக்காகத்தான் இப்படி நான் பந்தயத்தை வச்சுக்கலாம்னு சொன்னேன். பயந்துட்டே கருக்கடையோட பேசாம ஆடுங்க” என்றாள். அவளே சிப்பாயை அடுக்கியவுடன் முன் நகர்த்தி வைத்து விட்டாள். அவள் மனதில் பயமெதுவும் இல்லையென்பதை கண்டவன் மீண்டும் அதிரடி ஆட்டம் பலன் தருமென அதிலேயே இறங்கினான். இந்தமாதிரி அவன் ஒருநாளில் கூட இவளிடம் ஆடியதில்லை என்பதால் அவளும் இவனைப் போன்றே சீக்கிரம் சீக்கிரமாக வீர்ர்களை நகர்த்தி அவர்களை இழந்தாள். அந்த ஆட்டமும் அவளுக்கு தோல்வியில் முடிந்தது.

மஞ்சுளா எழுந்து நின்று பாவாடை நாடாவை உருவி கால்வழியே இறக்கி அதை தள்ளி சேலையின் மீது வைத்து விட்டு இவனை ஒரு பார்வை பார்த்தாள். இவன் அவளின் நீலவர்ண ஜட்டியை பார்த்தான்.

அவள் புன்னகைத்து அமர்ந்தாள். பார்க்க கொஞ்சம் ஒல்லிப்பிச்சானாக தெரிந்தாலும் அவளின் தொடை சதைப்பற்றோடு இருப்பதில் கவனமானான். இந்தமுறை இவன் போர்டில் ஆட்டகாரர்களை வரிசைப்படுத்தி குதிரையை இறக்கினான். இவனின் அதிரடி ஆட்டம் அவளுக்கு நிஜமாகவே குழப்பமாக இருந்தது.

அவன் விரிக்கும் வலைக்குள் சிக்கக்கூடாது என்று முடிவெடுத்து சிப்பாய்களை நகர்த்தினாள். அவன் ஜட்டியை கழற்றாமல் விடக்கூடாது இந்த ஆட்டத்தில் என்ற வெறி அவளுக்குள் வந்து விட்டது. அப்படி கழற்றாமல் விட்டு விட்டால் செஸ் போர்டே ஆடக்கூடாது என்று நினைத்துக் கொண்டாள். அவன் சந்து கிடைத்த இடமெல்லாம் குதிரையை ஓட்டி இவள் ஏறியாவில் புகுந்து விளையாடினான். குதிரையை விரட்டுவதிலேயே கவனமாய் இருக்கையில் யானையை தூக்கி வந்து ராணியைத் தூக்கினான். ராஜாவுக்கு செக் என்றான்.

ராஜா ஒரு ஸ்டெப் நகரக்கூட வழி செய்யாமல் விட்டிருந்தாள். ராணியை வெட்டினால் குதிரை அடுத்த நிமிடம் ராஜாவை வெட்டும் ஆட்டம் முடிந்து விடும். கடைகோட்டிலிருந்த இவள் யானையைக் கொண்டு அதை வெட்டலாம் என்பது கூட அவளுக்கு குழப்பத்தில் மறந்து விட்டது. இவனுக்கு அது தெரியுமென்றாலும் சொல்லவில்லை. அவள் ஆட்டம் முடிந்து விட்டதாக நினைத்து தன் ஜாக்கெட் ஊக்குகளை கழற்றினாள். இவன் இதயம் படபடவென வேகமாய் அடித்துக் கொள்ளத் துவங்கியது. அவள் ஜாக்கெட்டினுள் உள்ளாடை எதுவும் அணிந்திருக்கவில்லை.

அவள் அடுத்த ஆட்டத்திற்கு காய்களை வைக்கத் துவங்கியதும் இவன் கவனம் ஆட்டத்திற்கு வந்தது. ஒருமணி நேரம் முன்பாக செல்போனில் பொம்மை அசைவதைப்போல பார்த்தவைகள் இப்போது கண்முன் இருக்கும் போது பார்க்க கூச்சமாய் இருந்தது. தலையை செஸ் போர்டிலேயே குனிந்தபடி வைத்துக் கொண்டான். இருந்தும் அவன் மனது பளீரென்று தெரிந்த சதைக்கோளங்களின் நினைவாகவே இருந்தது. ஒருபெண் தன் முன் போட்டி வைத்து தனக்கு ஒன்றுமில்லை என்று ஆடுகிறாள். ஆசைப்பட்டு ரசிக்க வேண்டிய நான் பார்க்கத் தயங்கி குனிந்து கிடக்கிறேன் என்று தன்னையே திட்டிக் கொண்டான். ரசித்துப் பார்த்தபடி ஆடத்தான் ஒருவேளை போட்டியையே இப்படி சொல்லியிருப்பாளோ என்ற எண்ணம் இப்போது தான் வந்தது அவனுக்கு.

அவள் சிப்பாயை நகர்த்தி விட்டு குனிந்தவாக்கில் சும்மா இருந்த

இவனிடம், ’ம் நகர்த்துங்க எதையோ ஒன்னை!’ என்றாள்.

இவன் ஆட்டத்தில் கவனம் செலுத்த சிரமப்பட்டு இறங்கினான். பந்தயம் ஒரு முடிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் நேரத்தில் துவண்டு பின்வாங்கிவிடக் கூடாதென சிப்பாயை நகர்த்தினான். தலையை மட்டும் உயர்த்தவில்லை தப்பித் தவறிக்கூட. உயர்த்தினால் காமம் வேறு தலை தூக்குகிறதே!

யாருக்கும் இப்படி சோதனை வரக்கூடாதப்பா! என்று நினைத்துக் கொண்டான். இருந்தும் அவள் விரல்கள் சிப்பாய்களை நகர்த்த வருகையில் அவைகள் கூட அவனுக்கு காமத்தை ஊட்டுவிட்டுச் சென்றன. இந்த ஆட்டத்தை சீக்கிரம் முடித்து விட வேண்டுமென ஆசைப்பட்டான் குமரேசன். மீண்டும் அதிரடி ஆட்டத்தில் இறங்கினான். அது ஒன்றுக்குத்தான் அவள் ஏமாறுகிறாள் தற்போது. அது தான் போன ஆட்டத்திலேயே இவனுக்குத் தெரிந்து விட்டதே!

இந்தமுறை அவளிம் செக் வைக்க பலமுறை வாய்ப்பிருந்தும் விட்டு விட்டு அவள் வீர்ர்களை சுத்தமாக துடைத்தான். கடைசியில் அவளுக்கு ராஜாவும் ஒரு சிப்பாயும் மட்டுமே எஞ்சி நின்றார்கள். இவன் மந்திரி ஒருவரையும், யானை ஒன்றையும், மூன்று சிப்பாய்களையும், ராணியையும் வைத்திருந்தான். ‘முடிவு வரை ஆடணுமா?’ என்றான் ராணியைக் கொண்டு செக் வைத்தபடி. ’இல்ல போதும்’ என்றவள் எழுந்து நின்றாள். அவளின் இரண்டு கால்களையும் துளி முகம் உயர்த்து முட்டிங்கால் வரை பார்த்தான். அதற்கும் மேல் பார்க்கவில்லை. அவன்.

முட்டிங்காலுக்கு நீலவர்ண ஜட்டி வந்தது. ஒரு காலை உயர்த்தி அதை கழற்றி பின் மற்றொரு காலையும் உயர்த்திக் கழற்றினவள் தன் துணிகள் கிடந்த இடத்தில் அதன் மேல் போட்டாள். இவனுக்கு எதையும் பார்க்காமலேயே இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பித்து விட்டது. அவள் தான் தொண்டையை செருமிக்கொண்டு பேசினாள்

. “போட்டிங்கறது தோத்துப் போனவங்களை ஜெயிச்சவங்க பாக்குறதுக்குத் தான். நீங்க பாக்காம இருக்க எதுக்கு ஜெயிச்சீங்க?” என்றாள். இவன் தலையை உயர்த்தினான். மண்டையில் பாரமாய் எதுவோ திடீரென வந்து விட்டது போல் கனத்தது. ஒரு கணம் தான். அவள் கிட்டே நெருங்கி இவனைப் பாயில் தள்ளி இவன் மீது விழுந்து அழுத்திக் கொண்டாள். ’கண்ணை நோண்டிப்புடுவேன்’ என்றவள் இவன் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள். இவன் தன்மேல் கிடந்தவளை பயத்துடன் கட்டிக் கொண்டான்.

“இன்னமும் இறுக்கிப் பிடிங்க. இப்பவும் பயந்துட்டே கட்டிக்காதீங்க” என்றாள் மஞ்சுளா. அவன் அவள் முகத்தை உயர்த்தி அவள் உதட்டில் முத்தமிட்டான்.

“நானும் பார்த்துட்டே இருக்கேன் எப்படா எந்திரிச்சு வந்து கட்டிப்புடிப்பாப்லைன்னு. மண்ணு மாதிரி குனிஞ்சுட்டு உக்காந்துக்கறது. நானே வந்து விழுந்தாத்தான் பிடிப்பீங்களோ? மத்தியானம் எத்தனை வேஸ்ட்டு தெரியுமா அங்க செவுத்துல? பூராவும் வேஸ்ட்டு!” என்றவள் அவன் ஒரு கையை இழுத்து தன் மார்பின் மீது வைத்துக் கொண்டாள். அவனிடம் பேச்சே இல்லை.

# சயனம் 10

காங்கயத்திற்கு மேற்கே காடையூரில் கலியனுக்கு மணப்பெண்ணை பிடித்திருந்தார்கள். விடிந்தால் சூரிய உதயத்தில் காடையூர் மணப்பெண் வீட்டிலேயே திருமணம். திருமண வீட்டில் வழக்கமாக நடக்கும் கொண்டாட்டங்களுக்கு குறையே இல்லாமல் நடந்து கொண்டிருந்தது. ஆட்சியில் அம்மா முன்பிருந்தபோது கிராமங்களுக்கு கட்டிக் கொடுத்திருந்த தொலைக்காட்சி பெட்டி அறை ஊரின் முகப்பிலேயே இருந்தது. வழங்கப்பட்ட இலவச டிவி எந்த இடைஞ்சலும் செய்யாமல் இன்னமும் ஓடிக்கொண்டிருந்தது.

மணப்பெண் வீட்டில் சாப்பிட்டு முடித்து வந்தவர்கள் எல்லோரும் சப்தமாய் ஊர்முழுக்க கேட்கும் விதமாய் கேடிவியில் ஓடிக்கொண்டிருந்த குஷி படத்தை கீழே அமர்ந்து ஆர்வமாய் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் வேட்டியை விரித்துப் போட்டு படுத்தும் கிடந்தார்கள்.

இங்கே கலியன் வீட்டிலும் அதே தடபுடல் தான். வழுவில் திரை கட்டி விஜயகாந்தின் வல்லரசு ஓடிக்கொண்டிருந்தது. அது முடிந்ததும் சொக்கத்தங்கம் என்றார்கள். வலுவிலிருந்து சொந்தபந்தங்களை கூட்டிப்போக லாரி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். விடிகாலை மூன்று மணியைப்போல அது கிளம்பும் என்று சொல்லிக் கொண்டிருந்தான் அவன் அப்பன் மாரன்.

கலியனுக்கு மணப்பெண் வள்ளியை பெண்பார்க்கப் போனபோது ராசாமணி போல சிவப்பில்லை என்பது மட்டும் குறையாய் இருந்தது. போக இவனைப்போலவே படிப்பை ஐந்தாவதோடு அவளும் நிறுத்தி காட்டு வேலைக்குத் தான் போய்க் கொண்டு இருப்பதாக மாமனார் சொன்னார். பார்க்க முந்தா நேத்து தான் வயசுக்கு வந்த பெண்போல குள்ளமாக இருந்தாள்.

கறுப்பாக அவள் இருந்தாலும் ஒரு லட்சணம் இருப்பதாக நினைத்துக் கொண்டான். போக காட்டுவேலைக்கு போகிறவனுக்கு பொண்ணு கொடுப்பது இந்தக் காலத்தில் பெரிய விசயம் என்றார்கள். ஐந்து பவுன் நகையோடு காட்டுவேலைக்காரனுக்கு பொண்ணு கிடைப்பது அதிசயம் என்றார்கள். மாமனாருக்கு கோயில் கட்டி கும்பிட வேறு சொன்னார்கள்.

கலியனுக்கு அழகிருக்கும் இடத்தில் ஆபத்து இருக்கும் என்று பீட்டர் சார் சொன்ன தகவல் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது. வள்ளி

பெரிய அழகி அல்ல என்பதால் ஆபத்து இருக்காது என்று நம்பி சம்மதம் சொல்லி விட்டான். அதில் இவன் அம்மாளுக்கு ஏக சந்தோசம். எம் பையனாட்ட உலவத்துலயே யாருங் கிடையாதென்று ஊர்முழுக்க சொல்லிக் கொண்டே திரிந்தாள். மாரனுக்கும் அது சந்தோசம் தான். பத்து நாளைக்கி இந்த குடியை மட்டும் உட்டுடு ராசா! என்று தனியே சொல்லியிருந்தான்.

திருமணத்திற்கு மூன்று செட் வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை எடுத்திருந்தான் அதில் ஒன்றை அணிந்து கொண்டு நீவி நீவி பார்த்துக்கொண்டே அவன் வந்திருந்தவர்களுக்கு பந்தியில் சாப்பாடு பரிமாறினான். விடிந்தால் தாலி கட்டப்போகும் அவனுக்கு ஒரு கோட்டர் குடித்தால் நன்றாக இருக்குமென நினைத்தான். ஆனால் பல்லைக் கடித்துக் கொண்டு சமாளித்தான். இன்னமும் பத்து நாள் குடிக்கக் கூடாது என்றால் மண்டை வெடித்து விடும் என்று அவனுக்கு தெரிந்தது. புதுப் பொண்டாட்டியை கட்டி வந்ததும் தனியே அமரவைத்து விசயத்தைச் சொல்லி பயந்துக்க கூடாது என்று வேறு சொல்லி விட்டு குடித்துக் கொள்ளலாமென நினைத்தான். அதனால் அவள் சந்தோசம் கூடப்படுவாள்.

இங்கே இப்படியிருக்க அங்கே வள்ளி இரவில் துண்டுக்காடு நோக்கி நோக்கியா செல்லின் சின்னபல்ப் வெளிச்சத்தில் சென்று கொண்டிருந்தாள். அவள் நடையில் வேகமிருந்தது. அவள் வீட்டிலிருந்து கிளம்புகையில் எல்லோரும் உருண்டு பெறண்டு தூங்கிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவராய் தாண்டித் தாண்டி வெளியே வந்தவள் துணைக்கு நானும் வருவேன் என்று பொம்மி நாயும் கூடவே வந்தது. அது எப்போதும் அப்படித்தான். விரட்டினாலும் போகாது. போவது போல பாவ்லா காட்டிவிட்டு மீண்டும் பொறத்தியிலேயே வரும்.

துண்டுக்காட்டில் வழக்கமாக சந்திக்கும் இடத்தில் ரமேஷ் காத்துக் கிடப்பதாய் சொல்லிவிட்டான் சாயந்திரமே. இந்த நேரம் வரை மொத்தமாக முப்பது தவறிய அழைப்புகள் அனுப்பி விட்டான். ஒரு வார காலமாக அவனை சந்திப்பது குதிரைக் கொம்பாகி விட்டது வள்ளிக்கு. திருமண நிச்சயதார்த்தம் முடிந்ததுமே ஏகப்பட்ட கெடுபிடிகள் வீட்டில் நடக்கத் துவங்கி விட்டது. காட்டு வேலைக்கு பத்து நாளைக்கு போக வேண்டாமென வீட்டில் கிடத்தி விட்டார்கள்.

ரமேஷ் காங்கயம் முத்தப்பன் ரைஸ் மில்லுக்கு வேலைக்கு போய் வந்து கொண்டிருந்தான். டூ வீலர் வேறு வைத்திருந்தான். போக ஜீன்ஸ்

பேண்ட், ஜீன்ஸ் சர்ட் என்று பார்க்க கடித்துத் தின்ன வேண்டும் போல இருந்து தொலைத்ததால் பக்கத்து ஊர்க்காரன் என்றாலும் வள்ளிக்கு அவன் மீது தொடுப்பு வந்து விட்டது. கட்டிக்கப் போகிறோமே என்று துண்டுக்காட்டில் அவிழ்த்துப் போட்டுக்கூட சாமத்தில் கிடந்திருக்கிறாள்.

அவன் கை எந்த இடத்தில் அழுத்திப் பிடித்தாலும் மின்சாரம் பாயும் இவளுக்கு. அவன் தான் இவளுக்கு செல்போன் வாங்கி கொடுத்தவன். வீட்டில் இவளிடம் செல்போன் இருப்பது ஆறு மாதமாக வீட்டார் யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்தாலும் பச்சைக்குழந்தைக்கு போனு ஏது சாமி என்பார்கள். பச்சைக் குழந்தை ரோட்டில் கிடந்ததாக சொல்லிவிடும்.

வள்ளி ஒத்தயடிப்பாதையில் குடுகுடுவென சென்று கொண்டிருந்தாள். எல்லா விசயத்தையும் ரமேசுக்கு முன்பே சொல்லியிருந்தாள். ஆக தன்னைக் காதலிப்பவன் திருமண நாளின் இரவில் கூப்பிடுகிறான் என்றால் எல்லா ஏற்பாடும் செய்திருப்பான் என்று தானே அர்த்தம்? என்ன ஏற்பாடு செய்திருக்கிறான் என்பதை அறிய அவளுக்கு ஆவலாய் இருந்தது. தன்னை அவன் வீட்டுக்கே கூட்டிப் போனாலும் போய் விடுவான். இல்லை அவன் வீட்டிலும் பிரச்சினை என்றால் அவன் நண்பர்களோடு பேசிக் கலந்து வேறு ஊருக்கேனும் கூட்டிப் போய் விடுவான். நாளை நல்ல முகூர்த்தம் என்கிறார்கள். நாளை காலையிலேயே எதாவது ஒரு ஊரில் எதோ ஒரு சாமி முன்பு நிறுத்தி தாலி கட்டி விடுவான்.

அப்புறமென்ன யாருக்கும் பயந்து கொண்டு இருக்க வேண்டியதில்லை. பிள்ளை உண்டாகிவிடுமோ என்று மாத்திரைகளை பயந்து கொண்டு சாப்பிட வேண்டியதில்லை. ரமேசோடு ஜாலியாக சினிமா பார்க்க போகலாம். எப்போது வேண்டுமானாலும் பாய் விரித்து வீட்டில் படுத்துக் கிடக்கலாம். எத்தனை சேலைகள் எடுத்திருக்கிறான் என்று தெரியவில்லை. பிடித்த கலரான மஞ்சள் வர்ணத்தில் எடுத்திருந்தான் என்றால் அதற்காக தனியே முத்தம் கொடுக்க வேண்டும். முப்பது முறை இப்படி ஒரு நாளில் கூட அவன் கூப்பிட்டதே இல்லை. என் மீது எத்தனை ஆசையிருந்தால் இத்தனை முறை அழைப்பான்? என்றே நினைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தாள்.

பொம்மி அங்கங்கே கொழுஞ்சி செடி மீது துளி துளி கால் தூக்கி உச்சா அடித்தபடி இவள் பின்னே ஓடி வந்தது. அதற்கு ஏற்கனவே வழிதெரியும். சாமத்தில் இவள் எங்கு போகிறாள் என்று தெரியும். சாமத்தில் ஒருவன்

இவளுக்காக துண்டுக்காட்டில் காத்திருப்பான் என்றும் தெரியும். போனதும் ஆள்மாற்றி ஆள் மேலேறிப் படுத்துக் கொண்டு பண்ணுவார்கள் என்று தெரியும். அவள் காரியம் முடித்து விட்டு வீட்டுக்கு கிளம்புகையில் துணைக்கு கூடவே வரவேண்டும் என்பதும் தெரியும்.

இதோ துண்டுக்காட்டுக் கடவில் வள்ளிக்கு முன்பாகவே பொம்மி நுழைந்து விட்டது. அங்கே இவளுக்காக காத்திருப்பவன் ஒரு கட்டு பிஸ்கோத்துகள் போடுவான். பிஸ்கோத்து தின்றால் வாய் எந்த நேரமும் இனித்தே கிடக்கும். பிஸ்கோத்து ஞாபகம் வந்தவுடன் இவளை மறந்து விட்டு பொம்மி ஆலமரத்துக்கு ஓடியது. இருட்டில் ஆலமரம் கரும்பூதம் போல துண்டுக்காட்டில் நின்றிருந்தது.

ஊர்ப்பறவைகள் முழுதும் அதில் தான் இரவு நேரத்தில் கிடக்கின்றன. இருட்டு விழும் நேரத்தில் பல பறவைகளின் கூச்சல் அங்கு கேட்கும். பொம்மிக்கு பிஸ்கோத்து தருபவன் ஆலமரத்தில் தலையை முட்டக்குடுத்து படுத்திருந்தான்.

அவன் செல்போனில் எதையோ நோண்டிக் கொண்டிருந்தான். பொம்மி போய் அவன் முகத்தை நக்கியது. அவன் உற்சாகமாய் எழுந்து சாய்ந்து அமர்ந்தான். லுங்கியைத் தூக்கி ஜட்டி பாக்கெட்டிலிருந்து பொம்மிக்கு வாங்கி வந்த பிருட்டானியாவை காகிதம் கிழித்து அப்படியே கீழே வைத்தான். இனி தின்று முடித்து விட்டு அப்படி காவலுக்கு ஓரம் போய் படுத்துக் கொள்ளும் என்று அவனுக்குத் தெரியும். மணியை என்ன என்று பார்த்தான். இரவு ஒரு மணி! நான்கு மணி நேரமாக இந்த இடத்தில் வள்ளிக்காக காத்துக் கிடந்தது வீண் போகவில்லை.

பொம்மி இருளில் புதுச்சேலை படபடக்க வந்து கொண்டிருந்தாள் காட்டினுள். இன்று கடைசி கடைசியாக நிதானமாக செய்ய வேண்டுமென நினைத்துக் கொண்டான். அவளும் அப்படி நிதானமாக செய்து போகத்தான் வருகிறாள் என்று நினைத்துக் கொண்டான். அவனருகில் வந்தவள் கையோடு கொண்டு வந்திருந்த துண்டை அவனுக்கு முன்னால் விரித்து அதில் அமர்ந்தாள். பின் பொரிக் காகிதத்தில் கலியாணத்திற்காக சுட்டிருந்த வடைகளை இடுப்பில் அஞ்சாரண்ணம் எடுத்துச் செருவி வந்திருந்தாள் அவனுக்காக. அதை எடுத்து நீட்டினாள். அவனும் கலியாண வடையா? என்று கேட்டு வாங்கி சுவைத்தான்.

புதிய சேலையின் வர்ணம் அவனுக்கு இருட்டில் சரியாகத்

தெரியவில்லை. ஆனாலும் 'அழகா இருக்குடி வள்ளி' என்று சொல்லி வைத்தான் வடை மென்று கொண்டே.

"இந்த கரும்பச்சைக் கலரு எனக்கு புடிக்கவே இல்லை. எங்காயா தான் காங்கயத்துல சுபமங்களத்துல எடுத்துச்சாம். என்னையுங் கூட்டிட்டு போயிருந்தா ஒடைக்கி கட்டுறக்கு புடிச்ச கலருல எடுத்திருப்பேன். ஆமா நீங்க என்ன கலருல பட்டு எடுத்து வச்சிருக்கீங்க? எங்கூட்டுல கலியாணப்பட்டு செவப்புக்கலருல எடுத்திருக்காங்க. நானே கறுப்பு. எனக்குப்போயி செவப்புல எடுத்தா எப்பிடி இருக்கும்? ஒரு நிதே இல்லாம எடுத்தா கோவம் வருமா வராதா? எப்பாச்சிக்கும் ஒருக்கா எடுக்காங்க. தெனத்திக்குமா எடுக்காங்க." என்றாள்.

ரமேஷ் வடைகள் நான்கை தின்று விட்டு மிச்சத்தை இருட்டில் தள்ளிப் படுத்திருந்த பொம்மிக்கு காகிதத்தோடு வீசினான். வள்ளிக்கோ இதென்ன இவன் சாலாக்கு பண்டீட்டு உக்காந்துட்டு இருக்கான்? என்றே இருந்தது. ஏதாவது திட்டம் வைத்திருந்தால் சொல்லணுமல்லவா? பொம்மி கூடவே வருவேன் என்கும். அதையும் தான் கூட்டிப் போலாமே!

காரை தார்ரோட்டில் நிப்பாட்டி விட்டு அவன் சோட்டாளுகளை உக்காத்தி வைத்து விட்டு வந்திருக்கிறானோ? ஒரு தகவலும் பேச மாட்டாமல் இருக்கானே? போக என்னை கூட்டிப்போக வந்தவன் ஏன் லுங்கியில் வந்திருக்கான்? என்ன கலரில் பட்டுச் சேலை எடுத்திருக்கான் என்று விசாரித்ததுக்கு கூட பதிலே சொல்லலை?

"இதென்ன இப்படி எப்பியும் போல ஜாலி பண்டீட்டு உக்காந்துட்டு இருக்கீங்க? அங்க எம்பட ஊட்டுல ஆராச்சிம் முழிச்சுட்டா என்னைத் தேடீட்டு காடு காடா சுத்த ஆரம்பிச்சுடுவாங்க. ஒறம்பரைச் சனம் அத்தனையும் வந்திருக்குது எம்பட கலியாணத்துக்கு தெரியுமா? பொண்ணுப்பிள்ளை முட்டீட்டு ஓடிட்டாள்னா அவுங்களுக்கு எமுட்டு கோவம் வரும். வந்து புடிச்சுட்டாங்கன்னா உங்களை மிதிச்சே கொன்னு போடுவாங்க. அப்புறம் நான் உசுரோட இருக்க மாட்டேன்."

"எங்க போலாங்கறே? எங்கையில என்ன இருக்குது இப்போ? எவன் கடன் குடுக்கறன்னு எனக்கு நின்னான்? நீ கலியாணமுன்னு சொன்னதுல இருந்து நானே என்ன பண்டறதுன்னு தெரியாம முழிச்சுட்டு தூங்காமக் கெடக்கேன். உங்கொப்பன் திடீருன்னு உனக்கு கலியாணம் வெப்பான்னு கனா கண்டனா நானு? காசுக்கு எங்க போவேன் நானு? சரி அதை உடு நீ எத்தன கொண்டாந்தே இப்போ? அதைய வெச்சு சமாளிக்கலாம்" என்று அவன் சொன்னதுமே அவளுக்கு

மண்டை வெடிக்கும்படி ஆகிவிட்டது. எவ்வளவு நம்பிக்கையாய் வந்தாள் அவள்.

"அப்புறம் எம் பொறத்தீல வந்து ஏன் சிரிச்சு சிரிச்சு பேசி அமுக்கி எனக்கு ஆசையக் காட்டி உட்டே? இப்ப காசில்லீங்கறே? காசில்லாம எதுக்கு என் பொறத்தில வந்தே? நீ சாமத்துல பொழுதினிக்கிம் கூப்புட்ட போதெல்லாம் வந்து இவத்திக்காலிக்கி பொட்டுத்துணி இல்லாம கெடந்தன்ல நானு! தங்கம் செல்லமுன்னு எத்தன முத்தம் குடுத்தே! அதனாலதான எனக்கு கலியாணம் வருதுன்னு பத்து நாளைக்கி முந்தியே சொன்னேன் நானு. என்னைய கையுட மாட்டீன்னு நானு நம்பீட்டு இருந்தேன். நாலுவாட்டி வவுத்துல ஆயிப்போச்சுன்னு சொன்னதுக்கு மாத்திரை குடுத்தீல்ல. நான் திங்க மாட்டீன்னேன். அப்பிடி போட்டு அந்த மாத்திரை என்னை பொறட்டுது! நீ தின்னு பாத்திருந்தீன்னா தெரியும் எம்பட சங்கடம்."

"சரி அதுக்கு என்ன இப்ப? அதை ஏன் சொல்லிக்காட்டுறே தங்கம்?" என்றான்.

"தங்கம்னு இனிச் சொல்லாதையாமா! எனக்குப் பாரு இப்புடி ஒரு ஒவுத்தினியம்"

"அதுக்காவ நான் பழவினதெல்லாம் இல்லீன்னு ஆயிருமா தங்கம்? இப்ப எங்கிட்ட காசில்லீன்னு தான சொல்றேன். எப்பியும் காசில்லீன்னா சொல்லப்போறேன்? காசு வரும் போவும்"

"நான் கலியாணமாயிப் போனப்புறம் உனக்கு காசு வந்தா என்ன வராட்டி எனக்கென்ன?"

"என்ன நீ கோபமாவே பேசுறே தங்கம்? என் நெலமையச் சொன்னா கோபம் வருதா? நானென்ன உன்னை ஏமாத்துறதுக்கா உம்பொறத்தீல வந்தேன்? எனக்காவ நீ வவுத்தப் பொறட்டுற மாத்திரையெல்லாம் தின்னிருக்கே! எங்கம்மாட்ட இன்னும் நான் கலியாண விசயமே பேசுல. சம்பாதிக்கிற சம்பாதிப்புக்கு அது ஒரு கேடாங்கும். ரைசு மில்லுல எனத்த பெருசா சம்பாதிக்கேன் நானுன்னு நெனச்சிருக்கே நீ? வர்றது செலவுக்கு கூட பத்தமாட்டிங்குது. பெட்ரோலு கூட ஊத்த முடியில எனக்கு. வண்டிய ஊட்டுல உட்டுட்டு நடந்து வேலைக்கி போலாமுன்னு இருக்கேன்."

"இதெல்லாம் நீ அன்னிக்கே எங்கிட்ட சொல்லியிருக்கணும். பந்தா பண்ணீட்டு தலைய சிலுப்பீட்டு வந்தே"

"நீ எதாச்சிம் கலியாண நாயம் பேசுனியா முன்ன எங்கிட்ட?

பொண்ணு பாக்க வர்றாங்கன்னு சொன்னே! நானென்ன அச்சடிச்சு வச்சுட்டா உக்காந்திருக்கேன். இப்படி கிட்ட வந்து உக்காராம தள்ளி புதுச்சேலையில அழுக்கு ஆவக்கூடாதுன்னு துண்டு கொண்டாந்து போட்டு உக்காந்திருக்கே இன்னிக்கி! இதுக்கு முன்ன ஓடியாந்து எம் மடியில உக்காந்தவ நீ! எம்மேல ஆசையோட வந்தவ ஏன் அங்க உக்காந்துட்டே? உன்னிய கட்டிக்க இப்ப எங்கிட்ட காசில்லைன்னதும் நான் ஆகாவழி ஆயிட்டேன். இதுக்குத்தான் உனக்கு போனு பண்டீட்டே இவத்திக்கி உக்காந்துட்டு இருந்தனா?”

“ஆமா புதுச்சேலை கசங்கிப் போவும்.” என்றாள். அவனிடம் இந்த நாயத்தை எதிர்பார்த்து வெக்குடு வெக்குடென ஓடி வரவில்லை அவள். இப்படி பேசுவான் என்றிருந்தால் போனிலேயே என்ன ஏது என்று கேட்டு வீட்டில் போய் கிடந்திருக்கலாம். இவளாக அவன் கூட்டிப் போய் விடுவான் என நினைத்துக் கொண்டு வந்தது தான் தவறு.

நினைப்பதெல்லாம் தான் யாருக்குமே அவ்வளவு சீக்கிரம் நடப்பதில்லையே! எல்லாம் இவளாக உருவாக்கிக் கொண்டது தான். ஆறு மாத காலம் இவனோடு காட்டில் உருண்டதற்கு இந்த போன் ஒன்று தான் மிச்சம்! இப்படி நடக்குமென்றிருந்தால் இவனிடம் நிறைய கறந்திருக்கலாம். இப்படி ஏமார்ந்து போவது நடந்திருக்காது!

“சரி நான் போறேன். உனக்கு காசு வந்ததும் என்ன பண்ணப் போறே?” என்றாள்.

“கட்டிப்பேன்” என்றான் அவன்.

“இன்னொருத்தன் பொண்டாட்டியவா? இது நல்ல நாயம். வெளிய சொல்லீட்டு திரியாதே, பொச்சுல கோலேத்தீருவாங்க”

“என்னை என்னதான் பண்ணச் சொல்றே தங்கம்? அதும் ஆகாதுங்கறே. பின்ன எதுதான் ஆகும்?” என்றவன் இவளருகில் நெருங்கி அமர்ந்து இவள் மார்பில் கைவைத்தான். வள்ளி இவன் கையைப் பிடித்து தள்ளிவிட்டு எழுந்து கொண்டாள். அவனும் எழுந்து இவளை இறுக்கமாய் கட்டிக் கொண்டு மிண்டும் படுக்க வைக்க முயன்றான்.

“உட்றா கேனக்கூதி! இந்த படுக்கப் போடற வேலை வெச்சுக்காதையாமா! அதுக்கு வேற எவளாச்சிம் இளிச்சவாச்சி கெடச்சா பாரு. தூக்கீட்டு வந்துட்டான் சாமத்துல சாமானத்தை! பொம்மீ.. பொம்மீ!” என்று கத்துப்போட்டாள் வள்ளி. அவனிடமிருந்து விலக அவளுக்கு சக்தி இல்லாமல் போயிற்று. அவன் முரட்டுத்தனமாய்

கட்டி அணைத்து நசுக்கினான்.

பொம்மி ஏதோ பிரச்சனை ஆகி விட்டது போல என்று பிஸ்கோத்து போடறவனாக இருந்தாலும் செரியென அவன் தொடையை வந்ததும் கவ்வியது. அவன் ஐய்யோ! வென இவளை விட்டு விட்டு நாயை உதறினான். சேலையை சரி செய்தவள், “அந்தக் கூதிமவனை நல்லா கடி. நாளைக்கி போயி ஆஸ்பத்திரில ஊசி போடட்டும்” என்றாள்.

“நாயை உட்டு கடிக்க வெக்கிறியாடி தங்கம். கூப்புடுடி அதை” என்று நாயை விலக்க போராடினான். காட்டில் புழுதி கிளம்பிற்று. இவள், பொம்மீ! என்று மறு கத்து போட்டதும் வாலை ஆட்டிக் கொண்டு இவள் பொறத்தே வந்தது. தங்கம்! தங்கம்! என்று அவன் பினாத்திக் கொண்டு ஆலமரத்தடியில் கிடந்தான்.

பொம்மியும் வள்ளியும் திரும்பி வீடு வருகையில் எந்த அசம்பல்களும் வீட்டில் இல்லை என்றதும் திருப்தியானாள் வள்ளி. வீட்டினுள் சென்றவள் பதனமாய் தூங்கும் ஒறம்பரை சனங்களை மிதிக்காமல் தாண்டிப்போய் உள் அறையில் அவள் அம்மாவின் அருகில் சப்தமில்லாமல் படுத்துக் கொண்டாள். ‘சலவாதிக்கா போயிட்டு வந்தே? ஒத்தையா போவக்கூடாதுன்னு தெரியாதா உனக்கு? என்னை எழுப்பியிருக்கலாம்ல?’ என்று முனகியது அம்மா. ’வடை தின்னு சேரலியாட்ட!’ என்றாள் இவள்.

பொம்மி மட்டும் கூட வந்திருக்கா விட்டால் ரமேஷ் ராடு சாத்தியிருப்பான்! என்று நினைத்தாள். அவன் இறுக்கிப் பிடித்த இடமெல்லாம் வலியாய் இருந்தது. ஒரு நாளில் கூட அவன் இப்படி காட்டுத்தனமாய் கசக்கியதில்லை. அப்படி என்ன வெறி அவனுக்கு? அவனுக்கு தேவை என்றால் அவன் சொன்னதும் படுத்துக் கொள்ள வேண்டுமா? கூட்டிப்போய் தாலி கட்டி விட்டு ராடு சாத்தட்டுமே! யார் வேண்டாம் என்றது?

அவளுக்கு காலையில் தாலி கட்டப் போகும் கலியனின் ஞாபகம் வந்தது. எப்படி யோசித்தாலும் அவனை ஒருமுறை மட்டுமே பார்த்ததினால் இப்போது அவன் முகம் கூட ஞாபகத்தில் வருவேனா என்றது. அவனும் காட்டு வேலைக்குத்தான் போவதாக பேசிக் கொண்டார்கள். அவன் இனி அவன் ஊரில் யாரோடு கிடக்கிறானோ என்று நினைத்து விட்டு தன்னையே திட்டிக் கொண்டாள். தாலி கட்டும் முன்பே புருசனைப் பற்றி தப்பாக நினைப்பதா?

அப்படி அவனுக்கும் ஒருத்தி இருந்தால் தான் என்ன? அதென்ன

அவனுக்கு தேய்ந்தா போய்விடப் போகிறது? யோக்கியமாய் யார்தான் இருக்கிறார்கள் என்று தெரிவதில்லை. யோக்கியமாய் இருப்பவர்களை பார்த்து எல்லோரும் சிரிக்கவே செய்கிறார்கள். அப்பாவி என்கிறார்கள். வள்ளி தன்னையும் அப்பாவி என்றே நினைத்தாள். ரமேஷ் அவளை எப்போதும் ஏமாற்றவே இல்லை என்று இப்போது தான் நினைத்தாள்.

இவள் தான் தன்னிடமிருக்கும் பொருள் அடிபடுவது தெரியாமல் அவன் கட்டிக் கொள்வான் என்று நம்பி பொருளை அவனுக்கு இலவசமாக கொடுத்திருக்கிறாள். ஏமார்ந்தது நான் தான் என்றும் நினைத்தாள். அதை முதலாக வைத்து சம்பாதிக்க துப்பில்லாத கழுதை என்று தன்னை திட்டிக் கொண்டாள். பக்கத்து வீட்டு அம்மிணியம்மாவை பார்க்க தினமும் வழுவுக்குள் பைக்குகள் வந்து வந்து செல்கிறது. எல்லோருக்குமே தெரியும் அம்மிணியம்மா அப்படித்தான் என்று.

அம்மிணியம்மா அதை முதலாக வைத்து சம்பாதிக்கிறது. புதுப் புது சேலை அணிகிறது. தினமும் கங்கேயம் பஸ் ஏறிப்போய் சினிமா பார்க்கிறது. அம்மிணியம்மா எங்கும் வேலைக்கு செல்வதில்லை. இன்று கூட சாப்பிட அம்மிணியம்மா கட்டி வந்திருந்த சேலை ஆயிரம் ரூபா இருக்கும் என்று அம்மாளே சொல்லியது. அம்மிணியம்மா உள்ளூர் ஆட்களோடு அந்தக் காரியம் செய்யாது. யாரேனும் சென்றால் கூட சீவக்கட்டையை தூக்கிக் கொள்ளும். ’வந்துட்டானுக பிச்சக்காரனுக தூக்கீட்டு!’ என்று வாசலில் நின்று ஒருபாட்டம் கத்தும்.

அம்மிணியம்மா இவளிடம் அப்படி அனுசரணையாய் பேசும். இவள் அம்மாவுக்குத்தான் அது பிடிக்காது. ஊரு மேயறவ கூட உனக்கென்னடி பேச்சு? என்று திட்டும். அம்மணியம்மா காதில் விழுந்தாலும் அது அம்மாவோடு சண்டைக்கு எப்போதும் நிற்காது. அம்மணியம்மாவும் ரமேஷைப் போலவே தங்கம் என்று தான் இவளைக் கூப்பிடும். இனிமேல் தங்கம் என்று யார் கூப்பிட்டாலும் அதில் வினையிருக்கிறது என்று கண்டு கொள்ள வேணுமென முடிவு செய்தாள்.

ஊருக்குள் அம்மிணியம்மா மாதிரியே கொஞ்சம் வயசாகி சரசுவதி இருக்கிறது. அது தண்ணி எடுக்க பைப்படிக்கு வெறும் பாவடையோடு மட்டும் வரும். அதன் முலைகள் தொங்கிப் போய் தூறியாடிக் கொண்டே வரும். அது எப்போதும் அப்படித்தான். நல்ல சிவந்தநிறம் அந்த அம்மாள். ஒரு காலத்தில் அதுவும் அதை முதலாக வைத்துத்தான் சம்பாதித்ததாம். யாரோ ஒருவருக்கு தோட்டத்தில் கீப்பாக இருந்து நகை நட்டோடு வந்து சேர்ந்ததாம். அவள் புருசன் ஒரு பிள்ளை பூச்சி.

தண்ணீர் எடுக்க வருகையில் அப்படி வரும் சரசுவதி வீட்டில் இருக்கையில் பாவாடையும் கட்டி இருக்காது. இவளே ஒரு முறை அவள் வீடு போய் பார்த்திருக்கிறாள். அது அம்மணக்கட்டையாய் தூங்கிக் கொண்டிருந்தது. யாரேனும் ஊரார் போய் சொன்னாலும் அந்தம்மா கேட்காது. நீயும் அவுத்து போட்டுட்டு திரி! என்றே சொல்லும். யாரேனும் புதியவர் ஓட்டு லிஸ்ட் எடுக்கவோ, இல்லை பத்திரிக்கை கொடுக்கவோ தெரியாத்தனமாய் அந்த வீட்டுக்குப் போய் நின்றால் தலை தெறிக்க ஓடி வருவார்கள். 'என்ன?' என்று அம்மணமாக வீட்டிலிருந்து கேட்டபடி ஒருத்தி வந்தால் யார் அங்கு நிற்பார்கள். அடிக்கடி அந்த வேடிக்கை ஊருக்குள் நடந்து கொண்டே இருக்கும்.

அந்த அம்மாவிற்கு பணம் இருக்கிறது. யார் வீட்டுக்கும் அது போய் நிற்கப் போவதும் இல்லை. சாகும் வரை நிம்மதியாய் அப்படித்தான் கிடக்கும் என்றே நினைத்தாள் இவள். ஆனால் அதற்காக அந்த அம்மாள் ஏன் தன்னை அம்மணமாக்கிக் கொண்டு இருக்க வேண்டும்? என்பது மட்டும் ஊராருக்கே தெரியவில்லை. பைத்தியம் என்றார்கள். அது பைத்தியமாக இவளுக்குத் தெரியவில்லை. தன்னைக் கட்டிக்கப் போகும் கலியனின் ஊரில் கூட இப்படி பொம்பளைகள் இருக்கலாமென நினைத்தபடி தூக்கம் வராமல் கிடந்தாள் வள்ளி.

0000000000000

கலியனின் கல்யாணம் முடிந்து இரண்டு நாட்களாகி விட்டது. கல்யாணச் சோர்வு வழுவுக்கு இன்னும் தீரவில்லை. முதல் ராத்திரிக்கித்தான் நேரம் சரியில்லையென இன்னமும் இரண்டு நாட்கள் தள்ளி வைத்து விட்டார்கள். கலியனின் அம்மா அவனை கண்கொத்தி பாம்பு போல பார்த்துக் கொண்டிருந்தது. பையன் தினவெடுத்துப் போய் வள்ளிமீது பாய்ந்து விட்டால் கோளாறாகி விடும் ஆரம்பமே!

அவனோ கடைசிக்கி ராசாமணியிடம் கேட்டது போல வாயில் ஒரு முத்தம் வள்ளியிடம் கேட்கக் கூட சந்தர்ப்பமே கிடைக்காமல் தவித்துக் கோண்டிருந்தான். பொடுசாள் வேறு எரியும் சூத்தில் சுக்கை வைத்தது போல இவனை பார்க்கையில் எல்லாம் 'வண்டி ஓட்டப்பழக்கி உடறேன் வா!' என்றே கூப்பிடுகிறது. இருக்கும் ஆசையில் வண்டியோட்ட கத்துக் குடு என்று பொடுசாளிடமே போய் நின்றுவிடலாம் போலிருந்த்து கலியனுக்கு.

அன்று மாலையில் வள்ளியை டிவியெஸ்சில் ஏற்றிக் கொண்டு கவுண்டரைப் பார்த்து வருவதாக கிளம்பினான். அவள் கலியனின் பின்புறமாக புதுச்சேலை கட்டிக்கொண்டு டிவியெஸ்சில் அமர்ந்தவள்

சும்மா அமர்ந்திருக்கலாம். அவனை நெருக்கி உட்கார்ந்து அவன் வயிற்றுப்புறமாக வலது கையை வைத்து இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். அம்மா பார்த்தால் வம்பாகி விடுமென உடனே வண்டியை கிளப்பியவன் வழுவைத் தாண்டியதும் வேகமெடுத்தான்.

“வெசையாப் போவாதீங்க, எனக்கு முன்னப்பின்ன டீவீஸ்ல உக்காந்து பழக்கமில்ல! இந்த வண்டி உங்குளுதா?” என்றாள். திருமணமான நாளிலிருந்து அவள் இவனிடம் அதிகம் பேசியது இந்த வார்த்தைகள் தான்.

“வண்டில உக்காந்து போனதே இல்லியா? அதிசீமா இருக்குது”

“என்னைய யாரு கூட்டிட்டு போனாங்க வண்டில? நானே காட்டு வேலைக்கி போயிட்டு இருந்தவ. வண்டி நம்முளுதான்னு சொல்லுங்கன்னா”

“வண்டி நம்முளுது மாதிரிதான். கவுண்டரு ஓட்டிக்க குடுத்திருக்காரு எனக்கு. அவருக்கு காரு, புல்லட்டுன்னு இருக்குது. ஏன் கேட்டே?”

”நானும் ஓட்டிப் பழவிக்கத்தான். எங்கூர்ல நாங்காங்கப் பொறந்ததுக எல்லாம் வர்ரு வர்ருன்னு வண்டில சுத்துதுக” என்றாள். கலியன் நேராக கவுண்டர் தோட்டத்துக்கு வண்டியை விடவில்லை. ஊருக்குள் போய் சந்து சந்தாக ரவுண்டு விட்டான். இவன் போன நேரமோ என்னவோ ஊரில் சனமே இல்லை.

“இங்க எங்கீங்க சும்மா ரவுண்டு உடறீங்க?”

“புதுப் பொண்டாட்டிய ஊருக்காரங்களுக்கு காட்டலாம்னா இன்னிக்கின்னு பாத்து ஒருத்தரக் கூடக்காணம் பாரு”

“அதிசியம் தான் போங்க உங்குளுக்கு. யாரு என்னை காங்க நிக்காங்க இங்க என்னையும் பாரு என்..” என்று சொல்ல வந்தவள் நாக்கை கடித்துக் கொண்டாள். வண்டி அதன் பின் கவுண்டர் தோட்டம் போய்த்தான் நின்றது. அவனுக்குத் தெரியும் கவுண்டர் அந்த நேரத்தில் கட்டிலில் தான் கிடப்பார் என்று.

“கட்டில்ல படுத்திருக்காருல்ல அவரு தான் கவுண்டரு. அவரு எந்திரிச்சாருன்னா நாம அவரு கால்ல விழுந்துறோணும்” என்று சொல்லி அவளை கூட்டி வந்தான் அவரிடம். டிவியெஸ் சத்தம் கேட்டதுமே வேலுச்சாமிக்கவுண்டர் கலியன் தான் வருகிறான் என்று கண்டு கொண்டார். அவன் அருகில் வந்ததும், ’கவுண்டரே! ஏனுங் எந்திரிங்கோவ்’ என்றான்.

“வாடா கலியா! இதாம் உன் புதுப் பொண்டாட்டியா? சோக்கா இருகிறாடா! உனக்கு சரியான ஜோடி!” என்று சொல்லி கட்டிலில் எழுந்து அமர்ந்தார். அவர் காலில் இருவரும் விழுந்தார்கள்.

“அட! இதெல்லாம் யாருடா சொல்லிக் குடுத்தாங்க உனக்கு? உங்கோயாவா? சேரிச் சேரி ரெண்டு பேரும் எந்திரிங்க!” என்றார். தன் அண்டர்வேர் பாக்கெட்டில் கையை விட்டு ஐநூறு ரூவா நோட்டுகள் இரண்டை எடுத்து ஆளுக்கு தனித் தனியே கொடுத்தார். இருவரும் கும்பிடு போட்டு வாங்கிக் கொண்டார்கள்.

“அப்பறம் சோலிக்கி எப்பத்தான் வர்றீங்க ரெண்டு பேரும்? ஊட்டுல இருக்கறதுக தான் தொண்டுப்பட்டிப் பக்கமே காலை வைக்க மாட்டீங்குதுகளே! அந்த ராசாமணியின்னு ஒன்னை கூட்டியாந்தீல்ல காட்டுப்பாளைய வழுவுல இருந்து. அது கிட்டப் போயி சொல்லி ரெண்டு நாளா அந்தப்பிள்ளை தான் வந்து சுத்தம் பண்டி தீவனம் போட்டுட்டு காட்டுல வேலை பாக்குது. அட அது வாழை மரத்துக்கு தண்ணியெடுத்துட கூப்பிட்டதீம் வந்திடுச்சுடா! அருமெ தெரியுமா! என்னா கணக்கு!” என்றார்.

கலியனுக்கு ராசாமணி வாழைத்தோட்டத்தில் கவுண்டர் மீது கிடப்பது போல ஒருகணம் தோன்றி மறைந்தது. கவுண்டருக்கென்றே எல்லாமும் தேடிவந்து அமைகிறது. அவருக்கு மச்சம் இருந்தாலும் இருக்கும். கவுண்டரை குஷிப்படுத்தி விட்டால் தோட்டத்தில் நிரந்திரமாய் வந்து வேலை பார்த்து போய்க் கொண்டிருக்கலாம். நீட்டி நெளித்தும் கூட போய்க்கொண்டிருக்கலாம். ராசாமணி இனி கவுண்டர் தோட்டத்தில் நிரந்திர தொழிலாளியாகி விட்டாள் என்று இவனுக்கு தெரிந்து போனது. அவளை பார்த்தால் பார்த்தால் இவனுக்கு வேறு இனி பத்திக் கொண்டு வரும். எப்படி ஒன்றுமே தெரியாதது போல் பசப்பி ஏமாற்றினாள் அவள்.

“சோலிக்கி இன்னம் ரெண்டு நாள்ல வந்துடறோமுங்க கவுண்டரே”

“அதென்னடா ரெண்டு நாளு கணக்கு? உம் பொண்டாட்டி ஊட்டுல இருந்துசாரா நீ ரெண்டு நாள் அங்க அவுக்கறியா? பொண்டாட்டி கட்டியாச்சு வேலையப் பாப்பானா அதை உட்டுட்டு ஊட்டுல என்னடா பண்றே?. வந்தீன்னா சின்னச் சின்ன சோலியப் பாத்துட்டு போயிக்குவியாம். இன்னிக்கு புதன் சந்தைக்கி ஊத்துக்குளி போயி சாமான் வாங்கிட்டு வரோணுமின்னு வடிவு சொல்லிட்டு இருந்தாடா. ஊட்டுல பருப்பு, புளியெல்லாம் இல்லியாம். அப்புடியே ரெண்டு பேரும் போயிட்டு வந்துடுங்க. நான் பையை எடுத்தாந்து தரச் சொல்றேன்”

என்றவர் வடிவை கூப்பிட்டார்.

பார்த்துப் போகலாம் என்று வந்தால் இது ஒன்று தான் தொந்தரவு. இவனுக்கென்று ஏதாவது சோலியை கையிலேயே வைத்திருப்பார் கவுண்டர். இவன் தட்ட முடியாமல் பையையும் பணத்தையும் வாங்கிக் கொண்டு ஊத்துக்குளி கிளம்பினான் வள்ளியுடன்.

“உங்க கவுண்டரு நல்ல மனுசனாட்ட இருக்குது” என்றாள்.

“நல்ல மனுசன் தான். கலியாணச் செலவுக்கு பத்தாயிரம் கொடுத்தாரு எங்கப்பங்கிட்ட. நானு சின்ன வயசில இருந்தே இவரு தோட்டத்துல தான் இருக்கேன். அதா எதுக்க வர்றாள்ல டீச்சர் ஒருத்தி நடந்துட்டு, இவ என் பெரீப்பன் புள்ள. எங்க பெரீப்பங்கூட நான் சின்னதா இருக்கப்பவே எங்கப்பன் சண்டை கட்டீட்டுது. அதனால இவகிட்ட நான் பேச மாட்டேன். நீயும் பேசாதே”

“நீங்க சண்டக் கட்டுனதுக்கு நான் பொன்னையா? நானெதுக்கு அவிங்ககிட்ட பேசாம இருக்கோணும்? அவங்க பேசினா மூஞ்சியத் திருப்பீட்டு போவச் சொல்றீங்க. அது முடியாது”

“சரி என்னமோ பண்டு. எங்கம்மா சத்தம் போட்டா வாங்கிக்க. எங்கிட்ட ரிப்போர்ட் சொல்லப்புடாது அப்புறம்”

“நானெதுக்கு உங்க கிட்ட ரிப்போர்ட் சொல்லப் போறேன். அப்ப உங்க பெரீப்பன் குடும்பத்துல ஒத்தை ஆளு நம்ம கல்யாணத்துக்கு வரலையா?’

“அழைப்பே குடுக்கலை” என்றவன் பீட்டர் சார் வண்டியை பார்த்தும் நிறுத்தினான்.

“சார் கலியாணத்துக்கு வராமப் போயிட்டீங்களே சார். நீங்க வருவீங்க எப்படியுமுன்னு நெனச்சிட்டு இருந்தனுங்க! இவ தான் எம் பொண்டாட்டி சார்” என்றான்.

“பள்ளிக்கூடத்து நாள்ல கலியாணத்தை வச்சா எப்படிடா வர்றது? ஆமா ரெண்டு பேரும் கிளம்பீட்டீங்க?”

“ஊத்துக்குளிக்கு சார். கவுண்டரு வேலை கொடுத்துட்டாரு சந்தையில சாமான் வாங்க”

“நானும் அங்க தான் வர்றேன். காய்கறியெல்லாம் வாங்கி போட்டுட்டா கெடக்குமுல்ல. உடு பொறவுக்கு மெதுவா வர்றேன்” என்றார். இவன் வண்டியை நகர்த்தினான். இவன் வண்டிக்கு

பொறவுக்கே அவர் கியர் வண்டியை மெதுவாக ஓட்டிக் கொண்டு வந்தார்.

ஊத்துக்குளி சந்தையில் அவர்கள் கவுண்டருக்கு ஜாமான் வாங்கினார்கள். பீட்டருக்கு காய்கறிகள் எப்படி பிஞ்சாய் பார்த்து வாங்குவது என்று வள்ளி சொல்லி வங்கிக் கொடுத்தாள். 'இதுல இத்தன வேலைத்தனம் இருக்கா? நானெல்லாம் வந்தா கால்கிலோ அரைக்கிலோன்னு அவங்க கிட்டயே சொல்லிடுவேன். அவங்களே போட்டுக் குடுத்துடுவாங்க' என்றார். பீட்டர் வள்ளி கையில் ஐநூறு ரூபாய் நோட்டு ஒன்றை கலியன் பார்க்கவே கொடுத்தார். 'உனக்கு விசயம் வாங்கிட்டு வந்துடறேன். நாம நைட்டு சந்திப்போம்' என்றார். இவர்களை முன்னே தாட்டி அனுப்பினார்.

திரும்பி வருகையில் 'வள்ளி அவனிடம் விசயம் வாங்கிட்டு வர்றதா சொன்னாரே என்னது?' என்றாள். இவன் பாட்டில் என்றான். 'ஓஹொ' என்று வள்ளி சொன்னவள், 'வாத்தியாருங்கறீங்க பாட்டலு குடிப்பாரா?' என்றாள். அவர்கள் கவுண்டர் வீட்டில் ஜாமான்களை கொடுத்து விட்டு வீடு வந்தார்கள்.

அடுத்த நாள் காலையிலேயே கலியன் கிளம்பி விட்டான் கவுண்டர் தோட்டத்துக்கு. வீட்டில் அவன் அப்பனும் அம்மாவும் வேலைக்கு திருப்பூர் கிளம்பி விட்டார்கள். வள்ளி ஒருத்தி மட்டுமே வீட்டிலிருந்தாள். யாரும் இல்லாத போது தான் அவளும் கவுண்டர் தோட்டத்துக்கு வேலைக்கே சென்றிருக்கலாம் என்று நினைத்தாள். பக்கத்து வீட்டில் டிவி ஒடும் சப்தம் கேட்டது. இன்று சனிகிழமை அந்தப்பிள்ளைக்கு லீவாக இருக்குமென நினைத்தாள்.

அவளிடம் பேச்சு கொடுக்க வேண்டுமென நினைத்தாள். அவள் பெயர் தெரிந்திருந்தாலாவது இங்கிருந்தே கூப்பிட்டு பார்க்கலாம் என நினைத்தாள். குழந்தைகள் வெளியே சைக்கிள் டயர் உருட்டி ஓடி விளையாடிக் கொண்டிருந்தன. வள்ளி வீட்டின் கதவை சாத்திவிட்டு வெளியே வந்து பார்த்தாள். உருண்டு ஓடி வந்த டயர் ஒன்று இவள் வீட்டு வாசலில் வட்டமடித்து விழுந்தது. அதை எடுக்க ஒருவன் ஓடி வந்தான். அவனை அருகில் கூப்பிட்டாள்.

“உம் பேரென்னடா?” என்றாள்.

“ராஜா” என்றான். அவன். வெளியே நின்றிருந்தவன், 'அவன் மூக்கொழுக்கி' என்று சொல்லி சிரித்தான். இவன் அவனை அடிக்க கல் தேடினான் இவள் வாசலில்.

“சரி நீ எத்தனாம் வகுப்பு படிக்கே?” என்றாள்.

“நானு நாலாங்கிளாஸ் படிக்கேனக்கா” என்றான்.

“பக்கத்தூட்டுல ஒரு டீச்சர் இருக்காங்கள்ல அவங்க பேரு என்ன?”

“இந்திரா டீச்சரு. யாரையும் அடிக்காது அந்தக்கா.”

“நாஞ்சொன்னன்னு கூப்பிடறியா? என்னையப் போயி என்னன்னு சொல்லுவே?”

“புதுப்பொண்ணு கூப்புடுதுன்னு சொல்லுவேன்” என்றவன் டயரை உருட்டிக் கொண்டு இந்திரா வீடு சென்றான். அவன் அங்கு வீட்டினுள் பேசுவது இங்கே கேட்டது. பிறகு டிவியில் பாட்டு சப்தம் நின்றது. இவள் வாசலைத்தாண்டி காங்கரீட் போட்ட சாலைக்கு சென்று நின்றாள். இந்திரா புன்னகைத்தபடி வந்தாள்.

“எங்களுக்கெல்லாம் தான் கல்யாணத்துக்கு அவன் அழைப்பே சொல்லுல. அதான் வரலை” என்றாள்.

“சொன்னாப்ல எதோ சண்டையின்னு”

“சண்டை அவங்கப்பனும் எங்கப்பனும் போட்டுக்கிட்டாங்க. இவனுக்கு என்ன வந்துச்சு எனக்கு பத்திரிக்கை குடுக்க வேண்டிது தான! நான் வந்திருப்பன்ல. வாங்க நாம சேந்து கெணத்துக்கிட்ட போயி தென்னை மரத்து நெழல்ல உக்காந்து பேசலாம். அவங்காயா நாம பேசுனது தெரிஞ்சா உங்களையும் சத்தம் போடுவா”

“அதெல்லாம் நான் பாத்துக்கறேன்” என்றவள் அவள் பின்னால் சென்றாள். சேந்து கிணற்றை எட்டிப்பார்த்தாள். உள்ளே தண்ணீர் அடியாழத்தில் கிடந்தது.

“பைப் போட்டுட்டாங்க அதுல யாரும் இப்ப தண்ணி சேந்தறதே இல்லைங்க. ஆமா கலியன் இன்னிக்கி காட்டு வேலைக்கி போயிட்டானா? அவம்பாட்டுக்கு டர்ர்ருனு வண்டில வந்துடுவான். அவனெதாச்சிம் சொல்லப் போறான்.”

“நான் நேத்தே இந்திரா கிட்ட பேசுவேன்னு சொல்லிட்டேன்”

“உங்க பேரென்ன? சொன்னாங்க மறந்துட்டேன்?”

“எம் பேரு வள்ளி. ஆமா எங்க ஊர் மாதிரியே எல்லோரும் வழுவுல வேலைக்கி காலையில ஓடிப் போயிடறாங்க. ஊரு காலியா கிடக்குது”

“எனக்கே ஸ்கூல் இல்லங்க. அதனால டிவி பார்த்துட்டு

படுத்திருந்தேன். கலியனை மொதல்ல அந்த காட்டு வேலைக்கி போக வேண்டாமுன்னு சீக்கிரம் சொல்லுங்க. அந்த கவண்டரு ஒரு மாதிரியான ஆளு. இவனுக்கு என்ன சம்பளம் குடுத்துவாரு? எங்க சித்தப்பனும் சித்தியும் திருப்பூரு போயி சம்பாதிச்சுட்டு வர்றாங்க. இவன் இங்கயே குடிச்சுட்டு ஊருக்குள்லயே கெடக்கான். இனி கலியாணமாயிடுச்சுல்ல யோசனையே பண்ட மாட்டானா? உங்களுக்கும் இனி அவன் அப்பனாயாவே சோத்துக்கு சம்பாதிச்சு போடுவாங்கன்னு ஜாலியா சுத்துவான்.”

“என்னையும் அவங்க கவுண்டரு காட்டு வேலைக்கி ரெண்டு நாளுக்கழிச்சி வரச் சொல்லி சொல்லிட்டாரு. எனக்கு திருப்பூரு போயி என்ன வேல செய்ய தெரியும்?” என்றாள்.

“அந்தாளு பொம்பள விசயத்துல கொஞ்சம் அப்படி இப்படி இருப்பாப்லைன்னு ஊரே சொல்லுது. இவனுக்கு அறிவு வேண்டாம். உங்களையும் கொண்டி அந்த காட்டுல உடறேங்கான். என்னமோ நான் சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உங்க பிரியம்”

“எனக்கு அவிங்க கவுண்டரைப் பார்த்தா நல்லவரு மாதிரி தான தெரிஞ்சுது”

“பாத்தா எல்லாம் அப்படித்தான் எல்லாருமே இருப்பாங்க. கிட்டப் போயி பேசுனாத்தான தெரியும். நம்மாளுங்கன்னா யோசிக்காம கையை வப்பாரு அவரு. நம்ம பொம்பளைங்களும் கூசாம அவருகிட்ட பணம் வாங்கீட்டு ஒன்னும் தெரியாத மாதிரி வந்திருவாங்க. அப்புறம் அவங்க கூட சண்டையும் நாம கட்ட முடியாது. அதுக்குத்தான் ஒதுங்கிப் போயிக்கோணுமுன்னு சொல்றது. நீங்க வேணா போயி ஒரு வாரம் இருந்து செஞ்சு பாருங்க.” என்றாள் இந்திரா.

“அதெல்லாம் எங்க ஊர்லயும் அப்படித்தான். ஆனா ஆம்பளைங்க எல்லாரும் அரிசி மில்லுக்கு வேலைக்கு போயிருவாங்க. திருப்பூரு வேலைக்கி போயிருவாங்க. பொம்பளைங்க ஒன்னு ரெண்டு தான் என்னை மாதிரி போயிட்டு இருந்தோம். ஆனா இந்த வேலையெல்லாம் பண்ட மாட்டாங்க. அதே! சொன்ன மாதிரியே டிவியெஸ் வருது”

“நாஞ் சொன்னன்ல. அவன் எப்ப வேணாலும் வருவான் போவான். போயி டீ வெச்சு குடுத்துட்டு வாங்க. அவன் அதுக்குத்தான் வந்திருப்பான், நான் இங்கயே இருக்கேன்” என்றாள் இந்திரா.

“என்ன நேத்து சொன்னே இன்னிக்கி அவகூட நாயம் பொழந்துட்டு இருக்கியா?” என்றான் கலியன் வண்டியை ரோட்டிலேயே நிறுத்தியபடி.

இவள் ஒன்றும் சொல்லாமல் போய் வீட்டின் கதவை நீக்கினாள். பின்னாலேயே வந்தவன் வீட்டினுள் நுழைந்ததும் இவளைக் கட்டிக் கொண்டான். இவளும் அவனைக் கட்டிக்கொண்டு, ’இதுக்குத்தான் வேலக்காட்டுல இருந்து வண்டிய முறுக்கீட்டு வந்தீங்களா?’ என்றாள். அவன் வள்ளியின் கன்னத்தில் எச்சில்பட தொடர்ந்து முத்தம் கொடுத்தான் கணக்கின்றி!

“போதும் கம்முன்னு இருங்க சித்த! உங்கொம்மா நாளைக்கித்தான் நமக்கு விசேசமுன்னு சொல்லிட்டு போச்சு. அவன் வந்து பூந்துடுவான் பாத்து உஷாரா இருந்துக்கன்னு சொல்லிட்டு போச்சு”

“அப்ப உனக்கு எதும் வேண்டாமா இப்ப?” என்றவனுக்கு வேண்டாமென தலையாட்டினாள்.

“உங்களுக்கென்ன டீ வெச்சுத்தரவா?”

“எனக்கு டீ வேண்டாம். உனக்கு முத்தமாச்சிம் குடுத்துட்டு போலாமுன்னு வந்தேன்” என்றவனை இழுத்து கட்டிக் கொண்டு அவன் உதட்டில் முத்தம் கொடுத்து அனுப்பினாள். அவன் சொக்கிப் போய் டிவியெஸ்சை எடுத்துக் கொண்டு சென்றான். அப்போது இவள் செல்போன் ரிங்கடித்தது. எடுத்து யாரெனப் பார்த்தாள். ஊரில் ரெண்டு மூனு பேருக்கு நெம்பர் கொடுத்து விட்டுத்தான் வந்திருந்தாள். அவர்களில் யாராவது இருக்குமென பார்த்தவள் ரமேஷ் என்றிருக்க எடுத்தாள். தங்கம்! என்றான் அவன்.

“ம்! சொல்லுடா! என்ன வேணும் உனக்கு? தூக்கிக்கிச்சா?”

“என்ன தங்கம் இப்படி பேசுறே எங்கிட்ட?”

“பின்ன எப்படி கொஞ்சிப் பேசச் சொல்றியா? என்ன மயிருக்குடா இப்ப போனு பண்டுனே?”

“உம்பட குரலை கேக்கணுமுன்னு தோணுச்சு தங்கம்”

“குரலைக் கேட்டு என்னடா பண்டுவே? நாயிக்கடி பத்துலியா உனக்கு?”

“நாயெல்லாம் வெச்சு கடிக்க வெச்சிட்டீல்ல தங்கம். நானென்ன அன்னிக்க மொதவாட்டியா உன்னை கட்டிப் புடிச்சேன் கடிக்க வெக்க?”

”உம்மட நாயத்தை மொதல்ல நிறுத்துடா. என்ன வேணும் உனக்கு?”

“மொத ராத்திரி முடிஞ்சுதா தங்கம் உனக்கு?”

“அதான் நீ மொத முடிச்சிட்டியே. அது நடந்தா என்ன நடக்கலன்னா

என்ன உனக்கு?”

“கேட்டன் நானு எப்படி இருக்குது புது ஊருன்னு”

“டேய் ஏண்டா தொணத் தொணங்கறே வர்றியா இங்க இப்ப?’

“ஆமா தங்கம். நான் அதுக்குத்தான் கூப்பிட்டேன். என்ன இருந்தாலும் எம்பட தங்கம் தங்கம் தான்”

“பெட்ரோல் ஊத்துறக்கு காசில்லீம்பியேடா”

“அதெல்லாம் இருக்குது நான் வந்துடுவேன்”

“வர்றப்ப ரெண்டாயிரம் ரூவா கொண்டாந்துடு எனக்கொரு அவசர செலவு இருக்குது”

“இப்ப இல்ல தங்கம் அடுத்தவாட்டி வர்றப்ப கொண்டாறேன் சரியா?”

“ரெண்டாயிரம் எடுத்துட்டு இந்தப்பக்கம் வர்றதுன்னா வா. இல்லியா அங்கே கையில புடிச்சுட்டு படுத்துக்கோ” என்றவள் போனை கட் செய்து அணைத்து வீசி விட்டு கிணற்றுக்கு நடந்தாள்.

# சயனம் 11

சென்னிமலையிலிருந்து ஆட்டோ வந்து விட்டது வேலுசாமிக்கவுண்டர் தோட்டத்திற்கு. தக்கோளிப்பழக் கூடைகளை அதில் ஏற்றிவைத்துக் கொண்டிருந்தான் கலியன். மொத்தம் முப்பது கூடைகள். ராசாமணியும், வள்ளியும் தலையில் சுமந்து கொண்டு வந்து தர அவற்றி வாங்கி ஆட்டோவில் வைத்துக் கொண்டிருந்தான். மொத்தவியாபாரி எப்போதும் சென்னிமலையிலிருந்து ட்ரைவரோடு கூடவே ஒரு ஆளையும் அனுப்புவான். இந்த முறை கலியனே அவன் வேலையை செய்ய வேண்டியதாகி விட்டது. முப்பது கூடைகளை வைத்ததுமே ஆட்டோ நிரம்பி விட்டது.

ட்ரைவர் ஒரு கூடையை தொடுவேனா என்று ஓரமாய் நின்று பீடி பிடித்தபடி ராசாமணி கூடை தூக்கி வருகையில் எல்லாம் அவள் இடுப்பாட்டத்தை ரசித்துக் கொண்டிருந்தான். அவளும் அவன் பார்க்க வெண்டுமென்றே கொஞ்சம் சேலையையும் ஒதுக்கி விட்டிருந்தாள். அவளுக்கு அது விளையாட்டாக இருந்த்து. கவுண்டர் போனில் மொத்த வியாபாரியிடம் கத்திக் கொண்டிருந்தார்.

“ஆளனுப்பாம உட்டுட்டு வேடிக்க பண்ணிட்டு இருக்கியா? அப்படியே திருப்பி அனுப்பியிருப்பேன். போச்சாதுன்னு லோடு ஏத்திட்டு இருக்கேன்”

“இந்த ஒருவாட்டி எப்படியோ சமாளிச்சு அனுப்புங்க கவுண்டரே! இந்த வக்காளி எங்கியோ குடிக்க போயிட்டான் போலிருக்கு. இன்னம் ஆளைக்காணம்” என்று அவரும் இவரை சமாதானப்படுத்த பேசிக்கொண்டிருந்தார்.

“ட்ரைவரை தூக்க வச்சிடாதீங்க கவுண்டரே அவன் இங்க வந்து நின்னுட்டு தனியா இடுப்பு எழும்பே கத்திரிச்சு போயிடுச்சுன்னு சொல்லி காசு கேட்டுட்டு நிப்பான்.”

“அவன் சும்மாதான் நிக்கான். தக்காளி வெல கிலோ முப்பது இங்க எல்லக்காட்டுல இன்னிக்கி. அதுக்கு தக்கமாதிரி கூடைக்கி போட்டு கலியங்கிட்ட பணம் குடுத்து உடு. கத்திரிக்கா, வெண்டக்கா , பத்து கூடைக இருக்குது. அதை எதுல ஏத்தி உடறது? வேன் அனுப்புன்னு சொன்னன்ல!”

“இவன் தெரிஞ்சவன் கவுண்டரே! நம்ம கடைக்கி ரெகுலரா ஓட்டுறவன். இன்னொருக்கா வருவான்.” என்றதும் போனை கட் செய்து

விட்டு கலியனிடம் வந்தார்.

“கலியா! நீ ஆட்டோவுலயே போயிட்டு பணம் வாங்கிட்டு வந்துடு! கூடை பத்து அவங்கிட்ட ஆட்டோல போட்டு எடுத்துட்டு வந்துடு. அந்த மார்க்கெட்டுல பழக்கடைக்காரன்கிட்ட முப்பது செவ்வாழைத் தாருக்கும் காசு வாங்கிட்டு வந்துடு. ஆட்டோ மறுக்காவும் நம்ம தோட்டத்துக்குத் தான் வருது.”

“சரிங்க கவுண்டரே!” என்றவன் ஆட்டோ டோரை சாத்தி கொக்கி போட்டான்.

“போயி நீயே இறக்கி கொண்டி வெச்சீன்னா அவங்கிட்டயே ஏத்துகூலி, இறக்கு கூலி வாங்கிக்க! சும்மா ஆள் அனுப்பனதா நெனச்சிக்கப் போறான்”

“செரீங்க கவுண்டரே!” என்ற கலியன் ஆட்டோவில் அமர்ந்து கொண்டான். டிரைவர் வண்டியை கிளப்பினான். கவுண்டர் கணக்கு போட்டுக் கொண்டு சேரில் அமர்ந்தார். இப்போதெல்லாம் கவுண்டருக்கு மனக்கணக்கு தவறி விடுகிறது. எந்த எந்த கடைக்காரன் நேரில் வந்து வாழைத்தார் தூக்கிப் போனான் என்று கணக்கு சுத்தமாய் தெரிவதில்லை. கலியன் இதில் ஏதோ சூது பழகிவிட்டான் என்றும் நினைத்தார். ஆனால் அப்படியும் அவன் செய்யக்கூடியவனல்ல என்று நம்பினார்.

தோட்டம் தேடிவந்து பத்து ரூபாயை கொடுத்து விட்டு தாரை அறுத்துப் போய் விடுகிறார்கள். காலை நேரத்தில் கடன் சொல்லி தூக்கிப் போகக்கூடது என்பதற்கு பத்து ரூபாயாம். இனிமேல் பத்து ரூபாய் கொடுத்து தூக்குகிறேன் என்றால் வெச்சுட்டு போ என்று சொல்லி விட வேண்டுமென நினைப்பார். ஆனால் பேச்சு சுவாரஸ்யத்தில் மீண்டும் அப்படியே நடந்து விடும். ராசாமணியும் வள்ளியும் கத்தறி கூடைகளை தலையில் சுமந்து வந்தார்கள். அவற்றை அவர்கள் தலையில் இருந்து இவர்தான் இறக்கி வைக்க வேண்டும். பொடுசாள் அங்கு இவர்கள் தலைக்கு ஏற்றி விடுவாள்.

ராசாமணியிடம் சென்றவர் வீட்டு வாசலை ஒரு முறை பார்த்து விட்டு வள்ளி பார்க்க ராசாமணியின் மார்பகத்தை ஒரு கசக்கு கசக்கி விட்டு கூடையை ஒன்றுமே செய்யாதவர் போல இறக்கி வேப்பை மர நிழலில் வைத்தார். வள்ளிக்கு அதைப் பார்த்ததும் தானாகவே இதயம் படபடக்க ஆரம்பித்து விட்டது. இனி இவளுடையதையும் அவர் இறக்கினால் பிடித்துப் பார்ப்பாரோ என்று! ஆனால் ராசாமணியே இவளின்

கூடையை இறக்கி வைத்தாள். அவளுக்கு நிம்மதியாய் இருந்தது.

"கலியம்பொண்டாட்டி! நீ போனு வெச்சிருக்கியாமா? ராசாமணி சொல்றா?"

"போனு வெச்சிருக்கறது அதிசியமுங்களா? அத்து அவசரமுன்னா ஊர்ல இருந்து யாராச்சிம் கூப்புடத்தானுங்க" என்றாள் வள்ளி.

"அட எங்களுக்கும் அத்து அவசரமுன்னா கூப்பிடத்தான் போனு. செரி இந்த ஊரு உனக்கு புடிச்சிருக்கா? உம்மட மாமனாரு மாமியா எப்படி?"

"அவிங்களுக்கு என்னங்க இன்னம் சின்னஞ்சிறுசுகளாட்ட சோடியா வேலைக்கி போயிட்டு வர்றாங்க"

"உங்கிட்ட மூஞ்சிய காட்டுறாங்களா?"

"அவங்க எதுக்குங்க மூஞ்சியக் காட்டோணும் எங்கிட்ட? அவிங்க அவிங்க பாட்டுக்கு இருக்காங்க. நாங்க நாங்க பாட்டுக்கு இருக்கோம்."

"அது செரி. கலியன் ரொம்ப நல்லவனாச்சே ராத்திரில கிட்டப்படுத்தாலும் உடனே கொறட்டெ போடுவானே" என்றதும் சிரித்தபடி, "போங்க! மட்ட மத்தியானத்துல ஊச நாயம் பேசிட்டு" என்று தலையிலிருந்த சும்மாட்டை கையிலெடுத்து பிரித்து சுருட்டிக் கொண்டு சென்றாள். வேலுச்சாமிக் கவுண்டரின் அருகில் ராசாமணி நின்று கொண்டிருந்தாள்.

"இவகிட்ட பேச்சு குடுத்துப் பாத்தியா நீயி? வாழைத்தோட்டத்துக்கு வருவாளா வர மாட்டாளா?"

"உங்களுக்கு உடனே அவசரமா? அவ என்னடான்னா பேசுறதுக்கு காசு கேப்பாளாட்ட இருக்குது எங்கிட்ட"

"நீ பொறாமெப்பட்டுக்காதே ஆமா! அப்புறம் அது சரிப்படாது பாத்துக்க"

"எனக்கென்ன பொறாமெ இதுல? நீங்க பேசிட்டாலும். நானும் சாடை மாடையா சொல்லிட்டு தான் இருக்கேன். நேரா போயி அவ ஊட்டுக்காரன்கிட்ட சொல்லிட்டாள்னா அவன் ஒருபக்கம் வந்து சத்தம் போடுவானேன்னு பாக்கேன்"

"ஆமா. அவனொரு திருவாத்தான் கேனவாக்குல சண்டைக்கி வந்துருவான். ரெண்டு பிள்ளைகளைப் பெத்துட்டான்னா ஒன்னும் கண்டுக்கிட மாட்டான். இப்ப புதுசில்ல அதனால கொந்தளிப்பான். ஆனா எம்பட ஆசை புதுசா இருக்கப்ப பாத்துடோணுமுங்கறது தான்.

இதைக்கூட பாக்க முடியலின்னா அப்புறம் நான் எதுக்கு?”

“உடுங்க கவுண்டரே ரெண்டுபேரும் தூக்கிட்டு போயி காரியத்தை முடிச்சுடுவோம். ஆமா ரெண்டு நாளு ஆச்சிங்களே நாம தண்ணியெடுத்து உட்டு. இன்னிக்கி பாச்சீருவமா?”

“அத சாயந்திரம் பாக்கலாம். இன்னிக்கி என்ன கெழமெ?”

“சனிக்கிழமெங்க கவுண்டரே. வேற எங்காச்சிம் சொல்லி வெச்சிட்டீங்களா?”

“இல்ல தீராம வெகுநாளா ஒரு கணக்கு இருக்குது. இன்னிக்கி சனிக்கிழமைங்காட்டி அதை ஒரு எட்டு பாக்கணும்” என்று யோசனையில் கவுண்டர் இருக்க ராசாமணி கிளம்பினாள். அப்போது அடுத்த கூடை கத்தறி சுமந்து கொண்டு வள்ளி வந்தாள் அங்கு. ராசாமணியும் இல்லை என்றதால் வள்ளிக்கு மீண்டும் நெஞ்சு துடிக்க ஆரம்பித்து விட்டது. கவுண்டர் சும்மா இருப்பாரா? ஆனால் அவர் வேறு கணக்கு ஒன்று போட்டுக் கொண்டிருந்தார்.

“ஏனுங்கெ எறக்கி வெய்யிங்க!” என்றாள் வள்ளி அவரிடம்.

“அட வந்துட்டியா நீயி! நானு எதோ யோசனையில இருந்தன்” என்றவர் கைகளை அவளின் மார்பகங்களுக்கு கொண்டு செல்ல அவள் பின்னுக்கு நகர்ந்தாள்.

“தென்னுங்கோ நீங்க ஊர்ல இருக்குற அத்தன பேரு கூடவும் வெளையடுவீங்களாட்ட இருக்குது”

”இப்ப என்ன ஆயிப்போச்சுன்னு பொறவுக்கு போறே?”

“அதுக்கெல்லாம் நீங்க அந்த ராசாமணியவே புடிச்சுக்குங்க”

“நீ வேண்டாமுன்னு சொன்னா புடிக்காம உட்டுட்டுப் போறேன். இந்த பொம்பளைங்களுக்கு பொறாமெ எங்கிருந்து தான் வருதோ”

‘எறக்கி உடுங்க சித்த வெளையாட்டு பண்டாமெ. எனக்கு பொறாமையுமில்ல ஒன்னுமில்ல. என்னைய ஆளை உடுங்க” என்றவளின் தலைக்கூடையை இறக்கி வைத்தார். அவருக்கு வள்ளி பேசினதில் நினைப்பாகி விட்டது. அடுத்த கூடையை பொடுசாள் தூக்கி வந்தாள். கவுண்டர் அந்தக் கூடையை இறக்கி வைக்கையில் அவள் தான் இவர் வேட்டியில் கைவைத்தாள்.

கவுண்டருக்கு அது பிடிக்கவில்லை. எல்லாமும் தான் குடுத்த இடம் தான் என்று அவர் மீதே கோபமாய் இருந்தது. மறைப்பாய் இருந்த

விசயம் இன்று வீட்டு வாசலுக்கு வந்து விட்டது. நாளை ரோட்டில் கூட ஒரு நிது இல்லாமல் கைவைப்பாள். பொடுசாள் அப்படியானவள் இல்லை என்றாலும் அவளுக்கும் இந்த ராசாத்தி விசயமெல்லாம் தெரிந்ததும் கைநழுவி ஒரு விசயம் போய்க் கொண்டிருப்பதால் என்ன வேணுமானாலும் செய்ய துணிகிறாள்.

“ஏனுங்க கவுண்டரே என்னை அத்து உட்டுட்டீங்க? செவப்பா ஒருத்தி வந்ததீம் ஓரங்கட்டிட்டீங்களா என்னை?” என்றாள் அவள்.

“ரெண்டு நாளைக்கி பாத்தா தப்புங்கிறியாடி. உன்னையவே நொட்டீட்டு இருக்கணுமா?”

“ஒரேமுட்டா உழுந்துட்டீங்களாட்ட இருக்குதே? வாரத்துல ஒருநாளாச்சிம் கூப்டுட்டு இருந்தீங்க இப்ப அதும் போச்சு. அதனால கேட்டேன்”

“பாத்துக்கலாம் அதெல்லாம், நீ போயி கூடையத் தூக்கியா” என்று கவுண்டர் சொல்ல அவள் மனதுக்குள், ’ஆகாத வெப்பாட்டி கைபட்டா குத்தம் காலு பட்டா குத்தம்னுல்ல ஆயிப்போச்சு! இனி கூப்புடு வெச்சிக்கறேன் நானு! கூப்பிட்ட ஒடனே போயி நின்னுக்கறதால அதுக்கொரு மதிப்பே இல்லாமப் போச்சு’ என்று கறுவிக் கொண்டே சென்றாள்.

கவுண்டரின் எண்ணமெல்லாம் ஊருக்குள் தன் பழைய வீட்டிலிருக்கும் பெல்லா டீச்சர் மீது இருந்தது. அவளை அந்த வீட்டில் விட்டு ஒன்னரை வருசத்துக்கும் மேலாகி விட்டது. அவள் அண்ணங்காரனை ஒரு நாள் உள்ளூர்க்காரர்கள் பிடித்து ராவடி செய்து கொண்டிருந்த போது அந்த வீட்டுப்பக்கம் போய் வந்தது. கவுண்டருக்கு அப்போதெல்லாம் கூட பெல்லா பிள்ளை மீது எந்த எண்ணமும் இல்லை.

பள்ளியில் விழா கொண்டாடிக் கொண்டிருந்தார்களே, அன்று அந்த நினைப்பு அவள் மீது வந்து விட்டது. எசவான நாளையும், அதற்குண்டான வேகத்தையும் எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தார் கவுண்டர். அது இன்று தான் என்று முடிவே செய்தும் விட்டார். அந்த மாதிரியான எண்ணம் வந்து விட்டதென்றால் ஒரு கிடையில் அவரால் நிற்க முடியுமா என்ன?

நேரம் உச்சிப்பொழுது இருக்க இந்த நேரத்தில் அங்கு போவதும் சரிப்படாது. இவர் வீடு பெரிய வீடு தான். வெளியே சப்தம் அவ்வளவு சீக்கிரம் கேட்காது. பக்கத்தில் இரண்டு வீடுகள் இருக்கின்றன. இந்த நேரம் காட்டிலிருந்து வந்து விடுவார்கள். ஏதாவது அசிங்கமாகி

விட்டால் நாளையும் பின்னியும் ஊரில் நிமிர்ந்து நடக்க முடியாது. செய்யப்போவது சின்னக்காரியமா? வீடு வந்தவர்கள் வெய்யல் தாழத்தான் காடு கிளம்புவார்கள். அந்த நேரம் தான் சரி என்ற முடிவுக்கும் வந்து விட்டார். முடிவுக்கு வந்ததும் நேரம் போவது தான் மிக தாமதமாவதாக இருந்தது.

வள்ளியும் ராசாமணியும் கடைசிக் கூடைகளை கொண்டு வந்து இறக்கினார்கள். கத்தறிக் கூடை பதினொன்று இருந்தது. வெண்டைக்கூடை ஒன்பது இருந்தது. ஆட்டோ வந்தால் கையோடு ஏற்றி அனுப்பி விட்டு காரியத்துக்கு கிளம்பி விடலாமென யோசனையில் கட்டிலில் சாய்ந்தார்.

“நாங்க சாப்பிடப் போறமுங்க கவுண்டரே.” என்றாள் ராசாமணி.

“ஏன் காலையில சோத்துப்போசி எடுத்தாரலியா நீயி?”

“அதெல்லாம் கொண்டாந்திருக்கேன். அதான் சாப்பிடப்போறோமுன்னு சொன்னேனுங்க.” என்றவள் செல்ல அவள் பின்னால் வள்ளியும் சென்றாள். வள்ளியும், பொடுசாளும் வீடு போய்த்தான் சாப்பிட்டு வருவார்கள். பொடுசாள் ஏற்கனவே கடவுக்கருகே நின்று கொண்டிருந்தாள் இவளைப் பார்த்தபடி. கவுண்டர் கட்டிலில் கிடந்தபடி இருவரையும் திருப்பிப் பார்த்தார்.

மயிலாத்தாவின் பெண் கற்பகம் வீட்டிலிருந்து இவரின் கட்டிலருகே சல்லைக் கொக்கியுடன் வந்து கொய்யா மரத்தடியில் நின்றது. இவருக்கு அவளைப் பார்க்க சங்கட்டமாய் இருந்தது. அவள் இவரை கவனியாமல் சல்லையை உயர்த்தி மரத்தில் அரைத்தரத்துடனிருந்த காயை இழுத்தாள். சின்னவயதில் அப்பா அப்பா என்று ஓடி வந்த போதெல்லாம் இவர் ஆகாத குழந்தையை தள்ளி விடுவது போல தள்ளிவிடுவார். அது தான் அவர் குழந்தையே இல்லையே. அந்த தள்ளல் இன்று வரை இருந்தது அவருக்கு.

வீட்டில் மயிலாத்தாவிடம் எப்போதாவது ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசுவதோடு சரி. மற்றபடி அவர் அவள் ஆக்கிப்போடும் சாப்பாட்டைக்கூட கையால் தொட மாட்டார். ஏமாற்றி தாலி கட்டிக்கொண்டவள் என்ற எண்ணம் அவளைப் பார்க்கையில் எல்லாம் அவருக்கு இருந்தது இன்று வரை. வீட்டில் வடிவுக்கரசியும் கற்பகமும் மட்டுமே பேசிக்கொள்வார்கள். இருவருக்குமே பெரியவர்கள் ஆகிவிட்டபடியால் இரண்டு அம்மாக்களின் கதையும் முழுதாக தெரியும்.

கற்பகம் நான்கு கொய்யாக்காய்களை பொறுக்கிக் கொண்டு

சல்லையுடன் இவரை பார்த்தும் பாராதது போலச் சென்றாள். கற்பகம் வாழ்க்கையையும் மயிலாத்தாள் தான் கெடுத்தாள் என்று இவருக்குத் தெரியும். தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை என்பது போல கற்பகம் அம்மாவைப் போலவே அவசரக்காரிதான். படிக்க சென்னிமலை போகையிலேயே அவளுக்கும் முதலியார் பையன் ஒருவனுக்கும் காதலாகி விட்டது. கட்டினால் அவனைத்தான் என்றாள் கற்பகம்.

மயிலாத்தா சொல்லிப்பார்த்து மகளின் பிடிவாதத்திற்கு ஒத்துக் கொண்டாள். அந்த திருமணம் பற்றியான பேச்சுக்கு மயிலாத்தா இவரிடம் வந்த போதெல்லாம் உன் இஷ்டம் என்று சொல்லி விட்டார். ஏற்கனவே தனக்கு இப்படி நடந்து வாழ்க்கை நாசமானது போக மகளுக்கும் அப்படி ஆகாமல் இருக்க அவனுக்கே மணம் முடித்து தர ஏற்பாடு செய்து விட்டாள். கூட உதவிக்கு சின்னச்சாமியை வைத்துக் கொண்டாள். கவுண்டர் எதையும் கண்டு கொள்ளவில்லை. அந்த திருமணம் சென்னிமலையில் நடக்கையில் இவரும் போகவில்லை. மண்டபத்திலும் கூத்து நடந்ததாக பங்காளி சின்னச்சாமி தான் இவரிடம் வந்து கூறினான்.

"பங்காளி இந்தப்பிள்ள பண்ண கூத்து தெரியுமா! அட விடிஞ்சு எந்திரிச்சா இவிங்க ரெண்டு பேருக்கும் தான கலியாணம். அதுக்குள்ள அவசரம் பாரேன் ரெண்டு பேருக்கும். காத்தால பொண்ணையும் மாப்பிள்ளையையும் மண்டபத்துல காணோம். ஒரு எடம் பாக்கியுடாம மண்டபத்துல தேடிப்பார்த்தாச்சு. ஐய்யரு கிளம்பிப் போயிட்டான். எனக்கும் ஒன்னுமே புரியில! அப்புறம் பார்த்தா பைக்குல ரெண்டு பேரும் மாலையுங் கழுத்துமா வந்து மண்டபத்துல எறங்குறாங்க. விடியும் மிந்தியே மலைக்குப் போயி தாலி கட்டீட்டு வந்தாங்களாம். ஏண்டான்னு கேட்டா சாதி உட்டு சாதி பண்ணுறதால யாராச்சிம் கொழப்படி செஞ்சுடுவாங்கன்னு போனாங்களாம்!. இந்தக்கூத்தை எங்காச்சிம் கேட்டிருக்கியா பங்காளி?" என்று சின்னச்சாமி சொன்னபோது இவருக்கு என்ன பேச என்றிருந்தது.

அப்படியும் கற்பகம் அவனோடு வாழ்ந்ததென்னவோ நான்கு மாதங்கள் தான். அவள் வீட்டுக்காரன் பெயர் கூட இவருக்குத் தெரியாது. அவன் இங்கு தோட்டத்திற்கு வரவே இல்லை. அவன் ஆள் எப்படியிருப்பான்? என்று கூட இவருக்குத் தெரியாது. மயிலாத்தா தான் அவர்கள் வீட்டுக்கு போக வர இருந்தாள். ஒரே மாதத்தில் சென்னிமலையில் தனிக்குடித்தனமும் வைத்து விட்டு அவர்கள் இருவருக்கும் ஆக்கிப் போட்டுக்கொண்டிருந்தாள். கற்பகத்திற்கு

சமைக்கவே தெரியாது இன்று வரை.

தொட்டதற்கெல்லாம் அந்தப்பயல் கற்பகத்தை கைநீட்டி விளாசித் தள்ளியிருக்கிறான். போக மயிலாத்தாவோடு அரசல் புரசலாக இருந்ததை நேரில் பார்த்த கற்பகம் அவன் கட்டிய தாலியை கழற்றி கொடுத்து விட்டு வந்து விட்டாள். பின்னாலேயே மயிலாத்தாவும் வந்து சேர்ந்து விட்டாள் தோட்டத்திற்கு. இன்றுவரை தாயும் மகளும் ஒரு வார்த்தை பேசிக் கொள்வதில்லை. இப்போது ஆறு மாதமாக கற்பகம் வீட்டை விட்டு எங்கும் செல்வதுமில்லை. வீடே கதியென்று கிடக்கிறாள். சிலபேருக்கு என்ன எழுதியிருக்கிறதோ அது நடந்து கொண்டு தான் இருக்கிறது என்று நினைத்தார் வேலுச்சாமிக் கவுண்டர்.

அவருக்கு வடிவுக்கரசி மீதும் இப்போது பயம் வந்து உட்கார்ந்து கொண்டது. பேசாமல் அவள் படிப்பை நிறுத்தி விட்டு மாப்பிள்ளை தேடத் தொடங்கி விடலாம் என்றே நினைத்தார். நிச்சயமாக இவளும் யாரையேனும் கட்டிக் கொண்டே வந்து நிற்பாள் என்று உறுத்திக் கொண்டே இருந்தது. இவர் பூரணியின் வலையில் எப்படி விழுந்தார். மாமா மாமா என்று கூப்பிட்டு விரித்தால் பூரணி இவருக்கான வலை ஒன்றை.

நொந்து கிடந்த மனசுக்கு பூரணியின் பேச்சுகள் இவரை அந்த வலைக்குள் விழச் செய்து விட்டது. ஆனால் அவளும் சின்னச்சாமியின் வலையில் விழுந்தாளே! மாமனுக்கு துரோகம் செய்கிறோம் என்பது அவளுக்கு தெரிந்திருக்காதா? மாமனை நிஜமாகவே விரும்பிக் கட்டினாளா இல்லை சொத்து கிடக்கிறது என்று கட்டினாளா?

சொத்து பலரின் கண்களை உறுத்தத்தான் செய்கிறது. சொத்துக்காரனை வலைக்குள் விழுத்துவது எப்படி? என்று சில பெண்களுக்கு சாமார்த்தியம் இயல்பாகவே வந்து விடுகிறது. அவர்கள் தங்கள் காய்களை மிக மெதுவாக சொத்துக்காரனை நோக்கி நகர்த்துகிறார்கள். அவனை தன் கைப்பிடியில் வைத்துக்கொள்ள வித்தைகள் செய்கிறார்கள். வலையில் விழுந்தபிறகு சொத்துக்காரர்களுக்கு மூளை மழுங்கி விடுகிறது. அவளே கதியென்றும் வேறு யாரும் தனக்கு துணையில்லை என்றும் நம்பத்துவங்கி விடுகிறார்கள்.

வேலுச்சாமிக் கவுண்டருக்கு இந்த நினைப்புகள் எல்லாம் எரிச்சலைக் கூட்டின. வந்ததும் சரியில்ல, வாச்சதும் சரியில்ல! என்று காறி கட்டிலுக்கு தூரமாய் துப்பினார். வடிவுக்கரசி பூரணியைப் போலவே சாமார்த்தியகாரி தான். அவளுக்கு ஒரு வழியை இப்போதே நாமாக

பார்த்து செய்தால் சரிப்படும். கொஞ்சம் விட்டால் அவள் சாமார்த்தியசாலி ஆகிவிடுவாள் என்பதில் சந்தேகமே இல்லை. இத்தனை வசதிகள் கிடந்தும் நிம்மதியான தூக்கமெதுவும் இவருக்கு இல்லை என்பது ஊராருக்கே தெரிந்த விசயம் தான். யாருக்கு தெரியாமல் கிடக்கிறது இவர் வீட்டின் லட்சணம்?

அப்படி இருக்கப் போகத்தான் பெண்களை வெறும் போகப் பொருளாக மட்டும் பார்க்கத் துவங்கிவிட்டார். நரைக்க நரைக்கத்தானே வெரைக்கும்! அதுவும் வயது போகப் போகத்தான் அவருக்கு பெண் தவிர உலகில் சுகம் தருவது எதிலும் இல்லை என்றும் நினைத்தார். சில சமயம் பெண்ணின் அருகாமையில் தோற்றுப் போவது நடந்து விடும் இவருக்கு. அந்த நேரம் அவருக்கு துக்கமாக இருக்கும். இனி ஆள் இருந்தால் சுத்தப்படாது என்று நினைப்பார். ஆனால் பொடுசாள், ராசாமணி மாதிரியான பெண்கள் இவரை உசுப்பேற்றி வெற்றி பெறுவது அதீத சந்தோசத்தை இவருக்கு கொடுத்தது. தான் இன்னமும் காரியக்காரன் தான் என்று நம்பினார்.

வேலுச்சாமிக் கவுண்டர் பெண்களால் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தார். வீட்டின் துக்கம் அவரை ஒன்றும் செய்ய முடிவதில்லை. அவர் தனக்காக வாழ்ந்து கொண்டிருந்தார். கடைசி காலத்தில் தன்னை கவனித்துக் கொள்ள பொடுசாளோ, ராசாமணியோ வரப்போவதில்லை என்று அவருக்கு தெளிவாகவே தெரிந்திருந்தது. வீட்டில் மயிலாத்தாவோ, பூரணியோ கூட இவரை கவனிக்கப் போவதில்லை. இவரும் அவர்களை இப்போது எதிர்பார்ப்பதும் இல்லை. இவருக்கான உணவை வடிவு தான் காலையிலும், இரவிலும் கட்டிலுக்கு கொண்டு வந்து கொடுத்துப் போவாள். மதியம் இவர் சாப்பிடுவதும் இல்லை.

தன்னை காக்கும் துணையொன்றை இவர் இப்போதும் தோதாய் தேடிக் கொண்டு தான் இருக்கிறார். அப்படி வாகாய் அமைந்து விட்டால் ஆட்டத்தை நிறுத்திக் கொள்ளலாமென ஒரு முடிவிலும் இருந்தார். ஒவ்வொரு இரவிலும் போதையில் தூங்குகையில் எதையும் இவர் யோசிப்பதேயில்லை. போதையிலான தூக்கம் முடிந்ததும் இரவில் எந்த நேரத்தில் எழுந்தாலும் அதன்பின் இப்படியான எண்ணங்கள் தான் அவரை விடியும் வரை தூங்க விடாது.

வள்ளி இடுப்பில் முடிந்து வைத்திருந்த வீட்டுச்சாவியை எடுத்து பூட்டை நீக்கினாள். பரணில் கிடந்த டிவியை கீழிறக்கி கலியன் ஒரு பழைய ட்ரங் பெட்டிமீது வைத்திருந்தான். உள்ளூர் கேபிள்காரனிடம்

பேசி கனெக்சனும் கொடுத்திருந்தான். வள்ளி டிவி சுவிட்சை போட்டு விட்டு உள்ளறைக்குச் சென்று வட்டிலில் சாப்பாடு போட்டு வந்து கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தாள்.

கேடிவியில் பழைய படம் வெள்ளை வர்ணத்தில் ஓடிக் கொண்டிருந்தது. ரிமோட்டை எடுத்து வேறு டிவிக்கு சென்றாள். கிருஷ்ணா என்ற சேனலில் ஓடுவது புதுப்படம் என்றதும் அதிலேயே நிறுத்தினாள். காரை இருளில் நால்வர் தள்ளிக் கொண்டு வந்து ஒரு வீட்டினுள் மரத்தடியில் நிறுத்தினார்கள். தாடிக்காரனிடம் கார் சாவியை ஒருவன் கொடுத்து விட்டு சென்றான். அப்போது பார்த்து இவள் செல்போன் சப்தமிட்டது. ஜாக்கெட்டுக்குள்ளிருந்து வெளியே எடுத்தாள் வள்ளி. ரமேஷ் தான்.

“ஹலோ! தங்கம்! நான் ரமேஷ் பேசுறேன்”

“அதுக்கு ஏன் தொறக்குறே தொண்டையெ? இங்க எவ செவுடியா இருக்கா?”

“எப்ப அடிச்சாலும் உன் போன் ஏன் சுட்ச் ஆப்லயே இருக்குது?”

“அது அப்படித்தான் இருக்கும். எதுக்குடா மத்தியானத்துல போனு பண்ணியிருக்கே?”

“நீ வெளிய வந்து பாரேன். நான் உன் ஊர்ல இருக்கேன் இப்ப. எந்த வீடுன்னு தான் தெரியில” என்றதும் இவளுக்கு பகீரென்றது. திருவாத்தான் கடைசியில் ஒலை வைக்க வந்து விட்டான் போல இருக்கே! என்று வீட்டின் வெளியே வந்தாள். சேந்து கிணத்துப்பக்கம் எட்டிப் பார்த்தாள். ரமேஷ் தான் கையில் போனை வைத்துக் கொண்டு இவளைத் திரும்பிப் பார்த்து போனை அணைத்தான். வந்தவனை போடாவென முடுக்கவா! என யோசித்து ஒன்றும் சொல்லாமல் வீட்டினுள் வந்தாள் வள்ளி. அவன் இவள் வீட்டு வாசலின் முன்பு சாலையில் பைக்கை கொண்டு வந்து நிறுத்தி விட்டு வீட்டின் உள்ளே வந்தான்.

“எம்பட ஊட்டுக்காரன் எப்ப வேணாலும் வருவாண்டா இங்க எதுக்கு வந்தே?” என்றாள். அவன் உள்ளே வந்ததும் கட்டிலில் உட்கார்ந்தான். பாக்கெட்டிலிருந்து நூறு ரூவாய் நோட்டுகள் எடுத்து எண்ணினான்.

“புடி நீ கேட்ட காசு” என்றவன் எழுந்து இவள் ஜாக்கெட்டில் திணிக்க கையை நீட்டிக் கொண்டு வந்தான். அதற்கு இடம் தராமல் கையிலிருந்து பிடுங்கி அவளே ஜாக்கெட்டினுள் திணித்துக் கொண்டாள்.

“மூஞ்சியெல்லாம் உப்புன மாதிரி அழகா இருக்க வள்ளி” என்றான்.

“நான் அழகாத்தான் இருப்பேன் எப்பயும், நீ ஏன் பன்னியாட்ட இருக்கே?” என்றாள். அவன் அதைக் கண்டு கொள்ளாமல் அவளின் மார்பகங்களையே வெறித்தான். அவள் அருகிலேயே போய் தரையில் அமர்ந்தவன் கை அவள் இடுப்பைப் பிடித்தது.

“சோறு திங்க உடுடா பன்னி! வந்துட்டான் மத்தியானத்துல ஏறீட்டு” என்றவள் காலியான வட்டிலை எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள். ரமேஷ் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டான். வெளியே டிவியெஸ் ஒன்று வந்து ஓய்ந்து நிற்கும் ஒலி கேட்டது இவனுக்கு.

“யாரு வண்டி வள்ளி நம்ம ஊட்டு வாசல்ல நிக்கிது புதுசா?” என்றான் கலியன்.

“ஊர்ல எங்க சித்தப்பன் பையன் ஒருத்தன் லாரிக்கி போறான்னு சொன்னனுங்கள்ல. கலியாணத்துக்கு வரலின்னு இப்ப வந்திருக்கான். திருவாத்தான் இங்க வந்து நின்னுட்டு எனக்கு போனைப் பண்டி ஊடு எவத்திக்கிங்கறான்!” என்றாள் வள்ளி. இருவரும் உள்ளே வந்த போது ரமேஷ் கட்டிலில் அமர்ந்திருந்தான். அவனுக்கு வாய் வரவில்லை.

“உன்னவிட சின்னப்பையனாட்ட இருக்கான்?”

“தம்பி தானுங்க ஆகுது. டேய் இவருதான் என் ஊட்டுக்காரரு பாத்துக்க.” என்றவள் புருசனுக்கு வட்டிலில் சாப்பாடு போட்டு கொண்டு வந்து வைத்தாள்.

“தம்பிக்கு சோறு போட்டு குடுக்குலியா? எனக்கு கொண்டாந்திருக்கே?”

“அவன் வர்றப்ப சென்னிமலையில புரோட்டா தின்னு போட்டு வந்துட்டானாமா! நீங்க ஆட்டோவுல இன்னொருக்கா சென்னிமலை போகணுமா காய்க்கூடை கொண்டுட்டு?”

“இனி டிவியெஸ்ல தான் போவேன் வள்ளி. போயி பணம் வசூல்பண்டி கொண்டாந்து கவுண்டருகிட்ட குடுக்கணும்.”

“சேரி நான் தோட்டத்துக்கு கிளம்பறேனுங்க. அவன் உங்களை பாத்துட்டு கிளம்புறன்னான். நீங்க சாப்டுட்டு ஊட்டை பூட்டிட்டு வாங்க நான் முன்னால போறேன். டேய் தம்பி ஊர்ல எல்லாரையும் கேட்டதா சொல்லீரு என்ன? வெய்யில்ல உன்னை யாருடா இங்க வரச் சொன்னது? பாருங்க அவன் முழியே செரியில்ல. தாழியில தண்ணி கெடக்குது ரெண்டு சொப்பு ஊத்தீட்டு போவச் சொல்லுங்க” என்ற

வள்ளி வெளியேறி சுருக்குப் பையிலிருந்து வெத்தலை பாக்கு எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பொடுசாள் வீடு நோக்கி போனாள்.

அரைமணி நேரம் கழித்து இவள் தோட்டத்தில் இருந்த போது போன் வந்தது. அவனாகத்தான் இருக்குமென்று எடுத்தாள்.

“என்ன தங்கம் இப்படி பண்ணிட்டியே?” என்றான்.

“நான் என்னடா பண்ணுனேன்?” என்றாள் இவள்.

“பணத்தீம் நீ சொன்னங்காட்டி கொண்டாந்தன்ல! வந்ததீம் குடுத்தன்ல!”

‘யாருடா இல்லீன்னாங்க இப்ப? ஆமா குடுத்தே அதுக்கென்ன இப்ப?”

“இப்பிடி பண்டீட்டு ஒடனே போயிட்டியே! நான் என்னென்ன நெனச்சிட்டு வந்தன் தெரியுமா?”

“நீ என்னவேணாலும் நெனச்சுட்டு வந்திருப்பே. அதுக்கு நான் என்ன பண்ட முடியும். சோலி இருக்குதுல்ல காட்டுல. கொஞ்சம் லேட்டானா போனவளைக் காணமுன்னு கவுண்டரு பேசுவாரு.”

“என்ன தங்கம் எவ்ளோ தூரத்துல இருந்து வெய்யில்ல வந்தனாக்கோ நானு”

“ஏண்டா அதுக்கு எம்பட ஊட்டுக்காரன் முன்னாடி உனக்கு காட்டீட்டு படுத்துக்கோணும் அப்படிங்கறியாடா? திடீருன்னு வந்து நின்னா என்னடா பண்டச் சொல்றே? நீ எனக்கு சொல்லீட்டு வரலாம்லடா கிறுக்கா! அறிவு கெட்ட தனமா வந்துட்டு இருக்கறவளை கொறை சொல்றான். எம்மேல என்னடா தப்பு?”

“இப்ப வர முடியாதா உன்னால?”

“இப்ப வேலைய தொலச்சுட்டு, ஊட்டுக்காரனுக்கு டிமிக்கி குடுத்துட்டு வரச் சொல்றே ஏண்டா? ஆளும் அவனும். போடா ஊருக்கு. நாயி மாதிரி நாக்கை தொங்கப் போட்டுட்டு ஊருக்குள்ள சுத்தீட்டு இருக்காதே! யாருன்னு கேட்டு அடிச்சு வச்சுடுவாங்க இந்த ஊர்ல திருடக்கீது வந்திருக்கியான்னு! போ நானே வசதி கெடச்சா சொல்றேன் அப்ப முறுக்கீட்டு வா” என்றாள் வள்ளி. அவன் செல்போனை கட் செய்திருந்தான்.

0000000000000000000

வேலுச்சாமிக் கவுண்டர் காய்கறிக்கூடைகள் ஏற்றிய ஆட்டோவை இரண்டாவது முறையாக அனுப்பி வைத்து விட்டு கலியனை

சென்னிமலை தாட்டி விட்டார். நேரமும் மணி மூன்றாகி விட்டிருந்ததால் கைகால் முகம் கழுவி துண்டால் துடைத்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தவர் வெள்ளை வேட்டி சட்டை அணிந்து கொண்டார். புல்லட் சாவியை எடுத்துக் கொண்டு வெளிவந்தவரை ஜன்னல் வழியாக பார்த்து மயிலாத்தாள் முகத்தை கோணித்துக் கொண்டாள்.

கவுண்டனுக்கு கோப்பெடுத்துடுச்சாட்ட இன்னிக்கி மூனு மணிக்கே! என்று நினைத்துக் கொண்டாள் மயிலாத்தாள். சாலைக்குள்ளிருந்து புல்லட்டை வெளியில் தள்ளிக் கொண்டு வந்தவர் மனதில் இரண்டே உதையில் புல்லட் ஸ்டார்ட் ஆகிவிட்டதென்றால் காரியம் சக்சஸ்! என்று நினைத்துக் கொண்டு பொறுப்பாய் ஏறி அமர்ந்து சாவியைப் போட்டார். எப்போதுமே நான்கைந்து முறை உதை வாங்கி கிளம்பும் வண்டி இரண்டே உதையில் கிளம்பியதும் கவுண்டருக்கு மகிழ்ச்சி பெருகி விட்டது.

வண்டியை கிளப்பி நகர்த்தியவர் எதிர்க்கே எந்த சகுனமும் வரக்கூடாதென உள்ளூர் மாகாளியாத்தாவை வேண்டிக் கொண்டார். எப்போதும் சகுனங்களை துச்சமாக மதிப்பவர் அன்று அவைகள் வரக்கூடாதென நினைத்தார். நினைத்தபடியே சாலையில் சகுனங்கள் எதுவும் இல்லாததும் அவருக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. கோவிலைத் தாண்டுகையில் ஆத்தாளை நினைத்து வேண்டிக் கொண்டார். பஞ்சாயத்து போர்டு தேர்தல் ரிசல்ட் அன்று சென்னிமலை கிளம்பும் போது ஆத்தாளை வேண்டிக்கொண்டது. அதன் பிறகு அவர் மனதில் ஆத்தா வரவே இல்லை. இப்போது தான் அவளின் உதவி தேவைப்படுவதாக நினைத்துக் கொண்டார்.

புல்லட்டை அம்மாவின் வீட்டை ஒட்டி நிறுத்தாமல் கொண்டு போய் புளியமரத்தினடியில் நிறுத்தினார். பெல்லா வீட்டின் கதவு சாத்தியிருந்தது. சுற்றிலும் எங்கும் ஆள் அரவமே இல்லை என்றதும் திருப்தியாய் அம்மாவின் வீடு நோக்கிச் சென்றார் வேலுச்சாமிக் கவுண்டர். நாயொன்று இத்தனை நேரம் புல்லட்டுக்காகவே காத்திருந்தது போல் ஓடிச் சென்று பின் சக்கரத்தினருகில் நின்று கால் தூக்கிற்று. அதை திரும்பிப் பார்த்தவர் அந்த சுபசகுனத்தை ஏற்றுக் கொண்டார்.

அம்மாவின் வீட்டின் படியேறி கதவைத் தட்டினார். யாரது? என்ற பெல்லா டீச்சரின் குரல் உள்ளிருந்து இவருக்கு கேட்டது. ‘நாந்தான் அம்மிணி, கதவைத் திற’ என்றார் இவர். பெல்லா கதவைத் திறந்து இவரைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். ‘உள்ள வாங்க’ என்று கூட்டிப்

போனாள். அவளுக்கு இவர் எதற்காக இந்த நேரத்தில் வந்திருக்கிறார்? என்று நினைத்து குழப்பமாக இருந்தது. இதற்கு முன்பாக இவர் வந்ததும் இல்லை.

இருந்தும் முக்கிய விசயம் எதாவது இருக்குமென நினைத்தவள் அவருக்கு நாற்காலி ஒன்றை தன் அறையிலிருந்து கொண்டு வந்து ஆசாரத்தில் போட்டாள். அதில் அமர்ந்தவர் வீடு சுத்தமாக இருக்கிறதா என்று சுற்றிலும் ஒரு பார்வை பார்த்தார். வீடு வரை தைரியமாக வந்து விட்டவருக்கே துளி படபடப்பாய் இருந்தது. இருந்தும் கடைசியாய் நாய் சகுனம் அவருக்கு திருப்தியாய் இருந்தது.

“என்ன பண்ணிட்டு இருந்தியம்மிணி ஊட்டுல கதவு சாத்தீட்டு?”

“டிவி பார்த்துட்டு இருந்தனுங்க இன்னாவரைக்கும். இப்பத்தான் நிறுத்தீட்டு குளிக்கலாமுன்னு சோப்பு டப்பா எடுத்தேன் கதவு தட்டற சத்தம் கேட்டு வந்து நீக்கிப் பார்த்தா நீங்க” என்றாள்.

“ஊட்டை சுத்தமா வெச்சிருக்கியம்மிணி! நானு எல்லைக்காடு வரைக்கும் சோலியா போலாமுன்னு வந்தேன். பாத்தா இந்த முக்கு திரும்புறப்ப சகுனமாயிடுச்சு. செரி இப்ப போனா காரியம் ஆவாதுன்னு வண்டிய திருப்பி புளியமரத்தடியில நிப்பாட்டிட்டு உன்னை ஒரு எட்டு பாத்துட்டு போலாமுன்னு வந்தனம்மிணி. சகுனமானா எனக்கு போற காரியம் வெளங்காது பாத்துக்கோ. பத்து நிமிசமாவது நின்னுட்டு போகோணும். ரோட்டுல நின்னுட்டு இருந்தா போறவன் வர்றவன் எல்லாம் நின்னுட்டீங்களா?ம்பான்.”

“சேரீங்க அதனால என்ன இப்ப”

“சேரி நீ போயி குளியம்மிணி. நான் இங்கியே சித்த உக்காந்திருக்கேன்” என்றார்.

“டீ போடட்டுங்களா? நாம் போட்டா குடிப்பீங்களா?” என்றாள் பெல்லா.

“இதென்ன இப்புடி கேட்டுப் போட்டே போ! நானு பங்காளிக எது சொன்னாலும் செரியின்னு உனக்கு வீட்டையே குடுத்திருக்கேன். உங்கிட்ட டீ வாங்கி குடிச்சா எங்க எதுல என்ன வந்து ஒட்டிக்குது? போடம்மிணி குடிப்போம். தண்ணி ஒரு சொம்பு வாங்கி குடிச்சுட்டு போனாலே சகுனம் செரியாப் போயிடும். நீ வேற டீன்னே சொல்லிட்டே!” என்றார். அவள் தன் அறைக்குள் போய் ஸ்டவ் அடுப்பை பற்ற வைக்கும் ஒலியைக் கேட்டார். டம்ளர் உருளும் சப்தமும் கேட்டது.

“எங்க உம்மட சாமி போட்டாவ எங்கீம் மாட்டுலியா நீயி?” என்றார்.

“நீங்க வீடு குடுத்ததே பெருசுங்க. சாமியெல்லாம் மனசுல இருந்தாப் போதும்னு விட்டுட்டேன்” என்றாள்.

“போச்சாது போ! ஆமா உங்கிட்ட பிள்ளைக தனியா வந்து பாடம் படிக்காங்களாமே அது எப்போ?” என்றவர் அந்த அறைக்குள் நுழைந்து விட்டார். அவளுக்கு என்ன செய்வது என்றும் உடனே தெரியவில்லை. தெற்கு மூலையில் பாயும் தலயணையும் விரித்தபடியே கிடந்தது. வடக்கு முலையில் டிவி இருந்தது. குடம் ஜாமான் செட்டுகள் எல்லாம் மேற்கு மூலையில் இருந்தன. வந்தவர் நடு அறைக்குள் வந்து நின்று கொண்டு அறையை சுற்றிலும் நோட்டமிட்டார். அவள் ஸ்டவ்வை அணைத்து கரித்துணி பிடித்து டீக்குண்டானை இறக்கினாள்.

இனி தாமதித்தால் ஆகாது என்று நினைத்தவர் பெல்லாவை கட்டி இறுக்கி அணைத்துக் கொண்டார். அவள் உடுங்க உடுங்க! என்று இவர் பிடியிலிருந்து நழுவ எத்தனித்தாள். கவுண்டரா விடுவார்? அவளை அப்படியே தூக்கி தெற்கு மூலையில் கிடந்த பாயில் கிடத்தி அவள் மேல் உருண்டார். தன் மீதும் தூக்கி போட்டுக் கொண்டார்.

“ஏனுங்க நீங்க மாட்டிக்குவீங்க உடுங்க ப்ளீஸ்! நீங்க எனக்கு அப்பா மாதிரி!” என்று நழுவவே பார்த்தவள் சேலை தூரக்கிடந்தது. அவளுக்கே தெரியாமல் கவுண்டர் ரெண்டே உருட்டலில் உருவி வீசி விட்டார். அடுத்து அவர் அவள் மார்பகத்தில் முகம் வைத்து அழுந்த தேய்த்த போது பாம்ம்பு மூச்சு விடுவது போல அவள் மூச்சை புஸ் புஸ்சென விட்டு இவரின் வயிற்றுப்புறத்தில் வாய் வைத்து கடித்தாள். அது இவருக்கு வலிக்கு பதிலாக இவரை உசுப்பேற்றும் விதமாய் இருக்க ரசித்து அப்படியே அவளை நசுக்கினார்.

“உடுங்க ப்ளீஸ் உடுங்க ப்ளீஸ்!” என்று இவரின் கீழே நசுங்கிக் கிடந்தவள் அதிக சப்தமெழுப்பாமல் முனக, ‘உடறன் இருடி’ என்று இவர் காரியத்தில் கண்ணாய் இருந்தார். இருந்தும் அவள் இவருக்கு வசதி செய்யாமல் குறுகிக் குறுகி உடலை வளைக்கவும் அவருக்கு மேலும் ஆனந்தமாகி விட்டது. பத்து நிமிடத்தில் களைத்துப்போய் அவள் மீதே கிடந்தார் இவர். அவள் கண்கள் செருகினது மாதிரி எச்சிலை முழுங்கிக் கொண்டு, ’என்னை இந்த மாதிரி பண்ணிட்டீங்களே!’ என்றாள். அவளின் கன்னத்தில் முத்தம் ஒன்றை கொடுத்து விட்டு திரும்பிப் படுத்தவர் அவளை தன் புறமாக இழுத்து தன் மார்பின்மீது அவள் முகத்தை வைத்து அழுத்திக் கொண்டார். அவள் கண்ணீர் அவர் மார்பில் சொட்டு சொட்டாய் விழுந்தது.

“இப்ப எதுக்கு அழுதுட்டு இருக்கே? என்ன நடந்து போச்சு உனக்கு? எனக்கு உம்மேல ஆசையா இருந்துச்சு வந்தேன். உனக்கு என்ன வேணும் இப்ப?” என்றார். அவள் விசும்பிக் கொண்டே இருந்தாள். தன் கழுத்தில் கிடந்த மூனுபவுன் சங்கிலியை கழற்றி அவள் கழுத்தில் போட முயற்சித்தார். அவள், ’இதெல்லாம் வேண்டாமெனக்கு!’ என்று இவர் போட முடியாமல் கையால் விலக்கினாள்.

“அப்புறம் எனக்கு கோவம் வந்துடும் அம்மிணி. சொன்னாக்கேளு!” என்று இம்முறை அவள் கழுத்தில் போட முயன்றவரை அவள் தடுக்கவில்லை. கவுண்டர் அவளை முழுதாய் இழுத்து தன்மீது போட்டுக் கொண்டார்.

“என்னைய யாரு இனி கட்டிப்பா? இதுக்குத்தான் இன்னாரத்துல வந்தீங்களா நீங்க?” என்றவள் மீண்டும் விசும்ப ஆரம்பித்தாள்.

“உன்னைய நாங்கட்டிக்கறேன் அப்புறமென்ன உனக்கு?”

“உங்க வயசென்ன என் வயசென்ன? இப்படி பண்ணிட்டீங்களே என்னை! உங்களை எவ்ளோ நல்லவருன்னு நெனச்சிருந்தேன் நான்”

“இதென்னம்மிணி நீ இப்படி பேசுறே? வயசென்ன வயசு இதுக்கு? இப்படி பண்ணிட்டதால நான் கெட்டவனா?”

“ஆமா கெட்டவரு தான் நீங்க!” என்றவளின் பின்பாகங்களை பிடித்து அழுத்திக் கசக்கினார். ’போதும் வேண்டாம் ப்ளீஸ்! நான் செத்துடுவேன்’ என்று அவள் பேசவும் இவருக்குள் மீண்டும் காமம் தூக்கிற்று. ஒரு பெண்ணின் பேச்சு கூட இவருக்கு காமத்தை கிளப்புவதை இன்று தான் கண்டார். மேலும் விடாமல் அவளை உருட்டி கீழே கிடத்தி அவள் மேலே வேகமாய் உருண்டார். அவள் ஏதாவது சொல்ல வேண்டுமென அவள் மார்பகத்தை வலது கையால் நாம்பினார். அவள் ஏதும் சொல்லாமலிருக்க அவளின் தொப்பிள் குழியில் உதட்டை வைத்து புர்ரென ஒலி எழுப்பினார். அவள் உடலை நெளித்து இவரது மார்பை கூரிய நகங்களால் பிறாண்டி இழுத்தாள். அவரும் வெறியாய் அவளின் மார்பகத்தை பற்றியதும், ’வலிக்குதுங்க ப்ளீஸ் வேண்டாம்’ என்றாள். அது போதும் அவருக்கு. மறுபடியும் அவர் தாமதப்படுத்தி மெதுவாகத்தான் எழுந்தார்.

பெல்லா அவருக்கு முழு திருப்தியையும் கொடுத்திருந்தாள். அவளின் நெற்றி, கன்னம், உதடு, கழுத்து என்று மாறி மாறி முத்தமிட்டவர் எழுந்து அறையை விட்டு வெளியே காத்தாட வந்தார். அவருக்கே மூச்சு வாங்கிற்று. பாத்ரூம் போய் முகத்தையும் மேலையும் கழிவி வந்தார்.

மீண்டும் அறைக்குள் வந்த போது பெல்லா பாயில் குப்புறக் கிடந்தாள். அவளின் பின்பாகம் அவருக்கு மீண்டும் காமத்தை கிளப்பிற்று. இருந்தும் பொதுமென அரை மனதாய் மின்விசிறி சுவிட்சை தட்டி விட்டார்.

புழுக்கமாய் இருந்த அறைக்குள் காற்று விசுவிசுப்பாய் வீசிற்று. கீழே கிடந்த வேட்டியை எடுத்து கட்டிக் கொண்டவர் சட்டையில் இரண்டு பட்டன்களை காணாமல் அறைக்குள் தேடினார். அதில் ஒன்று பாயில் கிடந்தது. இன்னொன்று அவளின் பின்புற மேட்டில் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை கிள்ளினாற்போல எடுத்தவர் அருகில் கிடந்த அவளின் பாவாடையை எடுத்து அவள் மேல் போட்டார். இன்னமும் அழுது கொண்டிருக்கிறாளா என்று பார்க்க அவள் முகத்தை தன்புறமாக திருப்பினார். அது சிவந்திருந்தது.

“அம்மிணி இப்பிடி அழுது வடிஞ்சிட்டு இருக்காதையாமா! எந்திரி! எந்திரிச்சு உக்காரு” என்றார். அவள் இவர் சொன்னதற்கு மறு பேச்சு பேசாமல் எழுந்து பாயில் அமர்ந்தாள். பாவாடையில் கால் விட்டு மேலேற்றி கட்டிக் கொண்டாள்.

“போயி முகத்தை கழுவிட்டு வா அம்மிணி” என்றார். அதற்கும் அவள் எதுவும் சொல்லாமல் எழுந்து போய் முகம் கழுவி துண்டால் துடைத்துக் கொண்டு வந்தவள் சேலையை எடுத்துக் கட்டிக்கொண்டு இவர் அருகில் அமர்ந்தாள்.

“இது எனக்கு வேண்டாங்க.” என்றாள் கழுத்தில் கிடந்த செயினைத் தொட்டுக்காட்டி.

“பிரியம் சந்தோசமா குடுத்ததை அப்படியெல்லாம் வேண்டாமுன்னு சொல்லக்கூடாதம்மிணி”

“எனக்கு டைம் செரியில்லைன்னு எங்கம்மா சொல்லிட்டே இருந்துச்சு ஒரு வருசமா!”

“எனக்கு இப்படியெல்லாம் நீ பேசினா பிடிக்காது அம்மிணி! உம்பட கொறய மட்டும் சொல்லு. நான் பாத்துக்கறேன்.”

“எனக்கு தங்கறக்கு வீடு குடுத்துட்டு இப்பிடி பண்ணிட்டீங்களே! நான் ஒருத்தி உங்களை எதுத்து என்ன பண்ண முடியும்?”

“என்னை எதுத்து என்ன பண்ணப்போறே நீ? ஏன் நீ விவரமில்லாம பேசிட்டு இருக்கே? உனக்கு என்ன வேணும்னு கேட்டாச்சு! ஒன்னும் சொல்ல மாட்டீங்கறே!”

“டீச்சரு உங்களுக்கு வெப்பாட்டின்னு இனி ஊரு பேசும். நான் தலைய குனிஞ்சு போகணும்”

“பேசிட்டு போச்சாறங்க! சரி வெப்பாட்டி வேண்டாம். தாலிகட்டி சேத்துக்கறேன். உனக்கு என்ன வேணுமுன்னு சொல்லுன்னா அதை சொல்றதை உட்டுட்டு வெப்பாட்டி அது இதுன்னு என்னென்னமோ சொல்றே!” என்றபோது கவுண்டரின் அருகில் நெருங்கி வந்து அமர்ந்து அவரின் சட்டையை வாங்கினாள்.

“பட்டனுகளை எங்க வெச்சீங்க?” என்றாள்.

“அதுல பாக்கெட்டுல போட்டேன் பாரு” என்றார். இவள் எழுந்து மாதக்காலண்டரில் குத்தி வைத்திருந்த ஊசிநூலை எடுத்து சட்டையில் அந்து போன இடத்தில் வைத்து பட்டனை தைத்தாள். இரண்டையும் தைத்து விட்டு சட்டையை உதறி இவருக்கு கொடுத்தாள். ஊசி நூலை பழையபடி குத்திவிட்டு வந்து இவர் அருகில் அமர்ந்தாள்.

“மசத்தனமா அப்படியா புடிப்பீங்க! எப்பிடி வலிச்சுது தெரியுமா!” என்றாள். கவுண்டர் அவளை இழுத்து தன் மடியில் அமர வைத்துக் கொண்டார். அவள் இவரின் கன்னத்தை கடித்தாள். கவுண்டர் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார். அவருக்கு அப்போது மீண்டும் பெல்லாவுக்கு கொடுக்க கையில் ஒன்றுமில்லை. அதையும் சொன்னார். அவள், ’அதெல்லாம் வேண்டாம் என்னை ஏமாத்தமாட்டேன்னு சொன்னீங்கன்னா போதும்’ என்றாள்.

# சயனம் 12

பஞ்ச் பத்தான் ஊருக்குள் வந்து விட்டான் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவன் வெறும் பத்தான் தானே ஏண்டா பஞ்ச் பத்தான்கறீங்க? கோவில் கல்லுக்கட்டில் அமர்ந்திருந்தவர்களுக்கு பஞ்ச் என்றால் தெரியாமல் கேட்டார்கள். என் வழி தனீ வழின்னு ரஜினிகாந்த் படையப்பாவுல சொல்லிட்டே திரியுவாருல்ல அது மாதிரி கைய நீட்டி எதாச்சிம் சொல்லிட்டே இருக்கான் மாமா! என்று இளவட்டம் ஒருவன் மாமனுக்கு சொல்லிக் கொண்டே போனான்.

பஞ்ச் பத்தானுக்கு ஆகக்கூடி வயசு இருபத்தி அஞ்சு தான் இருக்கும். ஐந்து வருடமாக ஆள் ஊரில் இல்லாமல் காணாமல் போயிருந்தான். அவன் வந்தது யாருக்கு பிடிக்கிறதோ இல்லையோ அவன் அம்மா அல்லியம்மாவுக்கு போன உயிர் திரும்ப வந்து விட்டது போலிருந்தது.

ஊருக்குள்ள போவாத சாமி! அவுங்க கண்டதீம் கடிதீம் சொல்லுவாங்க! அப்புறம் உனக்கு கோவம் வந்து இங்க வந்து சட்டி பானைய ஒடச்சுப்போடுவே! உன்னியும் என்னையும் உங்கொப்பன் உட்டுட்டு போயி பத்து வருசமாச்சு! எனக்கும் வயசாயிட்டு வருதுன்னு தெரியுமா? அஞ்சு வருசமா எங்க இருந்தே? என்ன பண்ணினேன்னு? ஒன்னுஞ் சொல்லாட்டி போச்சாது சாமி. ஊருக்குள்ள போனீன்னா எதாச்சிம் வம்பை கொண்டுட்டு வந்துடறே! இப்படித்தான் அவன் மண்டையில் ஏறும்படி பேசிக்கொண்டேயிருந்தது.

அல்லியம்மாவுக்கு இவனைத்தவிர வேறு பிள்ளைகளும் இல்லை. இவனும் காணாமல் போன பிற்பாடு தேடுவதற்கு கூட ஆளில்லாமல் சிவனே என்று காட்டு வேலைக்கி போய் வந்து கொண்டிருந்தாள். இங்கிருந்து தினமும் வம்பு வழக்கை கொண்டு வருவதற்கு அவன் எங்கியோ தொலைவு போய் இருந்தால் சரியென விட்டு விட்டாள். மகன் வந்து விட்ட பூரிப்பில் கொடாப்பில் கமுத்தி வைத்திருந்த கோழியை காலையில் அவளாக குப்பை மேட்டுப்பக்கம் தூக்கிப்போய் கழுத்தில் இரண்டு கராத்தே வெட்டு குடுத்து தலை சாய்ந்ததும் படப்படவென பொங்குகளை பிடுங்க ஆரம்பித்து விட்டாள்.

ஒன்றுமில்லாத அவள் குப்பை மேட்டை கிளற அவள் பத்துப்பாஞ்சு வெடைக்கோழி வளர்த்தினாள். அவைகள் குஞ்சுகளோடு கொக்கரித்தபடி அவள் வீட்டையே சுற்றிக் கொண்டிருக்கும். அவளிடம் கோழி பிடித்துப்போக கசாப்புக்கடைக்காரன் மாதம் ஒருமுறை வந்து போவான். கோழி வித்த காசை அவள் அரிசி மொடாவில் போட்டு வைத்திருந்தாள். ரேசன் அரிசியை அவள் தண்ணீரில் ஊறப்போட்டு அவைகளுக்கு தீனிக்கு வீசிக் கொண்டிருந்தாள். மகன் காணாமல் போன நாளிலிருந்து அவள் கறி தின்பதை மறந்திருந்தாள்.

சோறு வாயிற்கு போடும் போதே அவளுக்கு பத்தான் ஞாபகம் வந்துவிடும். இந்த நேரத்துக்கு தின்னானோ இல்லியோ என்று ரெண்டு சொட்டு கண்ணீர் விட்டு விட்டுத்தான் சாப்பிடுவாள். பொங்கை பச்சென பொசித்துவிட்டு வந்தவள் வீட்டின் திண்ணையில் லுங்கியையே இழுத்து மேலுக்கும் போட்டு தூங்கும் பத்தானை பார்த்து உள்ளே போனாள். காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு தான்.

பத்தான் ஊரில் இருந்த காலங்களில் தினமும் யாராவது ஒருவருடன் பிரச்சனைகளை வளர்த்திக் கொண்டிருந்தான். அவனிடம் நல்லவிதமாக பேசுபவர்கள் திடீரென போடா பொம்பளச்சட்டி! என்று சொல்லி விடுவது தான் பிரச்சனைக்கு காரணமாகி விடுகிறது. கையில் எது

கிடைத்தாலும் தூக்கி அவர்களை நோகி வீசி எறிந்து விட்டு வந்து விடுவான். இப்படி அவனுக்கு ஊரில் பகையாளிகள் தான் அதிகம் இருந்தனர். அவனது நடையும் பேச்சும் அப்படி இருப்பதால் சின்னக் குழந்தைகள் கூட பொம்பளச்சட்டி என்று தான் கூப்பிடுவார்கள். நாளாக நாளாக பத்தான் என்ற பேர் காணாமல் போய் விட்டது!

தன் ஊர்க்காரர்களை ஐந்து வருடம் கழித்து யாரைப் பார்த்தாலும் அவனுக்கு அவர்களிடம் ஒரு நாள் முழுக்க பேச வேண்டுமென ஆசையாய் இருந்தது. பழைய ஞாபகம் வந்து விடுவதால் யாரைக்கண்டாலும் விரோதியாகவே பார்த்து ஒதுங்கி வந்தான். தன் அம்மாளை வீடு வந்து பார்த்தவன் ஓ!வென அழ ஆரம்பித்து விட்டான். திடீரென தன் வீடு வந்து அழுபவனை அடையாளம் தெரியாமல், த்தை தூரப்போயி அழு! என்று சொல்லி விட்டாள்.

அவளுக்கு மாலையில் இப்போதெல்லாம் கண் மங்கலாக தெரிவதால் வந்தது யாரென தெரியவும் இல்லை. ஆயாளுக்காக அவன் கையில் துணிமணி பொட்டணமும், தீம் பண்டங்களும் வாங்கி வந்திருந்தான். அவைகளை கொண்டு திடு திடுவென போய் வீட்டினுள் வைத்து விட்டு திண்ணையில் வந்தமர்ந்தவனை கண்டு கொண்டவள், ’எங்க சாமி போயிருந்தே ஆத்தாளை உட்டுட்டு இத்தினி நாளா?’ என்றாள். அழுது தீர்த்தவன் அவளுக்கு பதிலெதுவும் சொல்லாமல் திண்ணயிலேயே சாய்ந்து விட்டான்.

மகன் வந்த தெம்பில் அடுத்த நாள் அல்லியம்மா காட்டுவேலைக்குப் போகவில்லை. அவள் வீட்டில் கறிக்குழம்பு வாசம் வீசிற்று. பத்தான் வயிறு நிறைய சாப்பிட்டான். அப்போது தான் ஊருக்குள்ள வம்பு வழக்கு வெச்சிக்காத சாமி என்று அறிவு புகட்டிக் கொண்டிருந்தாள். இந்த பத்தான் தானா வம்புக்கு போவ மாட்டான், ஆனா வந்த வம்பை விடவும் மாட்டான்! என்று ஆத்தாவிடம் முதல் பஞ்ச்சை வேறு குரலில் சொன்னான். ஆத்தா சேரி சாமி! அடி தின்னுட்டு மட்டும் ஊட்டுக்கு வந்துறாதே! இனியும் அழுதுட்டு வந்தீன்னா ஆத்தா வறக்கெணத்துல குதிச்சு மானத்துக்கு போயிருவேன்! என்றது. அவன் வட்டிலில் கையை கழுவிட்டு கடைசியாய் ஆத்தாளிடம் கேட்டான். ‘ஆமா தெனமும் நம்மூட்டுல நானில்லீன்னு கோழி போட்டு தின்னுட்டு இருந்தியா தாயே!’ ஆத்தா அவன் இன்னமும் முன்ன மாதிரிதான் என்று தெரிந்து கொண்டாள்.

கொண்டு வந்திருந்த பேக்கிலிருந்து பத்தான் ஆத்தாவுக்கு பணம் எடுத்துக் கொடுத்தான். ஆத்தா நோட்டுகளை கையில் பிடித்துக்

கொண்டு எத்தினி இருக்குதுடா? எங்க திருடுனே? என்றது. இவன் காலை தரையில் உதறினான். ஆத்தா மீண்டும் அதே மாதிரியே கேட்டது. எங்கடா உந்தீட்டு வந்தே? இவன் தரையில் சாணிப்பத்து பறக்க கால்களை தேய்த்தான். சேரி எங்க சம்பாத்ச்சுட்டு வந்தே? என்று கேட்டதும் தான் காலை உரசுவதை நிப்பாட்டினான் பத்தான்.

"எத்தினி காசுடா இதுல இருக்குது?" என்றாள்.

"பத்தாயிரமாத்தா! ஒரு காசு ரெண்டு காசில்ல பத்தாயிரம்! உனக்கு வேண்டாமுன்னா எங்கையில குடு நான் அதை வெச்சுட்டு மறுக்காவும் போறேன் இன்னொரு ஊருக்கு! அப்புறம் ஒரு அஞ்சி வருசம் கழிச்சி வர்றேன் இந்த கிறுக்குப்பயலுக ஊருக்கு! நீ எப்ப தாயே சாவே? உன்னிய பெதச்சுப்போட்டு மொட்டை போட்டுட்டு போயறலாம் ஒரேயடியா இந்த கிறுக்குப்பயலுக ஊரை உட்டுன்னு நெனச்சிட்டு வந்தேன். இங்க எப்பிடி தாயே இருக்கே இவனுக கிட்ட? ஆளுகளும் அவனுகளும்! எவனாச்சிக்கும் நல்ல புத்தி இருக்குதா? நான் பொச்சாட்டிட்டு நடந்தா இவனுகளுக்கு என்ன ஆத்தா? பொட்டையன்னு சொன்னானுக! எங்கே இனி சொல்லட்டும் பாக்கலாம். சொன்ன வாயை கிழிச்சிப்போட்டு தான் வருவேன். நான் பொட்டையன்னு இவனுக கண்டுட்டானுகளா? தாயே! இவனுக மோந்து பாத்தா கண்டானுக? நீ சொல்லு தாயே! உனக்கு எல்லாச்ச்சீரையும் பண்டி சுடுகாட்டுல பொதச்சிப்போட்டு நானு இவனுகளுக்கு டாட்டா காட்டீட்டு போயுருவேன் தாயே!"

"எந்த ஊருக்குடா போனே? என்ன கருமத்தப் பண்டி சம்பாதிச்சே?"

"நானு எங்க போனா என்ன தாயே! இவனுக வாசமே படாத ஊருக்கு போயி நல்லா இருந்தேன். அங்க யாரும் என்னை பொட்டையன்னு சொல்லி மூக்கை சொறிஞ்சி உடுல! வேல செஞ்சா காசு. உன்னியும் வந்து கூட்டிட்டு போவலாமுனு இருந்தேன் தாயே! நீ யாரு படா கேப்மாறி தான! என்னை பந்தக்கால்ல கட்டி வெச்சவ தான நீயி! பந்தக்கால்ல என்ன மசுத்துக்குடி நீ கட்டி வெச்சே என்னை?" பத்து வருசத்துக்கும் முன் நடந்த சம்பவம் ஞாபகம் வந்ததும் என்னமோ இப்போத் தான் கட்டி வெச்சு அவுத்து விட்டது போல கேட்டுக் கொண்டிருந்தான் பத்தான்.

"சரி இந்தக்காசை வெச்சு என்ன பண்றது நானு?"

"நாலு காசு சம்பாதிக்க துப்பில்லாம ஊரை சுத்துறான் எடுபட்ட காசின்னு என்னிய சொன்னில்ல! நீ சொன்ன நாலு காசி இது

தாந்தாண்டி கெழவி! தின்னு அதை! ஒன்னுமே தெரியாதது மாதிரி காசை என்ன பண்றதுங்கறா கெல்ட்டுக் கொமுறி! பத்து நாளு தான் உனக்கு! அதுக்குள்ள நீயா செத்துப்போயிரு தாயே! அந்த காசு உனக்கு தேரு கட்டி தூக்கிப்போவ! அதுல மிச்சம் புடிச்சு உன்னட கருமாதிச் செலவும் பண்டோணும். அதனால நீயா செத்துப்போயிரு! என்னையக் கொல்ல வெச்சிறாதே! நான் ஒரு தடவை சொன்னா பத்து வாட்டி சொன்னது மாதிரி! ஏன்னா எம்பட வழி குறுக்கு வழி!" என்று விரல் நீட்டினான்.

ஆத்தா இவனுக்கு மண்டைக்கோளாறு பிடித்து விட்டதாக நினைத்தாள். யாராச்சிம் வெளியூரில் மண்டையில் கட்டையால் அடித்ததிலிருந்து பயல் இப்படி ஆகி விட்டான் என்று நம்பினாள். அம்மாவாசை நாளில் ஊருக்குள்ளிருந்து ரெண்டு பேரை கூட்டு வந்து கோணப்புளியங்கா மரத்தில் வடக்கயிறு வைத்து சுத்திக் கட்டி வைக்க வேண்டுமென நினைத்துக் கொண்டாள். மாகாளி ஆத்தா திசை பார்த்து நீதான் இவனை காப்பாத்தோணும்! என்று வேண்டிக்கொண்டாள்.

"தாயே உங்கூட யாராச்சிம் சண்டை கட்டுனாங்களா? கெல்ட்டுத் தேவிடியான்னு யாராச்சிம் சொன்னாங்களா? இந்த ஊருப் பயலுக வாயிலதான் நல்ல வார்த்தைகளே வராதே! மாசக்கணக்கா காசு கட்டி கராத்தே கத்துட்டு வந்திருக்கன் தாயே! என்னை எவன் ஊருக்குள்ள இனி வம்பிழுத்தாலும் இப்படி நச்சுன்னு கத்தி மாதிரி கையை வெச்சுட்டு ஒரு வெட்டு அவன் தோள் சப்பையில! சிங்கிரிபாளையம் போயி கட்டு போட்டுட்டு தான் அவன் வரணும். தாயைக் காத்த தனயன்னு பேரு வாங்கத்தான் மறுக்காவும் இந்த ஊருக்கு வந்திருக்கேன். நீ பயப்படாமச் சொல்லு! யாரா இருந்தாலும் மதுப்பு மருவாதியெல்லாம் அவனுக்கு கெடையாது! ஒரு வெட்டு! சிங்கம் சிங்கிளா வந்திருக்குது தெரியுமா?"

"டேய் ஏண்டா இப்படி பித்துப் பிடிச்சவனாட்டம் பேசுறே காத்தால இருந்து? தளாபாளையம் ஒரு நடை போயி உனக்கு கவுறு கட்டீட்டு வந்துடலாம் நட! உனக்கு எதோ காத்து கருப்பு அடிச்சுருக்காட்ட இருக்கு"

"ஆரம்பிச்சுட்டியா! நிம்மதியா கெடந்தேன் டவுன்ல. அதனால தான் சொல்றேன் இன்னம் ரெண்டு நாளைக்கி வேணாலும் கறிச்சாறு நக்கிக்க நாக்குக்கு ருசியா! அப்புறம் வறக்கெணத்துல குதிச்சுரு. காரியத்தை முடிச்சுட்டு கெளம்பிடறேன். வேற வழியெல்லாம் ஒன்னுமே கெடையாது" என்றவன் பேக்கிலிருந்து பேண்ட் சர்ட் எடுத்து அணிந்து கொண்டான். அவனையே வச்சகண் எடுக்காமல் அல்லியம்மா மகனை

பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் பேண்ட் சர்ட் போட்டு பார்த்ததில்லை அவள். இவனைப்போய் பொம்பளச்சட்டி என்று தெனமும் வாய் விட்டு கூத்து கட்டினார்களே ஊர்க்காரர்கள்? அவர்கள் பேசுவதை வைத்து ஒருவேளை இவன் பொம்பளச்சட்டி தான் என்று நம்பினோமே! என்று நினைத்தாள். அவனும் அப்படித்தான் ஊருக்குள் அப்போது பண்ணிக்கொண்டிருந்தான். ஊரில் பொம்பளைகளாய் பார்த்து அவர்களிடம் மட்டுமே கதை பேசி சிரித்துக் கொண்டலல்லவா திரிந்தான்.

இரண்டு நாட்களில் வீடு வீடாய்ப்போய் எல்லார் நலமும் விசாரித்து தெரிந்து கொண்டு யாரிடமும் சண்டையில்லாமல் தான் வீடு திரும்பி வந்து கொண்டிருந்தான் பத்தான். அல்லியம்மாவுக்கு அது சந்தோசமாக இருந்தது. சில நேரம் சில நேரம் அவனிடம் புத்தி பிசகு இருப்பதாக நினைத்தாள். பொன்னுச்சாமிக் கவுண்டர் தோட்டத்திற்கு காய்கறி பிடுங்கிவரச் சென்றவளிடம் பூவாத்தா தான் சொன்னாள்.

“த்தென்ன உம்பட பையன் நேத்து வந்தவன் சித்த நேரம் பேசிட்டு இருந்தான் இவத்திக்கி குக்கீட்டு. நாயம் நல்லா பேசுறானேன்னு சித்த கேட்டுட்டு இருந்தேன். எங்கியோ போயி கப்பல் பாத்தானாம் கிட்டக்க, ஏரோப்ளேன கிட்டக்க பாத்தானாம் கதை கதையா சொன்னான். ஆனா கடைசில ஊருக்கு வந்ததே உன்னை பெதச்சுட்டு போவத்தான் அப்படிங்கான்!” என்றதும் தான், ‘அவன் அதுக்குத்தானாயா வந்திருக்கான். அப்புறம் அவனை கேக்க ஒருத்துரும் இல்லீல்லோ’ என்று சொல்லி வந்தாள். யாரிடம் பேசினாலும் கடைசியில் தாயை புதைத்து விட்டு போக வந்ததாகவே அவனும் சொல்லிக் கொண்டிருந்தான்.

மூன்றாம் நாள் அவனுக்கு நல்லவிதமாய் முடியவில்லை. கோவில் சேந்து கிணற்றோரம் சின்னச்சாமி திண்டில் அமர்ந்து பீடி பிடித்துக் கொண்டிருந்தான். பத்தான் பள்ளிக்கூடத்திலிருந்து சாலை வழியே வேலுச்சாமிக் கவுண்டர் தோட்டம் போக சென்று கொண்டிருந்தவனை அவன் தான் கூப்பிட்டு நிறுத்தினான்.

“யார்றா அது போறது பேண்ட்டு போட்டுட்டு?” என்றான் சின்னச்சாமி.

“ஏந் தெரியலியாக்கோ மாமனுக்கு! கண்ணென்ன பொடணியிலயா இருக்குது?” என்றான் பத்தான். இவனுக்கும் சினச்சாமிக்கும் ஆரம்பத்தில் தகராறு இருந்தது. தகராறுக்காரர்களிடம் இந்த மூன்று

நாட்களில் பேச்சே வெச்சுக்கக் கூடாது என்று தான் பார்த்தாலும் ஒதுங்கிப் போய்க் கொண்டிருந்தான்.

"யாரு மாப்பிள்ளையா?"

"ஆமா நீயென்ன பொண்ணா பெத்து வெச்சிருக்கிற மாப்பிள்ள போடறதுக்கு? உனக்கே இன்னுங் கலியாணத்தக் காணம். நீயே யாரு ஊட்டுல எவ கெடைப்பான்னு சுத்துறே"

"என்றா மாப்பிள்ள மாமங்கிட்ட இப்படி மருவாதி இல்லாமப் பேசுறே? எங்கியோ போயி பொழச்சு வந்திருக்கீன்னாங்க. செரி போனீன்னு கூப்பிட்டு ரெண்டு வார்த்தை பேசலாமுன்னா என்னமோ சண்டக்காரங்கிட்ட பேசுற மாதிரி நிக்கியே"

"யோவ் மாமா நீயி சண்டக்காரனில்லாம வேற யாரு? நீ என்னை இந்த ஊருக்காரனுகளாட்ட பட்டப்பேரு வெச்சு கூப்பிடுலீன்னு ஆத்தா முன்னால சத்தியம் பண்டு பாக்கலாம்"

"அதெல்லாம் அப்ப வெளையாட்டுக்கு பேசுனது மாப்பிள்ள! நீ இன்னுமா அதையே நெனச்சுட்டு பேசுறே?"

"சாவும் முட்டும் மறக்க மாட்டன் மாமா! வெளையாட்டு என்ன வெளையாட்டு எங்கூட உனக்கு? என் வயசென்ன உன் வயசென்ன?"

"அட மாப்பிள்ளைக்கு இத்தன கோவம் ஆவாதுடா சாமி. சேரி நீ இன்னும் மிந்தி மாதிரியே பொட்டையனாட்டத்தான் நடக்கே! நடைய மாத்துடா மொதல்ல!"

"டேய் ரோட்டுல போறவனை நிறுத்தி பொட்டையன்னு சொல்லாதடா அடிபடுவே"

"டேய் பேண்ட்டு போட்டுட்டா நீ பொட்டையனில்லியாடா? எங்க ஒருத்திய கைய வெச்சு அவ ஐய்யோ லொய்யோன்னு ஓடற மாதிரி பண்றா பாப்பம் பொட்டையா. இவனுக்குப்பாரு திமுரு. மாப்பிள்ளைன்னு கூப்பிட்டா பொண்ணு வெச்சிருக்கியாங்கான். பொட்டையனுக்கு எதுக்குடா பொண்ணு?" பீடியை சுண்டி எறிந்து விட்டு சின்னச்சாமி பத்தானைப் பார்த்தான். அவன் இவனை நோக்கி நிதானமாய் வந்தான். வந்தவன் இவனருகில் வந்து நின்று, 'இன்னொருக்கா சொல்றா நீ ஆம்பளையா இருந்தா' என்றான்.

"ஒருக்காச் சொன்னா போதுமாடா பொட்டை" என்றான் சின்னச்சாமி.

"போதுமுடா" என்ற பத்தான் அவன் வலது கையைப் பிடித்து ஒரு

நொடியில் அவன் முதுகுக்கு கொண்டு வந்து முறுக்கினான். தோள் சப்பையில் வலி உயிர் போவது மாதிரி இருந்தது சின்னச்சாமிக்கு. இன்னொரு கையால் அவனைப் பிடிக்க முயற்சித்தான். அந்த சமயத்தில் இன்னொருமுறை திருகல் கொடுத்தான் பத்தான். வலி இவனுக்கு சுருக்கென்றது.

“உட்றா பொட்டையா கையை!”

“உட முடியாதுடா சின்னச்சாமி அப்படியே ஊருக்குள்ள நட. யாரு இருந்தாலும் இந்த லட்சணத்தை பாக்கட்டும் நடடா!” என்றவன் இன்னொரு முறை திருகலை அதிகப்படுத்தினான். ஐய்யோ! என்று வாய்விட்டே அலறினான் சின்னச்சாமி. வேலியில் போனதை வேட்டிக்குள் எடுத்து விட்ட கதையாய் போய்விட்டதாக நினைத்தான். கொஞ்சம் திமிறினாலும் பத்தான் அவன் கையை முறுக்கினான்.

“டேய் என்னையப்பத்தி தெரியாது உனக்கு. விட்டுட்டீன்னா தப்பிச்சே. இல்லீன்ன வக்காலி உன்னை பொலி போடாம உடமாட்டாண்டா!”

“பொலி போடலாம் நடடா! பள்ளிக்கூடத்துக்கு ஒரு ரவுண்டு உடு. பிள்ளைங்கெல்லாம் பாக்கட்டும்” என முறுக்கியபடி தள்ளிக்கொண்டு போனான். பள்ளியின் கேட்டை ஒட்டி புளியமர அடியில் குழந்தைகள் படித்துக் கொண்டிருந்தார்கள். சிந்து டீச்சர் சின்னச்சாமியை ஓரிரு தடவை ஊரில் பார்த்திருக்கிறாள். ஒருமுறை இவளிடம் வந்து மணி என்ன? என்று கேட்டான். அப்போது அவன் பார்வை போன இடத்தைப் பார்த்தவள் வாட்ச் நின்னுபோச்சு! என்று சொல்லி வந்து விட்டாள். அவனுக்கு வேணும் என்று நினைத்தாள். ஆனால் அவன் கையை திருகியபடி பிடித்திருப்பவனை இன்றுதான் பார்க்கிறாள்.

குழந்தைகள் படிப்பதை விட்டு விட்டு வெளியே வேடிக்கை பார்ப்பதை கவனித்தவள் தான் அமர்ந்திருந்த சேரில் குச்சியால் ஒரு தட்டு தட்டினாள். குழந்தைகள் சிலருக்கு அவர்கள் அம்மாவிடம் பேசிக்கொண்டிருந்த பஞ்ச் பத்தானை தெரிந்திருந்தது. அல்லியம்மாவுக்கு ஒரு பையன் இருப்பதை தெரிந்து கொண்டார்கள். அவர்களில் இருவர் பத்மனாபனிடம் பேசி இருந்தார்கள். பத்தான் அவர்களுக்கு பாக்கெட்டிலிருந்து சாக்லெட் கொடுத்திருந்தான். பத்மனாபன் குழந்தைகளை பார்த்து கையை ஆட்டிக்கொண்டு அவனை ஊருக்குள் தள்ளிக் கொண்டு போனான். டீச்சர் இருப்பதால் குழந்தைகள் கையாட்டாமல் சும்மா இருந்தார்கள்.

ஊருக்குள் ஒரு வீதி விடாமல் அவனை ஓட்டி வந்தான் பத்தான். நான்கைந்து பேர், அட உடப்பா அவனை! என்று சொல்லிக் கொண்டு கோயில்புறத்திற்கு வந்தார்கள். அந்த நேரம்பார்த்து பொன்னுச்சாமிக் கவுண்டர் தன் டிவியெஸ்சில் எல்லைக்காட்டிலிருந்து வந்தவர் அவர்களருகே நிறுத்தினார்.

“என்ன பத்தான் என் பங்காளி கையை பிடிச்சு திருகீட்டு இருக்கே?” என்றவர் வண்டியை ஸ்டாண்டு போட்டு நிறுத்தி விட்டு வேட்டியை சரிப்படுத்தினார்.

“பங்காளி இவனை பொட்டயன்னு சொன்னேன். கையை பிடிச்சு திருகீட்டு விடுவனான்னு நிக்கான்”

“பத்தானை நீ ஏம் பங்காளி அப்படி சொன்னே? அவன் தான் ஊருல இருந்தப்பவே அப்படி சொன்னா கல்லெடுத்து எறிவான் தெரியாதா உனக்கு. பத்தா விட்டுடுடா அவன் பாவம்” என்றார்.

“இனிமேல் சொல்ல மாட்டன்னு சொல்லச் சொல்லுங்க! சொன்னதுக்கு மன்னிப்பு கேக்கச் சொல்லுங்க. நான் விட்டுடறேன்.” என்றான் பத்தான். அப்போது பள்ளியில் மணியடிக்க குழந்தைகள் ஓ! என்று சப்தமிட்டபடி பள்ளியை விட்டு ஓடி வந்தன. பொன்னுச்சாமிக் கவுண்டர் சின்னச்சாமியின் முகம் பார்த்தார். அவன் முகம் வலியின் வேதனையில் சுண்டிப்போயிருந்தது. இத்தனை வலியை தாங்கிக் கொண்டு இவன் ஏன் இப்படி இருக்கான்? என்றே யோசித்தார்.

கூடி நின்றிருந்தவர்களும் ஒப்புக்கு அவனை விடு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்பதையும் கவனித்தார். சின்னச்சாமி பத்தானிடம் வசமாய் மாட்டியிருக்கிறான் என்று தான் தெரிந்தது. சின்னச்சாமி மீது பகை வைத்திருந்தவர்கள் அதை ரசிப்பதை கண்டார். மீனாட்சி டீச்சர் தன் ஸ்கூட்டியை ஸ்லோ செய்து கவுண்டர் இருப்பதை பார்த்து விட்டு வேகமெடுத்துப் போய் விட்டது. சிந்து டீச்சர் தன் பாப்பாவோடு வந்தது கவுண்டர் நின்று கொண்டிருப்பதால் அதுவும் ஓரமாய் நின்று கொண்டது.

“சின்னச்சாமி பத்தான் கிட்ட இனிமேல் கூப்பிடலைன்னு சொல்லீட்டு விடுடா பிரச்சனைய! யாரு கிட்ட வம்பிழுக்கறதுன்னு வெவஸ்தையே இல்லியா உனக்கு? அவன் உனக்கு சோட்டாளா?”

“நான் மாமன்னு மரியாதையா தானுங்க பேசினேன்.”

“உட்றா பொட்டையா கையை!” என்று எரிச்சலாய் கத்தினான் சின்னச்சாமி. இது சரிப்படாது என்று கண்டு கொண்ட பத்தான் அவன்

கைத்திருகலை அதிகப்படுத்தினான். விண் என்று வலி உச்சி மண்டைக்கு ஏறியது சின்னச்சாமிக்கு.

“இனிமேல் உன்னை அப்படி கூப்பிடலை உட்றா! மன்னிச்சுக்கோ!” என்றான். கையை பத்தான் விட்டதும் கோபமாய் சின்னச்சாமி காலை உயர்த்தி அவனை உதைக்க முற்பட்டான். பத்தான் உதைக்க வந்த காலை கையால் பிடித்து ஒரு இழு இழுத்து விட்டான். மண்ணில் போய் உருண்டான் சின்னச்சாமி. இனி இங்கு நிற்பது ஆகாது என்று கண்டு கொண்டவன் எழுந்ததும் வசனம் பேசிக்கொண்டே சென்றான் மேற்கே சாலையில். ‘உன்னிய உடமாட்டண்டா டேய்!’ என்று. ஆனால் தப்பித் தவறிக்கூட அவன் பொட்டையன் என்ற வார்த்தையை சொல்லவில்லை. கூட்டம் விசயம் அவ்வளவு தானென்று கலைந்தது.

பத்தான் வேலுச்சாமிக் கவுண்டர் வீடு செல்ல கிளம்பினவனை பொன்னுச்சாமிக் கவுண்டர் நிறுத்தினார். என்னுங்க? என்றவனிடம் இங்கே ரோட்டில் வைத்து பேசக்கூடாது என்று நினைத்தவர் வா! என சைகை செய்து கோவிலுக்கு பின்புறம் கூட்டிப்போனார். அவருக்கும் முன்னால் தான் கூட்டம் கலைந்த போது சென்ற சிந்து டீச்சர் தன் வீட்டு கதவை நீக்கிக் கொண்டிருந்தாள். அது வசதியான இடமென நினைத்தார் இவரும். பொன்னுச்சாமிக் கவுண்டர் தனக்கு வீடு ஏற்பாடு செய்து கொடுத்தவர் என்பதால் மரியாதையோடு வாங்க! என்றாள் அவளும். அவருக்கு பின்னால் வந்த பத்தானும் அவரோடு இணைந்து அவள் வீட்டுக்குள் நுழைந்தான்.

ஆசாரத்தில் இருந்த சேரில் அமர்ந்தவருக்கு சிந்து செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். பேருக்கு துளி உதட்டை நனைத்துக் கொண்டவர் பத்தானுக்கு செம்பை நீட்டினார். அவன் செம்பை வாங்கியதும் மடக் மடக்கென குடித்து காலி செய்து விட்டு சிந்து டீச்சரிடம் நீட்டினான்.

“என்னை எதுக்குங்க பொறவுக்கு வரச் சொன்னீங்க?”

“பத்தான் முன்ன வந்து நீ இங்க இருந்தப்ப எல்லாரும் கேலி செஞ்சாங்க நீயும் கல்லையும் மண்ணையும் வெச்சு விரட்டிட்டு இருந்தே. அது அல்லாருக்கும் வெளையாட்டாப் போச்சு. வெளையாட்டை நீயும் விளையாட்டா நெனைக்காம இருந்தே சரி. இப்ப யாருக்குமே தெரியாம போயிட்டு அஞ்சு வருசம் கழிச்சி வந்திருக்கே. பூவாயாகிட்ட பேசினப்ப ஒன்னு சொன்னியாம். வந்ததே உங்காயாவை குழியில தள்ளத்தான்னு. பெரிய பயலாகி இப்படி புத்தி கெட்டு பேசிட்டு இருக்குறது நல்லாவா இருக்குது? உங்கொம்மா நேத்து எங்கிட்ட என்னுன்னு சித்த அவங்கிட்ட

கேளுங்கன்னு சொல்றா!”

“ஆமாங்க! நானு அதுக்குத்தான் வந்திருக்கேன்”

“என்ன குழியில தள்ளவா?”

“ஆமாங்க. பின்ன வயசானதை என்ன பண்ணச் சொல்றீங்க நீங்க? நான் வெளியூருல இருப்பேன். வந்து சேரக்கூட ரெண்டு நாளு ஆவிப்போயிரும். எங்கம்மாளுக்கு நான் ஒரே பிள்ளை. காரியத்தை முடிச்சுட்டு கெளம்பிட்டா இந்த ஊருக்குள்ள எனக்கு வேலை இல்லப்பாருங்க! அதனால தான் அவிங்க கிட்ட அப்படி சொன்னேன். இது ஒரு ஊரு மானங் கெட்ட ஊரு! பாருங்க வந்த ரெண்டாம் நாளு மாமங்காரன் பழைய மாதிரியே கேலி பண்றான். இந்தூருல எப்படிங்க இருக்கிறது? சொல்லுங்க பாப்பம்?”

“அதான் கையை முறுக்கி உட்டுட்டியே! எல்லாருக்கும் தகவல் தெரிஞ்சிடும். யாரும் உன்னை ஒன்னும் சொல்ல மாட்டாங்க!”

“அது எனக்கும் தெரியுமுங்க. அதுக்குத்தான் அவனை ஊர் முழுக்க முறுக்கி இழுத்துட்டு வந்தேன். இனி அவன் என்னைக் கண்டா பல்லை வெறுவீட்டே இருப்பான். சமயம் பார்த்துட்டு இருப்பான். நான் கருக்கடையோட ஊருல சுத்தணும். ரெண்டு நாளா யாரும் என்னை ஒரு தும்பமும் பண்டுலீங்க. இன்னிக்கி கெரகம் பாருங்க வாயை குடுக்குறான். என்னை இளிச்சவாயன்னு நெனச்சுத்தான சொல்லியிருப்பான்.”

“நீயா செத்துரு இல்லீன்னா கொன்னு போடுவன்னு உங்காயா கிட்ட சொன்னியா நீ?”

“எங்கம்மாட்ட தான சொன்னேன். உங்க கிட்டயா சொன்னேன்” என்ற போது சிந்து இருவருக்கும் டம்ளரில் டீ போட்டு கொண்டுவந்து கொடுத்தாள்.

“இவன் எங்க ஊரு தானம்மிணி! ஒரு அஞ்சு வருசமா வெளியூர்ல இருந்துட்டு இப்பத்தான் வந்திருக்கான். அப்ப பசங்க இவன் நடையப் பார்த்துட்டு கிண்டல் பேசியிருக்காங்க. பயல் ஊர்க்காரங்களையே மொத்தமா குத்தம் சொல்றான். இவங்காயா பாவம் அழுதுட்டு வந்துது. இப்ப ரவுசு பண்ணீட்டு இருந்தானா.. அதனால அவத்திக்கி வெச்சு எதும் சொல்லப்படாதுன்னு இங்க கூட்டி வந்தேன். நீ எதும் தப்பா நெனச்சிக்காதே” என்றார்.

“தப்பா நெனைக்கறதுக்கு எனத்த இருக்குதுங்க!” என்றவள் பத்தானை

ஒருமுறை பார்த்தாள். சரியான ஆளை ஏன் எல்லாரும் அப்படி கூப்பிடுகிறார்கள் என்று நினைத்தாள்.. பத்தான் நெஞ்சை நிமிர்த்தி அவரிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"சரி பாத்து நடந்துக்க. இப்படி ஒருத்தன் ஒன்னு சொன்னான்னா அவனை கையை முறுக்கீட்டு ஊருக்குள்ள ரவுசு பண்ணீட்டு இருக்காதே. அவன் ஆகாவழின்னா நீ ஒதுங்கிப் போயிடு. இன்னம் நீ சின்னப்பையனா?"

"அது தெரிஞ்சு அவனுக நடந்துக்கோணுமுல்ல. என்னை யாராச்சிம் கிண்டல் பண்ணா அப்பவே அப்படித்தான் பண்டுவேன். இந்த பத்தான் தானா வம்புக்கு போக மாட்டான். வந்த வம்பை விடமாட்டான்" குரலை மாற்றிப் பேசினான். இவனிடம் பேசியதே வீண் என்று கவுண்டர் நடையைக் கட்டினார். அவர் போகையில் டீயை ஊதி ஊதி அலாசி குடித்துக் கொண்டிருந்தான் பத்தான்.

"தண்ணி இத்துனூண்டு ஊத்துங்க டீச்சர். நான் கௌாசை கழுவி குடுத்துடறேன்" என்றான்.

"இல்ல நாங் கழுவிக்கறேன் குடுங்க நீங்க" என்று கையை நீட்டினாள்.

"இல்லங்க டீச்சர் எனக்கு பழகிப்போச்சு" என்றவன் நேராக வீட்டினுள் சென்று பாத்ரூம் கதவு திறந்து மறைந்தான். இவனுக்கு நடை கொஞ்சம் வித்யாசமாய்த்தான் இருந்ததை அப்போது கவனித்தாள். போக பாத்ரூம் நோக்கி தினமும் போனவன் போல் போகிறானே! என்று நினைத்தாள். அவன் கழுவிய டம்ளரை கொண்டு வந்து நீட்டினான்.

"என்ன பாக்கீங்க டீச்சர். இது வரதன் அண்ணன் ஊடு. வரதன் இருந்தப்ப நாங்க இந்த வீட்டுலதான் தாயக்கரம் ஆடுவோம். அங்க பாருங்க ஆசாரத்து நடுவுல குழி குழியா இருக்கு." என்று காட்டினான்.

"ஆமாங்க உங்கம்மா பேரு அல்லியம்மாவா? அவங்க தான் ரெண்டு வாரத்துக்கு ஒருக்கா கோழி கொண்டு வந்து எனக்கு குடுப்பாங்க. இங்கியே சுத்தம் பண்ணி அரிஞ்சு குடுத்துட்டு போவாங்க"

"அதெல்லாம் நல்லா பண்ணும் எங்கம்மா! உங்களுக்கு பண்ணா பரவாயில்ல நீங்க வெளியூரு. இந்தூருக்காரனுகளுக்கும் போயி ஊட்டுல வேலை செஞ்சு குடுக்கும். அதான் எனக்கு புடிக்காதுங்க. இந்தூருக்காரனுக மனுசனுகளே கிடையாது. எல்லாரும் திமுரு புடிச்சவனுக. எங்கம்மா சேலைய கட்டிக்கச் சொல்லுவானுக என்னை"

"உங்களுக்கு சேலை கட்டிக்க ஆசையா இருக்குமா?" என்றாள் சிந்து.

“இல்லீங்க டீச்சர். அப்படியெல்லாம் ஒரு நாளுகூட ஆசை எனக்கு இல்லை.”

“எப்பவும் பொம்பளைங்க கிட்ட பேசிட்டு இருப்பீங்களா?”

“இவனுக தான் என்னை எப்பவும் கிண்டல் பண்றானுகளே பின்ன யாருகிட்டத்தான் பேசிப்பழகுறது? எனக்கு நடை ஒன்னு தான் செரியில்லீங்க டீச்சர். அது பொம்பளை பிள்ளைங்க நடக்குற மாதிரி இருக்குதாம் இவனுகளுக்கு. அதனால கிண்டல் பண்றானுக. அதனால எனக்கு கோவம் வந்துடுது. இவனுக சங்காத்தமே வேண்டாமுன்னு தான் நான் ஊரை உட்டே ஓடிப் போயிட்டேன். வேலை கொஞ்சம் கமின்னு சரி அம்மாளை பாத்துட்டு போலாமுன்னு வந்தேன். இவனுக அப்பிடியே இருக்கானுக.”

“சின்னச்சாமி உங்களுக்கு மாமனா? அந்தாளு பேச்சு செரியில்ல”

“அவன் பொம்பளைன்னா வாயை தொறந்துட்டு போவான். கம்முன்னு வந்தேன். வம்புக்கு இழுத்து வாங்கி கட்டிட்டு போயிட்டான்.”

“ஒவ்வொருக்கா ராத்திரியில கதவு தட்டுற சத்தம் கேக்கும் எனக்கு. நான் பயந்துட்டு கம்முன்னு படுத்துக்குவேன்”

“அது அவன் பண்ற வேலை தான். கேட்டா நானெங்க அன்னாரத்துல அங்க வந்தேன் அப்படிம்பான். இவனால ஊருக்குள்ள ரெண்டு குடும்பம் கெட்டு கெடக்குதுங்க. வேலுச்சாமிக் கவுண்டர் குடும்பம் அப்படி கெடக்க இவன் தான் காரணம். ஊருல எல்லாருக்கும் தெரியும். நீங்க பயப்படாதீங்க டீச்சர். நான் வேணா உங்க வீட்டு திண்ணையில ராத்திரில காவலுக்கு படுத்துக்கறேன்”

“ஐய்யோ அதெல்லாம் வேண்டாமுங்க. நீங்க தான் உங்கொம்மாவை கொல்ல வந்திருக்கிறதா கவுண்டரு சொன்னாருங்களே அந்தக் காரியம் கெட்டுப்போகும்” என்றதும் சிரித்தான் பத்தான்.

“ஏனுங்க நீங்க அதை நெசமுன்னு நம்பீட்டீங்களா? நான் ஊருக்காரனுக வவுத்துல புளிய கரைக்க சொல்லி வெச்சது. எங்கம்மா இனி ஒரு ஊடு பாக்கி உடாம போயி சொல்லிப்போடும். என்னை பாத்தா பயப்படுவானுகன்னு புளுகி உட்டதுங்க. தமாசு” என்று சொல்லி சிரித்தான். திடீரென ஞாபகம் வந்தவன் போல கேட்டான் பத்தான்.

“ஆமா உங்க வீட்டுக்காரரு எங்க வேலையில இருக்காரு?”

“எங்க வீட்டுக்காரரோட எனக்கு சண்டை. அவரு எங்கிட்ட வரமாட்டாரு”

“அதான் உங்க கழுத்துல தாலி இல்லீங்களா? சரி நீங்க எந்த ஊரு? உங்க அப்பா அம்மாவெல்லாம் இருப்பாங்கல்ல. அவிங்கள கூட்டி வந்து கூட தொணைக்கி வச்சுக்கலாம்ல?”

“அவிங்க திங்களூருல தான் இருக்காங்க. நான் என் வீட்டுக்காரரை ஓடிப்போயி கல்யாணம் கட்டிக்கிட்டதால மூஞ்சில முழிக்க கூடாதுன்னுட்டாங்க. அதனால போக்குவரத்து இல்லைங்க”

“ஐய்யோ பாவம்! சின்ன வயசுல பாப்பாவை வெச்சுட்டு உங்களுக்கு சிரமம். ஆமா ஸ்கூட்டி வச்சிருக்கீங்க எங்கியும் போவறதே இல்லீங்களா?”

“எங்க போறது? முன்ன கரூர்ல டவுன்ல இருந்தோம். அப்ப வாங்கினது. இங்க சும்மா தான் நிக்கிது. ஆமா உங்களுக்கு ஸ்கூட்டி ஓட்டத்தெரியுமா?”

“தெரியுமுங்க டீச்சர். ஏங் கேக்கறீங்க?”

“எங்க பாப்பா மீன் சில்லியின்னா நல்லா சாப்பிடுவா. இங்க எல்லக்காட்டுல சில்லி போடறாங்களாமா! ஆனா பொழுது உழுந்து தான் வண்டிக்கடையில போடறாங்களாம். குடிச்சுட்டு வர்றவங்க தான் சாப்பிடறாங்களாம். நான் எப்படி போயி வாங்குறதுன்னு விட்டுட்டேன்.”

“நான் போயி வாங்கிட்டு வந்து தர்றனுங்க டீச்சர். கூச்சப்படாம எது வேணாலும் சொல்லுங்க. என்ன இந்த வண்டிய ஓட்டிட்டு போனா அவனுக்கு ஏத்த வண்டிய ஓட்டறாண்டான்னு மறுக்காவும் கிண்டல் பேசுவானுக”

“நீங்க தான் அவனுகளை கையை திருகி உட்டுருவீங்கள்ள! அப்புறமென்ன?” என்றாள் சிந்து.

“ஆமாங்க டீச்சர். ஆனா கவுண்டரு சொன்னாப்புல ஒதுங்கி போயிக்கலாம்னு யோசனைங்க. நானென்ன இன்னம் சின்னப்பையனா?”

“அப்படின்னா நானும் வர்றேன். அங்க மளிகை கடையில ஜாமான் வாங்கிட்டு நிக்கேன். நீங்க சில்லி வாங்கிட்டு வாங்க ரெண்டு பேரும் வந்துடலாம்” என்றாள் சிந்து.

“ஐய் அப்படின்னா சில்லி சாப்பிடறமா நாம இன்னிக்கி!” சிலேட்டில் பொம்மை வரைந்து கொண்டிருந்த பாப்பா சிலேட்டை கொண்டு போய் தன் ஸ்கூல் பேக்கில் வைத்து விட்டு வந்து அம்மாவோடு ஒட்டிக்

கொண்டது.

“பாப்பா பாவமுங்க டீச்சர். உடு சாமி இன்னிக்கி நாம புல்லா சில்லி திங்கிறொம் இவ்ளோ” என்று கையை விரித்துக் காட்டினான் பத்தான்.

“அங்கிள் உங்க பேர் என்ன?” என்றது பாப்பா இவனிடம்.

“பத்மனாபன் என் பேரு. ஆனா பத்தான் பத்தான்னு தான் எங்கம்மாவே கூப்பிடும். உனக்கு பிடிச்சிருக்கா?”

“அங்கிள் உங்க பேரை இன்னிக்கி தான் கேக்குறேன் பத்மனாபன்னு. புதுசா இருக்குது. அம்மா கிளம்பும்மா போலாம்” என்றது பாப்பா.

“இப்பத்தான் அடுப்பே பத்த வச்சிருப்பான் சாமி. இன்னம் பொழுதே உழுகலை. அப்புறம் வண்டில லைட்டு போட்டுட்டு போவோம். ஏனுங்க டீச்சர் அந்த டிவி ஓடுமுங்களா? நான் டிவி பார்த்து அஞ்சு நாளாச்சி. சித்த போட்டு உடுங்களேன் பார்ப்போம். அது ஆறு மணிக்கு மேல போயிக்கலாம்” என்றான் பத்தான். சிந்து டிவி சுட்சை போட்டு விட்டாள். கே டிவியில் வடிவேலு தமாஸ் பண்ணிக் கொண்டிருந்தான். பாப்பா, ஐய் வடிவேலு! என்று டிவி முன் போய் உட்கார்ந்து கொண்டது.

இருட்டு விழுந்த நேரத்தில் ஸ்கூட்டி மீது கிடந்த குல்லாயை தூக்கி உதறி டீச்சர் மடித்து வைத்தாள். சாவியை கொண்டு வந்து போட்டு செல்ப் ஸ்டார்ட் செய்து பார்த்து ஸ்டார்ட் ஆனதும் அணைத்து இவனைப் பார்த்தாள். பத்தான் எழுந்து போய் ஸ்கூட்டியை ஆசாரத்தில் உருட்டியபடி வந்து வெளிக்கதவு படிகளில் பூ மாதிரி இறக்கி வாசலில் நிறுத்தினான். சிந்து பாப்பாவை அழைத்துக் கொண்டு கையில் ஒயர் கூடையுடன் வந்தாள். வீட்டை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டதும் ‘ம் எடுங்க வண்டியை’ என்றாள்.

பாப்பா முன்னால் ஏறி நின்று கொண்டது. பத்தான் செல்ப் ஸ்டார்ட் செய்து வண்டியை ஒரு முறுக்கு முறுக்கினான். சிந்து கூடையுடன் வந்து பின் சீட்டில் அமர்ந்து கொண்டதும் வண்டியை கிளப்பினான் பத்தான். இரண்டு முக்கு திரும்பி ஊர் தாண்டியதும் சிந்து பத்தானின் வயிற்றுப்புறத்தில் வலது கையை போட்டு பிடித்துக் கொண்டாள்.

“நீங்க இருந்தங்காட்டி ஆச்சு இன்னிக்கி. நானெல்லாம் இருட்டுல வண்டியை எடுக்கவே மாட்டனுங்க” என்றாள் அவனிடம். பத்தானுக்கு எல்லக்காடு சீக்கிரம் வரக்கூடாதென மெதுவாக சென்றான்.

“வண்டிய என்னையாட்டவே ஸ்லோவா ஓட்டறீங்க நீங்க” என்றாள். இவன் ஒன்றும் சொல்லவில்லை. எல்லக்காட்டில் மளிகை

கடையோரமாக வண்டியை நிறுத்தியவன் சைடு லாக் போட்டு பாப்பாவை கூட்டிப் போனான் தூக்கி கொண்டு. சிந்து ஜாமான் வாங்க மளிகை கடை சென்றாள். ஜாமான் வாங்கி முடித்து வண்டி அருகில் நின்றிருந்த சிந்து மேலும் அவர்கள் இருவரும் வர பத்து நிமிடம் காத்திருந்தாள். அவர்கள் கையில் மழைக்காகித பொட்டணம் இரண்டு இருந்தது. அப்போது தான் பத்தானிடம் சில்லிக்கு காசு கொடுக்காதது அவளுக்கு ஞாபகம் வந்து நாக்கை கடித்துக் கொண்டாள்.

“அம்மா ரெண்டு பேரும் அங்கியே ஆளுக்கு ரெண்டு ப்ளேட் சில்லி சாப்பிட்டுட்டு தண்ணி குடிச்சுட்டு வந்தோம்” என்ற பாப்பா வந்ததும் ஸ்கூட்டியின் முன்னால் ஏறி நின்று கொண்டது.

“அம்மா அங்கிள் தினமும் என்னை கூட்டிட்டு வந்து சில்லி வாங்கித் தர்றேன்னு சொல்லிடுச்சு. அங்க ஒரு ஆள் சாப்பிட சாப்பிட பொத்துனு கீழ விழுந்து அப்பிடியே படுத்துக் கெடந்தான்.”

“பாத்தீங்களா இவ சொல்றதை. அதனால தான் நான் இங்க வர்றதே இல்லை” என்றவள் பின்னால் உட்கார்ந்து கொண்டதும் வண்டியை கிளப்பினான். அவள் பழையபடியே கையை வைத்துக் கொள்வாளா என்று பார்த்தான். இரண்டு வீடு தாண்டியதும் அவள் கையை இவன் வயிற்றுப்புறத்தில் பிடித்துக் கொண்டாள். பத்தானுக்கு அது என்னவோ செய்தது. ஆனாலும் அது ஆனந்தமாய் இருந்தது. அடுத்த நாள் சிந்துவை ஓட்டச் சொல்லி இவன் பின்னால் அமர்ந்து அவளின் வயிற்றைப் பிடித்துக் கொண்டான் பத்தான். அவள் கூச்சத்தில் கொஞ்சம் நெளிந்து வண்டியை ஒலட்டவே, ’கையை எடுத்துக்கட்டுங்களா டீச்சர்?’ என்றவன் அதை எடுத்துக் கொண்டதும் ’பரவாயில்ல பிடிச்சுக்கங்க’ என்றாள்.

“எனக்கு லைட் போட்டு ராத்திரியில வண்டி ஓட்ட வராது பயந்துக்குவேன். வர்றப்ப நீங்களே ஓட்டுங்க” என்றாள் சிந்து. இவன் மீண்டும் வயிற்றில் கை வைத்துக் கொண்டபோது வண்டி தடுமாறவில்லை. வண்டி நேற்று இவன் சென்ற வேகத்திலேயே தான் சென்றது. எதிர்க்கே வரும் டூ வீலருக்கு இவள் ரோட்டில் ரொம்ப ஓரம் கட்டினாள். ’லைட்டை டிம் பண்ணுங்க! அப்பத்தான் எதிர்க்க வர்றவங்களுக்கு கண்ணு கூசாது. பாருங்க அவன் டிம் பண்றான் கூசுதுன்னு’ என்றான். அவள் ’எப்படி டிம் பண்றது?’ என்று வண்டியை நிப்பாட்டினாள். பிறகு இவனே வண்டியை ஓட்டினான் எல்லக்காடு நோக்கி.

மூன்றாவது வாரத்தில் பத்தான் சிந்துவுக்கு சென்னிமலையில் தாலி

கட்டினான். தோள் மீது கைபோட்டு போட்டோவுக்கு போஸ் கொடுத்தான். அவன் திருமணத்திற்கு பீட்டர் சாரும், குமரேசனும் மட்டுமே வந்திருந்தார்கள். அது அப்படித்தான் நடந்தது ஒரு வாரம் முன்பு. சிந்து வீட்டு திண்ணையில் இரவு கிடந்தவனை மழைத்துளி தான் எழுப்பியது. கோவில் ஆசாரத்தில் போய் படுத்து விடலாமென எழுந்தவனை கதவு நீக்கி சிந்து வீட்டினுள் அழைத்துக் கொண்டாள்.

அன்று இரவு சிந்து அவனை அப்படி செய்து விட்டாள். அவன் தன் குறியில் ரத்தம் வந்தது கண்டு அழுதான் செத்து விடுவேன் என! சிந்து பாப்பாவின் காயத்திற்கு வைத்திருந்த ஆயின்மெண்ட்டை தடவி நெஞ்சில் சாய்த்துக் கொண்டாள். அப்புறம் பத்தான் திண்ணையில் படுப்பதில்லை.

ஊர்க்காரர்கள் பத்தானுக்கு வந்த வாழ்வை பாருய்யா! கவர்மெண்ட் சம்பளம் வாங்குற பொண்டாட்டி! என்று பேசினார்கள். நடையை மட்டும் சரிப்படுத்த முடியவில்லையே என வருந்திய பத்தான் சிந்துவின் ஸ்கூட்டியிலேயே ஊருக்குள் சுற்றிக் கொண்டிருந்தான். அவன் அம்மா எப்போதும் போல ஞாயிற்றுக்கிழமை சிந்துவின் வீட்டுக்கு கோழி கொண்டு வந்து பொசித்து அரிந்து கொடுத்து சாப்பிட்டுப் போகிறது. கோழிக்கு காசு வாங்குவதில்லை.

# சயனம்13

வேலுச்சாமிக்கவுண்டர் தோட்டத்திற்கு அன்று விடிகாலையிலேயே வழுவுச் சனம் அனைத்தும் வந்து நின்றிருந்தது. அனைவரும் போய் வேலுச்சாமிக் கவுண்டரிடம் நின்றுவிட்டால் மட்டும் அவரென்ன மந்திரவாதியா காணாமல் போனவனை கண்டு பிடித்துத் தர? இரண்டு நாட்களாக கலியனை காணவில்லை என்பதே அவர்களின் பிரச்சனையாக இருந்தது. அவர்கள் தங்களின் சொந்தபந்தங்களிடம் போய் விசாரித்து விட்டார்கள். வெத்திலையில் மை போட்டு பார்த்து விட்டார்கள் கீரனூர் பழனிச்சாமியிடம் போய். அவர் ஆள் வடக்கே தான் ஒரே கிடையில் இருக்கான் என்று சொல்லி விட்டார்.

அவர் எப்போதும் காணாமல் போன ஆள் இந்த திசையில் தான் இருக்கிறான் என்பதை மட்டும் சொல்வார். விலைவாசி உயர்வால் மை தடவி பார்ப்பதற்கு ஐநூறு வாங்கிக் கொண்டிருந்தவர் இப்போது ஆயிரம் வாங்கிக் கொண்டிருந்தார். ஆயிரம் போனாலும் காணாமல் போனவனை தேடிப் பிடித்துவிட வேண்டுமென்று தான் வந்த சனம் குறியாய் இருக்கும். அவர்களுக்கு தொகை பெரிதல்ல. ஆள் தான் தற்போதைய தேவை. அதை அவர் நன்கு தெரிந்து வைத்திருந்தார். சமீப காலங்களில் காதலித்து ஓடிச் செல்பவர்களின் தொகை அதிகமானபடியால் அவருக்கு தினமும் உட்கார்ந்த கிடையில் நல்ல வசூல் தான்.

அவர் வெத்திலையில் மை தடவிப்பார்க்க கால்மணி நேர கால அவகாசத்தையே எடுத்துக் கொள்வார். கலியனை காணோமென மாரனும், வள்ளியும் வழுவுச்சனம் சிலரோடு நேற்றுத்தான் கீரனூர் சென்றிருந்தார்கள். அவருக்கான தொகையை வீட்டின் வெளியே நின்றிருந்த வாதநாராயண மரத்தில் அட்டையில் கட்டித் தொங்க விட்டிருந்தார் பழனிச்சாமி. அந்த தொகையை மடியிலிருந்து எடுத்து வெத்திலை பாக்கு வைத்து கொடுத்தான் மாரன் அவரிடம்.

“உம்பையனா காணாமப் போயிட்டான்?’

“ஆமாங்க சாமி”

“வயசென்ன இருக்கும் அவனுக்கு?”

“மாசி பொறந்தா இருவத்தொம்பது ஆவுதுங்க சாமி”

“கலியாணம் பண்ணி வெச்சிட்டியா?”

“நாலு மாசம் ஆச்சுங்க கலியாணமாயி. பாருங்க இவ தான் எம் மருமக.

அழுதே சலிச்சுக் கெடக்கறாளுங்க”

“என்ன வேலைக்கி எந்த ஊருக்கு போயிட்டிருந்தான் கலியன்?”

“அவன் ஊருக்குள்ளயே கவுண்டர் தோட்டத்துல வேலைக்கி போயிட்டு வந்துட்டு இருந்தானுங்க. பத்து நாளா கவுண்டரு ஏனோ வரவேண்டாமுன்னு சொல்லி போவச் சொல்லிட்டாருங்களாமா. பொக்குனு பத்து நாளா ஊட்டுலயே கெடந்தானுங்க. திடீருன்னு தான் ஆளைக் காணம். அதுல பாருங்க சாமி எம் மருமவ அங்க அவரு தோட்டத்துல தான் வேலைக்கி போயிட்டு இருந்தா. ஆனா அவளை வரவேண்டாமுன்னு கவுண்டரு சொல்லலைங்க. நல்ல மனுசன் அப்படி சொல்றாருன்னா இவன் ஏதாச்சிம் கேப்மாறித்தனம் பண்டியிருப்பானுங்க”

“சரி எப்ப இருந்து காணம் அவனை?” அவர் தேங்காய் தொட்டியில் இருந்த கருப்பு மையை ஆள்காட்டி விரலில் வழித்தெடுத்து வெத்திலையில் பூசிக் கொண்டே கேட்டார்.

“முந்தா நேத்து ராத்திரியிலயே அவன் காணாமப் போயிட்டானுங்க”

“அட இந்தா இருக்கானே! ஆனா இருட்டா தெரியுது. இப்ப உக்காந்துட்டு இருக்கான் பாரு” என்ற பழனிச்சாமி மாரனிடம் வெத்திலையை காட்டினார். மாரனுக்கு வெத்திலையில் மை அப்பியிருப்பது மட்டுமே தெரிந்தது.

“நல்லா உத்துப்பாரு. சினிமாப்படம் ஓடறமாதிரியா வெத்தலையில ஓடுமுன்னு நெனச்சுட்டு பாக்கே. நீ ஒந்திக்கோ. அந்த பிள்ளையப் பாக்கச் சொல்லு” என்றார். வள்ளி போய் கிட்டே நின்று வெத்திலையை உற்றுப் பார்த்தாள். அவளுக்கு மரம் மாதிரி தெரிந்தது.

“உனக்கு என்ன தெரியுது?’

“எதோ மரமாட்ட கண்ணுக்கு தெரியுதுங்க”

“ உனக்கு அப்படி தெரியுதா?”

“சாமி ஆளு உசுரோட இருக்கானுங்களா?’

“அதெல்லாம் தெரியலப்பா இப்ப. எதுக்கும் ரெண்டு மணி நேரம் கழிச்சி வந்து பணம் வெச்சு இன்னொருக்கா பாரு. ஆள் அக்கட்ட இக்கட்ட போனான்னா காட்டிடும். இப்ப உக்காந்துட்டு இருக்காப்ல தெரியுது”

“சாமி அவன் எந்த திசையில இருக்கானுங்க?” என்று மாரன்

கேட்டதும் அவர் மீண்டும் தொட்டியிலிருந்து மை எடுத்து அதன் மீதே மேலும் தேய்த்தார். வள்ளி அவரின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அவன் வடக்க ஒரு மூனு மைல் கல்லு தூரத்துல தான் இருக்கான். பக்கத்துலயே ஆளை வெச்சுட்டு கீரனூரு வந்துட்டீங்க? இத்தன நாளா நானும் மை போட்டு பாத்துட்டு வர்றேன் எப்படியும் காணாம போகுற ஆளுங்க நூறு மைலு, ஐநூறு மைலுன்னு தூரமா இருப்பாங்க. இவனென்னடான்னா உங்களை இப்படி அலைய உட்டிருக்கானே!" என்றார்.

"தொய்யத்தோட்டத்துல பாலானுட்டுல போயி உக்காந்துட்டானோ என்னமோ" என்றாள் மாரன் பொண்டாட்டி.

"பொண்டாட்டிய உட்டுப் போட்டு போயி உக்காந்துட்டான்னா என்ன எழவுனு காங்கறது?" என்றான் மாரன்.

"சேரி நீங்க வெளிய போயி உங்க நாயத்தை பேசிக்கங்க. ஆளு இன்னமும் ஒரே கெடையில தான் இருக்கான். சந்தேகமெதாச்சிம் இருந்தா இருந்து ரெண்டு மணி நேரம் கழிச்சு பார்த்துட்டு போங்க" என்றார் பழனிச்சாமி. அவர் மை பார்ப்பது தவிர்த்து வியாழன் ஞாயிறு கிழமைகளில் நாட்டு வைத்தியமும் பார்த்துக் கொண்டிருந்தார். பல்லு வலிக்காரர்களும், மஞ்சள் காமாலைக்காரர்களும் கூட்டமாய் வருவார்கள்.

பல்லுவலிக்காரர்களுக்கு எலி வங்கில் சட்டிப்பொகை வைத்து ஊதுவது போல ஒரு வழி வைத்திருந்தார். பணம் கட்டியதும் பல்லு வலிக்காரன் சட்டியின் துவாரத்தில் புகை வந்து கொண்டிருக்குமிடத்தில் வாயைக் கொண்டுபோய் வைத்து புகையை வாய் முழுதும் நிரப்பிக் கொள்ள வேண்டும். சற்று தள்ளி அமர்ந்து குனிந்தவாக்கில் நின்று கொண்டானென்றால் வாயிலிருந்து ஜலநீர் ஒழுகிக் கொண்டேயிருக்கும்.

இப்படி சிலமுறை புகை பிடித்து ஜலநீர் ஒழுகினான் என்றால் அந்த நீரில் வெள்ளை நிற சின்ன புழுக்கள் பல்லிலிருந்து வெளியே வந்து விழுந்து துள்ளும். பற்களின் துவாரங்களில் அரித்துக் கொண்டிருக்கும் புழுக்களுக்கு அந்தப் புகை ஒத்துக் கொள்ளாது. பல்லுவலிக்காரன் நிம்மதியாய் அந்த இடத்திலிருந்து பழனிச்சாமிக்கு கோவில் கட்டாத குறையாக கும்பிடு போட்டு விட்டு செல்வான்.

அடுத்து காமாலைக்காரர்கள். அவர்களில் ஒருவரை வீட்டின்

திண்ணையில் படுக்க வைத்து கையில் மூலிகைத் தலை ஒன்றை உள்ளாங்கையில் வைத்து உருட்டிக் கொண்டே இருப்பார். பக்குவம் வந்து தலைகள் பந்து போல ஆனதும் படுத்திருந்தவன் கால்களை ஒருவனும் தோள்சப்பையை ஒருவனும் நன்றாக அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். இவர் நேம்பாக அருகில் வந்து நோயாளியின் ஒரு கண்ணை விரித்துப் பிடித்து சாறு பிழிந்து விடுவார். நோயாளி கண்ணில் தீ விழுந்து விட்டதோ என்று அலறுவான். இரண்டு நிமிடம் கழித்து இரண்டாவது கண்ணிலும் பிழிவார். அவ்வளவு தான் காமாலை. தண்ணி மட்டும் ஒரு வாரத்துக்கு போடாதே என்று சொல்லி தாட்டி விடுவார்.

வெளியே வந்த மாரனின் வழுவு ஆட்கள் ரெண்டு மணிநேரம் இருந்து பார்த்துட்டே போயிடலாம் மாமா! என்றே சொன்னார்கள். நேரமும் மாலை மூன்றாகியிருந்தது. அவர்களுக்கு பயமெல்லாம் ஒவ்வொருவர் முகத்திலும் இருந்தது. ஆனால் வள்ளிக்கு சுத்தமாய் வெத்திலை காட்டி விட்டது. ஆள் நகரப்போவதில்லை என. அவள் அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை.

நாம பாக்குற நேரத்துல போயிட்டு வந்து உக்காந்திருந்தான்னா என்ன பண்றது? என்றொருவன் சந்தேகம் கேட்டான். தொய்யத்தோட்டம் பாலான் நெம்பருக்கு கூப்பிட்டார்கள் செல்போனில். அது சுட்ச் ஆப் என்றது. இவனொருத்தன் போனை என்னாத்துக்கு வெச்சிருக்கான்னு தெரியில. ஊரு பூராம் கடன வாங்கீட்டு கடன் குடுத்தவன் தொந்தரவுக்கு போனை ஆப் பண்ணி வெச்சிருக்கான்! என்று முனகினார்கள்.

அதே ஊர் கீரிப்பிள்ளை நெம்பரை யாரோ அடிக்கச் சொன்னார்கள். கீரிப்பிள்ளை போனை எடுத்தான். அவனுக்கு காது கொஞ்சம் மந்தம் என்று பேசினவனுக்கு தெரியாது. இவன் ஒன்று கேட்க அவன் ஒன்று சொல்லிக் கொண்டிருந்தான். சலித்துப் போய் விட்டார்கள் விசயத்தை. நேரிலேயே போய் கேட்டுக் கொள்ளலாமென. அவர்கள் இரண்டு மணி நேரம் கழித்து இன்னொருமுறை பார்த்த போது கலியன் இடத்தை விட்டு நகரவேயில்லை என்றார் பழனிச்சாமி. கும்பல் ஊருக்கு கிளம்பியது. கொளத்துப்பாளையம் ஊரே கலியன் காணாமல் போன விசயத்தையே பேசிக் கொண்டிருந்தது.

வாசலில் வழுவுச்சனம் குமிந்து கிடப்பது கண்டு வடிவுக்கரசி தான் முதலில் வந்து என்ன ஏதென அவர்களை விசாரித்தாள். அவர்களுக்கு அப்பா குளித்துக் கொண்டிருக்கும் தகவலை சொன்னவள்

கலியனுக்காக வருத்தப் பட்டாள். வேலுச்சாமிக் கவுண்டர் குளித்து வேட்டி துண்டோடு வந்த நேரத்தில் பொன்னுச்சாமிக் கவுண்டரும் டிவியெஸ்சில் வந்திறங்கினார்.

"வாங்க பங்காளி. எம்பட ஊட்டு வாசல்ல ஒறம்பரைக வந்தது உங்க காதுக்கும் எட்டீடுச்சா?" என்றார் வேலுச்சாமிக் கவுண்டர். அவர் ஒறம்பரை என்று சொன்னது வழுவுக்காரர்களைத்தான்.

"ஏம் பங்காளி கேக்கறீங்க தொந்தரவை! ரெண்டு நாளா ஆளக்காணம் ஆளக்காணமுன்னு ஒரே ரச்சை தான் போங்க. என்னதான் பண்றது அந்த எழவெடுத்தவனோட? போலீசுக்கு தகவலை சொல்லப்போலாமுங்கறான் ஒருத்தன். இன்னொருத்தன் மில்ட்ரிக்கே போலாமுங்கறான். இன்னொருத்தன் சிபிசிஐடி ஆபீசருகிட்ட போகணுமுங்கறான். என்னென்ன பேசறானுகங்கறீங்க! நான் போறவன் காசை மடியில முடிஞ்சுட்டு போங்கடான்னுட்டேன். என்னத்த சொல்ல? எல்லாம் இவனுகளுக்கு தெரிஞ்சிட்ட மாதிரி பேசுறானுக. ஒருத்தன் கலியன் செத்துட்டானுங்கறான். கொன்னு போட்டாங்கன்னு சொல்றான் ஒருத்தன். பைத்தியம் எனக்கு புடிச்சுடுமாட்ட இருக்குது ஊருல ஒருத்தனை காணமுன்னா" என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

"ஆமாம் பங்காளி இவங்க நம்மளைய வீணா கொன்னு போடுவானுக அலைய உட்டு. செரி என்னன்னு கேளுங்க அவங்க கிட்ட! வந்துட்டீங்க"

"நம்மூருக்கு ஒரு நாளும் போலீசு வந்தே இல்லையின்னு இவனுகளுக்கும் தெரியும். நாம நமக்குள்ள பிரச்சனைகளை எதா இருந்தாலும் தீத்துக்கறோம். புதுசா போலீசுன்னு சொன்னா போகட்டும். அவங்களே கண்டுபுடிக்கட்டும் கலியனை. நமக்கென்ன நாம நம்ம சோலிய பாக்க போக வேண்டிது தான்"

"என்னுங்கோ இப்புடி சொல்லிட்டீங்க கவுண்டரே ஒரே போடா! நான் எப்பங்க அப்புடி உங்ககிட்ட சொன்னேன். இந்த வங்கு வலசலுக எதாச்சிம் சினிமா பாத்துட்டு பேசியிருக்கும். அதப்போயி பெருசா சொல்லிட்டு இருக்கீங்களே" என்றான் மாரன் முன்னால் வந்து நின்று.

"சிபிசிஐடின்னா என்னன்னு தெரியுமாடா உங்களுக்கு? எனக்கே ஒரு பேரெழவும் தெரியாது. காலம் ஓடிப்போச்சு ஊருக்குள்ள. இனி எம்மட பசங்களை உட்டுத்தான் உங்களுக்கு நாயம் சொல்லச் சொல்லோணும். அப்பத்தான் செரியா இருக்கும்" என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“அதை உடுங்க கவுண்டரே! நேத்து வெத்தலைல மை போட்டு பார்த்துட்டு வந்தமுங்க கீரனூரு போயி”

“ஒருத்தனும் எனக்கு சொல்லுலியா அதை. அந்த பழனிச்சாமி செரியாச் சொல்லிடுவானே!”

“சாமத்துல தானுங்க எல்லாரும் வந்து சேர்ந்தோம். அதான் என்ன பண்றதுன்னு பெரிய கவுண்டருகிட்ட ஒரு வார்த்தை கேக்கலாமுன்னு வந்து நின்னோம். சரியா நீங்களும் வந்துட்டீங்க. அவன் வடக்க மூனு மைலுக்குள்ள தான் இருக்கானுங்களாமா! ஆனா ஒரே கெடையில இருக்கான். அதான் ஏன்னு தெரியில வெத்தலைல”

“வடக்கென்னா சாலப்பாளையம் தாண்டா இருக்குது ஊரு. அங்க எங்க போயி ஒரே கெடையில உக்காந்திருக்கான் அவன்?”

“இல்லீங்க ஊருக்கு நேர் வடக்கைன்னு சொன்னாருங்க”

“மலங்கரடு தான் இருக்குது. அதுக்குத்தான் உங்காளு பாரஸ்ட் ஆபீசர வரச் சொல்றதுக்கு மில்ட்ரிய வரச் சொல்லணுமுன்னு சொன்னானா? உள்ள நாம போகக் கூடாதுடா. மானுக, மயிலுக சுத்துதுக. அதை போட்டுத்தள்ள சுத்துறோமுன்னு புடிச்சுக் கொண்டி உள்ளார போட்டுருவாங்க”

“ஆனா உறுதியா சொல்லிட்டாருங்களே! நீங்க சொல்லுங்க என்ன பண்ணலாமுன்னு இவனால எனக்கு ஒவுத்தினியத்தை பாருங்க” என்றான் மாரன். வெகு காலமாய் சண்டையாய் இருந்த அவன் அண்ணங்காரனும் கூட்டத்தில் அவனுக்கருகில் நின்றிருந்தான்.

“அந்த பெல்லா டீச்சரோட அண்ணங்காரன் ஒருத்தன் சென்னிமலையில பாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட்டுல தான இருக்கான். அவனுக்கு தகவலை சொல்லி கூப்புடுங்க யாராச்சிம். மாரா உங்காளு ஒருத்தன பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அந்தப் பிள்ளை கிட்ட சொல்லி அண்ணங்காரனை இங்க வரச்சொல்லி சொல்லிடு” என்றார் வேலுச்சாமிக் கவுண்டரும் தன் பங்குக்கு. அதைக் கேட்டதுமே இளவட்டம் ஒருவன் தன் டிவியெஸ்சை கிளப்பிக் கொண்டு சென்றான்.

“ஏனுங் அவிங்க வந்தா எதாச்சிம் ஆயிடாதுங்களா?” என்றான் மாரன்.

“ஒன்னும் ஆவாது நீ சும்மாயிரு எல்லாம் அவங்கிட்ட நான் பேசிக்கறேன். சரி இத்தினி பேரு எதுக்கு ஒட்டுக்கா வந்திருக்கீங்க? பொம்பளைப்பிள்ளங்க கரட்டுக்குள்ள எதுக்கு? எண்ணி வெச்சமாதிரி ஒரு பத்துப்பேரு போனாப் போதும்ல. ஏனுங் பங்காளி நீங்க என்ன

சொல்றீங்க?” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“ஆளைப்போயி கூட்டியாறதுக்கு இனி ஊரே போவணுமா?” என்றார் வேலுச்சாமிக் கவுண்டரும்.

“கூட்டியாறதா தூக்கீட்டு வர்றதான்னு ஆருக்குங்க தெரியும்? போயி பாத்தாத்தான நெசம்? சும்மா வெத்தலைல பாத்துட்டு குருட்டுத்தனமா நம்பீட்டு போறோம்.” கூட்டத்திலிருந்து வழுவு ஆள் ஒருத்தன் முனகினான். அவன் சொன்னதை யாரும் கண்டு கொள்ளவில்லை. ஆனால் வேலுச்சாமிக் கவுண்டர் ஆளை கண்டு கொண்டார்.

“யார்றா சுப்பான் பையனா? வாய்க்கொழுப்பு ஜாஸ்திடோய் உனக்கு. பின்ன எதுக்குடா கீரனூரு போனீங்க? வெத்தலையோ கித்தலையோ ஒன்னு சொன்னா அத நம்பிட்டு தான போறோம். பின்ன ரெண்டு நாள் ஊரு பூராம் அலசுனீங்கள்ல எவனாச்சிம் தகவல் சொன்னானாடா இவத்திக்கி இருக்கான்னு?” என்றார்.

“நீங்க தான் அவனை இத்தன வருசமா தோட்டத்துல வச்சிருந்தீங்க. திடீருன்னு பத்து நாளைக்கி முன்னால அவனை வரவேண்டாமுன்னு போவச் சொல்லிட்டீங்க. என்ன காரணமுன்னு வேண்டாம்?” என்றான் சுப்பன் பையன் மாரி.

“அவன் என்ன பண்ணனான்னு சொல்லனுமா நானு? அதை நீயா கேக்கியா இல்ல மாரன் கேக்கச் சொன்னானா?”

“நானெங்கீங்க கவுண்டரே இந்த பொடியாங்கிட்ட கேக்கச் சொல்றேன். எனக்கு எம்பட பையனப் பத்தி தெரியாதுங்களா பூலவாக்கு!” என்றான் மாரன்.

“ஒரு நாளைக்கி காட்டு வேளைக்கி அவனுக்கு நான் எரநூறு ரூவா குடுத்து வச்சிட்டிருந்தேன். சம்சாரமும் வந்தாச்சு நூறு சேத்திக் குடுங்கன்னான். இங்கென்ன வெள்ளாமை வெளையுதா எடுத்து அவுக்க? மழையுமில்ல கெணத்துல தண்ணியுமில்ல. பொம்பளைக நாலுபேருக்கு வேலை குடுக்கவே வேலையக் காணம். அவங்களுக்கு நூத்தம்பது குடுக்கேன். சேரி உங்கொப்பங்கூட திருப்பூரு பக்கம் போடா நீ கேக்குற சம்பளம் போன சுடியில தருவாங்க அப்படின்னேன். வேற என்ன? அவன் சேரீங்க கவுண்டரேன்னுட்டு போயிட்டான். என்னமோ நான் முடுக்கியுட்ட மாதிரி பேசுறே?” வேலுச்சாமிக் கவுண்டர் சென்னிமலையில் குடோனில் இருந்து வாங்கி வந்த காசில் கொஞ்சம் ஆட்டையைப் போட்டு விட்டான் என்று தான் சொல்ல நினைத்து விசயத்தை மாற்றிக் கொண்டார்.

கவுண்டர் சொல்லிவிட்டு சுப்பன் பையனைப் பார்த்தார். அவன் அதற்கு ஒன்றும் சொல்லாமல் குனிந்து நின்று கொண்டிருந்தான். மாரனுக்கே கலியன் வீட்டில் கிடக்க என்ன காரணமென்று இப்போது கவுண்டர் சொன்ன பிறகு தான் தெரிந்தது. சும்மா வீட்டில் கிடந்தால் ஆயிரத்தெட்டு யோசனை வரத்தான் செய்யும். இந்த மாதிரி திருப்பூரு கூட வர்றேன்னு சொல்லி காரேறியிருந்தான்னா கூட பரவாயில்லியே! கொஞ்சத்தான சம்பளமா காரெ வேலைக்கி? அவனவன் பில்டிங் மேல பில்டிங் கட்டிட்டே இருக்கான்! என்று நினைத்தான்.

“அவனை என்ன வேலைக்காரன் மாதிரியா நான் வெச்சிருந்தேன்? ஏன் எல்லாருக்குமே தெரியுமே! டிவியெஸ் ஒன்னை கையில குடுத்து அவன் வண்டியாட்டவே ஓட்டிட்டு இருந்தான். ஒரு நாளு ஏண்டா அதைச் செய்யலைன்னு சொல்லியிருப்பனா? கேளேன் பொடுசா நிக்காள்ல உன் கூட?” கவுண்டர் அவர்பாட்டுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

“அதை உடுங்க கவுண்டரே நீங்க. பொடியான் கேட்டான்னு சொல்லிட்டு”

“இல்லீடா மாரா! என்னைய யாரும் குத்தஞ்சொல்லப்படாதுன்னு சொல்றேன். பாரேன் எனக்கு வந்த காலக்கொடுமைய! அவனா சம்பளம் எச்சு கேட்டு அவனா போனதுக்கு பதிலு சொல்லீட்டு இருக்கேன். இனி காட்டுல எதுக்கு நாலு பொம்பள பிள்ளைகளுக்கு வேலை குடுக்கறீங்க கவுண்டரேன்னு கூட கேப்பீங்கடா. பூனை கொஞ்சம் எளச்சுப்போச்சுன்னு வெச்சுக்கங்க எலி வா போலாம்னு சொல்லுமாம். பங்காளி இவனுக கேள்வி கேக்கறானுக பங்காளி. இது ஆவாது வீணா நாயம் சொல்லீட்டு என்ன மதிப்பு வந்துரும் நமக்கு? போலீசுக்கு போவச் சொல்லீருங்க பங்காளி! எம்பட காட்டுல வேல செய்ய இஷ்டமிருக்கறவங்க வாங்க இல்லீன்னா போங்க. என்னால முடிஞ்சா நாம் பாத்துக்கறேன். இல்லீன்னா எதாச்சிம் பண்டிக்கறேன்” என்றார்.

கவுண்டர் ஏனோ கோபமாகி விட்டார் என்று பொடுசாளும், குஞ்சாளும் வாயைத் திறந்தனர்.

“இதென்ன அலும்பா இருக்குது உங்ககோட! மாரி கேட்டதுக்கு நாங்க என்ன பண்டுனோம்? இஷ்டமிருந்தா வாங்கன்னு எங்களை சொல்றீங்க? எங்கியோ போறதைக் கொண்டாந்து எங்க மேல உட்டா எப்படிங்க கவுண்டரே?”

“நாளைக்கி ஒன்னுன்னா நாலு பேருக்கு முன்னால அதெப்படிங்,

இதெப்படிங் அப்படின்னு கேக்க மாட்டீங்கன்னு என்ன நிச்சயம்?. இவன் திருப்பூரு வேலைக்கி போறான்னா நான் போயி போக வேண்டாம் எம்பட தோட்டத்துக்கு வாடான்னு நின்னனா? இல்ல எம் பங்காளிகிட்ட வயசுல மாரனும் தான் வேலை செஞ்சான். அவனா கூலி கட்டுபடியாவாதுன்னு போனான். அதுக்காவ எம் பங்காளி தான் போயி வந்தே ஆகணுமுன்னு சொன்னானா?” என்றார். பிரச்சனை வேறு பாதையில் சென்று கொண்டிருப்பதை கவனித்துத் தான் பொன்னுச்சாமிக் கவுண்டரும் அமர்ந்திருந்தார்.

அவருக்கு அதில் சொல்ல ஒன்றுமில்லாமலிருந்தது. அவர் கிணற்றிலும் தான் தண்ணீர் கீழே போய் விட்டது. வர வேண்டிய மழை ஏமாற்றிப் போய் விடுகிறது. கூலிக்கு வலுவிலிருந்து அவருக்கும் இரண்டு பெண்கள் தான் வந்து போகிறார்கள். ஆம்பிளையாள் இல்லை. இப்படி மழை பொய்த்தால் வரும் பெண்களையும் வேண்டாமென சொல்ல நேரிடும். அவர்களுக்கு வாரமானால் சம்பளத்தை எங்கிருந்து கொடுக்க முடியும்?

முன்பு ஐந்து தட்டுப்போர்கள் போடுவார்கள். மாடுகளுக்கு தீனிக்கி என்று ஒரு போரை மட்டும் வைத்துக் கொண்டு வெளியில் விற்று விடுவார்கள். இன்று இரண்டு போர்கள் தான் வருடம் கூடி விழுகிறது. அதுவும் இவரின் பண்டம்பாடிகளுக்கே தீனியாகி விடுகிறது. தீனி போட்டு கட்டுபடியாகாமல் அடிமாட்டு விலைக்கு வைத்திருந்தவர்களெல்லாம் விற்றுக் கொண்டிருந்தார்கள். ஊரில் இருக்கும் பால் சொசைட்டி நான்கைந்து காட்டுக்காரர்களை நம்பி இருக்கிறது. இன்னும் கிழக்கே போகப் போக பால் சொசைட்டிகளே இல்லை என்றாகி விட்டது.

சமயத்தில் தோட்டத்தினுள் புல்லட் ஒன்று தட தடத்து உள்ளே வரவும் இவர்கள் கசகசப்பு பேச்சை நிறுத்தினார்கள். பெல்லா டீச்சரின் அண்ணன் ஜான்சன் தான் கம்பீரமாய் சற்று தூரத்திலேயே வண்டியை நிப்பாட்டி விட்டு கெத்தாய் வந்தான். முன்பு கேவலப்பட்டு போன ஊரல்லவா! ஆனால் அவனுக்கு வேலுச்சாமிக் கவுண்டர் மீது மதிப்பு இருந்தது. அவன் யூனிபார்மில் இருந்தான். தலைக்கு வெய்யலுக்கு காக்கி கலரிலேயே தொப்பி அணிந்திருந்தான். வந்தவன் கவுண்டர்கள் இருவருக்குமே வணக்கம் வைத்தான்.

இன்னொரு சேரை எடுத்துவர குரல் கொடுத்தார் வீட்டைப்பார்த்து கவுண்டர். தோ வர்றேன்பா! என்று குரல் வந்தது. அதை வடிவுக்கரசி கொண்டு வந்து போடவும் ஜான்சன் அதில் அமர்ந்தான். தொப்பியை

கையில் எடுத்துக் கொண்டு அவன் எதிரே நிற்பவர்களைப் பார்த்து, ‘யாரு பையனைக் காணோம்?’ என்றான். மாரன் தான் முன்னால் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு காக்கி உடையைப் பார்த்தாலே பயம் வேறு வந்து விடும்.

“சார் எம்பட பையனைத்தானுங்க காணம்” என்றான்.

“சரி பாரெஸ்டுக்குள்ள இருக்கான்னு யாரு சொன்னது? வெப்பன்ஸ் கீது வெச்சுட்டு சுத்தீட்டு இருக்கானோ என்னமோ? எதுக்கும் ஈரோட்டுக்கு தகவல் கொடுக்கணும் நான்” என்றதும் வேலுச்சாமிக் கவுண்டர் இடையில் புகுந்தார்.

“தம்பி உன்னைய வரச் சொன்னது பாரஸ்டுக்குள்ள போயி அவனை தேடத்தான். வெத்தலைல மை தடவிப் பார்த்ததுல வடக்க இருக்கான்னு இவங்க சொல்றாங்க. முன்னெல்லாம் கரடு சும்மா கேப்பாரத்துத் தான் கிடந்துது. இப்பவும் அப்படித்தான் இருக்கு. பத்துப்பேரு ஒன்னா கரட்டுக்குள்ள போனா வேட்டையாட போறாங்கன்னு தப்பா நெனச்சிக்க கூடாதுன்னு உன்னிய வர வெச்சோம். வடபக்கம் கரட்டுல தான் ஆடுகள மேய்க்க யாரும் போக்க் கூடாதுன்னு சொல்லிட்டாங்க!

இங்க பாத்தீன்னா நாலு சின்னச் சின்ன குன்றுக தான் இருக்குது. எல்லாம் கிலுவை மரமும் கள்ளியும் தான் கெடக்குது. வடக்க குமரன் மலையிலிருந்து எடுத்துட்டீன்னா அப்படியே சிறுசு சிறுசா வருது. காட்டுப்பாளையத்தோட முடிஞ்சிடுது. அந்தப்பக்கம் பாரஸ்ட்டு கார்டு இருக்காப்ல. ஆனா பழக்கமில்ல. உன்னைய தெரியுங்கறதால எதுக்கும் வரச் சொன்னேன்.” என்றார் வேலுச்சாமிக் கவுண்டர்.

“எனக்கு சம்மந்தமான இடம் சென்னிமலைக் கரடுதான். நான் இங்க உள்ள வரக் கூடாது. ஆனா நீங்க கூப்பிடறீங்க உங்க சேப்டிக்கி வர்றேன். நான் இல்லீன்னாலும் நீங்க உள்ளூர்க்காரங்க உள்ள போய் வரலாம். வேட்டையாட போறது, வேலியில மொசலுக்கு கம்பிக்கண்ணி கட்டுறது இதெல்லாம் தான் தப்பு. ஏன்னா கண்ணில மயிலுக சிக்கிக்கும். கையில ஆயுதம் எதும் இருக்க கூடாது. காணாமப் போனவனைப் பத்தி சென்னிமலை ஸ்டேசனுக்கு தகவல் குடுத்துட்டீங்களா?” என்றான் ஜான்சன்.

“இந்த ஊருக்குள்ள போலீஸ் வந்ததே கிடையாது ஒரு காலத்திலியும்”

“சேரி அப்ப வெய்யல் ஏறிட்டு இருக்கு புறப்படுங்க போலாம்.” என்று எழுந்தான் ஜான்சன். பொன்னுச்சாமிக் கவுண்டரும் எழுந்தார்.

“பங்காளி போயி மேலுக்கு துணி போட்டுட்டு வரலாம்ல!” என்றார்.

“அது கெடக்குது பங்காளி நாம சுத்தாத எடமா! துண்டு இருக்குது போதும் நட” என்று செருப்பை தொட்டுக் கொண்டார். வழுவு ஆட்கள் பத்துப்பேர் கூட வந்தார்கள். பெண்கள் அப்படியே வழுவுக்குச் செல்லும் பாதையில் திரும்பி விட்டார்கள். வள்ளிக்கு விசயம் புரிந்து போனமையால் அவளும் அவர்களோடு செல்லாமல் வழுவிற்கே மற்ற பெண்களோடு சென்றாள்.

அவளுக்கு கலியன் என்னவானான் என்பது வெத்திலையில் பார்த்த போதே தெரிந்தது. அதை மை போட்டுக் காட்டியவருக்கும் தெரிந்தே இருக்கும். ஆனால் அவர் எதையும் இவர்களுக்கு உறுதியாக சொல்லி அனுப்பவில்லை. இத்தனை துக்கத்திலும் அவளுக்கு அழத் தோன்றவே இல்லை. அவள் இந்த ஊருக்கு கலியன் ஒருவனை நம்பி மட்டுமே வாழ்க்கைப்பட்டு வந்தாள். அதற்காக அவனை முழுதாக நம்பினாள். அவனை அவளுக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. வடக்கே செல்பவர்களை ஒரு கணம் நின்று பார்த்து விட்டு வழுவுக்கு செல்லும் பாதையில் சென்றாள். அவள் மாமியாள் கூட்டத்தோடு முன்னே போயிருந்தாள்.

கலியனும் தன்னைப் போல யாராவது ஒருத்தியிடம் காதலில் கிடந்திருப்பான் காட்டுக்குள் என்றுதான் நினைத்திருந்தாள் வள்ளி. ஆனால் அவன் அப்படியல்ல என்பது முதலிரவில் அவனது கூச்சத்தையும் வெட்கத்தையும் அந்த இருளுக்குள்ளேயே கண்டு இவளுக்குத்தான் வெட்கமாய் இருந்தது. அவனுக்கு அந்த விசயத்தில் எதுவும் தெரிந்திருக்கவில்லை. தெரிந்து கொண்டதும் ருசிகண்ட பூனையாகி விட்டான். புது வட்டிலைக் கண்டவன் ஏழு வட்டல் சோறு தின்ன கதையாயிற்று. ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள் என்பது அவன் விசயத்தில் சரியான கணக்காய் மாறி விட கவுண்டர் ஏற்பாடு செய்து விட்டார்.

வீடு வந்த வள்ளியிடம் அவள் மாமியாள் பொன்னுச்சாமிக் கவுண்டர் தோட்டம் வரை போய் கவுண்டிச்சியை ஒரு எட்டு பார்த்து வருவதாக சொல்லிவிட்டு கிளம்பினாள். இவள் தலையை ஆட்டி விட்டு வந்து பாயை விரித்து விழுந்தாள். அவளுக்கு இந்த பத்து நாளாகவே பசி எடுப்பதேயில்லை. மகிழ்ச்சியாய் சென்று கொண்டிருக்கையில் யார் கண்பட்டதோ இவளுக்கு துக்கமாய் விடிய இவளே காரணமாகி விட்டாள். ஆம் அவள் தான் கலியனிடம் விசயத்தை சொன்னவள். அது அப்படித்தான் நடந்தது அன்று!

கலியன் அன்று வெளி வேலையாய் மாலையில் சென்னிமலை

சென்றிருந்தான். அதற்கும் பிறகு ராசாமணி தான் இவளை வாழைத்தோட்டத்திற்கு தண்ணி பாய்ச்ச கற்றுத்தருவதாய் கூட்டிப் போனாள். மோட்டார் சுவிட்ச் போடுவதிலிருந்து கற்றுக் கொடுத்தவள் மம்பட்டியுடன் பாத்தியில் வரும் தண்ணீரை வழிமறித்து மடக்கி செட்டு செட்டாக வாழைகளுக்கு பாயவிட்டு பாய்ந்தபின் அதை அடைத்து அடுத்த வாழை செட்டுக்கு அடைப்பை திறந்து விட்டாள். இப்படி கடைசி வரை பாய்ச்சி விட்டு சிவப்பு பட்டனை மோட்டார் ரூமில் அழுத்தினால் தண்ணி நின்று விடுமென சொல்லி விட்டு போய் விட்டாள்.

கரூரில் திருட கொளத்துப்பாளையத்திலிருந்தே பம்மி வருவது போல வேலுச்சாமிக் கவுண்டர் பம்மிப் பம்மி வாழைத்தோப்புக்கு ராசாமணி சிக்னல் கொடுத்தபிறகு வந்தார். அவருக்கு வள்ளியை இன்று எப்படியேனும் அமுத்தி கைக்குள் போட்டுக் கொள்ள வேண்டுமென்று நினைப்பாகி விட்டது. வள்ளி பலமுறை இவர் விருப்பத்தை அறிந்திருந்தும் நழுவிக் கொண்டே இருப்பது கூட அவருக்குள் ஆசையை தூண்டி விட்டிருந்தது.அதற்கான வாகான நாளாய் அமைத்துக் கொள்ள பலநாள் காத்திருந்தார்.

கவுண்டர் வேட்டியை தூக்கிக் கட்டிக் கொண்டு பாத்தித் தண்ணீரில் சளப் சளப்பென நடந்தபடி வந்தார். வள்ளி கிழக்கே இருந்தாள். சேலையையும் பாவாடையையும் மேலே தூக்கி வயிற்றுப் புறத்தில் செருகல் போட்டிருந்தாள். அவளின் கெண்டைக்கால் சதையில் பச்சை நரம்பு ஓடுவதை கண்ட கவுண்டருக்கு காதுகள் அடைத்துக் கொண்டன. அவள் குனிந்த வாக்கில் கிழக்கு பார்த்து மடையை மாற்றிக் கொண்டிருந்தாள் மம்பட்டியால். இவர் தாக்குப் பிடிக்க முடியாமல் போய் பின்புறமாய் அவளை கட்டிக் கொண்டார்.

வள்ளிக்கு ஒருகணம் எதுவும் செய்யத் தோன்றவில்லை. அது அவளுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. அவரின் ஒரு கை அவளின் குட்டி மார்புகளை சேலையோடு சேர்த்து இறுக்கிப் பிடித்திருந்தது. இன்னொரு கை அவளின் வயிற்றை கவ்விப்பிடித்திருக்க அப்படியே தூக்கிப் போய் தண்ணீர் பாயாத பெரிய பாத்தியில் கிடத்த முயன்றார். அவள் கிடப்பேனா என்று பின்னால் இவரை காலால் உந்தி பொறவுக்கு விழச் செய்ய தம் கட்டி முக்கினாள். கவுண்டர் இந்த குள்ளச்சியிடம் இத்தனை சக்தி இருக்குமென நினைக்கவேயில்லை. அவளின் முக்கல் சத்தம் தோட்டத்தினுள் தனியே கேட்டது.

பெண் எதிராளி போராடினால் கவுண்டருக்கு தன்னப்போல் காமம்

உச்சமாகிவிடும் என்பதை பெல்லா வீட்டினுள்ளேயே அனுபவித்து விட்டவராகையால் வள்ளியின் போராட்டத்தை ரசித்து அனுபவித்து ஒரே தூக்காகத் தூக்கி கீழே கிடத்தினார். வள்ளி காலால் அவருக்கு உதை விட்டாள். அதற்குத் தனியாக அவளின் கன்னத்தில் ஒரு சப்பென ஒன்று வீசினார் கவுண்டர். அவள் இவரைத் தள்ளி விட்டு எழுந்து ஓடுவதிலேயே குறியாய் இருந்தாள். ஆனால் அவள் இவர் எதிர்பார்த்த மாதிரி எந்த பேச்சையும் பேசவில்லை! வெறும் திமிறான முக்கல் மட்டும் தான் அவளிடமிருந்து வந்தது.

கவுண்டருக்கு தோதான சமயம் ஒன்றில் அவள் மேல் அப்படியே படர்ந்தார். அவள் திடீரென கவுண்டரின் கிச்சில் கையை விட்டு கிச்சுக் கிச்சு மூட்டினாள். கவுண்டருக்கு குறுகுறுப்பு ஆரம்பிக்க சிரிப்பு வந்து விட்டது. பிடி கொஞ்சம் அழுத்தம் குறைந்ததும் கவுண்டரை தன் மேலிருந்து அவள் வலதுபுறமாய் உருட்டி விட்டாள்.

“இப்பிடியா புடிப்பாங்க. ஏனுங்க கவுண்டரே! மனுசீன்னு நெனச்சீங்களா எருமைன்னு நெனச்சீங்களா என்னை? ஆசையா இருந்தா சொல்றதுக்கென்னங்க வந்துச்சி? போட்டு இந்தப் பெசை பெசஞ்சா இதுக என்னத்துக்காகும்?” என்றபோது ஏதோ திட்டம் போட்டு நழுவப் பார்க்கிறாள் என்று உணர்ந்த கவுண்டர் மீண்டும் அவளை இழுத்து தன் மேல் கிடத்த முயன்றார்.

“இப்பத்தான சொன்னேன் காதுல ஏறுலீங்களா? நானு மூனு மாசம் லோடாயிருக்கேன். போட்டு காட்டுவாக்குல பெறட்டுனீங்கன்னா கலஞ்சு போச்சுன்னா வம்பாப் போயிரும். உங்களுக்கென்ன மசமசன்னு பண்ணீருவீங்க. எவனால ஆகும் பதிலு சொல்ல எம்பட மாமியாகாரிக்கி? எம்பட ஊட்டுக்காரனே விசயம் தெரிஞ்சதீம் மேல படுக்காம ரெண்டு கையையும் ஊனி பாத்துக்கறான்” என்றவள் தன் சேலையை உறுவி கீழே விரித்தாள். தன் ஜாக்கெட்டையும், பாவாடையையும் கழற்றி தலைக்கி வைத்துக் கொண்டு கீழே படுத்தவள், ’வாங்க இப்ப’ என்றாள்.

கவுண்டர் அவளின் நிர்வாணத்தை ரசித்தார். கிட்டே நெருங்கி அணைத்தார். அவளின் மார்பகங்களை பிடித்தார். அவருக்கு காமம் அவள் அவிழ்த்த போதே துவண்டு போய் விட்டது. இருந்தும் ஏமாற்றமாய் தோல்வியில் திரும்பி விடக் கூடாதென அவள் உடலை தடவித் தடவிப் பார்த்து தோற்றார். அவருக்கு தன் மீதே கோபமாய் வந்தது. கையாளாகாத நாய் என்று மனதிற்குள் திட்டிக் கொண்டார்.

“என்னங்க கவுண்டரே பொம்பளை ஒடம்பை முன்னப் பின்ன

பாத்ததே இல்லாத மாதிரி சும்மா நீவி உட்டுக்கிட்டு இருக்கீங்க. சீக்கிரம் சோலியப் பாப்பீங்களா அதையுட்டுட்டு” என்றாள் வள்ளி.

“இப்பென்ன உனக்கு அவசரமாடி வன்னான் ஆட்டுத்தலைக்கி பறந்த மாதிரி பறக்குறே? இதெல்லா நெதானமாத்தான் பண்டோணும்”

“யாரு பறந்தாங்க இங்க! என்னமோ நாங் காங்காததாட்டம் பேசுறீங்க?”

“சேரியாயா நீ எம் மேல உக்காந்துக்க”

“நானெதுக்கு உங்க மேல உக்காந்துக்கோணும்?”

“சேரி இதைக் கொஞ்சம் புடி” என்று இவளின் கையை இழுத்தார் கவுண்டர். அவர் நிஜமாகவே அவளிடம் தோற்றுத்தான் போனார். நைச்சியம் பண்டி காரியம் சாதித்துக் கொள்ளப் பார்த்தார்.

“இதென்ன அலும்பா இருக்குது உங்ககூட? நானெல்லாம் ஒன்னையும் புடிக்க மாட்டேன். ஆளப்பாருங்க சோளக்காட்டுல! நாங்களே ரெடி பண்ணிக்கோணுமாமா நாங்களே பாத்துக்கோணுமாமா? எந்தூர்ல இப்படி நடக்குது? பொக்கே!” என்றவள் நீவிக்கொண்டிருந்த் அவரின் கையை தள்ளி விட்டு விட்டு எழுந்து பாவாடையை கட்டிக் கொண்டாள். ஜாக்கெட்டையும் போட்டுக் கொண்டவள், ‘எந்திரிங்க மேலே எம்பட சேலையை எடுக்கணும்’ என்றாள். கவுண்டர் நெகுந்து உட்கார்ந்து கொண்டார்.

வள்ளி சேலையை கட்டிக்கொண்டாள். கவுண்டர் மெதுவாய் எழுந்து வாழைத்தோப்பில் வந்த வழியே சென்றார். வந்த போது இருந்த கொண்டாட்ட மனம் இப்போது அவரிடம் இல்லை. பொக்கே! என்றாள் வள்ளி மீண்டும். மம்பட்டியை எடுத்துக் கொண்டு கிழக்கே நடந்தாள். கவுண்டருக்கு தோற்றுப்போனது வெட்கமாயும், வேதனையாயும் இருந்தது.

இனி இந்த வேலையை குறைத்துக் கொள்ள வேண்டும். இனி இவளைப் பார்க்கும் சமயமெல்லாம் என்னவோ சத்தமிட்டாளே பொக்கே! என்று! அது ஞாவகம் வரும். கேவலம் தான். முடியாததற்கு என்ன செய்வது? கருமம் அரமாலுமே முடியாமல் போய்த் தொலைந்து விட்டாலாவது போயிச்சாட்டாது என்று விட்டு விடலாம். இவளுகளை ஒரு தினுசாய் பார்த்துத் தொலைத்தால் நினைப்பு வந்து விடுகிறதே! நினைப்பை செருப்பால் தான் அடிக்க வேண்டும் இனி! கவுண்டர் வாழைத்தோட்டத்து கடவில் முட்டி நடந்தார்.

வள்ளிக்கு கவுண்டரை நினைத்தால் ஒரு விதத்தில் பாவமாயும் இருந்தது. மனுசன் ஆசையில்லாமல் வந்து தொட்டிருக்க மாட்டார். ஆனாலும் வயதாகி விட்டால் அப்படித்தான் போலுள்ளது என்று தெரிந்து கொண்டாள். ஓட்டை வாயை சும்மா வைத்துக் கொண்டிருக்காமல் அன்று இரவு கலியனிடம் விசயத்தை ஜம்பமாய் ஆரம்பித்தாள் வள்ளி.

"ஏனுங்க இன்னிக்கி நீங்க சென்னிமலை போயிட்டீங்கள்ள" கலியன் ஒரு கோட்டர் குடித்து வந்ததினால் காரியம் முடிந்ததும் சோர்ந்து போய் குப்புறக் கிடந்தான். அவள் மீண்டும் தொண தொணப்பது மீண்டும் காரியத்திற்காகத் தான் என்று நினைத்தவன் அப்படி கிடந்தான்.

"நாஞ் சொல்றதை அப்ப கேக்க மாட்டிங்களா? கவுண்டரு இருக்காருல்ல. இன்னிக்கி வாழைத் தோட்டத்துக்கு தண்ணி பாச்ச என்னை ராசாமணியை உட்டு கத்துக்குடுத்தாரு" என்றாள். வள்ளி வாழைத் தோட்டமென்றதுமே மிரண்டு காது கொடுத்தான் கலியன். அவள் நிறுத்திக் கொண்டதும், 'சொல்லு கேட்டுட்டுத் தான் இருக்கேன்' என்றான்.

"ராசாமணி அவ்வளவுதான்னு சொல்லிட்டு போயிட்டாளுங்க! அப்புறம் நானே வேலை செஞ்சிட்டு இருந்தேன் மம்புட்டி புடிச்சு. என்ன தூங்கீட்டீங்களா? ம் போட மாட்டீங்கறீங்க?"

"சொல்லு"

"பாத்தா திடீருன்னு பொறவுக்கு கவுண்டரு வந்து என்னை இறுக்கி கட்டிப்புடிச்சுட்டாரு"

"என்ன?" கலியன் அதிர்ந்து போய் பாயில் எழுந்து உட்கார்ந்தான்.

"அவரு கையை பிடிச்சு என்னால தள்ளவே முடியலங்க இரும்பாட்ட இருந்துச்சு. அப்புறம் என்னை அலேக்கா அப்படியே தூக்கி படுக்கப்போடப் பாத்தாரு. உடுவனான்னு நானு உந்தி அவரை கீழ பொறவுக்கு தள்ளிட்டேன். பொத்துனு கீழ உழுந்து இடுப்பப் புடிச்சிட்டாரு. இந்த வேலையெல்லாம் எங்கிட்ட வெச்சிக்காதீங்க கவுண்டரேன்னு சொல்லிட்டு நாம் பாட்டுக்கு வேலையப் பாத்தேன். அவரு இடுப்பை புடிச்சுட்டே நடந்துட்டு போயிட்டாரு" என்றாள்.

கலியனுக்கு அவள் சொல்வதில் நம்பிக்கையே வரவில்லை. புளுகுகிறாள் என்றே நினைத்தான். பொடுசாளை குஞ்சாளை எல்லாம் இவன் தானே வாழைத் தோட்டத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறான். கவுண்டராவது காரியம் பாக்காமல் கீழே விழுந்து வருவதாவது?

கடைசியில் அங்கே கடித்து இங்கே கடித்து அடி மடியிலேயே கை வைத்து விட்டாரே! அவனுக்கு கவுண்டர் மீது இப்போது தான் கோபமே வந்தது. இந்த ஆளை நம்பி வள்ளியை காட்டு வேலைக்கி அங்கே வரவைத்தேனே! எந்தப்பூனை கருவாட்டை வேண்டாமுன்னு போயிருக்குது?

வள்ளிக்கு ஏனோ அவன் பேசாமலிருப்பது ஏன் எனத் தெரியாமல் பாயில் கிடந்தாள். அவன் தொடையில் சின்னதாக கிள்ளி வைத்தாள். அவனோ கப்பல் முழுகி விட்ட வேதனையில் அமர்ந்திருந்தான். இவளின் கிள்ளல் அவனை எரிச்சலூட்டியது. கவுண்டர் வள்ளி மீது படுத்துக் கிடப்பதாய் நினைத்துப் பார்த்தான். வள்ளி எக்கி எக்கி கொண்டாட்டமாய் அனுபவிப்பதாயும் உடனே தோன்றவே அவனுக்கு பாட்டில் போதையெல்லாம் காணாமல் போயிருந்தது. விடியும் வரை அவனுக்கு தூக்கமே வரவில்லை.

விடிந்ததும் முதல் வேலையாக தோட்டம் சென்றவன் கட்டுத்தரையில் சாணியை அள்ளாமல் போய் கருவேல மரத்தினடியில் அமர்ந்து விட்டான். கவுண்டர் வந்து, ’ஏண்டா ஒடம்புக்கு முடியலியா?’ என்று கேட்கும் வரை அதே இடத்தில் குந்த வைத்து அமர்ந்திருந்தான். அவரைக் கண்டதும் எழுந்தவன், ‘இப்படி பண்ணிப் போட்டீங்களே கவுண்டரே!’ என்றான்.

“எப்புடி பண்டுனாங்க? வெவரமா சொல்றா” என்றார்.

“கடைசில வள்ளிகிட்டப் போயி வேலையக் காட்டியிருக்கீங்களே! உங்களை நம்பி பொழச்சதுக்கு அப்படித்தான் பண்டுவீங்களா?” என்றான். கவுண்டர் அதை எதிர்பார்க்கவில்லை. வள்ளி நடந்த விசயத்தை அப்படியே விட்டு விடுவாள் என்று தான் நினைத்திருந்தார். இதை ஒரு நாயம் என்று இந்தப் பயலிடம் சொல்லியிருக்காளே? இவன் ஒரு கூமுட்டை என்று இன்னும் அவளுக்கு தெரியாது போலிருக்கிறது என்றே நினைத்தார்.

“அதான் நான் ஒன்னும் பண்டலியே! எதுக்கு வெறப்பை காட்டிட்டு இருக்கே? போயி சாணியை வழிப்பானா அதை உட்டுட்டு உளி முறிஞ்சவனாட்ட உக்காந்துட்டு இருக்கான் படுவா” என்றார்.

“உங்களுக்குத்தான் அத்தனை கெடக்குதுங்கள்ள அதுகளை உட்டுட்டு எம் பொண்டாட்டி தானா கெடச்சாள் கடசிக்கி? அப்ப என்னை இத்தன நாளு இளிச்சவாயன்னு தான நெனச்சிட்டீங்க. அவ என்னடான்னா கீழ தள்ளி உட்டுட்டு வந்துட்டேன்னு சாமத்துல கதை மசிரு சொல்றா. நீங்க

என்னடான்னா ஒன்னுமே நடக்கலீன்னு சொல்றீங்க! ரெண்டு பேரும் பேசி வெச்சு எங்கிட்ட கதை மசுரு சொல்றீங்களா! நான் கேனக்கூதி ஆயிட்டன்ல உங்க ரெண்டு பேருகிட்டயும்!”

“என்னடா பேச்சு பேசிட்டிருக்கே வெளிய போடா மொத தோட்டத்த உட்டு! யாரு கிட்ட பேசிட்டு இருக்கம்னு நெனப்பில்லாம பேசுறியா? போடா சக்கிலித்தாயலி வெளிய! நின்னீன்னா கொன்னே போடுவேன்” என்றவர் அவனை சாத்த கட்டுத்தரையில் எதாவது சிக்குமா என்று பறந்தார். கவுண்டருக்கு கோபம் வந்தால் கைக்கு கிடைத்ததில் சாத்துவார் என்று தெரிந்ததால் கலியன் வேகமாய் கிளம்பினான்.

“உட மாட்டனுங்கோவ் கவுண்டரே! உடவே மாட்டேன். என்னிக்கிருந்தாலும் இருக்குது” என்று சற்றுத் தள்ளி வந்து அவரைப் பார்த்து திரும்பி நின்று கையால் சாடை காட்டி விட்டு வந்தான். சமயத்தில் ராசாமணி கையில் சோத்துப் போசியோடு வந்தாள்.

“எல்லாம் இந்த மயிரு மவ பண்டுன வேலையாத்தான் இருக்கும். கிளம்பி வந்துர்றாளுக பண்ணையம் பாக்க ஊரு உட்டு ஊரு தேவடியாளுக” அவன் கடைசிக்கி வயித்தெரிச்சலை ராசாமணியிடம் காட்டிச் சென்றான்.

“இழுத்துப்புடிச்சு அறுத்துப் போடுவண்டா நாயே! யாருகிட்ட உம்மட லொள்ளு நாயத்தை காட்டறே? தேவடியான்னு தெரியாமத்தான் கலியாணம் பண்ணி நக்கறன்னு வாயில ஒழுக்கீட்டு பொறவுக்கு திரிஞ்சியா? செருப்பு பிஞ்சு போயிரும் போடா தெங்கனா கொடுக்கா!” இவளும் அவனைப் பார்த்து கத்தி விட்டு கட்டுத்தரை வந்தவள் தூக்கு போசியை கிலுவை மரத்தில் மாட்டி விட்டு சாணிக்கூடையை எடுத்துக் கொண்டாள்.

“இவம் பொண்டாட்டிய வேலைக்கி சேர்த்ததீம் நீங்க இவனை மொதல்ல முடுக்கி உட்டிருக்கோணுமுங்க கவுண்டரே. காலுக்குள்ளயே சுத்தீட்டு கடிக்க வர்றான் பாத்தீங்ளா! ரெண்டு பேரும் தோட்டத்துக்கு சோடி போட்டுட்டு வந்தா இந்தத் தொந்தரவு தான். கொஞ்சம் எங்கியோ பெசகீடுதுங்க! இல்லீன்னா எங்கிட்ட சிக்கி சீக்கி போட்டுட்டு கெடந்திருப்பான். பாத்தீங்களா உங்க முன்னாலயே திமுரு நாயம் பேசிட்டு போறான்.” என்றாள் யோசனையாகவே கருவேல மரத்தடியில் நின்றிருந்த கவுண்டரிடம்.

“சேரிச் சேரி வேலையப் பாரு நீ. அவனை நாம் பாத்துக்கறேன்” என்றவர் அந்த இடத்தை விட்டு சென்றார்.

கலியனோ நேராக வீடு வந்தவன் வள்ளியின் தலை முடியை கொத்தாகப் பிடித்து அவள் முதுகில் குத்தினான். அவனுக்கு கோபத்தை எங்கே கொட்டுவது என்று தெரியாமல் குழம்பிக் கிடந்தான். இழுத்து வெச்சு அறுப்பேன் என்று சொன்னவளையும் ஒன்றும் செய்ய முடியாத கேவலத்திற்கு ஆட்பட்டுப் போனான்.

“இதென்ன இப்பிடி? உங்களுக்கென்ன பைத்தியம் புடிச்சிருச்சா? என்னைய எதுக்கு அடிக்கீங்க?” என்றாள் வள்ளி. ஒரு குத்து விடும்போதே அவள் புள்ளத்தாச்சி வவுத்துக்காரி என்று ஞாவகம் வந்து விட்டது அவனுக்கு. போய் கட்டிலில் உடகார்ந்து கொண்டு பெரிதாய் மூச்சு வாங்கினான்.

“சொல்லு அந்தக் கவுண்டன் உன்னை செஞ்சிட்டானா?” என்றான்.

“ஒன்னு சொன்னா அதையே புடிச்சுக்குவீங்களா நீங்க? அதான் ராத்திரியே சொன்னன்ல கீழ புடிச்சு தள்ளி உட்டுட்டன்னு”

“நான் நம்ப மாட்டேன். அவன் ஜகதால கில்லாடின்னு தெரியும். நீயும் கில்லாடி தான்னு இப்பத்தான் தெரியுது. ரெண்டு பேரும் டொக்கு போட்டுட்டு எனக்கு காதுல ஓட்டை போட்டு உட்டுட்டீங்க. நான் கிறுக்கனாயிட்டேன்.”

“ஐய்யே! இதென்ன இப்பிடி! அப்ப நாஞ் சொன்னதை நம்ப மாட்டீங்க. நீங்க புடிச்ச மொசலுக்கே மூனு காலும்பீங்க”

“நான் அப்படித்தாண்டி சொல்லுவேன். என்னை ஏமாத்தனவங்க நல்லா இருக்கவே மாட்டாங்க”

“என்ன ஏமாத்துறாங்க உங்களை இப்ப? அந்தாளு ஒரு பொக்கே! அந்தாளை சாமார்த்தியசாலின்னு சொல்லிட்டு கட்டுனவ கூட சண்டைக்கட்ட மட்டும் தெரியும்” என்றாள்.

“நீ என்னை பத்து நாள்ல கேனையன்னு முடிவு பண்ணிட்டீடி”

“ஐய்யே! மனுசி பேசுவாளா உங்ககோட? காத்தால இதை எடுத்துட்டு ஆட்டங்கட்டீட்டு இருக்கீங்க! இப்பிடின்னு தெரிஞ்சிருந்தா நான் ஒரு எழவையும் உங்க காதுல சொல்லியிருக்க மாட்டனே! புருசனாச்சே எதையும் மறைக்கப்புடாதேன்னு சொன்னா நம்பாம என்னையே அடிச்சா என்ன அர்த்தமிது? நம்பதவன் பிய்ய நாயி கூட திங்காது!”

“உன்னிய நல்லா விசாரிச்சு கட்டீட்டு வந்திருக்கோணுமுடி” கலியன் மண்டை முடியை பிய்த்துக் கொள்வது போல் கையால் இழுத்துக் கொண்டிருந்தான். அவளுக்கு இப்போது தான் கோபம் எட்டிப்பார்த்துக்

கொண்டிருந்தது.

"யாரு வேண்டான்னாங்க? வந்து எங்கூர்லயே உக்காந்து ரோட்டுல போறவன் வர்றவனை எல்லாம் நிப்பாட்டி வள்ளிது கிழிஞ்சு போச்சா? எத்தனபேரு கிழிச்சாங்கன்னு கேட்டுட்டு அட்ரசையும் கேட்டுட்டு நான் மாட்டன்னு சொல்லிட்டு வர்றது. யாரு வேண்டான்னாங்க? ஒன்னு இந்த ஓட்டவாய் கம்முன்னு இருக்காம நம்பிச் சொன்னா எனக்கு பட்டங்கட்டற புருசனை என்னன்னு சொல்றது?"

"எல்லாப் பொம்பளைகளும் அப்பிடித்தான் இருக்காளுக ஒன்னக் கண்ட மாதிரியே! அதெப்படிடி கூசாம உங்களால இன்னொருத்தங்கூட படுத்துக்க முடியுது?" என்றான் கலியன்.

"டேய் சக்கிலி நடக்காததை நடந்ததா பேசிட்டே இருக்காதடா எனக்கு மசக்கோவம் வந்துடும் ஆமா! அப்புறம் புருசனாவது வெங்காயமாவதுன்னு புடிச்சு உட்டுருவேன் பாத்துக்க. மூடீட்டு போயி வேலை இருந்தாப்பாரு. காத்தால வாயைப் புடுங்கீட்டு இருந்தீன்னா பாத்துக்க" சத்தத்தை இப்போது தான் கடுப்பில் எச்சாக்கினாள். பக்கத்து வீடுகளில் இருந்து கொஞ்சம் பேர் இவன் வாசலில் வந்து நின்றார்கள். பொடுசாள் வீட்டினுள்ளேயே வந்தாள்.

"ஏன் உங்க சண்டை இனி ஊருக்கே தெரியணுமாடா! கட்டுன நூலு ஈரம் கூட இன்னம் காயில அதுக்குள்ள பொண்டாட்டிய சந்தேகப்பட ஆரம்பிச்சுட்டியா? நான் சொன்னன்ல மொதல்லயே! உன்னைய கட்டுனவ சீரழிஞ்சு நாசமாப் போவான்னு! நீ யோக்கியப் பொச்சுன்னா கூட இருக்கவங்களும் உன்ன மாதியே யோக்கிய மசுரா இருக்கோணுமா?"

"போளே கவுண்டங் கூப்புடுறான்! யோக்கிய நாயம் பேச வந்துட்டா ஊடேறி." என்றான் கலியன். பொடுசாள் அதற்கு ஒன்றும் சொல்லாமல் சிரித்தாள்.

"ஒருத்திக்கி ஒரு மவனாம் அவனும் பருத்திக்காட்டுல புளுத்தீட்டு செத்தானாம். நீ ரோசக்காரன்னா போயி சாவுடா! நீ கௌம்பு வேலைக்கி போலாம் வள்ளி. இவங்கூட உக்காந்து நாயம் பேசிட்டு வெட்டியா சண்டைக் கட்டீட்டு இருக்கறதுல ஒரு பிரயோசனமும் இல்ல! இவன் இனி அவ்வளவு தான். அவன் முஞ்சியப்பாரு! அப்புடியே வெளுத்துக் கெடக்குது! பொழுதுக்குள்ள அவனே போயிச் சேந்துருவாம் பாரு."

"நான் என்ன மசுத்துக்கு போறேன். நீங்கெல்லாம் டொக்கு

போட்டுட்டு சந்தோசமா இருப்பீங்க நான் சாவனுமா! கெனா வேணா கண்டுக்க! லேய்! அந்த கவுண்டங்கிட்ட போயிச் சொல்லு! சென்னிமலை போறேன். வீச்சு வாங்கிட்டு வர்றேன். அதுல தான் அவனை நான் போடப் போறேன். என் கையிலதான் கவுண்டனுக்கு சாவு வருமுன்னு அன்னிக்கே எழுதிட்டாங்க" என்றான். வள்ளி சோத்துப்போசியில் அன்று அதிசயமாய் சாப்பாடு போட்டு எடுத்துச் சென்றாள். குஞ்சாளோடும், பொடுசாளோடும் சேர்ந்து கிளம்பிவிட்டாள் வள்ளி.

கவுண்டன் காட்டுக்கு வேலைக்கி போகப்படாது என்று தனியாக கச்சேரி ஆரம்பிப்பானோ என்று தான் நினைத்தாள் வள்ளி. ஆனால் அவன் அப்படியெல்லாம் எதுவும் சொல்லவில்லை என்றதும் நிம்மதியானாள்.

"இவனுக்கு என்னளே ஆச்சு திடீருன்னு" என்றாள் குஞ்சாள்.

"ஆகாம பின்ன மணக்குமா அவன் லட்சணத்துக்கு. கவுண்டனை போடறானாமா ஆளு ஈக்குமாத்து குச்சியாட்ட இருந்துட்டு. வீச்சை மொதல்ல கையில தூக்க முடியுமா இவனால! இவன் புளுதண்ணி குடிச்சுட்டு திரியறான். அவரென்ன அப்படியா? கழுத்தை எட்டிப் புடிச்சாருன்னா நசுக்கியே கொன்னு போடுவாரு அவரு. ஆனா இவனுக்கு போங்காலம் கட்டிக்கிச்சு" என்றாள் பொடுசாள்.

"ஆமா கவுண்டரென்ன உன்னிய ராடு சொருவீட்டாரா நேத்து?" என்றாள் குஞ்சாள் வள்ளியிடம்.

"அவரெங்கக்கா! கையாலாகாம கெடந்தாரு. எந்திரிச்சு போயிட்டாரு! பொக்கே!" என்றாள்.

"அதை என்னத்துக்கு இந்தக் கிறுக்கன் கிட்ட சொன்னே நீ? யானை இருக்குல்ல அதான் தன்னோட தலையில மண்ணை எடுத்து தூத்திக்குமாம். கூறு கெட்ட சக்கிலிச்சிடி நீ! அவனொரு லூசுன்னா நீ அவனை விட லூசு." என்றாள் பொடுசாள்.

"ஏக்கா என்னை வேலைக்கி வேண்டாமுன்னு கவுண்டரு சொல்லிட்டா என்ன பண்றது?"

"அந்த மனுசர் அப்படியெல்லாம் சொல்ல மாட்டாரு நீ அதுக்கு பயந்துக்காதே!" என்றாள் பொடுசாள். அப்படித்தான் தோட்டத்தில் நடந்தது. கவுண்டர் வள்ளியிடம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் மதியம் போல இவர்கள் தென்னைமரத்தடியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது அங்கே வந்தவர், 'என்னா எல்லாரும் சொல்லி

வெச்சது மாதிரி அரிசீம் பருப்பு சோறாவே கொண்டாந்திருக்கீங்க? இந்த எழவத்தின்னா தண்ணித்தாகம் பட்டையை எடுத்துப் போடுமே’ என்றார். சைசாக வள்ளியை நோட்டமிட்டார் கவுண்டர்.

“ஏ வள்ளி உம்மட ஊட்டுக்காரன் காத்தால என்னமோ வீரம் பேசிட்டு வந்தானா இங்க. இனிமே காட்டுக்குள்ள காலை வெக்க மாட்டேன்னு சொல்லிட்டு கிளம்பிட்டான்” ஒன்றும் தெரியாதவர் போல கேட்டார்.

“அதை ஏங் கேக்கறீங்க கவுண்டரே! காத்தால இவளுக்கு கும்மாங்குத்து போட்டான். நீங்களும் இவளும் சேர்ந்து அவனுக்கு காது குத்தீட்டீங்களாம். உங்க சாவு அவன் கையிலதான்னு வீச்சு வாங்க சென்னிமலை போறானாம். இந்த சுடிக்கி சென்னிமலையில நின்னாலும் நிப்பான்” என்றாள் பொடுசாள்.

“அப்ப எஞ்சாவு கலியங் கையில தான்னு சொல்றீங்க! நடக்கட்டும் அப்படியே” என்றவர் வள்ளியை ஒரு பார்வை பார்த்து விட்டு நடையைக் கட்டினார். அவருக்கு மனசில் ஒரு கருக்கடை வந்து விட்டது அப்போது. கலியன் ஒரு திருவாத்தான். அந்தக்கிறுக்குப் பயல் கேனத்தனமாக ஏதாவது செய்ய ஐடியா பண்ணுவான் என்று நினைத்தார்.

வள்ளி தொடர்ந்து கவுண்டர் காட்டுக்குத்தான் வேலைக்கு சென்று கொண்டிருந்தாள். கலியன் வீட்டில் சும்மாவே கிடந்தான். இவளை போக வேண்டாமென ஒரு வார்த்தையும் அவன் சொல்லவில்லை. எல்லாம் முடிந்து போனபிறகு சொல்வதால் என்ன ஆகிவிடப் போகிறது என்ற எண்ணத்தில் தான் இருந்தான். அவன் கண்முன் வள்ளி எக்கி எக்கி படுத்துக்கிடப்பதாகவே தோன்றிக் கொண்டேயிருந்தது. ராவில் வள்ளியின் கிட்டே படுப்பதையும் விட்டு விட்டான். இனி தனக்கு அது சுத்தப்படாது என்று வள்ளியை வெறுத்தான். டேய் சக்கிலி! என்று கூப்பிட்டவளிடம் இனி பேச்சே கூடாதென பேசுவதேயில்லை.

சும்மா கிடக்கையில் அவனுக்கு யோசனைகள் ஓடிக் கொண்டே இருந்தது. பீட்டர் சாரிடம் போய் பேசலாமென்றால் இந்த விசயத்தை சொல்வது தனக்கு கேவலம் என்று நினைத்து விட்டு விட்டான். சாப்பாட்டுக்காரம்மா ஒரு நாள் சொன்னது வேறு மனதில் வந்தது. ஒரு நாளைக்கி உங்க கவுணடன் உன்னை தோட்டத்த விட்டு முடுக்கி உடறானா இல்லியான்னு பாரு! என்று தான் சொன்னது அது. அது நிசமாகி விட்டது. கவுண்டருக்காகப் போய் சாப்பாட்டுக்காரம்மாவை கூப்பிட்டவனல்லவா இவன். அவனுக்கு சாப்பாடே இறங்க மறுத்தது. தூங்கி விழித்ததும் இதே ஞாபகமே வந்தது.

கவுண்டரை சமயம் பார்த்து கொன்று விட்டு ஜெயிலுக்குப் போவதாய் எல்லாம் யோசித்துக் கிடந்தான் கலியன் கட்டிலில். ஊரே பார்க்க கை விலங்கு போடப்பட்டு போலீஸ் ஜீப்பில் ஏறுகிறான் கலியன். அவன் அம்மா அழுதபடி ஜீப்பின் பின்னால் ஓடி வருகிறாள். உன் பையன் பண்ண வேலையப்பாருடா என்று மாரனை ஒரு போலீஸ்க்காரன் உதைக்கிறான். சாமீ! என்று மாரன் டிச்சுக்குழியில் விழுகிறான். வள்ளி சிரித்துக் கொண்டே ஜீப்பில் செல்லும் இவனைப் பார்த்து கையை அசைக்கிறாள். அவள் ஊரிலிருந்து பைக்கில் வந்த அவள் சித்தப்பன் பையன் அவள் இடுப்பில் கையைப் போட்டு சிரித்தபடி அவனும் இவனுக்கு கையை ஆட்டுகிறான். அவன் வள்ளிக்கு ஒரு முத்தம் கொடுக்க உதடுகளை கொண்டு போன போது ஜீப் வளைவில் திரும்புகிறது.

கவுண்டரை வேறு மாதிரி பழி வாங்க வேண்டுமென அவர் மகள் வடிவுக்கரசியை தூக்கிக் கொண்டு காட்டுக்குள் போவதாய் நினைத்தான். ஐய்யோ அது பாவம்! என்று மண்டையை சுவற்றில் இடித்துக் கொண்டான் கலியன்.

0000000000000000

கலியனைத் தேடி கரடு நோக்கிச் சென்ற கூட்டம் வறக்காடுகளைக் கடந்து கரட்டின் நுழைவாயிலைத் தொட்டது. சூரியன் சுள்ளென மேலே கிளம்பியிருந்தான். அவர்களுக்கு முன் கரடு விரிந்து காய்ந்து பரவியிருந்தது. கவுண்டருக்கு வேர்வை குளித்தது மாதிரி ஒழுகிக் கொண்டிருந்தது.

மாரி காட்டுப்பாளையம் பெரியசாமிக் கவுண்டருடைய காட்டின் வேலிமுள் கடவை பிய்த்தெடுத்து மற்றவர்கள் கரட்டினுள் செல்ல வழி செய்தான். ஜான்சனுக்கு அப்போது ஒரு போன் வரவே அவன் அதை எடுத்து சொல்லுங்க சார்! ஆமாங்க சார்! வந்துடறேன் சார்! என்று சார் போட்டுக் கொண்டிருந்தான். பேசி முடித்ததும் வேலுச்சாமிக் கவுண்டரின் முகம் பார்த்தான்.

“ஒரு அவசரமுங்க எனக்கு. ஆபீசர் ஒருத்தர் ஈரோட்டுல இருந்து இப்ப கிளம்பிட்டாராம். நான் சென்னிமலையில இருக்கோணும். அப்ப நீங்க பாத்துட்டு வாங்க. யாராச்சிம் கேட்டா என் பேரை சொல்லுங்க நீங்க. அப்படி இல்லீன்னா என்னை போன்ல கூப்பிடுங்க!” என்று சொல்லி விட்டு ஜான்சன் வந்த வழியே கிளம்பினான். அவன் கொஞ்சம் தூரம் சென்றபிறகு இவர் வாயைத் திறந்தார்.

“பங்காளி இவனை நமக்கு ஒத்தாசையா இருப்பான்னு கூப்பிட்டா வந்து உக்காந்துட்டு ரூல்ஸ் பேசினான் பாத்தியா! போயித் தொலையட்டும்” என்றார்.

“நீ தான பங்காளி அவனை கூப்பிட ஆளை அனுப்பினே. சரி அவனும் இருக்கறது நல்லது தான்னு நானும் நெனச்சேன். ஆனா அவனுக்கு கொஞ்சம் தெனாவட்டு தான்.” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டரும். அவர்கள் கரட்டினுள் நுழைந்தார்கள். வேலியை தூக்கிய மாரி அதை பழையபடியே சாத்திவிட்டு இவர்கள் பின்னால் வந்தான்.

“கதுவாளிக்குஞ்சுக சிக்கினா நாலு புடிச்சுட்டு போலாமுன்னு நெனச்சனுங்க. இந்த தொப்பிக்காரன் கெடுத்தான் அதையின்னு நெனச்சேன். நல்லவேளை போயிட்டான்” என்றான் மாரி. அவனுக்கு கதுவாளிக்குஞ்சுக்கறி ஞாவகம் வந்து விட்டது மீண்டும். அவைகள் என்ன இவனை வா வந்து பிடிச்சுக்கோ என்றா உட்கார்ந்து கொண்டிருக்கும்? ஆனால் அவன் இரண்டு வெங்கச்சாங்கல்லை எடுத்து டக் டக்கென கொட்டிக் கொண்டே வந்தான். அந்த சத்தத்திற்கு அவைகள் எங்கிருந்தாலும் பதில் டக் சொல்லும். ஆனால் அப்படி எதுவும் அவனுக்கு அவைகள் பதில் சொல்லவில்லை. கிலுவைமர நிழலில் படுத்துக் கிடந்த மயில்கள் தான் சாவுகாசமாய் இவர்கள் வருகையை பார்த்து கிளம்பி தூரச் சென்றன.

“ஏனுங்க பங்காளி மயிலுக எப்படி இங்க இப்படி பெருத்துப் போச்சு? ரவுண்டு கட்டி எல்லாப்பக்கமும் சவுரீத்துக்கு சுத்துதுக?”

“தீனிக்கும் தண்ணிக்கிம் தோட்டத்துப் பக்கமுல்ல வந்துருதுக! கரட்டுக்குள்ள தண்ணித் தொட்டிகளையாச்சிம் கட்டியுட்டு தண்ணிக்கி ஏற்பாடு பண்டுனாங்கன்னா இந்த மானுகளுக்கு பத்து நிமுசத்துக்கு ஒருதரம் பட்டாச்சு போட்டு சாமத்துல வெறட்ட வேண்டியதில்ல பாருங்க!” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“எனக்கு தொந்தரவு வாழைதோட்டத்துல வந்த்தீம் ஒசரமா கம்பி வேலி போட்டுட்டேன். ஒவ்வொன்னும் எருமக்கன்னுக கணக்கா இருக்குதுக! பாரு கொம்பு தீட்டறதுக்கு இந்த கிலுவை மரத்தை சொரண்டித் தள்ளியிருக்குதுக! பங்காளி கொம்பு கெடக்குது பாருங்க! ஊட்டுல கொண்டி வெச்சா ஊட்டுக்கு நல்லதும்பாங்க”

“அந்தக் கருமத்தை கையில தொடாதீங்க பங்காளி. அதெல்லாம் வாயி கம்முன்னிருக்க மாட்டாம எவனாச்சிம் அந்தக் காலத்துல ஒளறீட்டு போனது. இதைக் கொண்டி ஊட்டுல வெச்சித்தான் இனி தனியா நாம

வெளங்கொணுமா?”

“ஆமாமா! அந்தப்பயல் ரூல்ஸ் பேசினான்ல. ஊட்டுக்குள்ள கொம்பிருந்தா கொன்னு கொண்டாந்திருப்போமுன்னு தப்பா நெனச்சிட்டு எதாச்சிம் பண்டிருவாங்க. எதுக்கு வம்பு. ஏண்டா மாரா இப்படி அத்தன பேரும் ஒட்டுக்கா போகாட்டி நாலஞ்சு பேர்த்த வேற வழியில தாட்டி உடேண்டா!” என்றார் வேலுச்சாமிக் கவுண்டர். அவன் கப்கப்பென பீடிப்பொகையை உறிஞ்சி ஊதி விட்டு அவங்காளுகளிடம் அப்படியே செய்யலாமென்றான். அவன் அண்ணங்காரன் மல்லி நான்கு பேரை கூட்டிக் கொண்டு கிழக்கு வாக்கில் போய் வடக்கே வருவதாக கூறினான். ஆளை பார்த்தால் குரல் கொடுப்பதாக கூறி கிளம்பினான்.

மாரி வெங்கச்சாங்கல்லை வெட்டியாய் தட்டுவதை நிறுத்தி விட்டு தூர வீசினான் கட்களை. அவன் வீசிய இடத்திலிருந்து பர் பர்ரென நான்கைந்து கதுவாளிக் குஞ்சுகள் கிழக்கே பறந்தன. அவன் அங்கே சென்று அவைகள் படுத்திருந்த இடத்தை உற்றுப்பார்த்தான். முட்டைகள் கிடக்கின்றவா என்று பார்க்கத்தான் போனான். முட்டைகளும் இல்லை. காறித் துப்பி விட்டு வந்தான் மாரி.

மாரன் திருகு கள்ளியில் தொங்கிக் கொண்டிருந்த பழைய காய்ந்த தேன் ராட்டை பிய்த்தெடுத்து வாயில் கடித்து மென்று கொண்டே வந்தான். அதை பார்த்த பொன்னுச்சாமிக் கவுண்டர், ‘அதையென்னடா காயிதத்தை திங்கற மாதிரி தின்னுட்டு வர்றே?’ என்றார். ‘அதுல தானுங்க கவுண்டரே சத்துமானம் இருக்குது’ என்றான்.

அதே நேரத்தில் கிலுவை மரத்தினடியில் கிடந்த உடும்பு ஒன்று திடுகுப்பென வடக்கே கால்களை பறத்திக் கொண்டு தப்புறுகுப்புறென ஓட்டம் பிடிக்க அதை துரத்திக்கொண்டு பேய் மாதிரி ஓடின மாரி இவர்கள் பார்க்கப் பார்க்கவே திப்பென அதன் மீது விழுந்தான். உடும்பு அவன் நெஞ்சுக்கடியில் மாட்டிக்கொண்டது.

நேம்பாக கையை விட்டு அதன் கழுத்து நேர் மேலெ கையை வைத்துக் கொண்டு எழுந்தான். ‘நாலுகிலோ வருமாட்ட இருக்குதா’ என்றான் மாரன். அப்படியே கழுத்தைப் பிடித்து தூக்கிக் கொண்டான் மாரி. அதனிடம் அசைவு துளி கூட இல்லை.

“அதென்னடா நேரா ஓடியாந்து திப்புனு அது மேலயே வுழுந்துட்டே?” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“அதெல்லாம் ஒரு டெக்கினிக்கு தானுங்க. கழுத்து மேல பொடணில ஒரு வெரலை வச்சா கூட கம்முன்னு கெடக்கும்.”

“இதுகளுக்கெல்லாம் என்னடா தீனி இங்க கரட்டுக்குள்ள கெடக்குது? நாலு கிலோவுக்கும் மேல இருக்குமாட்ட இருக்குதே அப்ப வவுறு நம்ப தீனி கெடைக்குதுன்னு தான அர்த்தம்” என்றார் வேலுச்சாமிக் கவுண்டர்.

“அன்னிக்கொன்னு நம்ம ஊருக்கிட்ட புடிச்சனுங்க. தோலை உறிச்சுட்டு கொடலைப்பார்த்தா பூராவும் கட்டெரும்புகளா இருந்துச்சு.”

“அதைய பார்த்துட்டு கறிய எப்படிடா தின்னே?”

“ஏனுங்க இதுமோட கறி ஒடம்புக்கு நல்லதுங்க. கெடைக்கோணுமே! காலுவலிக்கி கேக்கும். என்ன கறிய மெல்றது தான் கொஞ்சம் கடுசா இருக்கும்” அவர்கள் வடக்கே சென்று கொண்டிருந்தார்கள். வெய்யல் ஏற ஏற கரட்டினுள் வேக்காடு அதிகமாகி விட்டது. அவர்கள் முதல் குன்றை ஓரம் பாறமாகவே தாண்டியிருந்தார்கள்.

இரண்டாம் குன்று அவர்களுக்கு நேர் எதிர்க்கே நின்றிருந்தது. இடையில் மொட்டைப்பாறைக் குழிகள் தண்ணீரில்லாமல் காய்ந்து கிடந்தது. குன்றிற்கு அருகே மேற்கே பார்த்தமாதி குந்த வைத்த மாதிரி கரடி மாதிரி ஒன்று உட்கார்ந்திருந்தது. மாரன் தான் அதை அவர்களுக்கு காட்டினான். அது இந்தப்பக்கம் திரும்பவே இல்லை.

“அது என்னடா அது கரடிக் குட்டியா? கரு கருன்னு முடியோட இருக்கே?” என்றார் கவுண்டர்.

“கரடி ஏதுங்க கவுண்டரே நம்மூரு கரட்டுல. இது கழுதக் கொறத்தி. தனியா ஆளு சிக்குனா போட்டுத் தள்ளீரும். தூய்!” என்று சப்தமிட்டான். அது திரும்பிக்கூடப் பார்க்காமல் கள்ளிக் கூட்டத்துப் பக்கம் சென்று மறைந்து விட்டது.

“என்னென்னடா புதுசு புதுசா கரட்டுக்குள்ள வந்திருக்குதுக? இதையெல்லாம் இப்பத்தான் நான் கண்ணுலயே காங்குறேன் பாத்துக்கவே. அதென்றா கழுகுக அங்க வட்டம் போடுதுக நாலு?” என்றார். அவர் கைகாட்டியது வடக்கே கள்ளிக்கூட்டம் ஆரம்பமாகும் இடத்தில்.

“எதாச்சிம் மயிலுக் கீது செத்துக் கிடந்தா தின்னுட்டு திரியறது தானுங்க” அவர்கள் அதை நோக்கி நடந்தார்கள். சொன்னது மாதிரி அந்த இடத்தில் ஒரு பெண்மயில் இறந்து கிடந்தது. அவர்கள் கொஞ்சம் கரட்டினுள் நுழைந்து செல்லச் செல்லவே தன்னப்போல மூக்கைப் பிடித்துக் கொண்டார்கள் அனைவரும். நாத்தம் குடலை பிறட்டிக் கொண்டு வீசிக்கொண்டிருந்த்து அந்த ஏரியாவில். கருமத்தே என்னடா

நாத்தமிது? என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

மாரி முன்னால் சென்றான் எங்கிருந்து வருகிறது என்று பார்த்து விட! மூடுகள்ளி தாண்டி கிலுவை மரத்தில் தரைக்கு கால் படாமல் தொங்கிக் கொண்டிருந்தான் கலியன். ‘அண்ணா’ என்று ஓலமிட்டான் மாரி. மாரன் துண்டை வாயில் வைத்து குலுங்கினான். பொன்னுச்சாமிக் கவுண்டர் மாரனின் அண்ணன் மல்லிக்கு போன் செய்தார். அவர் ரெண்டாவது குன்றுக்கு அவனை வரச் சொன்னார். அவன் பக்கத்தில் தான் இருப்பதாக கூறினான்.

“பொணநாத்தம் அப்பபடின்னு சொல்றாங்கள்ள அது இது தான்” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

வேலுச்சாமிக் கவுண்டர் பிணத்தை எட்டிப்பார்த்து விட்டு வந்து தனியே ஓரமாய் நின்று கொண்டார். மாரனும் மற்ற ஆட்களும் இவரிடம் வந்து நின்றார்கள்.

“இப்படிப் பண்ணிக்கிட்டானுங்களே! இந்த வயசில? பொண்டாட்டி கட்டி வெக்காம உட்டிருந்தாக் கூட கவலை இல்லாம இருக்கலாங்களே! நாலு மாசம் தான் ஆச்சி! இனி அவகிட்ட போயி என்ன்னு சொல்லுவேன் நானு?” என்றான் மாரன்.

“ஊட்டுல எதாச்சிம் பிரச்சனையாடா அவனுக்கு பொண்டாட்டி கோட? நீ எனத்தக் கண்டே, வெடிஞ்சதீம் போசியத் தூக்கீட்டு திருப்பூரு போயிர்றே. ஆனா அவ மூஞ்சில என்னமோ தகவலு இருந்துச்சுடா காத்தால கூடப் பாத்தேன். எதாச்சிம் சின்னப் பிரச்சனையா இருந்திருக்கும் இந்தப்பயல் இப்படி பண்ணீட்டானே! சரி அதுக்கு இவ்ளோ தூரம் ஏன் வந்தான்? காணாமயே போயிட்டான்னு நெனச்சிக்கட்டுமுன்னா?” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டர்.

“என்ன எழவுன்னுங்க கவுண்டரே காங்கறது? இப்படி வெட்டியா போயிச் சேந்துட்டானே!”

“சரி பேசிட்டு இருந்தா ஆகுதா ஒன்னா? ரெண்டு பேரு கவுத்தை அத்து இறக்குங்கடா” என்றபோது முன்பே இருவர் அதை செய்திருந்தார்கள். ஆனால் பிணத்தின் உடல் உப்பிப் போய் சொத சொதவென கழன்ற மாதிரி விழுந்தது. கையில் பிடிக்கவும் வழியில்லை. கலியனின் முகமே பெரியதாய் உப்பி இருந்தது. ‘எடுத்துட்டெல்லாம் போவ முடியாதுங்க’ என்றான் மாரி.

“சரி அப்ப நாலு கட்டையப் போட்டு இவத்திக்கே எரிச்சுட வேண்டிது தான். சீக்கிரம் வறக்கட்டை நாலு எடுத்தாங்க” என்றார். காரியம்

துரிதமானது. காய்ந்த கிலுவைக் கட்டைகளுக்கு பஞ்சமே இருக்கவில்லை அங்கு. சித்தங்கூரியத்தில் கட்டை மீது பிணத்தைப் போட்டு தீ மூட்டி விட்டார்கள்.

“நல்லவேளை அந்த பாரஸ்ட்காரன் போயிட்டான். இப்படி பண்றக்கு நம்மை உட்டிருக்க மாட்டான். போஸ்ட் மார்டம் பண்ணனும் போலீசு வரணுமுன்னு சொல்லியிருப்பான்” என்றார் வேலுச்சாமிக் கவுண்டர் பிணம் எறிந்து கொண்டிருந்தபோது.

“இன்னம் ரெண்டு கட்டையப் போட்டுட்டு வாங்கடா போயறலாம் இந்த எடத்த உட்டு” என்றார் பொன்னுச்சாமிக் கவுண்டரும். புகை மம்மானியாய் மேலே கிளம்பிச் சென்றது. அவர்கள் சீக்கிரமே அந்த இடத்திலிருந்து கிளம்பி விட்டார்கள். மாரி உடும்பை கலியனின் பிணத்தைப் பார்த்த போதே உயிருடன் விட்டு விட்டான். அது சித்த நேரம் திக்குத் தெரியாமல் நின்று பார்த்து விட்டு குன்றின் மீது ஓடியது. சரியாக அவர்கள் பெரியசாமிக் கவுண்டர் கடவில் முன் போலவே பிடுங்கித் தாண்டி விட்டு பழையபடி அடைத்து விட்டு வந்தார்கள். திரும்பி புகை தெரிகிறதா என்று இங்கிருந்து பார்த்தார்கள். இரண்டாவது குன்றில் புகை வெய்யலுக்கு தெரியவே இல்லை.

வேலுச்சாமிக் கவுண்டர் வீடு வந்ததும் குளித்து விட்டுப் போய் கட்டிலில் வேப்பை மரத்தடியில் சாய்ந்தார். வக்காளோலி! என்னைய கொல்ல வீச்சோடா வர்றானாமா! கொன்னு கொண்டி தூக்கனாமா இல்லியா! என்று நினைத்து மீசையைத் தடவிக் கொண்டார். அதை அப்படித்தான் செய்தார் இரண்டு தினங்களுக்கு முன்பு ராத்திரியில்.

பங்காளி சின்னச்சாமியை வைத்து தண்ணி போடும் ஆசையை கலியனிடம் தூண்டி. சின்னச்சாமி இதற்காக ஈரோட்டிலிருந்தல்லவா இரண்டு பேரை வரவழைத்திருந்தான். அவர்கள் காரியத்தை கச்சிதமாகத்தான் முடித்திருக்கிறார்கள்! ஆனாலும் அவருக்கு வெத்தலையில் மை போட்டுச் சொன்ன கீரனூர் பழனிச்சாமியின் விசயம் தான் கடைசி வரை ஆச்சரியமாயிருந்தது. பெரிய ஆளுத்தான் போல என்று நினைத்தார்.

# சயனம்14

கொளத்துப்பாளைய குளம் ஒரு காலத்தில் வருட மழையின் போது எப்படியும் ஓரளவு நிரம்பி மூன்று நான்கு மாதங்களுக்காவது வற்றாது தண்ணீர் கிடக்கும். அச்சமயத்தில் வெய்யில் காலமும் வந்து விடுவதால் வெள்ளரிச் செடிகளை குத்தகைக்கு எடுத்து விதை தூவியிருப்பர். தண்ணீர் வற்றிக்கொண்டு வரும் சமயம் வெள்ளரிக் கொடிகள் எங்கும் படர்ந்து காய்களோடு கிடக்கும். வியாபாரிகள் மரப்பெட்டி வைத்த சைக்கிள்களில் காலையில் நேரமே வந்து விற்பனைக்கு வாங்கிச் செல்வர். அவர்களுக்கு ஒரு மாதம் போல அந்த விற்பனை நீடித்திருக்கும்.

இப்போது வெள்ளரி விதைகளை தூவி விடக்கூட அந்தக் குளத்தில் தண்ணீர் கிடையாது. எங்கும் கருவேல மரங்களின் ஆதிக்கத்தில் குளமிருந்த இடமே காடாய் காட்சியளித்தது. மழை பெய்த நாளில் மட்டும் செம்மண் நனைந்து களிமண்ணாகிக் கிடக்கும். அதுவும் குழியான இடங்களில். போக ஆவாரஞ்செடிகள் அங்கங்கே காலவேளையின்றி பூத்துக்கிடக்கும். பொங்கல் சமயத்தில் தேவை என்கிறபோது செடிகள் காய்ந்து நின்றிருக்கும்.

குளத்தினுள் பெரிய கருவேல மரத்தினடியில் உள்ளூர் வெளியூர் ஆட்கள் அமர்ந்திருந்தார்கள். சற்று தள்ளி கரம் கிழித்து கரத்தின் மீது சுண்ணாம்புப் பொடியை சிலர் தூவிக் கொண்டிருந்தார்கள். குச்சியால் போட்ட கரம் பளிச்சென வெள்ளை நிறத்தில் தெரிந்தது. சிறுக்களஞ்சி கருணாகரன் முதல் ஆளாய் குளத்துக்கு வந்த போது மணி மதியம் பனிரெண்டு தான் ஆகியிருந்தது. அவன் தன் சோட்டாளுகள் இருவருடன் வந்திருந்தான். அவன் தன் கொக்கு வெள்ளை சேவலை தூரத்தில் ஆவாரஞ்செடியில் கட்டி வைத்திருந்தான். கையோடு கொண்டுவந்திருந்த தேங்காய் தொட்டியில் தண்ணீர் ஊற்றி பேருக்கு கம்பு சேவலருகே தூவியிருந்தான்.

நேரமாக நேரமாக ஒவ்வொருவராய் குளத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்கள் வல்லூறு, ஆந்தை, காகம், செஞ்சித்திரன் என்று வகை வகையான சேவல்களை தங்கள் குழந்தைகளை தாவி வருவது போல் தாவி வந்து ஆவாரஞ்செடிகளில் கட்டி வைத்து காத்திருந்தார்கள். நேரமும் மணி மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது.

எண்ணிப்பார்த்தால் பத்து உருப்படிகள் தான் வந்திருந்தன. அவ்வளவு தான் இந்த இடத்திற்கு வந்து சேரும் என்பது எல்லோருக்கும் தெரிந்தது

தான். யாரோ வேலுச்சாமிக் கவுண்டருக்கு போன் போட்டு தகவலை சொன்னார்கள். மணியாச்சுங்க கவுண்டரே! என்று பேசியவன் சொல்லிக் கொண்டிருந்தான். அவர் பத்து நிமிடத்தில் பொன்னுச்சாமிக் கவுண்டருடன் அவரது டிவியெஸ்சிலேயே வந்திறங்கினார்.

எல்லோரும் மரியாதைக்காக அவருக்கு வணக்கம் வைத்தார்கள். வழக்கம் போலத்தானா பறவைகள் வந்திருக்கு? என்று பேச்சுக்கு கேட்டபடி களத்திற்கு சென்றார். பொன்னுச்சாமிக் கவுண்டர் சிறுக்களஞ்சி கருணாகரனிடம் போய் நின்றார்.

“என்ன மாப்ளே அந்த கொக்கு வெள்ளைய மூனு வருசமா வச்சிக்கிட்டே இருக்கியா? போனவருசம் விஷக்கத்தி அத்தன எடத்தில பட்டபோதே ஊடு போறக்குள்ள சாஞ்சுடுமுன்னு நெனச்சேன்.”

“அதை அவ்ளோ சீக்கிரம் சாக உட்டுடுவனுங்களா மாமா! நாலெடத்துல கத்திக் காயம் ஆழமா உழுந்திருச்சு. பொழைக்காதுன்னு தான் நெனச்சேன். ஆனா மருந்தெண்ணை போட்டு புண்ணை ஆத்தியே போட்டேன். புருடு ரெண்டு பக்கம் வந்திருச்சு. அதையும் கத்தில அறுத்து காயத்தை ஆத்தீட்டேன்”

“ம்! சோக்கா நிக்கிதுடா மாப்ளே! ஒரு சத்தம் போடுதான்னு பாரு. இந்த வருசம் வந்த சேவலுகளைப் பார்த்தா உன்னுது தான் பட்டு பட்டுன்னு வீசிடுமாட்ட இருக்கே! சேரி கொண்டு போயி கோழிக்கு கோழி நடவு உடு. பாக்கலாம் இதோட வீரத்தை இந்த வருசமும்.” என்றார்.

வேலுச்சாமிக்கவுண்டரிடம் சேவல்காரர்கள் செலுத்து தொகை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கருணாகரனின் சோட்டாள் பூமணி கொக்கு வெள்ளைக்கான பணத்தை வேலுச்சாமிக் கவுண்டரிடம் கொடுத்தான். எல்லோரும் வருடம் ஒரு முறை கூடும் ஆட்கள் தான். புதிதாய் யாருக்கும் தகவலை கொடுக்க மாட்டார்கள். புது ஆள் வந்தால் சண்டை சச்சரவு ஆகிவிடும் என்பது கவுண்டர் கருத்து.

எல்லாரும் பக்கத்து ஊர்க்காரர்கள் தான். எல்லா காடுகளிலும் தட்டறுப்பு முடிந்த கையோடு ஞாயிறு நாள் பார்த்து வருடத்தில் ஒருநாள் சாவக்கட்டை வைத்துக் கொள்வார்கள். அதுவும் கொளத்துக்குள் மட்டும் தான். மூன்று மணிக்கு சரியாக கட்டு ஆரம்பித்து விட்டதென்றால் சூரியன் மேற்கே சாயும் போது முடித்துக் கொள்வார்கள்.

கருணாகரன் எப்போதும் இரண்டு மூன்று சேவல்கள் மோதிக்கொண்ட

பிறகுதான் தன் கொக்கு வெள்ளையை களம் இறக்குவான். அவன் தன் சேவலை தூக்கிக் கொண்டு வந்து கட்டு நடக்குமிடத்தில் இறக்கி விட்டான்.

"இன்னிக்கி என் சேவலை சேவலுக்கு சேவல் நடவு நட்டறேன். யாரு வேணாலும் அவங்க சேவலை என்னோட கொக்கு வெள்ளையோட மோத விடலாம்." என்றான். அவன் இப்படி தைரியமாக வந்து முதலிலேயே விட வந்திருக்கும் சேவல்கள் ஒன்று கூட முன் அனுபவமே இல்லாதவை என்பதால் தான். கொக்கு வெள்ளையைப்பற்றி நன்றாக அறிந்தவர்கள் இதுக்கூட நம்ம சேவல் நிக்காதே! ஒரே அடியில போட்டுடுமே! என்று கவலைப்பட்டு நின்றார்கள். எல்லோரும் தசுங்கிக் கொண்டு நிற்பதைப் பார்த்த பொன்னுச்சாமிக் கவுண்டர், 'அவந்தான் எறக்கி நிக்க வெச்சுட்டானே யாராச்சிம் எறக்குங்கப்பா' என்றார்.

வேலுச்சாமிக்கவுண்டருக்கு கருணாகரனின் தைரியம் பிடித்திருந்தது. சேவல்காரர்களின் விளையாட்டு ஆர்வத்தை முதலிலேயே புஸ்வானமாக்கி விட்டான் அவன். அவரே பங்காளி சின்னச்சாமியை பார்த்து சைகை செய்தார். சைகையை புரிந்து கொண்டவன் போல சின்னச்சாமி தன் சேவல் மயில்கருப்பை கொண்டு வந்து நிறுத்தினான். கூட்டம் ஆர்பரித்தது. தங்கள் சேவல் தப்பித்தது என்று நினைத்தார்கள். கருணாகரனுக்கு பட்சி சாஸ்த்திரமெல்லாம் தெரியாது. அவனாக நினைத்தால் இறக்கி விட்டு வேடிக்கை பார்ப்பான். சேவலை அடித்ததும் தூக்கிக் கொள்ள, கத்தி கட்ட என்று அவன் சோட்டாள் பூமணி இருக்கிறான்.

சின்னச்சாமி தன் சேவலை இறக்கியதும் பூமணி கொக்கு வெள்ளையை தூக்கிக் கொண்டு களத்துக்கு வெளியில் வந்தான். அவனிடமிருந்த கருங்கத்தி வேப்பை இலை மாதிரி இருந்தது. வெள்ளைத்துணியை ஈரத்தில் நனைத்து கொக்கு வெள்ளையின் காலில் இறுக்கிக் கட்டினான். அதே நேரத்தில் சின்னச்சாமியும் மயில்கருப்புக்கு அந்த வேலையை சட்டென முடித்திருந்தான். அதன் காலிலும் கருப்புக் கத்தியே இருந்தது. ஆக இரண்டுமே விஷக்கத்திகள் தான். விஷக்கத்தி ஊமத்தை இலைகளை வைத்து தீட்டுவதால் அப்படி மாறிவிடுகிறது.

இரண்டும் தயாரானதும் சின்னச்சாமியும், பூமணியும் ஆட்டகளத்தின் நடுக்கோட்டுக்கு வந்தார்கள். கொஞ்சம் இருவருமே நான்கடி பின்வாங்கி இரு சேவல்களும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்ளும்படி நிற்க வைத்து முகையவிட்டார்கள். பின்னர் அவர்கள் இருவருமே மீண்டும் பின்னால் கடைசிக் கோட்டுக்கு வந்தார்கள்.

பின், அடிடா ஒரே அடியில என் ராசா! என்று இருவருமே சத்தமெழுப்பி பறவை விட்டார்கள். பிடி இல்லை என்றதும் கொக்கு வெள்ளை மயில்கருப்பை நோக்கி பாய்ந்தது. அது சாத்திவிடும் என்றுணர்ந்த மயில்கருப்பு பின்வாங்கியது. கூட்டம் கரகோசம் போட்டது! ஓ! சின்னச்சாமிது ஓடிப்போயிரும்டோய்! என்றார்கள். இரண்டாவது அடிக்கும் மயில்கருப்பு பின்வாங்கியது. கோட்டுக்கு வெளியே மயில்கருப்பு பின்வாங்கி விட்டால் தோற்றுப்போனதாக அர்த்தம். சின்னச்சாமி பொறவுக்கு வரக்கூடாது போ! போய் முன்னால பாஞ்சு அடி! என்று தன் சேவலுக்கு தமிழ் மொழி தெரியுமென நினைத்து கத்தினான்.

சேவல் அவனின் பாஷையை புரிந்து கொண்டது போல ஓரமெடுத்து சும்மா நின்றிருந்த கொக்கொவெள்ளையை ஒரு அடி போட்டு விட்டது. சின்னச்சாமி பாய்ந்து தன் சேவலை தூக்கிக் கொண்டான். அதே நொடியில் பூமணியும் தன் சேவலை துக்கும் போது கொக்கு வெள்ளையின் தலை சாய்ந்து விட்டது. பூமணி ஓரம்போய் அதன் வாயில் ஒன்னுக்கு அடித்தான். ஒன்னுமில்ல ஒன்னுமில்ல! என்ற போது அவன் கை ரத்தத்தில் நனைந்தது. கொக்குவெள்ளையின் நெஞ்சுக் கூட்டிலிருந்து கொரக்கொரவென ரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

“உன் ஜாதிப்பேரை காப்பாத்தியே போட்டீடா ராசா!” என்று சின்னச்சாமி தன் மயில்கருப்பை தூக்கி கொஞ்சிக் கொண்டிருந்தான். கவுண்டர் சந்தோசமிகுதியில் கோயிலாட்டம் ஆடினார். மயில்கருப்பு தன் முதல் ஆட்டத்திலேயே கோச்சையை வென்று விட்டது. சின்னச்சாமி அதை கட்டி வைத்திருந்த பழைய ஆவாரஞ்செடியிலேயே போய் கட்டி வைத்தான். அதற்கு தலையில் தண்ணீர் ஊற்றினான். தீனி மட்டும் கொடுக்காமல் வந்தான் அடுத்த ஆட்டம் பார்க்க!

கருணாகரன் வீரமரணமடைந்த கொக்குவெள்ளைக்கருகே கைகட்டி நின்றிருந்தான். பூமணி அதை கொண்டு வந்து சின்னச்சாமி கையில் கொடுத்தான். அவனுக்கும் வருத்தம் தான். மூன்று வருடமாக ஜெயித்தே வந்த பறவை அது. முதல் அடியிலேயே போய் விட்டது. சின்னச்சாமி, ’வேக்காடு அதிகம் வாங்கும் போல இந்தக் கோச்சை!’ என்றான் கையில் தூக்கிப் பார்த்து. கவுண்டரோடு போய் நின்று இறந்த கோழியை கையில் பிடித்துக் கொண்டு சின்னதாய் ஒரு ஆட்டம் போட்டான். அடிப்பாக்கெட்டிலிருந்து கோட்டர் பாட்டிலை எடுத்து மூடி திறந்து அரைப்பாட்டில் அளவு குடித்து கும்மளம் போட்டான்.

அடுத்து காகம் ஒன்றை களத்தில் இறக்கினான் சுள்ளிமேட்டு கருப்பன். ’சேவலுக்கு சேவல் தான்’ என்றான். ஆட்டத்தை நிறுத்தி விட்டு கவுண்டரும் சின்னச்சாமியும் ரசிக்க வந்தார்கள். சென்ற ஆட்டத்தில் யாரும் பந்தயம் கட்டும் முன்னரே ஆட்டம் முடிந்து விட்டதால் இந்தமுறை முதலிலேயே கட்ட தயாராய் இருந்தார்கள். பொன்னுச்சாமிக் கவுண்டர் சின்னச்சாமியை கூப்பிட்டார். அவன் கண்டு கொண்டான். நேராக அவரின் செஞ்சித்திரனை கட்டவிழ்த்து தூக்கி வந்தான். கூட்டம் ஆராவாரம் செய்தது. பொன்னுச்சாமிக் கவுண்டர் தன்னிடமிருந்த கத்தியை அவனுக்கு வெள்ளைத் துணியோடு கொடுத்தார்.

“கருப்பன் தன் சேவலுக்கு கத்தி கட்டி விட்டு அதனோடு பேசிக் கொண்டிருந்தான். ‘ஒரே அடி தான் அடிக்கோணும்! ஆமா வெளையாடீட்டு லேட்டு பண்டீட்டு இருந்தீன்னா ஆவாது’ என்றவன் சேவலை மொகைய விட தயாராய் நின்றான். சின்னச்சாமியும் கிடு கிடுவென களத்தில் இறங்கி விட்டான் செஞ்சித்திரனோடு. ஆட்டம் துவங்கியதும் இரண்டும் பறந்து பறந்து அந்தரத்திலேயே அடித்துக் கொண்டன. ஆனால் பொங்குகள் மட்டுமே பறந்தன. இரண்டுமே சங்காமல் பறந்து அடித்துக் கொண்டன. இரண்டுமே சலைத்தது போல் காணோம். செஞ்சித்திரனுக்கு பூவில் காயம் விழுந்ததை கவனித்தான் சின்னச்சாமி. இருந்தும் தூக்காமல் விளையாட விட்டான். இந்த முறை பறந்து அடிக்கையில் சத்தென்ற சத்தம் விழுந்தது.

காகம் ஒருமுறை களத்தில் புரண்டெழுந்து நிற்கத் தடுமாறியது. அந்த நேரத்தில் செஞ்சித்திரன் பாய்ந்திருந்தால் காகத்தின் சோலி முடிந்திருக்கும். ஆனால் கருப்பன் காகத்தை தூக்கிவிட்டான். கத்திக்காயம் நான்கைந்து இடங்களில் விழுந்திருந்தது காகத்திற்கு. அது நிற்கையிலேயே கருப்பன் கண்டுகொண்டான். செஞ்சித்திரனின் கத்தி விஷம் இதற்கு வேலையைக் காட்ட ஆரம்பித்து விட்டது என்று. புரண்டெழுந்ததும் தாக்காமல் அது நின்றது கண் மங்கலாகி விட்டது தான்.

கருப்பன் பாக்கெட்டிலிருந்து கோவைக்கொடித் தலையை எடுத்து வாயில் போட்டு மென்றான். சாறு வாயில் நிரம்பியதும் காகத்தின் வாயைப் பிளந்து அதனுள் சாறை துப்பினான். காகம் இரண்டு மூன்று மடக்கு கோவைத்தலை சாறை குடித்து பிதுக்கா பிதுக்கா என முழித்தது. இனி அதற்கு பார்வை தெளிவு வந்து விடும். கருப்பன் அதற்கு தலையிலிருந்து கேன் தண்ணியை உடலெங்கும் உற்றினான். அது சிலுப்பிக் கொண்டதும் அடுத்த பறவை விட களத்திற்கு வந்து விட்டான்.

“அடிக்கோணும் பாத்துக்க ராஜா பூட்டி நரம்பு அந்து போறப்புல ஒரு அடி” என்று சொல்லி விட்டான். செஞ்சித்திரனும் நனைந்து தான் சிலுப்பிக்கொண்டு வந்திருந்தது.

“செஞ்சித்திரனை பொங்கூட இனி காகம் செவுட்ட முடியாது இப்பப் பாத்துக்க” என்று சொல்லி சின்னச்சாமி விட்டான் களத்தில். எல்லோரும் செஞ்சித்திரன் ஜெயிக்குது நூறு ஜெயிக்குது இரநூறு என்றர்கள். காகம் ஜெயிக்குது என்று கட்ட ஆள் இல்லை. கருப்பனே காகம் ஜெயிக்குது பந்தயம் வெச்சுக்கலாங்களா நூறு? என்று சின்னச்சாமியிடம் கேட்டான். இரண்டும் பழையபடியே பறந்து அடித்துக் கொண்டிருந்தன. ‘நூறென்னடா நூறு இரநூறு வைடா’ என்றான் சின்னச்சாமி. ’சரிங்கோ இரநூறு’ என்றான் கருப்பன். இந்தமுறை கம்பு பொதபொதவென காகத்திடமிருந்து கொட்டியது. இரைப்பையில் வெட்டு விழுந்திருக்கிறது.

காகம் திடீரென பின் வாங்கி கருப்பனைத் தாண்டிக்கொண்டு கோட்டுக்கு வெளியே முட்டி ஓடியது. கூட்டம் ஆர்பரித்தது. காகம் பேண்டு போட்டு ஓடுதுடா கருப்பா! அது ஓடுன தடத்துல புல்லு கூட மொளைக்காது பாத்துக்க! என்றார்கள். சின்னச்சாமி கையில் பந்தயப்பணம் இரநூறை கொடுத்து விட்டு சேவலைத் தேடி ஓடினான் கருப்பன். அவன் திரும்ப வரும் போது அவன் கையில் சேவல் இருந்தது. அது மிரட்சியோடு கூட்டத்தைப் பார்த்தது. சின்னச்சாமி மிச்ச பாட்டிலையும் குடித்தான். கருப்பா! கொண்டா கொண்டா சாவலக் கொண்டா! கொண்டா கொண்டா சாவலக் கொண்டா! என்று பாட்டாய்ப் பாடி ஆடினான். கருப்பன் காகத்தை கொண்டு வந்து சின்னச்சாமி கையில் கொடுத்தான்.

சின்னச்சாமி அன்று நான்கு கோச்சை அடித்தான். பொன்னுச்சாமிக் கவுண்டரின் செஞ்சித்திரன் இரண்டாவது நடவில் காட்டுப்பாளையம் பெரியசாமியின் ஆந்தையிடம் அடிபட்டு களத்திலேயே சுருண்டு விட்டது. அதோடு அவர் கட்டை விட்டு போய் விட்டார். கோச்சைகளை சின்னச்சாமி வேலுச்சாமிக்கவுண்டர் வீட்டில் தான் வறுத்தான். ஊரில் இருந்த எல்லா பங்காளி உறவுகளுக்கும் அவனே கறி கொண்டு போய்க் கொடுத்தான். வேலுச்சாமிக் கவுண்டர் அதிக போதையில் நினைவு தப்பி கட்டிலில் கிடந்தார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு சின்னச்சாமியும் பூரணியும் நடுச்சாமத்தில் கூடினார்கள். பூரணிக்கு கோட்டரை அன்று முதலாய் ருசிக்க கொடுத்து கறியை ஊட்டி விட்டிருந்தான் சின்னச்சாமி. மயிலாத்தா ஊட்டுக்குள்ளேயே காறித் துப்பிக் கொண்டிருந்தாள்.

# சயனம்15

கொளத்துப்பாளையம் ஊரே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. வெள்ளை அடிக்கப்படாமல் சும்மா கிடந்த வீட்டின் சுவர்கள் பளீரிட்டு நின்றிருந்தன. நான்காம் வகுப்பு சிகாமணி குமரேச வாத்தியார் வீட்டினுள் தட்டுப்படுகிறாரா என்று சோடை பார்த்து விட்டு வெள்ளையடிக்கப்பட்ட சுத்தமான சுவற்றில் கறிக்கட்டையால் வாத்தியார் என்று கோணல் மாணலாக எழுதி விட்டு சிரித்துக் கொண்டே கோவிலை நோக்கி ஓடினான். அவனுக்கு காலையிலிருந்தே அதே வேலை தான். ஊரில் பத்து சுவற்றில் வீட்டின் சொந்தக்காரர் பெயரை எழுதியபடி ஓடிக்கொண்டிருந்தான். இந்த நேரம் வரை யார் கண்ணுக்கும் அவன் சிக்கவில்லை.

ஊரைச் சுற்றிலும் கொடை ரேடியோக்கள் புத்தன் யேசு காந்தி பிறந்தது பூமியில் எதற்காக தோழா ஏழை நமக்காக! என்று பாடிக்கொண்டிருந்தது. அதை காது கொடுத்துக் கேட்பார் தான் ஒருவருமில்லை. ஊரின் எல்லார் வீட்டுக்கும் உறவுச் சனம் வந்திருந்தது. ஒரு வாரமாக ஊரில் மாகாளியம்மன் கோவில் சாட்டு நடந்து கொண்டிருந்தது. இன்று தான் விசேசம் முந்தின இரவு மாவிளக்கு எடுக்க பெண்கள் அரிசி மாவு உரலில் இடித்துக் கொண்டிருந்த சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. உள்ளூர் கோவில் விசேசத்தை ஒட்டி பள்ளிக்கு விடுமுறை விட்டிருந்தார்கள்.

கோவிலின் முகப்பில் விடிய விடிய பறையர்கள் மத்தாளமடிக்க உள்ளூர் ஆட்கள் களத்தைச் சுறிலும் சலங்கை கட்டி ஆட்டமாடிக் கொண்டிருந்தார்கள். பீட்டர் சாரும் போய் நான்கு சுத்து சந்தோசமாக ஆடி வந்தார். அவரின் இடுப்பாட்டத்தை பார்த்துக் கொண்டிருந்த உள்ளூர் பெண்களும் பக்கத்து ஊரிலிருந்து வந்த பெண்களும் ரசித்து சிரித்து கைதட்டினார்கள். அவர் கொஞ்சம் போதையில் இருந்ததால் அவர்களின் கேலி தெரியவே இல்லை.

ரேடியோக்காரன் சும்மாயிராமல் பாட்டை நிறுத்தி விட்டு மைக் ஒன்றை கொண்டு வந்து வேல்களில் ஒன்றில் கட்டித் தொங்க வைத்து விட்டுப் போய் விட்டான். ஊர் முழுதும் கொடை ரேடியோவில் சலங்கைச் சத்தமும், மத்தாளச் சத்தமும் வாக்குவாரம் சொல்லும் பெரியவர் சப்தமும் எதிரொலித்துக் கொண்டேயிருந்தது.

பூசாரி ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை கிணி கிணியென மணியை ஆட்டிக் கொண்டு வந்து சாம்பிராணி புகையுடன் மத்தாளப் பூசை

போட்டுப் போய் துண்டு விரித்து ஆத்தாவின் பக்கத்தில் சுருண்டு கொண்டேயிருந்தான். அவனுக்கு ஒரு வார காலமாக தூக்கம் என்பதே கொஞ்சம் கொஞ்சம் நேரம் தான். மறுபூசை முடித்து கோவில் சாவியை தர்மகர்த்தா பூட்டி எடுத்துப் போகும் வரை அவன் சாமி அடித்த முகத்துடனேயே இருப்பான்.

குமரேசனை பீட்டர் களத்தில் இறங்கி ஆட பலமுறை கைப் பிடித்து இழுத்துக் கொண்டே இருந்தார். ஆட்டகளத்தில் உள்ளூர் பள்ளிப் பிள்ளைகளும் ஆடிக் கொண்டிருந்ததால் அவர்கள் இவன் ஆடப்போனால் ஓடி விடுவார்களோ என்று பயந்து நின்று அவருக்கு மறுப்பு சொல்லிக் கொண்டேயிருந்தான்.

ஆனால் குமரேசனின் கால்கள் தன்னப்போல நின்ற கிடையில் யாரும் பார்க்கா வண்ணம் இரவில் ஒவையவே செய்தன. பறையர்களுக்கு ஒவ்வொரு மத்தாளக் காய்ச்சுக்கும் யாராவது ஒருவர் கோட்டர் பாட்டில் சப்ளை செய்து கொண்டே இருந்தார்கள். சலங்கை கட்டி ஆடியவர்கள் வேர்த்துப் பூத்து தொண்டைத்தண்ணி வத்த டாய்! டாய்! என்று மப்பில் கத்திக் கொண்டே ஆடினார்கள். இவர்கள் போடும் சப்தம் மைக்கில் ஊரில் யாரையும் துங்க விடாது. ஆத்தாவே போதுமடா சாமி உங்க கூத்து என்று காதுகளை பொத்திக் கொண்டு தான் கோவிலுனுள் இருப்பாள் என்று நினைத்துக் கொண்டான் குமரேசன்.

பதினொரு மணி வாக்கில் தான் முப்பாட்டுக்காரர் பொன்னுச்சாமிக் கவுண்டர் கோவிலுக்கு வந்தார். அவரும் கொஞ்சம் போதையில் இருப்பதாக இவனுக்கு தெரிந்தது. அவர் வந்த நேரம் பூசாரி மத்தாளப் பூசை போட்டுக் கொண்டிருந்தான். நேராக வந்தவர் அவன் தட்டத்தில் சூடத்தை கும்பிட்டு விட்டு ஒரு கொத்து தின்னீரு கையில் எடுத்து தன் நெற்றியில் பட்டை பூசிக் கொண்டவர், அட்றா மத்தாளத்த! என்று கொய்ய்ய்ய்ய்ய்ய்! என காது ஜவ்வு பிய்ந்து போகுமளவு ஒரு விசில் அடித்தார் விரல்களில்.

இனி ஆட்டம் பின்னுவாரு பாருங்க அவரு! கூட்டத்தில் வேடிக்கை பார்த்த சனத்திடம் சலசலப்பு வந்தது இவனுக்கு கேட்டது. இன்னம் தலைவரை காணம் அவரு வந்துட்டா ஒரே கூத்தா இருக்கும் என்றார்கள். தலைவர் என்று அவர்கள் சொன்னது வேலுச்சாமிக் கவுண்டரைத்தான். அவரும் பங்காளி சின்னச்சாமியோடு அரைமணி நேரத்தில் வந்து விட்டார்.

அப்புறம் ஆட்டகளம் சூடு பிடித்தது போலாயிற்று. மணி இரவு பனிரெண்டாகியும் வேடிக்கை பார்க்கும் சனம் தூக்கத்தையே

மறந்தவர்கள் போல ஆட்ட களத்தைச் சுற்றி நின்றிருந்தார்கள். குமரேசன் எதேச்சையாகத்தான் அந்தக் கூட்டத்தில் அந்த சுடிதார் அணிந்திருந்த பெண்ணைப் பார்த்தான். அந்தப் பெண் நீண்ட நெடு நேரமாக இவனை கவனித்துக் கொண்டேயிருப்பது இப்போது தான் தெரிந்தது இவனுக்கு. சரி உள்ளூரில் யாரேனும் வீட்டுக்கு வெளியூரிலிருந்து வந்த உறவுக்காரியாக இருப்பாள் என்று அந்தப் பெண்ணைப் பற்றி நினைத்து விட்டிருந்தான். உள்ளூரில் அந்தப் பெண்ணை அவன் இதற்கும் முன்பாக பார்த்திருக்கவில்லை.

இவன் கவனிக்கிறான் என்றதும் அந்தப் பெண் கூட இருந்த தோழியிடம் என்னவோ கிசு கிசுத்தாள். தோழி அதைக் காது கொடுத்து கேட்டு விட்டு வலது கை பெரு விரலை அவளுக்கு உயர்த்திக் காட்டினாள். இதெல்லாம் என்ன சிம்பள்களோவென நினைத்தான் இவன். இருந்தும் அந்த சுடிதார் பெண்ணை இன்னம் சித்த பாரேன் என்று சொல்லிக் கொண்டேயிருந்தது இவன் மனது. சரி ஆட்டம் பார்த்தது போதும் இனிப் போய் தூங்கலாம் என்று முடிவு செய்த நேரத்தில் என்னையும் சித்த பாரேன் என்பது மாதிரி அவள் அழகாக இருந்தாள். அந்த அழகுக்கு தூக்கலாக அவள் சிவந்த மேனி இங்கு நின்றிருந்த எந்த பெண்களுக்கும் இல்லை.

“யாருங்க சார் அந்த பொண்ணு?” என்று அருகில் நின்றிருந்த பீட்டர் சாரிடம் குமரேசன் கேட்டான். அவரோ வேறொரு பெண்ணுக்கு நூல் விட்டுக் கொண்டிருந்தார். அவர் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவளுக்கு தோளில் ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. கவனமின்றி இருந்த பீட்டர், ‘என்ன சார் கேட்டீங்க?’ என்று மீண்டுமொருமுறை கேட்டார்.

“அங்க ப்ரௌன் கலர்ல சுடிதார் போட்டுட்டு நின்னுட்டு இருக்கே அந்தப் பொண்ணு?” என்று குமரேசன் சுட்டிக் காட்டிய பெண்ணைப் பார்த்தவன் ஐய்யோ! என்றார். அது அவன் தங்கியிருக்கும் வீட்டுக்காரரின் ஒரே பெண் ஜெயந்தி. அந்தப்பெண் பனிரெண்டாம் வகுப்பு ஊத்துக்குளியில் முடித்து விட்டு ஒரு வருடமாய் மேலே படிக்கப் போகாமல் கம்ப்யூட்டர் கத்துக்க ஊத்துக்குளி போய் வந்து கொண்டிருப்பதாய் அவள் அப்பா தான் கூறினார் வீடு பார்க்கச் சென்றபோது.

அப்போது அவர் வீட்டு செல்ப்பில் மார்க்சீய புத்தகங்கள் வேறு அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்றால் என்ன? என்ற புத்தகத்தை கையில் தூக்கிப் பார்த்து விட்டு வைத்து விட்டான் அதே இடத்தில். கசாக்குகள், கன்னி நிலம், தாய்,

மனிதனின் மறுபிறப்பு, ஓட்டம் என்று மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பக புத்தகங்களாகவே பல இருந்தன. அவர் ஒரு படிப்பாளி என்று அவன் தெரிந்து கொண்டான். ஊரில் யாரையும் மதிக்காதவர் என்று வேறு கலியன் சொல்லியிருந்தான். இந்தப் பெண் சுஜுகி கியர் வண்டி ஓட்டிக் கொண்டுதான் ஊத்துக்குளி போய் வரும்.

அந்தப் பெண்ணை குறிப்பாக குமரேசன் கேட்ட்தும் வாயடைத்துப் போய் நின்றார் பீட்டர்.

“தெரியுமான்னு தானுங்க சார் கேட்டேன். அதுக்கு என்ன இத்தனை யோசனை?”

“அது காட்டுப்பாளையத்துப் பொண்ணுங்க சார். நான் தங்கியிருக்கிற வீட்டுக்காரரோட பொண்ணுங்க. ஏனுங்க சார் உங்களை எதாச்சிம் சைகை காட்டுச்சா? ஊருக்குள்ள தோட்டம் காடுன்னு பெரிய கையுங்க சார். நாயம் வெச்சுருவானுக. இந்தப்பக்கம் திரும்பிப் பாருங்க சார். இப்படி தொத்தலா பாத்துட்டு விழாவை கொண்டாடிட்டு போறது தான் நமக்கு சரி” என்றார் பீட்டர்.

“ஆமாமா ஏற்கனவே வாத்தியாருக படிக்கிற பொண்ணுகளை அப்படிம் இப்படிம் தப்பு பண்ணிடறாங்கன்னு பேப்பர்ல போட்டு கிழி கிழின்னு கிழிக்கறாங்க. வாத்தியாருக மானம் கப்பலேறி எப்பவோ போயிடுச்சு!”

ஆட்டம் மத்தாளச் சத்தம் எடுபடவில்லையெனவும், என்னடா அடிஅடிக்கறீங்க? என்ற கூக்குரலுடனும் தடைபட்டு நின்றிருந்தது. பறையர்கள், ’மத்தாளத்தை தீயில் காச்சிக் கொண்டு வந்துடறோமுங்க சாமி!’ என்று சாலையைக் கடந்து பெருங்கட்டை புகைந்து கொண்டிருந்த இடம் நோக்கி சென்றார்கள். ஊத்துக்குளி ரெட்டியபாளையத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். போன வருடம் ஒருவன் இவர்களுடன் வந்திருந்தானாம். அடியின்னா அடி அவனடிச்சது தான் அடி! என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவனுக்கு போலீஸ் வேலை கிடைத்து போய் விட்டதாக பேசினார்கள்.

கோவில் திண்டில் கூட்டம் குறைந்திருந்தது. குமரேசன் பீட்டரைக் காணோமென்றதும் பிக்கப் ஆகி போய் விட்டாரோ என்று நினைத்துக் கொண்டு கோவில் திண்டுக்கு வந்தமர்ந்தான். அந்த சுடிதார் பெண்ணையும் அவள் தோழியையும் பழைய இடத்தில் காணவில்லை. குதிரை வீரன் நின்று கொண்டிருந்த திண்டில் பெண்கள் கூட்டமே இருந்தது. அவர்கள் வீட்டுக்கு உறுதியாகப் போய் விட்டார்கள் என்று

தெரிந்தால் இவனும் போய் விடலாமென முடிவு செய்தான்.

மஞ்சுளாவுக்கு வீட்டில் ஒறம்பறைச் சனம் வந்திருந்தது. அவள் காலையில் ஆத்தாவுக்கு விளக்குமாவு எடுக்க வேண்டுமென சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்கு திருவிழாவுக்கான சேலை ஒன்றை இவன் தான் எடுத்துக் கொடுத்திருந்தான். அதை மாவிளக்கு எடுக்கையில் கட்டிக் கொள்ள வேண்டுமென சொல்லிக் கொண்டிருந்தாள். போக அவள் எடுத்திருந்த சேலையை மாலையில் கோவிலுக்கு சாமி கும்பிட வருகையில் கட்டிக் கொள்வேனென்றும் சின்னப்பிள்ளை மாதிரி சொன்னாள்.

அவள் மூன்று மாதம் வயிற்றில் சுமந்து கொண்டிருந்தாள். அது பையன் தான் என்றாள். சந்தோசமிகுதியில் ஒரு சுத்து பெருத்திருந்தாள் மஞ்சுளா. அதை அவள் அம்மா சொல்லிக் காட்டிக் கொண்டேயிருக்கிறாள் என்றாள் இவனிடம்.

நாளை மதிய விருந்துக்கு பொன்னுச்சாமிக் கவுண்டர் அழைத்திருந்தார். வேலுச்சாமிக் கவுண்டர் எப்போதும் ஆத்தாவுக்கு கிடாய் வெட்டுவதில்லையாம். ஆனால் மாவிளக்கு கிடாயும், கும்பம் இரவில் கிணற்றுக்கு செல்கையில் வெட்டப்படும் கிடாயும் அவர் கொடுப்பது தான் என்றார்கள். பீட்டர் சாருக்கும் அவர் அழைப்பு வைத்திருந்ததால் என்னை உட்டுட்டு போயிடாதீங்க சார்! என்று பீட்டர் சொல்லியிருந்தார்.

பந்தம் படித்து சோர்ந்து போன வன்னான், சாமி! என்று இவனருகில் வந்து மண்டையைச் சொறிந்தான். அருகிலிருந்தவர், ’சாமத்துல என்னடா சொறியுறே? மப்புல நிக்க முடியில காசுல குறியா இருக்கான் பாருங்க சார்! எல்லாம் நாளைக்கி தருவாரு போடா!’ என்றார். அவன் வாயிலிருந்த எச்சில் சாறை ஓரமாய் போய் துப்பி விட்டு அப்படியே சென்றான்.

திடீரென மின்சாரம் போனது. ஓவ்! என்று சேர குரல் கொடுத்தார்கள். பந்தம் பிடித்திருந்த வன்னான் சாலையில் நின்றிருந்தான். கோவிலினுள் தீபங்கள் எரிந்து கொண்டிருந்த வெளிச்சம் மட்டுமே இருந்தது.

“இந்தக் கரண்ட்டுக்காரனுக்கு கேடு வந்துடுமுன்னு தான் ஜெனரேட்டர் இந்த வருசம் கொண்டாந்துட்டாங்க சார். எப்ப வருது எப்ப போகுதுன்னு ஒன்னும் தெரியறதே இல்ல. யாரக் கேட்டாலும் ஓட்டு போட்டீங்கள்ள ஒட்டுக்கா போயி அனுபவிங்க அப்படிங்கறாங்க! அப்ப ஓட்டு போட்டா கரண்டு தரமாட்டாங்கன்னா ஓட்டே போட

போவக் கூடாதுங்க சார்!” என்றார் அருகிலிருந்தவர் இவனிடம். ஆனால் ஜெனரேட்டர் ஸ்டார்ட் பண்ணியதும் கரண்ட்டே வந்து விட்டது.

கோவிலைச் சுற்றிலும் சீரியல் பல்ப்புகள் வர்ணமயமாய் எரிந்தன. முகப்பில் பச்சை தென்னை ஓலையில் பந்தல் போட்டிருந்தார்கள். உள்ளே வன்னான் மேலே மாத்து காட்டியிருந்தான். இடம் கண்ட பக்கமெல்லாம் சீரியல் பல்புகள் மின்னின. முகப்பில் வாழை மரம் நின்றிருந்தது மினுக்கிக் கொண்டு. ஆடுகளம் தண்ணீரால் நனைந்திருந்தது.

பறையன் கொந்தி மத்தாலத்தை எடுத்து வயிற்றில் கட்டிக்கொண்டு சோதனை அடி அடித்தான். இப்போது மத்தாளம் கணீர் என்றது. திடுமச்சட்டியை ஒரு வயது முதிர்ந்தவர் கழுத்தில் கயிறோடு மாட்டிக் கொண்டு அவரும் திடும் திடுமென சோதனை செய்தார். சீக்கிரம் வாங்கப்பா அடிச்ச மப்பே இறங்கிடும் போல! யாரோ ஆட்ட களத்தில் நடந்து கொண்டே அழைத்தார். அவரின் சலங்கை சப்தமும், குரலும் அப்படியே கொடை ரேடியோவில் கேட்டது. சிறுவர்கள் ஓடி வேலில் தொங்கிக் கொண்டிருந்த மைக்கைப் பார்த்து கத்தினார்கள். ’மத்தாளம் அடிப்பவர்கள் உடனடியாக கோவிலுக்கு வருமாறு அன்போடு அழைக்கிறோம்!’ என்றார்கள். ’புவனேசுவரி அக்கா நான் ஊட்டுக்கு வரமாட்டேன்’ என்றொரு பொடியான் கத்தினான்.

“சார் இங்கியா உக்காந்துட்டு இருக்கீங்க? சித்த இங்க வாங்க” என்று பீட்டர் சார் இவனை சாலையில் நின்று அழைத்தார். இவன் திண்டிலிருந்து இறங்கி அவரை நோக்கிச் சென்றார்.

“அப்படியே கெழக்கெ சித்த நடந்துட்டு வரலாம் வாங்க” என்றவர் பின்னால் நடந்தான் இவன். அவர் சிகெரட் ஒன்றை பற்ற வைத்து இருட்டு வானம் பார்த்து புகை விட்டார். ‘நாளை இரவு சரியாக ஒன்பது மணியளவில் நமது மாகாளியம் கோவில் கமிட்டியார் சார்பாக திருப்பூர் பாடும் வானம்பாடி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும் என்பதை பக்த கோடிகளுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்!’ என்று கொடை ரேடியோ கத்திக் கொண்டிருந்தது.

“முன்னெல்லாம் வருசா வருசம் திரைக்கட்டி சினிமாப்படம் ஓட்டீட்டு இருந்தாங்களாம் சார்! இப்ப யாரு அதை உக்காந்து பாக்காங்க? எல்லாரும் ஊட்டுக்குள்ள டிவி வெச்சுட்டு புதுப்படமா பாக்குறாங்க!” என்றான் குமரேசன்.

“சார் அந்தப் பொண்ணு என்கிட்ட உங்களை யாரு எவருன்னு விசாரிச்சு தெரிஞ்சிக்கிட்டுதுங்க சார்” என்றார் பீட்டர்.

“எந்தப் பொண்ணு? அட அந்த ப்ரௌன் சுடிதாரா?” என்றான் குமரேசன்.

“என் கிட்டயே நின்னுட்டு பேசிட்டு இருந்தீங்களா நீங்க வேற, சரி எனக்கு தெரிஞ்ச ஆளாத்தான் இருப்பீங்கன்னு ரெண்டு பிள்ளைங்களும் என்னை கப்புன்னு வந்து புடிச்சு இருட்டுக்கு கூட்டிட்டு போயி கேட்டு தெரிஞ்சிட்டுதுக! மொதல்ல எதுக்கு உங்களைப் பத்தி சொல்லனும்னு தான் நினைச்சேன் சார். சொன்னா என்ன ஆயிடப் போவுதுன்னும் நெனச்சிட்டேன். போதாக் குறைக்கு நீங்க வேற கரைட்டா அந்தப் பொண்ணையே யாருன்னு வேற கேட்டீங்களா, சரி புடிக்காம கேப்பாரான்னு ஒரு கணக்குல சொல்லிட்டேன்.” என்றார் பீட்டர்.

“என்ன சார் சொன்னீங்க என்னைப் பத்தி? அவரு உங்க கதைக்கு ஆக மாட்டாருன்னு சொல்லிட்டீங்களா?”

“அப்படி சொல்வேனுங்களா சார்! அவிங்களா கூட்டிப் போய் உங்களை விசாரிகிறதுன்னா என்ன சின்ன விசயமா? எப்பேர்ப்பட்ட விசயம்! அதனால எனக்கொரு லாபம், கூட இருக்குற பொண்ணு கொஞ்சம் எனக்கு கம்பெனி குடுக்கும் போல தெரிஞ்சுது!”

“அது எந்த ஊராமாங்க சார்?”

“அது பாருங்க காட்டுப்பாளையத்துக்குள்ள தான் இருக்குது என் கண்ணுக்கு சிக்குனதே இல்லை” என்றவர் சற்று கோவிலை விட்டு தூரம் வந்ததும் பாக்கெட்டிலிருந்து பாட்டிலை எடுத்து திறந்து ரெண்டு மடக்கு குடித்து பாக்கெட்டில் மிச்சத்தை செருகிக் கொண்டார். சிகரெட்டில் கடைசி இழுப்பை இழுத்து காலில் போட்டு தீயை நசுக்கினார்.

“கிட்ட நின்னு பேசினா இந்த சரக்கு வாசம் வீசுமுன்னு தள்ளி நின்னு வடக்க பாத்துட்டே பேசினேன் சார் அவங்க கிட்ட?’

“நான் அந்த தொத்தலை தள்ளீட்டு போயிட்டீங்கன்னு நெனச்சிட்டேன்”

“அது சும்மா பாத்துட்டு நின்னுட்டு இருந்துச்சுங்க சார். அது அப்பவே ஊட்டுக்கு போயிடுச்சு”

“சரி விசயத்துக்கு வாங்க சார்! என்ன கேட்டாங்க?”

“அவங்க வெவரமானவங்க சார்! மொதல்ல என்னை கேக்கறாங்க அவங்க. அவங்களைப் பார்த்துட்டு நீங்க எங்கிட்ட கேட்டதை என்ன கேட்டாப்லைன்னு என் வாயை பிடுங்கிட்டாங்க!”

“நீங்க போட்டுக் குடுத்திட்டீங்களா?”

“பிள்ளைக கிட்ட பேசுறதெல்லாம் போட்டுக் குடுக்குற வேலை இல்லீங்க சார். சில விசயங்களை தெளிவு படுத்திக்கறதுக்கு. நான் அவிங்க வீட்டுல குடியிருக்கிற ஆள்னு தெரிஞ்சி தான அந்தப்பிள்ளையே தனியா தைரியமா இருட்டுல என்னை கூட்டிப்போயி பேசுது! நான் சொல்லிட்டேன். உங்களைத்தான் யார்னு கேட்டாருன்னு. அப்புறம் பாருங்க அவங்க கிளியராயிட்டாங்க! அவங்களுக்கு என்னைத் தான் என்னைத் தான்னு போட்டியாம் சார். நான் சொன்னதீம் கிளியர் ஆயிட்டாங்க ரெண்டு பேரும். பாருங்க அநியாயத்தை! ரெண்டு பேரு உங்களை டாவடிச்சிருக்காங்க கோயல்ல ஆத்தா முன்னாடி நின்னுட்டு!” என்றார் பீட்டர். இவனுக்கு மனசுக்குள் வெட்கமாய் இருந்தது.

“நீங்க எந்த ஊரு? என்ன சாதி? யாரு வீட்டுல தங்கி இருக்கீங்க? எல்லாம் தெரிஞ்சிடுச்சு அந்தப் பிள்ளை. அப்புறம் பாருங்க அந்தப் பிள்ளையப் பத்தியும் உங்க கிட்ட விவரமா சாதி, ஊரு எல்லாம் சொல்லிடணுமாம் நான். அப்படியே சொல்லி உடுதுங்க சார். உங்க போன் நெம்பரை குடுத்துட்டேன் சார். அதுமோட போன் நெம்பரை கேட்டேன் நீங்க கேப்பீங்கன்னு! குடுக்க மாட்டன்னு சொல்லிடுச்சுங்க சார். அதே பண்டும் பாருங்க உங்களுக்கு! சார் அது கீர் வண்டியெல்லாம் ஓட்டும் சார். கம்ப்யூட்டர் கத்துக்க ஊத்துக்குளி போயிட்டு இருக்குது. அவங்கப்பா பொண்ணை ஆம்பிள கணக்கா வளர்த்தியிருக்காரு! சும்மாவா? கூப்புட்டு உங்களை யாருன்னு விசாரிக்குது பாருங்க! உங்களை தூக்கிட்டே போயிடும் பாருங்க!” என்றார் பீட்டர்.

“இத்தனை கேட்டீங்க அவ பேரைக் கேட்டீங்களா சார்?” என்றான் குமரேசன்.

“ஜெயந்திங்க சார். நல்லா இருக்கா? நல்லா இல்லீன்னாலும் அது தான் பேரு” என்றார்.

“சரி நடங்க ஆட்டம் கொளுத்தீட்டு இருக்காங்க போயி சித்த பாப்பம்” என்று குமரேசன் அவரை இழுத்துக் கொண்டு சென்றான். அங்கே முன்பு இவர்கள் நின்ற இடத்தில் அவர்கள் இருவரும் நின்றிருந்தார்கள்.

“எங்கடி போனே இன்னாவரைக்கிம்? ஊட்டுக்கு போயிட்டீன்னு

தேடிட்டு இருந்தேன்” ஜெயந்தி தான் இவன் கேட்குமாறு சொன்னாள் தோழியிடம். அவள் குரல் அப்படி தேனாய் இவன் காதில் விழுந்தது மத்தளச் சத்ததிற்கு இடையிலும். அவளின் தோழி, ’தூக்கம் வருது போலாம்டி’ என்று குரல் கொடுத்தாள். அதற்கு ஜெயந்தி என்ன சொல்கிறாள் என்று காது கொடுத்தான் இவன். ‘எனக்கு வீட்டுக்கு போக மனசே வரலடி. இப்பத்தான கிட்டப் பாக்கேன். இன்னொரு காச்சு முடிஞ்சு போலாம்டி’ என்றாள். இவர்கள் இருவரும் அவர்களின் பின்பக்கமாய் போய் நின்றார்கள்.

“சார் எள்ளுதான் எண்ணெய்க்கி காயுது எலிப்புளுக்கை எதுக்கு காயணும்?” என்றார் பீட்டர்.

“நெனப்புத்தான் பொழப்பக் கெடுத்துச்சாமா!” அவள் தோழி பின்னால் திரும்பி பீட்டருக்கு சொன்னாள்.

“சார் இந்த எடத்துல பொகை வருது நான் அப்படி திண்டுல போயி உக்காந்துக்கறேன்” என்று பீட்டர் நழுவ இவன் ஒருவன் மட்டும் இப்படி கண்ணுக்கு லட்சணமான பெண்ணின் பொறவுக்கு நின்றால் பார்க்கிறவர்கள் முடிச்சு போடுவார்கள் என்று குமரேசனும் திண்டுக்கே வந்து அமர்ந்தான்.

“நீங்க நிக்க வேண்டியது தானுங்களே சார். அது கொஞ்சம் கடுப்பா பேசினாப்ல இருந்துச்சு. மப்புல தப்பாயிடுமுன்னு வந்துட்டேன்.”

“அதை விடுங்க சார். இந்தக்காலத்துல பொண்ணுக அப்படித்தான். பிடிச்சிருந்தா பழக தயக்கமே காட்ட மாட்டாங்க. பிடிக்கலையா இப்படி எதாச்சும் சொல்லி கடுப்பை கிளப்பிடுவாங்க!” என்றான் குமரேசன். அவர்கள் அடுத்த காச்சலுக்கு நிற்கவில்லை. இவர்கள் திண்டுக்கு வந்து அமர்ந்ததுமே ஜெயந்தி திரும்பித் திரும்பி இரண்டு முறை குமரேசனை பார்த்தாள். கையை செல்கையில் இவனைப் பார்த்து அசைத்தது மாதிரியும் இருந்தது.

இவனும் பீட்டரை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டான். பீட்டர் இவன் வீடு வந்ததும் பாயில் விழுந்தவர் அடுத்த கணமே தூங்கிப் போனார். பாயில் இவன் விழுந்தும் தூக்கம் தான் வரவில்லை. ஜெயந்தியின் ஞாபகமாகவே இருந்தது. பார்த்த உடனேயே ஒரு பெண்ணைப் பிடித்து விடுமா என்ன? போக அவளுக்குமல்லவா பிடித்திருக்கிறது. காலையில் கோவிலுக்கு வருவாளா? என்றிருந்தது. கண்டிப்பாக வருவாள் என்று நினைத்தான். எப்போது தூங்கினானென்றே தெரியவில்லை பட்டாசு சத்தம் கேட்டுத்தான்

விழித்தான். பாயில் பீட்டரை காணவில்லை. கதவு திறந்து வெளியே பார்க்கையில் பச்செனெ விடிந்திருந்தது.

இவன் குளித்து ஆயத்தமாகச் சென்றான் பாத்ரூமுக்கு. கொடை ரேடியோவில் அறிவிப்பை உன்னிப்பாய் கேட்டான். மாவிளக்கு கோவிலருகே நிற்பதாய் அறிவித்தார்கள். சலங்கை சப்தமும், மத்தளச் சப்தமுமே கேட்டது. இவன் விரைவாக குளித்தான். பேண்ட் அணிந்து கொள்வதை விட வேட்டி அணிந்து கொண்டான். பசி வேறு பயங்கரமாய் இருந்தது. இரவு நேரம் கழித்து தூங்கியதால் கண்கள் கண்ணாடியில் பார்க்கையில் சிவந்திருப்பது தெரிந்தது.

பீட்டர் இவன் தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து எழுப்பாமல் போயிருப்பார் என்று நினைத்தவன் கதவை பூட்டி சாவியை பாக்கெட்டில் போட்டுக் கொண்டு கோவிலுக்கு வந்தான். மாவிளக்குகள் கோவிலுக்குள் கூட்டமாய் சென்று கொண்டிருந்தன. அவற்றை ஆத்தா முன் வைத்து பூஜை செய்வார் பூசாரி. இவனுக்கு அதெல்லாம் முக்கியமாய்ப் படவில்லை. பெண்கள் கூட்டம் பச்செனெ கோவிலுக்குள் நின்றிருந்தது. பொம்மைக் கடைக்கார்கள் சாலையோரத்தில் புதிதாய் முளைத்திருந்தார்கள்.

ஆட்டகார்கள் சங்காமல் ஆடிக்கொண்டிருந்தார்கள். இப்போது அங்கு இரவில் ஆடிய சலங்கைக்காரர்கள் இல்லை. இவர்கள் இளவட்டங்களாய் இருந்தார்கள். கொந்தி மத்தாளக்காரன் நாக்கை வெளியில் நீட்டி கடித்தபடி இன்னிக்கி மத்தாளம் ஒடஞ்சாலும் சரியென அடி பின்னியெடுத்துக் கொண்டிருந்தான்.

வழுவிலிருந்து வேடிக்கை பார்க்க வந்தவர்கள் சாலைக்கு அந்தப்புறமாக நின்றிருந்தார்கள். அவர்களும் அந்துசாய் புதுச்சேலை அணிந்திருந்தார்கள். அந்த கூட்டத்தில் இந்திரா டீச்சரைப் பார்த்தான். இவனுக்கு ஏனோ சங்கடமாய் இருந்தது. அவள் இவரைப் பார்த்து புன்னகைத்தாள். குமரேசன் சாலையைக் கடந்து அவளிடம் சென்றான். ‘எங்க ஊரு நோம்பி எப்படிங்க சார் இருக்குது? உங்க ஊர்லயும் இப்படித்தானா?’ என்றாள். இவன் ஆமாம் என்றான். பீட்டர் சாரை எங்கு தேடியும் காணோம். கோவிலைச் சுற்றிலும் அதிகமாய் கூட்டமிருந்தது.

கோவிலில் பூஜை மணி ஒலித்துக் கொண்டேயிருந்தது. சைக்கிளில் அகலமான கூடை கட்டி அதில் பூக்களை வியாபாரம் செய்து கொண்டிருந்தான் ஒருவன். அந்த இடத்தை பார்த்ததும் தான் ஒருகணம் இவன் இதயம் படக் படகென துடிக்க ஆரம்பித்து விட்டது. ஜெயந்தியை

அடையாளமே இவனுக்கு பகலில் தெரியவில்லை. தவிர சுடிதாரில் இரவில் பார்த்ததால் அந்த நினைப்பிலேயே இருந்து விட்டான் குமரேசன். மஞ்சளும் வெள்ளையும் கலந்த ஒரு நிறத்தில் சேலையில் இருந்தாள் அவள்.

அவள் இவனைக் கவனித்தாளா என்பது இவனுக்கு தெரியவில்லை. இப்பேர்ப்பட்ட அழகை கொத்திக் கொண்டு போகாவிட்டால் மனுசனே கெடையாது என்று முடிவே எடுத்து விட்டான் குமரேசன். அவள் மல்லிகைப் பூவை தன் தலையில் சைடூசி வைத்து குத்திக் கொண்டு திரும்புகையில் இவனைப் பார்த்து விட்டாள். இவன் பார்ப்பது தன்னைத் தான் என்று தெரிந்ததும் ஒரு நொடி முகத்தை சுழித்துக் காட்டினாள். அழகா கடிச்சுத் திங்கற மாதிரி இருக்காளேன்னு பார்த்தா திமுரப்பாரு! என்று எண்ணினான் இவன்.

அவளுடன் வால் பிடித்தபடி சுற்றிய தோழியைக் காணவில்லை. இவனும் இனி அவள் பார்த்தால் சுழித்துக் காட்ட வேண்டுமென அதை பிராக்டீஸ் செய்து பார்த்தான். ஓரளவு சரியாய் இருக்குமென நினைத்தவன் அதை கொஞ்சம் நேரத்திலேயே அவள் பார்த்த போது காட்டி விட்டான். அவளோ கண்ணை உருட்டி மிரட்டினாள் யாரும் பார்க்காத வண்ணம். இவன் பயந்தது போல நடித்தான் முகத்திலேயே! அவள் புன்னகைத்தாள். அது அவ்வளவு அழகாய் இருந்தது.

மாவிளக்குத் தட்டுகளை ஏந்தியபடி பெண்கள் கோவிலில் இருந்து வெளியேறினார்கள். தட்டுகளில் பச்சைமாவை சதுரம் பிடித்து நிற்கும் வண்ணம் இரண்டு வைத்திருந்தார்கள். அதில் தேங்காய் மூடி ஒன்றும் வாழைப்பழ சீப்பும் இருந்தது. வாழைப்பழத்தில் வட்டமான காகித வர்ணப் பூக்களை குத்தியிருந்தார்கள். சிலர் பனங்குறுத்தோலையில் பூ மாதிரி வெட்டி குத்தி வந்திருந்தார்கள். மஞ்சுளா மாவிளக்கு தட்டத்துடன் கோவிலில் இருந்து வந்தவள் இவனைப் பார்த்து கிட்டே வந்தாள். எங்கூட்டுலயே இட்லி சாப்பிட்டுக்கலாம் வாங்க! என்றவள் சேலை நல்லா இருக்கா? என்று முனகிச் சென்றாள்.

இவன் சேலையை அப்போது தான் கவனித்தான். மஞ்சுளாவுக்கு ரோஜா வர்ணத்தில் இவனாகத்தான் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொடுத்திருந்தான். அது அவளுக்கு எடுப்பாய் இருந்தது. இதை கவனித்துக் கொண்டிருந்த ஜெயந்தியின் முகம் தான் உப்பிப் போனது போல் ஆயிற்று. இவன் அதன் பின் பார்க்கையில் எல்லாம் முகத்தை திருப்பிக் கொண்டாள். இவனுக்கு சிரிப்பாய்த் தான் இருந்தது. இப்படி முகத்தை திருப்புவாள் என்று தெரிந்திருந்தால் இன்னம் சித்த நேரம்

மஞ்சுளாவை தன் பக்கத்தில் நிறுத்தி வைத்திருக்கலாம் என்று தோன்றியது.

ஆனால் அவள் வேண்டுமென்றே ஆட்டகளத்தில் ஜீன்ஸ் பாண்ட், டீசர்ட் அணிந்திருந்த ஒருவனை கூப்பிட்டு என்னவோ பேசினாள். அவன் ஆட்ட களத்திலிருந்து வெளியேறி சாலைக்குச் சென்றான். ஜெயந்தி வேண்டுமென்றே இவன் ஒருத்தியுடன் பேசியதற்காக செய்கிறாள் என்பதை அப்பட்டமாகக் காட்டினாள்.

வெளியே சென்றவன் ரோஜா வர்ணத்தில் ஒரு பெரிய பலூன் ஒன்றை வாங்கி வந்து அவள் கையில் கொடுத்து விட்டு ஆட்டகளத்தில் நுழைந்து கொண்டான். அவள் பலூனை தன் கன்னத்தில் உரச வைத்துக் கொண்டே இவனிடம் கடுப்பு முகத்தில் தெரிகிறதா என்று பார்த்தாள். இந்தப் புத்தி ஆவாதுடி உனக்கு! என்று மனதில் இவன் நினைத்துக் கொண்டான்.

கோவிலுக்கு கிடாவெட்டுக்கு கிடாய்களைப் பிடித்துக் கொண்டு சிலர் வந்தவண்ணம் இருந்தார்கள். ஆத்தா முன் முப்பாட்டுக்காரர் பொன்னுச்சாமிக் கவுண்டர் கையில் கிடாய் வெட்டும் கத்தியை பிடித்துக் கொண்டு நின்றிருந்தார். ஆட்டகாரர்கள் ஆட்டத்தை முடித்துக் கொண்டு சலங்கைகளை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். ஜெயந்தி கோவிலுக்கு பின்புறம் சென்றாள். அவள் பின்னால் செல்வது தனக்கு சுத்தப்படாது என்று நினைத்துக் கொண்டான்.

கிடா வெட்டு துவங்கி விட்டது. தீர்த்தத் தண்ணியை வெட்டுகிடாய்களுக்கு பூசாரி தெளித்தான் துளுக்கின கிடாய்கள் வெட்டுக்கு வந்தன. துளுக்கும் போதெல்லாம் குல்லலல்லோ! என்று சேரக் குரல் கொடுத்தார்கள். சத் சத்தென கிடாய் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வெட்டே போட்டார் சின்னச்சாமிக் கவுண்டர். ஆடுகள் தலையிழந்து உடல் துடிக்க கிடந்தன. அவற்றின் கால்கள் உதைத்துக் கொண்டேயிருந்தன ஈரமண்ணை. இதைப் பார்க்க சங்கடப்பட்டுத்தான் ஜெயந்தி போயிருப்பாள் என்று நினைத்துக் கொண்டே இவனும் கோவிலின் பின்புறம் வந்தான். அவள் அங்கும் இல்லை என்றதும் பசி வயிற்றைக் கிள்ள வீடு கிளம்பினான்.

குமரேசன் வீடு வந்து கதவு நீக்கி உள்ளே வந்த போது பீட்டர் சார் தன் பைக்கை கொண்டுவந்து இவன் வாசலின் ஓரத்தில் நிறுத்தி விட்டு உள்ளே வந்தார். 'நல்லா தூங்கிட்டு இருந்தீங்க சார். அதான் நான் எழுந்ததும் கதவை சாத்திட்டு கிளம்பிட்டேன். இப்ப பைக்குல உங்காளை பார்த்தேனே சார். எனக்கொரு புன்னகை இலவசமா

கிடச்சுது’ என்றார் பீட்டர். பீட்டர் ஜீன்ஸ் பேண்ட்டும் வெள்ளை சர்ட்டும் அணிந்திருந்தார்.

“ஆமா நீங்க பார்த்தப்ப சேலையிலா பைக்கை ஓட்டினா ஜெயந்தி?” என்றான் குமரேசன்.

“இல்லீங்களே! சுடிதார்ல தான் இருந்தாப்ல” என்றபோது இட்லிக் குண்டானோடு மஞ்சுளா வீட்டினுள் வந்து சமையலறையில் போய் வைத்துவிட்டு வந்தாள்.

“சார் உங்க பைக் சத்தம் கேட்டதும் உங்களுக்கும் சேர்த்து இட்லி கொண்டு வந்திருக்கேன். நீங்களும் சாப்பிடுங்க சார்” என்றாள்.

“நல்லவேளை நான் வீடு போய் ஒன்னும் செய்யலீங்க சார். உங்களை கூட்டிட்டு எல்லக்காடு போய் ரெண்டு இட்லி சாப்டுட்டு வந்துடலாமுன்னு வந்தேன்”

“சார் மத்தியானம் நீங்க ரெண்டு பேரும் எங்க வேணாலும் அழைப்பு கெடச்சா போங்க வேண்டாங்கல ஆனா நைட்டு எங்க வீட்டு மட்டனைத்தான் சாப்பிடணும். வீட்டுல ஒறம்பரைக இருக்குங்க. நீங்க சாப்பிடுங்க” என்று சொல்லி விட்டுச் சென்றாள். இத்தனை நேரம் அணைந்து கிடந்த ரேடியோ மீண்டும் கத்தத் துவங்கியது.

“கலியன் இருந்தப்ப எனக்கு ஜோடிக்கி வசதியா இருந்துச்சுங்க சார். ஆளில்லைங்காட்டி தனியா நானே அங்கீம் இங்கீம் போயிட்டு வரவேண்டிதா இருக்குது. அவன் சம்சாரத்தை இப்பத்தான் கோவில் கிட்ட பார்த்துட்டு வந்தேன் சார். எட்டு மாசம் ஆயிடுச்சாம். பாவம் குழந்தையைக் கூட பாக்கமுடியாம போயிச் சேர்ந்துட்டான் மடப்பயல்” என்றவருக்கு வட்டலில் இட்லி போட்டு கொண்டுவந்து கொடுத்தான் குமரேசன். அவனும் இட்லி சாப்பிட்டான்.

இருவரும் சாப்பிட்டு முடித்தான பின் டிவியை சித்த நேரம் பார்த்தார்கள். மஞ்சுளாவின் வீட்டு டிவிக்கு கேபிள் கனெக்சன் போட்டிருந்தான். காலையில் இட்லி தின்றதால் இவனுக்கு கொட்டாவி மேல் கொட்டாவியாக வந்தது. பாயை எடுத்து டிவி முன் போட்டு சாய்ந்தான்.

“சார் இனி கோவில்ல பொழுதோட தான் விசேசம். உங்காள் கண்டிப்பா வரும் சார். விடாதீங்க எங்காச்சிம் கூட்டிப் போய் நாயம் போடுங்க” என்றார் பீட்டர். இவனுக்கும் அது ஆசையாகத்தான் இருந்தது. ஆனால் நடக்க வேண்டுமே!

“சார் போன் நெம்பர் கொடுத்தேன் இன்னும் போன் வரவே இல்லீங்களா சார்?” என்று பீட்டர் கேட்டதற்கு இல்லையென்று தலையாட்டினான்.

“வெட்கப்பட்டுட்டு பேசாம இருக்கிற பிள்ளை இல்லீங்களே அது! சரிங்க சார் நீங்க படுத்துட்டு டிவி பார்த்துட்டு இருங்க! மணி பதினொன்னுக்கும் மேல ஆச்சுங்க. எல்லக்காடு வரைக்கும் போய் ரெண்டு பாட்டில் வாங்கி வண்டிப் பொட்டில போட்டுட்டு வந்துடறேன். மத்தியானம் கறி விருந்துக்கு வேற போறோம் துளி நனைக்காம போனா சுத்தப்படுமுங்களா?” என்று கிளம்பியவருக்கு தலையை ஆட்டினான் குமரேசன். அவன் வண்டி கிளம்பிப் போனதும் மஞ்சுளா வந்து சமையலறையில் வட்டில்கள் கழுவி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து இவனிடம் அருகில் வந்து பாயில் அமர்ந்தாள்.

“இந்த நடிப்புத் துக்கமெல்லாம் வேண்டாங்க! வட்டலை யாரு உங்களை கழுவச் சொன்னது? வர்றதுக்குள்ள பெரிய நிது மாதிரி கழுவிடறது. வச்சிருந்தா நான் வந்து கழுவி வச்சுட்டுப் போறேன். சரி சேலையைப் பத்தி நீங்க ஒன்னும் சொல்லலை?” என்றாள் இவன் காதுக்கருகில் குனிந்து.

“அட்டகாசமா இருக்கு மஞ்சு”

“அப்படித்தான் எல்லாரும் சூப்பர்னு சொன்னாங்க. ஆனா எனக்கு இந்தக்கலரு புடிக்காது. நீங்க வாங்கிக் குடுத்ததால கட்டினேன். சரி எனக்கு அது இல்லியா இன்னிக்கி?” என்றாள்.

“எது? அதுன்னு மொட்டையா சொன்னா என்ன தெரியும்?”

“நோம்பி முத்தம்”

“கேட்டுட்டு இருக்குற நேரம் குடுத்திருக்கலாம்” என்றான். கதவு திறந்திருந்தாலும் பரவாயில்லை என முடிவு செய்தவள் வசதியாக குப்புறப் படுத்து அவன் உதட்டை மென்றாள்.

“மேற்படி இல்லியா?” என்றான் குமரேசன். முத்தத்தை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

“ஒறம்பரைக இன்னம் ரெண்டு நாள் இருப்பாங்க. அவங்க போனதும் ஆரம்பிச்சுக்கலாம்” என்றவள் கிளம்பிச் சென்றாள். குமரேசன் டிவியில் ஹமாம் விளம்பரத்தை பார்த்தான். அந்த சமயம் அவன் போன் வர்ர்ர் வர்ர்ர் ரென பாயில் நகர்ந்தது. புதிய எண்ணாக இருக்கவும் ஜெயந்தியாகத்தான் இருக்குமென நினைத்து எடுத்தான்.

“மேடம் சொல்லுங்க!” என்றான் எதிர்முனையில் பேச்சைக் கேட்காமலே!”

“மேடமா? அது யாருங்க மேடம் உங்களுக்கு?” ஜெயந்தியின் குரல் இவனுக்கு நேற்று இரவே தெரியுமல்லவா!

“நீங்க தான் எனக்கு நேத்து நைட்டுல இருந்தே மேடமாயிட்டீங்களே! சொல்லுங்க மேடம். இப்பத்தான் போன் பண்ண தோணுச்சுங்ளா? நீங்க என்னடான்னா பைக் ஓட்டுற ஆம்பளைன்னு சொன்னார் சார் வேற! காலையிலயே கூப்பிடுவீங்கன்னு நெனச்சேன்.”

“என்னைப்பத்தி பீட்டர் என்ன சொன்னார்னு சொல்லுங்க”

“நீங்க சொல்லச் சொன்னதை எல்லாம் சொல்லிட்டார். எக்ஸ்ட்ராவா சொன்னது தான் ஆண்பிள்ளை கணக்கா இருக்கும்னு சொன்னதுன்னு நினைக்கிறேன். சரி அது எதுக்கு எனக்கு. நீங்க காலையில திடீருன்னு காணாமப் போயிட்டீங்களே!”

“கெடா வெட்டு ஆரம்பிச்சா நான் அங்க நிக்க மாட்டேன். எனக்கு தலை சுத்தும். கீழே விழுந்துடுவேன். அதான் நைசா கிளம்பிட்டேன்.”

“நெனச்சேன் அப்படித்தான் இருக்குமுன்னு. ஆமா அப்ப மட்டன் சாப்பிட மாட்டீங்களா?”

“அதெல்லாம் புல்லா சாப்பிடுவேன்”

“நல்லதாப் போச்சு”

“எதுக்கு இப்ப நல்லதாப் போச்சுன்னு சொன்னீங்க?”

“நான் நல்லா சாப்பிடுவேன். அதுக்கு சொன்னேன்”

“சாயந்திரம் நான் ஆர்கெஸ்ட்ரா பார்க்க வருவேன். நீங்க வருவீங்களா?”

“எதுக்கு தூரமா நின்னுட்டு மூஞ்சிய கோணச்சு காட்டவா?”

“ஐய்யே நீங்களும் தான காட்டுனீங்க. நல்லாவே இல்ல”

“ஆனா நீங்க கோணிச்சு காட்டுறப்ப ஓடி வந்து…”

“ம், ஓடி வந்து என்ன பண்ணியிருப்பீங்க?”

“ஒன்னும் பண்ணியிருக்க மாட்டேன்”

“ஜோக்கு! நீங்க வருவீங்களா மாட்டீங்களா சொல்லுங்க”

“நான் வரலீன்னா மேடம் என்ன பண்ணலாமுன்னு நெனச்சிருக்கீங்க?”

“நானும் வர மாட்டேன். நான் வர்றதே உங்களைப் பார்க்கத்தான்”

“அதான் காத்தாலகூட பார்த்துட்டு தான நின்னீங்க”

“அப்படியே தின்னுடறாப்ல அப்படியா பார்ப்பீங்க. கிட்ட வந்து கண்ணை நோண்டி எடுத்துடலாம்னு இருந்துச்சு எனக்கு”

“சேலையில திடீருன்னு பார்க்க அடையாளமே தெரியலங்க எனக்கு உங்களை. நைட்டு பார்த்த பொண்ணோட அக்காவா இருக்குமுன்னு நெனச்சேன்”

“எனக்கு அக்காவே இல்ல. வீட்டுல நான் ஒருத்தி தான். உங்களுக்கு எந்த ட்ரஸ்ல நல்லா இருந்துச்சு”

“ரெண்டு ட்ரஸ்சுமே அழகு தான் என் கண்ணம்மா”

“நீங்க என்ன பாரதியாரா கண்ணம்மா போடறீங்க?”

“தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடி நந்தலாலா! நந்தலாலா! காக்கை சிறகினிலே நந்தலாலா!”

“ஐய்யோ போதும் நீங்க பாடகர் தான் ஒத்துக்கறேன் சாமீஈ...”

“மேடம் ஒரு ஜாலி மூடுல பாடிக்காட்டுனா போதும்னு சொல்றீங்க. நீங்க பாடுங்க ப்ளீஸ்”

“உன்னை நான் சந்தித்தேன் நீ ஆயிரத்தில் ஒருவன்! என்னை நான் கொடுத்தேன் என் ஆலயத்தின் இறைவன்! ஆலயத்தின் இறைவன்! எப்பூடீஈ?”

”அப்ப நைட்டு ஆர்கெஸ்ட்ரா நாம வச்சுக்கலாம் தனியா! என்ன சொல்றீங்க மேடம்?”

“நான் உங்க கிட்ட நிலா பார்த்துட்டு மடியில படுத்துட்டு பேசணுமுன்னு ஆசையா இருக்கு”

“ஆசையெல்லாம் சரிங்க மேடம். எனக்கும் உங்களை பார்த்ததும் போன ஜென்மத்துல எனக்கு பொண்டாட்டியா இருந்த ஜெயந்தி ஞாபகம் வந்திடுச்சு! அதென்ன மறு ஜென்மத்துலயும் ஜெயந்தின்னே உங்க ஃபாதர் பேர் வச்சிருக்காரு உங்களுக்கு?”

“பொள்ளாச்சி குசும்பு?”

“அதான் காலையில பலூன் வச்சிட்டு குசும்பு பண்ணி உங்க ஊரு குசும்பை காட்டீட்டீங்களே!”

“பின்ன கடுப்பாயிட்டேன் தெரியுமா நானு. நானே விடிஞ்சும் விடியாம குளிச்சு, சேலை கட்டத் தெரியாம எங்கம்மா கிட்ட கெஞ்சிக் கூத்தாடி சாரை பாக்கலாமுனு ஜொள்ளு ஊத்துறதுக்கு சொய்ய்ங்குன்னு வந்தா சாரு வேற ஒருத்தி கூட கொஞ்சிட்டு நின்னா கோவம் வருமா வராதா? சொல்லுங்க”

“அதுக்குன்னு உடனே சின்னப்பொண்ணாட்ட பலூன் வாங்க ஒரு ஆளு வேணுமுங்களா மேடத்துக்கு?”

“பின்ன ஸ்பாட்டுலயே ஆப்பு வெப்போம்ல! கடுப்பானீங்களா இல்லியா?”

“கடுப்பு எதுக்கு ஆகணும் நான்? அந்தப் பொண்ணு எங்க ஸ்கூல் சாப்பாட்டுக்காரம்மா! அவங்க சாப்பாடு போட்டாத்தான் எனக்கு புவ்வா!”

“எல்லாம் கேட்டுத் தெரிஞ்சிட்டேன் நீங்க ஒருக்கா கதை சொல்ல வேண்டாம்”

“மேடம் இன்னம் என்ன என்ன என்னைப் பத்தி தெரிஞ்சுட்டீங்க?”

“நீங்க அநியாயத்துக்கு நல்லவருன்னு தான். எனக்கு பயமா இருக்கு இப்ப. இத்தனை நல்லவரோட பழக முடியுமான்னு. ஒரு கெட்ட வழக்கம் கூட இல்லீன்னா எப்படிங்க சார் ஒரு பொண்ணு உங்களை லவ் பண்ணும்? என்ன தைரியத்துல லவ் பண்ணும் சொல்லுங்க”

“சரிங்க மேடம் நைட்டு வாங்க நீங்க! ஒரு கெட்ட வழக்கம் பண்ணிக் காட்டிடறேன்”

“அதுக்கெல்லாம் உங்களுக்கு வயசு பத்தாதுன்னு நினைக்கிறேன்”

“உங்களைத்தான் ஆண்பிள்ளையின்னு சர்டிபிகேட் குடுத்தார் பீட்டர். அப்ப நான் தான் பயந்துட்டு வரணும்.”

“அப்படியே நெனச்சிக்கங்க! ஆமா எங்க சந்திக்கறது நாம? இன்னிக்கி தான் நாம நைட் சந்திக்க சான்ஸ் இருக்குங்க. அப்புறம் நைட்ல நாம சந்திக்கவே முடியாது! போன்ல தான் பேசிக்க முடியும். என் பைக்கை எடுத்துட்டு வர்றேன். தூரமா போயிடுவமா?”

“அதெல்லாம் ஒன்னும் வேண்டாம் மேடம். என் வீட்டுலயே சந்திப்போம்.”

“வீட்டுல குசுகுசுன்னு பேசணும் போரடிக்கும். அப்புறம் முதலிரவு கொண்டாடப் பாப்பீங்க நீங்க. ரொம்ப மூடாயிடும்னு சொல்றாங்க. நான் வேண்டாம் வேண்டாமுன்னு சொல்வேனாம். நீங்க வேணும் வேணுமுன்னு சொல்றன்னு நெனச்சிட்டு…”

“பேக்கு மேடம். கம்முன்னு இருக்கீங்களா சித்த.”

“அதான் சொன்னேன் உங்களுக்கு கெட்டபழக்கம் ஒன்னுமில்லீன்னு” சிரித்தாள்.

“சரிங்க மேடம் என்னை பார்த்ததீம் எப்படி பிடிச்சுது உங்களுக்கு?”

“உங்களுக்கு எப்படி பிடிச்சுதோ அப்படி. கேள்வியைப் பாரு. அழகா கண்ணுக்கு லட்சணமா இருக்குதேன்னு சைட் அடிச்சேன். கூட இருந்தவளும் சைட் அடிச்சிருக்கா உங்களை! அவ சொல்றா அவளைத் தான் சைட் அடிச்சீங்கன்னு. பெட்டு வேற கட்டிக்கலாங்கறா! எனக்கு என்ன டவுட்டு இருந்துச்சுன்னா ஊருக்குள்ள இத்தன நாளு இப்படி ஒரு சைட்டை விட்டு வெச்சிருப்பாளுகளான்னு தான். கொத்தியிருப்பாளுகன்னு நெனச்சேன். பார்த்தா நோம்பி நாள்ல சாமத்துல ஓரம் கட்டுவீங்கன்னு பார்த்துட்டு இருந்தேன். அதும் இல்ல! உங்களால நேத்து இரநூறு ரூவா லாபம். அவ தோத்துப் போயிட்டா!”

“அட என்ன பிள்ளைங்க நீங்க! பெட்டெல்லாம் கட்டி பின்னியிருக்கீங்களே!”

“அவ இன்னொரு பெட்டு கட்டினாள்ங்க. அதை சொல்லக் கூடாது”

“இத்தனை சொன்னீங்க அதையும் சொல்லுங்க மேடம்”

“அவ தோத்து பணத்தை கொடுத்துட்டு ஒரு மாசத்துல உங்களை செட் பண்ணி காட்டுறேன் வர்றியா பெட்டுக்குன்னு கேட்டாளுங்க! திமுரு! பெட்டுல ஜெயிக்கறதுக்கு அவ என்ன வேணாலும் பண்டுவா கிறுக்கி! அப்புறம் நான் தான் மூக்கைச் சிந்தணும்”

“அதுக்கும் சேரின்னு பெட்டு கட்டியிருந்தா நல்லா இருந்திருக்குமே மேடம்”

“ம்! இருக்கும் இருக்கும்! அப்படியே பிச்சிப் போடுவன் கண்ணுல கண்டேன்னா”

“அந்தப் பொண்ணு என்ன உங்க ஊரா? காலையில் ஜோடியா வரக்காணமே!”

“நான் அழுவேன் இப்ப! அவ ப்ரண்ட்சிப்பை நைட்டே கட்

பண்ணீட்டேன்”

“ச்சே என்னால உங்க நட்பு கெட்டுப் போச்சு பாருங்க மேடம்”

“போனா போயிட்டு போவுது மண்ணாங்கட்டி நட்பு. நட்புன்னா எனக்கு ஹெல்ப் பண்றவளா இருக்கணும். இவ ஹெல்ப் பண்றேனுட்டு காட்டிக்கூட உங்களை அமுத்திக்குவா! திமுரு புடிச்சவ! இப்ப உங்க பீட்டர் சார் என்ன அவளாட்டமா பேசுனாரு பெட்டு கட்டுனாரு? என்னைப் பத்தி போயி சொல்லுங்கன்னு சொன்னதீம் அப்பவே கூட்டிப் போய் உங்ககிட்ட சொன்னாரா இல்லையா! நீங்க அவ பேச்சை உடுங்க எனக்கு கடுப்பாவுது.”

“மேடம் இவ்ளோ பேசுறீங்க ஒரு பொண்ணு வாயால அந்த ஒன் போர் திரியை கேட்டதே இல்லை. ஒரு வாட்டி சொல்லுங்களேன் கேட்டுக்கறேன்”

“நைட்டு சொல்றேன். அப்பத்தான் ஜாலியா இருக்கும்”

“இந்த நேரம் உங்க தோழி கிட்ட கேட்டிருந்தா வாய் மூட மிந்தி சொல்லியிருப்பாங்க”

“டேய் கோபம் வந்துரும்டா எனக்கு! அப்புறம் கண்டபடி திட்டுவேன். ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!”

“போதும் மேடம்!”

“ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ! ஐ லவ் யூ!” சொன்னவள் போனை கட் செய்து விட்டாள். இவனுக்கு திரும்ப கூப்பிடலாமா என்றிருந்தது. ஆனாலும் விட்டு விட்டான்.

அன்று மதியம் பீட்டரும் இவனும் பொன்னுச்சாமிக் கவுண்டர் வீட்டுக்குப் போய் சாப்பிட்டு வந்தார்கள். இவர்கள் கிளம்பி வரும்போது தான் ஜெயந்தி அவள் அப்பாவோடு பொன்னுச்சாமிக் கவுண்டர் தோட்டத்துக்கு வந்தாள் காலையில் பார்த்த அதே சேலையில். ஆனால் வண்டியை அவள் அப்பா தான் ஓட்டிக் கொண்டு வந்தார். இவனைப் பார்த்து வெட்கமாய் முகத்தை திருப்பிக் கொண்டாள் ஜெயந்தி.

“உங்க மாமனாரு வண்டி ஓட்டிட்டு வந்துட்டாரா! அதிசியம் தான் இன்னிக்கி” என்றார் பீட்டர் வண்டியை முறுக்கியபடி!

சாயந்திரம் இருட்டு விழும் நேரத்தில் கோவில் சிறுசுன்னாலும் கொட்டு மொழக்கு பெருசா இருக்கணும் என்ற பழமொழிக்குத் தக்கவாறு வானில் வர்ண வெடி வேடிக்கை நிகழ்த்தினார்கள். சிந்து

டீச்சர் தன் பாப்பாவுடன் பொம்மைக்கடையில் நின்றிருக்க குமரேசன் போய் பாப்பாவுக்கு பெரிய குழந்தை பொம்மை வாங்கிக் கொடுத்தான். அவள் கணவனை காணோமே என்று கேட்டதுக்கு 'அவருக்கு இந்த ஊருக்காரர்களை சின்ன வயசுல இருந்தே பிடிக்காதுங்க சார்' என்றார். 'எப்படியோ உங்களை பிடிச்சிருக்கு பரவாயில்ல போங்க' என்று சொன்னதற்கு சிரித்து வைத்தார். அவருக்கு நான்குமாதம் போல கரு இருப்பதை வயிறு சொல்லிற்று.

"என்னங்க சார் எங்களையெல்லாம் கண்ணால காங்கக்கூட மாட்டீங்கறீங்க?" வடிவுக்கரசி தான் குமரேசனைப் பார்த்து கேட்டாள்.

"அப்படியெல்லாம் ஒன்னும் இல்லங்க வடிவு. நல்லாயிருக்கீங்களா? படிப்பு நல்லா போயிட்டிக்ருகா? எதோ விசேச நாள்ங்கறதால கோவில் பக்கம் வந்திருக்கீங்க! மத்த நாள்ல கண்ணுக்கும் சிக்க மாட்டீங்கறீங்க" என்றான். எங்கிருந்து தான் முளைத்து வந்தாளோ ஜெயந்தி என்பது போல வடிவுக்கரசியை பின்னால் வந்து கட்டிக் கொண்டாள்.

"எங்கீங்க சார் வெளிய சுத்த நேரம்? அதும் இந்த ஊர்ல வெய்யில்ல எங்க சுத்துறது? அதனால படிப்பையாச்சும் ஒழுங்கா பார்ப்பமுன்னு உட்கார்ந்துட்டேன். விடுடி! ஜெயந்தி" என்றாள் அவளிடம்.

"இன்னிக்கி பைக் ஓட்ட கத்துத் தர்றேன் வர்றியா வடிவு?" என்றாள் ஜெயந்தி.

"எனக்கு ஒன்னும் பைக் ஓட்ட கத்துத் தர வேண்டாம் நீ! சார் இவ எங்க பிள்ளை தான். திடீருன்னு காலையில போனப்போட்டு உங்களை விசாரிச்சா! எனக்கு ஒரே ஆச்சரியம். இவளுக்கு காதல்னு பேசுனாவே பிடிக்காது. எரிஞ்சு எரிஞ்சு விழுவா! கெட்ட வார்த்தை பேசுவாங்க சார். அதிசீமா இருந்துச்சு. பார்த்துங்க சார். கொஞ்சம் ஏமார்ந்தா உங்களை வயித்துப் பிள்ளத்தாச்சியா நடக்க வச்சிருவா இவ" என்று வடிவு சொல்லவும் இவனுக்குத்தான் வெட்கமாய் இருந்தது.

ஜெயந்தியைத் தான் கோவில்பக்கம் வந்ததிலிருந்து தேடிக் கொண்டிருந்தான். கூட்டம் அதிகமாய் இருந்தபடியால் எங்கு தேடுவதென விட்டு விட்டான். பீட்டர் ஆட்டகார்களுடன் போய் கலந்து விட்டார். தனியே நிற்பானேன் என்று சாலைக்கு வந்து நடை போட்ட போது வடிவுக்கரசி பிடித்தாள். காலையிலிருந்து ஊர் முழுக்க விசாரித்து முடித்து விட்டு மதியமாய் இவனிடம் பேசியிருக்கிறாள் என்றால் படு விவரமான பொண்ணுதான் என்று நினைத்துக் கொண்டான்.

"சரிங்க வடிவு ஜெயந்தி என்னைப்பத்தி இனி யார்

யாருகிட்டவெல்லாம் கேட்டிருக்காங்கன்னு தெரியலை. நான் யாருகிட்ட ஜெயந்தியை பத்தி கேக்கறதுன்னு தான் தெரியலை” என்றான்.

“பெரியசாமிக் கவுண்டர்கிட்ட கேளுங்க! பட்டையாச் சொல்வாரு” என்றாள்.

“அது யாருங்க அவரு? ஜெயந்தியப் பத்தி விளக்கவுரை, தெளிவுரை சொல்ற மனுசன்?”

“இவ டாடி! ஆனா அவரு சாமி கும்பிடவெல்லாம் வர மாட்டாரு! இவளுக்கும் சாமி கும்பிட்டு பழக்கம் கெடையாது. நீங்க எப்படி?”

“எனக்கு பெருசா நம்பிக்கையில்லாட்டியும் தின்னீரெல்லாம் பூசிக்குவேன்! யாராச்சிம் வெச்சு விட்டா!” என்றான் இவன். ஆட்டத்தில் இருபது ஜோடி சலங்கைகளின் சப்தம் கொடை ரேடியோவில் கேட்டது ஒரே விதமாய். ஒரு சலங்கை கூட தனித்து கேட்கவில்லை.

“நீங்க ஆட்டம் போட மாட்டீங்களா சார்?”

“நான் ஆடுவேன் ஆனா அங்க எடம் பத்தாது! ஒன்னானடி, மூனானடித் தாளத்துக்கு மட்டும் கொஞ்சம் இண்ட்ரஸ்டா ஆடுவேன். மத்த அடிகளுக்கு கால் செரியா வராது. எங்க ஊரா இருந்தா ஆட்டம் பின்னலாம்”

“இப்ப உங்க ஊரு ஆயிடிச்சில்ல! எங்க பிள்ளய வேற தூக்கப் போறீங்க! இனி ஆடறக்கு என்ன?”

“உங்க பிள்ளைங்கறீங்க உங்க பிள்ளை மட்டும் விசாரிச்சா சொல்லிடறீங்க. எனக்கு யாரு சொல்லுவா?”

“உங்களுக்கு என்ன சொல்லணும் இப்ப? வாங்க அப்படி மண் ரோட்டுக்கு போய் நின்னு பேசலாம். இங்க கூட்டமா இருக்கு” என்றவள் ஜெயந்தியை தள்ளிக் கொண்டு சென்றாள். இவன் யாரேனும் பார்க்கிறார்களா என்று திருட்டுப் பார்வை பார்த்து அவர்கள் பின் சென்றான். யாரும் இவர்களை பார்க்கும் நிலையிலேயே இல்லை. ஜெயந்தி சாம்பல் வர்ணத்தில் சுடிதாரில் வந்திருந்தாள். அவள் நிறத்திற்கு கூசாமல் எந்த வர்ணத்திலும் உடை எடுக்கலாம் என்றே இருந்தது. மண்சாலையை ஒட்டி இருந்த காட்டினுள் ஆர்கெஸ்ட்ராகார்களின் மேடை போடப்பட்டிருந்தது. அங்கும் ஆட்களின் நடமாட்டம் இருந்தது.

“ஏழரை மணி போல கும்பம் கெணத்துக்கு போகுங்க சார். அப்புறம்

ஆட்டமெல்லாம் ஒன்னுமிருக்காது. கும்பத்தை கெணத்துல விட்டுட்டு வந்துட்டா நோம்பி முடிஞ்சுது. நாளைக்கி மதியத்துக்கும் மேல மஞ்சநீராட்டு இருக்கும். ஆத்தாவை சப்பாரத்துல உக்கார வெச்சு ஊர் பூராவும் தூக்கி வருவாங்க! ஒவ்வொரு வீட்டுலயும் தேங்காபழம் தட்டுல குடுத்து சாமிக்கு ஒடச்சு தருவாங்க! சப்பாரம் நிலை சேர்ந்துடுச்சுன்னா மறுபூஜை! கணக்கு வழக்கு பார்த்துட்டு சண்டைக் கட்டிக்குவாங்க!" என்றாள் வடிவுக்கரசி. இவனெங்கே அவைகளை கேட்டான்? இவன் ஜெயந்தியின் அழகை தின்பதில் குறியாய் இருந்தான்.

"இப்ப கேளுங்க சார். உங்களுக்கு என்ன தெரிஞ்சிக்கணும்?"

"சும்மா கேட்டதுக்கு ஓரமா கூட்டி வந்துட்டீங்க. நான் என்ன தெரிஞ்சிக்க போறேன் ஜெயந்தியையும் கூட வச்சுட்டு. என்னை கூட வச்சிட்டா கேட்டாங்க இவங்க என்னைப்பத்தி?"

"நான் போறேன். நீங்க பேசிட்டு வாங்க! நான் முன்ன மூனு பேரை லவ் பண்ணினேன். நீங்க நாலாவது ஆளுன்னு சொல்லு வடிவு. நாலு தடவை ஆஸ்பத்திரி போய் கலைச்சிருக்கா! நாலு தடவை பப்பாளி பழம் சாப்பிட்டு கலைச்சிருக்கான்னு சொல்லு வடிவு." என்றாள் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு. கிளம்ப எத்தனித்தவளை வடிவு தான் நில்லுடி! என்று இழுத்துப் பிடித்தாள்.

"பார்த்தீங்களா சார் எப்படி பேசுறாள்னு. கோபம் வந்துட்டா நீங்க தாங்கிக்க மாட்டீங்கன்னு தான் நினைக்கேன். இன்னும் பச்சை பச்சையா பேசுவா! நோம்பி நாள்னு கொறைச்சுக்கிட்டா போல! நான் என்ன சொல்றேன் நீங்க எங்க பார்த்துட்டு இருக்கீங்க?"

"கோபம் தேவைதானுங்க வடிவு. ஆனா இது ரொம்ப அதிகம்."

"அப்ப நீங்க தான் இவளை சரிப்படுத்தணும். இவளைப்பத்தி தெரிஞ்சிக்க இது ஒன்னு தான் விசயமே! வேற ஒன்னுமே இல்லை இவ! இவ அப்பா ரொம்ப செல்லம் குடுத்து வளர்த்திட்டாரு. போக இவ அப்பா புத்தகங்களை தூக்கி படிச்சு அப்பா மாதிரியே பேசுவா. இவ வீட்டுல வீடு ரொம்ப புத்தகம் இருக்கும். அதுகளை படிச்சதால இவ இப்படி ஆயிட்டான்னு நினைக்கேன்! ஆச்சரியம் என்னன்னா காத்தால இவ உங்களை விசாரிச்சது தான். இவ அப்பா கிட்ட பேசிப்பாருங்க சார் நீங்க. பொருளாதாரத்துல ஏன் இந்தியா பின்தங்கி இருக்குதுன்னு பேசுவாரு! நான் சில சமயம் சிக்கி சீக்கி போட்டுட்டேன்."

"அப்ப ஜெயந்தியை விட அவரு ரொம்ப டேஞ்சரா இருப்பாரு போல"

"எப்படியோங்க சார். எங்க பிள்ளை உங்க கிட்ட பொதுக்கடீர்னு

விழுந்திடுச்சு! பார்த்து சண்டை கிண்டை கட்டாம பதனமா பண்ணிக்கங்க சார். இவ வீட்டுல எந்த பிரச்சனையும் இருக்காது. இவ சொன்னா சரிம்பாரு இவங்கப்பா! உங்களுக்கும் பிரச்சனை இருக்காதுன்னு நினைக்கிறேன்”

“பார்த்த இருபத்தி நாலு மணி நேரத்துல கலியாணத்தை பத்தி பேசுன காதல் இதாத்தான் இருக்கும். நான் ஜாலியா ரெண்டு வருசம் ஒரு அஞ்சாறு பொண்ணுகளை லவ் பண்ணி கழட்டி உடலாமுன்னு நெனச்சேன். ஆசையில மண்ணு விழுந்துரும் போல! உங்களை கூட லவ் பண்ணலாமுன்னு நினச்சங்க வடிவு. பார்த்தா தங்கச்சி முறை வந்துடுது. ஜெயந்தி அப்படி வரலைல்ல?”

“அதை தான் மொதல்ல கேட்டு ரூட்டை கரைக்ட் பண்ணிட்டா. நீங்க அஞ்சாறென்ன பத்து பேரைக் கூட லவ் பண்ணுங்க சார். ஆனா எங்க பிள்ளைய கடைசில கட்டிக்கங்க!”

“இந்த டீல் ஓக்கே” என்றான் குமரேசன்.

“ம்! நான் அப்படி சொல்லலை! இவ தான் லூசுத்தனமா சொல்றா. ஒருத்திய நீங்க கண்ணுல பார்த்தாலும் பார்த்த இடத்துலயே கண்ணை நோண்டி கையில குடுத்துடுவேன்.” என்றாள் ஜெயந்தி. ‘இது உங்க பிரச்சனை’ என்றாள் வடிவும்.

இரவு பாட்டுக்கச்சேரி துவங்க ஒன்பது மணியாகி விட்டது. குமரேசனை ஜெயந்தி தான் காட்டுப்பாளைய ஏரியாவுக்கே இழுத்து வந்து விட்டாள். அப்படி நடந்த விசயத்தில் இவள் நிஜமாகவே ஆண்பிள்ளை தான் என்று நினைத்தான் குமரேசன். நெஜமாகவே காட்டினுள் இருந்த தனித்த பாறைமீது அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவள் கையில் அரை லிட்டர் தண்ணிக் கேன் ஒன்றிருந்தது.

“நல்லவேளை நீங்க கலர் சட்டை போட்டிருக்கீங்க” என்றாள்

“ஏன் கலர் சட்டைக்கு என்னங்க மேடம்?”

“கேன்ல மஞ்சள் தண்ணி கொண்டு வந்திருக்கேன். இதை முழுசும் உங்க மேல ஊத்தப் போறேன்”

“ஊத்துங்க மேடம் ஆனா கொஞ்சம் குளிரா தெரிஞ்சாலும் கட்டிக்குவேன்”

“நீங்க என்னமோ பண்ணிக்குங்க. ஆனா சாங்கிதம் இது”

“நாளைக்குத் தான மஞ்சள் நீராட்டு? இன்னிக்கேவா உங்களுக்கு

வந்திடுச்சு?”

“நாளைக்கு அந்த டைம்ல கிளாஸ்ல ஊத்துக்குளியில இருப்பேன். அது எங்க ஊர் நோம்பி இல்லையில்ல!”

“ஆமா மேடத்துக்கு இந்த லூசு ஐடியாவை யாருங்க குடுத்தது?” பேசிக்கொண்டிருந்த போதே இவன் தலையில் தண்ணீரை ஊற்றினாள் முழுதாக! மார்பகங்களுக்குள் கையை விட்டு ஒரு பொட்டணம் எடுத்தாள். கிராமத்துக்காரி எதாச்சிம் வசியம் பண்ணுகிறாளோ என்று நினைத்தான்.

“மேடம் எதாச்சிம் வசியம் பண்ணீடாதீங்க?”

“அப்படிக்கூட யாராச்சிம் பண்ணுவாங்களா? இப்பவே மந்திரிச்சு உட்டாப்ல தான் என் பின்னாடி வந்தீங்க! தனியா வேற வசியம் பண்ணனுமா நானு? இது கோவில் தின்னீரு! யாராச்சிம் பூசி விட்டா நெத்தில பூசிக்குவேன்னு அப்பலையா சொன்னீங்கள்ள!” என்றவள் இவன் நெற்றியில் தின்னீரை பூசி விட்டாள். அடுத்த கணம் திடீரென சாய்ந்து இவன் மடியில் படுத்து கால்களை நீட்டி படுத்துக் கொண்டாள்.

“வடிவா கிட்டத்தான் என்னைப் பத்தி கேட்டுத் தெரிஞ்சிக்கணுமா நீங்க? எங்கிட்ட கேட்டா சொல்ல மாட்டனா? நானென்ன பொய்யா சொல்லப் போறேன்? நான் எப்பவும் உங்க கிட்ட பொய்யே சொல்ல மாட்டேன். கேளுங்க இனி என்ன தெரிஞ்சிக்கணும்?”

“என்னமோ பப்பாளிப்பழமுன்னு சொன்னீங்களே மேடம்”

“பன்னி அதுலயே இருக்குது இன்னுமும்! நானெதுக்கு அந்தக்கருமத்தை திங்கறேன்? பெத்தெடுத்து கையில குடுத்துட்டு போயிட்டே இருப்பேன் யாரா இருந்தாலும். எனக்கென்ன பயமா? அதை விடுங்க. என்னை பிடிச்சிருக்கா? கட்டிக்கறீங்களா?” என்றாள். இவன் குனிந்து அவளின் கன்னத்தில் முத்தமிட்டான். கிழக்கிலிருந்து ஆர்கெஸ்ட்ராவில் பாடும் பாடலின் சப்தம் இங்குவரை கேட்டது. ’நன்றி சொல்ல உனக்கு வார்த்தை இல்லை எனக்கு நான் தான் மயங்கினேன்! காலமுள்ள வரைக்கும் காலடியில் கிடக்க நான் தான் விரும்பினேன்!’

# சயனம்16

வேலுச்சாமிக் கவுண்டர் பெல்லாவின் பாயில் படுத்திருந்தார். பெல்லா அவருக்கு அருகாமையில் அமர்ந்திருந்தவள் அவரின் முழு வாழ்க்கைக் கதையையும் கேட்டு, இப்படியெல்லாம் பெண்கள் இருக்கிறார்களா? என்று யோசித்துக் கொண்டிருந்தாள். அவளாக அவரிடம் எதையும் கேட்காமல் அவரே எல்லாவற்றையும் சொல்லி முடித்திருந்தார். அவருக்கு பலநாளாய் மனதில் இருந்த மிகப் பெரிய பாரம் ஒன்று இறங்கி விட்டது போலத் தோன்றியது. அவரிடம் அமர்ந்து வாழ்க்கையைப் பேச யாரும் இதுவரை வரவும் இல்லை. அதைப் பற்றிப் பேச அவருக்கு பிடிப்பதும் இல்லை.

அவருக்கு பெல்லாவிடம் அவற்றை பேச வேண்டுமென திடீரெனத் தான் தோன்றியது. ஊரில் பெரிய மனிதர் என்று வெளிப்பார்வைக்கு தெரிபவரிடம் இருந்த வேதனை பெல்லாவுகே கேட்டதும் சிரமமாய் இருந்தது. அவருக்கு ஆறுதல் எதுவும் சொல்லத் தேவையில்லை என்றும் தோன்றியது. தவிர அவரவர்களுக்கான வாழ்க்கையை அவரவர்கள் மனதுப்படி வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்றும் அவளுக்கு யோசனை ஓடியது. இரண்டாவதாக அவரிடம் வந்து சேர்ந்த பூரணியின் போக்கு தான் அவளுக்கு புரியவில்லை.

அவருடைய வாழ்க்கையில் இவளும் உள்ளே வந்து விட்டதும் கூட நடந்து விட்டது. அதற்காக கவுண்டர் தன் அம்மாவின் வீட்டை பெல்லாவின் பெயருக்கே வக்கீல் வைத்து எல்லாம் முடித்து பத்திரத்தை கொண்டு வந்து கொடுத்து விட்டார். அவளுக்கு இதையெல்லாம் ஏன் செய்கிறார் என்றுதான் தெரியவில்லை. எத்தனையோ பெரிய மனிதர்கள் காரியம் முடிந்ததும் கைகழுவி விட்டு காரியத்தை பார்த்துக் கொண்டு போய்க் கொண்டு தான் இருப்பதை கண்டிருக்கிறாள்.

இவரோ காதலில் விழுந்தவர் போல, இருப்பதை இவளுக்கு வரிசையாக கொடுத்தபடி இருக்கிறார். கவுண்டரோடு தொடர்பு ஏற்பட்டு பெல்லாவுக்கு ஐந்து மாதங்கள் தான் ஆயிற்று. அவர் முதலாக கழுத்தில்போட்ட நகையை அவள் வெளியில் போடுவதில்லை. அவர் கழுத்தில் இருந்தது எப்படி இவள் கழுத்துக்கு வந்தது என்பார்கள்.

கவுண்டரோ, ’போட்டுக்கறதுக்குத் தான் கழுத்துல போட்டேன் பெல்லா!’ என்றார். கொஞ்சம் நாளில் இவர் வந்து போவது அப்படியே ஊருக்குள் பேசவும் ஆரம்பித்து விட்டார்கள். அதற்காக வருத்தப்படும் மனநிலையிலும் பெல்லா இல்லை. நேராக யாரும் வந்து அப்படியா

என்று கேட்கவில்லை அவ்வளவுதான். பெல்லா அவர் கொடுத்த வீட்டுப் பத்திரத்தை தன் பீரோவில் வந்ததுமே வாங்கி வைத்துக் கொண்டாள். இதுவெல்லாம் கொடுத்துத் தான் என்னிடம் நீங்கள் வந்து போக வேண்டுமா? என்றாள்.

அந்த ஒரு கேள்விக்குத் தான் அவர் தன் வாழ்க்கை முழுதையும் இவளிடம் சொல்லி முடித்தார். தனக்கு கொஞ்சம் சின்ன வயசு என்றிருந்தால் கூட்டிப்போய் தாலி கட்டிவிடுவேனே! என்று கூட வருத்தம் தோய பேசினார். தவிர தன் மனதில் ஏதோ ஒரு உறுத்தல் ஒரு வார காலமாகவே இருந்து கொண்டே இருப்பதாகவும் சொன்னார். அந்த உறுத்தல் என்ன என்பது மட்டும் அவருக்கு தெரியவில்லை.

இங்கே இவர் இப்படி இருக்க அவர் வீட்டில் அதிசயம் நடந்து கொண்டிருந்தது. அது ஒன்றுமில்லை பூரணி இரண்டாந்தாரமாக கவுண்டரை கட்டிக் கொண்டு வந்ததிலிருந்து அந்த வீட்டில் மயிலாத்தாவிடம் ஒரு வார்த்தை பேசியதே கிடையாது. வடிவு பேசிக் கொள்வதை கண்டு கொள்வதும் கிடையாது. தாலிகட்டி வந்த நாள் முதல் கவுண்டர் முதல் தாரம் ஆக்கிய சாப்பாட்டை இன்று வரை சாப்பிட்டதே கிடையாது. இரண்டாம் தாரமாக பூரணி வந்த பிறகே அவர் வீட்டுச் சாப்பாடு சாப்பிடுகிறார். பங்காளி சின்னச்சாமி ஓடிப் பிடித்து விளையாடியதை பார்த்த நிமிடத்திலிருந்து வடிவு கொண்டு வந்து சாப்பாடு கொடுத்தால் மட்டுமே சாப்பிடுவார். அவள் இல்லாத மதிய வேளைகளில் சாப்பிடுவதேயில்லை.

சின்னச்சாமியுடம் பகையை வளர்த்துக் கொள்ள விரும்பாத கவுண்டர் கோழிச் சாவக்கட்டு சமயத்தில் மீண்டும் ஜோடி போட்டுக் கொண்டது கலியனை திட்டமிட்டு போட்டுத் தள்ளுவதற்குத்தான். அவன் மீண்டும் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பதைப் பற்றி அவர் எந்தக் கவலையையும் படவில்லை. அவருக்கு பெல்லா கிடைத்தது பெரிய பொக்கிஷம் கிடைத்தது போலாகி விட்டது. அவருக்கு வீடு சென்று வெளியே கட்டிலில் படுத்துக் கிடப்பது காவலுக்கு நாய் கிடப்பது போலத் தான் என்றே நினைத்தார். இரவு நேரங்களில் அவர் பெல்லாவுடன் துணையாய்க் கிடக்க ஆசைப்பட்டார். அதை இன்றிலிருந்து துவங்கி விடலாமென்றால் சனிக்கிழமையாக வேறு இருந்தது.

அங்கே பூரணி மயிலாத்தாவின் அறையில் இருந்தாள். சின்னச்சாமி சொல்லிப்போன விசயத்தை அவள் மயிலாத்தாவிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். கவுண்டர் கழுத்தில் இருந்த நகை போன கதை,

அவரின் அம்மா வீடு போன கதை முழுதும் அவன் பூரணிக்கு சொல்லியிருந்தான். கூடவே இனி வீட்டிலிருந்து உங்களுக்கு தெரியாமல் பலதும் போய் கடைசியில் சொத்தும் போய்விடும் என்ற பீதியையும் கொடுத்துப் போயிருந்தான். அதனால் அவள் பகையாளி போல இருந்த மயிலாத்தாவிடம் விசயத்தை சொல்லி முடித்தாள்.

மயிலாத்தாவே, 'அதற்கு என்ன செய்ய? போய் அந்த பறப்பிள்ளைய குடுமையை பிடிச்சு இழுத்தாந்து ரோட்டுல வச்சு குமுறவா? வீட்டை விட்டு ஓடுடின்னு முடுக்கவா? அதான் பத்திரம் ரெடியாயிடுச்சுன்னு சொல்றியே? அவ நம்மை போங்கடி வெளியம்பாளே பத்திரத்தை கையில ஆட்டீட்டு!' என்றாள். பூரணியோ, 'போனதைப்பத்தி பேசி ஒன்னும் பிரயோசனமில்லக்கா! இனிமேல் போகாம இருக்க என்ன பண்ணனுமுன்னு பேசுங்க' என்றாள்.

இவர்கள் பேசும் நாயத்தை கற்பகம் கேட்கப் பிடிக்காமல் எழுந்து அந்த அறையை விட்டு வெளியில் போய் விட்டாள். அவள் வாழ்க்கையில் தோற்றுப் போய் எல்லாவற்ரையும் வெறுத்திருந்தாள். இவர்கள் இத்தனை காலம் பேசாமல் கிடந்து பேசுவது கூட தங்களை விட்டு எல்லாமும் போய் நடுத்தெருவில் நிற்பதற்குப் பயந்து தான் என்று நினைத்ததால் தான் வெளியில் வந்து விட்டாள். சொந்த வீட்டிலேயே அவர்கள் நடுத்தெருவில் நிற்பது போலத்தான் இதுநாள் வரை நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன பேசி முடிவுக்கு வருவார்கள் என்பதை முன்பே யூகித்துத் தான் வந்து விட்டாள்.

கொஞ்சம் நேரத்தில் சின்னச்சாமி தன் டிவியெஸ்சில் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான். கற்பகம் கோணப்புளியங்கா மரத்தடியில் சல்லைக் கொக்கியுடன் நின்றிருந்தவள் இவனை திரும்பிப் பார்த்தாள். 'வெச்சுக்கலாமா இன்னிக்கி? எப்ப வெச்சுக்கலாம்?' என்று இவளைப் பார்த்து வலது கை பெருவிரலை ஆள்காட்டை விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையில் வைத்து ஊமைச் சாடை செய்து கேட்டான். அவனை தூசு போல பார்த்தவள் செருப்போடு இருந்த காலைத் தூக்கிக் காட்டினாள்.

அவன் அதற்கு ஒன்றும் சொல்லாமல் பூரணியைக் கூப்பிட்டுக் கொண்டு உள்ளே சென்றான். பூரணி மயிலாத்தாவின் அறையில் இருந்து அவனுக்கு குரல் கொடுத்தாள். ரொம்ப நாளுக்குப் பிறகு சின்னச்சாமி மயிலாத்தாவின் அறைக்குள் போய் அவர்கள் படுக்கையில் அமர்ந்திருக்க இவன் போய் தரையில் அமர்ந்தான்.

"எம் பங்காளி வண்டி அந்த டீச்சரூட்டுல தான் நிக்குது. இன்னேரம்

பத்திரத்தை அவளுக்கு குடுத்திருப்பாரு எம் பங்காளி. வீடு போச்சு உங்களுக்கு! அவரு கழுத்துல இருந்த செயினை அவளுக்கு மொதல்லயே கழட்டி குடுத்துட்டதா சொல்லிட்டாரு. அப்புறம் என்னென்ன பங்காளி குடுத்தீங்கனு போதையில இருக்கப்ப கேட்டப்பத்தான் வீடு விசயமே வந்துச்சு. சென்னிமலை ஆறுமுக வக்கீல் தான் எல்லா வேலையும் முடிச்சுக் குடுத்திருக்காரு. வீட்டுல என்ன என்ன காணமுன்னு பாத்தீங்களா ரெண்டு பேரும்?"

"இங்கிருந்து அவரு ஒன்னையும் கொண்டு போயி குடுக்கலை" என்றாள் பூரணி. மயிலாத்தாவும் அதையே அவனிடம் சொன்னாள்.

"சேரி நாளைக்கி காட்டுப் பத்திரத்தை தூக்கீட்டு போயி அவ பேர்ல எழுதிட்டு உங்களை தொறத்தியுட்டுட்டா எங்க போவீங்க ரெண்டு பேரும்?' என்றான்.

"ஹாங்! அந்தாளு முடுக்கீருவானா எங்களை?" என்றாள் மயிலாத்தா.

"இதெல்லாம் பொம்பள விசயம்! ஆம்பள எப்படி வேணாலும் முடிவு பண்ணிடுவான் ஒரு நொடியில! உங்க ரெண்டு பேரால எம் பங்காளி என்ன சுகத்தை கண்டான்? அவனைப் பத்தி தெரியும் எனக்கு. பர்லாங் கல்லு மேல பாவாடை கெடந்தாக் கூட தூக்கிப் பார்த்துட்டு போறவன் ஏனோ இப்ப அந்த டீச்சர் கிட்ட சுருண்டு உழுந்து கெடக்கான். அதான் ஏன்னு எனக்கும் தெரியல. அவ வாயில வச்சுக்குவாள்னு நெனைக்கிறேன்" என்றான்.

"தூக் கருமம் ஊச நாயம் பேசாதடா" என்றாள் மயிலாத்தா.

"ஊச நாயம் தான்! எல்லாமே ஊச நாயம் தான். யாரு இங்க ஊசை இல்ல? எல்லாருக்கும் நெனப்பு தட்டிக்கிச்சுன்னா எப்படி வேணாலும் எறங்குவாங்க. ஊசைங்கறது அப்ப தெரியாது யாருக்கும். இப்ப அந்த பொண்ணு தான் எம் பங்காளிய எதுத்து என்ன பண்ட முடியும்? ஒன்னும் பண்ட முடியாதுன்னு அவளுக்கும் தெரியும். அதனால அவ வந்தவரை லாபமுன்னு தான் பார்ப்பா! அவ வயசு என்ன பங்காளி வயசு என்ன? டைட்டா இருக்குதுன்னு பங்காளி குதி போட்டுட்டு பாய்வாரு. போவற வரைக்கும் அவ பிடுங்கிக்குவா!

அவருக்கு சொத்தெல்லம் என்னிக்குமே பெருசில்ல! மேட்டர் பண்றது தான் பெருசு. அதுக்காக அவரு எதை வேணாலும் உட்டுக் குடுத்துருவாரு. சரி என்ன முடிவு பண்டியிருக்கீங்க? அதைச் சொல்லுங்க மொதல்ல!" என்றான் சின்னச்சாமி. அவன் முன்பே பூரணிக்கு அவனுடைய யோசனையை சொல்லிப் போயிருந்தான். அவன் தான்

மயிலாத்தாவிடமும் பேசு என்றும் சொல்லிப் போயிருந்தான். இந்த நேரம் முடிவு செய்திருப்பார்கள் என்றே நினைத்து அப்படிக் கேட்டான்.

“எனக்கு கொஞ்சம் பயமா இருக்குது சின்னச்சாமி” என்றாள் மயிலாத்தா.

“அப்ப விட்டுத்தள்ளுங்க! நான் ஏதோ வந்து போயிட்டிருந்ததுக்காக விசயத்தை சொன்னேன். அதும் நான் சொல்லலைன்னா யாரும் உங்களை தேடி வந்து சொல்லப் போறதில்ல. அப்படி சொல்லறப்ப நீங்க பொட்டியத் தூக்கீட்டு வெளிய போயிருப்பீங்க! வெளிய வர்றீங்களா ஒன்னா? அடைக்கோழி கணக்கா ஊட்டுக்குள்ளயே சுத்தீட்டு இருக்கீங்க ரெண்டு பேரும். ஊருக்குள்ள நாலு சனத்துகோட பேச்சு வச்சுட்டு இருந்தாத் தான நாளைக்கி அட நம்ம பொம்பளைகளுக்கு இப்படி ஒரு பிரச்சனையான்னு நாலு பேரு அந்த டீச்சரை பொடணியப் புடிச்சு சாத்தி கேள்வி கேப்பாங்க! சரி முடிஞ்சதை பேச வேண்டாம். நடக்கிறதை பேசுங்க!” என்றான்.

“ஏன் இத்தனை பேசுறியே எங்களுக்காக நீ பண்ணக் கூடாதா?”

“நான் தான் கூட இருக்கேன்னு சொல்றேன்ல. இன்னிக்கில்ல என்னிக்கிமே நான் உங்க கூடத்தான் இருப்பேன். நான் கலியாணம் பண்டாதது ஏன்னு இத்தனை நாள்ல ஒரு நாளாச்சிம் கேட்டிருப்பீங்களா? உங்களை தொட்ட பொறவு நான் எங்காச்சிம் போயிடுவனா?” என்று சமயத்திற்கு தகுந்தது போல அவன் பேசவும் மயிலாத்தா கண்ணீர் சிந்தினாள். அவளுக்கு பழைய ஞாபகங்கள் வந்து போயிற்று.

“சரி சின்னச்சாமி நாங்க ரெண்டு பேரும் அந்தக் காரியத்தை பண்ணிடறோம்”

“சரி அப்ப ஒரு ஆயிரம் ரூவா எடுத்தாங்க! பங்காளிக்கு இன்னிக்கு நான் தான் சரக்கு சப்ளை பண்ணனும். கோழிக்கால்னா பங்காளி நல்லா ருசிச்சு மென்னு முழுங்குவாப்ல! ஒரு எட்டு மணியைப் போல வந்துடறேன்” என்றவன் கையில் மயிலாத்தா பணத்தைக் கொடுத்தாள்.

வேலுச்சாமிக் கவுண்டர் பெல்லாவிடம் அந்த சமயத்தில் தான், ‘இன்று சனிக்கிழமை என்றும், இன்று நல்லநாள் அல்லவென்றும், நாளை முதல் இரவில் உன்னோடு தான் தங்குவேன்’ என்றும் சொல்லிவிட்டு விடை பெற்று வீட்டை விட்டு வெளியில் வந்தார். அவர் வெளியில் சென்றதும் கதவைத் தாழ்பாளிட்டாள் பெல்லா.

கவுண்டர் தன் புல்லட்டை அவள் வீட்டு வாசலிலேயே

நிறுத்தியிருந்தார். அவர் சாவியை செருகியபோது பங்காளி சின்னச்சாமி அப்போது தான் தோட்டத்திலிருந்து வந்து கொண்டிருந்தான் தன் டிவியெஸ்சில். இவரிடம் அருகில் கொண்டு வந்து நிறுத்தியவன், ‘என்ன பங்காளி சாயந்திரமே ஒரு சாட் முடிச்சுட்டீங்களாட்ட இருக்குது!’ என்றான்.

“எங்க பங்காளி வீட்டுக்கா போறே?” என்றார் இவனிடம்.

“இல்ல பங்காளி! எல்லக்காடு வரைக்கும் ஒரு சோலியாப் போறேன்”

“அப்படின்னா மேட்டர் வாங்கிட்டு வந்துடேன். ஏனோ கொஞ்சம் நாளைக்கி இதை விட்டுடலாமுன்னு இருக்கேன் பங்காளி. இன்னிக்கி கடைசியா குடிச்சுக்கலாமுன்னு தோணுது” என்றவர் தன் பாக்கெட்டில் கைவிட்டார்.

“பணம் வேண்டாம் பங்காளி, எங்கிட்டயே இருக்குது. நானே வாங்கீட்டு வந்துடறேன்” என்றான் சின்னச்சாமி. ‘அப்படின்னா செரி’ என்றவர் புல்லட்டை ஸ்டார்ட் செய்யவும் சின்னச்சாமியும் முறுக்கிக் கொண்டு கிளம்பினான்.

000000000000000

வேலுச்சாமிக் கவுண்டர் கட்டிலில் சாய்வதற்கு இரவு பத்து மணிக்கும் மேலாகிவிட்டது. அதன் பிறகு சின்னச்சாமி எழுந்து வீட்டினுள் வந்தான். அவனுக்கும் போதை கிண்ணென்று தான் ஏறியிருந்தது. ஆசாரத்தில் இரவு விளக்கு சிவப்பு நிறத்தில் எரிந்து கொண்டிருந்தது. அது ஒரு பேய் வீடு என்பதான அமைதியை அடைந்து போதையிலிருந்த இவனையே மிரட்டியது.

மயிலாத்தாவின் அறைக்கதவு தாளிடப்படாமல் இருந்தது. உள்ளே பூரணியும் அமர்ந்திருந்தாள். அவளுக்கு திக் திக்கென்று தானிருந்தது. அதை விட படபடப்பில் மயிலாத்தா இருந்தாலும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அறையின் மூலையில் போர்வையை கழுத்து வரை போர்த்தி கண்மூடிக் கிடந்தாள் கற்பகம். அவள் பொய்த் தூக்கம் தூங்குகிறாள் என்பதை பார்த்தவுடன் தெரிந்து கொண்டான் சின்னச்சாமி. ஆனால் உஸ் என்று சைகை செய்தாள் மயிலாத்தா அவனிடம். அவன் இருவரையும் வெளியில் வரச் சொல்லி சைகை காட்டி விட்டு ஆசாரத்துக்கே வந்தான்.

பின்னால் எழுந்து வந்தவர்கள் வெறும் கையை வீசிக்கொண்டு வரவும் இவனுக்கு போதையில் கோபம் வந்தது. இவன் தடுமாறி ஆசாரத்தில் நின்றிருந்த தூணில் சாய்ந்து அதைப் பிடித்து நின்று கொண்டான்.

அவர்கள் இவனருகில் வந்து குசுகுசுத்தார்கள். ‘வடிவா அப்பவே தூங்கிட்டா’

“அவ தூங்குனது இருக்கட்டும். சும்மா வெறுங்கையோட வந்திருக்கீங்க?” என்றவனை கையைப் பிடித்து பூரணி வீட்டின் வெளித்திண்ணைக்கு இழுத்து வந்தாள். வெளித்திண்ணையில் தயாராய் ஒரு தலையணை கிடப்பதை அவனுக்கு காட்டினாள்.

“தடுமாறீட்டு திரியறே? உன்னை யாரு இவ்ளோ குடிக்கச் சொன்னது?”

“இன்னம் ஒரு ஆப்பாடில் இருக்குது நீயும் குடிக்கிறியா வீரம் வரும்” என்றவன் பூரணிக்கு ஒரு முத்தம் கொடுத்தான்.

“இனி அது ஒன்னுதான் பாக்கி. மயிலாவை போயி புடிச்சு ஒரு முத்தங்குடு! என்ன பண்றான்னு பாக்கேன்” என்றாள். ‘என்ன மூனு வருசம் இருக்கும் அவளைத் தொட்டு. ஆசையாத்தான் இருக்குது. இப்பப் பாரு” என்றவன் இவளிடமிருந்து விலகி அவளை அருகில் அழைத்தான். அவளும் கிட்டே வந்தாள்.

“தலயணைய தூக்கிக்க மயிலா” என்றான்.

“அவகோட சாலாக்கு பண்டத் தெரியுது உனக்கு, அவளை தூக்கிக்கச் சொல்லத் தெரியாதா?” என்றவளை கட்டி அணைத்து முத்தமிட்டான்.

”இப்ப உனக்கு வீரம் வரும் பாரு தன்னப்போல” என்றான்.

“எந்த நேரத்துல என்ன பண்டோணுமின்னே தெரியாதுடா உனக்கு. அவ பாத்துட்டு இருக்காடா” என்றாள்.

“அவ பாத்தா பாத்துட்டு போச்சாறா உன்னை எதாச்சிம் சொன்னாளா”

“உட்றா சித்தெ!” என்றவள் அவனிடமிருந்து விலகி தலையணையை எடுத்துக் கொண்டதும் வாசலில் இறங்கினாள்.

“பாத்தியா பூரணி அவளுக்கு முத்தம் குடுத்ததும் வீரம் வருமுன்னு சொன்னேன் வந்திடுச்சு. வா போவோம்” என்று அவள் இடையில் ஒரு கை போட்டு அழுத்திக் கொண்டே சென்றான் கவுண்டர் கிடந்த கட்டிலை நோக்கி. கவுண்டர் கடைசியா குடிச்சிக்கறேன் என்று வயிறு முட்ட குடித்து நிதானமில்லாமல் கிடந்தார் கட்டிலில்.

தலையணையோடு வந்த மயிலாத்தா கவுண்டரின் தலைக்கருகே போய் நின்றாள். பூரணி கால் பக்கமாக நின்றாள். அடுத்த நிமிடம் பூரணி

அவரின் கால்களைப் பிடித்துக் கொள்ள மயிலாத்தாள் அவரின் முகத்தின் மீது தலையணையை வைத்து அழுத்த ஆரம்பித்தாள். சற்று நிமிடத்தில் கவுண்டர் அடங்கியதும் சின்னச்சாமி போய் அவரின் நெஞ்சில் காது வைத்து கேட்டான்.

“இப்படி அநியாயமா போயி சேர்ந்துட்டியே பங்காளி!” என்று துக்கப்படுபவன் போல குனிந்து தலையை ஆட்ட, பூரணி அவன் தலையில் கொட்டு வைத்தாள். பின்னாலேயே இவர்களை கவனித்து எழுந்து வந்திருந்த கற்பகம் கட்டிலருகே நின்று கவுண்டரை பார்த்தாள்.

“இங்கெதுக்குடி பொறவுக்கு சோடை புடிச்சுட்டே வந்தே?” என்றாள் மயிலாத்தா.

“இதே மாதிரி இந்த சின்னச்சாமியையும் கொன்னு போடுங்க சீக்கிரம். அதான் உங்க ரெண்டு பேருக்கும் நல்லது” என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

00000000000000000

# கடைசியாக இவர்கள் பேசுகிறார்கள்!

## குமரேசன் :

பேக்கையும் கீக்கையும் தூக்கீட்டு வந்தங்காட்டி நான் தான் கதையில நாயகன்னு நெனச்சிட்டேன். கோட்டூர் போயி பைக்கையும் எடுத்துட்டு வந்து சுத்தலாமுன்னு நெனைச்சேன். ஆனா கொளத்துப்பாளையத்தை உட்டு நகரவே இல்ல நானு! உள்ளூர் மாகாளியம்மன் நோம்பியப்ப வெடியொன்னு சொய்ங்குனு வந்து என் கால்ல விழுந்து வெடிச்சு காயமாயிருச்சு. மறுக்கா ஜெயந்தியோட சாமத்துல காட்டுக்குள்ளார போறப்ப போட்டிருந்த செருப்பை மீறி டில்லி முள்ளு ஒன்னு குத்தி குதிங்கால்ல ஏறிடுச்சு. ‘ஐய்யோ பாத்து வரலாமில்லன்னு!’ சொல்லி அதை ஜெயந்தி புடுங்கி உட்டா! ஊருக்கு வாத்தியாரா வந்ததுக்கு எனக்கொரு அழகான பொண்ணு மனைவியா கிடைச்சுடுச்சு!

## வள்ளி :

கொளத்துப்பாளையத்துக்கு வாழப்போறேன்னு நெனச்சுத்தான் வந்தேன். பார்த்தா என் ஊட்டுக்காரன் கலியன் அநியாயமா எங்கூட கோவிச்சுட்டு கரட்டுல போயி தூக்கு போட்டு செத்துட்டான். அந்த ரமேஷ் பயல் கிட்ட இன்னொரு ரெண்டாயிரம் வசூல் பண்டி அவன்

ஆசைக்கி இணங்காம ஏமாத்தினதை சொல்லவே இல்லை. புருசங்காரன் செத்ததீம் அவன் கூப்டுட்டே தான் இருக்கான். வார்த்தைக்கி வார்த்தை தங்கம் போடுறான். ஆனா நான் போவ மாட்டேன். நான் வாக்கப்பட்டு வந்தது கொளத்துப்பாளையம்.

புருசன் செத்துட்டான் அப்படிங்கறதுக்காவ ஊரை உட்டு போவ முடியமா? ஒன்னு சொல்ல மறந்துட்டேன். கவுண்டரு காட்டுல ஒரு எருமத் தேளு பொறவுக்கு கொடுக்குல ஒரு மாட்டு என்னை மாட்டீட்டுது. கவுண்டரு வந்து என்னை கீழ பெறட்ட முயற்சி பண்ணாருல்ல! அப்பத்தான். ஆனா அதை கவுண்டரு செருப்பக் கழட்டி அடிச்சி அவித்திக்கே கொன்னு போட்டாரு. ஆனா கவுண்டரு பாவம் தான். அன்னிக்கி பொக்குனு முடியாம எந்திரிச்சு போயிட்டாரு. மேலயும் போயிச் சேர்ந்துட்டாரு மனுசன். அவரு ரத்தக் கொதிப்புல போயி இப்ப மாசம் ஒன்னாயிப் போச்சு!

## பொன்னுச்சாமிக் கவுண்டர் :

மொளக்குச்சி தடுக்கி கீழ கெடந்தன்ல நானு! அப்ப கட்டு விரியன் ஒன்னு படல்ல முட்டி என்னைப் பாத்துத்தான் வந்துச்சு. விரியங்கடிச்சா விதி முடிஞ்சுதுன்னு சொல்லுவாங்க அல்லாரும். நம்ம சோலி இனி அவ்வளவுதான்னு கப்சிப்புனு கெடந்தேன். கிட்டக்க வர்றப்ப என்ன நெனச்சுச்சோ தலையத் தூக்கி பாத்துட்டு கிழக்கே திரும்பிடுச்சு. அப்ப நெனச்சேன் நானு எனக்கு இன்னொரு வாழ்க்கை இருக்குதுன்னு. வந்தவ பூவாத்தாங்காட்டி எனக்கு ஒரே சந்தோசம் தான். ஒரு நாள் கூட நான் கூப்பிட்டு இன்னிக்கி முடியாதுங்க தலை வலியா இருக்குதுன்னு அவ சொன்னதே கெடையாது! அதனால தான் நான் அக்கட்ட இக்கட்ட பாயறதுக்கு போறதே இல்ல!

## வேலுச்சாமிக் கவுண்டர் :

பிரசிடெண்ட்டா ஊருக்கு இருந்து நான் பண்ணின காரியங்களை பத்தி வெளிய சொல்லிக்கறது இல்ல. நானா குடுக்கறேன்? எல்லாம் கவர்மெண்ட்டு குடுக்குது. அதுல நான் கையை வைக்கறதில்ல! ஆனா சனங்க பேசத்தான் செய்வாங்க பூராத்தியும் திங்கறான்னு. பேசிட்டு போச்சாறாங்கன்னு உட்டுருவேன். ஒரு பெருமைக்கித் தான் பஞ்சாயத்து போர்டு எலக்சன்ல நிக்கிறது, ஜெயிக்கறதுக்காக செலவு பண்டறது எல்லாமே. தோத்துப் போனாலும் பெரும தான்.

மப்புல எல்லக்காட்டுல இருந்து புல்லட்டுல வர்றப்ப ரெண்டு வாட்டி போதையில டிச்சுக்குழியில உட்டடிச்சு உழுந்திருக்கேன். ரோட்டுல

போறவங்க பாத்து வண்டிய நிப்பாட்டி என்னையும் வண்டியையும் ரோட்டுக்கு கொண்டாந்து சேத்தி உட்டு பாத்துப் போங்க தலைவரே! அப்படிம்பாங்க. என்ன பண்றது? பெரிய மனுசன் வாழ்க்கையில எல்லாமும் தான் இருக்கும். கடைசியா நான் இந்த பொம்பளைங்க கையால செத்துப் போறேன். அது தான் சங்கட்டமா இருக்குது!

## பீட்டர் :

எனக்கு இந்த ஊர்ல ஒவைக்கறதுக்கு யாரும் சிக்கலைங்கறது பெரிய வருத்தமா இருக்குது. மாத்தல் கிடைச்சதுன்னா பறந்துடுவேன். ஏன் எனக்கு அமைய மாட்டீங்குதுன்னு பார்த்தா என்னோட சாதி தான் போல பிரச்சனை. இவங்க சாதிய இன்னும் புடிச்சுட்டு இருக்காங்க. இவங்கிட்டப் போயா?ன்னு நெனச்சுக்கறாங்க. அதை மத்தவங்க காதுல கேட்டாலும் சங்கடமுன்னு ஒதுங்கிக்கறாங்க. டவுனா இருந்தா எனக்கு ஒரு பிரச்சனையும் இல்ல. சரி ஆசிரியத் தொழிலுக்காக வந்தோம் அதை உறுப்பபடியா பாப்பமுன்னு இருக்கேன்.

தண்ணி சாப்பிடறது ஒரு கொண்டாட்டத்துக்குத் தான் ஆரம்பிச்சேன். ஆனா அதுவே பழக்கமாயிடுச்சு. கொறச்சிக்கணும். அந்த நோம்பியன்னிக்கி கொழந்தையோட ஒரு பொண்ணை பார்த்துட்டு இருந்தன்ல நானு. அது இருட்டுக்கு செட்டாயி வந்ததெல்லாம் வந்துச்சு. ஆனா சப்புனு என் கன்னத்துல ஒன்னு குடுத்துட்டு போயிடுச்சு! வாத்தியானுக்கு நெனப்பு மசுரப்பாருன்னு! இதை கோயல்கிட்டயே மாட்டன்னு சொல்லிட்டு போயிருக்கலாம் அது. ஆனா எனக்கு புத்தி வரோணுமின்னு பண்ணியிருக்கு போல. நான் யாரையும் இந்த ஊர்ல இருக்கற வரைக்கும் தப்பா பாக்கவே மாட்டேன் சாமி.

## ஜெயந்தி :

எனக்கு காதல்னா புடிக்கவே புடிக்காது. அதைப் பத்தி யாரு பேசினாலும் கசக்கீட்டானான்னு தான் அவளுக கிட்ட கேப்பேன். திமுரு புடிச்சவள்னு சொல்லுவாளுக எல்லாரும். ஆனா எனக்குன்னு வாழ்க்கை ஒன்னு இருக்குமுன்னு தெரியும். எங்கப்பா உடுவாரா பின்ன ஊட்டுலயே இருக்க? இல்ல எங்கம்மா தான் உடுமா? ஆனா நான் எவ்ளோ படிச்சாலும் அப்பா சரின்னு தான் சொல்வாரு. வேண்டாம் கல்யாணம் கட்டி குட்டி போடப் போன்னு சொல்ல மாட்டாரு. அவரு முக்கியமான புத்தகம்னா எனக்கும் படிக்க குடுப்பாரு.

இதுகளை எல்லாம் எதுக்கு படிக்கோணுமுன்னு மொதல்ல நெனச்சேன். ஆனா அதுகள்ல என்னவோ சொல்ல வர்றாங்கன்னு

கொஞ்சம் ஈடுபாட்டோட படிக்க ஆரம்பிச்சேன். அப்புறம் தான் காதல் கலியாணம் இதுகளை பத்தி கிண்டல் பேச ஆரம்பிச்சேன். எல்லாம் நேரா படுக்கையில தான் போய் முடியுது. ஆனா குமரேசனை பார்த்ததீம் நான் ஸ்டன் ஆயிட்டேன். அப்படி ஆனதும் அவனை மிதிக்கோணுமுன்னு தான் கையும் காலும் ஒரே பறவா பறந்துச்சு. ஆமா உண்மையே அது தான். அவனை மிதிக்கோணும். யாரு மேலயும் நான் அப்படி ஆசைப்பட்டது கிடையாது.

எங்கப்பாட்ட அடுத்த நாள் காலையிலயே சொல்லிட்டேன் விசயத்தை. அவனை ராத்திரில சந்திச்சி பேசு. அவன் எப்படி நடந்துட்டான்னு மட்டும் சொல்லுன்னாரு. அடுத்த நாள் காலையில அவரு இப்படி நடந்துட்டாருன்னு சொன்னேன். அவன் தான் உன் புருசன்னு சொல்லிட்டாரு. அது என்னான்னா, நானா எடுத்துக்கோங்கன்னு சொன்ன பொறவும் அவரு இத்தன அவசரம் வம்புல முடியுமுன்னாரு!

## மஞ்சுளா :

எனக்கு குமரேசன் சாரை ரொம்ப பிடிக்கும். பள்ளிக்கூடத்துல மொதநாளு பார்த்ததீம் நான் முடிவு பண்ணிட்டேன், சார் பிள்ளையைத் தான் வயித்துல சுமக்கப் போறேன்னு. கடவுள் இருகாருன்னு ரெண்டு வருசமா நான் நம்புறதே இல்லை. ஆனா இருக்காருன்னு இவரை என் பக்கத்து வீட்டுல உக்காத்தி வெச்சதும் தெரிஞ்சிடுச்சு. ஆரம்பத்துல இருந்தே இவர்கிட்ட எனக்கு வெட்கம்னு ஒன்னுமே கிடையாது. அது ஏன்னா எனக்காகவே கடவுள் அனுப்பி வச்சவருன்னு நெனச்சிட்டேன். அவரு மேல நான் ஒரு நாள் கூட கோபப்பட மாட்டேன். அவரு ஜெயந்தியப் பத்தி எங்கிட்ட சொன்னாரு. எனக்கு எந்த சங்கட்டமும் இல்ல. கடவுள் எதுக்காக அவரை அனுப்பி வச்சாரோ அந்த காரியம் எனக்கு நடந்துடுச்சு. இந்த விசயத்தை பத்தி ஊர்ல ஒரு சனமும் பேசாததும் எனக்கு ஆச்சரியமா இல்ல. கடவுள் காரியத்தை யாராலும் தப்பா பேச முடியாதுன்னு நெனச்சுக்கிட்டேன்.

## கலியன் :

நான் சொல்றக்கு எதுவுமே இல்ல. ஆடுன ஆட்டத்துக்கு கெடச்ச பலன் தான் கரட்டுல அனாதப் பொணமா மூனு நாள் கெடந்தேன். சிலபேருக்கு மண்டப்புறடையில என்ன எழுதியிருக்கோ அது தான் நடக்கும்.

## சின்னச்சாமி :

ஊருக்கு ஊருக்கு என்னையாட்ட ஆளுக இருக்கத்தான் செய்வாங்க.

என்ன பண்ட? அப்பன் ஆத்தா இல்லீன்னா புத்தி தன்னப்போல அப்படி வந்துருது! போயி ஒரு கெடையில எங்கீம் இருந்து வேலை செய்ய முடியாது என்னால. குறுக்கு புத்தியே என்னை இப்படி பண்ணிடுச்சு. அதனால பங்காளி மேல போறதப் பத்தியெல்லாம் எனக்கு கவலைன்னு ஒன்னும் கெடையாது. இப்ப என்னடான்னா பூரணி எங்கிட்ட இந்த மயிலாத்தாவ போட்டுத்தள்ளிடலாமுன்னு தூண்டி வுட்டிருக்கா! எனக்கு அது முன்னயே தோணீடுது. என் பங்காளிய ஏமாத்தி கட்டுனவ எத்தன நாளு உசுரோட இருக்கா பாருங்க! அதும் பங்காளி ஊட்டுலயே!

(